ஹரவண் அடி (கவி)

ஸ்ரீ பிரகிருஷ்ணவர்மா

காணை கிருஷ்ணர் - 1911

Q7
N11
119845

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

# முஹ்யித்தீனாண்டவர்கள்
# காரண சரித்திரம்.

கல்வியிற்சிறந்த மகாப் பெருமையுள்ள இமாம்
அப்துல்லாஹில்யாபிஈ றழியல்லாஹு அன்ஹு
அவர்களாற் கோர்வைசெய்யப்பட்ட குலாஸத்துல்
மபாகிறென்னுங் கித்தாபின் உரையாயிருக்கும்.

இதை

காஜீ. ஹஸன் அலிப்புலவரவர்களா
லெழுதுவித்து,

திருவல்லிக்கேணி மொ. அ. ஷாஹுல்ஹமீது
லெப்பையவர்களின் பொருளுதவியால்

தமது

ஷாஹுல்ஹமீதிய்யா அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

முதற் 1911. பதிப்பு.

ரிஜிஸ்டர் காப்பிறைட்.

27. சுப்பிரமணியன்
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
... மாதம் 1983 வருடம்
செப்பனிட்டு முடித்த
3 ... மாதம் 1984 வருடம்
ஆராய்ச்சி அதிகாரியின் கையொப்பம்

809 / 297.4

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

(*)

இ ஃ து

# முஹ்யித்தீனாண்டவர்கள் காரணசரித்திரத்தின் அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| | ஊதிக்காயத்து. | |
| | முக்கத்தமா. | 1 |
| | நாயகமவர்களின் பிறப்பு | 2 |
| | நாயகமவர்களின் வருணிப்பு. | 6 |
| | நாயகமவர்களுடைய அறிவிற் சிலதும், அவர்களுஸ்தாதுகளிற் சிலர்களுடைய நாமமும். | 13 |
| 1. | தீனை உயாத்தாக்கினதையும், முஹ்யித்தீனென்று நாமம் பெற்றதையும் பேசுகிறதாம் | 33 |
| 2 | ஸாலிஹென்பவர்கள் கவ்து நாயகத்தைக்கண்டு பகுறுடைய மறுபாவைப்பெற்ற செய்தியாம். | 34 |
| 3. | கவ்து நாயகமவர்கள் ஹஜ்ஜுச்செய்யப் போனதில் அல்லாவின்றும் பெற்ற வரிசையின் செய்தியாம். | 35 |
| 4. | கவ்து நாயகமவர்கள் தங்களுடைய வஃளு மஜ்லிஸில் அபுல்மஆலி யவர்களுக்குக் கலா ஹாஜத் திடற்கிமாக்கிக்கொடுத்த செய்தியாம். | 39 |
| 5. | கவ்து நாயகமவர்கள் தங்கள உஸ்தாது ஹம்மாது றலியல்லாஹு அன்ஹுவுடைய கப்றிற்போயவர்களுடைய குறைக்கையை நேர்படுத்திய செய்தியாம். | 41 |
| 6. | கவ்து நாயகமவர்கள், அபுல்முலப்பறுல் மன்ஸூறுடைய கித்தரபில் புலாவியார்க்களின் இல்லை மாற்றி புலாஇலுல் குறுஆனுக்கிய செய்தியாம். | 45 |
| 7. | கவ்து நாயகமவர்கள் சிலவருஷக்காலங்களாக இபாதத்திற் றெண்டிப்பெடுத்து கிலுறு அலைஹிஸ்ஸலாமவர்களைக்கண்ட செய்தியாம். | 47 |
| 8. | கவ்து நாயகமவர்கள், ஸுல்தான் யூஸுபு றஹிமஹுல்லாஹு அவர்களுடைய பணப்பையை யிரத்தமாக்கிய செய்தியாம். | 50 |
| 9. | கவ்து நாயகமவர்கள், ஷெய்கு பனுலுடைய பிறவிக் குருடாயும், சப்பாணியாயும், குஷ்டவியாதியாயுமுள்ள பிள்ளையைச் சுவாத்தியமாக்கிவித்த செய்தியாம். | 54 |
| 10. | கவ்து நாயகமவர்கள், பொரித்தருந்திய கோழியெலும்பைக்கொண்டு கோழியை ஹயாத்தாக்கின காரணம். | 56 |

## அட்டவணை.


| ஹிக்காயத்து. | | பக்கம் |
|---|---|---|
| 11. | கல்துநாயகமவர்கள், தங்கள் மத்றசாவிலிருந்து மிதியடியை யெறிந்து தூரத்திற்றிருடிய கள்வனைக் கொன்ற காரணம். | 58 |
| 12. | கல்துநாயகமவர்கள், அபூஹப்ஸில் கிம்மானீ றழியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் இபுலீஸு சொல்லிய செய்தியைச்சொல்லிய காரணம். | 60 |
| 13. | கல்துநாயகமவர்களிடத்தில் ஷெய்கு அபுல்ஹஸனுல் பகுதாதியவர்கள் ஓதும்போது கண்ட காரணம். | 61 |
| 14. | கல்துநாயகமவர்கள், ஜின்கொண்டுபோன பெண்ணை மீட்டிக்கொடுத்ததும், காலீசென்ற ஜின்பிடித்த பெண்ணை ஸலாமத்தாக்கினதும், தங்களுடைய விடிடிந்து விழமுன் மற்றவர்களுக் கதிவித்தவர்களை வெளிப்படுத்தினதுமான காரணம். | 64 |
| 15. | கல்துநாயகமவர்கள், ஷெய்கு அபுல்ஹஸன் றழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பசியையறிந்து நினைத்ததுபோ லூட்டிவித்த காரணம். | 69 |
| 16. | கல்துநாயகமவர்களுடைய கோபத்தால் நெருப்புப் பிடித்ததும், அவர்கள் நினைத்ததா லெல்லோர்களும் சலாஞ்சொன்னதுமான காரணம். | 72 |
| 17. | கல்துநாயகமவர்கள் ஷெய்கு அபுல்பகா முஹம்மதிபுனு அஸ்ஹரீ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கனவிற் கண்டதையும், ஆலம்கையிலுள்ள மனுடர்களையு மறிவித்துக்கொடுத்த காரணம். | 73 |
| 18. | கல்துநாயகமவர்கள், நஷலாளிகளை ஷிபாவாக்கினதும், நாயகம் சொன்னதுபோ லவர்கள் ஜீவித்திருந்ததுமான காரணம். | 75 |
| 19. | கல்துநாயகமவர்கள், ஷெய்கு அபூபக்ரில் ஹம்மாமீ ஷெய்கு உப்பாது இவர்களுடைய விலாயத்துகளைப் பிடுங்கி மறுபடி மீள்வித்த காரணம். | 78 |
| 20. | கல்துநாயகமவர்கள், இபாதத்திற்காகக் கஷ்டமெடுத்ததையும், ஓரிரவில் நாற்பதுதடவையி ஹத்திலாமாகிக் குளித்துக்கொண்டதையும் பேசுகிறதாயிருக்கும். | 86 |




## அட்டவணை.


| ஹிக்காயத்து. | | பக்கம். |
|---|---|---|
| 21. | கல்துநாயகமவர்கள், ஷெய்த்தான்களுடன் யுத்தஞ்செய்து தவக்குல், கிஹ், ஷுக்று முதலிய வாசல்களைக் கடந்து பக்றென்னும் வாசலிற்றனித்து மேன்மைபெற்ற செய்தியாம். | 88 |
| 22. | கல்துநாயகமவர்கள், சுல்தான் முதலான இராஜாக்களுக்குத் தட்டளை செய்து கத்தெழுதுவதைப்பேசுகிறதாம். | 92 |
| 23. | கல்துநாயகமவர்கள், இல்மு படிப்பதற்காகப் பகுதாதுக்குப் போகும்போது கள்ளர்கள் தௌபாச் செய்து மீண்ட காரணம். | 94 |
| 24. | கல்துநாயகமவர்கள், மத்றஸத்துன் நிலாமிய்யாவில் வஃலு சொல்லிக்கொண்டிருக்கையி லவர்களுடைய சட்டைக்கைக்குள் பாம்பு புகுந்த காரணம். | 97 |
| 25. | கல்துநாயகமவர்கள், ஜாமிஉல் மன்ஸூறென்னும் ஜும்ஆப்பள்ளியிற் றொழுதுக்கொண்டிருக்கும்போது, ஒரு ஜின்னானது பாம்பாக வந்து அவர்களுடைய திரேகமீதேறிய காரணம். | 98 |
| 26. | கல்துநாயகமவர்கள், தங்களுடையவஃலு மஜ்லிஸில் தங்களுடைய பிள்ளைகள் மௌத்தாலுஞ் சரியே, தாங்கள் வஃலு சொல்வதைவிட்டும் நீங்காதிருப்பதைப் பேசுகிறதாம். | 99 |
| 27. | கல்துநாயகமவர்கள், பால்குடிக் குழந்தையாயிருக்கையில் றமலான்பகல்களிற் பாலருந்தாதிருந்த காரணம். | 101 |
| 28. | கல்துநாயகமவர்களுடைய மஜ்லிஸில் நபீபுன்னுகபா வென்னும் பெரிய உத்தியோகஸ்தர் வந்து ஹாலிருகி நேர்வழிபெற்ற காரணம். | 102 |
| 29. | கல்து நாயகமவர்கள் வஃலு சொல்லு மஜ்லிஸானது ஜனங்களுக் கிடங்காணுமலாய்விட்ட செய்தியாம். | 103 |
| 30. | கல்துநாயகமவர்கள், வஃலுசொல்லு மஜ்லிஸுக்கு ஜின்கள்வந்து ஹாலிருவதையும், அவைகளைக்கையுமெய்யுமாய்க் கண்ட சில காரணங்களையும் பேசுவதாம், | 104 |

## அட்டவணை.


| ஹிக்காயத்து. | பக்கம். |
|---|---|
| 31. கவ்துநாயகமவர்கள் வஃலுசொல்லும்போது வானுலோகத்திலிருந்து குடிப்புகளிறங்கிய காரணம். | 109 |
| 32. கவ்துநாயகமவர்கள் வஃலுசொல்லு மஜ்லிஸில் ரிஜாலில் கைபுகள் வந்து ஆகாயத்தில் ஹாஸிறாகிறதைப் பேசுகிறதாம். | 110 |
| 33. கவ்துநாயகமவர்களை, அபுல்கைது றஹிமஹுல்லாஹு அவர்கள்கண்டு வியாறத்துச்செய்யவந்த செய்தியாம். | 112 |
| 34. கவ்துநாயகமவர்கள், வஃலு சொல்லு மஜ்லிஸுக்கு நபிமார்களுடைய ரூஹுகளும், மலக்குகளும் வந்து ஹாஸிறாகுங் காரணம். | 114 |
| 35. கவ்துநாயகமவர்கள், வஃலு சொல்லுவதற்காக கல்லுகளுக் கிடையிற் றரிபட்டிருந்த செய்தியாம். | 116 |
| 36. கவ்துநாயகமவர்கள், வஃலுசொல்லு மஜ்லிஸில் பாதிரிகளும், அனேக நஸாறுக்களும்வந்து ஈமான்கொண்டதையும், பெரும்பாவிகளும், ரூபிகளும் வந்து தௌபாச்செய்ததையும் பேசுகிறதாம். | 116 |
| 37. கவ்துநாயகமவர்களிடத்தில் மஸ்அலாக் கேட்கவந்த நூறு புகஹாக்களுக் கட்டழிந்து அப்பால் தெளிவுபெற்ற செய்தியாம். | 118 |
| 38. கவ்துநாயகமவர்களுடைய முரீதிலுள்ள ஒரு பெண்பிள்ளை இஸ்பஹான் தேசத்திலிருந்து, தன் தலையிற் கட்டியிருந்த புடவைத்துண்டை, நாயகமவர்களுடைய மஜ்லிஸுக் கெதிர்த்து பின்பந்த வூரிலிருந்தே யப்புடவையை மீட்டிப்பெற்றுக்கொண்ட செய்தியாம். | 120 |
| 39. கவ்துநாயகமவர்களுடைய மஜ்லிஸுக்கு இறாக்கிலுள்ள மஷ்ஹூறான மஷாயிகுமார்கள், முஜய்யினா உலமாக்கள், முபுத்திகளிவர்கள் வந்து கூடுவதையும், இன்னும் சில ஜனங்களவரவர்களூர்களிலிருந்தே கவ்துநாயகத்தின் வஃலை வாய்நாடியிருந்து காதுகளாற் கேட்டதையும் பேசுகிறதாம். | 121 |
| 40. கவ்துநாயகமவர்களின் வஃலுடைய மஜ்லிஸிற் பச்சைப்பறவைகள் வந்து கூடியிருந்த செய்தியாம். | 123 |




## அட்டவணை.


| ஹிக்காயத்து. | பக்கம். |
|---|---|
| 41. கவ்துநாயகமவர்களிருக்கும்போதே அவர்கள் குமாரர் அப்துல்வஹ்ஹாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வஃலு சொன்ன செய்தியாம். | 124 |
| 42. கவ்துநாயகமவர்களுக்குக் குதுபியின்மீதே அல்லாஹுத் தஆலாத் தஜல்லியான மற்தபாவை, ஷெய்கு பக்காறலியல்லாஹு அன்ஹு அவர்கள் விபரித்த செய்தியாம். | 127 |
| 43. கவ்துநாயகமவர்களுடைய விஷயத்தில் அபுல்பஹுஸில் பஸ்ஸாரென்பவர் நிந்தைசொன்னதாற் காவிலாணிதைத்து வருத்தப்பட்டப்பால் நாயகத்தைக் கொண்டு சுவாத்தியம்பெற்ற செய்தியாம். | 129 |
| 44 கவ்துநாயகமவர்கள், ஜும்ஆப்பள்ளிக்குப் போகிறபோது கடைவீதியிலுள்ளவர்களடங்கலும் நாயகத்தைக்கொண்டு பறக்கத்துத் தேடியதையும், அவர்களுடைய ஜும்மஆக்குப் பள்ளியிலுள்ளவர்களடங்கலுந் தொனியாக ஜவாபு சொன்னதையும் பேசுகிறதாம். | 130 |
| 45. கவ்துநாயகமவர்கள், அபுல் ஹஸன் அலியவர்களுக்கும், அவர்களுடைய தகப்பனார் முஹம்மதுல் பகுதாதீயவர்களுக்கும் தங்களுடைய சட்டையையும், தொப்பியையும் பணியவைத்து கில்கிலாவுங் கொடுத்த செய்தியாம். | 132 |
| 46. கவ்துநாயகமவர்களுக்கும், ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குமிடையில் தங்கள் தங்களுடைய முரீதின்கள் விஷயத்தில் விரும்பிக்கொண்ட செய்தியாம். | 135 |
| 47. கவ்துநாயகமவர்கள், தங்கள் முரீதின்களையும், தங்கள் கூட்டாளிகளையுங் கால் சறுகுதலைவிட்டுங் கைதூக்கிக்கொள்வேனென்று சொன்ன செய்தியாம். | 137 |
| 48. கவ்துநாயகமவர்களின் முரீதிலொருவரான ஷெய்கு தாவூதென்பவர்கள், ஷெய்குமஃறூபுல்கறுகீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கனவிற் கண்ட செய்தியாம். | 138 |

## அட்டவணை.


அதிகாரத்து. — பக்கம்.

49. கவ்து நாயகமவர்களிடத்தில் ஒருநாளி லெழுபதுபேர்கள் முரீதாகி அன்றுமாலைநேரமான ஒரே வக்திலேயே அந்த எழுபதுபேர்களுக்கும் வலுப்பமான பத்ஹு கிடைத்த செய்தியாம். — 139

50. கவ்து நாயகமவர்கள் தங்களுடைய காதிமுக்கு முழிப்பில் சேரிடும், வினவை நித்திரையி லாக்கினைத்த செய்தியாம். — 140

51. கவ்து நாயகமவர்கள்பேரி லெண்ணத்தை யழகாக்கி வைத்தவனுக்கும், அவர்களுடைய மத்ரஸாவுக் கருகில் நடந்தவனுக்கும் கப்றில் அதாபு நீங்கிவிடுமென்பதாம். — 141

52. கவ்து நாயகமவர்களுடைய முரீதுகளை, மற்ற மஷாயிகுமார்களுடைய முரீதுகளைக்காண மஹ்ஷரில் அதிகமாகவும், சிறந்தவர்களாகவும் ஷெய்கு புஷைதா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கனவிற் கண்டருளிய செய்தியைப் பேசுகிறதாயிருக்கும். — 144

53. கவ்து நாயகமவர்கள், ஷெய்த்தானுடைய பொய்ப் பந்தத்தை நாம்ருபடி செய்து, றஹ்மானியான ஒளிவைப் பந்தமாகக் கொடைகொடுத்த செய்தியாம். — 147

54. கவ்து நாயகமவர்களைக்கொண்டு சிப்பாகிசு தேடிக் கடினமான ஊரைவிட்டு மீட்சிபெற்ற செய்தியாம். — 148

55. கவ்து நாயகமவர்களின் மனதிரக்கத்தைப்பேசுவதாம். — 151

56. கவ்து நாயகமவர்கள் ஹஜ்ஜுக்குப் போகும்போது ஹில்லாவென்னு மூரிலொரு ஏழை வீட்டிலிறங்கி அதுகொண்டந்த ஏழை சீமானான செய்தியாம். — 153

57. கவ்து நாயகமவர்கள் பக்தாதிற் போய்ப் புசிக்க யாதொன்றுங் கிடையாமல் ஹலாலான குறைகளைத்தேடி யூருக்கு வெளியிற் புறப்பட்ட செய்தியாம். — 155

58. கவ்து நாயகமவர்கள் தங்களிடம் வருகிற ஹஜ்யாக்களைக் கபூல்செய்து புக்கஹாக்களுக்கும், புக்கராக்களுக்கும் விருந்தளிப்பதைப் பேசுவதாம். — 156

59. கவ்து நாயகமவர்கள் யாவர்களுக்குந் தயாளக்குணமாயிருப்பதைப் பேசுகிறதாம். — 157




அட்டவணை.


அதிகாரத்து. — பக்கம்.

60. இது வுமதுபோ லுள்ளதாம். — 159

61. கவ்து நாயகமவர்கள் வாலிபராயிருக்கும்போது தங்களுடைய இரண்டு கூட்டாளிமார்களுடன் அக்காலத்திலுள்ள கவ்தைக்கண்டுபறக்கத்துப்பெறப்போன செய்தியாம். — 161

62. கவ்து நாயகமவர்கள், ஷெய்கு அப்துர் றஹ்மானித் தபுஸவன்ஜீ றழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மிருதம் என்னுந் தங்களுடைய தலத்திலிருந்து மூன்று இஸ்முத்துகளைக் கொடுத் தனுப்பிய செய்தியாம். — 165

63. கவ்து நாயகமவர்களை லுபுனான் முதலான மலைகளிலுள்ள ஒலிமார்களடங்கலும் பறந்து வந்து கண்டு தெரிசித்த செய்தியாம். — 170

64. கவ்து நாயகமவர்களைக் காபுமலையிலுள்ள நாலுவொலிமார்கள் வந்து தெரிசித்த செய்தியாம். — 172

65. கவ்து நாயகமவர்களுடைய உத்தரவை ரிஜாலுல் கைபானவர்கள் வழி பார்த்திருந்த செய்தியாம். — 173

66. கவ்து நாயகமவர்களிடத்தில்நாங்கள்வலீயென்றெப்போது தெரிந்தீர்களென்று கேட்டதற்கு நாயகமவர்கள் சொன்ன ஜவாபிற் பொதிந்திருந்த மிருதியான காரணத்தைப் பேசுகிறதாயிருக்கும். — 174

67. கவ்து நாயகமவர்களிடத்தில் மாதங்கள் வந்து தங்களில் நடக்கும் சங்கதிகளை யறிவித்துப் போகும் செய்தியாம். — 180

68. கவ்து நாயகமவர்கள், தங்களுடைய பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய கதத்தின் பேரிலிருக்கிறேமென்று சொன்ன செய்தியாம். — 182

69. கவ்து நாயகமவர்கள் கல்குகளடங்கலுக்கும் தாங்களே ஷெய்காயிருக்குமென்று சொன்ன செய்தியாம். — 183

70. கவ்து நாயகமவர்கள் கற்பினையுடைய விஷயத்திற் பேசும் சில விசேஷங்கள். — 184

## அட்டவணை.

ஹிக்காயத்து. பக்கம்.

71. கவ்து நாயகமவர்கள், ஷெய்கு மக்ஹாறுல் கறுகி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸியாறத்துச் செய்யப்போன செய்தியாம். 18

72. கவ்து நாயகமவர்கள், தங்களுடைய மகிமைகளிற் சிலதை வெளிப்படுத்திப் பேசின செய்தியாம். 18

73. கவ்து நாயகமவர்கள் முதலாவது வஃலு சொல்வதற்காகக் குர்ஸியி லுட்காருமுன் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களும், அலீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும் வந்து வாயில் துமிழ்ந்து வாக்களித்த செய்தியாம். 18

74. கவ்து நாயகமவர்கள் வஃலு சொல்லு மஜ்லிஸில் அலியுபுஹுல் ஹீத்றி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைக் கனவிற் கண்டதையும், அதற்காக கவ்து நாயகமவர்கள் குர்ஸியை விட்டிறங்கினதையும், பேசுகிறதாம். 19

75. கவ்து நாயகமவர்கள் இல்முல்லதுன்னியில் நின்றும் எழுபது வாசல்கள் திறவுபடியாகிப் பேசின செய்தியாம். 192

76. கவ்து நாயகமவர்கள் (வயருஹுக்கு மாலாத் தலைமூன்) என்பதைப் பற்றித் தங்களிற் பிரசங்கமாக்கி வைத்த செய்தியாம். 193

77. கவ்து நாயகமவர்கள் நபியுடைய அஸ்ஹாபிமார்களைத் தவிர கவ்து நாயகமவர்களுக்கு முன் பின்னுள்ள அவ்லியாக்க ளெடங்கலுக்கும் ஏத்தமானதைப் பேசுகிறதாம். 194

78. கவ்து நாயகமவர்கள் அபுல் முசப்பிறென்பவருக்கு உயிருக்கும், முதலுக்கும் பிணையாயிருந்த செய்தியாம். 197

79. கவ்து நாயகமவர்கள் பாபுல் அஸஜிடத்திலிருக்கும் போதில் ஹாஸிறாயிருந்த பதிமூன்று நாதாக்களும் தங்களுக்குத் தேவையான மற்றபாக்களை கவ்து நாயகமவர்களின் பொருட்டாற் பெற்றுக்கொண்ட செய்தியாயிருக்கும். 200



## அட்டவணை.

ஹிக்காயத்து. பக்கம்.

80. கவ்து நாயகமவர்களிடத்தில் வந்த மன்த்திக்கு இல்முல்லைமயுடைய வொரு ஆலிமில் நின்றுமுள்ள இல்முல் மன்த்திக்கைப் போக்கி அவருக்கு இல்முல்லதுன்னியைக் கற்பித்துக் கொடுத்த செய்தியாம். 206

81. கவ்து நாயகமவர்கள் பொருட்டால் மேற்படி ஸாஹிபுல் மன்த்திக்காரனவர் தாமே மேன்மையான பதவிகளைப் பெற்றுக்கொண்டதாகத் தம்முடைய சிஷருக்கு ஷஹாதிற் காட்டிய காரணம். 208

82. கவ்து நாயகமவர்களுடைய சிஷரான ஷெய்கு முபாரிகளவில், ஷெய்கு அத்தாவுல் அவ்லியாவர்களும், அவர்களுடைய கூட்டங்களுமாகப் போய் இஸ்திஃபாறு செய்து மீண்ட காரணம். 209

83. கவ்து நாயகமவர்கள், பல்கிராச்சியத்திலுள்ள முஹம்மது றஹிமஹுல்லாஹு அவர்களுக்கு மேலான மக்காமைத் தெரிசனையாக்கிப் பின்பவருடைய ஹாலளவில் அவரை மீட்டிய செய்தியாயிருக்கும். 211

84. கவ்து நாயகமவர்களைத் தெரிசித்துக்கொண்டு பகுதாதிலிருந்து தன்னூரான மிஸறளவில் யாதொரு வஸ்தும், மனிதருடைய வுதவியுமில்லாமல் போக வுத்தரவு கேட்ட ஷெய்கு அபூ முஹம்மது ஷாவுரில் மஹல்லீயவர்களுக்கு கவ்து நாயகமவர்கள் தங்களுடைய விரலைச் சூப்பச்செய்த செய்தியாயிருக்கும். 217

85. கவ்து நாயகமவர்கள் வழியிற் போகும்போது ஒரு சுல்த்தானுக்காக ஓட்டப்பட்ட மூன்று ஒட்டகங்களையும் இல்க்காவாக்கிப் பின்பந்த சுல்த்தான் வந்து கவ்து நாயகத்திடத்தில் தௌபாச்செய்து மீண்ட செய்தி. 218

86. கவ்து நாயகமவர்கள், கிழறு அலைஹிஸ்ஸலாமவர்களை யனுப்பி, ஐந்து பறவைகளின் மொழித்தலால் மக்தூபாகிவரும் உதுமானுல் ஸரீபினீயவர்களை யழைத்து மேலான பதவியிலாக்கிய காரணம். 219

87. கவ்து நாயகமவர்கள் ஷெய்கு மக்காரிம் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய இருதயத்தை விட்டும், கோதுமைக்கஞ்சியுடனே சுட்ட கவுதாரி தின்றவிச்சையை நீக்கிவைத்த காரணம். 223

## அட்டவணை.

ஹிக்காயத்து. — பக்கம்.

88. கவ்து நாயகமவர்களுடைய துஆப் பறக்கத்தால் ஹிம்யர்க்கிளையிலுள்ள ஷெய்கு அபுல் முதப்பறென்பவர்கள் மிகுந்த செல்வத்தை யடைந்த செய்தியாயிருக்கும். — 225

89. கவ்து நாயகமவர்கள், ஷெய்கு அபுல் ஹஸனில் ஜெளஸக்கி றழியல்லாஹு அவர்களுக்குநேரிட்டசிற்சில வாரிதாத்துகளைக் கஷ்பாக்கிக் கொடுத்ததாம். — 226

90. கவ்து நாயகமவர்கள், அபூ முஹம்மது அலியென்பவர்களுக் கந்தரங்கமான வெகுமானங்களைக் கொகொடுத்ததிற் பேசுகிறதாயிருக்கும். — 229

91. கவ்து நாயகமவர்கள், உலூச் செய்யுங் கேத்தலானது தாளுகவே கிபுலாப்பக்கந் திருப்பினதையும், அவர்களுடைய கோபமான பார்வையா லவர்களுடைய காதி மடித்து விழுந்து மையித்தாகி யூரி வெடித்து அப்பா லவர்களுடையகோபமாறியபின் உயிரும் றெழுந்ததையும் பேசப்படும். — 232

92. கவ்து நாயகமவர்கள், றமலான்மாதம் தலை நோன்பன்றிரவில் முஅத்தின மூன்றுதடவை பாங்கு சொல்லும்படி யேவின செய்தி. — 234

93. கவ்து நாயகமவர்கள், ஷஹறுல்லா செய்யு மொளிவைப் பூமி யடங்கலிலும் பரந்ததாய் ஷெய்கு பக்கா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டு ஸஹறுடைய முந்தின வக்த்தில் கவ்து நாயகமவர்களுடைய மத்றசாவுக்கு வந்தது. — 236

94. கவ்து நாயகமவர்களிடத்தி லிரண்டு ஷெய்குமார்கள வந்து நாயகமே நாங்களுங்களைத் தொடர்ந்துக் கொள்வதற்காகத் தங்களுடைய துலக்கம், முடிவு இவ்விரண்டினுடைய ஹாலையு மெங்களுக்குச் சொல்லவேணுமென்று கேட்ட செய்தி. — 239

95. கவ்து நாயகமவர்கள், கொடுத்த வொரு சாக்குச் சேர்துமையால் ஷெய்கு அஹமது றழியல்லாஹு அவர்களுக்குப் பறக்கத்தான செய்தி. — 242



## அட்டவணை.

ஹிக்காயத்து. — பக்கம்.

96. கவ்து நாயகமவர்கள், ஷெய்கு அபுல்வபா றழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸுக்குள் போய்ப் புகுந்த காரணம். — 244

97. கவ்துநாயகமவர்கள், வாலிபமாயிருக்கையில் அவர்களுடைய தறஜாவைப்பற்றிப் பாரதூரமான ஷெய்குமார்க ளறிவித்த செய்தியாம். — 247

98. கவ்துநாயகமவர்களுடைய கீர்த்தியைப்பற்றி செய்யிது அஹ்மது றுக்கபீல் றுபாஈ முதலானவலிமார்களெல்லாம் பிரசங்கப்படுத்திய செய்தி. — 248

99. கவ்துநாயகமவர்களுடைய பொருட்டால் எழுவான் பக்கமானது. படுவான் பக்கத்தைக்காணவரிசையாகி விட்டதென்ற செய்தி. — 251

100. கவ்துநாயகமவர்கள், குத்புடையதஃரீபில் நீளமாய்ப் பேசிவரும் செய்திகளாயிருக்கும். — 255

101. கவ்துநாயகமவர்களுடைய இருவிரலையொருவர் குப்பியதனுலவரைவிட்டும் தீன், குடிப்பற்றசெய்தியாம். — 273

102. கவ்துநாயகமவர்களுடைய சிறப்பான நாமங்களையும், அதின்பொருட்களையும் சொல்வதாம். — 274

103. கவ்துநாயகமவர்கள், துஆச்செய்த ஒரு பெண்பிள்ளைக்கு லௌஹில்மஹ்பூலில்லாத சில பிள்ளைகள் கிடைத்த செய்தியாம். — 276

104. கவ்துநாயகமவர்கள், தங்களுடைய வொரு முரீதை முன்கர், நக்கீறென்னு மிருமலக்குகளுடைய அதாபைவிட்டகற்றிய செய்தியாயிருக்கும். — 278

105. கவ்துநாயகமவர்களுடைய முரீதுகளின் மர்தபாக்களைப் பேசுகிறதாயிருக்கும். — 280

106. கவ்துநாயகமவர்கள், அல்லாஹுத் தஆலா தங்களுக்குக் கபடஞ்செய்யாதிருக்கும்படி யெழுபதுதடவை வாக்கெடுத்த செய்தியைப்பேசுதல். — 283

107. கவ்துநாயகமவர்கள் உயர்ந்த விலைக்கு நாற்பது குதிரைகளைவாங்கி யந்நாற்பது குதிரைகளையும் ஒருநோயாளியான ஏழைபகுக்கு அன்பளிப்பாக அனுப்பிக் கொடுத்த செய்தியாம். — 284

## அட்டவணை.


ஹிக்காயத்து. — பக்கம்.

108. கவ்துநாயகமவர்களுடைய பிருதங்கூடிய பாதிவாசலிலிருக்கும் நாயானது ஒருபுலியை இருஞ்சிக்கொண்ட செய்தியாம். 287

109. கவ்துநாயகமவர்களுடைய குணங்களைப் பேசுதல். 288

110. கவ்துநாயகமவர்களுடைய கோலங்குறிகளைப்பேசுதல். 209

111. கவ்துநாயகமவர்களுக்கு அவர்களுடைய அஸ்ஹாபிமார்களுடைய நாமங்களையும் கியாமபரியந்தமுள்ள அவர்களுடைய முரீதுகளுடைய நாமங்களையுமெழுதப்பட்ட ஒரு கடிதத்தை அல்லாஹுத் தஆலா கொடுத்திருக்கிற காரணம். 209

112. கவ்துநாயகமவர்களுடைய மத்றசாக் கட்டிடத்தில் முளைத்திருக்கும் புற்பூண்டுகளையும், அவ்விடத்திலுள்ள தண்ணீரையுமருந்திப் பேதிமுதலிய நோய்களைவிட்டும் ஜனங்கள் விடேற்றம்பெற்ற செய்தி. 292

113. கவ்துநாயகமவர்கள், இந்த வுஜூதாகிறது அப்துல்காதிறுடைய வுஜூதில்லை, எம்பாட்டனார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய வுஜூதாயிருக்குமென்று சொன்ன செய்தி. 293

114. கவ்துநாயகமவர்களின் கல்வி, வந்தனம், விருதுகளிவைகளிற் பேசுகிறதாயிருக்கும். 295

115. கவ்துநாயகமவர்களுடைய முரீதுகளில்நின்றுமொரு பெண்பிள்ளையைக்கொண்டொரு பாவிக்கு கிடைத்த விஞானைவிட்டும் கலாஸாக்கிவைத்த செய்தியாயிருக்கும். 298

116. கவ்துநாயகமவர்களிடத்தில் லீட்சிக்கத்தேடிய வொருவர்த்தகர், தவறிப்போன ஒட்டகத்தையும், சரக்குகளையும் பெற்றுக்கொண்ட செய்தி. 299

117. கவ்துநாயகமவர்களுடைய ஷபாஅத்தைக்கொண்டொரு வலியானவர் பறிபட்டுப்போன விலாயத்தை பெற்றுக்கொண்ட செய்தி. 300

118. கவ்துநாயகமவர்கள், றமலான்மாதத்தில் ஒரே நேரத்தி லெழுபதுவீட்டில் நோன்பு திறந்த செய்தி. 302




அட்டவணை.


ஹிக்காயத்து. — பக்கம்.

119. கவ்துநாயகமவர்கள், ஆமாக்குவதுகொண்டு எல்லா வலிமார்களும், விலாயத்துத்தீப்பாவைப் பெற்றுக்கொள்கிறதைப் பேசுகிறதாம். 303

120. கவ்துநாயகமவர்கள், இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மதுஹபைத் தெரிந்துக்கொண்டதிற் பேசுதல். 304

121. கவ்து நாயகமவர்களிடத்தில் இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லாஹு அவர்கள் பேசிக்கொண்ட விபரமாயிருக்கும். 306

122. கவ்து நாயகமவர்களுடைய திலுபீதில் ஷெய்கு அஹ்மதுக் கன்ஜபருஷெஸ்பவர்கள் நிருணயமாகியதின்பேரி லவர்களுடைய ஷெய்காற் றிரப்படுத்துஞ் சமாச்சாரம். 307

123. கவ்து நாயகமவர்கள், ஒரு பார்வையைக்கொண்டு மிகுந்த ஜனங்களை அல்லா அளவிற் சேர்த்தசெய்தி. 311

124. கவ்து நாயகமவர்களைக்கொண்டு, காஜா முஹீனுத்தீனுல் ஜிஸ்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பைஜுபெற்ற செய்தியாயிருக்கும். 312

125. கவ்து நாயகமவர்களால் அல்லாஹுத்தஆலா தட்டிவிலக்கிய வொருவலியை மறுபடியொப்புக்கொண்ட செய்தியாயிருக்கும். 314

126. கவ்து நாயகமவர்களுக்கு, இமாம் ஹஸனுல் அஸ்கரீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய ஸஜ்ஜாதாவென்னும் விரிப்பைச் சேர்த்து வைக்கவேணுமென்றொரு மனுடனிடத்திலமான் வைத்த செய்தியாம். 316

127. கவ்து நாயகமவர்கள், ஒரு கள்வனைக் குதுபாக்கி வைத்த காரணம். 317

128. கவ்து நாயகமவர்களை கிழுறு அலைஹிஸ்ஸலாமவர்கள் புகழ்ந்த செய்தியாம். 318

129. கவ்து நாயகமவர்கள் தங்களுடைய மௌத்துக்குப் பின்னால் தாலிபீன்களை அல்லா அளவிற் பாபத்தியமாய்ச் சேர்த்து வைத்த செய்தி. 319


அட்டவணை முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

மிஃறுஜுல் ஆரிபீன்

பீ தர்ஜுமத்தி மின்ஹாஜில் ஆபிதீன்.

# மொழிபெயர்ப்பு விளம்பரம்.

—:ⵙⵙ:—

"மிஃறுஜுல் ஆரிபீன்" என்பது அறிவாகாரமான பதினொன்று இல்முகளுக்கும் ஓர் அலைகடலாகிய நாயகம் இமாம் கஸ்ஸாலி றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களால் இயற்றியுள்ள ஞானநீதக் களஞ்சியமான "மின்ஹாஜில் ஆபிதீன்" என்னுங் கிரந்தத்தினின்றும், வெகு நுட்பா நுட்பமாக மொழிபெயர்ப்பித்ததோர் அரிய சாதனமாயிருக்கும். இதில் அடங்கியிருக்கும், (மஃரிபா) என்னுந் தீட்சை ஞானத்தின் பாகுபாடுகளையும், நேர்வழிக்குரிய சாஸனத் தெளிவுகளையும், யோகாப்பியாச முறைகளையும் பற்றி விபரித்தெழுதவேண்டுமானால் எவ்வளவு நீடித்தெழுதினாலும் அமையாது விரிந்துக்கொண்டே போகும். ஆகலின் அதை நிறுத்திவிட்டு இந்நூலைப் பற்றியுள்ள என் உள்ளக் கிடக்கையை ஒரு சிறிது வெளியிடுகின்றேன்.

நான் இந்த மிஃறுஜுல் ஆரிபீனைப்பற்றி உண்மையாகவும், முடிவாகவும், சொல்லுமிடத்து, ஷை இமாம் அவர்கள் தம் ஜீவிய காலத்தில் நிர்மித் தியற்றிய யஹ்யா உலூமித்தீன், கிதாபுல் அஸ்ருர், கீமியாயெ ஸஆதத் முதலான அரிய பெரிய புராதன கிரந்தங்கள் எல்லாவற்றிலுமுண்டான ஞானம் ஸாரங்கள் அனைத்தும் இந்த மிஃறுஜுல் ஆரிபீனில் வந்து கணக்கற்றுப் புதைந்து கிடக்கின்றதென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. இதைக் கோவை செய்த இமாம் அவர்களே இதைப்பற்றிப்பற்றி தம் திருயாவைக் கடைகோடிவரையிலும், ஆங்காங்கு சென்றாப் பிரசங்கித்ததுமன்றி ஞானவான்களான நாதாக்களிடத்தும் சயிக்கினையாக வற்புறுத்தியு மிருக்கின்றார்கள்.



இருதய சுத்திக்குரிய ஞானாராய்ச்சி செய்து, ஒருமைத் தரிசனங் கண்டு, இருமைப்பேறுகளைப் பெற்று சதானந்த பதவி அடையும்படியான நல்ல விதி நாண்டிநிற்கும், புத்திமான்களாகிய ஸமஸ்த ஜனங்களுக்கும் இந்த மிஃறுஜுல் ஆரிபீன் என்னுங் கிரந்தமானது ஒரு யோகஸாஸ்னத்தி மிரபாநுவாகவும், கைகண்ட ஞான சஞ்சீவியாகவுமிருக்கின்றது. அது கருதியே இந்நூலை ஞானத்தாகமுள்ள நமது நண்பர்கள் யாவரும் இலேசாக வாசித்துணர்ந்து நற்கதியடையும்பொருட்டு நல்ல தெளிவான மதுரமான செந்தமிழ் வசன ரூபமாகவும், அறபுத்தமிழ் வசன ரூபமாகவும், முத்துப்போன்ற அட்சரத்தில் உயர்ந்த கிளேஸ்காகிதத்தில் அச்சிட்டு கில்ட்டுவேலைகள் செய்த பைண்டுகளால் கட்டப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது.

## இதன் கிரயம்.

| | | |
|---|---|---|
| சுத்தத்தமிழ் கலிக்கோபைண்டு | ரூ. | 1-12—0 |
| ஷை தோல் பைண்டு | ரூ. | 2—4—0 |
| அறபுத்தமிழ் டைப்பு கலிக்கோபைண்டு | ரூ. | 3—0—0 |
| ஷை தோல் பைண்டு | ரூ. | 3—8—0 |
| ஷை கிளேஸ் தோல் | ரூ. | 4—0—0 |

தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

——(*)——

## ஜவாஹிறுல் பவாயித்.

⟷(*)⟷

இப்புத்தகத்தின்கண் அடங்கியிருக்கும் உட்பிரிவானதில் 1-வது அல்லாஹுத் தஆலாவின் திருநாமங்களாகிய சங்கையாகிய அஸ்மாஉல் ஹுஸ்னாவென்றும் அழகிய 99 இஸ்முகளில் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே தர்ஜுமாக்களும், தக்சீர்களும், காசியத்துகளும், 2-வது அஸ்மாஉல் இலாம் அதாகிறது நபிமார்கள் ஓதிவந்ததுறைஹவிட்டும் தனித்த 40 அஸ்மாக்களும், அவைகளில் வெளியாகும் அநேக கைபியத்து, அஜாயிபு, முஃஜிஸாத்து, அஸ்றூர் முதலான மட்டில்லாத பிரயோஜனங்களும், 3-வது ஹயாத்துல் ஹைவானென்னும் உயிர்ப்பிராணியாகிய சகல ஜெந்துக்கள் ஒவ்வொன்றின் குணாகுணங்களும், அவைகளின் அவயவமென்னும்

அங்கங்களால் இன்சான்களுக்கு பற்பல வியாதிகளுக்கு சுத்தமாகிய அவிழ்தங்களும், அனேக ஹதீதுகளும், ஹிக்காயத்துகளும், 4-வது மனுமுறையுடைய தஃபீர் என்னும் கனவு நூல்களில் எவ்வண்ணமாய் கனவுகண்ட காக்ஷிகளுக்கும் விரிவாகிய தஃபீர்களும், அதற்கு அத்தாக்ஷியாகிய அநேக ஹிக்காயத்துகளும், 6-வது வைத்தியசுருக்கமென்னும் சகல வியாதிகளுக்கும் தட்டபரிகாரங்களும், இன்னும் அனேக பாயிதாக்களும் ஆகியின்னவற்றில் இஸ்முகளை லெத்தகிருப்பில் அறபி அக்ஷரத்தாலும், தமிழாலும் மற்றவையெல்லாம் சுத்தத்தமிழாலும் சேகரிக்கப்பட்டு (ஜவாஹிறுல் பவாயித்) என்னும் நாமமிட்டு 60-பாரத்தில் முடிவுபெற்றது. இவை கிளேஸ் காகிதம் கலிகோபைண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| முதுகில் கில்ட் நாமமழுத்திய புத்தகம் 1-க்கு | ரூ. | 2 | 0 | 0 |
| ஷை. நப்புகாகிதம் கலிகோபைண்டு புத்தகம் 1-க்கு | ரூ. | 1 | 8 | 0 |

## நஸ்ஹதுல் ஹமீது வைத்ஹுல் மஜீது.

இது ஹதீது, பிக்ஹு, ஹகாயிக்கு, மஃரிபா, அகிதா, தக்வா, முதலான சிறந்த இல்முகளைப்பொருந்த மகா பாரமான, முஃதபறான கிதாபாயிருக்கும். இது மகா பாரமாங்களான இமாம்களுக்குடைய முஃதபறான அநேக கிதாபுகளிலிருந்தும் சேகரிக்கப்பட்டுள்ளவைகளை அறபுக்கதிழ் அறியாத முஸ்லிமான நேயர்கள் பிரயோஜனம் பெறும்பொருட்டு நற்றமிழாலெழுதி நஸ்ஹதுல் ஹமீது வயத்ஹுல்மஜீது என்னும் நாமமிட்டு சாயல் (8) பேஜியில் (75) பாரத்தில் அச்சு முடிவுபெற்றது. காய்துகியால் பிரதுதிதமாய் சிலவாகி வருகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| இதன் கிரயம் கலிகோபைண்டு | ரூ. | 3 | 0 | 0 |
| ஷை. லெதர் கலிகோபைண்டு | ரூ. | 3 | 4 | 0 |
| ஷை. கோல்பைண்டு | ரூ. | 3 | 8 | 0 |

இங்ஙனம்.

☞ எம். எ. ஷாஹுல் ஹமீது லெப்பை.
நெம்பர். 93, பள்ளப்பன் தெரு
திருவல்லிக்கேணி, மதறாஸ்.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

# முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரணசரித்திரம்.

## முகவுரை.

—[*]—

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றஸூலிஹி செய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன்.

எல்லாப்படைப்புகளையு மொரு சொல்லாலமைத்தவல்ல பெரியவனாகிய அல்லாஹுத் தஆலாவைத் துதித்து, அவனுடைய திருத்தூதராகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மீதும் அவர்கள் ஆல்அஸ்ஹாபுகள் மீதும் அருமையுடனுரைக்கும் ஸலவாத்தும், ஸலாமும் பெருமையுடனுண்டாவதாகவும் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இதாகிறது.

கல்விக்கடலாகக் கதிஞான முத்துகளைச் செல்வக் கொடையாகச் செகமெங்கும் பரப்பும், காரணம் பெற்ற காமில். இமாம் அப்துல்லாஹில் யாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்குத்புர்றப்பானீ, வல்கவ்துஸ் ஸமதானீ, மஹ்பூபுஸ் ஸுப்ஹானீ, செய்யிதினா முஹ்யித்தீன் அப்துல்காதிரில் ஜீலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கலாம்களிலிருந்தும், அஸ்றாறுகளிலிருந்தும், கஷ்புக் கறாமாத்துகளிலிருந்தும் மிகவும், அருமையும், பெருமையும், அற்புதமுமான ஹிக்காயத்துகளும், பைத்துகளுமாக அறபு வாக்கியத்தாற் கோவை செய்யப்பட்டிருந்த கித்தாபை, ஷலாவென்னும் நகரிற் சிறந்து மேலமேற் றோற்றுந் தீபமாய் வந்துதித்த அல்ஆலிமுல்பாஸில் முஹம்மது லெப்பை ஆலிம் ஸாஹிபு றஹிமஹுல்லாஹு அவர்களால் அறபுத் தமிழாற் றமிழ் பாஷையில் தர்ஜுமாச் செய்யப்பட்டு கன்ஸுல் அபுகம், பிமறைக்கிபி கவ்துல் அஃலமென்று நாமஞ்சூட்டி மௌ. அ. ஷா ... யவர்களா லச்சிடப்பட்ட அறபுத் தமிழ் ஹாத்தமீது லெப்பை

கித்தாபிலுள்ள ஹிக்காயத்துகளையும் வேறு கித்தாபுகளிலுள்ள சில ஹிக்காயத்துகளையும் ஒன்றுசேர்த்து மேற்படி மௌ. அ. தா ஹாசன்மீது லெப்பையவர்களுத்தரவின்பேரில் கல்வியறி வித்தியாரஞகிய காலெ ஹஸன் அலியெம்பவனால் நற்றமிழிலெழுதி முஹ்யித்தீனாண்டவர்கள் காரணசரித்திரமென்று நாமம் சூட்டி அச்சிடப்பட்டிருக்கின்றது.

ஆகையால் நம்முடைய இந்த ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அருட் பாக் கத்தைக்கொண்டு இதை அறபால் கோவை செய்த இமாமவர் களுக்கும், இதைத் தர்ஜமாச் செய்தவர்களுக்கும், இதைத் தமிழ் பாலெழுதிய இந்தச் சிற்றடியேனுக்கும், இதை முயற்சித்து அச்சிட்டவர்களுக்கும், இந்த முஹ்யித்தீனாண்டவர்கள் காரணசரித்திர மென்னும் புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்களுக்கும், படிக்க கேட்பவர்களுக்கும் இதிலேதேனும் பிழைகண்டால் லெவ்வோரில் மன்னித்துத் திருத்திக்கொள்பவர்களுக்கும், நம்மவர்க ளின் தந்தைதாய் முதலிய முன்னோர்களுக்கும், சந்ததி முதலிய பின்னோர்களுக்கும், மற்றும் முஃமின், முஸ்லிமானவர்களுக்கும், அல்லாஹுத்தஆலா இருமையிலும், நல்லுதவிக் கட்டளையிட் டருள்வானாகவும் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

முகவுரை.

முற்றிற்று.

பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 6 DEC 1911 MADRAS.

இஃது

# முஹ்யித்தீன் ஆண்டவர்கள் காரண சரித்திரம்.

(*)

## முக்கத்தமா.

இதாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல் லாஹு அன்ஹு அவர்களுடைய வம்மிச வழியையும், அவர்கள் பிறந்த தேதியையும், அவர்களுடைய வருணிப்புகளையும், பேசுகிறதா யிருக்கும்.

## நாயகம் அவர்களுடைய வம்மிசம்.

அறிந்துக்கொள். அவர்களுடைய வம்மிசமாகிறது அவர்கள்
செய்யிது முஹம்மதுடைய தகப்பனர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்
துல்காதிறென்ற நாதாவாயிருக்கும் அவர்களுடைய பிதா, செய்
யிது அபூஸாலிஹு மூசா, அவர்கள் பிதா, செய்யிது கந்தக்கூஸ்,
அவர்கள் பிதா, செய்யிது அபூ அப்தில்லாஹி, அவர்கள் பிதா, செய்
யிது யஹ்யன்னுஹிதி, அவர்கள் பிதா, செய்யிது முஹம்மது, அவர்
கள் பிதா, செய்யிது தாவூது, அவர்கள் பிதா, செய்யிது மூசா, அவர்
கள் பிதா, செய்யிது முஹம்மது, அவர்கள் பிதா, செய்யிது அப்துல்
லாஹி, அவர்கள் பிதா, செய்யிது மூசல்ஜவுன், அவர்கள் பிதா, செய்
யிது அப்துல்லாஹில் மஹ்லு, அவர்கள் பிதா, செய்யிது அப்துல்லா
ஹில் முஜல்லியென்று பிறக்குப் பெயரும், ஸாமுக்குதத்தும்
கொண்டு சொல்லப்படும் அவர்கள் பிதா, செய்யிதுல் ஹசனுல்
முதன்னா, அவர்கள் பிதா, இமாம செய்யிது ஹசன், அவர்கள் பிதா
வாகிறவர்கள் நாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம்
அவர்களுடைய பெரிய தந்தை அபூத்தாலிபவர்களின் குமாரர் இ
மாம் அலிய்யுன் கர்றமுல்லாஹு வஜ்ஹஹு அவர்களாயிருக்கும்.
றலியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன், அல்லாஹுத் தஆலா அவர்

கள் அவைகளைத் தொட்டும் பொருந்திக்கொள்வாளாகவும். இன்னும் ஷெய்கு முஹ்யித்தீன் ஆண்டவர்கள், ஷெய்கு அபூ அப்தில்லாஹில் ஸவ்மஇய்யுல் ஸாஹிதுடைய பேரராயிருக்கும், ஷெய்கு முஹ்யித்தீன் ஆண்டவர்கள் ஜீலான் பட்டணத்திலிருக்கும்போது அவர்களை ஷெய்கு அபூ அப்தில்லாஹில் ஸவ்மஇய்யுல் ஸாஹிதுடைய பேரரென்றுதான் அறியப்பட்டவர்களாயிருந்தார்கள்.

## நாயகம் அவர்களின் பிறப்பு.

அறிந்துகொள். ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறந்தாகிறது அவர்கள் பிறந்த தேதியைக் குறித்து அவர்களிடத்தில் கேட்கப்பட்டபோது அவர்கள் நானதைத் திட்டமாக அறியமாட்டேன். ஆகிலும் நான் ஜீலான் பட்டணத்தில் பிறந்து வளர்ந்து ஷெய்குத் தமீமீயென்பவர்கள் மவுத்தான வருஷத்தில் நான் பகுதாதுக்கு வந்தேன். அப்போது என்னுடைய வயது பதினெட்டாயிருக்குமென்று சொன்னார்கள். அறிவாளர்களில் சிலர் சொல்கிறதாவது செய்யிதுனா ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறித்துச் சொன்ன ஷெய்குத் தமீமீயென்பவர் யாரானால் அவர்தான் ஷெய்கு அபூமுஹம்மது ரிஸ்குல்லாஹிப்னு அப்தில் வஹ்ஹாபென்பவராயிருக்கும். அவர் வபாத்தானது ஹிஜ்றத்து நானூற்றி எண்பத்தெட்டாம் வருஷமாம் அதின்படி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறந்தது ஹிஜ்றத்து நானூற்றி எழுபதாம் வருஷமாயிருக்கவேண்டும். இன்னும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிறந்தாவது ஹிஜ்றத்து நானூற்றி எழுபத்தோராம் வருஷம் ஜீலான் பட்டணத்தில் என்றும், இன்னும் அவர்களுக்குப் பதினெட்டு வயதானபோது ஹிஜ்றத்து நானூற்றி எண்பத்தெட்டாம் வருஷம் பகுதாதுக்கு வந்தார்களென்றும் ஷெய்கு அபுல்பழ்லி, அஹ்மது புனு, ஸாலிஹு புனு, ஷாபியில் ஜபலீ றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களை ஜீலானீயென்று சொல்வதாவது ஜீம் முக்குக் கஸ்றும் கீழாவிரண்டு நுக்தாக் குறைப்பட்டயாவுங் கொண்டு ஜீலென்ற சொல்லாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாகிறது தப்றஸ்தான் இராச்சியத்துக்கப்பால் சில ஊர்களின் பெயராயிருக்கும். இன்னும் அந்த ஜீலென்ற ஊருக்கு ஜீலானென்



றும், கீலானென்றும், கீலென்றும் சொல்லப்படுமென்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் அவர்களுடைய வங்கிஷத்தில ஜீலானென்றொரு பேரரும் உண்டாயிருந்தார்கள். ஆகையால் அவர்களை அவரில் சேர்த்து ஜீலானீயென்று சொல்கிறதென்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். வல்லாஹு அஃலம்.

இனி ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தாயாராகிறது நலவுடைய தாயாகிய ஸிக்கு பாத்திமா நாயகியாயிருக்கும். அவர்கள் தகப்பனாராகிறது செய்யிதாகிய ஷெய்கு அபூ அப்தில்லாஹில் ஸவ்மஈ றஹிமஹுல்லாஹி அவர்களாயிருக்கும். குறித்த பாத்திமா நாயகி அவர்களுக்கு நலவுகளில் நின்றும் ஸாலிஹாத் தனங்களில் நின்றும் நிறைபமான பேறுண்டாயிருந்தது. அந்த செய்யிது அபூ அப்தில்லாஹில் ஸவ்மஈ யென்பவர்கள் ஜீலான் பட்டணத்திலுள்ள ஷெய்குமார்களில் மகாவலுப்பமான ஷெய்காயும், ஸாஹிதீன் தலைமையானபேர்களிலுள்ளவராயும், சிறப்பான ஹாலுகள் வெளியான கஷ்பு கறுமாத்துகள் உள்ளவராயுமிருந்தார்கள். இன்னும் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சகோதராராகிய ஷெய்கு அபூஅஹ்மது அப்துல்லாஹி யென்பவர்களுடைய வயது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வயதுக்கு இளமையாயிருக்கும். அவர்கள் நலவிலும், கல்வியிலும் மெத்த அழகான வளர்த்தியாய் வளர்ந்து வரும்போது ஜீலான் பட்டணத்தில் வாலிபராய் மௌத்தாயிட்டார்கள். இன்னும் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மாமியாராகிறது ஸாலிஹத்தான பெண்பிள்ளையாகிய செய்யிது முஹம்மதுடைய தாயார் ஷரீபு ஆயிஷாவாயிருக்கும். இவர்களாகிறது செய்யிது அப்துல்லாவுடைய மகனார், வெளியரங்கமான கறுமாத்தை யுடையவர்களாயிருக்கும்.

ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு தடவை ஜீலானைச் சேர்ந்த ஊர்களெல்லாம் மழையில்லாமல் பெரும்பஞ்சமாகியெல்லோருங் கூடி மழைதேடியிரந்தும் மழை பெய்யாதபடியால் ஷெய்குமார்களெல்லாருங்கூடி மேற் கூறப்பட்ட ஷெய்கத்து ஆயிஷா நாயகி அவர்களுடைய வீட்டுக்கு வந்து ஜனங்களுக்காக அல்லாஹுத் தஆலாவிடத்தில் மழை தேடி துஆச் செய்யும்படி

கேட்டார்கள். அப்போது ஆயிஷா நாயகி யெழும்பித் தங்களுடைய வீட்டு முற்றத்திற் போய் அந்நிலைத்துக்கத் தாக்குப்பெருக்கித் துப்புரவு செய்துவிட்டு என் ஆண்டவனே, நான் முற்றத்தைத் தாக்குப் பெருக்கிவிட்டேன். அதற்கு நீ தண்ணீர்தெளியென்று விளையாட்டுப்போற் சொன்னார்கள். அவ்விதஞ் சொல்லிவிட்டு அவர்கள் கொஞ்ச நேரந் தரிபடவில்லை, தருத்திகளை அவிழ்த்துக் கொட்டினதுபோல் மழையானது பொழிந்து மனிதர்களெல்லாம் தண்ணீரில் மூழ்கினவர்களாய் தங்கள் தங்களுடைய மனைகளுக்குப் போனார்கள். அந்த ஷெய்கத்து ஆயிஷா நாயகியானவர்கள் நீடித்த ஹயாத்துப் பெற்றிருந்து ஜீலான் பட்டணத்தில் வபாத்தாகி யடங்கினார்கள். முன் சொன்ன தலைமுறையில் மூசல்ஜௌ னென்று பட்டப் பெயராயிருக்கும். அந்த ஜிமுக்கு வைக்கொண்டு சொல்லப்பட்டும், அதாவது அறபுச் சொற்களில் மாற்றமாய் இரு பொருள்கொண்ட சொற்களிலுள்ளதா யிருக்கும். ஆனதால் ஜௌனென்று வெண்மையானவர்களுக்கும், கருமையானவர்களுக்குஞ் சொல்லப்படும். கருமையானவர்களுக்குச் சொல்லுகிறதுதான், அவர்களுடைய பரிமாற்றத்தில் மிகுதமானதாம். இவ்விடத்தில் அதின் கருத்தாகிறது இதுவேதான். ஏனெனில் அந்த மூசல்ஜௌனென்றவர்கள் பொது நிறமானவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய தாயாராகிறது அபூஉபைதாவின் மகள் ஹிந்தாயிருக்கும். இன்னும் மஹ்ளென்றதும் பட்டமாயிருக்கும். அதின் பொருளாவது மற்ற வஸ்துகளில்லின்னும் கலப்பற்றதா யிருப்பது அப்படி அந்த செய்யிது அப்துல்லா அவர்களுக்குப் பட்டஞ் சொல்லப்பட்ட காரணமாகிறது அவர்களுடைய தகப்பனார் அலீறலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மகனார் ஹசன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மகனார் ஹஸனுல் முதன்னா வென்பவர்களாயிருக்கும். அவர்களுடைய தாயாராகிறது அலீறலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மகனார் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மகள் பாத்திமாவென்பவர்களாயிருக்கும். ஆனால் இந்த வங்கிஷமாகிறது மற்றவர்கள் சேராமல் கலப்பற்றதாயிருக்கும். நான் சொல்லுகிறேன். இப்படித் தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகிலும் இதற்குப் பொருளாகிறது சிறப்பிற் கலப்பற்ற வங்கிஷமென்று சொல்லவேண்டும்.



இன்னும் இதில் சொல்லப்பட்ட பாத்திமாவாகிறது அவர்களோத்தான் செய்யிது ஹஸனுல் முதன்னா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மௌத்தானதின் பிறகு அப்துல்லாஹில் முத்தர்றபென் பவர்கள் நிக்காஹு முடித்திருந்தார்கள். இந்த அப்துல்லாவாகி றவர்கள் உதுமானுபுனு அப்பானுடைய மகனார் அம்றிடைய மகனாராயிருக்கும். றலியல்லாஹு அன்ஹும் இவர்களுக்கு அந்த பாத்திமாவென்பவர்கள் முஹம்மதுத் தீபாஜென்று சொல்லப் பட்ட ஒரு குமாரரைப் பெற்றார்கள். மேற்படி குமாரரைத் தீபாஜென்று பட்டஞ்சொல்லப்பட்ட தேதெனில் அவர் மெத்த அழகானவரா யிருந்ததற்காக வேண்டியேயாம். இவருடைய தகப்பனார் அப்துல்லா வென்பவர்களுக்கு முத்தர்றபு என்று பட்டஞ் சொன்னதும் அவர்கள் மெத்த வடிவானவர்களா யிருந்தார்கள். இதற்காகத்தான் அந்த அப்துல்லாஹிபுனு அம்றிபினி உதுமான் றலியல்லாஹு அன்ஹும் பிறந்து வளரும்போது அவர்கள்தான் அப்துல்லாஹிபுனுஸ் ஸுபைறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பிறகுப் பதுமையாய்த் திதிக்கப்பட்ட அழகுடையவர்களென்று மனிதர்களெல்லாம் சொன்னார்கள். இனி அப்துல்லாஹிபுனுஸ் ஸுபைறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வடிவில் மேலிட்டவர்களா யிருந்தார்கள். இனி அந்த அப்துல்லாஹில் முத்றபுடைய தாயாராகிறது அவர்களுடைய வங்கிஷத்தில் உமறு புனு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மகனார் அப்துல்லாவினளவில் சேருவார்கள். ஆனால் முத்றபு என்ற சொல்லாகிறது மீமுக்கு லம்மும், றேய்க்கு ஸபருங்கொண்டாயிருக்கும். (அத்றபுத்துஹு பிக்கதா) ஆக கொண்டவனைத் துதித்தேன் என்று சொல்லப்பட்ட முதன்னாவென்றதாகிறது இமாம் ஹசன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மகன் ஹசனுக்கு லக்கபாயிருக்கும். அதாவது மீமுக்கு லம்மும், தேய்க்கு ஸபரும், நூனுக்கு ஸபரும் ஷத்துங்கொண்டு அது (தன்னோத்த ஜைஅன்) ஒருவஸ்துக் கிரண்டாவதொன்றை யாக்கினனேயானால் அப்படிச் சொல்லப்படும். நான் சொல்லுகிறேன், அந்தச் சொல்லுடைய பொருளில் இவ்விதமே சொல்லப்பட்டது. இனி ஹசன் என்கிற இஸ்மை அவர்களுக்கும், அவர்களுடைய தகப்பனார் அவர்களுக்கும் சொல்லப்படுவதால் மகனுக்குப் பேர் சொல்லுவதில் தக்றாறாகச் சொல்லப்படுவதால் மக

ஷெய்கு ஹம்மாதுல் முதன்று, இரண்டாவது ஹஸனென்று சொன்னால் மெத்த லாபிக்காயிருக்குமென்று.

## நாயகம் அவர்களின் வருணிப்பு.

அறிந்துக்கொள். ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வருணிப்பாகிறது இமாம் அல்லாமத்தாகிய ஷெய்கு அபூமுஹம்மது அப்துல்லாஹிபுனு அஹ்மதுபுனு, முஹம்மதுபுனு குதாமத்து றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்லுகிறார்கள். இஸ்லாம் அடங்கலுக்கும் ஷெய்காகிய நம்முடைய ஷெய்கு முஹியித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திரேகமானது வார்த்தைசெய்யப்பேர்லொத்த நிதானமானவர்களாயும், மார்பு விரிவானவர்களாயும், தாடி அடர்ந்த அழகானவர்களாயும், மீசை நீண்டவர்களாயும், வெண்மை பொருந்திய சிகப்புநிறமுள்ளவர்களாயும், கூடு புருவமுள்ளவர்களாயும், வெண்கலம்போல் உயர்ந்த பாதமுள்ளவர்களாயும், அழகான தாறும், உயர்ந்த தகுதியும், சிறப்பமான கல்வியுமுடையவர்களாயிருந்தார்கள். அவர்களைத்தொட்டும் அல்லாஹுத் தஆலா பொருந்திக்கொள்வானாகவும்.

இன்னும் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்திக்று, அவ்றாது, துஆ இவைகளை அனேகமாக ஓதிவந்தார்கள். இப்போது தர்ஜுமாச் செய்யப்படுகிற இந்தத் துஆவும் அவர்களுடைய துஆக்களில்நின்று முள்ளதாயிருக்கும். அதாகிறது அல்லாஹும்ம அஸ்லிஹில் இமாம வல்உம்மத்த வர்றாஇய வர்றஇய்யத்த ஆண்டவனே உம்மத்துமார்களையும், அவர்களுடைய கல்த்தர்களையும், குடிஜனங்களையும், குடித்தனம் செய்யும்பேர்களில் அவர்களைப் பேணிக் காப்பாற்றுபவர்களையுந் திருத்தமாக்கியருள். வஅல்லிபு பைனகுலூபிஹிம் பில்கைறாத்தி இன்னும் நலவான கருமங்களை அவர்கள் மனங்களுக் கிடையிற் பொருத்தி ஒற்றுமையாக்கியருள். வத்பஃஷர்ற பஃலிஹிம் அன்பஃலின் அவர்களிற் சிலரை விட்டுச் சிலருடைய தீங்கைத் தட்டிவிட்டருள். அல்லாஹும்ம ஆண்டவனே அன்தல்ஆலிமு பிஸறாயிறிஹிம் ஃபஅஸ்லிஹ்ஹா நீதான் எங்களுடைய உள்ளகமியங்களை நன்றாயறிந்தவன், ஆகையால் அவைகளைத் திருத்தமாக்கியருள். வஅன்தல் ஆலிமு பிதுனூபினா



பஃபிறுஹா இன்னும் நீதான் எங்களுடைய பாவங்களை அறிந்தவன். ஆகையால் அவைகளடங்கலையும் மன்னித்துக்கொள்ளவேண்டும். வஅன்தல் ஆலிமு பிஉயூபினா பஸ்த்துர்ஹா இன்னும் நீதான் எங்களுடைய ஐபுகளை அறிந்தவன். ஆகையால் அவைகளை மறைத்துக்கொள்ளவேண்டும். வஅன்தல் ஆலிமு பிஹவாஇஜினா பக்லிஹா. இன்னும் நீதான் எங்களுடைய ஹாஜத்துகளை அறிந்தவன் ஆகையால் அவைகளடங்கலையும் நிறைவேற்றியருள். லாத்தவனு ஹைறு நஹைஹத்தனு ஆண்டவனே, எங்களை நீ விலக்கல் செய்த இடங்களில் எங்களைக் காணுதிருந்தருள். வலாத்து புக்கித்னு மின்ஹைது அமற்த்தனு நீயெங்களை ஏவின தலத்தில் இல்லாமற்போகச் செய்யவும் வேண்டாம். அஇஸ்ஸனு பித்தா அத்தி வலாத்து தில்லனுபில் மஃஸியத்தி உன்னுடைய வழிபாடுகொண்டு எங்களை எங்களைச் சிறப்பாக்கி, உனக்கு மாறு செய்வதுகொண்டு எங்களைத் தாழ்மையாக்கா திருந்தருள். அஷ்கில்னுபிக்க அம்மன் ஸிவாகக உன்னல்லாததடங்கலைவிட்டு உன்னைக்கொண்டே எங்களைப் பராக்காக்கிவித்தருள். வக்த்தஃ அன்னுகுல்லக் காத்திஇன் யக்த்தஉனு அன்க உன்னைவிட்டு எங்களைத் தறித்துவிடுமே அப்போற்கொற்ற பராக்கடங்கலையும் எங்களைவிட்டுத் தறித்துவிடுவாயாக. அல்லாஹும் மக்ஹிம்னு திக்றக்க வஷுக்றக்க வஹுஸ்னஇபாதத்திக்க ஆண்டவனே உன்னை திக்றுச் செய்வதையும் உன்னுடைய நன்றியை அறிந்து உனக்குத் துதி கூறுவதையும், உன்னுடைய வணக்கத்தின் அழகையும் எங்களுக் குறிப்பு வருத்தியருள். (லாஇலாஹ இல்லல்லாஹு) வணக்கத்திற் குரியவன் அல்லா ஒருவனே இன்றி வேறில்லை. மாஷா அல்லாஹு கான அல்லாஹுத் தஆலா நாடியதே உண்டாகும். வலா ஹவ்லவலாக் குவ்வத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அலீம் பாவத்தை விட்டுத் திரும்புவதும், நன்மை செய்ய விரும்புவதுமில்லை. வலுப்பமாகிய மேலான அல்லாஹுத் தஆலாவைக் கொண்டேயொழிய. லாத் துஃஇனு அலா கபுலத்தின் வலாத்து ஆகிதனு இன்னஸீனு அவ்அகுத்தஃனு எங்கள் ஆண்டவனே நாங்கள் மறந்து குற்றத்தில் அகப்பட்டாலும், அல்லது முரண்டில்லாமல் தப்பிதமாய்க் குற்றஞ் செய்தாலும், எங்களைப் பிடியாதே. றப்பனு எங்கள் நாயனே. வலாத்தஹ்மில் அலைனாஇஸ்றன் கமா ஹமல்த்தஹு அலல்தீனமின்கபுலினு நீ எங்களுக்கு முன்

னுள்ள உம்மத்துமார்கள் பேரில் சுமத்தினது போல் எங்கள் பேரில் கனமான அமறிதானத்தைச் சுமத்தாதே. றப்பனா எங்கள் நாயனே வலாத் துஹம்மில்னா மாலாத்தாக் கத்தலனாபிஹி எங்களுக் கியலாத காமத்தை எங்கள் பேரில் சுமத்தாதே. வஃபுஅன்னா எங்களுடைய பாவங்களை அழித்துவிடு. வஃபிர்லனா எங்களுக்குப் பிழை பொறுத்தருள் வர்ஹம்னா எங்களுக்குக் கிருபை செய்தருள் அன்தமவ்லானா நீ எங்களுடைய நாயன, நாங்கள் உன்னுடைய அடிமைகள். பன்ஸுர்னா அலல் கவ்மில் காபிரீன் ஆனதால் காபிறான ஜனங்களின்பேரால் மேலாக எங்களுக்குதவி செய்தருளென்ற துஆவாயிருக்கும்.

அப்துல்லா ஹில் யாபிஈ றஹியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். அதாவது நான் சொல்லுகிறேன். ஷெய்கு அபுல் கைஸ் ஸஃதுல்லா ஹிப்னு அபீகாஸிமில் அறபீ றஹியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறில் ஜீலானிக்தஸ ஸல்லல்லாஹு ஸிர்றஹுல் அஸீஸ அவர்களுடைய மஜ்லிஸில் அவர்களைத்தொட்டும் இந்த துஆவை இப்படியே றிவாயத்துச் செய்தார்கள். இந்த ஷெய்கு அபுல்கைஸு சொல்லுகிறார்கள். எனக்கு ஷெய்கு அபூ முஹம்மது இஸ்மாயீல் இப்னு றைமன்த்தில் அறபீ அவர்கள் அறிவித்தார்கள். அந்த ஷெய்கு அபூ முஹம்மது அவர்கள் சொல்லுகிறார்கள். நமக்கு இஸ்லாமுக்கு ஷெய்காகிய முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஹியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரராகிய வஹ்ஹாபும், அப்துர்றஸ்ஸாக்கும் ஷெய்கு செய்யிது அப்துல் ஜப்பாறு றஹியல்லாஹு அன்ஹு அவர்கள் எனக்கு அறிவித்தார்கள். அவர்கள் சொல்லுகிறார்கள். இப்போது சொல்லப்பட்ட துஆவையும், இதல்லாத சில துஆக்களையும் எங்கள் தகப்பனாரவர்கள் ஓதி வரும்படியாகப் பலதடவையும நான் கேட்டிருக்கிறேனென்று சொன்னார்கள்.

இதில் நான் சொல்லுகிறேன். இந்தக் கிதாபை ஓதி அறிபவர்களே நீங்கள் அனைவர்களும் கேட்டிருங்கள். அவுலியாக்களுக்குக் குதுபும், பெரிபெரிய மஷாயிகுமார்களுக்குக் குருவுமாகிய நாயகம் அவர்களுடைய பாதாரவிந்தத்தை அவுலியாக்களுடைய கழுத்துக ளெல்லாந் தாங்கி இருக்கின்ற செய்யிது முஹ்யித்தீன் அப்துல் காதிறு றஹியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சொல்லையும், அவர்



கள் றப்பனா, லாத் துஆகிதுனா வென்கிற ஆயத்தை துஆமுடிவாகும ளவும் ஓதி வந்ததையும் பாருங்கள். இன்னும் இந்த துஆவையும், இதுபோற்கொற்றவைகளையும், ஹறாமென்றுக் கறுபீ இமாம் அவர்கள் சொன்னதையும், ஒற்றுப் பாருங்கள். அப்போது இந்தக் கறுபீ என்பவர்கள் சொன்ன சொல்லானது தத்தத் தப்பிதமென்று உங்களுக்குத்தெரியவரும், பின்பு உனக்குப் பிரிசப்படி செய்யக்கூடும். அவுலியாக்கள் அடங்கலும் தங்களுக்கு மேலான மக்காமுடையவர்களென்றும், முன்னிலையானவர்களென்றும் விண்ணப்பஞ் செய்து தங்களுடைய மேலான பதவியின் சிறப்புக்கு அந்த அவுலியாக்கள் அடங்கலும் தாழ்ச்சிமை செய்து தங்களுடைய ஜத்தாகிய செய்யிதுனா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களுடைய சிறப்பான வாயில் உமிழ்ந்ததின் பிறகு மட்டிட்டுச் சொல்லவொண்ணாத அரிதான பூராயங்களும், அதிசயங்களும், ஞானப் பொருள்களும், அறிவுகளும் உண்டாகும்படி அல்லாஹுத் தஆலாவின் இறைபதத்துத் தங்களை மொழிய வைத்ததே. அப்போற்கொற்ற நாதாவாகிய இன்னும் ஆரிபீன்களின் கிரீடாதிபதியாகிய, ஷரீஅத்துத் துறையாகிய, ஹக்கீக்கத்துக் கடலாகிய ஷெய்கு முஹ்யித்தீன் ஆண்டவர்களுடைய சொல்லைப் பிடித்தும், அவர்கள் ஓதிய துஆக்களை ஓதுவதுக்கிடையிலும், இன்னும் பிரசங்கமாகிய பாரவான்களான இமாம்கள் முதலிய உலமாக்களுடைய சொல்லுக்கும், செயலுக்கும், மேற் கூறியக் கறுபீயுடைய சொல்லானது விகற்பமாயிருப்பதுடனே பாத்தினுடைய இல்மு தெரியாத லாஹிறுடைய உலமாக்களில் நின்றும் ஒரு பக்கீறு உடைய சொல்லைப் பிடித்து அந்த துஆவைப்போற்கொற்றவைகளை ஓதாதிருப்பதற் கிடையிலும் உனக்குச் சம்மதமிருக்கும். ஆனால் மெத்த மஷ்ஹூறான ஆபிதீன்களாகிய உலமாக்கள் எல்லோர்களும் முன் சொல்லபட்ட துஆவை இஃதிக்காதுக் கொண்டவர்களாயும், அதுகொண்டு துஆக் கேட்பவர்களாயுமிருந்தார்கள். இன்னும் மெத்த வரிசையான துஆக்களாகிறது ஒருவனாகிய சிறந்த நாயனுடைய திருவசனத்தில் சிறப்பாகிய குர்ஆன் ஷரீபில் வரும் துஆக்களாயிருக்குமென்று அனேகமான இமாம்கள் கலப்பறுதலாகச் சொல்லியிருக்கிறார்கள். மேலே சொல்லப்பட்டக் கறுபீ யென்பவர் முன் சொல்லப்பட்ட துஆவைப்போற்கொற்றவைகள் ஹறாமென்று சொ

னதுபோல் (அல்லாஹுத்தஆலா ஹம்மதுஅல் பின் மாஅன்று அவர்களை) ஆண்டவனே நீ எங்களைக்கொண்டு உனக்குத் தகுந்ததாயிருப்பதைச் செய்யென்பதும் இதுபோற்கொற்ற அனேகங்களும் உண்டென்று அவர் மட்டுஞ் சொல்லுகிறார். இதற்கு அவர் தலீல் சொல்லுகிறதாவது இடனாக அல்லாஹுத்தஆலா அவனுடைய வரிசையால் நலவைக் கொடுக்கவும், நிஃமத்தைக் கட்டளையிடவும் தகுமானவனாக இருக்கிறதுபோல் அவனுடைய நீதத்தால் அதாபு செய்யவுமே, குற்றம்பிடிக்கவும் தகுமானவனாக இருக்கிறான். ஆகையால் அவ்விதம் துஆக் கேட்பது ஹறுமென்றதற்குக் கலீலென்னும் அடைப்புக் கொடுக்கிறார். ஆனால் அவர் இப்படிச் சொன்னது மகா ஆச்சரியமாயிருக்கிறது, அவர் எப்படி துஆக் கேட்பவனுடைய நாட்டமானதிசைக்குவிடுமே அதைப் பாராமல் வேறே ஒரு பக்கமாய்க் கருத்தைச் செலுத்துகிறார். ஆனால் இடனாகப் படைத்த நாயனிடத்தில் துஆ இரப்பவனுடைய நிருணயமாகிறது அல்லாஹுத்தஆலாவாகியவனை சங்கையிலும், கொடையிலும் முடிவைக்கொண்டு வருணிப்புப் பெற்றவனென்றும், அவனிடத்தில் அவனுடைய வேதனையில்நின்றும், நீதத்தைக்கொண்டு கொளுவுமே அதைத் தேடுவதின்றி அவனுடைய கொடையில்நின்றும், உபகாரத்தில்நின்றும், அவனுடைய வரிசையைக்கொண்டு கொளுவுமே அதையே தேடுகிறேனென்று யாவர்க்குந் தெரியவருமே, ஆகலால் அப்படி துஆக் கேட்கப்படாதென்று முன் சொன்னவர் சொன்ன சொல்லும் சரியில்லை. அதுவுமின்றி லோக வழக்கத்திலும், நடபடியிலும், பெரிய ஒரு ராஜாவை நல்லாகப் போற்றிப் புகழ்ந்து அவருடைய சிற்சில இயல்புகளின்பேரில் கருக்கப்பட்டால் அளவளப்பையும், கொடையையும், தருமத்தையும் கொண்டுதான் வருணிக்கப்படும்.

வமாயதுக்குறூன இல்லா அன்யஷாஅல்லாஹு ஹுவஅஹ்லுத் தக்வா வஅஹ்லுல் மஃபிறத்தி. அல்லாஹுத்தஆலா நாடினாலே யொழிய கல்புகள் யாதொன்றையும் நினைக்கமாட்டார்கள். அவனே தக்வாச்செய்யத் தகுந்தவன், அவனே பிழைபொறுக்கப் பாத்திரமானவனென்று துன்யா, ஆகிறம் சகலத்தையுமுடைய நாயகமார்களுக்கெல்லாம் நாயகமாகிய அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருப்பதும் அந்த துஆவைப்போலேதான். ஆகலால் அந்த துஆவை ஓதுவது மெத்த நல்லதாயிருக்கும். இன்னும் ஷெய்கு முஹியித்



தீன் அப்துல்காதிரில் ஜீலானீக் கத்தஸல்லாஹு ஸிர்றஹூ, வஅ பால அல்லாஹு பிர்றஹூ அவர்களுடைய துஆவிலுள்ளதாயிருக்கும். பின் சொல்லப்படுகிற துஆவாகிறது ஷெய்கு றஸியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹதீது வஃலுகள் சொல்லத் தவக்கநுச்செய்ய முதல் ஓதுவார்கள். அந்த துஆவானது இது.

அல்லாஹும்ம நாயனே இன்னா நஸ்அலுக்க ஈமானன் யஸ்லுஹு லில்அறுலி அலேக்க. திடனாக நாங்கள் உன் பக்கல் கேட்டிருக்கிறோம். உன் பக்கல் எடுத்துக்காட்டுவதற் கிணக்கமான ஈமானையும். வஈக்காளன் நக்கிபு பிஹீ பியவ்மில் கியாமத்தி லைனையும் யதைக்க. இன்னும் கியாமநாளில் உன்னுடைய திருச்சமுகத்தில் நிற்கக்கூடிய யக்கீனையும். வஇஸ்மத்தன் துன்கிதுனா பிஹாமின் வறத்தாத்தித்துனூப். இன்னும் பாவங்களென்னும் நாசச் சுழிக்குழிகளில் வீழாதெங்களை யீடேற்றத்தக்க காவலானத்தையும். வறஹ்மத்தன் துத்தஹ்ஹிறுனா பிஹா மின்தனஸில் உயூப். இன்னும் வடுக்களென்னும் அழுக்குகளைவிட்டுந் துய்தாக்கிவைக்கு பென்னத்தக்க கிருபையையும். வஇல்மன் நபுக்கஹு பிஹி அஸ்றாமிறக்க வனவாஹீக். இன்னும் உன்னுடைய விதிவிலக்குகளை விளங்கி யறிந்துக் கொள்ளக்கூடிய கல்வியையும். வபஹ்மன் நஃலமு பிஹி கைபநுனா ஜீக். இன்னும் உன்னிடத்தில் எப்படி முனாஜாத்துச் செய்வோமென்று நாங்கள் அறிந்துக்கொள்ளத்தக்க விளக்கத்தையும் உன்னிடத்தில் கேட்டிரக்கின்றோம். வஜஅல்னாபித் துன்யாவல் ஆகிறத்தி மின்அஹ்லி விலாயத்திக். இன்னும் துன்யாவிலும், ஆகிறத்திலும் எங்களை உன்னுடைய விலாயத்தென்னும் சாம்ராச்சியத்திற்குரியவர்களில்நின்று மாக்கியருள். வம்லஃக்குலூபனா பினூரி மஃரிபத்திக். இன்னும் உன்னுடைய மெய்ஞ்ஞான ஒளிவால் எங்களுடைய இருதயங்களை நிறைத்தருள். வக்குஹ்லுயூன உக்கூலினா பிநூரி ஹிதாயத்திக். இன்னும் உன்னுடைய நேர்வழியென்னும் ஒளியைக்கொண்டு எங்களுடைய புத்திகளென்னும் விழிகளுக்குச் சுருமாயிட்டருள். வஹ்றுஸ் அக்தாமனா அபுக்காரிஹி மினல் முஹாரிபி மவாத்திரயில் ஸய்யிஆத். இன்னும் எங்களுடைய ஆலோசனையென்னும் கால்களைப் பாவங்களென்னும் அடிபாடுகளில் நடக்காமல் காப்பாற்றிக்கொள். வம்நஃத்துஹா அன்டாலினா மினல் உக்கூதி பிஷிபாக்கி முபிக்காத்திஷ் ஷஹவாத். இன்னும் எங்களுடைய

சக்கர மெய்யும் பக்கிசாரங்களைக் கூடிய மோசத்திலாக்கிவிக்கும் பெருகல்களைநூம் கண்ணெரிகளில் அகப்பட்டுக்கொள்ளாமல் விலக்கியருள். வஅஇன்னீ யீக்காமிஸ் லவாத் அலாத்தறக்கின் ஹெறவாத். இன்னும் விருமை இச்சைகளைவிட்டு பிந்து வைக்கும் தொழுகையையும் நிலைபராகத் தொழுதுவருவதற்கு எங்களுக்கு உதவி செய்தருள். வம்ஹற்பலாத்துற ஸைலி ஆத்திறு அவ்ஙறயித் அம்மா லிஹ பிஸ்திஸ் ஸறனைத். இன்னும் எங்களுடைய அமல்களை வழுதப்பட்ட பட்டோலைகளைவிட்டும் எங்களுடைய இம்மையின் வழிகளை கன்மையென்னும் கைகளால் அழித்துவிட்டருள். குன்மறை ஹைறுயன் சத்தி உர்றஜாவுயின்மறைஇதா அஸ்றல அஸ்றலுல் உஜூதி பி உஜூதிஹூம் அன்ற ஹுலைஹிஜ்ஜலாலு பீஸுலயில் முறுஹதிமுறா ஹின அபுஜூலிஹு இல்லயவ் மின்ஹறாமுத். காலங்கள் கடைமுழிகளிலான நேரத்தில் எங்களுடைய செயல்களைக்கொண்டு தடுக்கப்பட்டவர்களாய், உபமானமுந் தனித்தவர்களாய் ஆகும் வேளை தான்யாவில் ஹையாத்தாயிருப்போர்கள் அவர்கள் முகங்களைக்கொண்டு என்னைவிட்டுப் புறக்கணித்துத் திரும்பும்போது எங்களுடைய ஆசை வற்றிப் போகுந் தருணத்தில் எங்களுக் குதவியாயிருந்தருள். அஞ்ஞீ அப்துக்கல்லஹ்பஅஸா மாஅலிப்பமினல் இஸ்மத்தி மினஸ்ஸலலி. நாயனே, பலஹீனமாகிய உன்னுடைய இந்த அடியானைச் சமுகாதாரமாகப் பெற்றுக்கொள்வதிலிருந்தும் பழிபடுக்குவருகிற அழகான வழக்கத்தின்பேரில் அவனை நடத்தாட்டியருள். வபிக்ஹற வல் ஹாலிரீன லிஸாலிஹில் கௌலிவல் அமலி. இன்னும் அவனுக்கும் அவனுடைய பக்கிலிற் கூடிய ஜனங்களுக்கும் சொல், செயல் இவைகளில் நல்லத் திருத்தமானதுகளில் நல்வழிகளிற் கட்டளையிட்டருள். வஅஜ்ஙி அஸாலிஸானிஹுமி பாயன் தபிஉ பிஹிஸ்ஸாமிஉ வத்து ஹறபுல ஹால் மராமிஉ வயஸீனைறல்க் கல்புல் காஷிஉ. நாயனே, ஹாதிது வல்லவிஸ்கின் மக் கேட்டிருப்போர்கள். அதைக்கொண்டு பலனை பெறும் அதற்காகக் கண்விர்களை ஒலிக்கட்டாட்டு உள்ளச்சமான மனங்கள் இளகுமே அப்போதுங்கொற்ற வட்டில அவனுடைய காலில் நடத்தாட்டியருள். வக்பிற்லஹூ வலிஸ் ஹாலிரீன. ஆண்டவனே, அந்த அடியானுக்கும், இந்த ஹாலிரீன்களுக்கும் பிழை பொறுத்தருள். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.



இதாகிறது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹுடைய அறிவிற் சிலதையும், அவர்கள் உஸ்தாதுகளிற் சிலர்களுடைய நாமத்தையும் பேசுகிறதாயிருக்கும்.

அறிந்துக்கொள். திடனாக அறிவைத் தேடிப்படிப்பது ஒவ்வொருவர்கள்பேரிலும் விதியான கடமையாகவும், நோய்கொண்ட மனங்களுக்கு மருந்தாகவுமிருக்கும். ஏனென்றால் அந்த அறிவுதான் அல்லாஹுத்தஆலாவைப் பயந்து நடக்கும் வழிகளில வழியால் மெத்த வெட்டவெளிச்சமானதாயிருக்கும். இன்னும் அவைகளில் எண்ணிப்பால் மெத்தக் கடப்பானதும், நேர்வழி பெறும் அந்தாட்சிகளால் மெத்த வெளியானதும் அந்த அறிவேயாம். இன்னும் பிசகாதக்கினென்னுந் திட்டமுண்டாவதற் சேரிப்போகும். எளிகளில் மெத்த உயர்த்தியானதும், முத்தக்கீன்களுடைய தறஜாக்களில் மெத்த மேலானதும், பார்க்ககீர்த்திகளில் மெத்த வலிமையானதும், நேர்வழி பெறுவோர்களுடைய பதவிகளில் மெத்தப் பெருமையானதும் அதுவேயாம். இன்னும் ஹக்குத் தஆலாவுடைய மஃரிபத்தும், ஞானமுமுண்டாகிற மக்காமாளில் ஏழும் ஏணியும் அதுவேயாம். இன்னும் இரப்பாக்கப்பட்ட ஹலத்துகளில் சேர்ப்பித்திருக்கும்  கொண்டுபோய்விடும் வஸீலாவென்னும் சிப்பாரிசும் அதுவேயாமென்று ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திட்டமாய் அறிந்தபோது அந்த அறிவைப் பெறுக் கொள்வதற்கே திறமாகத் தொண்டிப்பதிலேயே ஆக்கமாயிருந்து அந்த இல்முடைய உஸூல்களையும், புறூஉகளையும் தேடுவதில் விரைந்து உம்மத்துமார்களில் உலமாக்களாகிய நேர்வழிக்கொடிகளானவர்களும் பற்றிப் பிடித்து நடக்கவேண்டிய ஷெய்குமார்களை நாடிப்போய்ப் படித்தார்கள். இன்னும் சிறு வயதிலேயே குர்ஆனைக் கொண்டே பாக்கியமைக் கெட்டியாய்ப் பாடமிட்டு அதின தப்ஸீறை ஒழியறிந்து அதினுடைய இரகசியங்களையும், பாஷைகளையும் செவ்வையாய்ப் படித்தார்கள். இன்னும் பிக்ஹுடைய இல்முகளை ஷெய்கு அபுல்வபா அலியிப்னு* அக்கில், ஷெய்கு அபுல் கத்தாப் மஹ்பூஸுப்னு அஹ்மது, ஷெய்கு அபுல் ஹஸனைன் முஹம்மதுப்னு காலியில்கா அபீயஃலா, ஷெய்கு அபூஸஈதில் முபாறக்குப்னி அலி முக்கறமீ அவர்கள் என்கிறவர்களிடத்தில் மஹாஸினுமி றலியல்லாஹு அன்ஹும் இவர்களிடத்தில்

லாம் மஆறைபு, இலாபு, அஸ்லு, பறுவு இவைகள் யாவையும் பிரித்
தறிந்துக் கொள்ளுமட்டும் ஓதிக் கற்றுக்கொண்டார்கள்.

இனி ஹதீதுகளை அநேகம்பேர்களிடத்தில்நின்றும் கேட்டுப்
படித்தார்கள். இவர்களி லுள்ளவர்கள்தான் ஷெய்கு அபூகாலிபு
முஹம்மதுபினுல் ஹஸனில் பாக்கில்லானீ, ஷெய்கு அபூஸயீது முஹம்
மதுபினு அப்துல்கரீம், ஷெய்கு அபுல்கனீமி முஹம்மதுபினு
அலிய்யுபினு மைமூன், ஷெய்கு அபூபக்கர் முஹம்மதுபினு முஸப்
பறு, ஷெய்கு அபூமுஹம்மது ஜஃபறுபினு முஹம்மதுல்காரீ,
ஷெய்கு அபுல்ககாஸிமி அலிய்யுபினு அஹ்மதுல்க் கறுகி, ஷெய்கு
அபூஉதுமான் இஸ்மாயீலுபினு முஹம்மதுல் இஸ்பஹானீ, ஷெய்கு
அபூத்தாலிபு அப்துல்காதிறுபினு முஹம்மது இவர்கள் சிறிய தகப்
பனுடைய மகனார், ஷெய்கு அபூபக்கரயிரி அப்துர்றஹ்மானுபினு
அஹ்மது, ஷெய்கு அபுல்பறக்காத்தி ஹிபத்துல்லாஹிபினுல் முபா
றக், ஷெய்கு அபுல்இஸ்ஸி முஹம்மதுபினுல் முகுத்தாரில் ஹாஷிமீ,
ஷெய்கு அபூநஸ்ரீ, ஷெய்கு அபூகாலிப், ஷெய்கு அபூஅப்தில்லா
இவ்விருவர்களும் இமாம் அபுல் ஹஸனிபினுல் பின்னுடைய குமாரர்
களாயிருக்கும். ஷெய்கு அபுல் ஹஸனைஇபுனுல் முபாறக்குபுனு
அப்தில்ஜப்பாற், ஷெய்கு அபூமன்ஸூற் அப்துர்றஹ்மானுபினு
அபீகாலிப், ஷெய்கு அபுல் பறக்காத்தித் தல்ஹத்துபுனு அஹ்மதி
இவர்களும். இவர்களல்லாதவர்களுமான ஷெய்குமார்களெல்லோர்க
ளும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய ஹதீதுக
ளைக் கெட்டியாகக் காப்பாற்றிவரும் இமாம்களாயிருக்கும்.

இனி நஹ்வு, ஸறுபு, லுகத்து முதலிய இல்முகளை ஷெய்கு
அபூஸக்கரிய்யா யஹ்யாபுனு அலிய்யித் தபுரீஸீ றஹிமஹுல்லாஹு
அவர்களிடத்திற் படித்தார்கள். இன்னும் முஹக்கிக்கீன்கள் தொட
ரப்பட்ட இமாமாகிய ஸாலிக்கீன்கள் தொடரப்பட்ட ஆரிபீன்களுக்
குத் தலைவராகிய மெஞ்ஞான சொரூபமென்னும் அபுல்கைரி ஹம்மா
துபுனு முஸ்லிமித்தையாஸு றஹிமஹுல்லாஹு அவர்களைச் சேர்
ந்து நடந்தார்கள். அவர்களில்நின்றுமே தரீக்கத்து இல்மை யெடு
த்து அவர்களைக்கொண்டே அதபுகளைப் பேணி நடந்தார்கள். மே
த்த உயர்ந்த மந்தாமுடைய இமாமாகிய ஷெய்கு அபூஸயீதில் முபா
றக்கில் மகுஸூமீ றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திலின்
றும் சிறப்பான கிறுக்காவை யெடுத்தார்கள். இன்னும் அக்காலத்தி



லுள்ள ஆரிபான ஷெய்குமார்களில்நின்றும் மெஞ்ஞானிகளான
பாரவான்களிலின்னும் அநேக ஜமாஅத்துகளைச் சந்தித்தார்கள்.
ஆசா நாயகத்தனத்தாலும், தலைமைத்தனத்தாலும், சிறப்பாலும்,
காலாகாலமும் நிலைபரமாக்கப்பட்ட பெருமையாலும் அவர்களே சங்
கையானவர்கள். இன்னும் அவர்கள்தான் மார்க்கத்தைக் காப்பாற்
றுகிறவர்கள். அதைவிட்டும் விரோதமடங்கலையும் விலக்கிறவர்கள்.

இன்னும் ஷரீஅத்திற் குதவிசெய்வோர்களும், அதிற்குப் பல
மானவர்களும், இஸ்லாமுக்கு விருதுக்கொடியானவர்களும் தூறு
னவர்களும், ஹக்குக்கு ஆளானவர்களும், வேலானவர்களும், அந்த
நாதாக்களேயாம். அவர்களாகிறது ஷறஹுடைய இல்முகளைப்
படிப்பதில் நிலைபரமாய் நின்றவர்களாயும், அவர்களில்நின்றும் மார்க்
கத்துடைய இல்முகளைத் தேடியெடுப்பதில் கேமமாய்த் தெண்டிப்
பவர்களாயுமிருந்தார்கள். அப்படி யிருந்தக்காலத்தி லுள்ளவர்கள்
சகலர்களையும் மேலிட்டு அவர்களுக் குவமையானவர்கள் இல்லை
யென்கிறபட்டியும் பேர் தரித்தார்கள். அப்பால் அப்படிப்பட்ட
ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய
தருதிமை அல்லாஹுத் தஆலா கல்குகளுக்கெல்லாம் வெளியாக்கித்
தந்தான். ஆனால் அவர்கள் யாருக்கும் பொதுவானவர்கள். இன்
னும் அவர்களில் சகலரிடத்திலும் நிரப்பமான வலியக் கபூலையும்,
ஹுறுமத்தையும், நிறைந்த வல்லபத்தையும், சிறப்பான வீறு தங்கிய
கீர்த்திகளையும் உண்டாக்கி அவர்களுடைய கல்பெனுங் கடலி
லிருந்து நற்வெனுவ கலைசயின்பேரில் பூராயங்களென்னும் முத்துகளை
வெளியாக்கினான். இன்னும் அவர்களில் அல்லாஹுத் தஆலாவில்
நின்றும் முடுகுதல் பெற்றிருக்கிற அடையாளங்களும், அவனுடைய
வணக்கத்திலும், தெண்டிப்பிலும் பலமாய்த் தரிபட்டு நிற்பதுடனே
அவர்களுடைய வலித்தனத்திற்குரிய அத்தாட்சிகளும் வெளியாச்
சுது. இன்னும் ஹவா நபுஸானில் அழைக்கும் இச்சைகளைவிட்டும்
ஆகிறத்துடைய வாழ்வளவில் சாயும் கலப்புகளைவிட்டுங் கலப்பறத்
தனித்திருப்பதுடனும், எல்லா கல்குகளுக்கும் கிருபையான இரக்கந்
தரிபாடாயிருப்பதுடனும் சகல பாக்குகளையும்விட்டு நீங்கித் தங்க
ளுடைய நாயனைத் தேடுவதில் அழகான பொறுதியுடனும், சோத
னைகளையுந் துன்பங்களையும் அனுபவிக்க வருத்தங்களைப் பொருத்
துக்கொண்டே பாக்கியத் தன்
தக்கேடாய்க் குடிப்பதுடனும் நாயனைக்கொண்டே

யாவருடைய பாக்குகளை விட்டுவருவதுடனும் நீங்கின்று தெண்டித்தார்கள்.

பின்பு ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாஜிபான இல்முகளாகிய ஹதீது, பிக்ஹு, தப்ஸீறு முதலானவைகளிலின்னும். இன்னும் அக்கீதா, ஹக்காயிக்கு, மஆரிபா, முதலாகிய பாக்கியமான இல்முகளிலின்னும் இருவிலாக்களும் நிரம்புமளவும் செவ்வையாய்ப் படித்துத் தேறினபோழுது அவர்களுடைய உஸ்தாது ஷெய்கு அபூஸயீது மக்ஸூமீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மதுறஸா அளவிலும் அதைப்பிடித்துச் சூழ்ந்திருக்கின்ற மஹல்களாகிய தேசங்களளவிலும் சேர்க்கப்பட்டவர்களாய் ஹதீது, அறிவு, உபதேசங்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவ்விடங்களிலுள்ள பேர்களெல்லாம் அந்த மதுறஸாவைப் பரிபாலனம் பார்க்கும்படி அனேக முதல்களைச் சேகரித்துக்கொடுத்தார்கள். அப்பால் இல்மைத் தேடிப்படிக்கும் புக்கறுக்களெல்லார்களும் தங்கள் தங்களுடைய சரீரங்களைக்கொண்டு அந்த மதுறஸாவில் வேலை செய்தார்கள். முன்னே அந்த மதுறஸாவானது மேலே குறித்த ஷெய்கு அபூஸயீது மக்ஸூமீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்காயிருந்தது. இப்போது அந்த மதுறஸாவானதை ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களளவிலே சேர்த்துச் சொல்லப்படுகிறது. அந்த மதுறஸாக் கட்டி முடிவானது ஹிஜ்றத்து ஐநூற்று இருபத்தெட்டாம் வருஷமாயிருக்கும். அந்த மதுறஸாவில் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பற்பல இல்முகளைப் படித்துக்கொடுக்கவும், வஃலுகள் சொல்லவும், பத்வாக்கள் கொடுக்கவும் தலைமையாயிருந்தார்கள். அந்த மதுறஸாவுக்குப் பற்பல இடங்களிலிருந்தும், பற்பல ஜனங்களும் நேர்த்திக் கடன்கள் கொண்டுவந்து கொடுக்கிறவர்களாயிருந்தார்கள். இன்னும் அந்த மதுறஸாவில் ஸியாறத்தைநாடி அனேகம் கல்துகள் வருவார்கள். இன்னும் உலமாக்களிலின்னும், புக்கறுக்களிலின்னும், ஸாலிஹீன்களிலின்னும் அனேக ஜமாஅத்துகள் அந்த மதுறஸாவுக்கு வந்து கூடி ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வஃலு முதலிய உபதேச வசனங்களைக் கேட்பதுகொண்டும், அவர்களைத் தோழமை பிடிப்பதுகொண்டும், அவர்களுடன் ஒன்றாயிருப்பதுகொண்டும், அவர்க



ளுக்குப் பணிவிடை செய்வதுகொண்டும் பலன் பெற்றார்கள். இன்னும் இல்முகளைத் தேடிப் படிப்பதில் நாடி பற்பல இடங்களிலுள்ள ஜனங்களெல்லாம் வந்து இல்முகளைப் பெற்றுக்கொண்டார்கள். இன்னும் அவர்களிலின்னும் மற்ற ஜனங்களெல்லாம் கேட்டுக்கேட்டுப் படித்தார்கள். அவர்களளவிலேயேதான். இறாக்கிறாஜ்ஜியத்தில் முரீதீன்களை வளர்ப்பது முடிவாச்சுது. அகதியங்களின்னும் முதல் அறைகளை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இன்னும் ஹக்காயிக்கென்னும் உள்ளமைகளின் திறவுகோல்களை அவர்களுடைய கைவசத்திலாக்கப்பட்டது. ஞானங்களின் பிடிகயறுகளை அவர்களுடைய கையில் ஒப்பிவிக்கப்பட்டது. ஆகையால் ஆலத்தில் எழுவான முதல் படுவான்வரையிலுமுள்ள தலங்களிலெல்லாம் தங்களுடைய அதிகாரமே செலுத்தினார்கள்.

இன்னும் திடனாக அவர்கள் அந்நேரத்தில் குதுபாகவும், அறிவாலும் தீர்மானத்தாலும் அவர்களளவிலே யாகவேண்டிய முதாண்மைக்காரராகவுமிருந்தார்கள். ஆலத்தின் காரியாதிகளை முழுக்கியும், உடைத்தும், கண்காட்சி கொண்டும், கோட்டங்கொண்டும் பராபரித்துவந்தார்கள். இல்முகளை அஸ்லுகளாலும், பறுஉகளாலும் விரித்து அத்தாட்சிகளை வெளியாக்கினார்கள். இன்னும் தங்களுடைய அக்லைக்கொண்டு விளங்கியும், ஷறுஇச் சுமந்தோர்களின் நாவின்பேரில் வரப்பட்ட நக்லைக்கொண்டு விளங்கியும், ஹுக்முகளை விபரமாய்த் தரிபடுத்தினார்கள். இன்னும் சொல்லாலும், செயலாலும் ஹக்கான மார்க்கத்திற் குதவி செய்தார்கள். இருபதியிலும் பலன் கொடுக்கும்படியாயுள்ள அனேகம் கித்தாபுகளைக் கோர்வை செய்தார்கள். அதிகமான பிரயோஜனங்களை நிறப்பமாக்கினார்கள். அவர்களுடைய வரிசைகளை வழித்தோழன்மார்களெல்லாம் பேசிக்கொண்டு நடப்பார்கள். இன்னும் அவர்களுடைய கீர்த்திகளையே அவ்வணக்காரர்களெல்லாம் கதைத்துக்கொண்டு போவார்கள். அவர்களுடைய செய்திகள் எல்லாக் கோணங்களிலும் பரவிநின்றது. எல்லா மனிதர்களுடைய காலங்களும், நேரங்களும் அவர்களளவிலேயே போய் முடிவு பெற்றுக்கொண்டிருந்தது. சமுத்திரங்களெல்லாம் அவர்களளவிலேயே நீண்டுக்கொண்டிருந்தது. அவர்களின் பெய்களுடைய இலட்சணங்களென்னுந் தோப்புகளில் கண்களெல்லாம் பார்த்துச் சுகமடையும்படியாச்சுது. அவர்களுடைய

கவசீக வருணிப்புகளையெல்லாம் நாவுகளும் புகழ்ந்து மொழிந்தது. இன்னும் அவர்களுக்கு மனுக்கள், ஜின்களாகிய இரண்டு கூட்டங்களுக்கும் இமாமானவர்களென்றும், இரு வழிகளையுந் துலாம்பரமாய் வெளியாக்கி வைப்பவர்களென்றும், தாய் தந்தையாகிய இருபுறத்தின் ஐத்துமார்களும், சங்கையானவர்களென்றும், லாஹிறான இல்முகளைத் தேடும் வழியையும் படித்துக்கொடுப்பவர்களென்றும் நல்ல பட்டஞ் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இடனுக அவர்களுடைய வரிசைகளானது சொல்லரிய நேர்வழிக்குரிய பெருமைகளென்னும் பரிவட்டம் அணிந்தவர்களாயும் பின் வருகிறவைத்துகளைச் சொன்னவருடைய சொல்லாவது அவர்களிலுள்ளதாயுமிருந்தார்கள்.

பைத்து.

பிமக்தமிஹின் ஹல்லஸ்ஸஹாபு வஅஃஷபல்
இருக்குவஸா லல்கய்யு வத்தலஹர் றஷ்து.

(இதின்பொருள்) இடனுக ஸெய்யிதுனா முஹ்யித்தீன் அப்துல்காதிரில் ஜீலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜீலானி நகரத்திலிருந்து இறாக்கி ராச்சியத்திற்கு முன்னோக்கிச் சென்ற காரணத்தால் சத்தாசாகரம்போல் மழைமாரி பொழிந்து இறாக்குத் தேசங்களெல்லாம் செழித்தது. உடனே வழிகேடெல்லாம் நீங்கி நேர்வழி துலாம்பரமாய் வெளியாய்விட்டது.

பைத்து.

பாதனுஹு ஸன்துன் வஸஹறுவுஹு ஹிமா.
வஹஸ்பாவுஹு துர்றுன் வஅம்வாஹு ஹாஷ்ஹு.

ஆனபோதே அந்த இறாக்குப்பூமியிலுள்ள கம்பளிகளெல்லாம் ஒளிவு பிரகாசிக்குங் கம்பளிகளாயும், அதிலுள்ள கற்கறடுகளெல்லாம் முத்துகளாயும், அதிலுள்ள தண்ணீர்களெல்லாம் கிட்டாளத் தேனாகவும், அதின் வெளிகளெல்லாம் கார்மானமடைந்த தலங்களாகவு மாகிவிட்டது, இந்தச் சிறப்புகளெல்லாம் உண்டானது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த இறாக்கி ராச்சியத்திற்கு முன்னோக்கினதாலுண்டானதாம்.



பைத்து.

யமீனுபியிஹி ஸத்ருல் இருக்கி ஸபாபத்தன்
வபீக்கல்பி நஜ்தின்மின் ஸபாபத்தி ஹிவஜ்து.

அந்த இறாக்கி ராஜ்ஜியத்தாருடைய இருதயங்களெல்லாம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் கொண்ட பிரியத்தால் மகிழ்ச்சிகொண்டாடி, அவர்களை நாடி அவர்கள் பாதாரவிந்தத்தைத் தேடி அவர்கள் சமுகத்திற் சாடிக்கொண்டிருக்கிறது. இன்னும் நஜ்து ராச்சியத்தாருடைய இருதயங்களிலும், ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்க்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்பேரில்கொண்ட அபேட்சையால் உண்மையான ஆசைப்பாடுண்டாயிருக்கிறது.

பைத்து.

வபிஷ்ஷறுக்கி பறுக்குன்மின் மக்காயிஸி காரிஹி
வபில்கறுபி மின்திக்ரு ஜலாலத்தி ஹிறஃது.

இன்னும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஒளிவு துலங்கும்படியான காரணங்களிலின்றும், எழுவான் பக்கத்துத் தேசங்களிலும் அவர்களுடைய பிரபல்லியமென்னும் மின்னல் பிரகாசிக்கிறது. இன்னும் படுவான் பக்கத்துத் தேசங்களிலும் அவர்களுடைய வலுப்பங்களைக் கூறி முழக்குவதின் ஓசையாகிறது கோடையிடிபோல் முழங்கிக்கொண்டிருக்கிறது என்று சொல்லுபவர் சொன்ன சொல்லும் அவர்களில் உண்மையாயிருக்கிறதென்பதாம்.

இன்னும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மதுஹில் சொல்லப்பட்டிருக்கிறது.

பைத்து.

அவுஹல்ஸயானு மஷாபிக்கத்தன் மனாக்கிபுஹு.
வத்தீனு முஷ்ரிக்கத் துன்பிஹி மனாஸிபுஹு.

(இதின்பொருள்) இன்னும் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களால் காலத்தினுடைய நேரங்களடங்க

னும் ஆசை கொள்ளப்பட்டதாகிவிட்டது. இன்னும் மார்க்கத்துடைய அடையாளங்களென்னும் மனாருக்களெல்லாம் பிரகாசமாய்த் துலக்கிவிட்டது.

பைத்து.

வல்இல்மு ஆலியத்துன்பிஹி மருத்திபுஹு
வஷ்ஷெய்குஹு மன்ஸூமன் பிஹிக்கத்தாஇபுஹு.

இன்னும் இல்முடைய பதவிகளெல்லாம் அவர்களால் மெத்த மேலம்பரமாகிவிட்டது. தீனுல் இஸ்லாமுடைய ஜனங்களெல்லாம் அவர்களால் உதவி செய்யப்பட்டவர்களாகிவிட்டார்கள். இன்னும் உலமாக்களில்நின்றும் அநேகம்பேர்களெல்லாம் அவர்களைச்சேர்ந்து பாரவான்களாகிவிட்டார்கள். இன்னும் புக்கஹாக்களில் மிருந்தபேர்களெல்லாம் அவர்களிடத்தில் ஓதி அவர்களுக்குச் சேஷாகிவிட்டார்கள். ஆனால் அவர்களுடைய எண்ணம் பிருதமாயிருப்பதால் அவர்களுடைய பேர்வழிகளைக்குறித்துச் சொல்லவில்லை. இன்னும் மட்டிலடங்காத புக்கஹாக்கள், பெரியபெரிய ஷெய்குமார்கள், உள்விளங்கியறிந்த உலமாக்கள் இவர்களில் எண்ணுதற்கரிதான கூட்டங்களெல்லாம் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் நஸீஹத்தும், இலாபத்தும், பெற்று அவர்களில் நின்றும் கிறுக்காவென்னும் அடையாளப்போர்வையையு மணிந்துகொண்டார்கள். இன்னும் திடனைக யமனிராச்சியத்து மஷாயிகுமார்களில் அநேகர்களும் கிறுக்காவணைவதில் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களளவில்தான் மீள்வார்கள். அவர்களிற் சிலபேர்கள் மட்டும் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வரிசைகளென்னும் விருதுக்கொடிகள் பரந்து பிரபல்லியமானபோது பருதாதுக்குவந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய திருக்கையாலே கிறுக்காவைப்பெற்றணைந்திருக்கிறார்கள். மற்றும் மிருந்தபேர்களெல்லாம் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் யமனுராச்சியத்துக்கனுப்பிவித்த தூதர்களுடைய கையாலணைந்திருக்கிறார்கள். கிறுக்கா அணைந்ததிலும், யமனிராச்சியத்து ஷெய்குமார்களில் மிருந்தபேர்கள் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களளவிற் சேர்ந்திருப்பதிலும் நான் சிலகவிதாக்கள்



சொல்லியிருக்கிறேன். அதில் நின்றும் பத்துப்பைத்துகளை இவ்விடத்திலெழுதுகிறேன், அதாவது இதுவேயாம்.

பைத்து.

வபீமன் ஹஜில் அஷ்யாகி யில்யாஸா கிறக்கத்தி.
லஹூ ம்ஸன்னத்துன் அஸ்லன் றுவீதாக்க அன்அலீ

(இதின்பொருள்) ஷெய்குமார்களுடைய வழியில் கிறுக்காவென்னுமுடுமானத்தை யுடுத்தாட்டுவது அவர்களுக்கு ஸுன்னத்தாயிருக்கும் அதை நல்ல அலிஉடைய இமாம்களைத்தொட்டும் அந்த கிறுக்காவின் அஸ்லு ஸுன்னத்தென்பதற்கு ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

பைத்து.

வலுபுஸு ஹல் யமாநிய்யீ னயற்ஜிவு காலியன்.
இலாஸனதின் ஸாமிக் யகாறன் அலல்குல்லி.

இனி யமனிராச்சியத்திலுள்ள மஷாயிகுமார்களில் மிருந்தபேர்கள் கிறுக்கா அணைந்ததும் எல்லாவலீமார்கள் குதுபுமார்களுடைய தகலைக்காணவும், பெருமையால் மேலான சகலர்களையுமாதரிக்கும் தாபரமானவொரு குதுபளவிலாயிருக்கும்.

பைத்து.

இமாமுல் வருக்குதுபுல் மலாக்காயிலுன்அலா.
ரிக்காபிஜ மீஇல் அவ்லியாக்க தமீஅலீ.

இன்னுமந்த ஒரு குதுபென்றிஷாருச் செய்யப்பட்டவர்களாகிறது எல்லா கல்குகளுக்கும் இமாமானவர்கள், சிறப்பானபேர்களில் பெரிய குதுபுத்தனம் பெற்றவர்கள். இன்னுமவர்களாகிறது கதமீ ஹாதிஹி அலாறக்கபத்தி க்குல்லிவலியயின் வலிய்யத்தின் லில்லாஹ என்னுடைய இந்தப்பாதமானது அல்லாவுக்குடைய சகல ஒலிமார்களாகிய ஆண்கள், பெண்கள் எல்லார்களுடைய கழுத்தின்மேலே யிருக்கிறதென்று மொழிந்தவர்கள் அவர்கள்தான் ஷெய்கு அப்துல்காதிரில் ஜீலானீ றலியல்லாஹு அன்ஹு வக்கத்தஸ ஸிர்றஹு, வஅபால அலைனா பிர்றஹு.

## பைத்து.

பத்தஃத்தஅ ஸஹூக்குல்லுன் பிஷ்றுக்கின் வமஃரிபி.
ரிக்காபன் ஸிவா பீறுதின் டீஊக்கிப் பில் அஸ்லி.

அவர்கள் அல்லாஹுத் தஆலாவின் உத்தரவுகொண்டு அவ்
வசனத்தை யருளிச்செய்யவே அந்நேரமவர்கள் சமுகத்தில் ஹா
ஸிருயிருந்த ஐம்பத்திரண்டு வலிமார்களும், இன்னும் எழுவான்,
படுவான், தெற்கு, வடக்கு சகலவிடங்களிலும் காயிபான வலிமா
ர்களெல்லோர்களும் அவரவர்களுடைய கழுத்துகளையும் நீட்டி
அந்தச்சொல்லுக்குத் தலைசாய்த்தார்கள். இன்னும் பெரிய குதா
பாகிய செய்யிது அஹ்மதுல் கபீறுர்றபாஇ றலியல்லாஹு அன்
ஹு அவர்கள் பஸுருத்தேசத்தி லிருந்தார்கள். ஷெய்கு முஹ்யி
தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவ்வச
னத்தைப் பகுதாதிலிருந்து சொன்னார்கள். பகுதாதுக்கும், பஸ
ருவுக்கும் மூன்றுநாள் பயணத்தூரமிருக்கிறது அப்படியிரு
க்க ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்
பகுதாதிலிருந்து சொன்னவசனத்தை செய்யிது அஹ்மதுல் கபீ
றுர் றபாஇ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பஸுருவின் பள்ளி
யிலிருந்தக்கணமே கேட்டறிந்து உடனே அந்தப்பள்ளியில் ஒருச்
சாய்ந்து படுத்துக்கொண்டு வஹ்ஹைறமித ஹாதாமின்ஹும் யஃனீ
இந்தச்சிறுமையாகிய சின்ன அஹ்மதும் தங்களுடைய கதத்தைத்
தோளில் தாங்கினபேர்களி லுள்ளவன்தானென்று மெத்தத்தாழ்ச்
சிமையாய் அருளிச்செய்தார்கள் இப்படிச்சொன்ன வாக்கியத்
தை அந்நாளிலிப்பூவுலகத்திலுள்ள ஒலிமார்களிலொருவரும் எற்
காதிருக்கவில்லை.

ஆனால் இஸ்பஹான் இராச்சியத்திலுள்ள அபூபக்ரென்னும்
பெயருள்ள ஒரே ஒருவர்மாத்திரம் எற்காததுபோல் தன்னுடைய
கழுத்தை நீட்டாமலும், ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்களுடைய மேலேகூறிய திருவசனத்திற்குத் தாட்
சிப்பாடு செய்யாமலுமிருந்தார் அப்படியிருந்த அக்கணமே அவரு
டைய விலாயத்தும் பறிபட்டு தீனுல் இஸ்லாமும் மாறிக்காபிறாகி
நஸ்றானியா மார்க்கத்திலாகிவிட்டார், அஊதனல்லாஹு மின்
தாவுக்க அப்படிப்பட்ட அவுலியாக்களுடைய கோபத்தலகப்படா



மல் நம்மனைவரையும் அல்லாஹுத் தஆலா காப்பாற்றிக்கொள்
வாராகவும் ஆமீன்.

இந்த அபூபக்றுல் இஸ்பஹானீ யென்னும் வலிக்குவந்து
நேரிட்ட பலாயாகிறது அவர் நஸாறுமார்க்கத்திலுள்ள வாலிப
மான அழகிய ஒரு பெண்ணைக்கண்டு அவள்மீது ஆசைக்கொண்டு
அவளைப்பின் தொடர்ந்துபோனார் அவவிதம் போவதை யவளறி
ந்து அவரைத்திரும்பிப்பார்த்து எடா தீனுல் இஸ்லாமிலுள்ளவ
னே நீ என்னைத்தொடர்ந்து வராதே நானுன்னைப் பொருந்தமாட்
டேன். ஆனால் நீயும் என்னுடைய நஸ்றானிமார்க்கத்தில் வந்தா
யானால் நான் பொருந்திக்கொள்வேனென்று சொன்னாள் அப்
போதந்த வலியானவர் அவள்பேரிற் கொண்ட மோகத்தாலும்
அவருக்குள்ள கெட்டவிதியாலும் அவர் நஸ்றானிமார்க்கத்திலாகி
அவளுடன் சேர்ந்துக்கொண்டு அவளுடைய கின்ஸீறு
க்காபிறாகி யவளுடன் சேர்ந்துக்கொண்டு அவளுடைய கின்ஸீறு
களை மேய்த்தவராயும், அவள் வணங்கிற குரிஸை வணங்
கினவராயும், தீனுல் இஸ்லாமைத்தீரவே மறந்தவராயுமாகி முப்
பது வருஷமட்டிலும் அந்தக்கோலத்திலிருந்தார். அப்பாலந்த
அபூபக்றுல் இஸ்பஹானியையறிந்த வலிமார்களில் நின்றும் முன்
னூற்றிச் சில்வானம்பேர்க ளொன்றாகக்கூடி ஷெய்கு அப்துல்கா
திறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மத்றசாவைநாடி
வலியாறத்துச்செய்தவர்களாய் வந்தார்கள் அப்போதவர்களடங்க
லுக்கும் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்
கள் விருந்துகொடுத்தார்கள். பின்பு அந்த ஷெய்குமார்களெல்
லோர்களும் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு
வைப்பார்த்து எங்கள் நாயகமே நாங்களெல்லோர்களுமின்றையி
லுங்களுடைய விருந்தாளிகளா யிருக்கிறோம் ஆகையால் தங்கள்
தங்களுடைய விருந்தாளிகளைச் சங்கைசெய்யவும். அந்த விருந்தா
ளிகளுடைய நாட்டத்தையும், தேட்டத்தையும் நிறைவேற்றி வைக்
கவும், வேண்டுமல்லவாவென்று சொன்னார்கள். அவ்விதம்சொல்
லவே அதற்கு ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு
அவர்கள் அந்த ஷெய்குமார்க ளடங்கலையும் நோக்கி நீங்கள் நன்
மாராயம் பெற்றுக்கொள்ளுங்கள் நீங்களெல்லோர்களும் துன்
யாவிலும், ஆகிறத்திலும்கபூல்ச்செய்யப்பட்டவர்கள்,சங்கையான
வர்கள் உங்களுடைய முறாதாகிறது அபூபக்றுல் இஸ்பஹானீ

என்பவரில் நின்றும் மன்றாடிக் கேட்கிறதாயிருந்தாலும் அவருடைய கருமத்தில் நீங்கள் தேடிய மன்றாட்டமானது கபூல்செய்யப்பட்டதாயிருக்குமென்று சொன்னார்கள். அப்போது அந்த வலிமார்களெல்லோர்களும் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து எங்கள் நாயகமே, சற்குருவே நாங்களெல்லோர்களும் அந்த அபூபக்றுல் இஸ்பஹானியுடைய கருமத்தில் மன்றாட்டம் செய்தவர்களாகவே தங்களிடத்தில் வந்தடைக்கலம் புகுந்தோம் அது விஷயத்தை நாங்கள் தங்களிடம் சொல்லிக்கேட்பதற்கு முன்னமே தாங்களே எங்களுக்குச்சொல்லியறிவித்திட்டீர்களென்று சொன்னார்கள். உடனே ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த ஷெய்குமார்களை நோக்கித் திடனாக என்னுடைய கட்டளையாகிறது அல்லாவுடைய கட்டளையைக் கொண்டே யுண்டாகும் என்னுடைய தீர்ப்பும் அல்லாவுடைய தீர்ப்பைக் கொண்டேயுண்டாகும் ஆகையால் என்னுடைய இந்தக்காலே அல்லாஹுத்தஆலாவின் கட்டளையைக் கொண்டேயொழிய உயர்த்தவில்லை. இன்னும் எல்லா வலிமார்களின் புயத்தின்மேலென்னுடைய இந்தக்காலை வைக்கவில்லை அவனுடைய கட்டளையைக்கொண்டேயொழிய ஆகையால் நான்தான் அந்த அவுலியாக்களடங்கலுக்கும் குருவும் அவர்களுக்கு சற்குருவும், அவர்களுக்கொதுங்குந்தலமும் அவர்களுக்குத் தாபரமுமாயிருக்கும். இவ்வும் நான்தான் தொட்டிலிலிருப்பவனும், அல்லாஹுத்தஆலாவின் சமுகத்திலிருப்பவனும், அவுலியாக்களுக்கெல்லாம் பரிவட்டங்களைப் போர்த்துகிறவனும். அவர்களை மைதானத்தில் முகிருதலாக்கிறவனும், அல்லாஹுத்தஆலாவின் சமுகத்தில் அவர்களைச்சேர்ப்பவனும், றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுக்குப் பகரமாயிருப்பவனுமாயிருக்கும்.

ஆகையால் திடனாக நீங்களெல்லோருமிடத்தில் தேடிவந்த மன்றாட்டத்தைக் கைபேற்றுக் கொண்டேனென்று ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். அவ்விதம் சொல்லி முடிப்பதற்கிடையில் அந்த அபூபக்றுல் இஸ்பஹானியென்னும் வலியானவர்கள் அந்த கின்னரிமுகளையும் விட்டெறிந்துவிட்டு, அந்த நசாறுக்களுடைய உடுப்புமுத



லியவைகள் யாவையுங் களைந்துவிட்டுக் குளித்து முழுகி இஸ்லாமுடைய உடைகளை அணிந்துகொண்டு தாமிருந்த ஊரைவிட்டும் புறப்பட்டு ஓட்டமாக ஓடிவந்து பகுதாதிற் புகுந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய திருச்சமுகத்தை யடுத்து அவர்களுடைய சன்னிதானத்தில் மகா அதபுடன் கைகட்டி வாய்பொத்தித் தெண்டனிட்டு அடிபணிந்துநின்று எனது நாயகமே திடனாக நான் உங்களுக்கு அதபுக்கேடு செய்திட்டேன், தப்பிதஞ் செய்துவிட்டேன், தங்களுடைய திருவசனத்திற்கு விகற்பஞ் செய்துவிட்டேன். ஆதலால் தாங்கள் நாடியதை என்னில் நடத்தி நான் செய்த குற்றத்தை மன்னித்துக்கொள்ள வேண்டுமென்று கெஞ்சிக்கெஞ்சி மன்றாடினார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு அபூபக்றுல் இஸ்பஹானியவர்களைப் பொருந்தி அவர்களை நாற்பதுநாள்மட்டிலும் கல்வத்திலிருத்தாட்டி அப்பால் வெளிப்படுத்தினார்கள். பின்பு ஷெய்கு அபூபக்றுல் இஸ்பஹானி அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய திருச்சமுகத்தில் முடுகி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சிறப்பான இரண்டு பாதாரவிந்தத்தையுந் தூக்கித் தங்களுடைய முகத்தில் வைத்து முத்தி அவ்விரு பாதத்தாலும் தங்களுடைய சிரசையும், முகத்தையும் தடவித் தங்களுடைய கழுத்தைப் பூமியில் வைத்து அதின்மேல் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு ஆண்டவர்களுடைய இரு பதாரவிந்தத்தையும் வைத்துக்கொண்டு எனது நாயகமே நான் உங்களுடைய பாதாரவிந்தத்தின்கீழ் இருக்கையில் தாங்கள் நடித்தயவு செய்து எனக்கொரு நன்மாராயம் அறிவித்தாலேயொழிய என் கழுத்தைவிட்டு உங்களுடைய பதத்தை உயர்த்தமாட்டேனென்று சொல்லிச்சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஓய் அபூபக்றே, நலவுகொண்டு நன்மாராயம் பெற்றுக்கொள்ளும். திடனாக அல்லாஹுத்தஆலா உம்முடைய தௌபாவையும் கபூல்செய்து உம்மைத்தொட்டும் பொறுத்துக்கொண்டான். ஆகையால் மேலைக்கு உமக்கு

முன்னிருந்த ஹாலையும் தந்து அதைக்காட்டிலும் எழுபதுபங்கு அதிகமான ஹாலையுந் தருவோமென்று திருவுளமானார்கள்.

இந்த ஹிக்காயத்தை இவ்விதமாக ஷீறாஸென்னும் ஊரிலுள்ள ஷெய்கு அபுல்கைறி பின் அபுல் ஹஸன் றலியல்லாஹு அவர்கள் றிவாயத்துச் செய்தார்கள். அவர்கள் நான் அந்த நாள் அந்தக் களரியில் ஹாஸிறாயிருந்து இந்தச் சங்கதி முழுவதையும் என்னுடைய இரண்டு கண்ணாலுங் கண்டேனென்று சொன்னார்கள்.

பின்பு அந்த அபூபக்கர் இஸ்பஹானி யென்பவர்களுக்குப் பெரிய பெரிய ஹாலுகளும், பேருள விலாயத்துகளும், அதிகாரங்களும், கஷ்புங் கறாமத்துகளும் மிகுதமாயுண்டாகி இஸ்பஹான் தேசத்தில் பிரபல்லியமான அவுலியாவா யிருந்தார்கள். மற்றுமுள்ள அவுலியாக்கள் முதலிய மஷாயிகுமார்களெல்லோர்களும் அந்த அபூபக்கர் இஸ்பஹானி றலியல்லாஹு அன்ஹு அவர்களை வந்து ஸியாறத்துச் செய்து பறக்கத்துப் பெறுகிறதாயிருந்தார்கள். இந்தச் சங்கதி முழுவதையும் ஹிஜ்றத்து ஆயிரத்தெண்பதாம் வருஷத்திலிருந்த ஷெய்கு அப்துல்வஹ்ஹாபி புனு அப்துல்கனி றஹிமஹுல்லாஹு அவர்கள் தங்களுடைய பலாயிலுல் அஸ்றாரென்னும் றிஸாலாவிற் சொல்லியிருக்கிறார்கள்.

பைத்து.

மலிக்குன்லஹுத் தஸ்ரீபு பில்கவ்னி நாபிதுன்
பிஷறக்கின் வகறுபில் அறலிவல்வஃரி வஸ்ஸஹ்லி.

இன்னும், திடனாக ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறது மகா பெரிய அரசாட்சியையுடைய இராஜாவாயிருக்கும். பூலோகத்தில் எருவான், படிவான், காடு, மலை முதலிய எவ்விடங்களிலும், ஆலமடங்களிலும் செல்லுபடியாகிய அதிகாரம் அவர்களுக்குண்டு. திடனாக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அருளிச்செய்ததாய் றிவாயத்துகள் வந்திருக்கிறது. அதாவதென்னவெனில் மலக்குகளுக்கும் ஷெய்கு உண்டு, ஜின்களுக்கும் ஷெய்கு உண்டு, மனுக்களுக்கும் ஷெய்கு உண்டு, நானோ எல்லோர்களுக்கும்



ஷெய்காயிருப்பேன். எடா பிள்ளையே தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு, இவைகளாகிய எவ்விடத்திலும் நீ போய்ப்பார். என்னைப்போலொருவரை ஒருபோதுங் காணமாட்டாய். ஆகையால் நீ பிள்ளைகளே வேறொருவரைக்கொண்டு என்னைச் சரிபார்க்கவும் வேண்டாம், என்னைக்கொண்டு வேறொருவரைச் சரிபார்க்கவும் வேண்டாம். திடனாக உங்களுக்கும், மற்றும் கல்குகளுக்கும், எல்லாவற்றிற்கும், எனக்குமிடையில் வானுலோகத்திற்கும், பூலோகத்திற்குமிடையிலுள்ள வித்தியாசமுண்டாயிருக்கிறது. ஏனெனில் எல்லா ஒவ்வொரு குதுபுமார்கள், இமாம்கள், ஷெய்குமார்கள் இவர்களுடைய முறைகள் அவரவர்களுடைய காலங்களிலும், நேரங்களிலும் அடிபட்டுக்கொண்டிருந்தது. என்னுடைய முறையோ கியாமநாள் பரியந்தமும் அடிபட்டுக்கொண்டே வரும். இன்னும் என்னைத்தவிரவுள்ள எல்லா ஒவ்வொரு குதுபுகளும், இமாம்களும், ஷெய்குமார்களும் அவரவர்களும் மவுத்தானதின் பிறகு அவர்கள் அவரவர்களுடைய கபுறுகளிலிருக்கையில் அவர்களிடத்தில் உதவி, ஒத்தாசை, இரட்சிப்பு முதலிய உபகாரங்களைத் தேடப்பட்டால் அவர்களுக்குப் பதிலாக மலக்குகளிருந்து அதிகாரஞ்செய்வார்கள். நானோ என்னுடைய கபுறிலிருந்துக் கொண்டும் கியாமநாளளவும் நானே அதிகாரம் நடத்திக்கொண்டு வருவேன்.

இன்னும் யாராகிலுமொருவர்க்கு ஏதாவது வியாதம், துக்கம், கடிசு, மிடிமை இவைகள்போற்கொத்தவைகள் வந்து நேரிட்டால் அவர்கள் சுத்தமாக உழூச்செய்து இரண்டு றக்அத்துத் தொழுது சலாம் கொடுத்து முடிந்ததின்பிறகு இரண்டு கால்களின் பேரில் நேர்மையாய் நின்றுக்கொண்டு பகுதாதுத் திசையை முக நோக்கிப் பதினொரு அடி வைப்பதில் ஒவ்வொரு அடிகளிலும் என்னுடைய நாமத்தைச் சொல்லி என்னைக்கொண்டு இரட்சிப்புத் தேடி அல்லாஹுத் தஆலாவினிடத்தில் அவர்களுடைய ஹாஜத்துகளைப் பதினொரு விடுத்தம் மன்றாடிப் பின் பென்னைக்கொண்டு அல்லாஹுத் தஆலாவிடத்திற் கேட்பார்களாகில் திடனாக அவர்களுடைய ஹாஜத்துகளை நிறைவேற்றப்படும். இன்னும் யாராவது ஒருவன் என்னை உவந்து என்னை நிர்ணயங்கொண்டு என்னுடைய தரீக்கைப்பற்றிப் பிடித்து என் முரீதாக வென்னிடம் வந்து இரட்

சிக்கத் தேடினாலும் அவனை இரட்சித்துக் காப்பாற்றிக்கொள்வேன். அவன் கடலின் அலைகளிலிருந்தாலும், அல்லது மலைகளின் உச்சிகளிலிருந்தாலும், அல்லது எருவாடிகளிலிருந்தாலும், அல்லது பயிலானிலிருந்தாலும் சரியே. நான் அவனை இரட்சித்துக் காப்பாற்றிக்கொள்வேன். இன்னும் நானொருநாள் வியாகூலமடைந்தவனை வியாகூலத்தைவிட்டு விடுற்றமாக்கினவனாயிருக்கும். நான் என்னுடைய கபுறில் நிற்பவனாக ஆயாத்துடையவனாயிருப்பேன். என்னுடன் முனுகரத்துச் செய்பவனுடைய எதிர்மொழிகளடைக்கலையுங் கேட்டுக்கொள்வேன்.

இன்னும் ஷெய்கு அப்துல் மஸ்ஊது பன்னாயா என்பவர் சொல்லுகிறார். அதாவது கன்னாவெளியில் ... எங்கள் நாயகமும், ஷெய்கும், இமாமுமாகிய செய்யிது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு ஜீலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னையவர்கள் திருக்கண்ணால் விழித்துப்பார்த்துச் சொல்லுகிறார், உமக்கு ஒரு கடினமான முஸீபத்தென்னும் வருத்தம் வந்திறங்கினால் நீர் என்னைக்கொண்டு இரட்சிப்புத் தேடிக்கொள்ளும், திடனாக நாமும்மை அந்தத் துன்பங்களைவிட்டு விடுற்றமாக்கிவைப்போம். நீர் என்னுடன் கலப்பற நடந்தீரானால் நாமும் உம்முடன் கலப்பற நடப்போம். நீர் என்னுடைய தரீக்கைப்பற்றிப் பிடித்தவராயிருந்தீரானால் நாம் உம்மை அன்னாயாக்கத் தலைவர்களாயிற் சேர்ப்போமென்று திருவுளமானார்கள். அப்பால் நான் வர்த்தகனாயின்னும் ஒருவருஷத்தில் ஷாம் இராச்சியத்திற்குக் கச்சவடஞ் செய்யப் போயினேன். அப்போது என்னுடனே பற்பல நிறமுகளான மிகுந்த சரக்குச் சாமான்களுண்டாயிருந்தது. அவைகளோடு நானும் இன்னும் சிலருமாக ஊர் பட்டினங்களைக் கடந்து காடு வனாந்தரங்களில் நடந்தோம். அவ்விதம் நடந்துபோகும்பொழுது காட்டுப்பாதையில் கள்ளர்களில் இன்னும் சில கள்ளர்கள் எங்கள்மேலில் வந்து விழுந்தார்கள். நாங்கள் அவ்விடத்தைவிட்டும் பயந்தோடி எங்களுயிர்களைமட்டும் தப்பித்துக்கொண்டோம். அந்தக் கள்ளர்கள் எங்களுடைய முதல் முதலிய சகல சரக்குகள், பொருள்கள், வஸ்துகள் யாவையும் கொள்ளையாக்கிக்கொண்டு எங்களுடைய கண்ணெதிரில் ஒவ்வொன்றையும் பங்கிட்டுக்கொண்டு யாதொரு காசு, பணம், பொன், பின், குப்பு முதலியவைதா, ஏது



வாகனம் யாதொன்றுமில்லாதவர்களாய் ஆக்கிவிட்டார்கள். அப்போது நான் மட்டும் தனித்து ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு நமக்கு இப்படி வந்து முடிந்ததேயென்று ஆலோசித்துக் கடுந்த விசாரப்பட்டுக்கொண்டிருந்தேன். அப்படியிருக்கையில் இவ்விதமுக்கு இராஜாதிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவுளமாயிருந்தது எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. உடனே நான் எழும்பி கிப்லாக்கு நோக்கி நின்று நாயகம் அவர்களின் திருவசனத்தை நினைத்து எங்கள் நாயகமாகிய ஷெய்கு அப்துல்காதிறே நாங்கள் எனக்கு ஒருபோது என்னைப்பார்த்து என்னுடைய முரீதே நீயொரு தங்கடத்தில் நின்றும் என்னிடத்தில் இரட்சிப்புத் தேடுவையாகில் நாமுன்னை இரட்சித்துக் காப்பாற்றிக்கொள்வோமென்று அருளிச்செய்தீர்களே. இதோ எனக்குப் பெரிய தங்கடம் வந்திறங்கியிருக்கிறதே இச்சமயத்தில் என்னை வந்து இரட்சித்துக் காப்பாற்றிக்கொள்ளுங்களென்று சொன்னேன். அவ்விதம் சொல்லி முடிவதற்கிடையில் பெரிய ஆகாரியான ஒரு சப்தமொன்றுண்டாகி அவ்விடத்திலுள்ள ஓடைக்கரையெல்லாம் நிரம்பிச் சகலர்களுங் கலங்கிவிட்டார்கள். அப்போது எங்களை அடித்துப்பறித்த கள்ளர்களெல்லாம் பயந்து நடுங்கினவர்களாய் எங்களுடைய முதல் முதலிய பற்பல பொருள்களடங்கலையும் எங்களிடம் கொண்டுவந்து இதோ உங்களுடைய சாமான் முதல்கள் சகலமும் இருக்கிறது, நாங்கள் எல்லோர்களும் ஒருபிக்க ஹலாக்காகிவிடுமுன் இவைகளையெடுத்துக்கொள்ளுங்களென்று சத்தமிட்டார்கள். அப்போது நாங்கள் அவர்களுக்கு வந்த பரையை கேட்டபோது அந்த ஆகாரியான சப்தத்தால் அந்தக் கள்ளர்களுக்கெல்லாந் தலையாரியான கள்ளர் இருவரும் அடித்துவிழுந்து மையித்தாகக் கிடக்கக்கண்டோம். பின்பு எங்களுடைய காபிலாவிலுள்ள மனிதர்களெல்லோர்களும் அவரவர்களுடைய முதல் முதலிய சாமான்களை யாதொன்றும் தவறில்லாமல் அவரவர்கள் எடுத்துக்கொண்டு நாங்களெல்லோர்களும் ஷாம் இராச்சியத்திற்போய்ச் சேர்ந்து சரக்குகள் சகலத்தையும் மிகுந்த நயத்துடன் விற்று முதல் செய்துக்கொண்டு சந்தோஷமடைந்து க்ஷேமத்தாக பகுதாது நகரத்திற்கு வந்து சேர்ந்தோம். நானும் மிகுந்த ஆச்சரியத்துடனே வந்து ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய

திருச்சமுகத்திற் சென்றேன்; அப்போது ஷெய்கு அப்துல்கா திறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னைப்பார்த்து புன் சிரிப்பாகச் சிரித்துக்கொண்டு வழியில் நடந்த சமாச்சாரங்களை நான் அறிவிக்குமுன்னமே யென்னை நோக்கி அபூ உமறே, நீர் நம் முடனே ஆதவைக் கொடுத்துவிட்டீர், அந்தக் கள்ளர்கள் வந்தவுட னே நம்மை நீர் மறந்துவிட்டீர். அவர்கள் உங்களுடைய முதல் களை யெடுத்துக்கொண்டதின்பிறகே யல்லாது நீர் நம்மை நினைத் திரில்லை, வருத்தங்கள் கடிசானதின் பிற்பாடுதான் நம்மை நினைத் தீர். ஆகிலும் இடனுக உமக்காகத்தான் காபிலாக்களுடைய பறி போன முதல்களையும் மீட்டிக்கொடுத்து, அந்தக் கள்ளர்களு டைய தலைமைக்காரர் இருவரையும் வதைத்துவிட்டோம். இவ்வித மாகவே நாம் நம்மை நாடித் தேடி நம்பியிருப்பவர்களுடன் கியா மநாள்வரையும் இருப்போம், அவர்களைக் கை விட்டுவிடமாட்டோம் அவர்களுடைய கருமங்களைப் பராபரித்துக்கொண்டே யிருப்போ மென்று திருவுளமானார்களென்றார்கள்.

ஆனால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன்ஹு அவர்களுடைய வரிசைகள் இதுபோல் அனேகா னேகமுண்டாயிருக்கிறது, அவர்களுடைய ஹால்களையும், அகுலி யங்களையும், கறாமாத்துகளையும் அல்லாஹு ஸுபுஹானஹுவத ஆலா ஒருவனையல்லாது வேறொருவரும் மட்டிட்டுக்கமாட்டார் கள் அவர்களைக் கலப்பற்ற முஃமினேயல்லாது உயர்த்திருக்கமாட் டான். அவர்களைக் கெட்ட முனாபிக்கானவன் அடங்காமை யொழிய இல்காமு செய்யமாட்டான். ஆகலால் எல்லா முரீதீன்களுக்கும், சகல ஸில்ஸிலாக்காரர்களுக்கும், வேறுமாயிருக்கும். அவர்களைக்கொ ண்டு மெத்த வேண்டுதலாயிருக்கு அவர்களுடைய மதஹபையும் ஒத்தாசையைத் தேடி அவர்களுடைய ஸில்ஸிலாவை யுடையோர் களையும், அவர்களுடைய முஸல்லாவை யுடையோர்களையும், மெத் தப் பிரீசமாயுவந்து சங்கை செய்துக்கொள்ளவேணும். ஏனெனில் அலமல்து மஃமன் அஹப்ப. மனிதனுகிறவன் அவன் உவந்தவனுடன் இருப்பானென்று செய்யிதுனு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல் லம் அவர்கள் திருவுளமாயிருப்பதால் நாம் அவர்களுடன் ஷெய் கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர் களையும் உவந்து அவர்களுடைய தரீக்கைத் தொடர்ந்து அவர்க



ளுடைய கூட்டங்களையுஞ் சங்கைசெய்து, அவர்களுடைய அறுதி மானத்திற்குள் இங்கும், அங்கும், எங்கும் அமைந்துக்கொள்ள அல்லாஹுத தஆலா நமக்கு நல்லுதவிக் கட்டளையிட்டருள்வா ருகவும் ஆமீன்.

பைத்து.

ஸிறுஜுல் ஹுதா ஷம்ஸுன் அலாபலக்கில்உலா
பிஜீலான மபுதாஹுமாத் துலூஅன் பிலாஅபுலி.

இன்னும் அந்த நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்கா திறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறது நேர்வழியென் னும் மாளிகைக்குத் தூண்டாமணிவிளக்கானவர்கள். இன்னும் அவர்களாகிறது மேன்மையென்னும் வானுலோகத்தில் உதித்து பிரகாசிக்கும் மெய்ஞ்ஞானச் சூரியனானவர்கள், ஆனால் அந்தச் சூரியனானது வந்துதித்து வெளியானது ஜீலான் பட்டணத்திலா யிருக்கும். அந்தச் சூரியனோடி யடையாது காலாகாலமும் பிர காசித்துக்கொண்டே யிருக்கிறது.

பைத்து.

திருஸு ஜமாலின் முதுஹபுன் பவுக்கஹுல்லத்தி
இதல்கவுனி பீஹத்தஹ்று யஜ்த்தாஸு தாரிபுலி.

இன்னும் அவர்களாகிறது ஆலத்தின் கோணமெங்கும் சிறப் பான சங்கையென்னும் துகிலின் பரிவட்டத்தின் மேலால் பொன் னால் இழைக்கப்பட்ட வடிவென்னும் அருகானவர்கள். அந்தப் பரிவட்டத்தின் வடிவால் காலமானது மகிழ்ச்சிகொண்டாடிப் பெருமையாய் நடந்து செல்லுகிறது. இதின் கருத்தாவது கால மாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சங்கையிலேயே நலவாய் நடந்துக் கொண்டிருக்கிறதென்பதாம்.

பைத்து.

யக்கீமத்து ஙர்ரின்ஸான இக்தா விலாயத்தி
பஹீஜுன் அலாஜீதில் உஜூதிபிஹ் முஜ்லி.

ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன் ஹு அவர்களாகிறது தனித்த இணையற்ற ஆணிமுத்தாயிருக்கும். அந்த ஆணிமுத்தே விலாயத்தென்னும் வடமாலையை அலங்கார மாக்கிவித்தது. அந்த ஆணிமுத்தைக்கொண்டே ஆதத்தின் கழுத் தில் விலாயத்தென்னும் மாலையானது மெத்த அழகாயும், ஒளிவா யும், தெளிவாயும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

பைத்து.

லிஜுத்லாக்க யாபுன்றன்னோரா அப்துக்காதிரி
அத்தாயா பிஇய்யுன் துப்திக்காரின்வஆ மஹ்லி.

அப்படிப்பட்ட கருமக்கடலே அப்துல்காதிறென்னும் சங்கையான நாமந் தரித்த நாயகமே பந்தமும், மிடிமைத்தனமுமுடைய பாபிஅனலிற் சேர்க்கப்பட்ட ஒரு அடிமை உங்களுடைய கொடையை நாடி வந்து உங்களுடைய சமூகத்திலிருக்கிறான், அவனை உங்களுடைய கிருபைக்கண்ணால் சற்றே பார்த்தருளவேண்டும்.

பைத்து.

கிபாஹாஹுஹு பிறஃலி நஹ்றி உயூனிஹிம்
மலாஹாவமின் பஹ்றின்ஜவுஃபைத்தி முஸ்த்தம்லி.

நலவை நாடினவனே இவ்விடத்தில் கிலேசமாய்த் தரிபட்டிரு. இவ்விடமென்றது அவுலியாக்களுடைய ஸாஹிபுகளெல்லாம் ஒளிதோடு மென்னத்தக்க ஜதியின் தப்பித் தரிபடு. யஃனீ ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமீபத்தில் தரிபட்டிருப்போம். அவர்கள்தான் அந்த அவுலியாக்களின் விளையாத்தென்னும் ஊற்றுக்கிளம்பும் ஊற்றுக்கண்களை இறப்பமாக்கி அவுலியாக்களுக்கு அப்துவத்தென்னும் கடலின்றும் மேல் அதிகமாக அள்ளியள்ளிக் கொடுப்பவர்கள் இதின் இஷாறுவாகிறது ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மதது எல்லா வலியர்களுக்கும் உண்டாகிக்கொண்டே வருகிறதென்பதாம்.

பைத்து.

வஸாபுஹானக் கல்லாஹு மஹப்பன் முக்கத்தஸா
வஹாஸிஅயவுலின் பஸுஹாஹு லில்வறுமுஜ்லி.

வரிசை விஸ்த்தீரணமானவனே, உன் வரிசையைச் சகல கல்க்குகளுக்கும் அளவளப்பாய்க் கொடுப்பவனே, நாயனே, தூய்மையான நாயனே, அவ்வாவர்களுக்குத் தருந்த தாதாக்கின்படியே கொடுப்பதின் பேரில் உன்னைத் துதிக்கிறேன். உனக்கே புகழெல்லாம், உனக்கே ஷுக்றெல்லாம்.

வஸல்லல்லாஹு வஸல்லம அலா ஸையிதினா முஹம்மதின்வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி வத்துப்பாஇஹி அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

வர்ணிப்புகள்.

முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

## 1-வது ஹிக்காயத்து.

ஒன்றாவது ஹிக்காயத்தாகிறது மகா வஹுப்பமுடைய பெரியோர்களாகிய ஷெய்கு உமறுல்கிற்மானீ, ஷெய்கு உமறுல் பஸ்ஸாயீ றலியல்லாஹு அன்ஹுமா இவ்விருவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவ்விருவர்களும் சொல்லுகிறார்கள், நம்முடைய ஆண்டவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிரில் ஜீலானீ கத்தஸல்லாஹு ஸிர்றஹுல் அஸீஸவர்களிடத்தில் தாங்கள் முஹ்யித்தீன், ஐ! தீனை ஹயாத்தாக்கிவைத்தவர்களென்று பட்டந்தரித்த காரணமென்னவென்று கேட்கப்பட்டது. அப்போது அதற்கு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். ஹிஜ்றத்து ஐநூற்றிப்பதினொராம்வருஷத்தில் ஒரு வெள்ளிக்கிழமையில் வணக்கத்தை நாடித் திரியும் பயணங்களால் ஒருபயணத்தில் பகுதாதுக்கு நான் காலிற் செருப்பில்லாமல் வருகிறபோது சரீரம் அறமெலிந்து, நிறம் பேதலித்து கடுந்த நோயாளியாய் விழுந்துகிடக்கும் ஒரு ஜடலத்துக்கருகே நடந்தேன். அப்போது அந்த நோயாளி யென்னை விழித்துப் பார்த்து ஓய் அப்துல்காதிறே உமக்கு அஸ்ஸலாமு அலைக்கும் என்று மெள்ளச் சொன்னார். நான் அந்த ஸலாமுக்கு ஜவாபு சொன்னேன். பிறகுக் கிழக்குரலாய் கிட்ட வாருமென்றார், அப்போது நான் கிட்ட முடுகினேன். என்னை யெழுப்பி யிருத்தாட்டுமென்றார். அப்படியே நான் அவரை யெழுப்பி யிருத்தினேன். அப்போது அவருடைய நோயாலிடைந்த ஜடலம் வளர்ந்து நல்ல குரலாய்த் தெளிவானவரா யாகிவிட்டார், நான் அதைக் கண்டு கொஞ்சம் பயப்பட்டேன், அப்போது நீரென்னை அறிவீராவென்று கேட்டார், நான் அறியமாட்டேனென்றேன், அதற்கு அவர் சொன்னார். நானாகிறவன் தீனுல்இஸ்லாமென்னு மார்க்கமாயிருக்கும். நீரிப்போது கண்டதுபோல் திடனை நான் அழிந்து போயிருந்தேன். இப்போது திடனை அல்லாஹுத் தஆலா உம்மைக்கொண் டென்னை ஹயாததாக்கிவைத்தான், ஆகையால் திடமாக நீர் முஹ்யித்தீன், தீனை ஹயாத்தாக்கிவைத்தவரா யிருக்குறை

மென்று சொன்னார். அதின்பின் நான் அவரை விட்டுவிட்டு ஜாம்ஆப் பள்ளியிற் போனேன், அப்போது அங்கொரு மனிதன் என்னைக்கண்டு செருப்பு, ஒரு சோடு கொண்டுவந்து வைத்து என் நாயகமே முஹ்யித்தீனேயென்று சொன்னார். அப்பால் ஜாம்ஆத் தொழுது முடிவானதின் பிறகு எல்லா ஜனங்களு மென்னளவில் விரைந்து வந்து என்னுடைய இரு கையையும் பிடித்து முசாபஹாச்செய்து எங்கள் நாயகம் முஹ்யித்தீனென்றே சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் அதற்குமுன் என்னை இந்தப்பெயர் சொல்லிக் கூப்பிடப்படவே யில்லையென்று சொன்னார்கள்.

## 2-வது ஹிக்காயத்து.

இரண்டாவது ஹிக்காயத்தாகிறது மஃரிபுக்கட்டியுள்ள மகா கனம்பொருந்திய பெரியோர்களான ஷெய்கு அபூமுஹம்மது ஸாலிஹு தக்காலீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. ஷெய்கு அபூமுஹம்மது சொல்லுகிறார்கள், எனக்கெனது நாயகம் ஷெய்கு அபூமத்யன் றலியல்லாஹு அவர்கள் சொன்னார்கள். ஓய் ஸாலிஹே நீர் புறப்பட்டுப் பகுதாதுக்குப் போய் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் போம். அவர்கள் உமக்கு பக்றையும், அதின் மக்காமையும் படித்துத் தருவார்களென்றார்கள். அப்போது நான் பகுதாதுக்குப் போய் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கண்டபொழுது, அவர்களைக் கண்டவர்கள் ஹைபத்தாகும்படியாயுள்ள வேறொரு மனிதரையுங் கண்டேன். ஆனால் அவரைக்காண ஹைபத்தால் மிருந்தவரை நான் காணவில்லை. அப்பால் நாயகம் அவர்கள் என்னை கல்வத்தில் ஆற்றியிருப்பதுநாள் இருத்தாட்டிய பிறகு என்னிடம் வந்து புகுந்து ஓய் ஸாலிஹே, இந்தப்பக்கம் பாருமென்று கிபுலாவின் திசையை இஷாறத் செய்தார்கள். அப்போது நான் பார்த்தேனென்றேன். அவ்விடத்திலென்ன வஸ்துத் தெரிகிறதென்று கேட்டார்கள். கஃபத்துல்லா தெரிகிற



தென்று சொன்னேன். பின்பு இந்தப் பக்கத்தைப் பாருமென்று படுவான் திசையைத் தூண்டிக் காட்டினார்கள். அதையும் பார்த்தேனென்றேன். அத்திசையிலென்ன இருக்கிறதென்று கேட்டார்கள். என்னுடைய ஷெய்கு அபூமத்யன் இருக்கிறார்களென்று சொன்னேன். இவ்விதமாக இந்த இரண்டு பக்கத்தையுந் தூண்டிக்காட்டி இவ்விரண்டில் எவ்விடத்திற்குப் போகிறீரென்று கேட்டார்கள். அப்போது நான் என்னுடைய ஷெய்கு அபூமத்யன் றலியல்லாஹு அன்ஹு அவர்களளவில் போகவேண்டுமென்று சொன்னேன். அதற்கு அவர்கள் ஒரு எட்டிற் போகிறீரா, அல்லது வந்ததுபோல் வழக்கப்படிப் போகிறீராவென்று கேட்டார்கள். அப்போது நான் வந்ததுபோல்தான் போகிறேனென்று சொன்னேன். அதற்கு அவர்கள் அதுவே மெத்த சிறப்பமானதென்று சொன்னார்கள். ஓய் ஸாலிஹே, நீர் பக்றுடைய மக்காமைப் பற்றிச் சொல்லக் கேளும். பக்றுடைய மக்காமில் இருப்பவன் அதினுடைய ஏணியின்மேலேறுமளவும் அதைப் பெற்றுக்கொள்ளமாட்டான். அந்த பக்றுடைய ஏணியாகிறது தௌஹீதாகும். தௌஹீதென்னும் ஒருமைப்படுத்துகிறதாயிருக்கும். தௌஹீதடங்கலையும் உடந்தையாக்கிக்கொண்டிருக்கிற கருமமாவது புத்தியானவைகளை உடைத்தாக்கிக்கொண்டிருக்கிற எல்லாவற்றையும், அகப்பக்கங்களில் நின்றுந் தோற்றுகிற எல்லாவற்றையும் அழிக்கிறதாயிருக்குமென்று சொன்னார்கள். அப்போது நாயகமே இந்த வருணிப்பைக் கொண்டு உங்களால் எனக்கொரு உபகாரம் புரியும்படி நாடுகிறேனென்றேன். அப்போது அவர்கள் ஒருதரம் என்னைப் பார்த்தார்கள். அந்தப் பார்வையால் நாட்டங்களில் புதினளவிற் பார்த்தார்கள். அந்தப் பார்வையால் சூரியப்பிரகாசத்தானவைகளெல்லாம் என்னுடையக் கல்பைவிட்டுச் சூரியப்பிரகாசம் நீங்கிவிடுவதுபோல் நீங்கிவிட்டது. இடுகூறு யுண்டாவதாயிருந்தன. அந்தப் பார்வையின் பறக்கத்தால் இதுவரையிலும் எனக்குத் தகுந்தபடிக்கு அதிகாரம் நடத்தி வருகிறேனென்றார்கள்.

## 3-வது ஹிக்காயத்து.

மூன்றாம் ஹிக்காயத்தாகிறது, ஷெய்கு முஹம்மது புனுல் அஸ்ஹரிய்னி அபிலபாகிர் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்

கள். ஹிஜ்றத்து அறுநூற்றியிருபத்தொன்பதாம் வருஷம் திமஷ்க்கி ராச்சியத்தில் வைத்து எனக்கென்னுடைய தகப்பனார் அஸ்ஹறுயிலு அபில்ம பாகிரி றஹ்மதுல்லாஹி அவர்கள் அறிவித்தார்கள். அவர்கள் சொல்லுகிறார்கள். நான் என்னுடைய நாயகம் முஹ்யித்தீன் அப்துல்காதிறு ஜீலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் சொன்னார்கள். நான் செய்த ஹஜ்ஜில் முதலாவது நான் வாலிபனாயிருக்கும்போது நான் மட்டுந் தனித்தவனாகத் தவக்குலுடைய ஹாலின்பேரில் பகுதாதிலிருந்து ஹஜ்ஜு செய்யப் போனேன். அப்போது வழியில் உம்முல்க் குறாவென்றறியப்பட்ட மனாறு இடத்திலாயிருந்தபோது ஷெய்கு அதிய்யுப்னு முஸாபிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை தனித்தவர்களாய்ச் சந்தித்தேன். அவர்களும் அந்நாளில் வாலிபராயிருந்தார்கள். அவர்கள் என்னைப் பார்த்து எவ்விடம் போகிறீரென்று கேட்டார்கள். அதற்கு நான் சிறப்பான மக்காவை நாடிப் போகிறேனென்று சொன்னேன். அப்போது அவர்கள் நானும் உங்களுடன் சேர்ந்து வருவதற்குப் பிரியமாவென்று கேட்டார்கள். அதற்கு நான் மெத்த நல்லது யாதொரு ஸவாதாச்சிலவுகளெடாமல் தஜ்ரீதுடைய ஹாலின்பேரில் போகவேணுமென்று சொன்னேன். அப்போது அவர்கள் ஓம் நானும் அப்படித்தானென்றார்கள். பிறகு நாங்களிருவரும் சேர்ந்து நடந்துபோனோம். அப்போது சரீர மெலிந்தவளாயும், இளவயதுக்காரியாயும், முகமூடியிட்டவளாயுமுள்ள ஒரு ஹபஷிப் பெண்பிள்ளை வந்து என் முகப்புக்கு நின்றுகொண்டு என்னை நோக்கி நல்லாகக் கூர்க்கப் பார்த்து ஓய் வாலிபரே! நீரெங்கேயுள்ளவரென்று கேட்டாள். அதற்கு நான் அஜம் கட்டியுள்ளவனென்று சொன்னேன். அப்போது அந்தப் பெண்பிள்ளை என்னை நோக்கி நீரின்றைக்கென்னை மெத்த வருத்தப்படுத்திப் போட்டீரென்றாள். ஏன் அப்படியென்று கேட்டேன். அதற்கு அவள் சொல்வாள். இடனுக நான் இந்த ஸாஅத்தில் ஹபஷாத் தேசத்திலிருந்தேன். அப்படியிருக்கும்போது இடனுக அல்லாஹுத் தஆலா உம்முடையக் கல்பில் தஜல்லியாகி அவனுடைய சேர்மானத்தில் நின்றும் நான் அறிந்ததிலும்மல்லாதத பேர்களுக்குக் கொடுக்கப்படாத சேர்மானதைத உமக்கு நன்கொடையாகக் கொடுத்துவிட்டானென்று ஷுஹூதின் புறத்தால் எனக்கு அறிவிக்கப்பட்டது.



ஆனபடியால் உம்மை அறிந்துகொள்வதை நானுவந்து இந்த வந்தேனென்று சொல்லி நானுமின்றையிரவு உங்களிருவருடனே வந்து இந்த இரவில் உங்களுடனே நோன்பு திறக்கிறேனென்று சொன்னாள். அதற்கு நாங்கள் நல்லதென்று சொல்லி வழி நடக்கையில் அந்தப் பெண்பிள்ளை வழியில் நின்றும் ஒரு பக்கமாய் நடந்தாள். நாங்களிருவரும் மறுபக்கமாய் நடந்து போகிறபோது சூரியனஸ்தமித்து நோன்பு திறக்க நேரமானவுடனே ஆகாயத்தில் நின்றும் ஒரு தட்டமிறங்கக் கண்டோம். அது இறங்கி எங்களுக்கு முன்னே வந்து தரிபட்டபோது அதில் ஆறு ரொட்டியும், சிலுக்கு வும், கீரைக் கறியுமிருக்கக் கண்டோம். அப்போது அந்தப் பெண்பிள்ளை சொல்வாள், என்னையும், என்னுடைய விருந்தாளிகளையுஞ் சங்கையாக்கி வைத்த அல்லாஹுத் தஆலாவுக்கே புகழ்ச்சியெல்லாம் இடனுக எல்லா இரவுகளிலும் இரண்டிரண்டு ரொட்டி தான் இறங்குமென்றாள். அப்பால் நாங்கள் மூனறுபேர்களில் ஒவ்வொருவரும் இரண்டிரண்டு ரொட்டியைத் தின்று பசியாறினதின் பிறகு ஆகாயத்திலிருந்து மூன்று கிண்ணியானது தண்ணீரைக்கொண்டு நிறைந்துவந்திறங்கவே நாங்களொவ்வொருவரும் ஒவ்வொன்றை எடுத்து இன்பத்தாலும், இசத்தாலும், இந்தப் பூலோகத்துத் தண்ணீருக்கொப்பாகாத தண்ணீரைக் குடித்தோம். பின்பு அந்தப் பெண்பிள்ளை அவ்விரவிலேயே எங்களை விட்டுவிட்டுப் போய்விட்டாள். நாங்கள் சிறப்பான மக்கத்துக்கு வந்து சேர்ந்தோம். அதின் பிறகு ஒரு நாள் நாங்களிருவர்களும் தவாபு செய்துகொண்டிருக்கையில் மகா வலுப்பமும், சிறப்புமுடைய ஆண்டவன் தன்னுடைய ஒளிவுகளில் நின்றும் சிலதுகள் இறங்குவதுகொண்டு ஷெய்கு அதிய்யுப்னு முஸாபிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடையபேரில் உபகாரக்கருணை புரியவே அவர்கள் போதக்கேடாகி அடித்து விழுந்து இவர் மையித்தாய்ப் போனாரென்று சிலர்கள் சொல்லுகிறமட்டுமுள்ள ஹாலிலாயிட்டார்கள். அப்போது நாங்களிடைவழியிற்கண்ட ஹபஷா இராச்சியத்துடைய பெண்பிள்ளை வந்து அவர்களுடைய தலைமாட்டிலிருந்துக்கொண்டு அஹ்யாக் கல்லாஹுல்லதீ அமாத்தக்க உம்மை மௌத்தாக்கிவைத்த நாயனே யும்மை ஹயாத்தாக்கி வைப்பானென்று சொல்லி. சுபுஹானல்லதீ லாத்தக்கூமுல் ஹாதிதாத்து லித்தஜல்லீ நூரிஜலாலிஹி. இல்லாபி மஷிய்யத்திஹி. வலாத்தஸ்த்தக்கிர்றுல் காயினாத்து லிஹுஹூஇ ரிஸியாத்திஹி யில்லாபித் தஃயீத்திஹி. பலி

ருடைய தலைபோலொன்று உண்டாயிட்டது. பின்பு மறுபடி
யிறங்கினார்கள். அப்பொழுது அந்தத் தலையுடனே இரண்டு தோ
ளும் மார்பும் வெளியாயிட்டது. இனி இவ்விதமாக ஷெய்கு றலி
யல்லாஹு அன்ஹு அவர்கள் ஒவ்வொரு படி யிறங்குந்தோ
றெல்லாம் தேக உறுப்புகள் கொஞ்சங்கொஞ்சமாக வெளிப்
பட்டுண்டாகி அவ்வாசனத்தின்கண்ணே ஷெய்கு றலியல்லாஹு
அன்ஹு அவர்களைப்போலொரு ஸூறத்து பிறப்பிமாய் வெளி
யாகிக் கூடியிருந்த ஜனங்களெல்லாம் அவர்களுக்கு ஷெய்கு றலி
யல்லாஹு அன்ஹு அவர்களுடைய சப்தம்போலவே சப்த
மும் அவர்களுடைய பேச்சுப்போலவே பேச்சும் கொண்டு வஃ
ளு சொல்லிக்கொண்டிருந்தது. இவ்விதஞ் செய்ததையும், நடந்த
தையும் ஷெய்கு அப்துல்லாவும் அவர்களைப்போலொத்தவர்களில்
அல்லாஹ்வைத் தவிர நாடினவர்களுமேயொழிய எல்லாருங் கா
ணவில்லை. இனி இவ்விதமாக ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு
அவர்கள் இறங்கி மனிதர்களை நீக்கிவிட்டு ஷெய்கு அபுல்மஆலி
யுடைய கிட்ட வந்து தங்களுடைய சட்டைக்கையை, இன்னும்
ஒரு ரிவாயத்தின்படித் தங்களுடைய கைக்குட்டையைக்கொண்டு
அபுல் மஆலியுடைய முகத்தை மூடினார்கள். அப்போது அபுல்
மஆலி தனனை ஒரு விஸ்தீரணமான மைதான் வெளியிலிருக்கவும்
அதில் ஆறும், அந்த ஆற்றின் கரையில் மரங்களுமிருக்கவுங்கண்டு
அதிலொரு மரத்தில் தன்னுடைய முதல் அறைத் திறவுகோல்
கொத்தைத் தூக்கி வைத்துவிட்டு சலவாதைக்குப்போய் தன்னு
டைய வருத்தத்தையும் நீக்கி அந்த ஆற்றில்தானே துப்புரவாக்கி
உளூச்செய்து அவ்விடத்தில் இரண்டு ரக்அத்தும் தொழுதார்கள்.
அதைவிட்டு சலாம் கொடுத்தவுடனே ஷெய்கு றலியல்லாஹு அன்
ஹு அவர்கள் தங்களுடைய சட்டைக்கையை, அல்லது கைக்குட்
டையை அபுல் மஆலியுடைய முகத்தைவிட்டு எடுத்தார்கள். அப்
போது அவர்கள் முன்னிருந்த ஆசனசபையில்தானிருக்கிறார்கள்.
ஆகிலும் அவர்களுடைய கை, கால் முதலிய உறுப்புகளெல்லாம்
நனைந்து ஈரமாயிருக்கிறது. தமக்கு யாதொரு வருத்தமுமில்லை.
ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் முன்னிருந்ததுபோல
வே உபதேசாசனத்திலிருக்கிறார்கள். இவ்விதம் நடந்த சங்கதிகளை
அபுல்மஆலியவர்கள் தாமறிந்ததல்லாது வேறொருவருக்குஞ் சொல்



லவில்லை. ஆகிலுந் தம்முடனிருந்த திறவுகோல் கொத்துகளைப்
பார்த்தார்கள் காணவில்லை.

அப்பால் சிலநாள்களுக்குப் பிறகு அஜம் தேசங்களுக்கு ஒருக்
காபிலாவை யேற்பாடு செய்து தாங்களுங் கூடப்புறப்பட்டுப்போய்
பதினாலு நாளைக்குப்பிறகு ஒரு காட்டில் விடுதி யிறங்கினார்கள்.
அதிலொரு ஆறுமிருக்கிறது, அப்போது சலவாதைக்கிருக்க நாடிப்
போனார்கள். போய் இந்த மைதான் வெளியை அந்த மைதான்
வெளிக்கும், இந்த நதியை அந்த நதிக்கும் ஒப்பாக்கிவைத்த காரண
த்தை நாமென்ன சொல்வேனென்று மெத்த ஆச்சரியப்பட்
டுச் சொல்லி முந்தி நடந்த கருமத்தை நினைத்துக் குறிப்பாய்ப் பார்க்
கும்போது அது அந்த ஆறேதான், மரமும் அந்த மரமேதான். அன்
றையில் தாங்கள் சலவாதைக்கிருந்த மலத்தையுங் கண்டு யாதொரு
சந்தேகமில்லையென் றறிந்துக்கொண்டு முன் காணமற்போயிருக்கிற
தங்களுடைய திறவுகோல் கொத்தை அந்த மரத்தில் தூக்கப்பட்
டிருந்ததையுங் கண்டெடுத்துக்கொண்டார்கள். பின்பு பக்தாதுக்கு
வந்து சேர்ந்தபொழுது ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்
ஹு அவர்களவர்களில் இந்தச் சங்கதிகளை அறிவிக்க நாடிப்போனார்
கள். அவ்விதம் அவர்கள் போய் யாதொன்றுஞ் சொல்ல முன்ன
மே ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அபுல் மஆலியு
டைய காதைப்பிடித்து ஓ அபுல்மஆலியே, இந்தச் சங்கதியை
நான் ஹயாத்தாயிருக்கிறவரையிலும் ஒருவருக்கும் சொல்லாதேயெ
ன்று சொன்னார்கள். அந்நாள்முதல் அபுல்மஆலி தாங்கள் மௌத்
தாகும்வரையிலும் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு
கிதுமத்துச் செய்வதைப்பற்றிப் பிடித்துக்கொண்டார்கள்.

## 5-வது ஹிக்காயத்து.

——(*)——

ஐந்தாம் ஹிக்காயத்தாவது ஷெய்கு அபுல்ஹசனில் கப்பாபுல்
பக்தாதீ, ஷெய்கு அபுல்ஹசன் அலிய்யுபுனு ஸுலைமானுல் கப்பான
ஷெய்குக்கன்று அல்லது கலீப். ஆக இந்த மூன்று ஷெய்குமார்க
ளும் தங்களுடைய நேர்வையான இன்னுதுகளைக்கொண்டு பேசி

வைக்கிறார்கள். அதாவது திடனாக ஷெய்கு முஹியித்தீனாண்டவர்கள் தங்களுடைய பிக்றாளிகளிலும், பக்கியவான்களிலுமாகப் பெரிய கூட்டமுண்டாயிருப்பதுடனே ஹிஜுறாத்து ஐந்நூற்றிருபத்திரண்டாவது வருஷம் துல்ஹஜ்ஜு மாதம் இருபத்தேழாந் தேதி புதன்கிழமைப் பகலில் பகுதாதில் ஷூனீஸிய்யாவென்னும் கப்ருஸ்தானத்தை ஸியாறத்துச்செய்து ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களுடையக் கப்றில் வெகுநேரம் தரிபட்டு வெளியான பிறகு சுகிக்குமளவும் மனிதர்களெல்லாம் தங்களுக்குப் பின்னாலே காத்துக்கொண்டு நின்றவர்களாகநின்று. அதின் பின் தங்கள் முகத்தில் மகிழ்ச்சிபோன்றவர்களாய் முகமலர்ச்சி தோனும்படி அவ்விடத்தைவிட்டு மீண்டார்கள். பிறகு அவர்கள் ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களுடையக் கப்றில் வெகுநேரமாய் நின்றவிட்டுப் பின்பு முகமலர்ச்சியுடன் மீண்ட காரணத்தைக்குறித்து ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் கேட்கப்பட்டது, அதற்கு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள்.

நான் ஹிஜுறாத்து நானூற்றித்தொண்ணூற்றொன்பதாம் வருஷம் ஷஃபான் மாதம் பதினைந்தாம் தேதி பருஅத்தென்று வெள்ளிக்கிழமைப் பகல் பகுதாதில் றலாபாவென்னும் ஆற்றின் அருகிடமாயிருக்கின்ற ஜாமிஉப் பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுவதற்காக ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கூட்டாளிமார்களில்நின்றும் ஒரு ஜமாஅத்துடனே நானுங் கூடப்போகிறவனாயிருந்தேன். அப்போது ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களும் நம்முடனே வருகிறார்கள், நானும் அவர்களும் அந்த ஆற்றின் பாலத்திலானபொழுது ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னைத் தங்கள் கையாலே பிடித்து ஆற்றில் தள்ளிவிட்டார்கள். அது குளிர் மெத்தக் கடிசான காலமாயிருந்தது. அப்போது நான் தண்ணீரில் விழுகிறபோது பிஸ்மிச் சொல்லி ஜும்ஆக் குளி முழுகிறேனென்று நிய்யத்து வைத்துக்கொண்டேன். அப்பொழுது என் மேலில் கம்பளிச் சப்பாவொன்றுண்டாயிருந்தது, என் சட்டை ஜேபில் குறுஆனில் நின்றும் சில ஜுஸ்வுகளுமுண்டாயிருந்தது, அது நனைந்துபோகாமல் என்னுடைய கையிரண்டையும் உயர்த்திக்கொண்டேன். அவர்களடங்க



ளும் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அப்பால் நான் ஆற்றிலிருந்துங் கரையேறி ஜுப்பாவையும் பிழிந்துபோட்டுக்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்து நடந்துபோய் அவர்களுடன் கூடிக்கொண்டேன். ஆனால் குளிரில் மிகுந்த வருத்தப்பட்டேன். நான் ஜும்ஆ முழுக்கு முழுகாதிருந்ததால் ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கூட்டாளிமார்களென்னைக் குற்றங்குறையாய்ப் பேசினார்கள். அவர்களை ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் விலக்கி நான் அவனை நோவினை செய்ததெல்லாம் அவனைச் சோதித்துப் பார்ப்பதற்கேதான், ஆனால் நானவனை அசையாத மலையாய்க் காணுகிறேனென்றவர்கள் சொன்னார்கள். இப்படியொரு செய்தி எனக்கும், ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மிடையில் நடந்திருந்தது.

திடனாக நான் இன்றையில் ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களை அவர்களுடையக் கப்றில் மெத்தச் சிறப்பாயிருக்கக்கண்டேன். அவர்களுடைய திரேகத்தில் இரத்தினங்களும், அவர்களுடைய சிரசில் மாணிக்கக் கிரீடமும், அவர்களுடைய கைகளிரண்டிலும் பொற் கடகங்களும், அவர்களுடைய இரு பாதங்களிலும் பொற் செருப்புகளும் அணிந்திருக்கிறார்கள். அவர்களுடைய வலதுகை மட்டும் விளங்காமல் ஆகையாயிருக்கிறது. அப்போது நான் அவர்களிடத்தில் இதென்னவென்று கேட்டபொழுது இதுதான் உம்மை ஆற்றில் தள்ளிவிட்ட கை, இந்தக் குற்றத்தைத் தாங்கள் மன்னித்துக்கொள்ளக் கூடாதாவென்று சொன்னார்கள். அப்போது நான்மெய்தான் மன்னிக்கவேணுமென்று சொன்னேன். அதற்கு அவர்கள் தாங்களே அல்லாஹுத் தஆலாவிடத்தில் இந்தக் கையைச் சீராக மீளவிக்கும்படி கேளுங்களென்றார்கள். ஆனதால் இதுகருமத்தைக்குறித்து நான் அல்லாஹுத் தஆலாவுடைய பக்கல் தஆவிர்ந்தவனாக தரிபட்டிருந்தேன், அல்லாஹுத் தஆலாவுடைய ஒலிமார்களில்நின்றும் ஐயாயிரம்பேர்கள் அவர்களுடைய கபுறுகளிலிருந்து என்னுடைய துஆவைக் கபூலாக்கும்படி அல்லாஹுத் தஆலாவிடம் கேட்டு ஆமீன் கூறினவர்களாயும், இந்தக் கேள்வியைக் கேட்டு நிறைவாகும்படிக்கு என்னிடத்தில் மன்றாடினவர்களாயுமிருந்தார்கள். திடனாக அல்லாஹுத் தஆலா இந்த நிலையில் வைத்தே அவர்களுடைய கையை நேர் சீராக்கி அந்தக் கையால்

கல்விகளும், ஹாஹானியாக்களைப் பற்றிய அறிவுகளுமாக எழுதப்பட்ட கித்தாபொன்று என்னுடனே இருந்தது. பின்பு அந்தக் கூட்டங்களுக்கிடையில் நின் றமெனன்னை நோக்கி யென்னுடைய கித்தாபைப் பார்த்து, அல்லது அதிலே யிருப்பதைத் தொட்டுமென்னிடத்திற் கேட்க முன்னமே சொன்னார்கள். யாய் மன்ஸூறே, நீர் கூட்டிவந்த தோழன் மெத்தக் கெட்டது. உம்முடைய இந்தக் கித்தாபு கெட்டது அதையால் நீ ஒரமும்பும் அதைக் கழுவிப் போடுமென்றார்கள். அப்போது நான் நினைத்துக்கொண்டேன். நாம் இவர்கள் சமுகத்தை விட்டெழும்பி யிந்தக் கித்தாபைக் கொண்டுபோய் நம்மள் வீட்டில் போட்டுவிட்டு இதற்குமேல் ஷெய்கு றஸியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற்குக் கொண்டு போகப்படாதென்று நாடினேன். நான் அந்தக் கித்தாபின்பேரில் பிரியமாயிருப்பதால் அதைத் தவ்வீராஷிப்பதற்கென்னுடைய மனஞ் சம்மதப்படவில்லை. அதின் அறிவுகளில் நின்றுங் கொஞ்சமென் கல்பில் தரிபட்டிருந்தது. இந்த எண்ணத்தை வைத்துக்கொண்டு எழும்ப நாடினேன். அப்போது ஷெய்கு றஸியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னுடைய புத்தையானவர்களைப்போல் என்னைக் கூர்மையாய்ப் பார்த்தார்கள். அப்போதெனக்கு எழும்ப ஏலாமற் போய்விட்டது. அப்பொழுது நான் விலங்கில் மாட்டப்பட்டவனைப் போலாகிவிட்டேன். பின்பு ஷெய்கு றஸியல்லாஹு அன்ஹு அவர்களென்னை நோக்கி உம்முடையக் கித்தாபைத் தாரும் பார்க்கவேணுமென்று கேட்டார்கள். உடனே நான் அதைத் திறந்துபார்த்தேன், அதிலொரு எழுத்தாவதில்லை, வெறுங் காகிதமா யிருக்கிறது. பின்பு நான் அதை அவர்கள் கையிற் கொடுத்தேன். அதை அவர்கள் திறந்து காகிதங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து இந்தக் கித்தாபானது இமாம் முஹம்மதுபுனுல் ஹரீது தொகுவை செய்த பஸாயிலுல் குர்ஆனென்னும் குர்ஆனுடைய வரிசைகளைப் பேசுகிற கித்தாபா யிருக்குமென்று சொல்லி அந்தக் கித்தாபை யெனக்குத் தந்தார்கள். நான் அதை வாங்கிப் பார்க்கும்போது நல்ல அழகானதாக அந்த பஸாயிலுல் குர்ஆனென்கிற கித்தாபை யெழுதப்பட்டிருக்கிறது. பிறகு ஷெய்கு றஸியல்லாஹு அன்ஹு அவர்களென்னைப் பார்த்து உம்முடைய மனதிலில்லாததை வாக்கினால்



சொல்வதைவிட்டுத் தௌபாச் செய்வீராவென்று கேட்டார்கள். ஓம் சொன்னாயகமே திடனாகத் தௌபாச்செய்து மீண்டேனென்று சொன்னேன். இப்போது எழும்பென்றார்கள், உடனே எழும்பிவிட்டேன், அப்போது பலாஸிபர்களுடைய கல்விகளும், ஹாஹானியாக்களைப்பற்றிய அறிவுகளும், நான் பாடமாக்கியிருந்தது முழுவதும் மறந்துபோய்விட்டது, திடனாக அது ஒருகாலமும் என் மனதில் உசாடாதது போலவே என்னந்தரங்கத்தை விட்டு மாற்றப்பட்டு இது பரியந்தமும் என்னுடைய ஞாபகத்தில் வரவேயில்லையென்று சொன்னார்கள்.

## 7-வது ஹிக்காயத்து.

ஏழாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபுல்ஹஸனிபுனு இபுறுஹீமுபுனு இஸ்மாயீலல் வாஸித்தீயவர்கள், ஷெய்கு அபுல் அப்பாஸ் அஹ்மதுபுனு முஹம்மதல் அல்ஹரீபியில் பகுதாதியளவில் சேர்ந்த இன்னதுகொண்டும். இவ்விருவர்களும் ஷெய்கு முஹ்யித்தீனாண்டவர்களளவிற் சேர்ந்த இன்னதுகொண்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். ஷெய்கு றஸியல்லாஹு அன்ஹு அவர்கள் உடதேசாசனத்திலிருந்துகொண் டருளிச்செய்தார்கள். அதென்னவெனில் நான் இருக்கிராச்சியத்துக் காடுகளிலும், அதின் பாழானவிடங்களிலும் இருபத்தைந்து வருடம் புகல்களை விட்டவனாகவும், நினைத்து நடந்துபோகிறவனாகவுந் தரிபட்டேன். இன்போக்கில் இபாதத்தை நாடிப்போகிறவனாகவுந் தரிபட்டேன். இன்னும் இஷாவின் உளுவைக்கொண்டு ஸுபுஹூம் நாற்பது வருடம் இஷாவைத் தொழுதுவந்தேன். இன்னும் பதினைந்து வருடம் இஷாவைத் தொழுதுவந்தேன். இன்னும் பதினைந்து வருடம் இஷாவைத் தொழுதுவந்தேன்

சிறப்பானக் குமாஷினைத் தலைக்கல்செய்து தூக்கு சாலின்பேரி
லிருந்துக்கொண்டே தொடங்கி லோதியப்படியேயிருந்து தமா
மாக்கினேன். இன்னும் மூன்று நாள்தொடுத்து நாற்பதுநாள
ளவு வஜீபனிக்க யாதொன்றையுங் கோருதிருப்பேன். சித்திரை
யான தென்னிடத்தில் ஒரு ஸூறத்தில் வருகிறதாயிருந்தது. அப்
போது நான் அதைக் கண்டு சப்தம் வைப்பேன் அதுபோய்விடும்.
இன்னும் துன்யாக்களும், அதின் பகட்டுகளும், இச்சைகளும்
அழகான கோலங்களிலும் கெட்ட கோலங்களிலும் என்னிடம்
வருங்கள். அப்போது நான் அவைகளைப் பார்த்துச் சப்தம்
வைப்பேன் அந்தவுடனே யவைகளெல்லாம் வெருண்டோடிவி
டும். புறஜுல்அஜமியென் றப்போது பெயர் கூறப்பட்ட உயா
மான கோட்டையில் பதினொரு வருடமிருந்தேன், நான் அதில்
நீளமாய்த் தரிபட்டிருந்ததாலேயே அதற்கு புறஜுல் அஜமீ இ
அஜமியுள்ள மனிதனிருந்த கோட்டையென்று பெயர் வைக்கப்
பட்டது. நான் அந்தக் கோட்டையிலிருக்கும்போது ஒட்டப்
பட்டாலொழிய நானாக வஜீபனிக்கிறதில்லையென்றும், புகட்டப்
பட்டாலொழிய நானாகக் குடிக்கிறதில்லையென்றும், வலுப்பமுஞ்
சிறப்புமுடைய ஆண்டவனுடன் அல்காறைத் தஆலாவுக்கு அபதி
மானஞ் செய்திருந்தேன். அதில் ஒருதடவை நாற்பது நாளள
வும் யாதொன்றும் புசிக்காமல் தரிபட்டிருந்தேன். நாற்பது நா
ளைக்குப் பிறகு ஒருமனிதன் அவருடனே ரொட்டியும், வஜீபன
மும் எடுத்துக்கொண்டுவந்து எனக்கு முன்பில் வைத்துவிட்டுப்
போய்விட்டார். ஆனால் என்னுடைய நப்ஸு பசியின் கடினத்
தால் அந்த வஜீபனத்திற் போய் விழுந்து தின்ன முடுகிறது. அப்
போது நான் அல்லாவினுணை மேன்மையும், வலுப்பமுமுள்ள
என்னுடைய நாயனுக்கு நான் கொடுத்த அபிமானத்தைவிட்டு
விடமாட்டேனென்று சொன்னேன், அப்போது என்னுடைய
பாத்தினிலின்றும் பசி, பசியென்று ஒரு சப்தம் போடுவான்,
அவனுடைய சத்தத்தைக்கேட்டேன், அப்போது ஷெய்கு அபூஸை
சதுல் மகுஸூமீ றஹியல்லாஹு அன்ஹு அவர்கள் எனக்கரு
கே வந்து போகிறபோது என்னுடைய பாத்தினிலிருந்து பசி,
பசியென்று போட்ட சத்தத்தைக் கேட்டறிந்து என்பேரில் வந்து
புகுந்து ஓய் அல்லாவுடைய அடியாரே, அப்துல்காதிரே
இதென்னவென்று கேட்டார்கள். அதற்கு நான் இதாகிறது நப்



ஸுடைய கலக்கமாயிருக்கும். இனி றூஹானதோ அதினுடைய
சிறப்பும் வலுப்பமுமுடையஆண்டவனிடத்தில் ஒடுங்கினதாகத்தா
னிருக்கிறதென்று சொன்னேன், அப்போது ஷெய்கு அபூஸைது
றஹியல்லாஹு அன்ஹு அவர்க ளென்னைநோக்கி நீர் பாபுல்
அஸஜ்ஜென்னுமிடத்திற்கு வாருமென்று சொல்லி யென்னை யென்
னுடைய ஹாலில் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள், நான் இந்த
விடத்தைவிட்டு ஒருத்திரவு கொண்டேயொழிய புறப்படுகிறதில்லை
யென்றென்னுடைய எண்ணத்தில் நினைத்துக்கொண்டேன். அப்
போது அபல்அப்பாவில் கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
என்னிடத்தில் வந்து ஓய் அப்துல்காதிரே, யெழும்பி அபீஸ
சதளவில் நடவுமென்றார்கள். நான் எழும்பி ஷெய்கு அபூஸ
தை நாடிப்போனேன். அப்போது அவர்களவர்களுடைய வீட்டு
வாசலிலிருந்து என்னை வழி பார்த்தவர்களா யிருக்கிறார்கள். என்
னைக் கண்டவுடனே ஓய் அப்துல்காதிரே உம்மை வாருமென்று
நான் சொன்னது போதாதா. நானேனினதுபோல் கிலுறு அலை
ஹிஸ்ஸலாம் அவர்களும் உம்மை யேவுகிறமட்டும் அனங்கவா
செய்தீரென்று சொல்லிவிட்டு அப்பாலென்னை யவர்கள் தங்கள்
வீட்டுக்குள்ளே அழைத்துக்கொண்டு போனார்கள். அவ்விடத்
தில் வஜீபனம் ஹாலிருக்கப்பட்டிருக்கக்கண்டேன். பிறகு என்
னை உட்காரச்செய்து தாங்களும் இருந்துக்கொண்டு என்னுடைய
வயிறு நிறம்புகிறமட்டும் எனக் கிவர்கள் வஜீபனங்களை யூட்டினார்
கள். பின்பு ஷெய்கு அபூஸைதவர்களுடைய கையால் எனக்கு
ஒற்காவெனும் உடைகளை யுடுத்தாட்டினார்கள். அதின்பிறகு நா
னவர்கள்பேரில் பராக்காயிருப்பதைப்பற்றிப் பிடித்துக்கொண்டு
நடந்தேன். அதற்கு முந்தி இறுக்கிராச்சியத்தில் நான் புகுந்த
துவக்கத்தில் என்னுடைய வணக்கங்களிலே பராக்காயிருந்தேன்.
அவ்விதம் நானென்பாட்டில் திரியும்போது ஒருநாள் என்னிடத்
தில் ஒருமனிதர் வந்தார், நான் அவரை அதற்குமுன் காணவில்லை.
அவர் வந்து நானும்முடனே தோழமையாய்ச் சேர்ந்துக்கொள்
ளப் பிரியமாவென்று கேட்டார், அதற்குநான் ஓம் நல்லதென்று
சொன்னேன், அப்போது அவர் என் சொல்லுக்கு நீர் விகற்பஞ்
செய்யாதிருக்கிற ஷறத்து கொண்டென்றார். அதற்கும் நல்
லதென்றேன், அப்போது அவர் என்னைப்பார்த்து நான் போய்
வருமளவும் நீர் இவ்விடத்திலிருக்கவேணுமென்று சொல்லிவிட்

டுப்போய் ஒருவருஷமிருந்து அப்பாலென்னளவில் வந்தார். வந்து
என்னிடத்தில் ஒரு சாஅத்து நேரமிருந்துவிட்டு மறுபடியு மெ
ழும்பி நான் போய் வருமளவும் இவ்விடத்தை விட்டுப்போக
வேண்டாமென்று சொல்லிவிட்டுப் பின்னும் ஒருவருஷம் மறை
வாயிருந்து பிறகு மென்னிடத்தில் வந்தார். நான் அவருடைய
சொற்படி அவ்விடத்திலேயே யிருந்தேன், அப்போதும் அவர்
வந்து ஒரு சாஅத்து நேரம் இருந்துவிட்டு யெழும்பி யின்னும்
நான் போய் வருமளவும் இத்தலத்தைவிட்டு நீங்கவேண்டாமென்
று சொல்லிவிட்டு என்னைவிட்டு பின்னும் ஒருவருஷம் மறைந்தி
ருந்து பின்பு ரொட்டியும் பாலும் கொண்டுவந்து நானுகிறது இ
வுடு உம்முடனிருந்து வஜீபனிக்கும்படி. யென்னை யேவப்பட்
டிருக்கிறதென்று சொல்லி யென்னை அவர்களுடனிருந்து வஜீப
னிக்கும்படி செய்து நாங்கள் ஒன்றாயிருந்து வஜீபனித்தோம்,
பிறகு என்னைப்பார்த்து நீரெழும்பும் பகுதாதுக்குப் போவோ
மென்று சொன்னார்கள். அதுபோல் நானும் அவர்களும் ஒன்
றாக வந்து பகுதாதில்ப் புகுந்தோமென்று சொன்னார்கள். அப்
போது அந்த மூன்று வருஷக்காலமும் தாங்கள் எவ்விதம் வஜீப
னித்தீர்களென்று ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களி
டத்தில் கேட்கப்பட்டது, அதற்கு முஸ்லிமானவர்கள் தின்று
முடிந்து வெளியில் வீசப்பட்ட வஸ்துக்களைப் பெறுக்கித்தின்றே
னென்றார்கள். றலியல்லாஹு அன்ஹு வறுலாஹு அன்று
ஆமீன்.

## 8-வது ஹிக்காயத்து.

——(*)——

எட்டாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபூஅப்தில்லாஹி
முஹம்மதால் மவ்ஷிலீ * றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்
டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள்,
எனக் கென்னுடைய தகப்பனுர் ஷெய்கு அபுல்அப்பாஸில் கிஹுறி
பு அப்தில்லாஹிபினி யஹ்யல்றைஸனிய்புல் மவ்ஸலீயவர்கள்
மவ்ஷிலென்னும் ஊரில் வைத்து ஹதீதறிவித்துச் சொன்னர்

* மவ்ஸிலியென்பது இருக்கி ராச்சியத்துக்கும், ஜஸீறுவுக்கும் இடை
யிலொரு தேசமாயிருக்கும்.



கள். நாங்கள் ஒருநாள் பகுதாதில் நம்முடைய ஷெய்கு முஹி
யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய
மத்றசாவிலிருக்கும்போது முஸ்தன் ஜிதுபில்லாஹி யென்ற பட்
டப்பெயரும், அபுல் முலப்பறென்ற குன்யத்துப்பெயருந் தரித்த
சுல்தான் யூஸுபு றஹிமஹுல்லாஹு அவர்கள் வந்து ஷெய்கு
றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு சலாம்சொல்லி, அவர்கள்
பக்கல் நல்லுபதேசங் கேட்டு அவர்களுடன் பத்து காதிம்கள்
சுமந்துகொண்டு வந்த பத்துப் பைமுதல்களையுங் கொண்டுவந்து
ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தில்
வைத்து அதைக் கபூல்ச் செய்துக்கொள்ளும்படி மெத்த விரும்பி
மன்றாடி நின்றார்கள். அதற்கு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு
அவர்கள் அந்த முதலில் எனக்கு ஹாஜத்தில்லையென்று சொல்லி
அதை யெடுக்கவில்லை. அப்போது சுல்தான் யூசுபு அதைக்கபூல்ச்
செய்துக்கொள்ளும்படி மெத்த முயற்சித்தலட்டி மன்றாடினார்கள்.
அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்தப்
பைகளில்நின்றும் ஒரு பையை வலது கையாலும், வேறொரு பை
யை இடது கையாலும் யெடுத்துத் தங்கள் கையால் அதைப்
பிழிந்தார்கள். அப்போது அந்த இரண்டு பையிலுமிருந் திரத்த
மாய் வடிந்தது. அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு
அவர்கள் சொல்வார்கள், அபுல் முலப்பறே நீர் மனிதர்களுடைய
இரத்தங்களை யெடுத்து அதை யெனக்கு முன்பு கொண்டுவருவ
தால் நீர் அல்லாவில்நின்றும் வெட்கிக்க வேண்டாமாவென்று
சொன்னமாத்திரமே ஸுல்தான் யூசுபு போதக்கேடாகி மதிம
யங்கி விழுந்தார்கள். அதுகண்டு ஷெய்கு றலியல்லாஹு அன்
ஹு சொன்னார்கள். வணங்கப்பட்ட நாயனுடைய சிறப்பினுலை
இந்த சுல்தான் யூசுபு றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்
களுடைய வங்கிஷத்திற் சேர்ந்திருக்கிற சங்கதியே யில்லாதிருக்
கில் அவருடைய அரமனையளவு மிரத்தம் ஓடும்படியாகச் செய்வே
னென்றார்கள். இன்னும் ஷெய்கு அபுல்அப்பாஸி றஹிமஹுல்
லாஹு அவர்கள் சொல்லுகிறார்கள், இன்னும் ஒருநாள் சுல்தான்
யூசுபு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் இருக்
கும்படி கண்டேன். அப்போது சுல்தானவர்கள் ஷெய்கு றலி
யல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி யென் கல்பு தரிபடுவதற்
காகக் கறுமாத்துகளி லேதாவதொன்றைக்காண நாடுகிறேனெ

ன்று சொன்னார்கள். அதற்கு நீரென்ன வஸ்தை நாடுகிறீரென்று ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கேட்டார்கள். அப்போதவர்கள் ஆலம் கைபிலிருந்தொரு கொவ்வைப்பழத்தை நாடுகிறேனென்றார்கள், ஆனால் அந்நேரம் இறாக்கிராச்சியத்தில் கொவ்வைக்கனியுள்ள நேரமல்ல. அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய கையை ஆகாயத்தில் நீட்டிக் கொடுவென்றுயர்த்தினார்கள் உடனே அதிலிரண்டு அப்பாஹூக்கனியைக் கொண்டு அதிலொன்றை சுல்தான் யூசுபுக்குக் கொடுத்தார்கள். மற்றொன்றைத் தாங்கள் தங்களுடைய கையில் வைத்துடைத்தார்கள். அந்தப் பழம் கஸ்தூரிவாடை வீசினதாயும், நல்ல வெண்மையானதாயுமிருந்தது. அப்பால் சுல்தான் தங்கள் கையிலிருந்த பழத்தை யுடைத்தார்கள். அப்போதது புழுத்த பழமாயிருந்தது. அதுகண்டு சுல்தான் யூசுபு இதேது இப்படியிருக்கிறது, உங்கள் கையிலிருக்கிறது. நல்ல பழமாயிருக்கிறதே யென்றார்கள். அதற்கு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள். யா அபுல்முளப்பறே, அந்தப் பழத்தில் அநியாயக்காரனின் கைபட்டபடியாலது புழுக்கப்பேறானதென்று சொன்னார்கள். ததுமீஹுன் காலல் முத்தர்ஜிமு ஸாமஹஹுல்லாஹு ஹபிய்யு பிஹுத்திஹில் கபிய்யி.

இதைப் பாஷைப்படுத்திய அடியான் சொல்லுகிறேன். அவனுடைய தவறுதல்களை மகா கிருபையுடைய அல்லாஹுத் தஆலா மறைவானதன் கருணையால் தாராளமாய் மன்னித்துக்கொள்வானாகவும், இந்த சுல்தானவர்கள் அபுல் முளப்பரி யூசுபுல் முஸ்தன்ஜிது பில்லாஹி யென்றவர், சுல்தான் அபூ அப்தில்லாஹி முஹம்மதல் முக்ததீ பிஅம்ரில்லாஹியுடைய குமாரராயிருந்தார். அவரை முக்ததீ பிஅம்ரில்லாஹி யென்ற பட்டம் தரித்த காரணமாகிறது இவர்கள் பட்டத்திற் கிருக்க ஆமாதத்திற்கு முந்தி நாயகம் நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களை மனாமிற்கண்டு அவருக்கு நாயகம் திருவுளமானார்கள் மேலெக்கிலிந்தகிலாபத்தின் கருமமுமமனவில் வந்தசேரும் ஆனதால் நீரென்னைத்தொடர்ந்து நடவுமென்று. இன்னும் இவர்தான் கலீபத்துல்லாவின் வாசல்ப்புதிப்பித்தவர். இமாம் இப்னு கஸீக்கான் சொல்லுகிறார். இவர் மகன் சுல்தான் முஸ்தன்ஜிது பில்லாஹியும், இவர் தகப்பனார் ஹயாத்



தாயிருக்கையில் ஒரு கனவு கண்டார் அதெப்படியானால் வானுலோகத்திலிருந்தொரு மலக்கு வந்திறங்கி இவருடைய கையில் கேயெனுமெழுத்து நாலு எழுதக்கண்டு முழித்து ஒரு தஃபீறுடைய ஆலிமிடத்தில் கேட்டதில் அந்த ஆலிம் பார்த்து தஃபீறு சொன்னார்கள். தலில் கிதாபத்த ஸனத்த, கம்ஸீன், வகம்ஸீன, வகம்ஸிமிஅத்தின். நீ ஹிஜ்றத்து ஐநூற்றி ஐம்பத்தைந்தாம் வருடம் கிலாபத்து அதிகாரத்தை பெறுவாயென்று. அதுபோலவே நடந்தது. இந்த சுல்தான் யூசுபு ஹிஜ்றத்து ஐநூற்றி யெழுபத்தாறும் வருடம் றபீவுல் ஆகிறுமாதம் எட்டாந்தேதியில் நாற்பத்தெட்டு வயதில் மௌத்தானார்கள். அவர்கள் இராஜாங்கஞ் செய்தது இருபத்தொரு வருடமாம். ஆனால் இவர்கள் நீதித்தைக்கொண்டும், மார்க்கப்படி நடப்பதுகொண்டும் வருணிக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள்தாம் ஆயங்களை விளக்கினவர்கள், கூடிய மட்டிலுந் தெண்டித்து பலாத்துக்காரர்களை அடக்கினவர்கள். இன்னும் இவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய சிறிய தகப்பனார் அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பிற்கிளையுள்ளவர்களாயிருந்தார்கள். இப்படியிருந்தாலும் இவர்களுடைய ஹதியாவை ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கபூல் செய்யாமலிருந்ததெல்லாம் அதில் ஹறாம் கலந்திருப்பது தங்களுக்குத் திட்டமாகத் தெரியவந்திருப்பதாலேதான். ஏனெனில் உலமாக்களிற் சிலர் சொன்னதாகத் தபறானீ யிமாமவர்கள் சொல்லுகிறார்கள். கொடை கொடுப்பவன் சுல்தானாயிருந்தாலும், குடியானவனாயிருந்தாலும், ஸாலிஹாயிருந்தாலும், பாவிக்காயிருந்தாலும், கொடையைக் கையேற்பதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஆசை பூட்டியிருக்கிறார்கள். ஆகிலும் கொடுக்கப்பட்டது ஹறாமில்லை, என்றறிந்தாலே யொழிய அது ஹறாமென்றறிந்திருந்தால் கையேற்பது ஹறாம். இதுதான் மௌனசொல். ஆனதாலேயே திட்டமாக ஹறாமென்றறிந்தால் அதைக் கபூல் செய்வது ஹறாமாயிருக்கும்.

இன்த்தஹா.

## 9-வது ஹிக்காயத்து.

ஒன்பதாம் ஹிக்காயத்தாகிறது. ஷெய்கு அபூ முஹம்மதின் நஜ்ஜிபினி அபில்மன் ஸூரித்தாரிய்யி, இன்னும் ஷெய்கு அபூ ஹைதர் நஹ்மானுல்புஹ்லுல் ஸாஸிரிய்க்குற்றஷி, இன்னும் ஷெய்கு அபூ அப்தில்லாஹில் முஹம்மதுல் உப்பாரத்துல் அன்ஸாரி, இவர்கள் மூன்றுபேர்களும் தங்களுடைய சோவையான இஸ்னாதாக வைத்துக்கொண்டு பேசி வந்ததாயிருக்கும். அதாவது தன் வயலெனில் திடீரென ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்திற்கு ஷெய்கு பகுலுபுவும் ஷெய்கு இஸ்மாயீலல் பகுதாதியென்ற முகூலாளிவந்து நின்று வணங்காயுகவே உங்களுடைய ஜத்தாகிய றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஆனாலும் ஒருவரை விருந்துக்கழைக்கப்பட்டால் போய் ஹாஜிருகவுமென்று. ஆகையால் தங்களை நான் என் வீட்டுக்கழைக்கிறேன். தாங்களென்வீட்டுக்கு வரும்படி மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேனென்றார். அதற்கென்னுடைய ஜத்து றசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் உத்திரவு தந்தால் வருவேனென்று சொல்லி வெகுநேரம் வரையிலுந் தலையைக் குனிந்துக்கொண்டிருந்து பிறகு ஆம், நான் வருகிறேனென்று சொல்லித் தங்களுடைய கோவேறுகழுதையிலேறினார்கள். அப்போது ஷெய்கு அலிய்யுபுனு ஹீத்தியவர்கள் அதின் வலது அங்கபடியைப் பிடித்துக்கொண்டார்கள். நான் இடது அங்கபடியைப் பிடித்துக்கொண்டு ஷெய்கு பகுலுவுடைய வீட்டிற் போயிறங்கினோம். அதில் பகுதாதிலுள்ள ஷெய்குமார்கள், உலமாக்கள் முதலிய குறிப்பான மனிதர்களெல்லாங் கூடியிருக்கிறார்கள். பின்பு பெருங் களரியாக வஜீபான ஸஹனுகளைக் கொண்டுவந்து பரப்பப்பட்டது. அதில் மகா மதுரமானது, புளிப்பானது சகலதுமுண்டாயிருந்தது. பிறகு மூடப்பட்டதாய்ப் பெரிய ஒரு பிரம்புப்பெட்டி யொன்றை இரண்டுபேர்கள் சுமந்துகொண்டு வந்து களரியின் முடிவுப்புறத்தில் வைத்தார்கள். அப்பால் அந்தக் களரிக்காரர் ஷெய்கு பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர்றஹீம் உண வருந்துங்களென்று உத்திரவு கொடுத்தார். அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்



கள் குனிந்துகொண்டிருக்கிறார்கள். தாங்கள் யாதொன்றையும் தின்கவுமில்லை, தின்னும்படி பிறருக்குத்திரவு கொடுக்கவுமில்லை, ஆகையால் வேறே யொருவருந் தின்னவுமில்லை, களரியிலுள்ளவர்களெல்லாம் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹைபத்தால் அவர்களுடைய தலைகளில் பறவைகள் வந்து மூடிக்கொண்டிருப்பதுபோல உசும்பாதிருக்கிறார்கள்.

றுவியாகிய ஷெய்கு றஜபு சொல்லுகிறார்கள். அப்படியிருக்கையில் எனக்கும், ஷெய்கு அலிய்யுபுனுல் ஹீத்தீ அவர்களுக்கும் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஷாருச்செய்து அந்தக் களரி முடிவுப்புறத்தில் வந்திருக்கிற பெட்டியைத் தங்களளவிற் கொண்டுவரச் சொன்னார்கள். அப்போது நாங்களிருவரும் எழும்பி அந்தப் பெட்டியைத் தூக்கினோம். அது மெத்தக் கனமாயிருந்தது. அதைக்கொண்டுபோய் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு முன்னே வைத்தோம். அதைத் திறக்கும்படி நம்மை யேவினார்கள். உடனே நாமதைத் திறந்தோம். அப்பொழுது அதில் அந்த ஷெய்கு பகுலுக்குடைய ஒரு பிள்ளை பிறவிக்குருடுடையதாய், சப்பாணியாய், கருங்குஷ்டஞ் சேர்ந்ததாய், பக்க வாதம் பிடித்ததாயிருந்தது, அதைப் பார்த்து ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஏ பிள்ளையே, அல்லாவுடைய உத்திரவுகொண்டு யாதொரு பிணியுமில்லாமல் சுவாத்தியம்பெற்று எழும்பி நடாவென்று சொன்னார்கள். அச்சணமே அந்தப்பிள்ளையானது யாதொரு ஆபத்துமில்லாமல் நல்ல பார்வையுள்ளதாய் நடந்தோடித் திரிந்துக்கொண்டிருந்தது. இதைக்கண்டந்தக் களரியில் கூடியிருந்தவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டு பெருங் கூக்குரல் வைத்தார்கள். அந்தக் குழப்பத்தில் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் யாதொன்றுந் தின்னாமல் அவ்விடத்தைவிட்டும் புறப்பட்டுப் போயிட்டார்கள். றுவீ சொல்லுகிறார், அப்போது நான் என் நாயகம் ஷெய்கு அபூஸஈதில் கைலவீ அவர்களிடத்தில் வந்து இது செய்திகளை யறிவித்தேன். அப்போதவர்கள் சொன்னார்கள். ஷெய்கு அப்துல்காதிறு பிறவிக்குருட்டையும், வெண்குஷ்டம், கருங்குஷ்டம் முதலான ரோகங்களையும் சுவாத்தியமாக்குவார். இன்னும் அல்லாஹுத் தஆலாவின் உத்திரவுகொண்டு மௌத்தானவர்களையும் ஹயாத்தாக்குவாரென்றார்கள்.

இன்னும் அவர்கள் சொன்னார்கள், நான் ஒருநாள் ஹிஜ்றத்தாறு நூற்றி ஐம்பத்தொன்பதாம் வருஷம் அவர்களுடைய மஜ்லிஸில்போய் ஹாஜிறாயிருந்தேன், அப்போதில் றூமிகளில்நின்றும் ஒரு கூட்டத்தார்கள் ஹதிய்யா முத்திரை வைக்கப்பட்ட இரண்டு பெரிய பெட்டிகளைக்கொண்டுவந்து வைத்து இதிலிருக்கிறதைச் சொல்லுமென்று ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடஞ் சொன்னார்கள். அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய குறிசியை விட்டிறங்கி வந்து ஒரு பெட்டியில் கையை வைத்து இதிலொரு சப்பாணிப் பிள்ளையிருக்கிறதென்று சொல்லித் தங்களுடைய குமாரர் அப்துர்றஸ்ஸாக்கை யேவி அதைத் திறக்கச்சொன்னார்கள். அப்படியே திறந்தார், அதிலொரு சப்பாணிப்பிள்ளையிருந்தது, அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அதின் கையைப்பிடித் தெழும்பென்றார்கள், உடனே யெழும்பி நடந்தது. பிறகு மற்றொரு பெட்டியில் கையைவைத்து இதில் யாதொரு பிணியுமில்லாத பிள்ளையொன் றிருக்கிறதென்று சொல்லி யப்படியுந் தங்கள் மகனையே யேவி அதையுந் திறக்கச்சொன்னார்கள், அவ்விதமே திறந்தார், அப்போது அதிலிருந்த பிள்ளையான தெழும்பி நடந்தது. அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்தப் பிள்ளையுடைய முன் நெற்றியைப் பிடித்து உட்காரென்றார்கள், உடனே அது சப்பாணியாகிவிட்டது. இந்தக் கறாமத்துகளைக்கொண்டு அந்த றூமிகளெல்லோர்களும் நஸ்றானித்தனத்தை விட்டுவிட்டு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கையின்பேரில் தௌபாசெய்து மீண்டார்கள், அன்றையில் அந்தக் களரியில் மூன் றுபேர்கள் மௌத்தாய்ப் போனார்கள்.

## 10-வது ஹிக்காயத்து.

(*)

பத்தாம் ஹிக்காயத்தாகிறது அப்ஹறென்னும் * பட்டணத்திலிருந்து வந்து பகுதாதில் குடியிருக்கும் ஷெய்கு அபுல்ஹஸன்

* அப்ஹறென்றது கஸ்வீன், ஸன்ஜானென்னும் இரண்டு பட்டணத்திற்குமிடையில் ஒரு பெரிய பட்டணமாயிருக்கும்.



அலிய்யுப்னு அப்தில்லா ஹுஸைனி அபீபக்ரும், குறைஷிக் கிலாபியுள்ள அபூமுஹம்மத் அப்துல்வாஹிதிப்னு ஸாலிஹுஸைனி யஹ்யாவும், பைத்துல்முக்கத்திஸிலுள்ள இமாம் அபூஅப்தில்லாஹி முஹம்மதிப்னுஷ் ஷெய்குல் அல்லாமத்தி அபீயிஸ்ஹாக்கு இப்றாஹீமபுனி அப்துல்வாஹிதுமான இம்மூன்று பேர்களும் அவர்களுடைய கோர்வையான இஸ்னாதுகளைக்கொண்டு பேசிவந்ததாயிருக்கும். அவர்கள் மூவர்களும் சொல்லுகிறார்கள், ஒருநாள் ஒரு பெண்பிள்ளை தன் மகனைக் கூட்டிக்கொண்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்தில் வந்து இந்த என் மகனுடைய கல்பு உங்களைக்கொண்டே கொளுவி நிற்கிறது, ஆகையால் நான் அந்தப் பிள்ளையிலெனக் குண்டான ஹக்கைவிட்டு உமக்கும், அல்லாவுக்குமாகப் புறத்திப்பட்டேனென்று சொன்னாள். அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவளிடத்தினின்றும் அந்தப்பிள்ளையைக்கையேற்று முன்னோர்களுடைய வழியில் நடக்கவும், மார்க்கத்தில் தெண்டிக்கவும் அதை நடை பழக வைத்தார்கள். பின்பு ஒருநாள் அந்தத் தாயானவள் பிள்ளையை நாடி வந்து பார்த்தபோது பசியாலும், இரவு முழிப்பாலும் மெலிந்தவனாகவும், நிறமஞ்சணித்தவனாகவும் தொலிக்கோதுமை ரொட்டித்துண்டொன்று தின்னும்படியாகவுங் கண்டாள். பின்பு அவள் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களிருக்கிற விடத்திற்குப் போய்ப் பார்க்கும்போது அவர்களுக்கு முன்னே ஒரு பாத்திரம் வைத்திருக்கவும், அதில் நெய்யிற் பொரித்த கோழியொன்று ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தின்றுபோட்ட கோழியுடைய எலும்புகளும், முள்களு முண்டாயிருக்கக்கண்டு, நாயகமே தாங்கள் இவ்விதம் பொரித்த கோழி தின்னுகிறீர்களே யென் மகனோ தொலிக்கோதுமை ரொட்டித்துண்டு தின்கிறானென்று சொன்னாள். அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய கையைக் கோழி முள்கள் எலும்புகளின்மேலே வைத்து உக்கியிறந்த எலும்புகளை ஹயாத்தாக்கிவைக்கும் அல்லாஹுத் தஆலாவின் உத்திரவுகொண்டு ஹயாத்தா யெழும்பென்றார்கள். அப்போது அந்த எலும்பு வகைகளெல்லாம் ஒன்றாய்ப் பொருந்திக் கோழியாய்ச்சமைந்தெழும்பிச் சப்தம் போட்டது. அப்போது அவளைப்பார்த்து ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்

சொல்வார்கள், உன்னுடைய மகனிப்படியாகிவிட்டால் அவன் நாடியதைத் தின்னவிடுமென்றார்கள்.

இன்னும் அந்த ருஷிகளெல்லார்களுஞ் சொன்னார்கள். காற்றுக்கடி சாயடிக்கும் ஒருநாள் கட்டமிடுகிற பருந்தொன்று ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடையகளரிக்குமேபறந்து சத்தம் போட்டுக்கொண்டேயிருந்து அக்களரியில் கூடிவஃது கேட்டுக்கொண்டிருக்கிற ஜனங்கள்பேரில் அருவருப்பை யுண்டாக்கிவிட்டது. அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் காற்றை நோக்கி காற்றே இந்தப் பருந்துடைய தலையைப் பிடியென்று சொன்னார்கள். அக்கணமே அந்தப் பருந்தொரு பக்கத்திலும், அதின் தலையொரு பக்கத்திலுமாக விழுந்தது அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய குறுசியை விட்டிறங்கி அதை யொருகையாலும், அதின் தலையை யொருகையாலுமெடுத்து. பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீமென்று. சொல்லிப் பொருத்தினார்கள். உடனே யுடலுந் தலையும் பொருந்தி ஹயாத்தாகி மனிதர்களெல்லாரும் பார்த்திருக்கப் பறந்துபோய்விட்டது. றலியல்லாஹு அன்ஹு.

## 11-வது ஹிக்காயத்து

பதினோராம் ஹிக்காயத்தாகிறது. ஷெய்கு அபூஅப்தின் உஜமா ஹுஸைனீ, அபூ முஹம்மதின் அப்தில் ஹக்கில் ஹனீபீ இவர்களிருவரைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். அவர்களிருவர்களுஞ் சொல்லுகிறார்கள். நாங்கள் ஹிஜுறத்து ஐநூற்றி ஐம்பத்தைந்தாம் வருஷம் ஸபர்மாதம் மூன்றாந்தேதி ஞாயிற்றுக்கிழமை பகலில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மத்ரசாவில் போய் அவர்கள் சமூகத்திலிருந்தோம் அப்போதவர்களெழும்பி மிதியடியிட்டுக்கொண்டு உலூச்செய்து இரண்டு றக்அத்துத் தொழுது சலாங்கொடுத்த பின்னர் பெரும் சத்தமாகச் சத்தமொன்று போட்டுக்கொண்டு அந்த மிதியடியிலொன்றை யெடுத்து ஆகாயத்திலெறிந்தார்கள். அது நம்முடைய கண்களுக்குத் தோற்றாமல் மறைந்துபோயிட்டது. பின்



னுமொரு பெரும் சப்தம் போட்டுக்கொண்டு மற்றொன்றையும் ஆகாயத்திலெறிந்தார்கள். அதுவு நம்முடையபார்வைகளைவிட்டு மறைந்துபோயிட்டது. இது செய்தியைக் குறித்து ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் கேட்பதற்கு ஒருவருக்குந் தாவு விளங்கவில்லை. பின்பு இருபத்திமூன் நாளைக்குப் பிறகு அஜம் கட்டிலுள்ள ஊர்களிலிருந்து ஒருக்காபிலா வந்து மத்றசாவுக்கு முன்னே நாங்கள் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஒரு நேர்ச்சை கொண்டுவந்திருக்கிறோமென்றார்கள். அப்போது நாங்கள் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பக்கலிற் புகுந்து இதுசெய்தியை அறிவித்து உத்தரவு கேட்டோம். அதற்கு அவர்களில் நின்றும் நேர்ச்சையை எடுங்களென் றுத்தரவு செய்தார்கள். உடனே நாங்கள் வந்து கேட்கவும் பட்டுலொருமனும், சிவந்த பொன்னும், பட்டுப் புடவைகளும், இருபத்திமூன் நாளைக்கு முன் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆகாயத்திலெறிந்த ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மிதியடிக்கட்டையும், தந்தார்கள் அப்போது நாங்கள் உங்களுக்கு இந்த மிதியடிக் கட்டை யெப்படிக் கிடைத்ததென்று கேட்கவே அவர்கள் சொன்னார்கள். நாங்கள் இந்த ஸபர்மாதம் மூன்றாந்தேதி ஞாயிற்றுக்கிழமைப் பகலில் வழி நடக்கும்போது இரண்டு முதன்மைக்காரருடனே பதவிக் கள்ளர்கள் சிலபேர்கள் வந்து காபிலாவில் விழுந்து, எங்களில் சிலர்களை வதைத் துதைத்து, எங்கள் முதல்களைப் பறித்துக் கொண்டுபோய் ஒரு ஓடைக் கரையினிடமாக இறங்கிப் பறிமுதல்களை அவர்களுக்கிடையில் பங்கிடுகிறார்கள். அப்போது நாங்களெல்லாம் அந்த ஓடைக்கரையிலொரு பக்கமாயிருந்து பெருஞ் சஞ்சலம் அடைந்தவர்களாகச் சொன்னோம். ஐயோ, நாமள் ஷெய்கு முஹ்யித்தீன் ஆண்டவர்களுக்கு நேர்ந்துகொண்டால் நன்மையாகுமே என்று சொல்லி நாங்கள் இந்த அவதியை விட்டு ஸலாமத்தானால் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு இவ்வளவு கொடுப்போமென்று நேர்ந்து சொன்னதுதான். அந்தச் சொல்லானது முடியாமல் வாயும் வெளியுமாக நிற்கும்போதே அந்த வோடைக்கரை முழுது முழங்கும்படியாக மகா ஆரவாரமான இரண்டு சப்தத்தைக் கேட்டோம். அதனால் அந்தக் கள்ளர்களும் பயந்து நடுங்கிவிட்டார்கள். அந்தக் கள்ளர்களிடத்தில் வேறே சில கள்ளர்கள் கண்டு நாங்கள் இந்தக் கள்ளர்களிடத்தில் வந்து விழுந்தொன்றுக்கொன்று சண்டையாயிட்டுதோவென்றெண்

வைத்துக்கொண்டோம். அப்போது அந்தக் கள்ளரில் நின்றும் சில பேர்கள் எங்களாவிடம் வந்து நீங்கசொல்லவர்களும் வாருங்கள், வந்தவர் [illegible] எடுத்துக்கொள்ளுங்கள், எங்களுக்கிடை [illegible] என்று சொல்லி [illegible] அவர் [illegible] இந்த விஷயத்தில் ஒருவரொருவர் கட்டைதவிர் பட்டு [illegible] கண்டோம். பிறகு அவர்கள் [illegible] அவர்களுடைய முகங்களையெல்லாம் தடவிவிட்டு இது கருமத்திலேதோ ஒரு பாரமான செய்தி யுண்டென்று சொல்லிக்கொண்டு போய்விட்டார்களென்று சொன்னார்கள்.

——*——

## 12-வது ஹிக்காயத்து.

——(*)——

பனிரெண்டாம் ஹிக்காயத்தாகிறது. அபூ ஹாபுஸ் [illegible] கிம்மானி ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நானொரு நாள் என்னுடைய கலவத்தில் இருக்கையிலிருந்தேன். அப்போது பதினாறு [illegible] பிளந்தது [illegible] ஒரு கோலங்கெட்டவன் வந்தென்பேரில் புகுந்தான். அப்போது நான் அவனைப்பார்த்து நீ யாரென்று கேட்டபோது நான் இப்லீஸாயிருக்கும். உமக்கு நான் நல்லுபதேசஞ் சொல்ல வந்தேனென்றான். அப்போது உன்னுடைய உபதேசமென்னவென்று கேட்டேன். அதற்கு அவன் நானுமக்கு முறாக்கபாவுடைய இருப்பைப் படித்துத் தருகிறேனென்று சொல்லிக் குப்பிஸாவென்று மிருப்பாயிருந்து தலையைக் கவிழ்த்தினேன். பின் பிதுதான் முறாக்கபாவுடைய இருப்பென்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். அப்பால் நான் விடிந்தபோது என்னுடைய நாயகம் முஹ்யித்தீன் ஆண்டவர்களிடத்தில் இரவு நடந்த சங்கதியைச் சொல்லவேண்டுமென்று அவர்களுடைய சமுகத்தை நாடிப்போய் அவர்களின் திருக்கரத்தைக்கொட்டி முஸாபஹாச் செய்யும்போது அவர்களென் கையைப் பிடித்துக்கொண்டு நான் யாதொன்றுஞ் சொல்லாதிருக்கையில் அவர்கள் சொல்வார்கள். ஓ உமறே, அவன்



பொய்யனாயிருந்தபோதிலும், இன்றிரவிலுமக்குச் சொன்னது உண்மை ஆனதால் அந்த வொன்றையும் அவனில் நின்றுங் கேட்டுக்கொண்டதைத் தவிர, இதற்குப்பின் அவனில் நின்றும் யாதொன்றையும் ஒருகாலமும் கபூல்செய்யாதீரென்று சொன்னார்கள். குறுபுஸாவென்ற இருப்பாவது இரண்டு சகனத்தின்பேரிலுமிருந்து, இரண்டு துடையையும் வயிற்றின்பேரில் சேர்த்து இரண்டு கையிலும் இரண்டு முட்டுக்காலையும் கட்டியிருக்கிறது. அல்லது இரண்டு முட்டின்பேரிலுமிருந்து, வயிற்றை இரண்டு துடையுடனே சேர்த்து கையிரண்டையுங் கமக்கட்டிற் புகுத்திக் குனிந்துகொண்டிருக்கிறது. இந்த இருப்புத்தான் ஷெய்குக் கிறுமானியுடைய இருப்பாய் நாற்பது வருஷமிருந்ததென்று ஷெய்கு அபுல்ஹசன் றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். றலியல்லாஹு அன்ஹு.

——

## 13-வது ஹிக்காயத்து.

——**——

பதிமூன்றாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபுல்ஹசனில் பகுதாதீ றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொன்னார்கள், எனது நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் கிதமத்துச் செய்துகொண்டு அவர்கள்பேரில் இத்தாபு ஓதுவதில் பாரக்காயிருந்தேன். நான் அவர்களுக்கு ஏதாவது தேவை வந்தால் நான் அதைச் செய்யவேணுமென்று இரவெல்லாம் முழித்திருக்கிறவனாயிருந்தேன். அப்படியிருக்கும்போது ஹிஜுறத்து ஐநூற்றி ஐம்பத்திமூன்றாம் வருஷம் ஸபர் மாதம் ஓரிரவில் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டார்கள். அப்போது நான் அவர்கள் உலூச்செய்ய நாடிப்போகிறார்களென்றெண்ணிக் கெத்தலைக்கொண்டுபோய்க் கொடுத்தேன். அவர்கள் அந்தக் கெத்தலை யெடுக்கவில்லை, அப்பால் மத்றசா வாயிலை நாடிப்போனார்கள். அவ்வாசல் தானாகவே திறந்துவிட்டது, அதிலிருந்து வெளிபட்டுப் போனார்கள், நானும் அவர்களுக்குப் பின்னாலே போனேன், நான் போகிறது அவர்களுக்குத் தெரியாதென்றெண்

ளிக்கொண்டு போகிறேன். அவ்விதமவர்கள் புறப்பட்டுப் பகுதா னாருடைய வாசலுக்கு முடுகிறவரையிலும் நடந்தார்கள். அப்போது அந்த வாசலுந் தானாகவே திறந்தது, அதைவிட்டுமவர்கள் புறத்திப்பட்டார்கள், நானும் அவர்களுக்குப் பின்னாலே தொடர்ந்தேன். அப்போது அந்த திறக்கப்பட்ட வாசல் தானாகப் பூட்டப்பட்டதாயிட்டுது, அப்பால் கொஞ்சத்தூரம் நடந்தார்கள். அப்போது நாங்களிருவர்களுங் நானாஸியாதனாரிலிருக்கிறோம். பின்பு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களோர்தைக்காவுக் கொப்பான ஓர் தலத்திற் போய்ப் புகுந்தார்கள். அவ்விடத்தில் ஆறுபேர்களிருந்தார்கள், அந்த ஆறுபேர்களும் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கண்டவுடனே விரைந்தெழுந்து சலாம் சொன்னார்கள். நான் அவ்விடத்திலொரு தாவாருகில் ஒதுங்கியிருந்தேன். அப்போது அந்தத் தைக்காவுக்குள் ஒரு கோணத்தில்நின்று மொரு முனக்கங் கேட்டது, நாங்கள போயிருந்து கொஞ்ச நேரமேயாழிய செல்லவில்லை, அந்த முனக்கம் நின்றுவிட்டது. அப்பாலொரு மனிதன் வந்து அந்த முனக்கங் கேட்டவிடத்துக்குப் போனார். அவ்விடத்திலிருந்து ஒரு மனிதனைத் தோளில்வைத்துச் சுமந்துக்கொண்டு புறத்திப்பட்டார், பிறகு இன்னும் ஒரு மனிதன் தலை திறந்தவராயும், மேல்மீசை நீண்டவராயும் வந்து புகுந்து ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு முன்னேயிருந்தார். அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த மனிதனுக்குக் கலிமா ஷஹாதத்தைச் சொல்லிக்கொடுத்து அவருடைய தலைமுடியையும், மேல்மீசையையும் வெட்டும்படி செய்து ஓர் குல்லாத் தொப்பியொன்றை கிறுக்காவாகப் போட்டு அவருக்கு முஹம்மதென்று பெயரும் வைத்து அந்த ஆறுபேர்களையும் பார்த்து அந்த மௌத்தானவருக்குப் பதிலாக இவரை வைக்கும்படிக் கென்னை யேவப்பட்டதென்று சொன்னார்கள். உடனே அந்த ஆறுபேர்களும் மெத்த நல்லதென்று நாங்கள் கேட்டு வழிப்பட்டுக்கொண்டோமென்று சொன்னார்கள். பின்பு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களைவிட்டும் புறப்பட்டார்கள். அவர்களுக்குப் பின்னாலே நானும் புறப்பட்டேன், அவ்விதம் புறப்பட்டுக் கொஞ்சதூரம் நடந்தோம், பகுதாது வாசலினிடத்திலா யிருக்கிறோம், மேற்படி வாசல் முன் திறந்தது போல் தானாகவே திறந்துவிட்டது, ஷெய்கு றலியல்லாஹு அன்



ஹு அவர்கள் அவ்வாசலினுள்ளானார்கள். நானும் பின்னாற் புகுந்தேன். பின்பு அந்த வாசல் முன்போல் தானாகவே பூட்டிக்கொண்டது, அப்பால் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மத்றசா வாசலளவில் மூடுகிறார்கள். அவ்வாசலும் அதுபோலவே திறப்பட்டது, அவர்களும் நானும் அவ்வாசலினுள்ளானதின் பிறகு தானாகவே அடைபட்டுக்கொண்டது பிறகு அவர்கள் தங்களுடைய வீட்டிற்போய்ப் புகுந்தார்கள். பின்பு மறுநாள் பகலானபொழுது என்னுடைய வழக்கம்போல் கித்தாபு ஓதுவதற்காக அவர்களுக்கு முன்னே போயிருந்தேன். அவர்களுடைய ஹைபத்தால் என்னால் கிட்ட விருக்கமுடியாது அவ்விடத்தைவிட்டும் யெழும்பிவிட்டேன். அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னைப்பார்த்து ஐ அருமையான பிள்ளையே, உன்பேரில் குற்றமில்லை, அச்சப்படாமலிருந்து ஓதென்றார்கள், அப்போது நான் இவ்வளவு சமாளங் கிடைத்தபடியால் அவர்கள் பேரில் ஆணையிட்டு நான் இரவிற் கண்ட காரணத்தை வியரமாகச் சொல்லும்படி கேட்டேன், அதற்கு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாம் இன்றிரவு போன ஊராகிறது நிஹாவன்தி ராச்சியமாயிருக்கும். நீ கண்ட ஆறுபேர்களுமாகிறது தெரியப்பட்ட அப்தால்களாயிருக்கும், நீ கேட்டிருந்தாயே அந்த முனக்கமுடையவராகிறது அவர்தான் அந்த அப்தால்களில் ஏழாவதாயிருந்தவர் அவர்கஷலாளியாயிருந்தார், அவருக்கு வபாத்துடைய வக்தானபோது நாம் போய் ஹாஸிருயிருந்தோம், அந்த வபாத்தானவரைத் தோளில்வைத்துச் சுமந்து வெளியே கொண்டுபோகும்படியாயொரு மனிதரைக் கண்டாயே, அவராகிறது அபுல் அப்பாஸ் கிளுறு அலைஹிஸ்ஸலாமாயிருக்கும், அந்த மௌத்தானவரை நல்லடக்கஞ் செய்ய எடுத்துக்கொண்டு போனார்கள். இனி நான் கலிமா ஷஹாதத்துச் சொல்லிக்கொடுத்து இஸ்லாமார்க்கத்தி லெடுத்த அந்த மனிதனாகிறது குஸ்த்தன்தனீயாத் தேசத்து மனிதர்களிலொருவன் அவன் நஸ்றானி மார்க்கத்திலிருந்தான், அவனை இந்த மௌத்தானவருக்குப் பதிலா யிருக்கும்படி செய்ய என்னை யேவப்பட்டது. ஆனதால் அவரைக்கொண்டுவரப்பட்டு என் கையின்பேரில் கலிமாச்சொல்லி இஸ்லாமாகி இப்போது அந்த அப்தால்களில் நின்றுமாயிருக்கிறாரென்று சொன்னார்கள். பின்பு அவர்கள் ஹயாத்தாயிருக்கும்போது இது செய்

தியை ஒருவரிடமுஞ் சொல்லக்கூடாதென்று அறுதிமானமேற்படுத்துக்கொண்டார்கள், றலியல்லாஹு அன்ஹு.

## 14-வது ஹிக்காயத்து.

—(*)—

பதினாலாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபூஸஃதி அப்துல்லாஹிபுனு அஹ்மதல் பகுதாதீ றஹிமஹுல்லாஹு அவர்களைத் தொட்டும் வந்ததாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள், எனக்கொரு மகளுண்டாயிருந்தாள், அவளுடைய பெயர் பாத்திமாவாயிருக்கும். பதினாறு வயதுடைய கன்னிஸ்திரீயமாயிருந்தாள், அவளொருநாள் நம்முடைய வீட்டின் மேல்தட்டிலேறியிருந்தாள், அப்போது அவளை யிருந்நாக் கொண்டுபோகப்பட்டது. ஆகையால் நான் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்திற்போயிதுசங்கதியைச்சொல்லி முறையிட்டேன். அதற்கெனக்கு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். நீ இந்த இரவில் கறகென்னூர் தலத்திலிருக்கிற பாழ்பூமிகளுக்குப் போய் அவ்விடத்தில் அனேக மேடுகளிருக்கிறது, அதில் அஞ்சாவது மேட்டில் நீ உட்கார்ந்துகொண்டுனக்குச் சூழாலே ஒரு கோடு கீறிக்கொள், அந்தக் கோடு கீறும்போது பிஸ்மில்லாஹி அலா நிய்யத்திஷ் ஷெய்க்கு அப்துல்காதிற். ஷெய்கு அப்துல்காதிறுடைய நிய்யத்தின்பேரில் அல்லாவென்னுந் திருநாமங்கொண்டு இந்தக் கோடு கீறத்துடங்குகிறேனென்று சொல்லிக்கொள். இனி இரவில் முற்சாமமானால் ஜின் கூட்டங்கள் பற்பல கோலத்திலுனக் கருகே நடந்துபோகும் அதைக்கண்டு நீ பயப்படவேண்டாம். அப்பால் ஸஹற் நேரமானால் ஜின்களின் இராஜாவானவர் அனேக ஜின்படைகளுடனே உனக்கருகே நடந்துபோக வந்து உன்னிடத்தில் உன் தேவை யென்னவென்று கேட்பார். அப்போது உம்மானில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னை யனுப்பினார்களென்று சொல்லி உன்னுடையமகளின் செய்தியைச் சொல்லென்று சொன்னார்கள். நான் அவர்கள் சொல்லியபடியே கறுகில் அஞ்சாவது மேட்டிற்போய் அவர்களேவியபடி செய்துக்



கொண்டிருக்கையில் ஜின்களில்நின்றும் பார்த்தால் பயமுண்டாகும்படியான வேஷங்களையுடைய ஜின்களெல்லாம் கூட்டங்கூட்டமாகப் போனார்கள், ஆனால் அவர்களிலொருவராவது நானிருக்கிற கோட்டுக்கு முடுகவரச் சக்தி பெறவில்லை. இப்படியாகப் போய்க் கடைசியில் அவர்களுடைய இராஜா குதிரை யேறினவராக வந்தார். அவருக்கு முன்னே சில ஜின் கூட்டத்தார்களும் வந்திருக்கிறார்கள். அந்த இராஜாவானவர் நானிருக்கிற கோட்டுக்கு நேரே வந்து ஓய் மனிதனே, உம்முடைய நாட்டமென்னவென்று கேட்டார். அதற்கு நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னை உம்மளவில் அனுப்பினார்களென்று சொன்னேன். அந்தவுடனே இராஜாவானவர் குதிரையின்மீதிருந்து கீழேயிறங்கிப் பூமியை முத்திக்கொண்டு நான் கீறியிருக்கிற கோட்டுக்கடுத்துட்கார்ந்தார். அவருடன்வந்திருந்த ஜின் கூட்டங்களெல்லாம் கூட உட்கார்ந்தார்கள், அதின்பிறகு என்னுடைய கருமத்தைக்குறித்துக் கேட்டார், அப்போது என்னுடைய மகள் போன சங்கதியைச்சொல்லி யறிவித்தேன். அப்போது இராஜா தன்னுடனே யிருக்கிற ஜின்களைப்பார்த்து இது செய்தவன் யாரென்று கேட்டபோது ஒருவருக்குந் தெரியவில்லை, பின்பு யாவரும் ஓடித் தேடினதில் ஸீன் தேசத்திலுள்ள அடங்காத் தனத்தையுடைய ஜின்களில்நின்று மொரு பொல்லாத ஜின்னைக் கொண்டுவரப்பட்டது, அந்த ஜின்னைப்பார்த்து இராஜாவானவர் எடா நீ குதுபு முஹ்யித்தீனாண்டவர்களுடைய காலின் கீழிருக்கிற ஊர்ப்பெண்களைக்கொண்டு நீ இந்த வேலை செய்த காரணமென்னவென்று கேட்டார், அதற்கந்த ஜின்னானது அவளென்னுடைய மனதுக்குப் பிடித்த பெண்ணாயிருந்தாளென்று சொல்லினது உடனே அந்த ஜின்னுடைய கழுத்தை வெட்டும்படி கட்டளை செய்து அந்தப்படி வெட்டப்பட்டபின் என்னுடைய மகளை யென்வசம் ஒப்பிவித்தார். அப்போது நான் கேட்டேன், ஜின்களின் இராஜனே, நீ ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வலுக்கு வழிப்படுவதில் இன்றிரவைப்போல் நான் காணவில்லையென்றேன், அதற்கு இராஜன் சொல்வான். மெய்தான நம்மிடத்தில் அடங்காத ஜின்களெல்லாம் பூமியின் முடிவிலிருப்பார்கள், அவர்களளவில் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் வீட்டிலிருந்து பார்த்தவுடனே அவர்களுடைய

னைப்பார்த்தால் அவர்கள் குடியிருக்கும் தலங்களுக்கு வெருண்டோட மாட்டார்கள், இடறாக அல்லாஹுத்தஆலா ஒருவனைக் குருடாக கிடாக்கினேயானால் அவனுக்கு மனுஷ ஜின் சகலரையும் வசப்படுத் திக்கொடுப்போமென்று சொன்னார்.

இன்னும் குனிகள் பேசிவந்தார்கள். அதாவது ஷெய்கு றஸியல் லாஹு அன்ஹு அவர்களிடத்தில் ஒருமனிதன் வந்து நான் இஸ்பஹா ன் ராச்சியத்திலுள்ளவன் எனக்கொரு பெண்சாதியுண்டு. அவளுக்கு அடிக்கடி சுகவீனம் மந்திரவாதிகளெல்லாம் வந்து பார்த்தும் ஒருவரா லும் முடியாமற் போச்சுதென்று சொன்னார், அதற்கு ஷெய்கு றஸி யல்லாஹு அன்ஹு அவர்கள் அவளுக்குத் தொட்டிருக்கிற ஜின் னுடைய இலங்கைக்கு ஒடையது அடங்காத ஜின்களிலொரு ஜின்னாயிருக்கும், அதின் பெயர் கானிஸா, உன் பெண்சா தியைப் போய்க்கேட்டால் அவளுடைய காதில் நீ சொல்லு. எடா கானிஸே, பகுதாதில் குடியிருக்கும் ஷெய்கு அப்துல்காதிறு றஸி யல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள், நீ போய்விடு, மீள வரவேண்டாம், அப்படி வந்தாயானால் ஹலாக்காவாயென்று சொல் லென்று சொன்னார்கள். அதைக் கேட்டுக்கொண்டந்த மனிதன் போய்ப் பத்து வருஷம் வரையிலும் பகுதாதுக்கு வாராதிருந்து பிற பாடு வந்தார், அப்போது அவருடைய பெண்சாதியின் ஹாலைப்பற்றிக் கேட்டோம், அதற்கந்த மனிதன் நான் ஷெய்கு றஸியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னபடி செய்தேன், அதன்பிறகு இதுவரை யிலும் அவளுக்கு மயக்கங் காணவில்லையென்று சொன்னார். இன் னும் சொல்லுகிறார்கள், மந்திரஞ்செய்கிற தொழில்காரர்களில் தலை மைக்காரர்களெல்லாருஞ் சொல்லியிருக்கிறார்கள். ஷெய்கு றஸியல் லாஹு அன்ஹு அவர்கள் பகுதாதில் ஹயாத்தாயிருக்கையில் நாற் பது வருஷகாலம் யாதொருவருக்கும் மயக்கங்காணாமலிருந்தது, அவர்கள் வபாத்தானதின் பிறகு தான் அநேகம்பேர்களுக்கு மயக் கங்கண்டிருக்கின்றது.

இன்னும் அபல்அப்பாஸ் அஹ்மது ஷெய்கு அபீஅப்தில்லா உமி முஹம்மதிப்னி அபில்பத்ஹில் ஹரவியென் பேசிவந்திருக்கிறார்கள், அவர்கள் சொல்லுகிறார்கள். என் தகப்பனார் ஷெய் குமுஹம்மதிப்னு அபில்பத்ஹில் ஹரவி சொல்லியிருக்கிறார்கள். ஒருநாள் ஷெய்கு அபுல்ஹஸன் அலிய்யிப்னுல் ஹீத்தி றஸியல்லாஹு அன்



ஹு அவர்கள், நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஸி யல்லாஹு அன்ஹு அவர்களுடைய வீட்டுக்குப்போனார்கள். நா னும் அவர்களுடனே யிருந்தேன், அப்போது அவர்களின் வீட்டுக் கூடத்தில் ஒருவாலிபர் கல்லாய்க் கிடக்கும்படி கண்டோம். அந்த வாலிபன் ஷெய்கு அலியை நோக்கி நீங்கள் எனக்காக ஷெய்கு றஸி யல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் மன்றாடவேணுமென்று சொன்னார். பின்பு நாங்கள் ஷெய்கு றஸியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தில் புகுந்தபோது ஷெய்கு அலிய்யிப்னுல் ஹீத்தியவர்கள் அந்தவாலிபர் சொன்னதை ஷெய்கு றஸியல்லாஹு அன்ஹு அவர்களுக்குச் சொன்னார்கள். அதற்கு ஷெய்கு றஸியல் லாஹு அன்ஹு அவர்கள் அந்த வாலிபரை உமக்கு நன்கொடை யாகத் தந்துவிட்டேனென்று அலிய்யிப்னுல் ஹீத்தியவர்களுக்குச் சொன்னார்கள். அப்போது அலிய்யிப்னுல் ஹீத்தியவர்கள் வீட்டுக் குள்ளிருந்து விரைவாக வெளியில் வந்தார்கள். நானும் அவர்களு டன் வந்தேன். அப்பால் அவர்களந்த வாலிபரை நோக்கி ஓ வாலி பரே, உம்மில் நான் மன்றாடிக் கேட்டபடி நிறைவேறிவிட்டதென்று சொன்னார்கள். அப்போது அந்த வாலிபரெழும்பி ஒருஜன்னல்வழி யாய் வெளியில் வந்து நாங்கள் பார்த்திருக்க ஆகாயத்தில் பறந்து விட்டார். பின்பு நாங்களிருவர்களும் ஷெய்கு றஸியல்லாஹு அன் ஹு அவர்கள் சமுகத்தை நாடிப்போயவர்கள் சமுகத்தில் புகுந்த வுடனே நான் ஷெய்கு றஸியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இந் தக் கூடத்தில் விழுந்து கிடந்தாரே அவருடைய செய்தியின் விபர மென்னவென்று கேட்டேன், அதற்கு ஷெய்கு றஸியல்லாஹு அன் ஹு அவர்கள் சொல்வார்கள், அவர் ஆகாயத்தில் பறந்துபோனார் அப்படிப் பறந்துபோகும்போது இந்தப் பகுதாது நகரில் விலாயத் துடையோர்களில் இவனைப்போல ஒருமனிதருமில்லையென்று அவர் தன் னுக்குள்ளே சொல்லிக்கொண்டார். ஆனதால் அவருடைய ஹாலை நான் ஸலிக்கெடுத்தேன். ஷெய்கு அலிய்யிப்னுல் ஹீத்தியவர் களை யில்லாதிருக்கில் ஒருபோதும் நான் எடுத்த ஹாலைக் கொடுக்க மாட்டேனென்று திருவுளமானார்கள்.

இன்னும் அந்த றாவி சொல்லுகிறார், நான் ஒருபோது ஹிஜ்ரா த்து ஐந்நூற்றி ஐம்பத்தொன்றாம் வருஷம் றபீஉல்ஆகிறு மாதம் ஒன்பதாந்தேதி சனிக்கிழமை இரவு மஃரிபுக்கும், இஷாவுக்குமிடை

யில் பத்ராவுடைய பேச்சுக்கு மேலே எல்லார்க்கும் படித்தவனாயிருந்தேன். அந்த நேரம் அருந்தோவடையாயிருந்தது, என்னுடைய சாயகம் செய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களெனக்குமுன்னால் பெண்ணை முன்னோக்கினவர்களாயிருந்தார்கள். அப்போது ஒரு மனிதர் ஆகாயத்தில் எய்யப்பட்ட அம்பைப்போல் பறக்கிறார். அவர் தலையில் பிருகாவான தலைப்பாகுண்டாயிருக்கிறது. அதற்கு முந்தம் வைத்து இரண்டு புயத்துக்குமிடையில் முந்தானைத்தொங்கவிட்டிருக்கிறது, அவருடைய மேலே பொரு வெண்மை மேட்டிப்பாண்டாயிருக்கிறது. இன்னும் ஒரு சாரம் உடுத்திக்கொண்டிருக்கிறார், அவர் ஆகாயத்தில் பறந்துவந்து செய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தலைக்குச் சரியாக வந்தவுடனே வேட்டையைக் கண்ட கொப்பாருந்து போல விழுவது போல் இறங்கியதும் செய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு முன்னேவந்து மகா ஆசாரத்துடன் சலாம் சொன்னார். பின்பு எழும்பி ஆகாயத்தில் பறந்து நம்முடைய பார்வையைவிட்டு மறைந்துபோனார். அப்போது நானெழும்பி செய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் போய் அந்த வந்துபோனவருடைய செய்தியைத்தெரிட்டுக் கேட்டேன், அதற்கவர்கள் நீயும் அவரைக் கண்டாயோவென்றார்கள், ஆமென்றேன். அவராகிறவர் ஆலம் கைபுடைய ஆண்பிள்ளைகளிலொருவராயிருக்கிறவென்று செய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள், அவர்கள் பேரில் அல்லாஹுத் தஆலாவுடைய சலாமும் றஹ்மத்துமுண்டாவதாகவும்.

இன்னும் ராவி சொல்லுகிறார். ஹிஜ்றத்து ஐந்நூற்றி ஐம்பத்தொன்பதாம் வருஷம் முஹர்றமாதத்திலே ஒருநாள் செய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களை நாடி வருபவர்கள் தரிப்பிடிருக்கிறதற்காகத் தாங்கள் கட்டிய மடத்திலிருக்கிற அறையில் அவர்களை ஸியாரத்துச் செய்ய வந்தவர்களில் இன்னும் முப்பதுபேர்கள் வரையிலும் கூடியிருந்தார்கள். அப்போது செய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் வீட்டைவிட்டுச் சீக்கிரமாக வெளியில்வந்து சப்தம்போட்டு மனிதர்களை சீக்கிரத்தில் இங்கே வாருங்களென்று கூப்பிட்டார்கள். உடனே யெல்லோர்களுமெழும்பி அவ்விடத்தைவிட்டு வெளியில் வந்துவிட்டார்கள். அவ்விடத்தில் ஒருவருமில்லாமல் வெளியேவந்தபின்பிறகு அவ்வறையின் முகடு முறிந்து கீழே விழுந்துவிட்டது.



அதில் அகப்படாமல் மனிதரெல்லோர்களும் ஸலாமத்தப் பெற்றார்கள். அப்போது செய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நான் வீட்டுக்குள்ளிருக்கும்போது இந்த முகடானது இப்போது முறிந்து விழுமென்று சொல்லப்பட்டது. ஆதலால் நான் உங்கள் பேரில் கிருபையாக உங்களுடைத்தலையும் வெளியில் வரச்சொன்னேனென்று திருவுளமானார்கள். றலியல்லாஹு அன்ஹு.

## 15-வது ஹிக்காயத்து.

(*)

பதினைந்தாம் ஹிக்காயத்தாகிறது செய்கு அபுல்ஹசனிப்னி அபீ தாஹிறிப்னி கனூசியில் அன்ஸாரீ றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். இவர்களாகிறவர்கள் சிறப்பான மதீனத்திலிருந்து வந்து மிஸ்றில் குடிபதியாயிருப்பவர்களாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள், நானொருதரம் ஹஜ்ஜுச்செய்ய நாடிப்புறப்பட்டு நானும் என்னுடைய கூட்டாளியொருவருமாக ஹஜ்ஜு செய்ததின்பிறகு பகுதாதுக்குப் போய்ச் சேர்ந்தோம், அதற்கு முந்தி அந்த ஊருக்குப் போகவுமில்லை, அதிலொருவனை யறியவுமாட்டோம். எங்களுடனே யொரு கத்திபேயல்லாது வேறே யாதொன்றுமில்லை, நாங்கள் அந்தக் கத்தியைக் கால் மஞ்சாடி வெள்ளிக்கு விற்று அதற்கரிசி வாங்கிப் பொங்கித் தின்றோம். அது தின்றதுபோதுமில்லை, வயிறு நிறையவுமில்லை. பின்பு செய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸுக்கு வந்தோம், அப்போது செய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய பேச்சை நிறுத்திவிட்டு எங்களைக் குறித்துப் பரதேசிகளில் சில மிஸ்கீன்கள் ஹிஜாஸுக்கட்டியிருந்து வந்தார்கள். அவர்களுடனே ஒரு கத்தியேயல்லாது வேறில்லை, அதைக் கால்மஞ்சாடி வெள்ளிக்கு விற்று அரிசி வாங்கிப் பொங்கித் தின்றார்கள், அது தின்றதுபோதுமில்லை அவர்களுடைய வயிறு நிறையவுமில்லையென்று சொன்னார்கள்.

ராவி சொல்லுகிறார், இந்தச் சொல்லைக் கேட்டு நான் மெத்த ஆச்சரியமடைந்தேன், பின்பு அவர்களின் பேச்சு முடிவானதின்

பிறகு வெளிப்படுவதற்காக ஒருபுரு விசித்திரமாய் கட்டளைசெய்தார்
கள். அப்போது நான் என்னுடைய கூட்டாளியிடத்தில் இரகசிய
மாக உனக்கு ஏதாவது இன்ன ஆசையாயிருக்கிறதென்று கேட்
டேன், அதற்கவர் தொலிக்கோலுக்குக் கத்தி கட்ட கொதாரியுடன்
இன்ன ஆசையாயிருக்கிறதென்று சொன்னார். நானென்னில் விட்
டாளுக்கேன் இன்ன ஆசையாயிருக்கிறதென்று சொல்லிக்கொண்
டேன், அப்போது ஷெய்கு நஸியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்
களுடைய காதிமை விரைவாகக் கூப்பிட்டு தோலிக்கோலுக்குக்
கத்தியும், கட்ட கொதாரியும், கிட்டாங்கேதையும் கொண்டுவா
வென்றார்கள். அதுபோலவே காதிம் போய்க் கொண்டுவந்தான்,
அப்போது ஷெய்கு நஸியல்லாஹு அன்ஹு அவர்கள் காதிமை
நோக்கி யெங்கனவில் இஷாருச்செய்து புல்லிருபேருக்கு முன்னே
இவைகளைக் கொண்டுபோய் வைப்பாயென்று சொன்னார்கள். உட
னே காதிம் கொண்டுவந்து தொலிக்கோலுக்குக் கத்தியை யென்
முன்பாகவும், தேனை யென் கூட்டாளி முன்பாகவும் வைத்தான்.
அப்போது ஷெய்கு நஸியல்லாஹு அன்ஹு அவர்கள் காதிமை
நோக்கி நீ வைத்ததை மாற்றினை, அப்படி வைத்தால்தான் நீ செய்
தது நேராயிருக்குமென்று சொன்னார்கள். அப்போது இந்தக் கஷ்
புகளை நான் கண்டறிந்தபடியால் ஏனென அறியாமல் நான் சப்தம்
போட்டுக்கொண்டு மனிதர்களையெல்லாம் கடந்து ஷெய்கு நஸியல்
லாஹு அன்ஹு அவர்களுடைய கிட்டப்போய்விட்டேன். அப்போ
தவர்கள் என்னைப்பார்த்து மிஸ்றைச் சேர்ந்தவிடங்களில் வந்து
சொல்லும், ஆவிமைக்கொண்டே சேபனமென்று சொன்னார்கள்,
அதற்கு நான் என்னுடைய நான் பத்திறாச் சரியாகவோ ஏன
தவறுயிருக்கையிலே வந்து செல்லுகிற தெப்படியென்று சொன்
னேன். அப்போது ஷெய்கு நஸியல்லாஹு அன்ஹு அவர்கள்
என்னை நோக்கி உமக்கிந்தச் சொல்லைச் சொல்லும்படிக் கெல்லை
யேவப்பட்டதென்று சொன்னார்கள். அதின்பிறகு நான் ஷெய்கு நஸி
யல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் இல்மு படிப்பதில் பாக்கா
யிருந்தேன், என் ஊரல்லாதவர்களுக்கு இந்த வருஷத்தில் நாலு
படியகாக படிப்புகளையெல்லாம் அல்லாஹுத் தஆலா எனக்கொரு
வருஷத்தில் திறவுபடியாக்கித்தந்தான். நான் பருகாலும் அறிவு
சொல்லிக்கொண்டிருந்தேன். பின்பு நான் மிஸ்றுக்குப் போவதற்கு
ஷெய்கு நஸியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் உத்தரவு கேட்



டேன். அதற்கு ஷெய்கு நஸியல்லாஹு அன்ஹு அவர்களெனக்
குச் சொன்னார்கள், நீர் திடமாக திமஷ்கிராச்சியத்துக்குப் போய்ச்
சேருவீர். அப்போது அவ்விடத்திலுள்ள படைகளெல்லாரும் மிஸ்
றைப் பிடிப்பதற்கு ஆரம்பமானவர்களாகப் புறப்படத் தாண்டீர்,
அப்போது நீரவர்களுக்குச் சொல்லும், திடமாக நீங்கள் இந்தத் தட
வையில் மிஸ்றை நாடிப்போய் உங்களுடைய நாட்டத்தை யெற்றிக்
கொள்ளமாட்டீர்களென்று சொல்லுமென்று சொன்னார்கள். பிறகு
நான் ஷெய்கு நஸியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் உத்தரவு
பெற்றுக்கொண்டு திமஷ்கிராச்சியத்துக்கு வந்தபோது வெர்க் கரு
மத்தைப்பற்றி ஷெய்கு நஸியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்
னதுபோல் படைகளெல்லாம் திரண்டு மிஸ்றைப் பிடிக்கப்போக
ஆரம்பிப்பதைக்கண்டு ஷெய்கு நஸியல்லாஹு அன்ஹு அவர்கள்
சொல்லியபடி நான் அவர்களுக்குச் சொன்னேன், அதை அவர்கள்
ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அவர்களை விட்டுவிட்டு மிஸ்றுக்குப்
போய்விட்டேன். அப்போது அவ்விடத்திலுள்ள கலீபா திமஷ்கில்
நின்றும் வருகிற படைகளுடனே யெதிர்க்கத் தயாராயிருக்கக்கண்டு
நான் அவர்களுக்குச் சொன்னேன், கலீபாவே நீர் பயப்படவேண்
டாம் குற்றமில்லை, போய் நெருக்கும். அவர்கள் பேறு கெட்டு
படை முறிந்தோடுவார்கள். நீங்கள் ஜெயம் பெற்றவர்களாய் வரு
வீர்களென்றேன். அப்பால் திமஷ்கு ஜனங்களெல்லாம் வந்து மிஸ்
றைப் பிடிக்க யுத்தம் நடத்திமுடியாத இயலாத்தன்மையாகித் திமஷ்
குக்கே ஓடிப்போய்விட்டார்கள். அதின்பிறகு மிஸ்றுடைய கலீபா
அவர்கள் நான் சொன்னதுபோல் முடிந்தபடியால் என்னை மந்திரி
யாக வைத்து அவர்களுடைய இரகசியங்களை யெல்லாவற்றையும்
என்னுடன் சொன்னார்கள். பின்பு இரண்டாம் வருஷத்தில் திமஷ்
குக்காரர்கள் வந்து மிஸ்றைப் பிடித்துக்கொண்டார்கள். அவர்க
ளுக்கும் நான் சொன்னதுபோலவே கிடைத்துக்கொண்டபடியால்
அவர்களும் என்னை மெத்தச் சங்கை செய்தார்கள். ஆனால் நான்
முஹ்றயித்தீன் அப்துல்காதிறு நஸியல்லாஹு அன்ஹு அவர்களு
டைய ஒரு சொற் கேட்ட பறக்கத்தினால் எனக்கிரண்டு இராஜாக்க
ளிலும் ஒரு லட்சத்தி ஐம்பதினாயிரந் தங்கக்காசு கிடைத்ததென்று
சொன்னார்கள்.

## 16-வது ஹிக்காயத்து.

பதினாறாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு பக்கா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேசிவந்ததாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள், ஒருநாள் ஒரு வயதாளி ஒரு வாலிபனைக் கூட்டிக்கொண்டு ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்துக்கு வந்து நாயகமே இந்த வாலிபன் என்னுடைய மகன் இவனுக்குத் தாங்கள் துஆச்செய்யவேணுமென்று சொன்னான். ஆனால் அந்த வாலிபன் அந்தக் கிழவனுக்கு மகனாயிருக்கவில்லை, என்கிலும் கெட்ட நடப்பின்பேரிலாயிருந்தார்கள். அதின் உள்ளமையானது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் தெரிந்திருந்தபடியால் அவர்களுக்குக் கடுங்கோபமுண்டாகி ஆனால் உங்களுடைய காரியம் என்னிடத்தில் இந்தமட்டிலு மாயிட்டுதாவென்று சொல்லிக்கொண்டு கடிய சினத்துடனே தங்கள் வீட்டிற் போய்ப் புகுந்தார்கள். அந்தவுடனே பகுதாத்ப் பட்டணத்தில் பலவிடத்திலும் நெருப்புப் பிடித்தெரியவாயிட்டுது. அதாவது ஒருவிடத்தில் நூர்த்தால் மறுவிடத்திற் பற்றிப்பிடிக்கிறது.

ருவியாகிய ஷெய்கு பக்கா றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள். ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கோபித்தவுடனே மேகத்துண்டுகளைப்போல் பலாய்கள் வந்திறங்க நான் கண்டு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் விரைவாய்ப் போய்புகுந்துபார்க்கும்போது அப்போதுமவர்கள் சினத்துடனேதானிருக்கிறார்கள், நான் அவர்கள்கிட்ட இருந்துகொண்டு என்நாயகமே கல்குகளுக்கு றஹ்மத்துச் செய்யுங்கள் மனிதர்களெல்லாம் நாசமாய்ப் போகிறார்களென்று அவர்களுடைய கோபந் தணியுமளவும் சொல்லிச்சொல்லிக் கெஞ்சினேன், அப்போது அந்த மேகத்துண்டுகளைப்போலிறங்கின பலாய்களெல்லாம் நீங்கிப் பிடித்தெரிந்த நெருப்புகளெல்லாம் நூர்ந்துவிட்டுதென்றார்கள்.

இன்னும் உமறுல் பஸ்ஸாஸவில்ச் சேர்ந்த இஸ்னாதுகொண்டு பேசிவரப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்லுகிறார்கள், நான் ஹிஜ்றத்து ஐநூற்றி ஐம்பதாம் வருஷம் ஜமாதில்ஆகிற் மாதம் பதி



னைந்தாந்தேதி வெள்ளிக்கிழமை யன்றையில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடனே ஜாமிஆப் பள்ளிவாசலுக்குப் போனேன். அங்கொருவரும் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு சலாம் சொல்லவில்லை, அப்போது இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது, தாங்களெல்லா வெள்ளிக்கிழமைகளிலும் பள்ளிவாசலுக்கு வந்தால் மனிதர்கள் வந்து ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடனே கைமுத்தி சலாம் சொல்வதால் நெருக்கமுண்டாகி மஷக்கத்துப்பட்டேபோமிய பள்ளிவாசலுக்குட் சேரக்கூடாதே யின்றையிலொருவரும் சலாம் சொல்லவில்லையேயென் றென்னுடைய இருதயத்தில் எண்ணினேன், இந்த வசாட்டமுண்டாகி முடிய முன்னேயே ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் புன்முறுவலுடையவர்களாயென்னளவில் திரும்பிப்பார்த்தார்கள். அந்தவுடனே மனிதர்களெல்லாம் கூட்டங்கூட்டமாய் வந்து ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்பேரில் சலாம் சொன்னார்கள். அப்படி ஜனங்கள் சலாம் சொல்வது மிகுதமானதால் எனக்கும், ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குமிடையில் மறைத்துக்கொண்டார்கள். அப்போது நான் முந்தியிருந்த ஹாலே இதைக்காட்டிலும் நன்றாயிருந்ததேயென்றெண்ணினேன். அவ்விதமெண்ணி முடிய முன்னே ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னைப்பார்த்து ஓ உமறே, நீர்தானே இதை நாடினவரும் உமக்குத்தெரியாதா, நிச்சயமாக மனிதர்களுடைய கல்புகளெல்லா மென்னுடைய கைவசமாயிருக்கும். நான் நாடினால் அவைகளை யென்னைவிட்டுத் திருப்பிவிட்டிடுவேன், நாடினால் அவைகளை யென்னளவில் திருப்பிக்கொள்வேனென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

## 17-வது ஹிக்காயத்து.

பதினேழாம் ஹிக்காயத்தாகிறது ஸரீபுதீனென்னும் பட்டணத்திலுள்ள ஷெய்கு அபுல்பக்கா முஹம்மதுபுனுல் அஸ்ஹரீயவர்கள் தமதொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். ஆலம் கைபிலுள்ள ஆலம்பின்லோகனின்னும்

ஒருவரை யெனக்குக் காண்பிக்கும்படியாக வெகுப்பிரயாசமும், பிறப்பு முடைய அல்லாஹுத்தஆலாவைப் பிரார்த்தனை பண்ணி, அவ்விடத்தில் சில காலம் அழுதிருந்து வந்தேன். அப்படியிருக்கையில் ஒரு இரவு என்னுடைய கனவில் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கபுறை ஸியாறத்துச்செய்யவும், அந்தக் கபுறிடத்தில் ஒருவர் நிற்கிறார், அவர்தான் உன்னுடைய மனிதராயிருக்கிறாரென் றென்னுடைய மனதில் நினைக்கவும் கண்டு முழித்தேன், அப்போது ஒருவேளை நாமனிதை முழிப்பிற் காணவும் போவேனென் றுதாவு வைத்துக்கொண்டேன். எல்லோரும் உறங்க இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கபுறை நாடிப்போனேன், அப்போது நான் கனவிற் கண்டபடியே அவ்விடத்தி லிருக்கக்கண்டு அவரை ஸியாறத்துச் செய்ய நாடி விரைவாய்ப் போனேன், நான் போய் அவரை முடிக்க முன்னே அவர் அதைவிட்டு மெழுந் தெனைவிடம் விரைவாய்ப் போகிறார். நானும் அவரைத் தொடர்ந்து திஜ்லாவென்கிற ஆறுமட்டுமாய் ஓடிப்போனேன். அப்போது அந்த ஆற்றின் கரை யிரண்டுமவருக்கு ஒரு எட்டுக்குள்ளாயிருக்கும்படி கிட்டவாகவே யவர் ஒரு எட்டில் மறுகரைக்குக் கடந்து போய்விட்டார். உடனே அவர் பேரிலாணையிட்டு என்னிடத்தில் பழக்கம் பேசுவதற்காக திரும்பும்படி செய்தேன். அதின்பின் அவர் நின்றார், அப்போது அவரைப்பார்த்து உம்முடைய மதுஹபெதென்னவென்று கேட்டேன், அதற்கவர் ஹனீபன் முஸ்லிமன்வமா அனமினல் முஷ்ரிக்கீன் என்று ஓதினார், அப்போது அவரை நான் ஹனபிமதுஹபுள்ளவரென்று நினைத்துக்கொண்டேன், அப்பால் அவர் போய்விட்டார். பிறகு நான் கண்ட சங்கதியை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் போய்ச்சொல்லவேணுமென் றென்னுடைய மனதி லெண்ணிக்கொண்டு அவர்களுடைய மதுறஸாவுக்குப் போனேன். அப்போது மதுறஸாவினுள் வாசல் பூட்டியிருப்பதால் அதின் பக்கத்தில் நின்றுக்கொண்டிருந்தேன். அப்படியிருக்கையில் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய வீட்டுக்குள்ளிருந்தே யென்னை ஓய் முஹம்மதேயென்று கூப்பிட்டு இந்நேரத்திலிந்தப் பூலோக மெழுவதை தொடுத்துப் பரிவாய்வரையிலும் ஹனபி மதுஹபில் அல்லாஹுத்தஆலாவுக்கு இவரைத்தவிர



வேறே வலி கிடையாதென்று சொன்னார்கள், இவ்விதஞ் சொன்னது தங்களுடைய வீட்டுக்குள்ளிருந்தே யல்லாது வாசலைத் திறக்கவேயில்லை, றலியல்லாஹு அன்ஹு.

## 18-வது ஹிக்காயத்து.

பதினெட்டாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபூ அப்தில்லாஹி முஹம்மதிப்னில் கிழுறில் ஹுஸைனியில் மவ்ஸிலி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் பேசிவரப்பட்டது, அவர்கள் சொல்லுகிறார்கள், எனக்கென்னுடைய தகப்பனார் கிழுறுல் மவ்ஸிலீ அவர்கள் சொன்னார்கள், நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பதின்மூன்று வருஷங் காலமாய் கிதுமத்துச்செய்தேன். அப்போது அவர்களிடத்தில் அனேகத் திஷ்டாந்தரங்களைத் தெரிசித்தேன். அவ்விதம் நான் கண்ட அற்புதங்களிலொன்று முள்ளதாயிருக்கும். அதென்னவெனில் யாதாவது ஒரு நோயாளிக்குக் கைகண்ட வைத்தியர்களால் மருந்துசெய்யலாமற்போய்விட்டதானால் அந்நோயாளியை ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்திற்குக் கொண்டுவரப்படும். அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்நோயாளியின் பேரில் துஆச்செய்து அந்நோயைத் தங்களுடைய திருப்பான கையால் துடைத்துவிடுவார்கள், அவ்விதந் துடைத்துவிட்டவுடனே அந்நோயாளிகள் சுவாத்தியமா யெழும்பிவிடுவார்கள்.

இன்னும் ஒருதடவை சுல்தான் அபுல்முலப்பர் யூசுபுல் முஸ்தன்ஜிது பில்லாஹி அவர்களுடைய அடுத்த இனக்களிலொருவர் மகோதரம் பிடித்து மெத்த வருத்தமாயிருக்கையில் அவரைச் சுமந்து ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அப்போது அவர்பேரில் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கையை நடத்தினார்கள். அந்தவுடனே அவருடைய வயிறு சுருங்கி யாதொரு பிணியுமில்லாமல் சுகமாயிட்டார். இன்னும் ஷெய்கு அபுல்மஆலீ அஹ்மதுப்னு முலப்பரிப்னி யூசுபல் பகுதாதிய்யில் ஹம்பலிய்யா அவர்கள் ஷெய்கு

முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தில் வந்து நாயகமே யென்னுடைய மகனுக்குப் பதினைந்து மாதக் காலமாக முறைக்காய்ச்சல் காய்ந்துகொண்டிருக்கிறது, அதனால் நான் மெத்தக் கஷ்டப்படுகிறேனென்று சொன்னார்கள். அதற்கு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நீர் போய் உம்முடைய மகனுக்குக் காய்ச்சல் வந்து விழுந்து கொதிக்கும்போது அவனுடைய காதில் காய்ச்சலே நீ யென்னுடைய பிள்ளையை விட்டுவிட்டு ஹில்லாவென்னுஞ் சிற்றூருக்குப் போய்விடென்று ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்களென்று சொல்லுமென்று சொன்னார்கள். அவர்கள் அப்படியே செய்கிறேனென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். அப்பால் நான் ஷெய்கு அபுல்மஆலியவர்களைக் கண்டு தங்களுடைய பிள்ளைக்கிருந்த காய்ச்சல் எப்படியாச்சுதென்று கேட்டேன். அதற்கவர்கள் நான் போய் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னபடி சொன்னேன். அதுமுதல் இதுவரையிலும் அப்படிக் காய்ச்சல் வரவேயில்லையென்று சொன்னார்கள். பின்னும் ஒருநாள் நகரத்திலொரு தடவை அவர்களைக் கண்டு கேட்டேன். அப்போது மதற்குப் பிறகு காய்ச்சல் வரவேயில்லையென்று சொல்லிவிட்டார்கள். பின்பு ஹில்லாவென்னும் ஊரில் குடியிருப்பவர்களெல்லாம் நோயாளிகளாயிருந்தார்கள், அவர்களுக்கு மிருகமும் காய்ச்சலடிக்கிறதென்று விசேடம் வந்திருக்கிறதென்று சொன்னார்கள்.

இன்னுமொருதடவை ஷெய்கு அபூஹப்ஸு உமறுப்னு ஸாலிஹில் ஹத்தாதீ யென்பவர்கள் தங்களுடைய ஒரு ஒட்டகத்தை யிழுத்துக்கொண்டு வந்து ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பக்கலில் நிறுத்திக்கொண்டு நாயகமே நான் ஹஜ்ஜு செய்ய நாடுகிறேன், இதுதானென்னுடைய ஒட்டகம் இது சரியாக நடக்கிறதில்லை, யிதைத்தவிர எனக்கு வேறே ஒரு வாகனமுங் கிடையாதென்று முறைப்பாடு செய்தார்கள். அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த ஒட்டகத்தைத் தங்களுடைய காலாலுதைத்து தங்களுடைய கையை அதின் நெற்றியில் வைத்தார்கள், அதின்பிறகந்த ஒட்டகமானது வாகனங்க ளடங்கலுக்கு முந்தி நடக்குந் தீவிரத்தையுள்ளதாக ஆகிவிட்டது. இன்னுமொருதரம் ஷெய்கு அபுல்ஹஸன் அலிய்யுப்னு அஹ்மதிப்னி ஹறயில்



ஹஜ்ஜீயவர்கள் கதைலானார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிரில் ஜீலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அவர்களைப் போய் நஷல் மினைவப்போயிருந்தார்கள். அப்போது அவர்களுடைய வீட்டில் புறாவில் ஆணும் பெண்ணுமாக ஒரு சோடியிருக்கக்கண்டார்கள். அப்போதவர்கள் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி யெனது நாயகமே இந்தப் புறா ஆறுமாதகாலமாக முட்டையிடவில்லை, இந்தப் புறாவினுடைய சேவல் ஒன்பது மாதமாகக் கூவவில்லையென்று சொன்னார்கள். அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்தப் பெண் புறாவுக்கருகே போயிருந்துகொண்டு அந்தப் பெண் புறாவைப்பார்த்து நீ உன்னுடைய எஜமானுக்குப் பலன் புரியென்றும், பிறகந்த ஆண் புறாவுக்கருகே போயிருந்துகொண்டு அந்த ஆண் புறாவை நோக்கி நீ உன்னைப்படைத்தவனைத் தஸ்பீஹு செய்யென்றும் சொன்னார்கள், அவ்விதஞ் சொன்ன அக்கணமே யந்தச் சேவலானது கூவத்தொடுத்து பகுதாதிலுள்ளவர்களெல்லாம் அது கூவுகிறதைப் பார்க்க வருகிறமட்டிலும் பிரகாசமாகக் கூவும், அதுபோலந்தப் பெண்புறாவும் அது சாவுமளவும் முட்டையிடுகிறதும், குஞ்சு பொரிக்கிறதும் இவ்விதமாகவே கணக்கில்லாமல் பெருகிவந்தது.

இன்னும் ஹிஜுறத்து ஐநூற்றி அறுபதாம் வருடத்தில் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களெனக்குச் சொன்னார்கள். ஓய் கிழவரே, நீர் மௌனமிலென்னும் உனக்குப் புறப்படும், உம்முடைய முதுகிற சில அவுலாதுகளிலிருக்கிறது அவைகளைக்கொண்டும் மேலாகப்படும். அந்த அவுலாதுகளில் முந்தின குழந்தைக்கும் பெயர் முஹம்மது, அதற்குப் பகுதாதிலுள்ள ஒரு குருட்டுமனிதர் அலியென்பவர் குர்ஆனை ஓதிக்கொடுப்பார், அது ஏழுமாதத்திற்குள் ஓதிக்கொள்ளும். இன்னும் அது ஏழு வயதுக்குள் குர்ஆன் முப்பது ஜுஸ்உவையும் பாடமிட்டுக்கொள்ளும், நீர் தொண்ணூற்றிநாலு வருஷமும், ஒரு மாதமும், ஏழுநாளும் ஹயாத்தாயிருப்பதுடன் கேள்விப்பலன் யாதொன்றுக்கும் ஒரு குறைத்தல் வராமல் வசித்திருந்து பாறபல்த் தேசத்தில் ஒருவிடத்தில் மௌத்தாவீரென்று கட்டாயமாகச் சொன்னார்களென்றார்கள்.

பின்பு அபூஅப்துல்லா சொல்லுகிறார்கள். ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்ன பிரகாரமாக என்னுடைய தகப்பனாரவர்கள் [illegible] போய்க் குடியிருந்த ஜிஹ்லானுக்கு அநு மானிப்போரம் [illegible] மாதம் முதல்தேதியில் காஸ் பிறந்தேன், பிறகு காலைக்கா வயதும், [illegible] மாதமும் சென்றபோது பெருநாளின் [illegible] தொழுகைக்குச் [illegible] செய்தார்கள். பின்பு அவ்வூருடைய ஜனங்களைக் கொண்டு [illegible] பாடமிட்டெழுதிய அப்போ தென்னுடைய தகப்பனாரவர்கள் அக்கக் காரியத்தில் அவருடைய பேரையும், [illegible] கேட்டபோது அந்தக் காரியானவர் என்னுடைய பெயர் அலீ, என்னுடைய ஊர் [illegible] சொன்னார்." அப்போது ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் முன்னமே சொல்லி யறிவித்திருந்ததை ஞாபகஞ் செய்துகொண்டார்கள். அப்பா லென்னுடைய தகப்பனாரகிய [illegible] தேசத்தில் ஜிஹ்லானுக்க [illegible] [illegible] சொல்லுகிறார்கள். இட்டமாக [illegible] சொன்னதற்கு நாலு வயதும், [illegible] மாதமும், [illegible] பரிபூரணமாயமிருந்தது, அவர்களப்படி [illegible] அவர்களுடைய பேரினையும், பேலனையும் அல்லாஹுத்தஆலா காப்பாற்றினான், ஆதலால் சகல கருமமும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னபடியே யாதொரு கூடுதல் குறைதலின்றியே முடிவாகக்கது.

## 19-வது ஹிக்காயத்து.

———(✻)———

பத்தொன்பதாவது ஹிக்காயத்து ஷெய்கு அபுல்ஆலி அலிப் யுபுனு [illegible] அபில்ஃகாஸிமில் அஜுறியவர்களும், அபுல்ஹஸன் அலிய்யுப்னு அப்தில்லாஹில் அபுறையவர்களும், அபூமுஹம்மது நூஹுத்தரியவர்களும். அப்பூஷ் [illegible] கூறுத்தி யவர்களும், அபுமுஹம்மது [illegible] அலிய்யுத்தம் யாக்கியவர்



களும், அவர்களுடைய கோர்வையான இஸ்னாதுகள் கொண்டு தெரிவிக்கப்பட்டதாயிருக்கும். இந்த ஐவர்களும் சொல்லுகிறார்கள். ஷெய்கு உப்பாது றஹிமஹுல்லாஹு அவர்களும், ஷெய்கு அபூபக்றுல் ஹம்மாதீ றஹிமஹுல்லாஹு அவர்களும் நல்ல மகா சிறப்பான ஹாலுகளையுடையவர்களா யிருந்தார்கள். அப்படியிருக்கையில் ஒரு போது ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு அபூபக்றுல் ஹம்மாதீ யவர்களை நோக்கி ஓய் அபூபக்றே தயதாக்கப்பட்ட ஷரீஅத்தாகிறது நீரதிற் செய்கிறதிறக்கேடுகளைப் பற்றி யென்னிடத்தில் முறைப்பாடு செய்கிறது. ஆகையால் நீர் இன்ன இன்ன கருமம் செய்கிறீராம், அவைகளெல்லாம் ஷரீஅத்துக்குச் சரியல்ல. இனி யவைகளையெல்லாம் விட்டுவிடுமென்று விலக்கி யவர்களா யிருந்தார்கள். அவ்விதம் விலக்கியும் ஷெய்கு அபூபக்றவர்கள் அதைவிட்டும் விலகிக்கொள்ளா திருந்தார்கள். இப்படியா யவர்கள் அதைவிட்டும் விலகிக்கொள்ளா திருந்தார்கள். இப்படியாயிருப்பதற் கிடையில் ஒருநாள் ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜாமி உர்றஸாபாவெனும் ஜும்ஆப் பள்ளிவாசலுக்குட்போய்ப் புகுந்தார்கள். அப்போது ஷெய்கு அபூபக்றுல் ஹம்மாமவர்களை யவ்விடத்திலிருக்கக்கண்டு தங்களுடைய கையால் அவர்களுடைய நெஞ்சில் தட்டி ஓய் அபூபக்றே களற்றிரை யவர்களுடைய நெஞ்சில் நடத்தாட்டு ஓய் அபூபக்றே களற்றி விட்டுப் பதுகாதிலிருக்காமற் புறப்படுமென்று சொன்னார்கள், உடனே ஷெய்கு அபூபக்றவர்கள் தன்னுடைய சிறப்பான ஹாலுகள், அமல்கள், தஜல்லியாத்துகள் இவைகளடங்கலையுமிழந்து இருக்கள் வில் போய்த் தரிபட்டார். அப்பால் பகுதாதனவில் வந்து புகுந்தாட்டுக்கோல்லை குப்புற அடித்துக் கீழே விழுகிறவராயிருந்தார். வேறே யாராவதவரைத் தூக்கிக்கொண்டு வந்து பகுதாதிற் சேர்க்கு நாடினாலும் அவர்க ளிரண்டுபேர்களும் மடித்து விழுகிறவர்களாயிருந்தார்கள்.

அவ்விதமாயிருக்கும்போதில் ஷெய்கு அபூபக்றுடைய தாயார் பெரிய மனுஷியாயிருந்தாள், அவள் ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் வந்து நாயகமே நானென்னுடைய மகனைக்காண்பதற்கெனக்குமிகவும் ஆசையாயிருக்கிறது ஆனால் அவரளவில் நடந்து செல்ல என்னால் முடியவுமாட்டாதென்று முறையிட்டவளாக அறிவித்தாள், அதற்கு ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சற்றுநேரம் தங்களுடைய

தலையைக் குனிந்திருந்துவிட்டு நிமிர்ந்தந்தப் பெண்பிள்ளையை நோக்கி திடனாக உன்னுடைய பூமிக்குள்ளாலேயே நடந்துவந்து வுன்னுடைய வீட்டின் கிணற்றுக்குள்ளே யிருந்து உன்னுடன் பேசிக்கொள்ளும்படிக்கு நாமவருக்குத்தரவு கொடுத்திருக்கிறோம், நீ போவென்று சொன்னார்கள். ருவிகள் சொல்லுகிறார்கள், ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் செய்த உத்தரவின்படியே அதுமுதல் கிழமைக் கொருதடவை, அதாவது வாரத்திற் கொருதரம் ஷெய்கு அபூபக்ரென்பவர்கள் பூமிக்குள்ளாலேயே நடந்துவந்து கிணற்றுக்குள்ளிருந்துக்கொண்டு அவர்கள் தாயாருடன் பேசிக்கொண்டு போகிறவராயிருந்தார். இதற்கிடையில் ஷெய்கு அதிய்யுபுநு முஸாபிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்குக் கலீபல்பாலென்பவர்களை, ஷெய்கு அபூபக்ருடைய செய்தியைக் குறித்து மன்னித்துக்கொள்ளவேணுமென்று சொல்லும்படியாக ஷெய்கு முஹ்யித்தீனாண்டவர்களுடைய சமுகத்திற் கனுப்பினார்கள். அவ்விதமாகவே ஷெய்குக் கலீபுல்பாலென்பவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்திற் சென்று தெரியப்படுத்தவே ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நல்லதப்படி செய்வோமென்று நல்வாக்கருளியிருந்தார்கள். இது இவ்விதமிருக்க.

ஷெய்கு முலப்பறவல் ஹம்மாதுக்கும், ஷெய்கு அபூபக்றுக்குமிடையில் சினேகிதத் தன்மையும், உவப்புமுண்டாயிருந்தது. அப்படியிருக்கையில் ஷெய்கு முலப்பறென்பவர்கள் தங்களுடைய முஷாஹிதாக்காட்சியில் சிறப்பான நாயனைத் தெரிசித்தார்கள். அப்போது வல்லமையான அல்லாஹுத்தஆலாவான நாயனவர்களை நோக்கி ஓய் முலப்பறே, நீர் நாடியதைக் கேளுமென் றுத்தரவு சொன்னான். அப்போதவர்கள் வல்லதாண்டவனே யென்னுடைய நட்பிறப்பாகிய ஷெய்கு அபூபக்ருடைய ஹாலை யவருக்குக் கொடுக்கும்படிக் குன்னுடைய பக்கலில் மன்றாடுகிறேனென்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹுத் தஆலா திருவுளமானான். ஓய் முலப்பறே அதாகிறது அவ்வாறிலும், அவறத்திலுமெனக்கு ஒலியாகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்திலாகவே



றும், அவர்களிடத்தில் நீர் போய்ச்சொல்லும், அதெப்படியானால் நான் என்னுடைய கல்குகளில் ஒரு பலாயை யிறக்கிவைக்க நாடினால் நீரதை வேண்டாமென்று விலக்கி ஷபாஅத்துச் செய்தீராகில் நானுமக்கு மன்றுட்டம் கொடுப்பேனென்று, வாக்குச் சொல்லியிருக்கிற அடையாளத்தைக்கொண்டும், இனி முஃமீன்களில்நின்றும் உம்மைக் கண்டவர்களடங்கலையும் என்னுடைய வரிசையால் அடையுவலைய என்னுடைய கொடையாலிரங்கவும் நீர் நம்மிடத்திற் கேட்டால் அதையுமந்தப்படி செய்வேனென்று சொல்லியிருக்கிற அடையாளத்தைக்கொண்டும், உங்களுடைய நாயன் சொன்னான். திடனாக நான் அபூபக்ரு ஹம்மாமியைப் பற்றிப் பொருந்திக்கொண்டேன், தாங்களும் பொருந்திக்கொள்ளவேண்டியதென்று சொன்னானென்று ஆண்டவன் சொல்லி முடிவாக முன்னே றசூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தோற்றமாகி ஓய் முலப்பறே, யென்னுடைய கலீபாவும், பூலோகத்தில் என்னை அனந்தரங்கொண்டவருமாகிய முஹ்யித்தீன அப்துல்காதிறுக்குப் போய்ச்சொல்லும், உங்களுக்கு வுங்களுடைய ஜத்தாகிய றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் சொன்னார்கள், நீர் அபூபக்ரிடத்தி லெடுத்தவைகளை அதாவது ஹாலஹ்வாலைக் கொடுத்துவிடும். திடனாக அந்த அபூபக்றைத் தாங்கள் பொருத்தக்கெட்டதெல்லாம் என்னுடைய ஷற்ஹுக்காகத்தான், ஆனலிப்போது நானதை மன்னித்துக்கொண்டேன், ஆகையால் தாங்களும் மன்னித்துக்கொள்ளவேணுமென்று சொன்னார்களென்று சொல்லுமென்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள். இவ்விதமாக இரண்டு திருவுளத்தையும் பெற்றுக்கொண்டதின் பிறகு ஷெய்கு முலப்பறவர்கள் தங்களுடைய ஹாலுகளைவிட்டு நீங்கித் தெளிந்து சந்தோஷமடைந்துக்கொண்டு ஷெய்கு அபூபக்றவர்களை நாடிப் புறப்பட்டுப் போய்க் கொண்டு ஷெய்கு அபூபக்றவர்களை நாடிப் புறப்பட்டுப் போனார்கள்.

அப்போது ஷெய்கு அபூபக்ரில் ஹம்மாமியவர்களுக்கும் விலாயத்துப் பறிபட்டிருந்ததை ஷெய்கு முலப்பறவர்கள் முஷாஹிதாக் காட்சிபெற்ற அன்றிரவில் மேற்படி விலாயத்தென்ற கஷ்பு கொடுக்கப்பட்டு ஷெய்கு முலப்பறிடம் நடந்தவைகளடங்கலையும் ஷெய்கு அபூபக்றுக்குத் தெரியப்படுத்தப்பட்டது, ஆகை

119875

யால் ஷெய்கு அபூபக்றவர்கள் கஷ்புடைய புறத்தாலறிந்துகொண்டபடியால் அவர்கள் இறங்கிலிருந்து அந்தவுடனேயே புறப்பட்டு வருகிறார்கள். ஆனையாலிங்கிருந்து போகிறவர்களும், அங்கிருந்து வருகிறவர்களுமாகிய ஷெய்கு முலப்பறவர்களும், ஷெய்கு அபூபக்றவர்களும் இடைவழியில் ஒருவர்க்கொருவர் கண்டு முலாக்காத்துச் செய்துகொண்டு ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களை நாடி நடந்துபோய்க் கண்டார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு முலப்பறவர்களைப்பார்த்து நீர் நமக்குத் தூதாக வந்த சங்கதிகளை அறிவித்துப் போடுமென்று துவக்கமாகவே சொல்லிவிட்டார்கள். அதற்கு ஷெய்கு முலப்பறவர்கள் அன்றிரவில் நடந்த ஹாலுகளில் ஒன்றைச்சொன்னார்கள், ஒன்றை மறந்துவிட்டார்கள். அவ்விதம் மறந்துவிட்டதை ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாங்களே சொல்லி ஞாபகப்படுத்திக் காட்டிவிட்டு ஷெய்கு அபூபக்றைப்பார்த்து ஓய் அபூபக்றே, யினிமேல் நீர் ஷரீஅத்தில் ஒரு கடுகளவாகிலும் பொடுபோக்குச் செய்யாமலிருக்கவேணுமென்று அந்தப்படிக்குத் தௌபாச் செய்யும்படி செய்துகொண்டு தங்களுடைய மார்ப்பளவில் ஷெய்கு அபூபக்றைக் கட்டியணைந்தார்கள், அப்போதுடனே ஷெய்கு அபூபக்றவர்களுக்கு முன்னிருந்த ஹாலுகளுமுண்டாகி அதிகமாகவுங் கிடைத்துவிட்டது.

இன்னு மந்த ருஷிகள் சொன்னார்கள், ஷெய்கு முலப்பறென்பவர்கள் தங்களுடைய கஷ்பில் கண்டது, கேட்டதடங்கலையுஞ் சொல்லிக்காட்டினார்கள். பின்பு நாங்களெல்லோர்களும் ஷெய்கு அபூபக்ரில் ஹம்மாதியவர்களிடத்தில் நீர் பூமிக்குள்ளாலே நடந்து கிணற்றுக் கென்னவிதமாக வந்தீரென்று கேட்டோம். அதற்கவர் நாமென்னுடைய தாயாரை ஸியாறத்துச் செய்ய நாடினால் உடனே ஒருவர் வந்து என்னைச் சுமந்துகொண்டு பூமிக்குள்ளாலே நடந்து கிணற்றளவிற் கொண்டுவந்துவிடுவார். அப்போது நான் தாயாரைக்கண்டு பேசிக்கொள்வேன். பிறகு என்னைக்கொண்டு வந்ததுபோல் கொண்டுபோய் முன்னிருந்தவிடத்திலென்னை விட்டுவிடுவாரென்று சொன்னார். இன்னும் அந்த ருஷிகள் சொல்லுகிறார்கள், ஷெய்கு உப்பாது சொன்னார், நானுகிறது ஷெய்கு



முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மௌத்தானதின் பிறகு அவர்களுடைய அஹ்வால்களை யனந்தரங் கொண்டவனாக ஹயாத்துப் பெற்றிருப்பேனென்றார்கள். இந்தச் செய்தியை ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களறிந்து மேற்படி உப்பாதவர்களுடைய கையைப் பிடித்துக்கொண்டு யா உப்பாதே திடனாக உனக்கும், உன்னுடைய நடப்புக்குமிடையில் எறிந்துவிடுகிறேன். யமீனி பத்ஆச் செய்கிறேன், என்னுடைய வெறுப்பென்னுங் குதிரைகளை, உன்னுடைய தெளிவென்னும் வெளிக்குள்ளே புகுந்து மேயும்படி செய்கிறேன் என்று கோபமாய்ச்சொல்லியவர் கையைவிட்டுத் தங்களுடைய கையை யிழுத்தெடுத்தார்கள். திடனாக அவருடைய ஹாலுகளடங்கலையுமுரிந்தெடுத்துக்கொண்டார்கள், அந்நேரத்தி லவருடைய அமலுகளை யெல்லா மிழந்துவிட்டு இவ்விதமான தானத்தில் ஷெய்கு உப்பா தென்பவர் சிலகாலந் தரிபட்டிருக்கிறார்கள்.

இனி ஷெய்கு ஜமீலுல்பதவீ றஹிமஹுல்லாஹு அவர்கள் கல்வத்திலிருக்கும்போது அவர்கள்பே ஒரு இரவில் தங்களுடைய அவருடைய வடலைவிட்டும் ஆஹாரில் ஒருஹால் வந்து மிகைத்து அப்போது ஷெய்கு ஜமீலிலே பிரணது கழன்று வேறாகிவிட்டது, அப்போது ஷெய்கு ஜமீலிலே பிரகாசங் கூடியதிருதவான ஒரு வொளிவு வெளியாகி அவரந்த வொளிவிற் பார்கிறவராயும், கேட்கிறவராயும், எற்றிக்கொள்பவராயுமிருந்தார்; அப்போது அவருடைய தாஹை ஆலம் மலக்கூத்தில் ஒரு சமுகத்தளவி லுயர்த்தப்பட்டு அவ்விடத்திலொரு மஜ்லிஸித் கொண்டுபோய் விடப்பட்டது. அதில் மஷாயிகுமார்களில் ஒரு கூட்டமிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் தங்களுக் கறிந்தவர்களும், அறியாதவர்களுமிருக்கிறார்கள், அப்படியிருக்கையி லவர்கள்பேரி லொரு வாடை வீசி யவர்களை மயக்கத்திலாக்கிவிட்டது. அப்போதவர்களெல்லோர்களும் இந்த வாடையாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களின் மக்காமுடைய மணத்திலுள்ளதென்று சொல்லிக்கொண்டார்கள். இன்னும் ஷெய்கு ஜமீலுல்பதவீயவர்களுடைய காதில் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மக்காமின் வாடையாகிறது மெத்த மேலாம்பரமானதா யிருக்கும். அதைத் திரைபோடப்பட்டவர்களுடைய வருணிப்பு

களைக்கொண்டும், மறைவானவனுடைய அறிவைக்கொண்டும், மட்
டுப்படுத்தக்கூடாத வருணிப்புகளைக்கொண்டும் எற்றக்கூடாதென்
றொரு சப்தங்கேட்டது, அப்போது ஷெய்கு ஜமீலென்பவர்கள்
தன்னுடைய பாத்தினில்நின்றும் ஒரு மொழியவன் என்னுடைய
நாயனே யெனதுடப்பிறப்பாகிய வுப்பாதைக் கேட்டேனென்று
மொழியும்படி. கேட்டேன்; அதற்கந்த வுப்பாதனுடைய ஹாலை
யுரிந்தெடுத்தவரேயல்லாது வேறொருவராலுங் கொடுக்கக்கூடா
தென்று ஒரு சப்தங் கேட்டது, அப்பால் ஷெய்கு ஜமீலுல்பதா
றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஐதுவைவிட்டுந் தெளிவுபெற்
று மனிதப்பண்பி லாகிவிட்டதின்பிறகு ஷெய்கு முஹ்யித்தீன்
அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை நாடிப் புறப்
பட்டுப்போய்ச் சேர்ந்தவுடனே. ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்
காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு ஜமீலுல்பதவி
றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி ஓய், ஜமீலே உப்பா
துடைய கருமத்தைப்பற்றிக் கேட்டீராக்குமென்று சொன்னார்
கள், அதற்கவர் ஓம் நாயகமேயென்றார்கள். அப்போதந்த உப்பா
தை யென்னிடத்தில் கூட்டிக்கொண்டுவாருமென்று சொன்னார்
கள். உடனே ஷெய்கு ஜமீலென்பவர்கள்போய்ஷெய்கு வுப்பா
தைக் கூட்டிக்கொண்டு வந்து ஷெய்கு அப்துல்காதிறு றலியல்
லாஹு அன்ஹு அவர்களுடைய சன்னிதானத்தில்நிறுத்தினார்கள்,
அப்போது ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு
அவர்கள் ஷெய்கு வுப்பாதைப் பார்த்து ஓய் உப்பாதே நீர் ஹாங்
ஜுக்குப் போகிறபேர்களுடனே யவர்களுக்குக் காவலாக நடவு
மென் றருளிச்செய்தார்கள், உடனே நல்லதென் றொப்புக்கொண்
டு அப்போது இருக்குந் தேசத்துக் காபிலாக்கள் பகுதாதிலிரு
ந்து புறப்படுகிற நேரமாயிருந்தது. ஆகையால் ஷெய்கு வுப்பா
தவர்களும் அந்தக் காபிலாக்களுடன் நடந்துபோய் பகுதாதுக்
கும், கூபாவுக்குமிடையில் ஹாஜிமார்கள் நடந்துபோகவேண்டிய
வொரு வூருக்குப்போய்ச் சேர்ந்ததின்பிறகு அந்த வூரில் ஒரு
மரத்தைக்கண்டு அதனுவருக்கு ஹக்கின்பேரி லாசையுண்டா
கிச் சப்தம் வைத்துக்கொண்டு அவனுடைய ஆசையிற் றன்னு
டைய வுள்ளமையைவிட்டு மறந்திடுகிறமட்டிலு மாசைகொண்டா
டினார், அவ்விதமான ஆசையா லவருடைய வுரோமங்களெல்லாந்
நிறுத்துத் திறந்தவைகளா யிருந்தபோது வடிந்து அவருடைய கா



ளின்கீ ழொலிக்கும்படியாய்விட்டது, அப்பாலதைவிட்டுத் தெளிவு
பெற்றார், திடனை அவருடைய ஹால்களடங்கலையுங் கொடுக்கப்
பட்டு அதிலுமே லதிகத்தையுங் கொடுக்கப்பட்டதாயிருக்கிறது,
அந்நேரத்தில் பகுதாதிலிருந்துகொண்டு ஷெய்கு முஹ்யித்தீன்
அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு ஜமீ
லவர்களை நோக்கி யிப்போதுதான் அல்லாஹுத்தஆலா ஷெய்கு
வுப்பாதுக்குடையதென்று மிடத்தி லவருடைய ஹால்களையுங் கொ
டுத்து அதுபோலின்னு மொருபங் கதிகமுங் கொடுத்தான், நான்
அல்லாஹுத் தஆலாவின்பேரி லாணையிட்டு ஷெய்கு வுப்பாதென்
பவர் ஹஹ்றென்னும் வெளுப்புடைய இரத்தத்தில் மூழ்குமளவும்
அவருடைய ஹால்களைக் கொடுக்கப்படாதென்று சொல்லியிருந்
தேன், அதுபோலின்றையி லந்த இரத்தத்தில் உப்பாது மூழ்கிவிட்
டாரென்று திருவுளமானார்கள்.

இன்னும் ருவிகள் சொல்லுகிறார்கள், அதின்பிறகு ஷெய்கு
வுப்பாதவர்கள் ஹாஜிமார்களுடன் வழிநடந்து போகிறபோது
வழியில் வெட்டிப்பறிக்கிற கள்ளர்கள் வந்து வழிமறித்தார்கள்.
அப்போது ஷெய்கு வுப்பாதவர்களுக்கு இந்த விசேடங்களுக்கு
முன்னொரு வழக்கமுண்டு, அதென்னவெனில் அவரெதாவதொரு
கருமத்தை நாடினாராகில் ஒருசப்தமொன்றுபோடுவார். உடனே
யவர் நாடிய கருமம் நிறைவேறிவிடும். ஆகையா லன்றையிலும்
வழிமறித்த கள்ளர்க ளோடிப்போகட்டுமென்று நாடிப் பெரிய
சப்தமொன்று வைத்தார், அந்தச் சப்தமான தவராலேயே
மீண்டு அவ்விடத்திலே ஷெய்கு வுப்பாதவர்கள் மௌத்தாகிவிட்
டார், அவர் பைதெனுந் தலத்திலேயே மௌத்தாகி யவ்விடத்தில்
அடங்கப்பட்டிருக்கிறார், இது ஹாஜிமார்களுக்கிடையில் பிரபல்
லியமாயிருக்கும், அப்பாலிவ்விரண்டு சங்கதிக்கும் பிறகு ஷெய்கு
முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திரு
வாயால் என்னுடைய ஹாலிலேயிரண்டுபேர்களென்னுடனேபிணை
ங்கி வழக்காடினார்கள், அவர்களுடைய கழுத்துகளை அல்லாஹுத்
தஆலாவுடைய சமுகத்தில் வைத்தே வீசப்பட்டுப்போச்சுதென்று
சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹுமா.

## 20-வது ஹிக்காயத்து.

—(*)—

இருபதாம் ஹிக்காயத்தாவது ஷெய்குக் குத்புத்து அப்பஸ் ஸல்வாதி அஹ்மதுல்புனா அபீபக்ரில் ஹரீரீ யவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதா யிருக்கும். இதில் மூந்தி ஒரு ஹிக்காயத்தி னுள்ளதையும் சிலதைப் பேசப்படும். அவர்கள் சொல்லுகிறார்கள் நான் ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவாயாற் சொல்லக்கேட்டிருந்தேன், அதாவது தன்னுடைனில் நான் இறக்கிராக்கியத்து வெட்டவெளிகளில் நாடிய விடங்களிலெல்லாம் தனித்து வணக்கஞ் செய்தவனாக இருபத்தைந்து வருடந் திரிபட்டேன், அப்போது நான் கல்குகளை யறியவுமாட்டேன், அவர்களென்னை அறியவுமாட்டார்கள். ஆனால் கைபுடைய மனிதர்களில்நின்றும், ஜின்களில்நின்று மனேகங் கூட்டங்களென்னிடத்தில் வருவார்கள், அவர்களுக்கு அல்லா அளவிற சேர்க்கும் பாதைகளை நான் படித்துக்கொடுப்பேன். இன்னும் நான் இறக்கில் புகுந்த துவக்கத்திலெனக்கு கிலுறு அலைஹிஸ்ஸலா மவர்கள் தோழமையாயிருந்தார்கள், அதற்குப் பின்னாலே நானவர்களை அவர்கள் தோழமையாயிருந்ததை யறிந்தவனா யிருக்கவில்லை, யாதொரு கருமத்திலும் நானவர்களுக்கு விகற்பஞ்செய்கிறதில்லையென்று ஷர்த்திட்டுக்கொண்டேயொழிய. அவ்விதம் ஷர்த்திட் டிவ்விடத்திலிருமென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள், நானவர்களென்னை யிருக்கும்படி சொல்லிவிட்டுப் போனவிடத்தில் மூன்று வருடமிருந்தேன். ஆனால் ஒவ்வொரு வருடத்திற் கொருதடவை வந்து நான் போய் வருமளவு மிந்தவிடத்திலிருமென்று சொல்வார்கள். நானவ்விதமிருக்கும்போது துன்யாவும், அதின் அலங்காரங்களும், அதின் வாழ்வுகளும் பற்பல விதமான வேஷங்களாக என்னிடத்தில் வரும் நானவைகளைவிற் திரும்பிப்பாராமல் அல்லாஹுத் தஆலா வென்னைக் காப்பாற்றிக் கொள்வான். இன்னும் ஷெய்த்தான்களும் என்னிருதயத்தைக் கலக்கி மருட்டும்படியான பயங்கரமுடனே அரிவைகளைப்போல் வந்து என்னுடைய முன்புக்கு நிற்பார்கள். அவைகளைக் கண்டு மருண்டுபோகாமல் அல்லாஹுத் தஆலா எனதிருதயத்தைப் பெலப்படுத்தி யவைகளைச் செயித்துக்கொள்ளும்படி கிருபை செய்



வான், இன்னும் சில நேரங்களில் என்னுடைய நப்ஸை வேறொரு ஸூறத்தில் வெளியாகி யென்னளவில் வந்து அது நாடியதைச் செய்யும்படிக் கென்னிடத்திற் சாளயப்பட்டுக்கெஞ்சும், இன்னும் சிலநேரங்களி லென்னுடனே சண்டைக் கெதிர்த்து மிஞ்சும், அப்போதும் அல்லாஹுத் தஆலா அதின்பேரில் கேடாக எனக்கே யுதவிசெய்வான். நான் துவக்கத்து ஹாலில் முஜாஹதாவென்னுந் தெண்டிப்புடைய வழிகளில்நின்றும் ஒரு வழியை யெடுக்கவில்லை, அதைப்பற்றிப் பிடித்தென்னுடைய நப்ஸோடு சேர்த்து என்னுடைய இரண்டு கையாலும் பிடித்தேயொழிய, இன்னும் நான் ஒருவருஷம் முஸ்லிமானவர்கள் தின்றுவிட்டெறியும் எச்சில்களைத் தின்பேன், ஒருவருஷம் தின்னவுமாட்டேன், குடிக்கவுமாட்டேன், நித்திரை செய்யவுமாட்டேன்.

இன்னுமொருதரம் கிஸ்றா இராஜனுடைய கோட்டைக்குள்ளே குளிர் கடிசான இரவிற் படுத்துறங்கினேன், அப்போது இஹ்திலாமானேன், உடனேயெழும்பித் தண்ணீர்க்கரையளவிற் போய் முழுகிக்கொண்டு வந்து உறங்கி யிஹ்திலாமாகி முழுகிக்கொண்டேன், இந்தவிதமாக அந்த இரவில் நாற்பதுதடவை நித்திரை செய்து, நாற்பது தடவை யிஹ்திலாமாகி, நாற்பது தடவை யந்த ஆற்றிலேயே முழுகிக்கொண்டு அப்பாலின்னும் நித்திரை வருமென்று பயந்து மேற்படி கோட்டையி னுச்சத்திலேறி யிருந்தேன். இதுவின்றிக் கறுகெனு மிடத்திலிருக்கிற பாழ் பூமியில் ஒன்பது வருஷக்காலமாகத் திரிபட்டேன். அதில் புறுதாவென்னும் பூண்டையேயல்லாது வேறொன்றையும் நான் தின்னவில்லை, அந்த ஒன்பது வருஷங்களில் ஒவ்வொரு வருஷங்களின் தலைப்பில், ஒரு மனிதர் கம்பளிச்சட்டையைப் போட்டுக்கொண்டு வருவார். இன்னும் நானுங்களுடைய துன்யாவைவிட்டும் ரூஹத்துப் பெறுவதற்காக அடுப்பின் கரையிடம்போய்ப் புகுந்துக்கொள்வேன். இன்னும் என்னை பைத்தியத்தனத்தைக்கொண்டும், மடத்தனத்தைக்கொண்டும், ஜுனூனியத்தைக் கொண்டுமேயொழிய அறியப்படாமலிருப்பேன். இன்னுமென்னுடைய திரேக மஞ்சும்படியான வழிகளிலொன்றையாவது நானதில் நடந்தேயொழிய விடவில்லை. இன்னுமென்னுடைய நப்ஸானது தான் நாடிய கருமத்தைக்கொண்டு ஒருபோதினு மென்னை மிகைத்துக்கொள்ள

வில்லை, இன்னும் அன்யாருடைய அலங்காரங்களில் நின்றுமொரு வஸ்த்ரமென்னை யாச்சரியப்படுத்தவில்லையென்று சொன்னார்கள், ரூமீ சொல்லுகிறார். நான் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து நாயகமே தாங்கள் சிறு பிராயமாயிருக்கிற போதாவது உங்களை யொருவஸ்தும் புதுமையாக்கி வைக்கவில்லையாவென்று கேட்டேன். அதற்கவர்கள் நான் சிறு பிராயமாயிருக்கும்போதும் அன்யாரி லொரு வஸ்தாவ தென்னைப் புதுமையாக்கி வைக்கவில்லையென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

## 21-வது ஹிக்காயத்து.

——(*)——

இருபத்தோராம் ஹிக்காயத்தாவது ஆரிபான ஷெய்கு அபூ அம்ரிஸ்ஸரீபினி றஹ்மஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசி வந்ததாயிருக்கும், அவர்கள் சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன், அவர்கள் சொன்னார்கள், இரவானாலும், பகலானாலும் சுருபான இடங்களிலிருக்கிறவனாக நானிருக்கவுமில்லை, பகுதாதில் வந்தொதுங்கினவனா யிருக்கவுமில்லை. ஷெய்த்தான் கூட்டங்கள் அணியணியாய்க் கால் நடைக்காரர்களாயும், ஏறுவாகனக்காரர்களாயும் பற்பல விதங்களைக்கொண்டும் அமளியான வேஷங்களைக்கொண்டும் எனக்கெதிராக வந்து நெருப்புப் பந்தங்களைக்கொண் டென்னளவி லெறிந்து பயங்காட்டுகிறவர்களாக ஆகியேயொழிய. ஆனாலந்நேர மென்னுடையக் கல்பிற் பேதகமாக்கப்படாத தரிபடுத்துதலைக் காண்பேன், இன்னும் ஓய் அப்துல்காதிறே அவர்களளவி லொழும்பி நில்லும், திடனாக நாமும்மைத் தரிபடுத்துவதாகத் தரிபடுத்தி நமது உதவிகொண்டும்மைப் பலிப்பாக்கிவைத்தோமென்று என்னுடைய பாத்தினிலிருந்து என்னை முன்னுக்கு வைத்துச் சொல்லுகிறவன் சொல்லக்கேட்பேன். அப்போது நானெழும்பவே ஷெய்த்தான்களெல்லாம் இடதாலும், வலதாலும் வெருண்டோடி வந்த வழியாலே போய்விடுவார்கள். இன்னும் சிலநேரங்களி லவர்களில்நின்றும்



ஒற்றை ஷெய்தான் மல்ஊன் மட்டுந் தனிய என்னிடத்தில் வந்து ஓய் அப்துல்காதிறே நீரிவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விடும், அப்படி யில்லாதவரையில் நானிப்படிச் செய்வேன், அப்படிச் செய்வேன் பாரும். பாருமென்று அதட்டிப் பயமுறுத்துவான், அப்போது நானவனுடைய கன்னத்திலொட்டி யறைவேனவன் போய்விடுவான். பின்பு நான் லாஹவ்ல வலாகுவ்வத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அலீம் என்று சொல்வேன். அந்த வுடனே நான் பார்த்திருக்க ஷெய்தானுகிறவன் கரிந்துபோய் விடுவான்.

இன்னுமொருவன் பார்க்கப் பொருத்தக்கேடாகிய கெட்ட வாடையையுடையவன் வந்து நானுகிறவன் இபுலீஸு நானுமக்கு கிதுமத்துச் செய்யவந்தேன். திடனாக நீரென்னையும், என்னைத் தொடர்ந்தவர்களையும் மட்டாங்கியாக்கிப்போட்டீரென்று சொன்னான். அப்போது நீ யெனக்கு கிதுமத்துச் செய்ததுபோதும் நீ போய்விடென்று சொன்னேன், அதற்கவன் போகாமலிருந்தான், அப்போதவனுக்கு மேலேகூடி யொரு கை வந்து வெளிப்பட்டு அவனுடைய உச்சந்தலையிலொரு அடியடித்தது. உடனே யவன் பூமிக்குள் தாழ்ந்துபோனான். அப்பால் இரண்டாவதொருதரம் ஒரு நெருப்புப் பந்தத்தைக் கையிலெடுத்துக்கொண் டெனக்குமுன்னால் வந்து நின்றான். அப்போதொரு மனிதர் சிகப்புக் கலந்த வெள்ளைநிறக் குதிரையின்பேரி லேறினவராயும், முகத்தில் வீறு அணிந்தவராயும் வந்து என்றுகையி லொருவாளாயுதத்தைக் கொடுத்தார், அதைக் கண்டவுடனே யிபுலீசு பயந்தோடிவிட்டான். பின்பு மூன்றாவதொரு தடவை நானவனைத் தூரத்திலிருந்து அழுதவனாகவும், அவன் தலையில் மண்ணைவாரிப் போட்டவனாகவும், ஓய் அப்துல்காதிறே, திடனாக நானும்மை விட்டும் நத்துதல் கெட்டுப்போனேனென்று சொன்னவனாகவுங் கண்டேன், அப்போது நானவனைப் பார்த்து சீ மல்ஊனே தூரப்போ. உன்னால் நான் மெத்தப் பயந்தவனாக இருந்தேனென்று சொன்னேன். அதற்கவன் இந்தக் கருமந்தான் என்பேரில் மெத்தக் கடிசானதென்று சொல்லிப் பின்பு அனேகவிதமான வலைகளையும், கண்ணிகளையும், விசைகளையும், பற்பலவிதமான சருவ தந்திரங்களையும் வெளியாக்கினான். அப்போதவனை நோக்கி யிவைக

ளென்னவென்று கேட்டேன், அதற்கவன் இவைகள் துன்யாவி
னுடைய வலைகள், இவைகளைக்கொண்டு தான் உம்மைப்போற்
கொற்றவர்களை நாங்கள் வேட்டையாடுகிறதென்று சொன்னான்.
நானதுமுதல் அந்த வலைகளின் கருமத்தில் ஒரு வருஷக்காலமாக
அவைகளடங்குது மற்றுப் போகிறவரையிலும் தெண்டித்து முன்
னேக்கினேன், பின்பு பிரபல்லியத்தாலும், என்னுடனே சேர்ந்தி
ருக்கின்ற அனேகவிதமான காரணங்களைத்தொட்டும் வெளியாக்கி
னேன், அவைகளெல்லா மென்னைவிட்டுப் பற்றற்றுப்போய் அவை
களைவிட்டும் நான் தனித்துக்கொள்ளுமளவும் இன்னுமொருவரு
ஷம் முன்னேக்கியின்று தெண்டித்தேன். அதின்பிறகு என்னு
டைய பாத்திரத்தைத்தொட்டு மெனக்கு வெளியாக்கப்பட்டது, அப்
போதென்னுடையக் கல்பை மிருதமான கொள்ளுவதலைக்கொண்டு
கொளுவப்பட்டதாயிருக்கக்கண்டு இவைகளென்னவென்று கேட்
டேன், அதற்கு இதுதான் உன்னுடைய நாட்டமும், உன்னுடைய
தெரிதலுமாயிருக்குமென்று சொல்லப்பட்டது. உடனே நான்
அவைகளுடைய கருமத்திற் றுணிந்து அவைகளடங்குமற்று
அவைகளைவிட்டு மென்னுடையக் கல்பு களைவாகிறமட்டிலுந் தெ
ண்டித்தேன். அப்பாலென்னுடைய நபுஸைத்தொட்டும் வெளி
யாக்கப்பட்டது, அப்போதந்த நபுஸின் பிணிகளெல்லாந் தரிபட்
டதாயும், அதின் ஹவா வபிரானதாயும், அதினுடைய ஷெய்த்தான்
அடங்காத்தனமான ஷரியாட்டக்காரனாயு மிருக்கக்கண்டு அதின்
கருமத்தில் இன்னுமொருவருஷந் துணிந்துநின்று அந்த நபு
ஸென்ற நோய்களெல்லாம் நீங்கிச் சுகமாகி அதின் ஹவாவுமிறந்து
அதின் ஷெய்த்தானும் இஸ்லாமாகிக் கருமமடங்கலும் அல்லா
வொருவனுக்கே ஆகி நான்மட்டுந் தனித்து வுஜூதுடங்கலும் என
க்குப் புறமாலே போய் இதற்குப்பிறகு இப்போது சொல்லப்பட்
டவைகளொன்றும் நான் தேடப்பட்டதனவில் வந்து சேரவில்லை
யென்கிற மட்டிலு முன்னேக்கினேன். இவைகளெல்லாவற்
றிற்குப் பிறகும் என்னுடைய மத்லூபனளிற் சேரவில்லை. அப்
போது இறையத்துல் இலாஹிய்யாவென்னும் வாய்ப்பு வந்து என்
னைத் தவக்குலுடைய வாசலைவி லிழுத்துக்கொண்டு போய் நா
னவ்வாசலா லென்னுடைய மத்லூபனளில் புகுதுகிறதற்காக விட்டு
விட்டது. அவ்வாசலிடத்தில் முத்தவக்கிலீன்கள் நெருங்கியிருப்
பதைக்கண்டு அந்த மக்காமையுங் கடந்தேன். பின்பு பாபுல்கிரு



வெனும் யாவையும் விட்டுத் தேவையற்றிருக்கிற வாசலுக்கு அவ்
வாசலா லென்னுடைய மத்லூபனிற் புகுதுவதற்காக வேண்டி
யிழுத்துக்கொண்டு போகப்பட்டது, அவ்விடத்திலும் நெருக்க
மிருப்பதைக்கண்டு அதையுங் கடந்தேன். பின்பு என்னை பாபுல்
குறுபியெனும் முடுருதலுடைய வாசலளவில் அவ்வாசலா லென்
னுடை மத்லூபனளில் புகுதுவதற்காக இழுத்துக்கொண்டுபோய்
விடப்பட்டது, அவ்விடத்திலும் நெருக்கமாகவே யிருக்கிறது,
ஆகையால் அதையுங் கடந்தேன்.

பின்பு பாபுஷ்ஷுக்ரியென்னும் ஷுக்றுடைய வாசலா லுட்
படுவதற்காக அவ்வாசலுக் கென்னை யிழுத்துக்கொண்டு போகப்
பட்டது, அவ்விடத்திலும் நெருக்க மிருக்கிறதைக் கண்டு அதை
யும் விட்டுக் கடந்துபோனேன். அப்பால் பாபுல் முஷாஹதா
வென்னும் முஷாஹதாவுடைய வாசலா லுட்புகுந் தென்னுடைய
மத்லூபிடத்திற் போவதற்காக வேண்டி யவ்வாசலளவி லென்னை
யிழுத்துக்கொண்டு போகப்பட்டது. அவ்விடத்திலும் நெருக்க
மிருப்பதா லதையுங் கடந்தேன். அதின்பிறகு பாபுல் பக்ரிய்
யும் ஹக்கீகத்தனவில் மீள்வதென்ற பக்றுடைய வாசலுட் புகுந்
தென்னுடைய மத்லூபிடத்திற் போவதற்சாக அவ்வாசலளவி
லென்னை யிழுத்துக்கொண்டு போய்விடப்பட்டது. ஆறு லந்த
வொரு வாசல்மட்டும் ஒழிந்த வாசலாயும், யாதொரு நெருக்கமில்
லாததாயுமிருந்தது, ஆனதா லந்த வாசலாற்போ யுட்புகுந்தேன்.
அப்போதவ்விடத்தில் நான் விட்டுவிட்டுப்போனவைக ளடங்கலை
யுங் கண்டேன், அதனு லெனக்குப் பெரிய பெரிய புதையல்களை
யுந் திறந்துதரப்பட்டது. இன்னுமந்த மக்காமில் எனக்குமகாப்
பெரிய சிறப்புகளையும், காலாகால வாழ்வுகளையும், கலப்பற்ற
நாட்டாண்மைத்தனங்களையுந் தரப்பட்டது. இன்னும் கல்கிய்
யத்து பனுவாய்க் கொஞ்சம், கொஞ்சம் மிஞ்சியிருந்தவைகளையுந்
திரவே யழிக்கப்பட்டது. இன்னும் மஜாஸிய்யாவாகிய ஸிபாத்
துகளைமாற்றி ஹக்கீக்கிய்யத்தானஸிபாத்துகளைத்தரப்பட்டது.சல்
பனிற் சேர்க்கப்பட்ட வுஜூதும் வந்துவிட்டது, ஐ கியாலிய்
யான உஜூது மஜாஸீ போய்விட்டதென்று ஷெய்கு முஹ்யித்
தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அருளிச்
செய்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

## 22-வது ஹிக்காயத்து.

---(*)---

இருபத்திரண்டாம் ஹிக்காயத்தாகிறது ஷரீபு அபூஅப்தில் லாஹி முஹம்மது புனுல் ஹுஸைனில் கிலுரிபிலி அப்தில்லாஹில் ஹஸனிய்யுல் மௌஸிலீ றஹிமஹுல்லாஹு அவர்களைத் தொட்டும் பேசிவைப்பட்டதாயிருக்கும், அவர்கள் சொல்லுகிறார்கள், எனக் கென்னுடைய தகப்பனார் கிழுறென்பவர்க ளறிவித்துச் சொன்னார்கள், அதாவதென்னவெனில் நானொரு நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பதின்மூன்று வருடம் கிதுமத்துச் செய்தேன். அந்தப் பதின்மூன்று வருடத்திற் கிடையிலவர்கள் காறவுமில்லை சீறவுமில்லை, அவர்களுடைய திரேகத்தில் ஈ யெறும்புபோற்கொற்றாக ளேறவுமில்லை, இன்னுமவர்கள் துன்யாவிலொரு பெரிய மனிதனென்னிருக்கிறவர்களுக்காக எழும்பவுமில்லை, ஒரு உத்தியோகஸ்தருடைய வாசலுக்குப் போய் முடுகவுமில்லை, அவனுடைய விரிப்புகளிலிருக்கவுமில்லை, அவனுடைய வழிபனத்திலின்னும் தின்னவுமில்லை, ஒரேவொரு விடுத்தமேயொழிய. இராஜாக்களும், இராஜாக்களுக் கிடையிலிருப்பவர்களுமான ஜனங்களுடைய விரிப்புகளிலிருப்பதை துன்யாவில் வைத்தே தத்திரமாக்கப்பட்ட வேதனைகளிலுள்ளவென்று காணுகிறவர்களாயிருந்தார்கள். அவர்களிடத்தில் சுல்தான், அல்லது மந்திரி, அல்லது அவர்களைப்போல் துன்யாவின் சிறப்பமான சங்கை பெற்ற மனிதர்கள் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களிருந்துக்கொண்டிருக்கையில்வந்தால் அவர்கள்வருவதற்குமுன்னே ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களெழும்பி தங்கள் வீட்டுக்குள்ளே போய்விடுவார்கள். வந்தவர்கள் உட்கார்ந்ததின்பிறகு தாங்கள் வெளியில் வந்தவர்களுடன் பேசுவார்கள். இவ்விதமாகத் தாங்கள் செய்துக்கொண்டிருந்ததாவது துன்யாவிலுள்ள பெரிய மனிதர்களுக் கெழும்பாமலிருப்பதற்காக வேண்டியாயிருக்கும். அப்பால் வந்துட்கார்ந்த அந்த இராஜாக்கள், மந்திரிகள், ஸ்ரீமான்கள் முதலிய சகலர்களுக்கும் நல்ல அழகான வார்த்தைகளைக்கொண்டு பேசி கட்டப்பான உபதேசங்களைக்கொண்டு வஃலு சொல்லுவார்கள். அப்போதவர்கள்



ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கைகளிரண்டையும் முத்தமிட்டவர்கள் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு முன்னே தாழ்ச்சிமையாகக் கைகட்டி வாய்பொற்றியமர்ந்தொடுங்கி வஃலுகளைக் கேட்டுநிற்பார்கள். இன்னும் ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சுல்தான்களுக்குக் கடிதாசிக ளெழுதுகிறதாயிருந்தால் எவ்வித மெழுதுவார்களானால் உம்மை அப்துல்காதிறு இன்ன கருமத்தைக் கொண்டேவுகிறார்கள், அவர்களுடைய ஏவுதலும்மிற்செல்லும், அவர்களாகிற துமக்கள், அவர்களாகிறது உமக்குத் தொடர்ச்சியாயிருக்கும். இன்னும் அவர்களாகிறது உம்முடையபேரில் ஏம்பினையாயிருக்கும். இன்னும் நீ அவர்களுடைய சொல்லுக்கு வழிப்பட்டு நடப்ப தும்முடைய பேரில் கடமையாயிருக்குமென் றெழுதி அனுப்புவார்கள், அந்தக் கடிதத்தைக்கண்டவுடனே அக்கடிதத்தையிராஜாக்கள் கண்ணில்வைத்து முத்திக்கொண்டு ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் உண்மை சொன்னார்கள், நன்மையான வுத்தரவு செய்தார்களென்று சொல்லிக்கொண்டு மேற்படி கடிதத்திற் கண்ட வுத்தரவுப்படியே நடப்பார்கள்.

இன்னும் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள், நான் வணக்கத்தில் திரிகிற துவக்கத்தில் ஹாலுகள் வந்து தட்டும், அப்போது நானவைகளை மதித்துச் சரியாகநின்று அவைகளையெல்லாம் என் கைவசமாக்கிக்கொண்டு அதிலென்னுடைய வுஜூதை மறைத்துக்கொண்டு ஓடிவிடுவேன். அதாவதெனக்குத் திக்குத்திசை தெரியாமலோடிவிடுவேன் அதான நபுஸை நான் முன்னிபின்பந்த ஹாலைவிட்டுந் தெளிந்தாலெனது இருந்த தலத்தைவிட்டும் அனேக தூரத்துக்கப்பால் போயிருக்கக் காண்பேன். ஒருதடவை நான் பகுதாதில் பாழான பூமியிலிருக்கிறபோது ஒரு ஹால் வந்து பிடித்தது, அப்போதொரு சாஅத்துமட்டிலும் எனக்குத்தெரியாமலோடிப்போனேன். அப்பாலென்னைவிட்டு மந்த ஹாலை நீக்கப்பட்டது. உடனே நான் துஸ்தரென்னு மூரிலிருக்கிறேன். ஆனால் திடனைகத் துஸ்தருக்கும், பகுதாதுக்குமிடையில் பனிரண்டு நாள் பயணமிருக்கிறது, அப்படிப்பட்ட துலைதூரமானது ஒரு சாஅத்தில் துலைந்துபோச்சுதேயென்று நான் யோசித்துக்கொண்டிருக்கையில்— ஒரு பெண்பிள்ளை வந்

தென்னை நோக்கி நீராகிறது ஷெய்கு அப்துல்காதிறு நாடியபடி
நடத்தத் தக்கவுமுள்ள நாயனுடைய அடிமையென்ற பேர் கொ
ண்டவராயிருக்கையில் இந்தக் கருமத்தைக்கொண்டு நீர் புது
மைப்படுகிறீரா வென்று சொன்னாரென்று ஷெய்கு அப்துல்கா
திறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவாயா லருளிச்செய்
யக் கேட்டிருந்ததொட்டபட்ட ஷெய்காகிய அபூஅப்துர்றஹீம்
அல்கஸயபுயு அப்துர்றஹீமென்னவலீயினி றஹிமஹுல்லாஹு
அவர்கள் ரிவாயத்துச் செய்தார்கள்.

## 23-வது ஹிக்காயத்து.

இருபத்திமூன்றாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபூஅப்தில்
லாஹி முஹம்மதுப்னுல் கஸாயிது றலியல்லாஹு அன்ஹு அவர்களால் காட்
டும் வந்ததாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள், நான் ஷெ
ய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவ
ர்களுடைய சமுகத்திலிருந்தேன். அப்போதவர்களிடத்தில் சில
கேள்விகள் கேட்டதில் உங்களுடைய கருமத்தைத் துவக்கமாக
என்ன அஸாஸின்பேரில் லெடுத்திருக்கிறீர்களென்று கேட்டேன். அதற்க
வர்கள் உண்மையின்பேரில் லெடுத்தேன். நானொருபோதும் பொய்
சொல்லவேயில்லை; பள்ளிக்கூடத்தி லோதுகிறபோதாவது நான்
பொய் சொல்லவில்லையென்று சொல்லி, இன்னும் நான் என்னு
டைய வூர் ஜீலானில் சிறு பாலியனாயிருக்கும்போது ஒரு அறபா
நாளில் ஊருக்கு வெளியே போயிருந்து காட்டில் உழவுமாட்டை
வெருட்டிக்கொண்டு திரியும்போது அவைகளில்நின்று மொரு
மாடு என்னைத் திரும்பிப் பார்த்து ஓய் அப்துல்காதிறே உம்மை
யிதற்காகப் படைக்கவுமில்லை, இதைக்கொண்டு ஏவவுமில்
லையென்று சொல்லினது. அதைக்கேட்டு நான் திடுக்கிட்டவனாக
திரும்பி யென்னுடைய வீட்டுக்கு வந்து மேல்வீட்டில் தட்டனின்
லேறிப் பார்க்கவே மனிதர்களெல்லாம் அறபாவிற் றரிபட்டு ஹஜ்
ஜு செய்யும்படியாகக் கண்டேன், உடனே மேல்வீட்டிலிருந்
திறங்கி யென்னுடைய தாயாரவர்களின் சமுகத்தில்வந்து என்னு
டைய தாயே நீங்களென்னை அல்லாவுக்காக கண்கொடை செய்து



விடுங்கள், நான் இல்மு படிக்கப் பகுதாதுக்குப் போவதற் குத்த
ரவு கொடுங்களென்று கேட்டேன். அதற்கவர்கள் மகனே யிவ்
விதங் கேட்கவந்த காரணமென்ன அதைக்குறித் தெனக்குத் தெரி
யப்படுத்தென்று சொன்னார்கள். அப்போது நானென்னிடம்
நடந்த சங்கதிகள் முழுவதையும் சொன்னேன். உடனே யென்
தாயாரவர்கள் அழுதுக்கொண் டெழும்பி யென் தகப்பனாரவர்கள்
அனந்தரமாக வைத்துவிட்டு மௌத்தான எண்பது தங்கக்காசிருந்
தது. அதிலொனது சகோதரர் அப்துல்லாவுக்கு நாற்பது தங்கக்
காசை வைத்துவிட்டு மற்ற நாற்பது தங்கக்காசை யெடுத்துக்
கொண்டுவந்து என் கம்முக்கட்டின் கீழிருக்கிற சட்டைப்பையில்
வைத்துத் தைத்து நான் கேட்டுக்கொண்டபடி நடக்கும்படிக்
குத்தரவுசெய்து எல்லா ஹால்களிலுமுண்மை சொல்லும்படிக்
கென்னிடத்தில் வாக்கெடுத்துக்கொண்டு என்னைக் கொஞ்சத்தூ
வழிக்குக் கூட்டிக்கொண்டு வந்து மகனே அல்லாவுடைய காவலா
க நானுன்னைவிட்டு அல்லாவுக்காகப் புறத்திப்பட்
டுப் போகிறேன், இனி யிந்த வுன்னுடைய முகத்தைக் கியாமநாளளவுங்
காணமாட்டேனென்று சொல்லிப் பயண மனுப்பிவிட்டார்கள்.
அப்பால் நான் பகுதாதை நாடிப்போகிற ஒரு சிறியக் காபிலா
வுடனே சேர்ந்து நடந்தேன். அவ்விதம் நடந்து நாலுமந்தக் கா
பிலாக்களுமான நாங்களெல்லோர்களும் ஹமதானென்கிற வூரை
கடந்து இன்னு மொன்று பேர் குறித்துக்கொண்டார்கள், அந்த
வூருக்கருகே போகிறபோது அறுபது கள்ளர்கள் எறுவாகனக்
காரர்களாய் வந்துக் காபிலாவைக் கொள்ளையிட்டார்கள். ஆனு
லென்னிடம் ஒருவரும் வந்து குறுக்கிடவில்லை, அப்படியிருக்கை
யில் அவர்களில் நின்று மொருவன் என் கிட்டவந்து ஓய் பக்கீறே,
உம்முடன் என்ன இருக்கிறதென்று கேட்டான். அப்போது நானெ
ன்னிடம் நாற்பது தங்கக்காசிருக்கிறதென்று சொன்னேன். அது
எங்கே யிருக்கிறதென்று கேட்டான். அதற்கு நானென்னுடைய
கம்முக்கட்டின் கீழிருக்கிற சட்டைப் பையில் வைத்துத் தைத்திருக்
கிறதென்று சொன்னேன். அப்போதவனவனை நான் பரிகாசம் செய்
வதா யெண்ணிக்கொண்டு போய்விட்டான். பின்பு வேறொருவன்
என்னருகே வந்து ஓய் பக்கீறே, உம்முடனென்ன இருக்கிறதென்று
கேட்டான். அதற்கும் நான் நாற்பது தங்ககாசு என்னிடமிருக்கி
றதென்று சொன்னேன். அது எங்கே யிருக்கிறதென்று கேட்டான்.

என் கம்முக்கட்டின் கீழிருக்கிற சட்டைப் பையில் வைத்துத் தைத்திருக்கிறதென்று சொன்னேன். அப்போதவனுந் தன்னை நான் பரிகாசம் செய்வதாயெண்ணிக்கொண்டு போய்விட்டான்.

பின்பவர்களிருவர்களுஞ் சேர்ந்து அவர்களின் முதாண்மைக்காரனிடத்திற்போய் அவர்களுக்குமெனக்குமிடையில் நடந்த சமாச்சாரமடங்கலையுஞ் சொன்னார்கள். அப்போதந்த முதாண்மைக்காரன் தன்னிடத்திற்கென்னை யழைத்து வரும்படியாகக் கட்டளை செய்தான். உடனே யவனுந்தவர்ப் பிரகாரமென்னை யழைத்தவன் சமூகத்தில் விடப்பட்டது. அப்போதவர்களெல்லோர்களும் அந்தக் காபிலாக்களிடங் கொள்ளையிட்ட முதல்களைப் பங்கிடுகிறார்கள். பின்பந்த முதாண்மைக்காரனென்னைப்பார்த்து உம்மிடமென்ன இருக்கிறதென்று கேட்டான். அதற்கும் நான் என்னிடம் நாற்பது தங்கக்காசிருக்கிறதென்று சொன்னேன். அப்போதவனமந்தத் தங்கக்காசெங்கே யிருக்கிறதென்று கேட்டான். நான் முன் சொன்னதுபோலென்னுடைய கம்முக்கட்டின் கீழிருக்கிற சட்டைப் பையில் வைத்துத் தைத்திருக்கிறதென்று சொன்னேன். அப்போது என் சட்டைப் பையையெடுத்துக் கிழித்துப் பார்க்கப்பட்டது. அதில் நான் சொன்னபடி நாற்பது தங்கக்காசுமிருந்தது. அது கண்டந்தத் தலைமைக்காரனென்னைப்பார்த்து இப்போற்கொற்ற தலத்தில் உண்மை சொல்லும்படி யும்மைச் சாத்தாட்டிய காரணமென்னவென்று கேட்டான். அதற்கு நான் என் தாயார்களென்னிடத்தில் உண்மை சொல்லவேணுமென்று வாக்கெடுத்துக் கொண்டார்கள். நானவர்களுடைய வாக்குக்கு விரோதஞ் செய்யமாட்டேனென்று சொன்னேன். அப்போதந்தத் தலைமைக்காரன் மிகவும் பொங்காரமாய் அழுதுக்கொண்டென்னைப்பார்த்து நீர் சிறு வயதுக்காராயிருந்தும், இப்போற்கொற்ற வருத்தமான நேரத்திலுங்கூட உம்முடைய தாயாருக்குக் கொடுத்த வாக்குக்கு மாறு செய்திரில்லையே நானோ யித்தனை, யிந்தனை வருஷக் காலங்களாக என்னுடைய நாயனுடைய வாக்குக்கு மாறு செய்கிறேனே, யென்று சொல்லிக்கொண்டு என்னுடைய கையின்பேரில் தௌபாச் செய்து மீண்டார். அப்போதவருடனிருந்த கள்ளர்களெல்லோர்களு மவரைப்பார்த்து வழி வெட்டிப் பறிக்கிறதில் எங்களுக்குத் தலைமையாயிருந்தவரும் நீரே. இப்போது தௌபாச்செய்து



மீள்வதிலெங்களுக்குத் தலைமையானவரும் நீரே. யென்று சொல்லி யவர்களடங்கலும் என்னுடைய கையின்பேரில் தௌபாச் செய்து மீண்டுக் காபிலாக்களில் நின்று மவர்கள் கொள்ளை யடித்த பொருள்கள் யாவையுங் கொடுத்துவிட்டார்கள். இவர்கள்தான் என் கையின்பேரில் தௌபாச்செய்த பேர்களில் முந்தின பேர்களென்று ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்.

## 24-வது ஹிக்காயத்து.

—*—

இருபத்திநாலாவது ஹிக்காயத்தாவது. இமாமகிய ஷெய்கு அஹ்மதுபுனு ஸாலிஹுபினி ஷாபிஇல்ஜீயலீ றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடனே மத்றசத்துன்னிலாமிய்யா வென்னும் மதறசாவிலிருந்தேன். அப்போதந்த மஜ்லிஸில் பிக்ஹாளிகள், பக்கீறுமார்களிவர்களில் மிகுதம்பேர்கள் வந்துகூடினார்கள். அப்போதவர்கள்பேரில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாவுடையக் கலாமையும் கற்பனையையுங் குறித்து ஹதீது சொன்னார்கள். அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது அவர்களுடைய மடியின்பேரில் முகட்டிலிருந்து மகாப் பாதூரமான பாம்பொன்று வந்துவிழுந்தது, அப்போதவ்விடத்திற் கூடியிருந்த ஜனங்களெல்லோர்களும் அவ்விடத்தைவிட்டும் ஓடிப்போய்விட்டார்கள். ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்மட்டும் போகவில்லை; பாவந்தப் பாம்பானது அவர்களுடைய புடவைக்குள்ளே புகுந்து, அவர்கள் திரேகத்தில் நெளிந்து, சட்டைக் கழுத்தால் வெளிப்பட்டு அவர்களுடைய கழுத்திற் சுற்றினது. அந்தப் பாம்பானது இவ்விதமான செயல்களெல்லாஞ் செய்தும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாங்களிருந்த இருப்பைக் கலையாமலும், தங்களுடைய வஃலை விடாமலுமிருந்தார்கள். பின்பந்தப் பாம்பு அவர்களுடைய கழுத்தைவிட்டும் பூமியில் இறங்கி யதினுடைய வாலைப் பூமியிற் குற்றி நின்றுகொண்டு சப்தமிட்டது, அப்போது

திரீஹி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஷியல்லாஹு அன்ஹு அவர்கள் சிற்சில பேச்சுகளைப் பேசினார்கள். அந்தப் பேச்சுகளினருத்தமானது மற்றவர்களுக்கு விளங்கவில்லை. அப்பாலந்தப் பாம்பு போய்விட்டது. பிற்பாடு மனுஷர்களெல்லோர்களும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஷியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமூகத்தில் வந்து கூடிப் பாம்பவர்களுக்குச் சொன்னதையும், பாம்புக்கவர்கள் சொன்னதையுங் குறித்துக் கேட்டார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஷியல்லாஹு அன்ஹு அவர்கள் எனக்கந்தப் பாம்பு சொல்லினதாவது நிடனாக நான் மிருந்த வலிமார்களைச் சோதித்துப் பார்த்திருக்கிறேன். ஆனால் நீர் தரிபட்டதுபோல ஒருவருந் தரிபட்டு நிற்கக் காணவில்லையென்றது. அதற்கு நான் அல்லாஹுத் தஆலாவின் கலாவிலும், அவனுடைய கற்பனையிலும், அறிவு செல்லும்போது நீ யென்பேரில் வந்து விழுந்தாய். உன்னை புகப்புகிறதும், ஒடுக்குகிறதும், அல்லாஹுத் தஆலாவுடையக் கலாவுங் கற்பனையுமே யல்லாது வேறில்லை. நீயோ ஒரு புழுவே யல்லாது மற்ற வஸ்துமில்லை. ஆகையாலெனது செயலானது என்னுடைய சொல்லை பிடியாயிருப்பதை நாடினேனென்றார்கள்.

## 25-வது ஹிக்காயத்து.

இருபத்தைந்தாம் ஹிக்காயத்தாவது. ஷெய்கு அபூபக்று அப்துர்றஸ்ஸாக்கு றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொன்னார்கள். நானென்னுடைய தகப்பனாரவர்களாகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஷியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவாயாற் சொல்லக் கேட்டிருந்தேன், அவர்கள் சொன்னார்கள். நானொரு நாளிரவில் ஜாமிவுல் மன்ஸூறெனனும் பள்ளியில் தொழுதுகொண்டிருந்தேன். அப்போது பிரம்புப்பாய்களின் பேரிலொரு வஸ்து வருகிற சத்தங் கேட்டது. அப்பால் பெரிய புடையன் பாம்பொன்று நான் ஸுஜூது செய்கிற தலத்தில் வந்து அதினுடைய வாயைத் திறந்துகொண்டிருந்தது, பின்பு நான் ஸுஜூது செய்ய நாடினபோது அந்தப்



பாம்பை யென்னுடைய கையால்த் தள்ளி நீக்கிவிட்டு ஸுஜூது செய்து அத்தஹிய்யாத்துக் கிருந்தபோது அந்தப் பாம்பானது என்னுடைய தொடைவழியா யேறிக் கழுத்திற்கு மேலுதயமாகிக் கழுத்தைச் சுற்றிக்கொண்டது. பிறகு நான சலாம் கொடுத்துத் தொழுகையை முடித்துவிட்டுப் பார்த்தேன். அந்தப் பாம்பை காணவில்லை. அப்பால் மறுநாளானபொழுது அந்த ஜாம்ஆப் பள்ளியின் வெளியில் ஒரு பாழானவிடத்திறகுப் போனேன். அவ்விடத்திலிரண்டு கண்ணும் நீளத்திற் பிளக்கப்பட்டிருக்கிற வொரு ஜடலத்தைக் கண்டேன், அதினுடைய கண்க ளப்படியிருப்பதாலிதாகிறது ஜின்பிறவியென அறிந்துகொண்டேன். அப்பாலவரென்னை நோக்கி நீர் நேற்றிரவிற் றொழுகிறபோது கண்டவோ யந்தப் பாம்பானது நான்தான். ஆனால் நானும்மைச் சோதித்ததுபோல் அனேகம் வலிமார்களைச் சோதித்திருக்கிறேன், நீர் தரிபட்டாயிருந்ததுபோலொருவருந் தரிபட்டாயிருக்கவில்லை. அவர்களிற் சிலர்கள் உள்ளும், புறமும் பதறினார்கள். இன்னும் சிலர்கள் உள்மட்டும் பதறி புறந்தரிபட்டிருந்தார்கள். இன்னும் சிலர்கள் புறமட்டும் பதறி உள் தரிபட்டிருந்தார்கள். நீரோ உள்பதறவுமில்லை, புறம் பதறவுமில்லையென்று சொல்லி யென கையின்பேரில் தௌபாச் செய்து மீளவேணுமென்று மன்றாடினார், அதற்கு நல்லதென் றொப்புக்கொண்டு அவரைத் தௌபாக்செய்யும்படி செய்து நல்வழியிலாக்கினேனென்றார்கள்.

## 26-வது ஹிக்காயத்து.

—(*)—

இருபத்தாறும் ஹிக்காயத்தாகிறது அபுல்மஆலீ அப்துர்றஹீமுப்னு முலைப்பதுல்குறஷீ யவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கு ஹாஜியி அபூ அப்தில்லாஹி முஹம்மதுப்னு ஜஃபர் பகுதாதி றஹிமஹுல்லாஹு அவர்கள் அப்தில்லாஹிப்னு அபீல் ஹஸனில் ஜூபாயீ அவர்களிலிருந்தாகப் பேசிவந்தார்கள். அதாவதென்னவென்றால் இரா ணுக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஷியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள், எனக்கொரு பிள்ளை பிறந்துகாரு

லதை யென்னுடைய கையின்பேரிலெடுத்து இது மௌத்தாகிறதாயிருக்குமென்று சொல்லி யதினுடைய வுடம்பையென்னுடைய கல்பை விட்டும் புறப்படுத்திப்போடுவேன். பின்பந்தப்பிள்ளை மௌத்தானால் என்னிடத்தில் அப்பிள்ளை மௌத்தானதினுடைய கவலையை ஒரு ஆர்ப்பளவாவது வுண்டாக்கிவைக்காது. ஏனெனில் அது பிறந்த அன்றையிலேயே அதினுடைய வுடம்பை யென்னுடைய மனதைவிட்டுப் புறப்படுத்திப்போட்டேனாகையாற் கவலை யுண்டாகாது.

ராவி சொல்லுகிறார்கள். ஆனபோதே அவர்களிவ்வு சொல்லுகிற இரவுகளில் அவர்களுடைய மக்களில்நின்றும் ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள் மௌத்தாகும் அதற்காகத் தங்களுடைய களரியை விட்டுவிடமாட்டார்கள். அவ்விதம் மௌத்தான பிள்ளையைக் குளிப்பாட்டுகிறவர்கள் குளிப்பாட்டும்போது தாங்கள் குறுசியின் பேரிலேறி வஃலு சொல்லிக்கொண்டிருப்பார்கள். குளிப்பாட்டி முடிவானாலந்த ஜனாஸாவை யந்தக் களரியிற் கொண்டுவந்து வைப்பார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள குறுசியைவிட்டிறங்கி அந்த மௌத்தான பிள்ளையின்பேரில் தொழுவிப்பார்கள்.

இன்னும் ஹாபிலு அபூஅப்தில்லாஹி முஹம்மது இப்னின் னஜ்ஜாரில் பகுதாதியாவிற் சேர்மானமாகிய இஸ்னாதுகொண்டு பேசிவந்தார்கள், ஹாபிலு முஹம்மதுபுனு அபுல்பறஜ் பயர்கள் சொன்னதாகச் சொல்லுகிறார்கள். நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறில் ஜீலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் சரியான மழை காலத்தில் அதாவது குளிர் பெலமான நேரத்தில் புதுந்திறவனாயிருந்தேன். அப்போதவர்களின்மேலே மேலாற்றைச் சட்டையும் தலையிலொரு தொப்பியுமட்டுமிருந்தது. வேர்வையோ அவர்கள் தேகத்தில் வடிந்துக்கொண்டேயிருக்குது. வேறொரு கடிசான வேலைகளில் விசறியால் விசிக்கொண்டிருப்பதுபோல் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குச் சூழாலே ஆளிருந்து விசறியால் விசிக்கொண்டேயிருக்குதென்றார்கள். றலியல்லாஹு அன்ஹு.



## 27-வது ஹிக்காயத்து.

இருபத்தேழாம் ஹிக்காயத்தாகிறது பெண்சாதியும், புருஷனுமான இரண்டு ஸாலிஹானவர்களும் பேசிவந்ததாயிருக்கும். அவ்விருவர்களும் யாரெனில் வறஃ உடைய இமாமாகிய ஷெய்கு அபூஸஃது அப்துல்லாஹிபுனு சுலைமானுல் ஹாஷிமியவர்களும் அவர்களுடைய பெண்சாதி ஜீலானியிலுள்ள அஹ்மதுடைய தாயாரவர்களுமாயிருக்கும், இவ்விருவர்களுஞ் சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தாயார் நலவுடைய மாதாவாகிய பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு விலாயத்தினுடைய கருமத்தில் ஒரு ஹாலுண்டாயிருந்தது, அவர்கள் பலதரமுஞ் சொல்லக்கேட்டிருக்கிறோம். அதாவது நானென்னுடைய மகனார் அப்துல்காதிரைப் பெற்றபோது றமலானுடைய பகலில் என் கொங்கையி னமுதருந்தாதிருந்தார். அப்படியிருக்கையில் ஒரு வருஷம் றமலானுடைய பிறை தெரியாமல் மனிதர்கள்பேரில் மறைந்திருந்தது, அப்பொழுது மனிதர்கள் வந்து என்னிடத்தி லுங்களுடைய பிள்ளை யின்று பாலருந்தினதாவென்று கேட்டார்கள், அதற்கு நானின்று பகல் என்னுடைய பிள்ளை கொங்கையில் வாய் வைக்கவேயில்லையென்று சொன்னேன். அதுகொண்டு அந்த நாள் றமலானில் நின்றுமுள்ளதென்று திட்டப்படுத்திக்கொண்டார்கள். அப்பாலடுத்த ஊர்களிலிருந்து இவர்கள் திட்டப்படுத்திய அன்றையிலேயே பிறைக்கண்டதாகச் செய்தி வந்து வெட்டவெளிச்சமாய்விட்டது. அந்த நேரத்தில் நம்முடைய ஊரில் ஷரீபுமார்களின் வீட்டில் ஒரு பிள்ளை பிறந்திருக்கிறது, அது றமலானுடைய பகல்களில் பால் குடிக்கிறதில்லையென்று எங்கெங்கும் பிரசித்தமாயிருந்தது. அந்தப் பிள்ளையாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்தான்.

இன்னும் காலில்குலாத்தி அபூஸாலிஹ அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டிருக்கிறது. அவர்கள் சொன்னார்கள், நானென் சிறிய தகப்பனார் அப்துல்வஹ்ஹாபு றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்லக்கேட்டிருக்கிறேன். அஜம் கட்டிலுள்ள ஷெய்குமார்களிலும், உலமாக்களிலுமிருந்து அனேகம் பெரியோர்களானவர்கள் அவரவர்

களுக்கு மவர்களிற் பெரியோர்கள் சொன்னதாகச் சொல்லியிருக்கிறார்கள், என்னுடைய தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் றமலான் பகல்களில் பால் குடிக்கவில்லை யென்பதாகவேயாம். இன்னுமரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது, திடனாக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை ஹமல்சுமந்தபோது அவர்களுடைய தாயாரவர்களுக்கு அறுபது வயதான வேளையாயிருந்தது. அறுபது வயதில் ஹமலாகிறதில்லைக் குறைஷிப் பெண்பிள்ளைகளையொழிய வென்றும், ஐம்பது வயதில் ஹமலாகிறதில்லை, அறபிப் பெண்பிள்ளைகளையொழியவென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

—(*)—

## 28—வது ஹிக்காயத்து.

—[*]—

இருபத்தெட்டாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு உமறுல் கிற்மானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள், ஒருநாள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிசுக்கு நக்கீபுன்னுக்கபா வென்னும் உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் மேலான உத்தியோகஸ்தராகிய ஒருவர் வந்து ஹாஸிறானார். அதற்குமுன் அவர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிசுக்கு வந்திருப்பதேயில்லை, அப்படிப்பட்டவர் வரவே அவரைப்பார்த்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அவர்கள் இஸாறுச் செய்து உன்னைப் படைக்கப்படாம லிருக்காயில்லையே, உன்னைப் படைக்கப்பட்டால் வன் நம்மைப் படைக்கப்பட்டதென்று நீ பறிய வேண்டியதாயிருக்கவே. எடா வுறக்கிறவனே முழித்துக்கொள், உன்னுடைய கண்ணிரண்டையும் நன்றாய்த் திறந்துபார், திடனாக அகாபென்னும் படைகளெல்லா முன்னிடத்தில் வந்துவிட்டது. எடா பாவைக்காரனே, நீங்கிலவனே, குடிப்பயணம் போகிறவனே யென்னிலிருந்தொரு சொற் கேட்டுக்கொள்வதற்கு ஆயிரம் வருஷம் வரையிலும் பிரயாணம்போய்ப் பார், எற்றுத் துறையாய தன்னிடமே



யிருக்கிறது. இந்த துன்யாவானது உன்னைப்போல எவ்வளவுபேர்களைத் தலைமைத்தனத்தையும், பெருமைத்தனத்தையுங்கொண்டு மேலாக்கிவைத்து பின்பவனைச் சங்காரஞ் செய்துவிட்டது. நாமென்னுடைய இசுலாமின் சுபாகமுங், என்னுடைய அசமியத்தின் சுபாகமும் எழும்பிவிட்டால் உன்னைக் காணமாட்டேன், திடனாக இரண்டடிதான் அல்லாஹ்விற் சேர்ந்துவிட்டேன், அந்த இரண்டடியென்பது நபுஸும், கல்குமாயிருக்கும். எடா முரீதே, நீயுமிரண்டு எட்டுத்தான், திடனாக வாஸிலாயிடுவாய். இந்த இரண்டு எட்டென்பது துன்யாவும், ஆகிறமுந்தான். அறிந்துக்கொள், அல்லாஹுத் தஆலாவினளவிலேயே யெல்லாக் கருமங்களு மீளுமென்று சொன்னார்கள்.

அப்பால் தங்களுடைய குறுகியவிட்டிறங்கினதின்பிறகு அவர்களுடைய சீஷர்களிற் சிலர்களவர்களை நோக்கி யெங்கள் நாயகமே தாங்க ளவனுக்கு வஃஇ சொல்லுவதில் திடனாகக் கட்டுப்புச் செய்து போட்டீர்களென்று சொன்னார்கள். அதற்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள நான் சொன்னதெல்லாம் அவனுடைய இருளை நீக்குமென்னத்தக்க வொளிவாயிருக்குமென்று திருவுளமானார்கள். ருவீ சொல்லுகிறார்கள், பின்பந்த நக்கீபுன்னுக்கபா வென்பவர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவு சொல்லுகிற நேரமும், அறிவு சொல்லாத நேரமும் இடைவிடாமல் வந்து ஹாஸிறுகி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சன்னிதானததில் மெத்த அதபாகவும், தாழ்ச்சியாகவும் இருப்பாரென்று, றஹிமஹுல்லாஹு அன்ஹு.

—(*)—

## 29—வது ஹிக்காயத்து.

—[*]—

இருபத்தொன்பதாம் ஹிக்காயத்தாகிறது அப்துல்லாஹில்ஜுப்பாஈ யென்பவரைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும், அவர் சொல்லுகிறார், எனக்கு ஷெய்கு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள். நித்திரையினும் முழிப்பினு மென்னை யேவல்

விலகல் செய்யப்படுகிறவனாயிருந்தேன், மனிதர்களின்பேரி லறிவு சொலலும்படியான ஹாலானது என்னுடைய கல்பில் வந்து நெருக்கி யென்னை மேவிடும் அந்த வேளையில் நானறிவு சொல்லாமலிருந்தா லென்னுடைய கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டதுபோ லிருக்கும். ஆகையா லெனக்கு வாய் மூடியிருக்க முடியாது. என்னிடத்தில் இரண்டுபேர்கள், மூன்றுபேர்களிருந்து அறிவு கேட்கிறவர்களாயிருந்தார்கள். அப்பால் இச்சங்கதியை மனுடர்கள் கேள்விப்பட்டு எல்லா மனுடர்களும் என்பேரில் வந்து கூடி நெருங்கினார்கள். அப்போது உள்ளூரில் விசாலமான வோரிடமாகிய பாபுல் ஹல்பாவென்னுந் தலத்தில் முஸல்லாவிலிருந்து அறிவு சொல்லிக் கொண்டிருந்தேன். அந்த இடமும் ஜனங்களிருக்கக் காணாமற் போய்விட்டது. அப்பால் உபதேசாசனத்தை ஊருக்கு வெளியிலிருக்கிற முத்தவெளி யளவிற் கமர்ந்துகொண்டுபோய் வைக்கப்பட்டது. அவ்விடத்தில் ஒரு முஸல்லாவு முண்டாக்கப்பட்டது. மனுடர்கள் குதிரை, குமிரை, கோவேறு கழுதை, ஒட்டக முதலிய வாகனங்களிலேறி வந்து இந்த மஜ்லிசைக் கண்டவுடனே மேற்படி வாகனங்களைவிட்டு இறங்கி நின்று கோட்டை மதிள்போற் சுற்றிலிருந்து அறிவுகளைக் கேட்கிறவர்களாயிருந்தார்கள். அந்தக் களரியி லெழுபதினாயிரம் பேர்கள் மட்டிலுங் கூடுகிறவர்களாயிருந்தார்கள். றழியல்லாஹு அன்ஹு.

——[*]——

## 30-வது ஹிக்காயத்து

——(*)——

முப்பதாம் ஹிக்காயத்தாகிறது. ஷைகு அபூஸக்கரிய்யா யஹ்யபுனு அபீஸ்ஸல் பமுதாதீ யவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். இவர்களுக்கு ஸஹ்றாவி யென்றும் சொல்லப்படும், அவர்கள் சொல்லுகிறார்கள. எனக்கென்னுடைய தகப்பனார் அபூசுஸ்று என்பவர்க ளறிவித்தார்கள். அவர்கள் சொன்னார்கள். நானொருதரம் வாலிபத்தனங்களைக்கொண்டு ஜின்களை வரவழைக்க நாடினேன் அதற் கவைகள் என்னுடைய வழக்கம்போல் விரைவாக வாராமல் கொஞ்சந் தாமதமாய் வந்தவைகள் அவ்விதமாய் வந்தென்னைப்



பார்த்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறாண்டவர்கள் மனுடர்கள் பேரில் அறிவு சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில் தாங்களெங்களை யழைக்கத் தேடி வருதப்படாதீர்களென்று சொல்லினதுகள் அப்போது நானந்த ஜின்களைப் பார்த்து அதை எதற்காகவென்று கேட்டேன். அதற்கவைகள் சொன்ன ஷெய்கு முஹ்யித்தீனாண்டவர்கள் ஓதிச் சொல்லுகிற மஜ்லிசுக்குப் போவோமென்றவைகள் அப்போது நானவைகளைப்பார்த்து நீங்களும் போவீர்களோவென்று கேட்டேன், அதற்கவைகள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறாண்டவர்கள் ஓதிச் சொல்லுகிற களரியில் மனுடர்கள் போய் நெருங்கியிருக்கிறதைப் பார்க்கிலும், நாங்கள் போய் நெருங்கியிருக்கிறது, கடினமாயிருக்கும். இன்னு மெங்களில் நின்றும் அனேகமனேகக் கூட்டங்கள் அவர்களுடைய கையின்பேரில் தௌபாச் செய்து மீண்டு இஸ்லாமாயிருக்கிறார்களென்று சொல்லினதுகள்.

இன்னும் அபூஹபுஸா உமறுபுனு ஹஸைனுபுனு ஜுவீமிதியப்பி றழியல்லாஹு அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் நாட்களில் நின்றும் சிலநாளில் சொன்னார்கள். ஓய் உமறே, நீரென்னுடைய களரியைவிட்டும் போய்விடாதீர் ஏனெனில் இடனே அதிலேதான் வெகுமானங்களைப் பிரித்துக் கொடுக்கப்படும் இனி கெடைமையே கூட்டங்களும் என்னுடைய களரிக்கு வராமல்த் தப்பிவிடுகிறவனுக்கேயென்று சொன்னார்கள். இன்னும் ஷெய்கு அபூஹபுஸின் சொன்னார்கள். நானதற்குப் பின்னால் சிலகாலமாய் அவர்களுடைய களரிக்குப் பின்காமற் போய்க்கொண்டிருந்தேன் அப்படி யாயிருக்கும்போது நாட்களில் நின்றும் ஒரு நாளில் அந்தக் களரியில் என்னைத் தூக்கமேற்கொண்டதாகப் போதினானது இரு கண்ணும் நித்திரையாகிவிட்டது. அப்போது வானுலோகத்தில் நின்றுமிறங்கி வெகுமானங்கள் பனைமரங்களாயும், சிலர்களையுமா யிறங்கி வந்து அக்களரியிலிருப்போர்களின்பேரில் விழக்கண்டு பதறி முழித்தவனாக என்னுடைய இரண்டு கண்ணையும் திறந்து இச்செய்தியை மனுடர்களுக்குச் சொல்லுவதற்காகக் குதித்தெழுந்தோடினேன். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறாண்டவர்கள் என்னைப் பார்த்து ஓ அருமையான மகனே, யென்று கூப்பிட்டு நீர் பேசாதிரும், ஏனெனில் செவியேறுதல் கண்காட்சி

யைப்போலல்ல அதாவது கேட்டறிவது கண்டறிவதைப் போலல்ல வென்று சொல்லிவிட்டார்கள்.

இதுகிறது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவளமான ஹதீதாயிருக்கும். அதாவது லைஸல் கபறுக்கல் முஆயனத்தி, முன் பெயர் குறிக்கப்பட்டவனும், இதைப் பாவைப் படித்திய [illegible] மான அடியான் சொல்லுகிறேன். சொந்த ஆயலைக் கஷ்டச் செய்து, மிகுந்த கூலி கொடுத்து. பிழைகளை மிகுந்து மன்னிக்கும் ஆண்டவனுடைய அல்லாஹுத்தஆலா அவனைத் தேட்டும் மன்னித்துக்கொள்வானாகவும். இந்தப் பெப்பாண நாதாவாகிய என்னுடைய நாயகம் காண சாருக்காரியானமாகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஆகியவர்களை அல்லாஹுத்தஆலா அன்மையாகி அவர்களுடைய கலைகம் மண்பேரில் சொரிவானாகவும், அவர்களுடைய கராமத்துகளில் நின்றும் நான் திட்டமாய்க் கண்டதிலும், உற்ற விசேடமாய்க் கேட்டதிலும், சிலதை யிந்த இடத்திற் சொல்லுவது நேர்பாடாயிருப்பதால் நான் சொல்லவேணுமென்று நாடிச் சொல்லுகிறேன். இந்த இலங்கைக் கரையிலுள்ள மனுடர்களில் மிகுதம் பேர்களுடைய வழக்கமாகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பேரிலாவது, ஷெய்கு முஹ்யித்தீனாண்டவர்கள் பேரிலாவது, வேறே ஒரு வலிமார்கள் பேரிலாவது யாதொரு மௌலிது ஓதுகிறதாயிருந்தால் அவ்விதமோதுகிற தலத்தை மெழுகி அதற்குப் போதுமான தகுந்த விரிப்புகள், புடவைகள், வெங்கல பாத்திரங்கள் முதலிய வஸ்துகளைத் துப்புரவாகக் கழுவி மெத்தப் பயபக்தியுடன் செய்வார்கள். இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய மௌலிதை ஓதி முடித்தால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு ஆண்டவர்கள் பேரில் கோவை செய்யப்பட்ட. யாக்குதி பஅ்ஹலிஸ்ஸமா வல்அறுல கௌதிஹிமா. என்னும் பைத்தையும் ஓதி அதில் யாவையித் ஸனதீ என்னும் பைத்தைக் கையேந்தினவர்களாக மூன்று தடவை மடக்கிமடக்கி ஓதி நாயகமவர்களிடத்தில் வஸீலாவென்னும் பொருளை தேடிக்கொள்வார்கள். இவ்விதமோதி வரும்போது வருஷங்களாயொருவருஷத்தில், றபீவுல் அவ்வல்மாதத்தில் மௌலிதுகளிரியில் அடியேனுடைய பகிறாம், இன்னும் சில இகுவான்களுமிருந்து மௌலிதை ஓதி முடித்து, யாக்குதபாவ



ஹிதி யாவையித் ஸனதீயென்னும் பைத்தை வழக்கப்படிக்கிக் கையேந்தி ஓதிக்கொண்டிருக்கும்போது எனக்கொரு உறக்கம்போற் சொற்ப நேரமானது சொப்பனமாயுண்டாகவே ஒரு மனிதராக்கனாவில் [illegible] எழுந்து ஒரு தட்டத்தில் பூக்கோவை களைவைத்துக்கொண்டு பங்கிட்டு எல்லா ஒவ்வொருவருக்கும் கொடுத்துக்கொண்டு வந்து என் கிட்டும் நின்று [illegible] பின்பேரில் அதில் நின்றுமொரு பூக்கோவையை யெடுத்து [illegible] கள், அவ்விடம் வைத்தவுடனே யென்னுடைய தூக்கந்தெளிந்து நான் பார்க்கிறேன், அவர்கொண்ணகையில் வைத்த பூக்கோவையானது அப்படியே யிருக்கிறது. அப்போதந்தப் பூக்கோவையை முகர்ந்து கொள்வதற்காக என் முகத்திற்குக் கிட்டவாக்கிப் பார்த்தேன், அந்தப் பூக்கோவையானது காயிபாகிவிட்டது, இந்தப் பரக்கத்தானது சிலகாலமட்டிலுமதாயிமாயிருந்தது.

இன்னுமொரு விடுத்தப் பள்ளிவாசலில் றபீவுல் ஆகிர்மாதத்தில் வழக்கப்படி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களின்பேரில் மௌலிது ஓதிக்கொண்டிருந்தார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய மௌலிதில் சில பைத்துகளிலும், சிலவிடங்களிலுமெழும்பி நின்று ஓதுவது போல் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறாண்டவர்களுடைய மௌலிதில் யாஷெய்குனா தாக்கீறு என்னும் பைத்தை யெழும்பி நின்று ஓதுவது வழக்கமாயிருந்தது. அப்படி நடக்கை பொழும்பி நின்றோதுவது வழக்கமாயிருந்தது. அப்படி நடக்கிற காலத்தில் மேற் கூறியபடி மௌலிதோதிக்கொண்டிருக்கிற காலத்தில் அந்தக் காரியில் [illegible] பட்டணத்திலுள்ள ஒரு [illegible] மனிதர் மௌலிது [illegible] தரித்தவராயிருந்தார், அவ மனிதர் [illegible] ஓதுவதிலும், பாட்டிலும், படிப்பிலும், ஐவசியிலும், இராகத்திலும் மெத்தக் கெட்டியானவரா யிருந்தார். அப் [illegible] மௌலிதோதுகிறபோது வழக்கம்போல் எல்லா மனிதர்களும் எழும்பினார்கள். அந்த மௌலிது [illegible] மனிதர் மட்டும் எழும்பவில்லை, அப்போது மனிதர்களெல்லாமவரைப் பார்த்து [illegible] எழும்பவில்லை, அதற்கவர் கோபப்பட்டு [illegible] எழும்பாதபோது [illegible] முஹ்யித்தீனாண்டவர்கள் [illegible] அடித்துப்போடுவார்களோ வென்று கொஞ்சந் [illegible] பேசினார், அவர் எழும்பவில்லை, அப்போது மற்றும் [illegible]

கள் அவரவர் பாட்டிலிருந்துவிட்டுப் போகட்டுமென்று சொல்லிவிட்
டுத் தங்களுடைய வழக்கப்படிக் கெடியின் ஏறு மௌனிகளை
முடித்துவிட்டார்கள். அப்பாலவர்க்கு மனிதன்மட்டில் மொழியுமில்லை,
அதின்பிறகு ஓதவுமில்லை, மௌனிகோதிமூர்க்கதின் பிறகு மொழும்
படுமில்லை. அப்பாலவரை விசாரிக்கும்போது அவர்களுக் கொழுப்
பமுடியாது. பூமிபோடு சட்டமைத்திருக்கிறதுபோல் குழுக்கில
பிடித்துக்கொண்டிருக்கிறதென்று சொன்னார். அப்போது கூடின
வர்களிலொருவர் அவனைப்பார்த்து நீர் உள்ளதுபோல் சொல்லு
மென்று கேட்டபோது காலனாழ்ப்பாதிருந்தால் ஷெய்கு முஹ்யித்தீ
னப்துல்காதிறாண்டவர்களடிக்கப்போடுவார்களோவென்றென்னு
டைய கெட்ட விதியாற் சொன்ன சொல் முடிவாகுமுன்னே யொரு
வர் வந்தென்னுடைய முதுகுக் குழுக்கில ஒரு இரும்பலவாங் கால
டித்ததுபோ லிருந்தது. அப்போ தென்னுடைய குழக்குடைந்த
துபோலாகிவிட்டதென்று சொன்னார். பின்பவரைப் பள்ளியிலிருக்க
இசைவில்லாததால் வேறொரு விடத்திற் கவலையாளர்கள் சுமந்துக்
கொண்டுபோய் வைத்து அவருக்கு வாய்வுப் பிடிப்புகளுக்குரிய
அவிழ்தமுதலிய வைபரகம், செய்பாகங்களைச் செய்தும் சுகப்படா
மல் அந்த வருத்தத்திலேயே மௌத்தானார். அவரை மேலே குறிக்
கப்பட்ட சிற்யூர்ப பள்ளிவாசலின் மக்பறுவி லடக்கஞ்செய்யப்பட்
டிருக்கிறது. இதைக் கண்ணுற கண்டவர்களில் அனேகபேர்க
ளிதுவரையிலும் ஹயாத்துடனிருக்கிறார்கள்.

இன்னுமொரு மனிதர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதி
றாண்டவர்களுடைய கந்தூரிக்காக வழக்கப்படிக்குக் கோழியான
திருந்த குஞ்சுகளைப் பொரிக்கவேணுமென்று நாடி ஒரு கோழி
யைக் குஞ்சு பொரிக்கவைத்தார். அதுபோலந்தக் கோழியானது
அனேகக் குஞ்சுகளைப் பொரித்தது. அப்பால் அந்தக் கோழி
யும், அதின் குஞ்சுகளுமாகத் தன் வீட்டின் முற்றத்தில் நின்று இரை
பொறுக்கித் தின்றுகொண்டிருக்கும்போது அந்தக் கோழிக் குஞ்
சுகளில் நின்றுமொரு குஞ்சை ஒரு காகமானது இருஞ்சி யெடுத்துக்
கொண்டு பறந்து அதற்றச் சுக்கரையிலொரு மாத்திலிடமாய்ப் போ
யடைந்துக்கொண்டது. அப்போது குஞ்சைப் பறிகொடுத்த கோழி
யானது சத்தமிட்டதைக் கேட்டு அந்தவீட்டுக்காரர் வீட்டிலிருந்து
வெளியில் வந்து பார்க்கவே கோழிக் குஞ்சுகளிலொன்றைக்காக



இருஞ்சிக்கொண்டதாற் கோழி சத்தமிடுகிறதென்ற செய்தியை யறி
ந்து மிகவும் சலிப்படைந்து அந்நேரத்திலவர் வாயிற்றிடு கூறுய்
வந்த சொல்லாவ செப்படியானஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்கா
திறாண்டவர்களுடைய கறாமாத்துக்கு ஒணிமையாயிருந்தால், அந்தக்
காகமான தந்தக் கோழிக்குஞ்சைக்கொண்டுவந் திவ்விடத்தில் விட்டு
விடவேணுமென்று சொன்னார். அவ்விதஞ் சொல்லவே சுபுஹா
னல்லா அக்கணமே அந்தக் காகமந்தக் கோழிக் குஞ்சை யெடுத்
துக்கொண்டு இக்கரையின் நேரே பறந்து வருகிறபோது அந்தக்
கோழிக்குஞ்சானது மேற்கூறிய முற்றத்தில் வந்து விழுந்து மற்றக்
குஞ்சுகளுடனே சேர்ந்துக்கொண்டது. இதையும் அனேக மனு
டர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். இதைபோ லெவ்விதமானவெல்லாம்
அந்த ஞாபகத்தின் கறாமாத்துகள் நாளுக்குநாள் அதிகமாக, உடனுக்
குடனே வெளியாகிக்கொண்டே வருவதால் அவர்களுடைய கந்தூ
ரியை முஸ்லிமான ஊர்களடங்கலிலும், சிறப்பாகக் கொண்டாடி
வருகிறார்கள். இதுவையு மெய்யுமாக அறியப்பட்ட கறாமாயிருக்
கும். இன்தஹா.

——:0:——

## 31-வது ஹிக்காயத்து.

முப்பத்தோராவது ஹிக்காயதாகிறது. ஷெய்கு அபூ ஹபுஸி
புனு ஹாறூனைஸுபுனு ஐலீவிதசிபி றஹிமஹுல்லாஹு அவர்களைத்
தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும், அவர்கள் சொல்லுகிறார்
கள். நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸிலவர்களுடைய சிறப்பான முகத்
திற்கு நேரே உட்கார்ந்துக்கொண்டே யிருந்தேன். அப்போது
வானுலோகத்திலிருந்து பளிக்குப் பாத்திரமொன்றிறங்கி வந்து ஷெ
ய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்
களுடைய வாய்க்கருகில் முடுகிவிட்டு மீண்டுபோய்விட்டது. அப்
பால் மறுபடியும் இறங்கிவந்து முன்போலவே போய்விட்டது. இவ்
விதமாக மூன்றுதரம் நடந்தது காணீனத்துக் கண்டு மெத்த ஆச்சரி
யப்பட்டு என்னால் பொறுக்க முடியாமல் நானறியா விசுத்தாலிந்தச்
சங்கதியை மற்ற மனிதர்களுக்குச் சொல்லவேணுமென்று குதித்

தொடங்கினேன். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னைப் பார்த்துக் களரியில் விசுவாசமாயிருமென்று இஷாறுவாகச் சொன்னார்கள். ஆகையால் நான் பேசாதிருந்துவிட்டேன். அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் உபாத்தானதின் பிறகு மற்ற மனுஷர்களுக்குத் தெரியும்படியாக வெளியிற் சொன்னேன்.

இன்னும் யஹ்யபுனுல் காஜ்ஜா சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வழக்கமானது வஃலு சொல்லும்போது மேல் மீசை முடிகளிலொவ்வொன்றை நறுக்குவார்கள். ஆகையால் ஒரு நாள் அவர்கள் வஃலு சொல்லும்போது மனுஷர்களுக்கெல்லாம் கடைசியிலிருந்துக்கொண்டு இன்றையில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வஃகு சொல்லுங் களரியில்மேல் மீசையில நின்று மெத்தனை முடிகளை நறுக்கி விடுகிறார்களென்று கணக்குப் பார்க்கவேணுமென்று நாடி அந்தக் களரியின் நடுக்கத்திலிருந்துக்கொண்டு சில நூலையெடுத்துப் புடவைக்குள்ளே வைத்துக்கொண்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒவ்வொரு முடியை நறுக்குந் தோறெல்லாம் ஒவ்வொரு முடிச்சு முடிந்துக் கொண்டேயிருந்தேன். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னைப் பார்த்து நானவிழ்க்கிறேன், நீர் முடிகிறீரென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

———:*:———

## 32-வது ஹிக்காயத்து.

———[*]———

முப்பத்திரண்டாம் ஹிக்காயத்தாகிறது. இமாமாகிய ஹாபிஃது ஷெய்கு அபூஸஃது ஆக்தாஹிறபுனு முஹம்மதுபுனுத் தாஹிரில் மக்தஸிய்யிர் றுஹிய்யி றழியல்லாஹு அவர்களைத் தொட்டும் பேசிவந்ததாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள்.



நான் ஹிஜ்றத்து ஐநூற்றிஐம்பத்தேழாம் வருஷத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸில் போய் ஹாஸிருயிருந்தேன். அப்போது அவர்கள் சொல்லும்படியாகக் கேட்டிருந்தேன். அவர்கள் சொன்னார்கள். நானிந்த வஃலு சொல்கிறதெல்லாம் காடு மலைக்கந்தப்புறமிருந்துவருகிற ஆண்பிள்ளைகள்பேரிலாயிருக்கும். அவர்களுடைய கால்களாகிறது, ஆகாயத்திலும், அவர்களுடைய கல்புகளாகிறது ஹுலுறத் துல்க்குத் ஸியிலுமிருக்கும், அவர்களுடைய குல்லாத் தொப்பிகளும், மற்றுந் தொப்பிகளும், சிறப்பும் வலுப்பமுமுடைய அல்லாஹு ஸுபுஹானஹு வத்தஆலாபேரில் அவர்களுடைய ஆசை கடிசாயிருப்பதால் வைகள் வெந்து கரிந்துபோக முடுகி விடுமென்று சொன்னார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மகனார் அப்துர் றஸ்ஸாக்கென்பவர்கள் அந்த மின்பறின் கீழ் தங்கள் தகப்பனாருடைய காலின் கீழாயிருந்தார்கள். அவர்கள் தலையை யுயர்த்தி ஆகாயத்தளவிற் பார்த்துக்கொண்டு ஒரு சாஅத்து மட்டிலும் ஒரே பார்வையாயிருந்து போதக்கேடாகி மயங்கி விழுந்தார்கள். அப்போது அவர்களுடைய குல்லாத் தொப்பியும், இடையாமென்னும் குப்பாயக் கழுத்தின் சுறறும் நெருப்புப் பற்றிப்பிடித்து வேகிறது அதைக்கண்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறுசியைவிட்டுக் கீழிறங்கித் தங்களுடைய கையாலந்த நெருப்பை நூர்த்துவிட்டுத் தங்களுடைய மகனாரைப் பார்த்து அப்துர்றஸ்ஸாக்கே நீயும் அந்த ஆண்பிள்ளைகளிலுள்ளவனாயிருக்குமென்று சொன்னார்கள்.

ருஷீ அபூஸஃது சொல்லுகிறார்கள். நான் அப்துர்றஸ்ஸாக்கவர்களிடத்தில் அவர்கள் போதக்கேடாகி அடித்துவிழுந்ததைப் பற்றிக் கேட்டேன். அப்போதவர்கள் என்னைப்பார்த்து நானாகாயத்தளவிற் பார்த்தபோது சில ஆண்பிள்ளைகளைத் தரிபட்டவர்களாயும், தலை கவிழ்ந்தவர்களாயும், என் தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹதீதுக்குக் காது தாழ்ந்தவர்களாயும், ஆகாயமெல்லாம் நிறம்பியிருக்கிறார்கள். இன்னுமவர்களுடைய புடவைகளில் நெருப்புப் பிடித்தெரிகிறது. அவர்களில் சிலர்கள் சத்தமிடுகிறார்கள். இன்னும் சிலர்கள்

ஆகாயத்தி லோடுகிறார்கள். இன்னுஞ் சிலர்களிக்க பஞ்சினாலி
லடிதது விடுகிறார்கள். இன்னுஞ் சிலர்களவர்களிருக்கிற விடத்
திலிருந்து பதபதைக்கிறார்களென்று சொன்னார்கள், றுலி சொல்
லுகிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா
ஹு அன்ஹு அவர்கள் கலாமென்னுங் கர்பனையில் ஹதீது
சொல்லும்போது உயரவிருந்து இறங்கிறுகிற சத்தமும், அழுகிற
சத்தமும் கேட்கப்படுமென்று சொன்னார்கள். றலியல்லாஹு
அன்ஹு.

—(*)—

## 33-வது ஹிக்காயத்து.

—[*]—

முப்பத்திமூன்றாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்குல் அவ்லி
அப்துல்இலாஹி முன்ஜிஹுபுஙைஷ் ஷெய்குல் குலி அபில் கைரிமி
னிஷ் ஷெய்கில் குக்லத் அபீமுஹம்மதின் மக்தறுல் பாதிறுக
றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்ட
தாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள், என்னுடைய தகப்ப
னார் அபுல்கைறு என்பவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.
அவர்கள் சொல்லுகிறதாவது அவர்களுடைய தகப்பனார் ஷெய்கு
அபூமுஹம்மது மக்தறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு
மௌத்துடைய வேளை முடுகிறபோது நானவர்களைப் பார்த்து
எனது பாவாவே உங்களுக்குப் பிறகு நான் யாரைத் தொடர்ந்து
கொள்கிறது. அதுவிஷயத்தி லெனக்கு வஸியத்துச் செய்யுங்க
ளென்று கேட்டேன், அதற்கவர்க ளென்னை நோக்கி மகனே நீ
யெனக்குப் பின்னால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலி
யல்லாஹு அன்ஹு அவர்களைத் தொடர்ந்து பற்றிப் பிடித்துக்
கொள்ளென்று வஸியத்துச் செய்தார்கள். அப்படிச் சொன்
னது ஒருவேளை அவர்களுடைய கஷ்பின் வருத்தத்திற் சொன்ன
தாயிருக்குமென் றெண்ணி ஒரு சாஅத்து நேரம் கழித்து அப்பா
லுமவர்களைப் பார்த்து என்னுடைய பாவாவே நாளுங்களுக்குப்
பிறகு யாரைத் தொடர்ந்துக்கொள்கிறது அது விஷயத்தி லென
க்கு வஸியத்துச் செய்யுங்களென்று கேட்டேன். அப்போது
மவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு



அன்ஹு அவர்களைக்கொண்டு தொடர்ந்துக்கொள்ளென் றென
க்கு வஸியத்துச் செய்தார்கள். மறுபடியும் ஒரு சாஅத்துக்குப்
பின்னாலு மவர்களைப்பார்த்து எனது பாவாவே நாளுங்களுக்குப்
பிறகு யாரைத் தொடர்ந்துக்கொள்கிறது, அதுவிஷயத்தி லென
க்கு வஸியத்துச் செய்யுங்களென்று கேட்டேன். அதற்கு மவர்
களென்னைப்பார்த் தென்னுடைய அருமை மகனே ஷெய்கு முஹ்
யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிருக்
கிற காலத்தி லவர்களல்லாதவர்களைத் தொடர்கிறது ஜாயிஸாக
மாட்டாது. ஆகையால் அந்த நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்
துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களையே தொடர்ந்துக்
கொள்ளென்று வஸியத்துச் செய்துவிட்டார்கள். அப்பாலென்
னுடைய தகப்பனாரவர்கள் மௌத்தானதின்பிறகு நான் பகுதா
தை நாடிவந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா
ஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸுக்கு ஹாஸிருனேன். அப்
போது அவ்விடத்தில்ஷெய்குபக்காவென்பவர்களும், ஷெய்குஅபூ
ஸஃதுல்கைலவீ யென்பவர்களும். ஷெய்கு அலிய்யுபுனுல் ஹீத்தீ
யென்பவர்களும். இன்னும் குறிப்பான ஷெய்குமார்களில் அவர்
களையல்லாத்தவர்களு மிருக்கிறார்கள். அந்நேரத்தில் நான் கேட்
டிருக்க ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். நானுங்களுக்குச் சொல்
கிறதாவது மற்றும் வாஇலீன்களைப்போலல்ல. நான் வஃலு
சொல்வதெல்லாம் அல்லாஹுத் தஆலாவினுடைய ஏவல் கொண்
டேயல்லாது வேறில்லை. இன்னும் நான் வஃலு சொல்வதெல்
லாம் ஆகாயத்திலிருக்கிற ஆண்பிள்ளைகள்பேரிலாயிருக்குமென்று
சொல்லித் தங்களுடைய தலையை வானத்தளவி லுயர்த்தினார்கள்,
அப்போதவர்கள் பார்க்கிற அகன்ற வெளிமயத்தளவில் நானும்
பார்த்தேன். அவ்விதம் பார்க்கிறேன், அவர்களுக்கு நேரே ஒளி
விறுலேயுள்ள குதிரை வாகனங்க ளேறினவர்களான ஒளிவா
ளுள்ள மனிதர்கள் அணியணியாயிருக்கிறார்கள், திடுகை அவர்
கள் மிகுதமாயிருப்பதால் என்னுடைய பார்வைக்கும், வானத்திற்
குமிடையில் திரையாகிவிட்டார்கள். அவர்க ளடங்கலுந் தலை
குனிந்தவர்களாயிருக்கிறார்கள். இன்னும் அவர்களிற் சிலர்களழு
கிறார்கள். சிலர்கள் நடுங்கிறார்கள். இன்னுஞ் சிலர்களுடைய
புடவைகளில் நெருப்புப் பிடித்தெரிகிறது. ஆக இவ்விதங்களெல்

லா யிருக்கிறதைக்கண்டு நான் போதக்கேடாகி மதிமயங்கிக் கீழே யடித்துவிழுந்து அப்பாற் றெளிவுபெற் றெழும்பி மனிதர்களை யெல்லாம் நீக்கிவிட்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிருக்கிற வீட்டிற் றிருப்போய் வெளியானேன். உடனே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னுடைய காதைப் பிடித்துக்கொண்டு, எடா சங்கையானவனே, உன்னுடைய வாப்பாவுடைய வஸியத்தில் இன்னும் முதல் தடவையைக்கொண்டு போதுமாக்கிக்கொள்ளக்கூடாதாவென்று சொன்னார்கள். நானவர்களுடைய ஹைபத்தா லென்னுடைய தலையைக் குனிந்துக்கொண்டிருந்தேனென்றார்கள், றலியல்லாஹு அன்ஹு.

—(*)—

## 31-வது ஹிக்காயத்து.

—:o:—

முப்பத்தொன்றாம் ஹிக்காயத்தாகிறது ஆரிபாகிய பெரிய ஷெய்கு அபூஸஃது கைலவீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள்; நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸில் நபிமார்களில் நின்றும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களையும், அவர்களல்லாதவர்களையும் வந்து ஹாஸிறாயிருக்கப் பலதரம் கண்டிருக்கிறேன். இன்னும் நபிமார்களுடைய றூஹுகளெல்லாம் ஆகாயத்திற் காற்றுகள் வையாளி போடுவதுபோல் வானத்திலும், பூமியிலும் வையாளி போடுகிறதுகள். இன்னும் மலாயிக்கத்துகளெல்லோர்களும் கூட்டங்கூட்டமாக அந்த மஜ்லிஸுக்கு வந்து ஹாஸிறாவார்கள். இன்னும் கைபுடைய மனிதர்களும், ஜின்களும் ஒருவருக்கொருவர் முந்துகிறவர்களாக அந்த மஜ்லிஸுக்கு வந்து ஹாஸிறாவார்கள். இன்னும் அபுல்அப்பாஸ் கிழுறு அலைஹிஸ்ஸலாமவர்களு மந்த மஜ்லிஸுக்கு ஹாஸிறாவதை மிகுதமாகும்படி கண்டிருக்கிறேன். அவ்விஷயத்தைப்பற்றி நான் கிழுறு அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் கேட்டபோது, மன்அறாதல் பலாஹ



பஅலைஹி பிமுலாஸமத்தி ஹாதல் மஜ்லிஸி. யாராகிலுமொருவன் ஈடேற்றம்பெற நாடினால் இந்த மஜ்லிஸைப்பற்றிப் பிடிப்பதை யவன் விதியாக்கிக்கொள்ளவுமென்று கிழுறு அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்கள் சொன்னார்கள்.

இன்னும் ஷெய்குல் இஸ்லாமாகிய குத்பு முஹ்யித்தீன் அப்துல்காதிறாண்டவர்களுடைய குமாரர் ஷெய்கு அபூஅப்தில்லாஹி அப்துல்வஹ்ஹாபு அவர்களைத்தொட்டும் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது, அவர்கள் சொல்லுகிறார்கள். என்னுடைய தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மனிதர்களின்பேரில் ஹதீது சொன்ன காலமாகிறது நாற்பது வருடமாயிருந்தது. அதில் முந்திய வருடம் ஹிஜ்றத்து ஐநூற்றி யிருபத்தோராம் வருடமாயும், கடைசி வருடம் ஐநூற்றி யறுபத்தோராம் வருடமாயுமிருந்தது. இன்னுமவர்களுடைய மத்றசாவில் தாங்களே ஓதிக்கொடுக்கவும், பத்வாக்கொடுக்கவும் ஏற்பட்டிருந்த காலமாகிறது முப்பத்திமூன்று வருடமாயிருந்தது, அதின் துவக்கமான வருடமாகிறது ஹிஜ்றத்து ஐநூற்றியிருபத்தெட்டாம் வருடமாயும், கடைசி வருடமானது ஹிஜ்றத்து ஐநூற்றி யறுபத்தோராம் வருடமாயுமிருந்தது. இந்தவருடத்தில்த்தான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வபாத்தானார்கள்.

இன்னும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸில் அவர்களைத்தவிர வேறே யிரண்டு காரிமார்கள் மெத்த நீட்டாமலும், சொற்பிழை முதலிய உச்சரிப்பின் பிழைகள் யாதொன்றும் வராமலும் தஜ்வீதான கிறாஅத்தாக ஓதுகிறவர்களாயிருந்தார்கள். இன்னுமவர்களுடைய மஜ்லிஸில் ஷரீபு அபுல் புத்தூஹு மஸ்வூதுபுனு ஹமதுல்ஹாஷிமிய்யில் முக்கியவர்களும் ஓதுகிறவர்களாயிருந்தார்கள். இன்னுமவர்களுடைய மஜ்லிஸில் நானூறு உலமாக்கள் மைக்கூடுகளும், கலம்களும் வைத்துக்கொண்டு நாயகமவர்கள் சொல்லுகிற அறிவுகளை யெழுதுகிறவர்களாயிருந்தார்கள். ஆனால் மிகுதமாக அவர்கள் ஹதீது சொல்லக் குழுவியளவிற் போகிறபோது நார்கள் நெருங்கித் திரள் திரளாயிருப்பதால் மனிதர்களுடைய தலைகளுக்கு மே

லாகவே ஆகாயத்தில் நடந்து அறிவுசொல்லு முபதேசாசனத்திற்
போயிறங்குவார்கள். இன்னுமவர்கள் ஹதீது சொல்லுகிற களரி
யில் மூன்று பேர்கள், அல்லது இரண்டு பேர்களுக்குக் குறை
யாமல் மௌத்தாகிறவர்களா யிருந்தார்கள். றழியல்லாஹு
அன்ஹு.

——[()]——

## 35-வது ஹிக்காயத்து.

——(*)——

முப்பத்தைந்தாம் ஹிக்காயத்தாகிறது அப்துல்லாஹில் ஜுப்
பாயீ றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச்
செய்யப்பட்டதாயிருக்கும், அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கு
ஷெய்கு முஹ்பித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு
அவர்கள் சொன்னார்கள், நானென்னுடைய துவக்கத்தில் நான்
கல்க்குகளைக் காணாமலும், அவர்களென்னைக் காணாமலுமிருந்தது
போல் முத்தவெளிகளிலும், வனவாசங்களிலுமிருக்க நான் மே
லெண்ணம் வைக்கிறேனென்று சொல்லிப் பின்னும் சொன்னார்
கள். கல்க்குகள் என்றால் பலன் பெறுவதை அல்லாஹுதஆலா
நாடினான். ஏனென்றால் திடனாக யஹூதி, நஸாறு இவர்களில்
நின்றும் என் கையின்பேரில் ஐநூறுபேர்களுக்கு மதிகமாயிஸ்லா
மானார்கள், இன்னும் வழிவெட்டிப் பறிக்கிறபேர்களிலும், ஹறும்
தின்னுகிறபேர்களிலுமிருந் திலட்சம் பேர்களுக்குமதிகமாக என்
கையின்பேரில் தௌபாச்செய்து மீண்டார்கள். இவைகளெல்
லாம் மகா பெரிய நன்மைகளாயிருக்குமென்று சொன்னார்கள்.

——:*:——

## 36-வது ஹிக்காயத்து.

——[*]——

முப்பத்தாறும் ஹிக்காயத்தாகிறது. ஷெய்கு ஷமறுல் கிற்
மானீ றழியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்
பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹ்
யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களிருக்



கிற களரிகளாகிறது. யஹூதி, நஸாறு இவர்களில் நின்றும்
இஸ்லாமாகிற பேர்களை விட்டும். அல்லது வழிவெட்டிப் பறிக்
கிற அல்லது களவு செய்கிற, அல்லது கொலை செய்கிற, அல்லது
அழிச்சாட்டியஞ் செய்கிறபேர்க ளிவைகளைவிட்டுத் தௌபாச்
செய்து மீள்கிறதைவிட்டும், அல்லது ரூபிலிகளில் நின்றும், அவ
ர்க ளெல்லாத்தவர்களில் நின்றும் கெட்ட நிருணயங்களை விட்டு
நல்ல அக்கீதா அளவில் மீள்கிறபேர்களைவிட்டும்ஒழிந்ததாயிருக்க
வில்லை. ஒரு நாளொரு பாதிரி வந்து அந்த மஜ்லிஸில் வைத்தே
ஷெய்கு முஹ்பித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு
அவர்களுடைய கையின்பேரில் இஸ்லாமானார் அப்பா லவ்விதம்
இஸ்லாமானவர் மற்று மனிதர்களைப் பார்த்து ஓய் மனிதர்களே,
திடனாக நானுகிறவன் யமனுடையோர்களில் நின்று மொருவனாயி
ருக்கும். ஆனாலென்னுடையக் கல்பில் திடனாக இஸ்லாமே சரி
யான தீனென்று விஷயமாய்விட்டது. அப்போது யமனிலுள்ள
வர்களில் ஏற்றமான மனிதருடைய கையின்பேரிலேயே யல்லாது
நான் இஸ்லாமாகிறதில்லை. யென்று என்னுடைய கருத்துப் பல
மாயிருந்தது. நானிந்த எண்ணத்தைப்பற்றி யோசித்தவனாகை இரு
ந்துகொண்டிருக்கும்போது என்பேரில் நித்திரை மேலிட்டது.
அப்போது நானென்னுடைய கனவில் ஈஸபுனு மறியம் அலைஹி
ஸ்ஸலாமவர்களைக் கண்டேன். அவர்க ளென்னைப்பார்த்து ஓய்
லினனே, நீ பகுதாதுககுப்போய் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்
காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கையின்பேரில்
இஸ்லாமாகிக்கொள். திடனாக அவர்கள்தான் இந்நேரத்தில் பூமி
யுடையோர்களில் மெத்தஏற்றமானவரென்று சொன்னார்கள்.

இன்னும் அந்த ஷெய்கு ஷமறுல் கிற்மானீ யவர்கள் சொன்
னார்கள். இன்னுமொருதடவை நஸாறுக்களில் நின்றும் பதிமூன்
றுபேர்கள் வந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்
லாஹு அன்ஹு அவர்கள் ஹதீது சொல்லுகிற களரியில் வைத்
தே ஷெய்கு முஹ்பித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்
ஹு அவர்கள் கையின்பேரில் ஈமான் கொண்டு இசுலாமாகி
அதின் பின்னரவர்கள் சொன்னார்கள். திடனாக நாங்கள் மஃரி
புக் கட்டிலுள்ள நஸாறுக்களாயிருக்கும். நாங்கள் இஸ்லாமாக
வேணுமென்று நாடி யாரைத் தேடிப்போகிறது. யாருடைய

## 38-வது ஹிக்காயத்து.

——:(*):——

முப்பத்தெட்டாம் ஹிக்காயத்தாகிறது ஆரிபனா ஷெய்கு அபுல்காஸிம் முஹம்மதுபுனு அஹ்மதால் ஜீலானீ றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள், நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குற்ஸியின் கீழாலே யிருக்கிறவனாயிருந்தேன். இன்னுமவர்களுக்குச் சில நக்கீபுமார்களுண்டு. அவர்களந்தக் குற்ஸியின்பேரி லிருப்பார்கள். அதாவது ஒவ்வொரு படியின்பேரில் இரண்டுபேர்க ளிருப்பார்கள். ஆனால் வலிமார்களேயொழிய, அல்லது ஹாலுடையவர்களே யொழிய அப்படியிருக்க மாட்டார்கள். இன்னுமவர்களுடைய குற்ஸியின் கீழே சில ஆண்பிள்ளைகளிருப்பார்கள். திடனுக அவர்களாகிறது ஹைபத்தால் புலிகளைப்போ லிருப்பார்கள்.

ஒருதடவை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவு சொல்வதிலேயே மூழ்கினவர்களாய்த் தங்களுடைய தலைப்பாவில் ஒரு சுற்றவிழ்கிறவரையிலும் அறிவு சொல்லிக்கொண் டிருந்தார்கள். அவ்விதமானதெல்லாமவர்களுக்குத் தெரியாது, அப்போது கூடியிருந்த ஜனங்களெல்லோர்களும் அவரவர்களுடைய தலைப்பாக்களையும், தொப்பிகளையுங் கழற்றிக் குற்ஸியின்கீழே போட்டார்கள், அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவு சொல்லி முடிந்ததின்பின்னால் தங்களுடைய தலைப்பாகைச் செவ்வையாக்கிக்கொண்டு என்னைப்பார்த்து ஓய் அபுல்காஸிமே மனிதர்களுக்கு அவரவர்களுடைய சருவத்துகளையும், தொப்பிகளையு மெடுத்துக் கொடுத்துவிடுமென்று சொன்னார்கள், நானவர்களி னுத்தரவுப்பிரகார மெடுத்துக் கொடுத்துவிட்டேன். ஒரு துண்டு வேஷ்டிபோல் மிஞ்சியிருந்தது, அது இன்னாருக்குடையதென்று தெரியாது. அந்த மஜ்லிஸி லொருவருக்குமொரு வஸ்துங் குறைவாயிருக்கவில்லை. அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க ளந்தத்துண்டு வேஷ்டியைத் தங்களிடங் கொடுக்கும்படி கேட்டார்கள். உடனே



நானதை யவர்களிடங் கொடுத்துவிட்டேன், அவர்களதை வாங்கித் தங்களுடைய தோளிற் போட்டுக்கொண்டார்கள். அவ்விதம் போட்டவுடனே யந்த வேஷ்டி மறைவாகி யவர்களுடைய தோளி லில்லாமலாகிவிட்டது. அதைக்கண்டு நானிந்த வேஷ்டி யெவ்விடம் போய்விட்டதென்று மலைத்து மதி மயங்கிக்கொண்டிருந்தேன். அப்பால் நாயாகமவர்கள் தங்களுடைய குற்ஸியைவிட்டிறங்கினபொழுது என்னுடைய தோளைப் பிடித்து, அல்லது என்னுடைய கையைப் பிடித்துக்கொண்டு ஓய் அபுல்காஸிமே, மஜ்லிஸுக்காரர்கள் அவரவர்களுடைய தலைப்பாக்களையும், தொப்பிகளையுங் கழற்றி யெறிந்தபோது, எனக்குள்ள ஒருடப்பிறந்தாள் இஸ்பஹான் தேசத்திலுள்ளவள் அவளும் தன்னுடைய தலையில் வைக்கிற புடவைத்துண்டைக் கழற்றி யங்கிருந் திங்கை போட்டுவிட்டாள், பின்பு நீர் மனிதர்களுக்கு அவரவர்களுடைய ஆடைகளான வஸ்துகளை யவரவர்களிடத்திற்கொடுத்ததின்பின் நானந்தத் துண்டை வாங்கி யென்தோளிற் போட்டவுடனே அவளந்த இஸ்பஹான் தேசத்திலிருந்தே யவளுடைய கையைநீட்டி யெடுத்துக்கொண்டாளென்று சொன்னார்கள், றலியல்லாஹு அன்ஹு.

——[*]——

## 39-வது ஹிக்காயத்து.

——(*)——

முப்பத்தொன்பதாம் ஹிக்காயத்தாகிறது ஷரீபு அபுல்அப்பாஸு அஹ்மதுபுனுஷ் ஷைகுஅபீ அப்தில்லாஹில் முஹம்மதிபினி முஹம்மதில் அஸ்ஹரிய்யுல் ஹுஸைனீ றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். என் தகப்பனார் ஷெய்கு அபூஅப்தில்லாஹில் முஹம்மதுபுனு முஹம்மதில் அஸ்ஹரிய்யுல் ஹுஸைனீ றஹிமஹுல்லாஹு அவர்க ளெனக்கறிவித்தார்கள், அதென்னவெனில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸுக்கு இருக்கிராச்சியத்து ஷெய்குமார்களில் மகாப் பெரியோர்களும், அதிலுள்ள உலமாக்களில் குறிப்பானவர்களும், முபுத்திமார்களில் தலைமையானவர்களும்

வந்து ஹாஜிருகிறவர்களாயிருந்தார்கள். ஷெய்கு பக்கா ஷெய்கு அபூஸஃதில் கைலவிய்யி, ஷெய்கு அலிய்யுப்னுல் ஹீத்தீ, ஷெய்கு அபின்னஜீபிஸ்ஸஹ்ருவற்தீ, ஷெய்கு அபீ ஹக்கீமிப்னு றினூற், ஷெய்கு மாஜிதில்குற்தீ, ஷெய்கு மத்தருல் பாதிரீ, காழீ அபூயஃலாமுஹம்மதுப்னுல் பர்ருஃ, காழீ அபுல்ஹஸன் அலிய்யுப்னுத் தாமிகானீ, இமாம் அபுல் பத்ஹியாகிய இவர்களும், இவர்களல்லாதவர்களும் ஹாஜிருவார்கள். ஷெய்குமார்களிலுங் குறிப்பான பேர்களிலுமொருவராகிலும் பகுதாதுக்கு வருகிறதில்லை, ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய களரிக்குவந்து ஹாஜிருகிறேயொழிய. ஆனால் ஷெய்கு அப்துர்றஹ்மானித் தபுஸ்ஸவன்ஜியவர்கள் பகுதாதுக்கு வந்ததை நானறியவில்லை. ஆகிலு மவர்களுடைய ஆர்த்தபுஸ்ஸவன்ஜியிலிருந்துக்கொண்டு நெடுநேரம் பேசாதிருக்கவும், திடனுக நான் பகுதாதில் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹதீது சொல்வதைக் காது தாழ்த்திக் கேட்டுக்கொண்டிருக்கிறேனென்று பலதடவை சொல்லவும் நான் கண்டிருக்கிறேன், கேட்டுமிருக்கிறேன்.

இன்னும் ஷெய்கு அதிய்யுப்னு முஸாபிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய வீட்டிலிருந்து மலையளவில் வந்து அவ்விடத்தில் தங்களுடைய அஸாவால் ஒரு கோடு கீறி அதற்குள் புகுந்திருந்துக்கொண்டு, யாராவது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிற ஹதீதைக் கேட்க நாடினு லிந்தக் கோட்டுக்குள் வந்து புகுந்துக்கொள்ளவுமென்று சொல்லிவிட்டுப் போகாமற் கேட்டுக்கொண்டிருப்பார்கள். அவர்கள் அஸ்ஹாபிமார்களிலுள்ள பெரியோர்களு மந்தக் கோட்டுக்குள் புகுந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹதீதைக் கேட்டிருப்பார்கள். இன்னுமவர்களில்நின்றும் சிலபேர்கள் சிற்சில நேரங்களில் ஹதீது சொன்னதைக் கேட்டிருந்து அந்த ஹதீதையும், அதைச் சொல்லப்பட்ட திகதியையும் குறித் தெழுதிக்கொண்டு பகுதாதுக்கு வந்து பகுதாதிலுள்ளவர்கள் அந்தத் திகதியில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லிய அறிவுகளில்நின்றும் எழுதியிருப்



பதையும், தாங்கள் எழுதியிருந்ததையும் ஒற்றுப்பார்த்து முக்காபலாச் செய்வார்கள், அவ்விரண்டு மொற்றுமையாயிருக்கும். இன்னும் ஷெய்கு அதிய்யுப்னு முஸாபிறு றஹிமஹுல்லாஹு அவர்கள் முன் சொல்லியபடி தாஇறுவுக்குள் புகுந்தநேரத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய மஜ்லிஸில் ஹாஜிறாயிருப்பவர்களை நோக்கி ஷெய்கு அதிய்யுப்னு முஸாபிறும் உங்களுடன் வந்து புகுந்துவிட்டாரென்று சொல்லுகிறவர்களாயிருந்தார்கள். றலியல்லாஹு அன்ஹு.

## 40-வது ஹிக்காயத்து.

நாற்பதாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபூஅப்தில்லாஹி முஹம்மதுப்னு அபில்பத்ஹில்ஹறவீ றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவைப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொன்னார்கள், ஒருநாள் நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வஃலு சொல்லுகிற மஜ்லிஸுக்கு ஹாஜிறானேன். அந்நேரத்தி லவர்கள் சொல்லதில் மெத்த ஆழமாய்ச் சொல்லி நான் சொல்லுகிற வஃலைக் கேட்டிருக்க அல்லாஹுத் தஆலா ஒரு பச்சைப் புறாவை அனுப்ப நாடினு மப்படிச் செய்வானென்று சொன்னார்கள். அவ்விதம் சொல்லி முடிவதற்கிடையில் அழகான ஒரு பச்சைப் புறாவானது வந்து அவர்களுடைய சட்டைக்கையி னுட்புகுந்தது. அப்பாலது புறத்திப்பட்டு வெளியில் வரவேயில்லை. இன்னு மொருநாள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹதீது சொல்லி முடிவாகும் சமயத்தில் சில மனுடர்களுக்குச் சடையுண்டாய்விட்டது, அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னுடைய ஹதீதைக் கேட்டிருக்க அல்லாஹுத் தஆலா பச்சைப் பறவைகளை அனுப்ப நாடினு மப்படிச் செய்வானென் றருளினார்கள். அப்படிச் சொல்லி முடிவாக முன்னே அவ்விடத்திலிருப்

பவர்களடங்கலுங் காணும்படியாகப் பச்சைப்பறவைகளாய்வந்து அந்த மஜ்லிஸில் நிறைந்துவிட்டது.

இன்னும் ரவீ சொல்லுகிறார், இன்னம் வேறொரு நாள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய குத்றத்தில் அறிவு சொல்லிக்கொண்டிருந்தார்கள், அவர்கள்சொல்லுகிற ஹதீதைக்கொண்டு மனிதர்களடங்கலுக்கும் திடுக்கமும், உள்ளச்சமும் அடையவுளாக்கிக்கொண்டது, அப்போதந்தக் கணிக்கருகே மகா ஆச்சரியமானவடிவும், படைகோலமும், பாரதூரமுமான பக்ஷிராஜமொன்று வந்து பறந்தது, அப்போது மனிதர்களிற் சிலர் அந்தப்பக்ஷிராஜத்தைப் பார்ப்பதால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹதீதைக் கேட்பதை விட்டும் பராக்காகிவிட்டார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவாயால் உண்மையாய் வணங்கப்பட்ட நாயனின்பேரி லாணையாக நாவிந்தப் பக்ஷிராஜத்தை நோக்கி நீ துண்டுதுண்டாய்த் தெறித்துச் சாவென்று சொல்ல நாடினால், அவ்விதமது துண்டுதுண்டாய்த் தெறித்துச் செத்து விழுந்துவிடுமென்று சொன்னார்கள். அப்படிச்சொல்லி வாய்மூடு முன்னே அந்தப் பக்ஷிராஜமானது துண்டுதுண்டாய்த் தெறித்துச் செத்து விழுந்துவிட்டதென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

———*———

## 41-வது ஹிக்காயத்து.

——(*)——

நாற்பத்தோராம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபுல்ஹஸன் அலிய்யுபுனு யஹ்யல் அஸஜீ றஹிமஹுல்லாஹு அவர்களைத் தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்குக் காலில் குறைந்த அபூஸாலிஹ்நஸ்ரீ விசேடமறிவித்தார்கள், அவர்கள் சொல்கிறதாவ தென்னவெனில் நானென்னுடைய சிறிய தந்தை அப்துல்வஹ்ஹாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர்கள்



சொன்னார்கள், நான் அஜம் கட்டிலுள்ள அநேகத் தேசங்களிற் போய்ப் பற்பலவிதமான கல்விகளைக் கற்றுத் தேறியபின் பகுதாதுக்கு வந்தேன். அப்பாலொருநாளெனது தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் நாளுங்களுடைய சமுகத்திலிருந்து மனிதர்கள்பேரி லறிவு சொல்லுவதற்குத்தரவு கிடைக்கவேணுமென்று கேட்டேன். அதற்கவர்கள் நல்லதென் றுத்தரவருளினார்கள். பின்பு நான் குறுஸியின்பேரிலிருந்து என்னுடைய தகப்பனாரவர்கள் கேட்டிருக்கத் தக்கதாய் அறிவுகளில்நின்றும், வஃலுகளில்நின்றும் அல்லாஹுத் தஆலா நாடியதைக்கொண்டு ஹதீது சொன்னேன். ஆனால் ஒருக் கல்பாவது உள்ளச்சமாகவுமில்லை, ஒரு கண்ணீர்த் துளியுமோடவுமில்லை. அப்போது கூடியிருந்த ஜனங்களெல்லோர்களும் சப்தமிட்டலறிக்கொண் டென்னுடைய தகப்பனாரவர்களை அறிவு சொல்லும்படி மெத்த விரும்பினார்கள். உடனே நான் குறுஸியைவிட்டுக் கீழிறங்கிவிட்டேன். அப்பால் எனது தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்தக் குறுஸியின்பேரிலேறிச் சொன்னார்கள். நான் நேற்றைத்தினம் நோன்பாளியாயிருந்தேன். அப்போதெனக்கு யஹ்யாவுடைய உம்மா சில முட்டைகளைப் பொரித்து அவைகளையொரு சஹ்னிற் போட்டு ஒரு பக்கத்தில் வைத்தாள். அப்பாலதை யொரு பூனை வந்து அந்த சஹ்னைத் தள்ளிவிடவே அது கீழ விழுந்துடைந்துபோய்விட்டதென்று சொன்னார்கள். அந்தச்சொல்லைக் கேட்டமாத்திரமே அந்த மஜ்லிஸிலுள்ளவர்களடங்கலும் சப்தமிட்டழுதுவிட்டார்கள். பிறகு என்னுடைய தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறுஸியைவிட்டிறங்கினபோது நான் பற்பலவிதமான அறிவுகளைச் சொல்லியும் யாதொரு குணபாடுஞ் செய்யவில்லையே, தாங்கள் சும்மா ஒரு செய்தி சொன்னதுங் குணங்கொடுக்கிறதே அதென்னமென்று கேட்டேன். அதற்கென்னுடைய தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னைப் பார்த்து என்னுடைய அருமைமகனே நீ உன்னுடைய பயணத்தை மாற்றிவிட்டாய். நீ கல்விகள் கற்கவென்று பூமிகளளவில் ஸபறு செய்தாயேயின்றி யவ்விடத்திற்குப் போனாயாவென்று தங்களுடைய கைவிரலைக்கொண்டு வானத்தளவில் இஷாறுக் காட்டினார்கள். பின்னு

மென்னைப்பார்த்து என தருமையான மகனே, திடனாக காஷுபதே சாசனக் கொலுவி லேழுந்தோறெல்லாம் என்னுடையக் கல்பில் ஹக்கு ஸுபுஹானஹு வதஆலா தஜல்லியாகி அவனுடைய அருளான தென்னிலெங்கும் பரிபூரணமாகி நிறைந்து பரந்து விரிந்துவிடும். ஆகையால் நானவனுடைய ஹைபத்தைக்கொண்டு பிடிக்கப்பட்ட ஷிரிவாயவனுடைய சமூகத்திலின்னும் கேள்வியானதைக் கொண்டு ஹதீது சொல்லுவேன். ஆனதால் மகனே நீ மனிதர்களில் நின்றுங் கண்டவைகளெல்லா மூண்டாகிறதெனறு சொன்னார்கள்.

இன்னும் அப்துல்வஹ்ஹாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். அதற்குப்பிறகு நான் குர்ஸியின்பேரிலேறிக் கல்விகளில்நின்றும் உஸூல், பிக்ஹு, வஃலு இவைகளெல்லாவற்றையுமெடுத்து என்னுடைய தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கேட்டிருக்க உபதேசிப்பேன் என்னுடைய உபதேசமானது ஒருவருக்கும் யாதொரு குணபாடுஞ்செய்யாது. பின்பெனது தகப்பனாரவர்கள் குர்ஸியிலேறியிருந்துக்கொண்டு, எடா மடையனே சுத்த விரதனமாகிறது. ஒரு சாஅத்து ஸபுறுச் செய்வதாயிருக்குமென்று சொல்வார்கள். அந்த உடனே காரியிலிருப்பவர்களெல்லாமொரு கூக்குரலிட்டுப் பதறுவார்கள்.

ஆகையால் சில நேரங்களில் எனது தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திலெப்படி யிருப்பதைப்பற்றி நான் கேள்ப்பேன். அதற்கவர்களென்னைப்பார்த்து நீ புன்னியிலே பழக்கம் பேசுகிறவன், நான் என்னல்லாத்தவனிலே பழக்கம் பேசுகிறவனாயிருக்குமென்று சொல்வார்கள். இன்று பென்னுடைய தகப்பனாரவர்கள் வஃலு சொல்லுகிற காரியில் யாராவதொருவர் ஒரு மஸ்அலாவைப்பற்றி யவர்களிடத்திற் கேட்கப்பட்டால், அதற்கவர்கள் நானதின் பேரில் யுதவாய் கேட்டுச் சொல்லுகிறேனென்று தலையைக் கவிழப் போடுவார்கள். அப்பாலவர்களுக்கு ஹைபத்தும், கனதியும் அடையவனாயும் அதின்பிறகு அல்லாஹுத்தஆலா காடியதைக்கொண்டு மறுமொழி சொல்வார்கள். பின்பு சொல்வதற்கரிய சிறப்புடைய ஆண்டவனின் சிறப்பின்பேரிலாணையாக என்னுடைய ஹக்கான அறிவானது சொல்லும் திடனாக றத்தைவிட்டு மூப்மை அச்சந்தீர்க்குவிட்டேனென்று



சொல்லப்படுகிற மட்டிலும் நான் சொல்லமாட்டேன், திடனாக அப்துல்காதிரே நீர் பழக்கம் பேசும் எல்லோர்களுங் கேட்பார்களென்று சொல்லப்படுமென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

## 42-வது ஹிக்காயத்து.

நாற்பத்திரண்டாம் ஹிக்காயத்தாகிறது. மெஞ்ஞான சொரூபாகிய மகாபெரிய மேன்மையையுடைய ஷெய்கு பக்கா றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நானொருதடவை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸிற் போய் ஹாலிருயிருந்தேன். அப்போதவர்களவர்களுடைய குர்ஸியின் மேற்றட்டிலிருந்து ஹதீது சொல்லிக்கொண்டிருந்தவர்கள் தங்களுடைய ஹதீது சொல்வதை நிறுத்திவிட்டு ஒரு சாஅத்து வரையிலும் ஞாபகமில்லாதிருந்துவிட்டு விரைவாகக் கீழே யிறங்கிவிட்டார்கள். பின்பு குர்ஸியின்பேரிலேறி யிரண்டாம் படியிலிருந்தார்கள். அப்போதெனக்கு ஷஹூதில் தெரிசனையாக்கப்பட்டதென்னவெனில் திடனாக் குர்ஸியின் மேற்படியாகிறது. கண்ணெட்டுந் தூலைக்கு விஸ்தீரணமாகிவிட்டது. அதில்சுவர்க்கத்தாத்துகில்போல் பச்சைநிறமான ஸுன்துஸுப்பட்டாலுள்ள விரிப்புகள் விரிக்கப்பட்டிருக்கிறது. அதில் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், அபூபக்கர் ஸித்தீக்கு, உமறுல் பாறூக்கு, உதுமானு துன்னூறைன், அலியுனில் முறுத்தலா றலியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன் இவர்களெல்லா மிருக்கிறார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடையக் கல்பின்பேரில் ஹக்கு ஸுபுஹானஹு வதஆலா தஜல்லியானான். அந்த ஜல்லியதற்குத் தாங்க முடியாததால் கீழே விழ முடுகிறவரையிலும் சாய்ந்தார்கள். அப்படிக்கவர்கள் விழாதிருக்கும்பொருட்டு அவர்களை றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பிடித்துக்கொண்டார்கள். அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களொரு ஊக்குருவியைப்போலாகிற வரையிலுஞ் சிறுத்தார்கள். பின்பு அபளியான

ஸமுறத்திலாகிற மட்டிலும் வளர்மையாய்ப் பெருத்தார்கள். பிற்பாடித்தத் தெரிசனைகளடங்கலும் மெய்யென விட்டு மறைந்ததென்று ஷெய்கு பக்கா றஹியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார். அப்போதவர்களிடத்தில் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களும், அவர்களுடைய அஸ்ஹாபிமார்களும், வந்து ஹாஜிறானதையும், அவர்களைக்கண்டதையுங் குறித்துக் கேட்கப்பட்டது. அதற்கு ஷெய்கு பக்கா றஹியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவுளம் பற்றினார்கள் அவர்களுடைய றூஹுகள்தான் மிலமிதாலில் அவர்களுடைய கோலங்களாகக் கோலங் கொண்டதென்று திருவுளமானார்கள். இடனுக அல்லாஹுத் தஆலா. அவர்கள் வெளியாகும்படிக்குள்ள பலன் கொண்டு அந்த றூஹுகளை வெளியாக்கினன்; ஆனதாலவர்களைக் கண்டுக்கொள்ளப் பலத்து நிற்கக்கூடியவர்களடங்கலுங் கண்டுக்கொள்வார்கள். சரீரங்களுடைய ஸூறத்துகளிலுங் கண்டிப்புகளுடைய வருணிப்புகளிலுஞ் சால்வார்கள். இடனுக இதற்குத் தலீலாகிறது மிஃறாஜுடைய ஹதீதாயிருக்கும்.

இன்னும் ஷெய்கு பக்கா றஹியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஹியல்லாஹு அன்ஹு அவர்கள் சிறுத்ததையும், பெருத்ததையும்பற்றிக் கேட்கப்பட்டது. அதற்கவர்கள் முந்தின தஜல்லியானது ஒரு விபத்தைக் கொண்டாயிருந்தது, அது எப்போதுற்கொற்ற விபத்தானால் அது வெளியாவதற்கு நபீயனவிற் சேர்க்கப்பட்ட பசிப்புக்கொண்டேயல்லாது ஒரு மனிதரால் நிற்கக்கூடாதே. அப்போதுற்கொற்ற விபத்தாயிருக்கும். இதற்காகவேண்டிய றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பிடித்துக்கொள்ளாதிருந்தால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஹியல்லாஹு அன்ஹு அவர்கள் விழுந்துவிடவே போனது, இனி யிரண்டாம் தஜல்லியானது தாங்கள் வருணிக்கப்பட்ட நாயனுடைய புறத்தால் ஜலாலியத்தான விபத்து கொண்டுண்டானதாயிருக்கும். ஆகையால்தான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஹியல்லாஹு அன்ஹு அவர்கள் சிறுத்த வுருவமானது. மூன்றாவது தஜல்லியாகிறது தாங்கள் ஷுஹூது செய்யப்பட்ட றப்புடையபுறத்தால் ஜமாலியத்தான விபத்துக்கொண்டுண்டானதாயிருக்கும். ஆனதாலேயே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஹியல்லாஹு அன்ஹு அவர்கள் பெருத்த வுருவமாய்



வளர்ந்து பருத்ததென்றார்கள். தாலிக்க பலுல்லாஹி அப்படியெல்லாம் தஜல்லியாவதும் அதை யேந்துகொள்ளுகிறது அல்லாஹுத் தஆலாவுடைய வரிசையாயிருக்கும். யூத்தீஹிமன் யஷாவு அவனுடைய வரிசையை அவனுடைய அடியார்களில் அவன் நாடிய பேர்களுக்குக் கொடுப்பான். வல்லாஹு துல்பலுலில் அலீம். அல்லாஹுத் தஆலாவாகிறவன் மட்டிடவொண்ணாத பகாவலுப்பமான வரிசையுடையவனாயிருக்கும்.

——:o:——

## 43-வது ஹிக்காயத்து.

———:✱:———

நாற்பத்திமூன்றாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபுல்பனூஅ அஹ்மதுபுனுல் காஸிமிபுனு அபதில்லாஹில் குறஷியில் பகுதாதியில் பஸ்ஸாஸ் றஹிமஹுல்லாஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஹியல்லாஹு அன்ஹு அவர்களாகிறது தைலஸான் போடுகிறவர்களாயும், உலமாக்களுடைய வுடுப்புகளணிகிறவர்களாயும், விலையுயர்ந்த புடவைகளையுடுத்துகிறவர்களாயுமிருந்தார்கள். அப்படியிருக்கையில் அவர்களுடைய காதிம் ஒரு தடவை ஹிஜ்றத்து ஐநூற்றி ஐம்பத்தெட்டாம் வருஷத்தில் என்கடைக்குப் போய் கொண்டுவந்து எனக்கொரு புடவை வேணும். அதானது முழம் ஒன்றுக்கு விலை ஒரு தங்கக் காசுக்கு ஒருமஞ்சாடி முதல் கூடாமலுங் குறையாமலுமிருக்கவேணுமென்று சொன்னார். அப்போது ஈனப்படிக்கொற்றபுடவை யாருக்கென்று கேட்டேன். அதற்கவர் என்னுயசம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஹியல்லாஹு அன்ஹு அவர்களுக்கென்று சொன்னார். அப்போதென்னுடைய மனதில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஹியல்லாஹு அன்ஹு அவர்களும் ஸுல்தான்களுக்குள்ள உடுமானங்களில் விலையுயர்ந்ததொன்றையும் விடவில்லையென்றெண்ணிக்கொண்டேன். அப்படிப்பட்ட ஆசாட்டமான ஒக்கு தென்னுடைய கல்பில் வந்து முடியவில்லை, யென்னுடைய காலிலொரு ஆணி தைத்து அதின் வருத்தத்தாலெனக்கு மௌத்துடைய ஹால்மட்டிலுமாகிப்போயும் அது தீரவில்லை. ஆகையால்

மனிதர்களெல்லாம் கூடிவந்து அந்த ஆணியைப் பிடுங்கத் தெண்டித்தார்கள். அவர்களால் முடியவில்லை, அப்போது நானென்னைத் தூக்கிக்கொண்டுபோய் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமூகத்திற் போட்டுவிடுங்களென்று சொன்னேன். அந்தப்படியே யென்னைத் தூக்கிக்கொண்டுபோய் அவர்கள் சமுகத்தில் போட்டுவிட்டார்கள். உடனே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னைப் பார்த்து ஓய் அபுல்பனுலேயும்முடைய மனதிலென்பேரிலே இடையூறு சொல்கிறீர், நானுண்மைகொண்டு வணங்கப்பட்ட நாயனையே, என்னுடைய ஹக்கினையே, ஒருமுழம் ஒரு தங்ககாசு பெறுமதியான சட்டையை யணிந்துக்கொள்ளுமென்று சொல்லப்படுகிறவரையிலும் நானதை யணியமாட்டேன். ஓய் அபுல்பனுலே யிதாகிறது கபனுயிருக்கும். மைய்யித்துடைய கபனுடையாகிறது அதின் மௌத்தைத் திட்டமாயறியப்பட்டபிறகு அதை யேற்றுக்கொள்ளுமென்று சொல்லிப் பின்பு அவர்களுடைய கையை யென்னுடைய காலின்பேரில் நடத்தாட்டினார்கள். அக்கணமே யந்த ஆணியும் வெளியாயிட்டது, வருத்தமும் நீங்கிவிட்டது, அல்லாவினுலே யந்த ஆணியானது எவ்விதம் வந்ததென்றும், எவ்விதம் போனதென்றும் நானறியமாட்டேன். அப்பால் நான் ஓடுகிறபோதுங்கூட அதினுடைய நோவு எனக்குத் தெரியவில்லை, பிறகு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள், அந்த அபுல்பனுலென்பவர் அவருடைய மனதில் எனக்கிடையூறு நினைத்ததே ஆணியாய்த் தைத்துவிட்டதென்று சொன்னார்கள்.

——(*)——

## 44-வது ஹிக்காயத்து.

——[*]——

நாற்பத்திநான்காம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபூமுஹம்மது றஜபுப்னு அபிமன்ஸூரித்தாரீ றஹிமஹுல்லாஹு அவர்களையும், ஷெய்கு அபூபைது அப்துர்றஹ்மானுப்னு ஸாலிமுல் குறைஷீ றஹிமஹுல்லாஹு அவர்களையும் தொட்டு ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். எனக்குக் காசேல் குலாத்து அபூஸாலிஹு நஸ்றும், ஷெய்கு அபுல்ஹசன் அலியிப்னுல் கப்பாஸூம் சொன்னார்க



ளென்று ஷெய்கு அபூமுஹம்மது சொன்னார்கள். அந்த ஷெய்கு அபூஸாலிஹு எனக்கென்னுடைய தகப்பனார் செய்யிது அப்துர்றஸ்ஸாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்களென்று சொன்னார்கள். எனக்கு ஷெய்கு வுமறில் பஸ்ஸாஸ் றஹிமஹுல்லாஹு அவர்களறிவித்தார்களென்று அபுல்ஹஸன் சொன்னார்கள். எனக்கு ஆலிமான ஷெய்கு அபூஇஸ்ஹாக்கு இபுறாஹீமுப்னு ஸஃதுர்றூஸீ அறிவித்தார்களென்று ஷெய்கு அபூபைது சொன்னார்கள். ஆக இவர்களடங்கலுஞ் சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் உலமாக்களுடைய வுடுப்புடுக்குகிறவர்களாயும், தலையில் தைலஸான் போடுகிறவர்களாயுமிருந்தார்கள். அவர்கள் கோவேறு கழுதையிலேறுவார்கள். இனுமவர்களுக்குக் கொடி யுயர்த்தப்படும், அவர்கள் மெத்த வுயரமான குர்ஸியிலிருந்து ஹதீது சொல்வார்கள். அவர்களறிவு சொல்வதில் விரைவும், உரமுமுண்டாயிருந்தது. காது தாழ்த்திச் கேட்கப்பட்ட சொரமவர்கள் வசனங் கையேற்கப்பட்டதாயிருந்தது. அவர்களொரு கட்டளை செய்தால் அவர்களுடைய கட்டளையைத் தீவிரமாய்க் கேட்கப்படும். வன்னெஞ்சனவர்களைக் கண்டானுகிலவனுளச்சப்படுவான், அவர்களை நீ கண்டாயாகில் திடனுக எல்லா நாதாக்களையுங் கண்டதுதான், அவர்கள் வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப் போக வெளியிறங்கி நடந்தார்களானால் மனிதர்களெல்லாம கடைவீதிகளிலிருந்து அல்லாஹுத் தஆலாவினிடத்தில் ஆண்டவனை இந்த ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பொருட்டால் எங்கள் நாட்டங்களடங்கலையும், எங்களுக்குக் கைகூடும்படியாக வுதவி செய்தருளென்று துஆவிரந்துக்கொள்வார்கள். திடனுக அவர்களுக்கு அழகான கீர்த்தியும், நடப்பும், தொனியுமுண்டாயிருந்தது.

இன்னும் திடனுக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களொருநாள் வெள்ளிக்கிழமையில் ஜும்ஆப்பள்ளியிலிருந்து தும்மிவிட்டு அல்ஹம்துலில்லாவென்று சொன்னார்கள். அப்போதங்கிருந்த மனிதர்களெல்லாம் பெரும் சப்தமாக யறுஹமுக்கல்லாஹ், யறுஹமுபிக அல்லாஹுத் தஆலா வுங்களுக்கு றஹ்மத்துச்செய்து உங்கள் பொருட்டா லெல்லவர்களுக்கும் றஹ்மத்துச் செய்வானுகவுமென்று சொன்னார்கள். அப்போது

ஸுல்தான் முஸ்தன்ஜிது அந்தப்பள்ளியி லொரு காமறையிலிருந்தார். அவரிதென்ன முழக்கமென்று கேட்கவே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தும்மிவிட்டு அல்ஹம்துலில்லாஹி என்று சொன்னதற்கு மனிதர்கள் மறுமொழி சொன்ன முழக்கமென்று சொல்லப்பட்டது. அதுகேட்டு ஸுல்தான் மிகவும் பயந்துவிட்டார்.

இன்னும் ஷெய்கு அபுல்ஹஸன் அலிய்யுபுனு முஹம்மதிபினி அஹ்மதல் பகுதாதிய்யல் ஹவ்பீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது, அவர்கள் சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாரதூரமான ஹைபத்துடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் ஒரு மனிதனைவிற் பார்ப்பார்களேயானால் அம்மனிதன் ஹைபத்தால் நடுக்கமுற முடிந்துவிடுவான். சில நேரங்களில் நடுங்கிப்போவானே. இன்னுஞ் சில நேரங்களில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிருப்பார்கள், அவர்களைச்சுற்றிச் சில ஜனங்களுமிருப்பார்கள். திடுகூக ஷெய்கு முஹ்யித்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சிங்கங்களைப்போலிருப்பார்கள். அவர்களுடைய வலதுக்கு வழிப்படுவதாலும், அவர்களுக்கு வழிப்பட்டு நடப்பதாலும் அவர்களைக் காண விரைவானவர்களை நான் காணவேயில்லையென்று சொன்னார்கள்; றலியல்லாஹு அன்ஹு.

—[*]—

## 45-வது ஹிக்காயத்து.

—(*)—

நாற்பத்தைந்தாம் ஹிக்காயத்தாகிறது ஸாலிஹாகிய ஷெய்கு அபுல்ஹஸன் அலிய்யுபுனு முஹம்மதுபுனு அஹ்மதல் பகுதாதிய்யு இபுனுல் ஹம்மாமீ றலியல்லாஹு அன்ஹுத் தஆலா அவர்களைத்தொட்டும் பேசிவைப்பட்டதாயிருக்கும். அவர்கள் கனவிற் கண்டதாய்ச் சொல்லுகிறார்கள். நான் சிறுபிள்ளையாயிருக்கும்போது அதாவது ஹிஜுறத்து ஐந்நூற்றி ஐம்பத்திமூன்றும் வருஷம் நடுறு ஸபா லென்னும் நதியின் சேர்கிறது இரத்தமும், சீழுமாயும், அதின் மீன்-



களெல்லாம் பாம்புகளாயும், புழுப்பூச்சிகளாயுமிருப்பதுடன் அது மேல் வெள்ளம்போல் பெருகிக்கொண்டே வருகிறது. நானது என்னைக் கொண்டுபோய்விடுமென்று பயந்து வெருண்டோடி யென்னுடைய வீட்டுவாசலிலும் போனேன். அப்போது ஒரு மனிதர் என் வீட்டுக்குள்ளிருந்து ஒரு விசறியைத் தந்து இதைத் திறமாகப் பிடித்துக்கொள்ளென்று சொன்னார்கள். அதற்கு நானவர்களைப் பார்த்து இது என்னைச் சுமந்துகொள்ள மாட்டாதேயென்று சொன்னேன். அப்போதவர்கள் உன்னுடைய சமானுறுதியானது உன்னைச் சுமந்துக்கொள்ளும் பிடியென்று சொன்னார்கள். அதுபோலந்த விசறியில் நின்றுமொரு விடத்தை நான் பிடித்தேன். அவ்விதம் பிடிக்கவே உடனே நாமென்னுடைய வீட்டிலிருக்கிற வொரு கட்டிலின்பேரிலிருந்து அந்த விசறி தந்தவரிடமாய் விட்டேன். நான் பயந்து நடுங்கிய நடுக்கமு மொடுங்கிவிட்டது. அப்பால் நானவர்களை நோக்கி யுங்களைக்கொண்டு அல்லாஹுத் தஆலா என்பேரி லுபகாரஞ் செய்தானே அந்த நாயன்பேரிலாணையாக நீங்களாரென்று கேட்டேன். அதற்கவர்கள் நானுன்னுடைய நபீ முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமாயிருக்குமென்று திருவுளமானார்கள். அவர்களவ்விதம் திருவுளமாகவே அந்த உடனே நானவர்களுடைய ஹைபத்தால் பயந்து நடுக்கமுற்று நான் அவர்கள் சமுகத்தை நோக்கி அல்லாவுடைய றசூலே நானவனுடைய வேதத்தையும், உங்களுடைய மார்க்கத்தையும் பற்றிப் பிடித்து அதின்பேரில் ஸெளத்தாவதற்கு நீங்கள் அல்லாஹுத் தஆலாவிடத்தில் துஆச் செய்யவேணுமென்று கெஞ்சி மன்றாடினேன். அதற்கவர்கள் ஓய் நல்லது உன்னுடைய ஷெய்காகிறது, ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹுவாயிருக்குமென்று திருவுளமானார்கள். நானவ்விதமாகத் துஆக்கேட்கும்படியாக மூன்றுதடவை தக்ரறு செய்தேன். அதற்கு நபீ ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களெனக்கு மூன்று தடவையிலும் அந்த ஜவாபையே மீள்வித்தார்கள்.

பின்பு நான் முழித்து இந்தக் கனவை யென்னுடைய தகப்பனாரவர்களுக்கும், இன்னும் எங்களிலுள்ளவர்களுக்கு மறிவித்தேன். இனி யிரவு விடிவேளுனபொழுது ஸுபுஹுத் தொழுதுவிட்டு என் தகப்பனாரவர்களென்னைக் கூட்டிக்கொண்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை ஸியாறத்துச்

செய்யவேணுமென்று நாடிப் போனார்கள். அந்த நாளவர்கள் போதத் தென்னும் இபாதத்தானாளில் அதாவது வணக்கஸ்தலத்தில் ஓதிக் சொல்லுகிற நாளாயிருக்கது. நாங்க ளவ்விடத்திற்குப் போன போதவர்கள் ஓதிக் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஜனங்கள் மிகுந்து நெருங்கியிருப்பதால் அவர்களுக்குக் கிட்ட முடிக வலாகி. ஆகையால் மனிதர்களுக்குக் கடைசியிற்போய் யுட்கார்ந்திருந்தோம் அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவு சொல்வதை நிறுத்திவிட்டுத் தங்களருகி லிருக்கிற ஜனங்களை நோக்கி யெங்களையின் ஷாருச் செய்து அதோ அந்த இரண்டுபேர்களை யுமென்னிடத்திற் கொண்டுவாருங்களென் றுக்காவு செய்தார்கள். அதுபோல் என்னையு மென்னுடைய தகப்பனாரவர்களையும் மனிதர்களுடைய கழுத்துகளின்மேரித் தூக்கப் பட்டவர்களாய் அவர்களுடைய சமுகத்திற் கொண்டுபோய் விடப் பட்டது. உடனே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலி யல்லாஹு அன்ஹு அவர்க ளெங்களைத் தாங்களிருக்கிற குறு ஸியின் மேலேறும்படி சொன்னார்கள். அப்போ தென்னுடைய தகப்பனாரவர்க ளேறினார்கள் நானு மவர்களுக்குப் புறமே போ னேன். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலி யல்லாஹு அன்ஹு அவர்க ளென்னுடைய தகப்பனாரவர்களைப் பார்த்து நீங்கள் நம்மிடத்தில் தலீல் கொண்டே யொழிய, வர வில்லையென்று சொல்லி யென் தகப்பனாரவர்களுக்குத் தங்களு டைய சட்டையை யுடுத்தாட்டி யெனக்கவர்களுடைய சிறப்பான சிரசின் மேலிருந்த தொப்பியைப் போட்டார்கள். பின்பு நாங் கள் மனிதர்களுக் கிடையிலிருந்துவிட்டோம். அப்போது என் தகப்பனாரவர்களுக்குப் போட்டிருந்த சட்டையானது பிரண்டி ருந்தது. அதைச் சுற்றிச் சரியாகப் போடவேணுமென் றென்னு டைய தகப்பனாரவர்கள் நாடியபோது மனிதர்கள் போய்த் தீர மட்டிலும் பொறுமை செய்யுமென்று சொல்லப்பட்டது. அப்படி யாயிருக்கையில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல் லாஹு அன்ஹு அவர்கள் ஓதிக் சொல்லி முடித்துவிட்டுக் குறுஸியிலிருந்து கீழே யிறங்கினார்கள்.

அப்போது மனிதர்களில் ஒருவரும்போகாமல் மிருதமாகவே யிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமயத்திற் பின்னுமென் தகப்ப



னாரவர்கள் அந்தச் சட்டையைச் சரியாக அணைய நாடிப் பார்க் கும்போது முன்போல் பிரட்டப்பட்டதாயிராம லந்தச் சட்டையா னது சரியாக இருக்கக்கண்டு என் தகப்பனாரவர்கள் போதக் கே டாய் விழுந்துவிட்டார்கள். அதனால் மனிர்களெல்லாங் குழப்ப மானார்கள். அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலி யல்லாஹு அன்ஹு அவர்கள் குப்பத்துல் அவ்லியாவென்னுங் கூடாரத்திற்குள் ளிருந்துக்கொண்டு எங்களைத் தங்களிடம் அழை த்து வரும்படிக் குத்தரவு செய்தார்கள். அதுபோ லழைக்கப்ப பட்டு நாங்களவர்கள் சமுகத்திற் போய்ப் புகுந்தோம். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் என் தகப்பனாரவர்களைப் பார்த்துச் சொன்னார்கள். ஒருவ ருடைய தலீல் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களாயும், அவருடைய ஷெய்கு அப்துல்காதிறுயு மிருப்பாரே அப்படிப்பட்ட வாருக்குச் சங்கையில்லாம லிருக்குமா, அதாவது கருமத்தில்லாமலி ருக்குமா, ஆங்கயா னுபக்கிது வொரு கருமத்தாயிருக்குமென்று மையும், காகிதமுங் கொண்டுவரச்சொல்லி யவர்களுடைய கிறுக்கா வுடைய இன்னுதாகிய ஸில்ஸிலாவை யெழுதித்தந்தார்கள்.

## 46-வது ஹிக்காயத்து.

———:*:———

நாற்பத்தாறும் ஹிக்காயத்தாகிறது ஷெய்குல்ஆரிபுல்குத்வத்தி அபுன்னஜீ பிஸ்ஸஹ்று வற்திய்யி றலியல்லாஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கென்னுடைய தகப்பனாரவர்கள் அறிவித்திருக் கிறார்கள். அவர்கள் சொல்லுகிறார்கள். ஷெய்கு ஹம்மாதத்தை யாலா அவர்களுக்கு எல்லா இரவுகளிலும் தேன் குளவிகளிரைவது போலொரு இரைத்தற் கேட்கப்படும். அப்போது ஷெய்கு ஹம்மா துடைய அஸ்ஹாபிமார்கள் கூடி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்கா திறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் வந்து அந்தச்சங் கதியைத் தெரிவித்து எங்கள் நாயகமே யிதுகருமத்தைக் குறித்து தாங்கள் ஷெய்கு ஹம்மாதவர்களிடத்திற் கேட்கவேணுமென்று

விரும்பினார்கள். ஆனாலக்காலில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் கூட்டாளியாயிருந்தார்கள். அதனாலே அவர்களைக்கொண்டு கேட்கும்படி விரும்பினார்கள். இது நடந்தது ஹிஜுறாத்து ஐந்நூற்றி ஐம்பத்தெட்டாம் வருஷமாயிருக்கும். அப்பொழுது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் கேட்டபோது ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து ஓய் அப்துல்காதிறே திடனாக வெனக்குப் பனிரண்டாயிரம் முரீதுகளுண்டு. நானெல்லா மொவ்வொரு இரவுகளிலும் அவர்களுடைய பெயர்களைச் சொல்லி ஒவ்வொருவர்களுக்கும் அவரவர்களுடைய ஹாஜத்துகளை நிறைவேற்றிக் கொடுக்கும்படி மகா சிறப்பும், வல்லமையுமுடைய அல்லாஹு சுப்ஹானஹு வதஆலாவினிடத்தில் கேட்டுக்கொள்வேன். இன்னுமவர்களிலிருந்து யொருவன் ஒரு பாவத்தைச்செய்தால் அந்தப் பாவ இச்சை அலைத்துபோக முன்னே யவன் மௌத்தாய்விட்டாலேனும், அல்லது அவன் தௌபாச்செய்து மீண்டிட வேணுமென்று கேட்பேன். ஏனெனில் அப்படிக்கில்லாத விஷயத்தில் அந்தப் பாவ இச்சையிலேயே நீண்டு கிடந்து மோசம்போய்விடுவான், அதற்காக அப்படிக் கேட்பேனென்று சொன்னார்கள்.

அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து அல்லாஹு சுப்ஹானஹு வதஆலா திடனாக எனக்கொரு பதவியைத் தந்தாலல்லவா என்னுடைய முரீதீன்களிலொருவரும் தௌபாவின்பேரிலேயொழிய மௌத்தாகாமலிருக்கும்படிக்கும் என்னுடைய தலைமைத்தனம் அவர்களெல்லோர்களையும் அடைய வளைந்து அவர்களுடங்களுக்கும் நான் ஈகையாயிருக்கும்படிக்கும் என்னுடைய நாயனிடத்திலொரு உறுதிமான மெய்த்தக்கொள்வேனென்று சொன்னார்கள். பின்பு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக் கப்படி கொடுப்பனென்றும் அவர்களுடைய சிறப்பு அந்த முரீதீன்களுடங்களுக்குங் கிடைக்குமென்றும் அல்லாஹு சுப்ஹானஹு வத்த ஆலா என்னுடைய ஷாஹறுஜி லயிவித்துத் தந்திருக்கிறானென்று



ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

——[*]——

## 47-வது ஹிக்காயத்து.

——:*:——

நாற்பத்தேழாம் ஹிக்காயத்தாகிறது செய்யிது காலில்குலாத்தி அபூஸாலிஹு நஸ்று றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரர்களாகிய எனது தகப்பனார் செய்யிது அப்துர்றஸ்ஸாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களும், என் சிறிய தகப்பனாராகிய செய்யிது அப்துல்வஹ்ஹாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களும் அறிவித்தார்கள். அதாவதென்னவென்றால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள், சோபனமாகிறது என்னைக்கண்டவர்களுக்கும், என்னைக் கண்டவரைக் கண்டவர்களுக்கும், என்னைக்கண்டவரைக் கண்டவரைக் கண்டவர்களுக்கும், இன்னும் என்னைக் கண்டவரைக் கண்டவரைக் கண்டவரைக் கண்டவர்களுக்குமாயிருக்கும். ஆனாலென்னைக் காணாதவனுக்கே கைசேதமடங்கலுமென்று சொன்னார்கள்.

இன்னுமவர்களைத்தொட்டும் ஷெய்கு அபுல்காஸிமுல்பஸ்ஸாஸ் றஹிமஹுல்லாஹு அவர்கள் பேசினதில் ஷெய்கு அபூஸாலிஹு நஸ்று றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். அதாவது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். ஷெய்கு ஹுஸைனுல் ஹல்லாஜெனபவர் சறுக்கிப்போனார். அவருடைய காலத்திலவருடைய கையைப் பிடித்துக்கொள்ள வொருவருமுண்டாயிருக்கவில்லை, நானவருடைய காலத்திலிருந்திருப்பேனேயானால் நானவருடைய கையைப் பிடித்துக்கொள்வேன். நானே என்னுடைய கூட்டாளிமார்களிலும், என்னுடைய முரீதீன்களிலும் நின்றும் கியாம பரியந்தமுமவர்களுடைய வாகனம் சறுகிவிட்டதே அப்படிப்பட்டவர்களைக் கை

தாக்கி யெடுத்துக்கொள்பவனா யிருக்குமென்று சொன்னார்கள். றழி யல்லாஹு அன்ஹு.

—(*)—

## 48-வது ஹிக்காயத்து.

—:0:—

நாற்பத்தெட்டாம் ஹிக்காயத்தாகிறது ஷரீஃபான ஷெய்கு அபுமுஹம்மது தாஹிருல் அஸிய்புல் பகுதாதியில் றாஇக்றழியல் லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்ட தாயிருக்கும் அவர்கள் சொல்லுகிறார்கள், நான் ஹிஜுறத்து ஐந்நூற்றி நாற்பத்தெட்டாம் வருஷத்தில் ஷெய்கு மஃறூபுல்கற்கி றழியல்லாஹு அன்ஹு அவர்களை மனையிற் கண்டேன். அவர்க ளிடத்தில் மனுடர்களுடைய சமாச்சாரங்களும் வருகிறது, அவர் களவைகளை யெடுத்தெடுத்து அல்லாஹுத் தஆலாவுடைய சமுகத் திற் காட்டுகிறார்கள். அப்படியிருக்கையில் ஷெய்கு மஃறூபுல் கற்கீ றழியல்லாஹு அன்ஹு அவர்களென்னைநோக்கி ஓய்ஷெய்கு தாஹிரே, உம்முடைய செய்திகைக்கொண்டுவாரும் அதையும் நான் அல்லாஹுத் தஆலாவின் சமுகத்திற் காண்பிக்கிறேனென்று சொன்னார்கள். அதற்கு நானவர்களைப்பார்த்து என்னுடைய ஷெய் கைத் தள்ளிவிட்டார்களோவென்று கேட்டேன். ஆனால் ஷெய்கென் றது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன் ஹு அவர்களாயிருக்கும். அப்போ தெனக்கு ஷெய்கு மஃறூபுல் கற்கீ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாவினாணை உம்மு டைய ஷெய்கைத் தள்ளிவிடவில்லை, ஒருபோது மவர்களைத் தள்ள வுமாட்டார்களென்று சொன்னார்கள். பின்பு நான் முழித்து சஹ றடைய வக்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லா ஹு அன்ஹு அவர்களுடைய மத்றஸாவுக்கு வந்து ஷெய்கு முஹ் யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தி லிந்த மனாமைச் சொல்லவேணுமென்று அவர்களுடைய வீட்டுவாச லின்பேரில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய வீட்டுக்குள்ளிருந்துகொண்டு அதாவது நானவர்க ளைக் காணவுமில்லை, அவர்களுடன் நான் பேசவுமில்லை, அப்படி



யிருக்கச்சே ஓய் தாஹிரே யும்முடைய ஷெய்கை மனிதர்கள் தள்ளிப் போடவில்லை, அவர்களால் தள்ளிப்போடவுமுடியாது. ஆகையா லும்முடைய செய்தியைக்கொண்டு வாரும், அதை நான் வணப்ப மும், சிறப்புமுடைய அல்லாஹுத் தஆலாவின் சமுகத்திலெடுத்துக் காண்பிக்கிறேன். அவனுடைய சிறப்பினாணை மெய்தான் நானென் னுடைய சிஷ்யர்களுக்காவது, வேறெயொருவர்க்காவது தேவை யான செய்திகளை யெடுத்து அவனுடைய சமுகத்திற் காட்டி யின்ன விதஞ் செய்யவேணுமென்று கேட்டால் அவ்விதமே அல்லாஹுத் தஆலா நிறைவேற்றிக் கிருபை செய்கிறதே யல்லாது தட்டிவிட்ட தே கிடையாதென்று ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல் லாஹு அன்ஹு அவர்கள் அருளிச்செய்தார்கள்.

—[0]—

## 49-வது ஹிக்காயத்து.

—(*)—

நாற்பத்தொன்பதாம் ஹிக்காயத்தாகிறது ஷரீபான இமாம் தாஜித்தீன் அபூபக்று அப்துர்றஸ்ஸாக்கிபுனுஷ் ஷெய்கு முஹ்யித் தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார் கள். என்னுடைய தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜுறத்து ஐந்நூற்றி ஐம்பதாம் வருஷம் ஷஃபான் மாதம் ஒன்பதாந்தேதி புதன்கிழமை யிரவில் தங் களுடைய ஸஹ்ரியத்து உம்மு யஹ்யாவை விழித்துச் சோறு சமைத்துவையென்று சொன்னார்கள். அப்படியே அவர்களெழும் பிச் சோறு சமைத்து ஸஹ்புறுவை நிறப்பிவைத்துவிட்டுப் படுத் துக்கொண்டார்கள். அப்பால் நடுச்சாமமானபோது மதிலா னது வெடித்து அதிலிருந்தொரு மனுடன் வெளிப்பட்டு வந்து அவ்விடத்திலே சஹ்றனில் வைத்திருந்த வஸ்பனை முழுவதை யுந் தின்றுவிட்டு அவ்விடத்தை விட்டும் போவதற்காக நின்றார். அப்போ தென்னுடைய தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னைப்பார்த் தென்னு டைய அருமைமகனே நீர் சீக்கிரமாக அவர் கிட்டப்போய் உமக்கு துஆச் செய்யும்படியாக வேண்டிக்கொள்ளுமென்று சொன்னார்கள்.

அப்போது அவர் மின்னைப்போல் மதிளில் மறையப் போகிறபோது நான் சீக்கிரமாயவர் கிட்டப் போய் எனக்கு துஆச் செய்யும்படியாகச் சொன்னேன். அதற்கவர் என்னைப்பார்த்து உங்கள் தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பறக்கத்தைக்கொண்டும், அவர்களுடைய விலாயத்தின் பறக்கத்தைக்கொண்டுந் தான் நீரென்னை கையில் நின்றும் காணுகிற மட்டிலுமானேனென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

பின்னொருத்தி விடிந்ததின் பின்பு லச்சங்கதிகளை அபியாபுனுல் ஹீத்தி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குச் சொல்லித் தெரிவித்தேன். அதற்கவர்கள் என்னை நோக்கி உங்கள் தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிருக்கிற காலத்தில் விலாயத்துடையவர்களில் பத்ஹானவதால் மெத்த விசேஷமானதும், முரீதுகளுக்கும் பறக்கத்தால் மிகுதமானதும். உங்கள் தகப்பனாரவர்களுடைய விலாயத்துக்கான விசேஷமானதையும், மிகுதமானதையும் நான் காணவில்லை. இன்னும் திடனாக உங்கள் தகப்பனாரவர்களிடத்தில் ஒருநாளில் எழுபது பேர்கள் முரீது பெற்று இறுகாவு பணிந்தார்கள் அன்று மாலை நேரமாகிய ஒரே வக்த்திலேயே அந்த எழுபது பேர்களுக்கும் அல்லாஹுத் தஆலா மகா வலுப்பமான பத்ஹைக் கொடுத்தான் அவர்கள் பேரில் உங்கள் தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கைபட்ட பறக்கத்தைக்கொண்டு அவர்கள் அளவற்ற நன் கொடைகளைப் பெற்றுக்கொண்டார்கள். இன்னு முங்களுடைய தகப்பனாரவர்களை நான் காணுகிற நாளிலுண்டாகிய பத்ஹைக் காண வேண்டு நாளிலு மிருந்த பத்ஹுண்டாக நான் காணவில்லையென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

———(*)———

## 50-வது ஹிக்காயத்து

———(*)———

ஐம்பதாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபுல் கஸாயிமிஷ்ஷரீபுல் ஹஸனிய்யுல் மஷ்கிய்யு றஹிமஹுல்லாஹு அவர்களைத் தொட்டுப் பேசிவரப்பட்டதாயிருக்கும் அவர்கள் சொல்லுகிறார்கள்.



என்னுடைய ஷெய்காகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காதிமானவர் ஒரு இராவில் எழுபதுதரம் இஹ்த்திலாமாகி முழுக்கு விதித்தவரானார். அதாவது ஒவ்வொரு தடவையிலும் ஒவ்வொரு பெண்பிள்ளையுடன் சேர்க்கை செய்யக் கண்டார். அந்தப் பெண்டுகளில் சிலர்கள் தாமறிந்த பெண்டுகளாயும், சிலர்கள் தாமறியாத பெண்டுகளாயுமிருந்தார்கள். அப்பாலந்த விடிந்ததின்பிறகு இது செய்தியைப்பற்றி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் முறையிடவேணுமென்று நாடிக்கொண்டுவந்து ஷெய்குமுஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கண்டபோது காதிமானவர் வாய்திறந்து யாதொரு சங்கதியும் சொல்ல முன்னமே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் காதிமைப் பார்த்து நீ நேற்றிரவில் இஹ்த்திலாமாகி ஜனபத்து முழுக்கு விதியானதைப்பற்றிப் பொருத்தக் கேடாகாதே. ஏனென்றால் திடனாக லௌஹுல் மஹ்பூலுப் பலகையிலுன் பேரைப் பார்த்தேன். அதில் நீ திடனாக எழுபது பெண்டுகளுடனே விளைச் செய்வாயென்றிருந்தது. ஆனாலந்தப் பெண்டுகள் இன்ன இன்ன பெயரையுடையவர்களென, இன்ன இலட்சணங்களையுள்ளவர்களென்று அந்தப் பெண்டுகளுடைய பெயர்களையும், அடையாளங்களையும் படிபடியாய்க் குறித்துச் சொல்லிப் பின்னுஞ் சொன்னார்கள். இவ்விதமாக நானந்தப் பலகையிலெழுதியிருக்கக் கண்டதால் அது முழிப்பில் நடக்கிறதாயிருந்ததை மாற்றி நித்திரையிலாக்கி வைக்கும்படி அல்லாஹுத் தஆலாவிடத்தில் மன்றாடிக் கேட்டிருக்கிறேனென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

———:(,*'):———

## 51-வது ஹிக்காயத்து.

———[*]———

ஐம்பத்தோராம் ஹிக்காயத்தாகிறது சையிது அப்துல்லாஹில் ஹைமரிர்றாமீ றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்

சொல்லக் கேட்டிருந்தேன், அவர்கள் அருளிச் செய்தார்கள். முஸ்லிமான மனிதர்களில் நின்றும் யாராவதொருவன் என் மத்றசாவின் வாயிலுக் கருகே நடந்து போனானாகில் கியாம நாளில் அதாபை யிலேசாக்கப்படுமென்றார்கள். மேற்படி ருவீ சொல்லுகிறார். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹுறு அன்ஹு அவர்கள் சமுகத்திற் பகுதாதுக்காரர்களில் நின்றும் ஒரு வாலிபன் வந்து புகுந்து எனது நாயகமே யென்னுடைய தகப்பனார் மௌத்தாகி ஒருவருஷம் வரையிலுமாய்விட்டது. அவரை கானின்றிரவிற் கனவிற் கண்டேன். அவரைக் கபுறில் அதாபு செய்யப்படுகின்றது. அப்போதென்னுடைய தகப்பனென்னைப்பார்த்து என்னுடைய மகனே நீ ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹுறு அன் ஹுறு அவர்களின் சமுகத்திற்போய் எனக்கு துஆச் செய்யச்சொல்லி மன்றாடென்று சொன்னானென்று சொன்னான். அதற்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹுறு அன் ஹுறு அவர்களந்த மகனைப்பார்த்து உன்னுடைய தகப்பனென்னுடைய மத்றசாவின் வாசலருகே நடந்திருப்பானோவென்று கேட்டார்கள். அதற்கவன் ஆமென்றான், அச்சொல்லைக் கேட்டுவிட்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹுறு அன் ஹுறு அவர்கள் பேசாதிருந்துவிட்டார்கள். அப்பால் மறுநாள் காலையிலே அந்த வாலிபன் வந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹுறு அன் ஹுறு அவர்களிடத்தில் என் நாயகமே யின்றிரவி லென்தகப்பனரைச் சந்தோஷமடைந்தவராயும், அவர் மேனியில் பச்சை நிறமான வுடுப்பான்களை யணிந்தவராயுங் கண்டேன். அப்போதவரென்னை நோக்கி மகனே நிட்டூக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹுறு அன் ஹுறு அவர்களுடைய பறக்கத்தாலென்னுடைய அதாபுகளையும் நீக்கப்பட்டு இந்தக் கலிங்களையுஞ் சூட்டப்பட்டது. ஆகையால் மகனே நீ யவர்களை விட்டுப் பிரிந்திடாமற்பற்றிப் பிடித்து நடந்துக்கொள். நிட்டூக முஸ்லிமீன்களில்நின்றும் ஆராகிலுமொருவன் உம்முடைய மத்றசாவுக்கருகே நடந்துபோவானாகி லவனுக்கு அதாபை இலேசாக்குவேனென்று அல்லா ஹுறுத தஆலா எனக்கு வஃதாச் செய்திருக்கிறானென்று திருவுளமாயிருக்கிறார்களென்றுஞ் சொன்னார்கள்.

மேற்படி ருவீ இன்னும் சொல்லுகிறார், ஒரு நாள் நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹுறு அன் ஹுறு அவர்



களுடைய ஹலறத்திலிருக்கும்போது பகுதாதில் பாபுல்அஸஜ்ஜென்
னும் கபுறுஸ்தானத்திலுள்ளக் கபுறுகளில்நின்று மொருக் கபுறுக்
குள்ளிருந்து சப்தங் கேட்கிறது. அந்தக்கபுறு அடக்கப்பட்டு சொற்
பநாள்தானாகியிருக்கிறது. அப்போது ஷெய்கு முஹ்யித்தீன்
அப்துல்காதிறு றலியல்லா ஹுறு அன் ஹுறு அவர்கள் அந்தக் கபுறுளி
யென்னிடத்தில் நின்றும் ஸில்ஸிலா வெடுத்திருப்பானோவென்று கேட்
டார்கள். அதற்கு ஜனங்க ளெங்களுக்குத் தெரியாதென்றார்கள்.
அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹுறு
அவர்கள் ஜனங்களைப் பார்த்து என்னுடைய மஜ்லிஜுக்கு வந்திருப்
பானோவென்று கேட்டார்கள். அதற்கு ஜனங்கள் நாயகமே அதுவும்
நாங்களறியமாட்டோமென்று சொன்னார்கள். பின்பு ஷெய்கு முஹ்
யித்தின் அப்துல்காதிறு றலியல்லா ஹுறு அல் ஹுறு அவர்கள் என்னு
டைய வஜீபனந் தின்றிருப்பானோவென்று கேட்டார்கள், அதற்கும்
ஜனங்களெங்களுக்குத் தெரியாதென்று சொன்னார்கள். பின்னரெ
னக்குப் பின்னால்நின்று தொழுதிருப்பானோவென்று கேட்டார்கள்,
அதையும் ஜனங்கள் நாங்களறியோமென்று சொன்னார்கள். அப்
பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹுறு அன்
ஹுறு அவர்கள் கிறக்கேடு செய்தவன் கஷ்டவாளியாகவும் நஷ்ட
வாளியாகவும் பாத்திரவான்தானென்று சொல்லிவிட்டு ஒரு சா அத்து
நேரம்வரையிலும் குனிந்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில
வர்களில் ஹைபத்து மேலாடிக் கனதி மிஞ்சியிருந்தது, அப்போ
தவர்கள் நிட்டூக இப்போதிந்த அதாபு படுகிற கபுறுளியாகிறது
என்னுடைய முகத்தைக்கண்டு எனனைக்கொண் டவனுடைய எண்
ணத்தை அழகாக்கிவைத்தானென்று மலக்குகளெனக் கறிவித்தார்
கள். ஆகையா லிதுகாரணத்தைக்கொண்டு அல்லா ஹுறுத் தஆலா
அவனுக்குப் பிழைபொறுத்து றஹ்மத்துச் செய்துவிட்டானென்று
சொன்னார்கள்.

ருவீ சொல்லுகிறார், அல்லாவினுணை யிதற்குப்பிறகு மனுடர்
கள் சிலகாலம் அழுதுக்கொண்டும், அந்தக் கபுறருகிற்போய்ப்பார்த்
துக்கொண்டுமிருந்தார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு
றலியல்லா ஹுறு அன் ஹுறு அவர்கள் அவ்விதம் சொன்னதின்பிறகு
ஒருபோதுமந்தக் கபுறிற் சப்தங் கேட்கவேயில்லை.

## 52-வது ஹிக்காயத்து.

——[*]——

ஐம்பத்திரண்டாம் ஹிக்காயத்தாகிறது ஸாலிஹீன்களாகிய ஷெய்குமார்களில்நின்றும் ஷெய்கு அபூ முஹம்மது அப்துல்கரீமிபுனு மன்ஸூறில் பகுதாதீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்கு அபூ ஸக்கரிய்யா யஹ்யப்னி யூஸுபுல் அன்ஸாரிய்யுஸ் ஸயனீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்கு அபுல்பறஜில் ஹஸனுபுனு முஹம்மதல் மிஸ்ரிய்யுல்முக்ரீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்கு அபுல்ஹஸன் அலிய்யுபுனு முஹம்மதுபுனு வல்லாஹு றலியல்லாஹு அன்ஹு இவர்கள் நாலுபேர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கிறது, அவர்கள் நால்வர்களும் சொல்லுகிறார்கள். நாங்கள் ஹிஜ்றத்து ஐந்நூற்றிப்பத்தாம் வருஷம் ஷெய்குல்குத்வத்து அபூ முஹம்மது அலிய்யுபுனு இத்ரீஸுல் யஃக்கூபி றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தோம். அப்போது ஸாலிஹான ஷெய்கு புறைதக்து றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்தார்கள் அவர்களை நோக்கி ஷெய்கு அலீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நீங்கள் கண்டகனவை இவர்கள்பேரில் அறிவியுங்களென்று சொன்னார்கள். அப்போது ஷெய்கு புறைதக்து றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நான் கனவு கண்டேன் அதாவ தென்னவெனில் திடனுக் கியாமநாளாயிட்டது அப்போது நபிமார்களும் அவரவர்களுடைய உம்மத்துமார்களும் மஹ்ஷரிலிருந்து முன்னேறி வருகிறார்கள். நபிமார்களிற் சிலர்களை இரண்டுபேர்கள் தொடர்ந்தும் இன்னுஞ் சிலர்களை ஒருவர் தொடர்ந்தும் வருகிறார்கள். பின்பு நம்முடைய நாயகம் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வருகிறார்கள். அவர்களை புறப்படுத்தி வைத்துக்கொண்டு அவர்களுடைய உம்மத்துமார்கள் வெள்ளங்களைப் போலும், இருள்களைப்போலும், பெரியபெரிய திரள்களாக வருகிறார்கள். இன்னுமந்தத் திரளான கூட்டத்தில் மஷாயிகுமார்களுமிருக்கிறார்கள். அந்தந்த ஷெய்குமார்களுடனே அவரவர்களுடைய சினேகிதர்களுமிருக்கிறார்கள். இன்னுமந்த ஷெய்குமார்களும் அவர்களுடைய தோழன்மார்களும் எண்ணத்தாலும், ஒளிவாலும், தெளிவாலும் மிருந்து ஏற்ற வாட்டமாயிருக்கிறார்கள்.



ஆனாலந்த ஷெய்குமார்களுடைய கூட்டத்தில் நின்றுமொரு மனிதர் வருகிறார்கள். அவர்களுடனே அனேக கல்க்குகளும் வருகிறார்கள். அப்போதவர்களைக் குறித்து இவர்களாரென்று கேட்டேன். அதற்கு ஜவாபு இவர்களாகிறது பகுதாது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களும், அவர்களுடைய முரீதுப் பிள்ளைகளுமென்று சொல்லப்பட்டது. அப்போது நானவர்களளவில் முந்திப் போனேன், போய் யெனது நாயகமே மஷாயிகுமார்களி லுங்களைக் காணத் தெளிவானதிகமானவர்களையும், மஷாயிகுமார்களைப் பற்றிப் பின்றொடர்ந்த பேர்களி லுங்களைப்பற்றிப் பின்றொடர்ந்த பேர்களைக் காண அழகான பேர்களையும் நான் காணவில்லையென்று சொன்னேன். அப்போது நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னைப்பார்த்திந்தப் பைத்துகளைச் சொன்னார்கள்.

பைத்து.

இதாக்கான மின்னா ஷைகுன் அஷீறத்தின்.
அலாஹா வஹின்லாக்கல் கனுக்கு ஹமாஹா.
வமுத்தபறத் இல்லாவ அஸ்பஹ ஷைகஹா.
வமுபுத்தகறத் இல்லா வக்கானபத் தாஹா.
வமாஹூரியத் பில்அபுறக் கைனிகியா முஹா.
பஅஸ்பஹ மஃவத்தாரிக் கீனஸிவாஹா.

(இதின்பொருள்) நம்மில் நின்றுமொரு நாயகமவர்கள் ஒரு கூட்டத்திலிருந்தா லந்தக் கூட்டங்களுக்கு மேலாகவே யிருப்பார்கள். சுருக்கும்படியான கயறு கழுத்தில் விழுந்து உயிர் தப்பிக் கொள்ள முடியாமற் கிட்டுமையான தருணத்தில் சிக்கிரம் வந்திரட்சித்துக் காத்துக்கொள்வார்கள். சோதித்துப் பார்க்கிறதில்லை. யவர்களவர்களுக்குக் குருவாயிருந்தே யொழிய, அவர்கள் வீறு பேசுகிறதில்லை. யவர்களவர்களுக்கு நாதர்வாயிருந்தே யொழிய, அந்த மெய்ப்பிரானவர்களிருக்குந் தலமாகிய அபுறக்கைகள் என்னுமிடத்திலவர்க ளிறங்கியிருந்தால் வருகிற பேர்களுக்கந்தக் கூட்டத்தைத் தவிர வேறேயொதுங்குந் தலங் கிடையாதென்பதாம்.

றாவி சொல்லுகிறார் நானிந்தக் கனவைக் கண்டு அதில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவ

ர்களிந்தப் பைத்துகளைச் சொல்ல நானவைகளைப் பாடமிட்டுக் கொண்டவனாக முழித்தேனென்றார். ருவிகள் சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹம்மதுல் வாஇஜுல் யமனிய்யு றஹிமஹுல்லாஹு அவர்களிவ்விடத்தில் ஹாஸிருயிருந்தார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிரில் ஜீலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய நாவின்பேரில் இந்தமஃனாவிலேயேயதாவது சில பைத்துகளைச் சொல்லுமென்றார்கள். உடனே ஷெய்கு முஹம்மதுல்வாஇஜு றஹிமஹுல்லாஹு அவர்களிந்தப் பைத்துகளைச் சொன்னார்கள்.

## பைத்து.

ஊனீஅஷ லிலஹ்பீ இன்னநீக்கா இதுர்றக்பி.
அஸீறுபிஹிம் பஸ்லன் இலல்மன்ஸி லிர்றஹ்பி.
வஅக்னிபிஹாம் வல்க்குல்லு பீஷாஃலி அம்ரிஹி.
வஉன்ஸிலுஹாம் பீஹலுறத்தில்க் குத்ஸி மின்க்குறுபி.
வலீமஃஹதுன் குல்லுத்தவாஇ பிஹுனஹு.
வலீமன் ஹலுன் அதுபுல் மஷாரிபி வஷ்ஷாறுபி.
வஅஹ்லுஸ்ஸபா யுஸ்க்கௌன கஸ்பீக் குல்லுஹாம்.
லஹாஹிம்மத் துன்அம்லா மினஸ்ஸாரி மில்க்கஹுபி.

(இதின்பொருள்) என்னுடைய தோழன்மார்களுக்கே சோபனம் இடனாக நான் கூட்டங்களுக்குக் கோல் காட்டியாயிருக்கும், நானவர்களைக்கொண்டு சரியான வழியில் நடந்து விஸ்த்திரணமான வீடாகிய சொர்க்கலோகத்தளவிற் கொண்டுபோய்ச் சேர்த்து விடுவேன், சகலர்களு மவரவர்களுடைய கருமத்தின் பாரக்கிலிருக்கையில் நானென்னுடைய கூட்டத்தைக் காப்பாற்றி யவர்களை முடுகுதலால் தூய்மையுடைய சமுகத்திற் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவேன், அந்தத் தூய்மையுடைய ஹலறத்தி லெனக்கொரு புழக்கமான பதவி யுண்டு மற்றுங் கூட்டங்களெல்லோர்களும் அதற்குந் தாழாலே யாயிருக்கும் இன்னும் குடிப்பும், குடிக்குந் தலமும், மதுரமான ஒரு குடிப்பின் துறையு மெனக்குண்டு, இன்னுந் தெளிவுடையவர்க ளடங்கலு மெனக்குப் பின்னாலேதான் புகட்டப்படுவார்கள். அவர்க ளெல்லோர்களினு மொவ்வொருவருக்கும் வீரவானைக் காண அதிகமாய்ப் பதிந்து செல்லும் ஹிம்மத்துண்டென்பதாம். இவ்விதமாக ஷெய்கு முஹம்மதுல்வாஇஜு



றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்லவே ஷெய்கு அலீ றஹிமஹுல்லாஹு அவர்கள், ஷெய்கு முஹம்மதுல்வாஇஜு றஹிமஹுல்லாஹு அவர்களைப்பார்த்து நீர் மெத்த அழகாய்ச் சொன்னீர், மெத்த அழகாய்ச் சொன்னீர், மெத்த உண்மை சொன்னீரென்று சொன்னார்கள்.

இன்னும் ஷெய்கு அபுல்ஹஸன் அலிய்யுபுனு சுலைமானில் புகாரிய்யுல் பகுதாதீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கு அபுல்ஹஸனுல் ஜவ்ஸக்கீ றஹிமஹுல்லாஹு அவாகள் சொன்னார்கள். நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய திருச் சமுகத்திலிருந்தேன் அப்போதவர்கள் சமுகத்தில்ஷெய்கு அலிய்யுபுனு ஹீத்திய்யி றலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஷெய்கு பக்கா றலியல்லாஹு அன்ஹு அவர்களு மிருந்தார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். எனக்கு நீளமான ஒட்டகத்தளங்களொவ்வொன்றிலும் பெலத்திற் சரி நிற்கமுடியாத ஒவ்வொரு திமரொட்டமுண்டு. இன்னும்ஒவ்வொருபூமியிலு முந்துவதிற் பிந்தாத ஒவ்வொரு குதிரையுமுண்டு, இன்னும் ஒவ்வொரு பட்டாளங்களிலும் விகற்பஞ் செய்ய வியலாத ஒவ்வொரு சுல்த்தானுமுண்டு, இன்னும் ஒவ்வொரு கீர்த்தியிலுந் தள்ளிப் போடக்கூடாதா ஒவ்வொரு கலீபாவு முண்டென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

## 53-வது ஹிக்காயத்து.

ஐம்பத்திமூன்றும் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரர்களில் ஷெய்கு அபூ முஹம்மது அப்துல் ஜப்பாறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாத்மதொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். என் தாயாரவர்கள் இருளான விடத்தில் போய்ப்புகுந்தாலவர்களுக்கொளிவிளக்கொருபந்தமுண்டாகிறதாயிருந்தார்கள். அதைக் கொண்டென்னுடைய தாயார

வர்கள் வெளிச்சந் தேடுகிறவர்களாயிருந்தார்கள். அப்படியாயி
ருக்கும்போது ஒருநாளென்னுடைய தாயாரவர்கள்பேரிலென்
னுடைய தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலி
யல்லாஹு அன்ஹு அவர்கள் வந்து புகுந்து அந்தப் பந்தமெரி
கிறதைக் கண்டார்கள். அவ்விதமவர்களுடைய பார்வையானதந்
தப் பந்தத்தில் விழுந்தமாத்திரமே அந்தப்பந்தமானது அணைந்து
விட்டது. அப்போதென்னுடையதகப்பனார்ஷெய்கு முஹ்யித்தீன்
அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னுடைய தா
யாரவர்களை நோக்கி இதுவொண்டிருந்த வெளிச்சமாகிறது ஒரு
ஷெய்த்தானாயிருந்தது. அந்த ஷெய்த்தானுனக்குப் பணிவிடை
செய்துகொண்டிருந்தான். இப்போதந்த ஷெய்த்தானை நானவ
னைவிட்டுத் திருப்பி விலக்கிவிட்டு, அதற்குப் பதிலாக றஹ்மானி
னிற் சேர்ந்த ஒளிவை வைத்திருக்கிறேன். இப்படித் தாமென்ன
வாகில் வந்து சேர்ந்தவர்களடங்கலுக்குஞ் செய்வேன். எனக்கு
இதையத் தவிடென்று சொன்னார்கள்.

ருவீ அப்துல் ஜப்பாரு றலியல்லாஹு அன்ஹு சொல்லுகி
றார்கள். அதற்குப் பின்பு என்னுடைய தாயாரவர்கள் ஒரு
இருளான விடத்திற் போய்ப் புகுந்தாலவர்களுக்குச் சந்திரனைப்
போலொரு ஒளியுண்டாகிக்கொண்டேயிருந்தது அந்த வொளியா
லவ்விடத்தினுடைய கோணமும் பிரகாசிக்கக் காண்பார்களென்
றார்கள்.

——(*)——

## 54-வது ஹிக்காயத்து.

——[*]——

ஐம்பத்திநாலாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன்
அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அஸ்
ஹாபிமார்களி லொருவரைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்
கும். அவர்கள் சொல்லுகிறார்கள் ஒருதரம் நாங்கள் தைஸா பூரு
க்கு, அல்லது கவாறஸ்முக்குப் போகிற வழியில் வெட்டிப் பறிக்
கிற கள்ளரால் மெத்தப் பயங்கரமான வொரு காட்டில் விடுதியிற
ங்கியிருந்தோம். அதனாலந்த விடத்தில் கூடப்பிறந்த பிறவியானது



தன்னுடைய பிறவியின்பேரில் தாமதித்து நிற்கமாட்டான். அப்
படிப் பயங்கரத்தால் சடிசான விடமாயிருக்கும். அப்பாவிரவின்
துவக்கத்தில் ஒட்டகங்களின்பேரிற் சுமைகளை யேற்றிச் சாய்க்
கும்போது சர்க்கரைப் பொதிகளை யேற்றப்பட்ட நாலு ஒட்டகங்
களைக் காணுமற்போய்விட்டது ஆகையால் நானுமந்த ஒட்டகக்கா
ரனுமாக அந்த ஒட்டகங்களைத் தேடியுங் கண்டுக்கொள்ளவில்லை.
ஆதலாலினிமென்னசெய்வோமென்றெண்ணினானுமந்தவொட்டகக்கா
ரனுமாத்திரமிருக்கமற்றுமுள்ள காபிலாக்களடங்கலும்போய்விட்டார்கள்
அப்பால் பஜ்று வெளுக்கதின் பின்னால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்
துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்ன சொல்லை
நினைத்தேன். அவர்களெனக்குச் சொன்னசொல்லெப்படியானால் நீ
ஒரு கடினத்தில் விஷயமானபோதென்னை நினைத்துக் கூப்
பிடு. உடனே நிச்சயம் அக்கடினமான துன்பவிட்டு நீங்கிவிடுமென்
று சொல்லியிருந்தார்கள். ஆகையாலதை நினைத்து ஷெய்கு அப்
துல்காதிறே யென்னுடைய வொட்டகங்கள் போய்விட்டது, ஷெய்கு
அப்துல்காதிரே யென்னுடைய வொட்டகங்கள் பழுதாகப் போய்
விட்டதென்று சொல்லிப் பின்னர் பஜ்றுதயமாகிற திசையைத் திரும்
பிப் பார்த்தேன். அவ்விதம் பார்க்கவே பஜ்றுதயமான துவக்கத்
தின் வெளிச்சத்தில் ஒரு மேட்டுத்தலத்திலொரு மனுஷரையிருக்கக்
கண்டேன். அந்த மனுஷருடைய மேனியில் நல்ல வெண்மையான
புடவைகளுண்டாயிருக்கிறது, அவர் சட்டைக்கையை வீசி யிங்கே
வாவென் றிஷாரச்செய்தார், அப்போது நான்போயந்த மேட்டி
லேறிப்பார்த்தேன். அவ்விடத்திலொருவரையுங் காணவில்லை. ஆனால்
லெங்களுக்குத் காணுமற் போயிருக்கிற நாலு ஒட்டகமுமந்த மேட்
டிற் கப்புறமான பள்ளத்தில் கிடந்துகொண் டிருக்கக்கண்டேன்.
உடனே யந்த நாலு ஒட்டகத்தையு மோட்டிக்கொண்டுவந்து காபி
லாக்களுடன் கூடிக்கொண்டோமென்றார்கள்.

ஷெய்கு அபுல்மஆலீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள்சொல்
லுகிறார்கள், நான் ஷெய்கு அபுல்ஹஸன் அலிய்யுல் ஜப்பாறு றஹி
மஹுல்லாஹு அவர்களிடத்தில் வந்து இந்தச் செய்தியைச்சொன்
னேன், அப்போதவர்களென்னை நோக்கி நான் ஷெய்கு அபுல்காஸிம்
உமறுல்பஸ்ஸாஸ் றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்லக்கேட்டி
ருக்கிறேன். அவர்கள் சொல்லுகிறார்கள், நான் ஷெய்கு முஹ்யித்

தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவாய லருளிச்செய்யக் கேட்டிருந்தேன். அதாவதென்னவெனில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். யாராகிலுமொருவன் ஒரு வருத்தத்திலென்னைக் கொண்டிரட்சிக்கத் தேடினானேயானால் அவனை யவ்வருத்தத்தை விட்டு நீக்கப்படும். இன்னும் யாராகிலுமொருவன் ஒரு கடினத்தி லகப்பட்டுத் தவிப்பானேயானால் அந்நேரத்திலென்னுடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டா லவனைவிட்டு யந்தக் கடினத்தை நீக்கப்படும். இன்னுமெவனாவதொருவன் ஒரு ஹாஜத்தில் அல்லாஹுத ஆலா அளவி லென்னைக்கொண்டு சிபாரிசு தேடுவானேயானா லவனுக்கந்த ஹாஜத்தை நிறைவேற்றிக் கொடுக்கப்படுமென்றும் சொல்லி யின்னம் சொல்லுகிறார்கள். யாராவதொருவன் இரண்டு றக்அத்துத் தொழுது அவ்விதந் தொழுவதில் ஒவ்வொரு றக்அத்திலும் பாத்திஹா சூறத்திற்குப் பின்னர் சூறத்துல் இக்லாஸைப் பதினொரு, பதினொருதரம் ஓதித் தொழுது முடித்துவிட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பேரில் ஸலவாத்தோதி அவர்களை நினைத்துக் கொண்டு இறாக்கிராச்சியத்தின் பக்கத்தை நோக்கிப் பதினொரு எட்டு வைத்து என்னுடைய பெயரைச் சொல்லி யவனுடைய ஹாஜத்தைக் குறித்துக் கேட்பானேயானால் திடனாக அல்லாஹுத ஆலாவுடைய கட்டளைப்படிக் கவனுடைய ஹாஜத்தை நிறைவேற்றப்படுமென்றுஞ் சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு யக்கூலுல் முத்தறஜிமில் மதுக்கூர், ஸாயிஹுல்லாஹுல் கபூர், இதைத் தர்ஜிமாச் செய்தவனுமா, மேற்பேர் குறிக்கப்பட்டவனுமாகிய அடியான் சொல்கிறான். குற்றங்களை மன்னிக்கும்படியான ஆண்டவனாகிய அல்லாஹுத ஆலா அவ்வடியானுடன் அனவரதமா யிருந்துக்கொள்வானாகவும். ஹிஜ்றத்து ஆயிரத்து முந்நூற்றி நாலாம் வருஷம் ஜமாதில் ஆகிறமாதம் இருபத்திமூன்றாந் தேதி வெள்ளிக்கிழமையன்றையில் எனக்கொரு கருமம் வந்து நேரிட்டு மிகுந்த வியாகுலமடைந்து அதைப் பொறுத்துக்கொள்ள முடியாதென்கிறமட்டிலும் சஞ்சலமாகிச் சிற்றளாய்ப்போனதைக் கூடியமட்டிலுந் தெண்டித்துத் தேடியுங்கிட்டவில்லை, அப்பால் மறுநாள் சனிக்கிழமை யிரவானபோது மக்ரிபும், இஷாவுந்தொழுது முடித்ததின்பின்னர். யாலத்தீபென்னும் அன்பாவுல்லாஹுஸ்ஸானிலுள்ள இஸ்மையோதிக்கொண் டிருந்துவிட்டு கடை



சியில் வியாரம் பொறுக்கமுடியாமல் நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை முன்னோக்கி யெனது நாயகமே முஹ்யித்தீனாண்டவர்களே யிந்த அற்றுப்போன பொருள் உங்கள் பொறுப்பாயிருக்கும். அதைப்பற்றிய வியாரத்தை யென்னால் தாங்கமுடியாது. ஆகையாலது எவ்விதமும் வந்து கைகூடவேணுமென்று சொல்லிக்கொண்டேன், அப்பால் விடிவேறுனை பொழுது நானொரு விடத்தைக்குறித்து எடா மகனே யின்னவிடத்திற் போய் நல்லாக அந்தக் கூளங்களை யெடுத்துப்பாரென்று சொன்னேன். அதுபோலென்னுடைய மகனந்தவிடத்திற்போய்ப் பார்க்கவே சொற்பநேரத்தில் அந்தப் பொருளானது சந்தேகமின்றியே கிடைத்துக்கொண்டது. அப்போது நான் யாதொரு சந்தேகமின்றி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பறக்கத்தென் றறிந்துக்கொண்டேன். அல்ஹம்து லில்லாஹ், இந்த அற்புதத்தை யிவ்விடத்திலெடுத்துக்காட்ட வுதிப்பு வருத்திய அல்லாஹுத் தஆலாவுக்கே யெல்லாப்புகழும்.

## 55-வது ஹிக்காயத்து.

ஐம்பத்தைந்தாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்குல் முஅம்மற் அபுல்முலப்பற் மன்ஸூறிப்னுல் முபாறக்கில் வாஸித்தீ ஜறாதத் றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்க்கிலும் மார்பால் விரிவானவர்களையும், குணத்தா லழகானவர்களையும், நபுஸால் சங்கையானவர்களையும், இருதயத்தா லிரக்கமானவர்களையும், உவப்பாலும் வாக்காலு மெத்தப் பேணுதலானவர்களையும் என்னுடைய இருகண்ணுங் காணவேயில்லை, திடனாக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தகுதி மகா வலுப்பமாயும், அவர்களுடைய பதவி மெத்த மேன்மையாயும், அவர்களுடைய கல்வி அமையாக்கடப்பாயு மிருப்பதுடனே. அவர்கள் சிறியோர்களுடனு மிருக்கிறவர்களாயும், பெ

ரியோர்களையுஞ் சங்கை செய்கிறவர்களாயிருந்தார்கள், இன்னும் அவர்களைச் சந்தித்தவர்களுக்குத் தாங்களே முந்தி ஸலாமுரைப்பார்கள். பலஹீனர்களுடனுமிருப்பார்கள். எளியவர்களுக்குந் தாழ்ச்சிசெய்வார்கள். இன்னும் தன்னைவிடப் பெரிய வயதுள்ளவர்களுக்கும், குறிப்பானவர்களுக்கு மெழும்பமாட்டார்கள். இன்னும் அவர்கள் ராஜாக்கள், மந்திரிகளிவர்களுடைய வாயில்களில் ஒருக்காலும் போயிருக்கமாட்டார்கள். திடனுக காஸிஞுரா ளவர்கள் வீட்டில் வந்து அவர்கள் சமுகத்திலிருந்தேன், அப்போதவர்கள் தஸ்பீஹு செய்துகொண்டிருந்தார்கள். அப்படியிருக்கையில் அவர்கள் வீட்டின் மேல் முகட்டிலிருந்து மண்ணுதிர்ந்து விழுந்தது, அதை யுதிரவிட்டுக்கொண்டிருந்தார்கள். அப்படி மூன்றுதடவை யுதிரவே யந்த மூன்றுதடவையுந் தாங்கள் பொறுத்துக்கொண்டிருந்தார்கள், அப்பால் நான்காந்தடவை மண்ணுதிரவே தங்களுடைய சிறப்பான சிரசையுயர்த்தி முகட்டளவிற் பார்த்தார்கள், அப்போ தவ்விடத்திலொரு சுண்டெலியிருக்க மண்ணை யுதிர்த்தக்கண்டு அந்த எலியை நோக்கி உன் சிரசு பறந்துவிட்டுதென்று சொன்னார்கள். உடனே அந்த எலியினுடலொருபக்கமும், சிரசொரு பக்கமுமாய் விழுந்துவிட்டது. அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தஸ்பீஹு செய்வதை நிறுத்திவிட்டழுதார்கள், அதுகண்டு நான் அவர்கள் அழுதகாரணத்தை நோக்கி யெனது நாயகமே தாங்களேனழுகிறீர்களென்று கேட்டேன், அதற்கவர்களென்னைப்பார்த்து ஒரு முஸ்லிமான மனிதனைப்பற்றி நானுடைய இருதயம் கொந்தளித்தாலு மிந்த எலிக்குப் பிடித்ததுபோற் பிடிக்குமேயென்று பயப்படுகிறேனென்று சொன்னார்கள்.

இன்னும் ஷெய்கு அபுல்காசிம் உமறுபுனு மஸ்ஊதுல் பஸ்ஸாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்லுகிறார்கள். எனது நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருநாள் மதரசாவில் உலுச்செய்கிறவர்களாயிருந்தார்கள், அப்போதொரு அடைக்கலாங் குருவி அவர்கள்மேலே யெச்சமிட்டுவிட்டுப் பறந்துபோனது. அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய



சிறப்பான சிரசையுயர்த்திப் பார்த்தார்கள். உடனே அது செத்து விழுந்தது. அப்பால் உடுப்பை நிறப்பமாக்கிப் புடவையில் இன்று மெச்சம்பட்டவிடத்தைக் கழுவியதைக் களைந்து என் வசந்தந்து இதைக்கொண்டுபோய் விற்று அதின் விலையை ஸதக்காச் செய்துவிடும், அதற்கிது பதிலென்று சொன்னார்கள்.

——(*)——

## 56-வது ஹிக்காயத்து.

ஐம்பத்தாறும் ஹிக்காயத்தாகிறது காலில்குலாத்து அபூஸயீது நஸ்று றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கென்னுடைய தகப்பனார் செய்யிது அப்துர்றஸ்ஸாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். என் தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவர்களுடைய கருமம் பிரசித்தமானதின்பிறகு ஒரு ஹஜ்ஜேயொழிய செய்யவில்லை. நானந்த ஒரு ஹஜ்ஜில் போகிறபோதும், வருகிறபோதுமவர்களுடைய வாகனத்தின் முக்கணத்தைப் பிடிக்கிறவனாயிருந்தேன், ஹில்லாவென்னுஞ் சிறதூரளவிற் போனபோது இவ்விடத்திலொரு எளிமையான வீடு பார்த்திறங்கவேணுமென்று ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். அவ்விதமே நாங்கள் பார்த்து வரும்போது ஒரு பாழான இடத்தைக்கண்டோம். அதில் முடியாற்செய்யப்பட்ட சிறு குச்சிலொன்றிருக்கிறது, அந்தக் குச்சியில் ஒரு கிழவனும், ஒரு கிழவியும், ஒரு சிறு பெண்ணுமிருக்கிறார்கள் அந்த வீட்டிலிறங்குவதற்கு எனது தகப்பனாரவர்களுத்தரவு கேட்டார்கள். அதற்கந்த வீட்டையுடையவர்கள் மிகவும் நல்லதென்றுத்தரவு கொடுத்தார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களும்கூட இருந்தவர்களுமாக அந்த வீட்டிலிறங்கினோம். அதுகண்டு ஹில்லாவிலுள்ள ஷெய்குமார்களும், குறிப்பானவர்களும், தலைமைக்காரர்களும் வந்து அவரவர்களுடைய வீடுகளுக்காவது, அல்லது வேறே நல்ல விஸ்தீரணமான விடங்களுக்காவது வரும்படியாக மிகவுமன்றாடி விரும்பினார்

கள். அதற்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடங் கொடுக்கவில்லை. அப்பாலந்த ஊரவர்கள் ஆடுமாடு தவசதானியம் பொன், வெள்ளி முதலிய தட்டுமுட்டுச் சாமான்கள் பலதையும் மிகுதமாய்க் கொண்டுவந்து குவித்துச் சிற்சில ஏறுவாகனங்களையுந் தயாறு செய்தார்கள். இன்னும் பற்பல விடங்களில்நின்று மனுஷர்கள் வந்து வந்து கூடினார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடனிருப்பவர்களைப்பார்த்து இவ்விடத்திற்கிடைத்த வஸ்துகள் சகலதிலும் எனக்கு வருகிற பங்கு முழுவதையு மிந்த வீட்டுக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டுப் போகப்போகிறேனென்று சொன்னார்கள். அதுகேட் டவர்களுடன் போகிறபேர்களடங்கலும் நாங்களு மப்படித்தானென்று சொன்னார்கள். ஆகையா லவ்விதமே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களவ்விடத்திற் கிடைத்த வஸ்துகளடங்கலையும் அந்தக் கிழவனுக்கும், அந்த கிழவிக்கும், அந்தச் சிறிய பெண்ணுக்குங் கொடுத்துவிட்டு அவ்விடத்திலன்றிரவு தங்கியிருந்து சஹறுவக்தி லெழும்பிப்புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

றாவீ சொல்லுகிறார்கள். சில வருஷங்களுக்குப்பிறகு நானந்த ஹில்லாவென்னு மூருக்கருகே கடந்துபோனேன். அப்போதந்த வயசாளிகள் அந்த ஊரிலுள்ள ஜனங்களில் மெத்த சகல சம்பத்துகளுமுள்ளவர்களா யிருக்கக்கண்டேன். அப்பாலந்த வயசாளிகளென்னைக்கண்டறிந்தென்னைநோக்கியிந்தவாழ்வுமுதலியசெல்வங்கள் சகலதும் அந்த இரவின் பறக்கத்தாலுண்டானதுதான், இந்த ஆடுமாடுகளும்அந்த இரவிற்கிடைத்து அவைகள் குட்டிபோட்டுப்பெருகியதுதானென்று சொன்னார்கள். இவ்விடத்திலொருசொல் சொல்லப்பட்டிருக்கிறது. அதென்னவெனில் இந்த ஹிக்காயத்தில் ஹில்லாவென்று வந்த சொல்லானதை ஜீம்கொண்டு ஜில்லாவென்று சொல்லவுங்கூடும். அப்படியானு லதின் பொருளாகிறது நல்லக்கனதியுள்ள தனவான்களாம். ஆனால் அதுதான் சரியோ, அல்லது நுக்தாவில்லாத ஹேகொண்டு ஹில்லாதானோ தெரியவில்லை. இப்படியிருந்தாலிது கொண்டு கருத்தாவது பகுதாதைச் சேர்ந்த சிற்றூர்களில் நின்றும் பிரபல்லியமானவொரு சிற்றூராயிருக்கும். அதாகிற திங்காளில் ரூபிகள் குடியிருக்குந் தலமாயிருக்கிறது, ஆனாலது நம்முடைய



நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காலத்தில் அவ்வூரார்களெல்லோர்களும், அல்லது அவர்களிற் சிலபேர்கள் ஸுன்னத்து ஜமாஅத்துகளிலுள்ளவர்களா யிருக்கக்கூடும். அப்படி யில்லாதிருந்தா லொருபோதும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த ஊரிலிறங்கமாட்டார்கள். றலியல்லாஹு அன்ஹு.

## 57-வது ஹிக்காயத்து.

(*)

ஐம்பத்தேழாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபூமுஹம்மதுத் தல்ஹத்துபுனு முலப்பனாத்தொட்டும் பேசிவந்ததாயிருக்கும், அவர்கள் சொல்லுகிறார்கள், என்னுடைய ஷெய்காகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள், என்னுடைய கருமத்தின் துவக்கத்தில் பகுதாதுப் பட்டணத்திலிருபதுநாள்மட்டும் புசிக்க யாதொன்றையுங் காணாமலும், ஒரு ஹலாலான குழைபோற்கொற்றது கிடையாமலு மிருந்தேன். அப்பால் ஆமான குழையாவது கிடைக்குமோவென்று பார்ப்பதற்குக் கிஸ்றாக்கட்டிய கொத்தளத்தைச்சேர்ந்த பாழ்பூமிக்குப் புறப்பட்டுப் போனேன். அப்போதவ்விடத்தில் அவுலியாக்களில் நின்று மெழுபது மனுஷர்களைக்கண்டேன், அவர்களெல்லோர்களும் நான் தேடுகிறதைத்தான் தேடுகிறவர்களாயிருக்கிறார்கள். ஆகையாலவர்களுடனே நானும் போய் நெருங்குவது பரிபாலனத்திலுள்ளதல்லவென்று எண்ணிக்கொண்டு திரும்பி பகுதாதளவில் வந்திருக்கும்போது எனது கிளையாருடைய ஊரில்நின்றும் நானறிந்தவொரு மனுஷன் என்னைவந்து கண்டு கொஞ்சம் பொடியான பொன்னைத் தந்து இதானதுங்களுடைய தாயாரவர்களுங்களுக்குத் தரும்படியாகச் சொல்லி யென்னிடங் கொடுத்தனுப்பினார்களென்று சொன்னார். அப்போது நானதை வாங்கி அதில்நின்றுங் கொஞ்சத்தை யெனக் கெடுத்துக்கொண்டு மீதியுள்ளதைக்கொண்டு விரைவாகப் போயந்தக் கோட்டையின் பாழான இடத்திலிருக்கிற அந்த எழுபது அவுலியாக்களுக்குங் கொடுத்தேன். அப்போதவர்க ளிது வென்ன

வென்று கேட்டார்கள். அதற்கு நான் இதாகிறதென்னுடைய தாயா
ரவர்களிடத்திலிருந்து வந்தது. இதை யுங்களை விட்டுவிட்டு நான்மட்
டும் சொந்தமா யெடுத்துக்கொள்ள எனக்குப் பிரியமில்லை யென்று
சொல்லிவிட்டுப்பருகாதுக்கு வந்துகாலிக்கெடுத்திருந்தபோன் பொடி
யைவிற்றுவஜீபனம்வாங்கியவிடத்திலிருந்தபக்கீறுமார்களெல்லோர்
களையுங் கூப்பிட்டுவிட்டு எல்லோர்களு மொன்றாயிருந்து புசித்துப்
பசியாறினோம், அந்தப்பொன்னில் அந்த இராவின் வஜீபனத்திற்கா
வது ஒரு பொடி முதல் மீதியில்லையென்று சொன்னார்கள்.

## 58-வது ஹிக்காயத்து.

—(*)—

ஐம்பத்தெட்டாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபுல்அப்பாஸ்
அஹ்மதுபுனு இஸ்மாயீல் மஃறாபுயி.செனித் தப்பால் றஹிம
ஹுல்லாஹு அவர்களைத்தொட்டு மவர்களுடைய பிறமான இஸ்
னாதுகொண்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அதாவதென்னவெ
னில் இடனகை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்கள் அவர்களுக்கு யாராவதொருவர் பொன்களைக்
கொண்டுவந்து கொடுக்கவந்தா லந்தப் பொன்களை யந்த முஸல்லா
வின் கீழே வையென்று சொல்வார்களேதவிர தங்களுடைய கை
கொண்டு பிடித்து வாங்கமாட்டார்கள். அப்பா லவர்களுடைய
கருமக்காரன் வந்தால் அந்த முஸல்லாவின் கீழிருக்கிறதை
யெடுத்து ரொட்டிக்காரனுக்கும், கீரைக்காரனுக்கும் கொடுத்து
விடென்று சொல்வார்கள். அவர்களுடைய குலாமாகிய முலப்ப
றென்பவர் ரொட்டிக்--டத்தை வைத்துக்கொண்டு ஷெய்குமுஹ்
யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களு
டைய வீட்டுவாசலில் நிற்கிறவராயிருந்தார். இன்னும் ஷெய்கு
முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்
தங்களுக்கு சுல்தான்களிடத்திலிருந்து ஏதாவதொரு வெகுமானங்
கள் வந்ததானா லவைகளைக் கோதுமை மாத்திரிக்கும் அபுல்பத்
ஹுக்குக் கொடுத்துவிடுங்களென்று சொல்வார்கள். ஏனெனில்
ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு
அவர்கள் அந்த அபுல்பத்ஹிடமிருந்தும் மாக்கள் கடன்வாங்கி பிக்



ஹாளிகளுக்கும், விருந்தாளிகளுக்கும் ரொட்டிகளைச் சுட்டு விருந்
தளிக்கிறவர்களாயிருந்தார்கள். இன்னும் ஷெய்குமுஹ்யித்தீன் அப்
துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஹலாலாயிருந்து
வாக்கப்பட்ட மலிக்கோதுமைகள் கொஞ்சமுண்டாயிருந்தது
அதையவர்களைச் சேர்ந்தவர்களில்நின்றுஞ் சிலரிடங் கொடுத்துப்
பொதுவான நிலங்களில் வருஷந்தோறும் பயிர்செய்து வரப்
படும். அவர்களுடைய ஆள்க்களிற் சிலர்கள் விளைந்த கோதுமை
யைத் திரித்து மாவாக்கி அதில்நின்று மொவ்வொரு நாளடங்கலு
லும் நாலு, அல்லது ஐந்து ரொட்டிகள் சுட்டுப் பகல் கடைசியில்
ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு
அவர்களுடைய சமுகத்திற்குக்கொண்டுவருவார்கள். அந்தரொட்
டிகளை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்கள் முறிதது தங்கள்கூட இருக்கிறவர்களுக்கெல்
லாம் ஒவ்வொரு துண்டாகக் கொடுத்துவிட்டு மிஞ்சியதைத் தங்க
ளுக்கு வைத்துக்கொள்வார்கள். அவர்களுக்கு ஹதிய்யாக் கொ
டுக்கப்பட்டா லந்த ஹதிய்யாவை அந்நேரத்திற் றங்களுடனிருப்
பவர்களுக்கெல்லாம் பங்கிட்டுக் கொடுப்பார்கள். அவர்களாகிற
வர்கள் ஹதிய்யாக்களைக் கபூல்ச் செய்கிறவர்களாயும், அதற்குப்
பதிலுபகாரஞ் செய்கிறவர்களாயும், நேர்ச்சிகளைக் கையேற்கிற
வர்களாயும், அவைகளில்நின்றுந் தின்கிறவர்களாயுமிருந்தார்கள்.
றலியல்லாஹு அன்ஹு.

## 59-வது ஹிக்காயத்து.

—(*)—

ஐம்பத்தொன்பதாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு ஷரீபு அபூ
அப்தில்லாஹி முஹம்மதிபுனுல் கிளூரில் ஹுஸைனிய்யி றஹிம
ஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்ட
தாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கென்னுடைய
தகப்பனாரவர்க ளறிவித்திருக்கிறார்கள், அதென்னவெனில் நான்
என்னுடைய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்களுடனே ஒரு வெள்ளிக்கிழமையன்று ஜாமிஆப்
பள்ளியிலிருந்தேன், அப்போதவர்களிடத்தி லொரு கச்சவடக்கா

ரர் வந்து எனது நாயகமே யென்னிடத்தில் ஸக்காத்தல்லாத சில
முதல்களிருக்கிறது. அவைகளை பக்கீருகளுக்கும், மிஸ்கீன்க
ளுக்கும் கொடுக்க நாடுகிறேன்- அதற்குத் தகுமான பேர்களை
நான் காணவில்லை. ஆகையால் தாங்கள் நாடினபேர்களுக்குநான்
கொடுக்கிறேன். அதற்கெனக் குத்தரவு கொடுக்கவேணுமென்
றுத்தரவு கேட்டார். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன அப்துல்
காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களந்தக் கச்சவடக்கார
ரைப்பார்த்து நீரந்த முதலை தகுமானவனுக்கும், தகுதியில்லாதவ
னுக்குங் கொடும், அப்படிக் கொடுத்தீரானால் அல்லாஹுந் தஆ
லா நீரெடுக்கத் தகுமானவனையும், தகுதியில்லாதவனையுந் தருவா
னென் றுத்தரவருளிச்செய்தார்கள்.

இன்னும் ருவி சொல்லுகிறார்கள், ஒருநாள் ஷெய்கு முஹ்
யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு
பக்கீரை மனமொடிந்தவராயிருக்கக்கண்டு ஓய் பக்கீரே யும்மு
டைய கருமமென்னவென்று கேட்டார்கள். அதற்கந்த பக்கீரா
னவர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்
ஹு அவர்களைப் பார்த்து எங்கள் நாயகமே நானின்றைக்கு
ஆற்றின்கரைக்குப் போய்த் தோணிக்காரனிடத்தி லென்னை
அக்கரையிற் கொண்டுபோய் விடும்படியாகக் கேட்டேன். அதற்
கவனப்படிச் செய்யமாட்டேனென்று சொல்லிவிட்டான்.
ஆனாலென்னுடைய கையிலொன்றுமில்லையென்று தானே யிப்ப
டிச் செய்தானென்று என்னுடையக் கல்பொடிந்தவனாயிருக்கிறே
னென்று சொன்னார் இப்படி யந்தப் பக்கீறு சொல்லி வாய்மூட
முன்னமே ஒரு மனிதன் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு
றழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நேர்த்திக் கடனாகத் தன்
னுடனே முப்பது தங்கக்காசைக் கட்டியிருக்கும்படியான ஒரு
பையையெடுத்துக் கொண்டுவந்து வைத்தார். அப்போது ஷெய்கு
முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்க
ளந்தப் பக்கீறுக்கந்தப் பையைக் கொடுத்து இதைக்கொண்டு
தோணிக் காரனளவிற் போய் அவனுக்கிதைக் கொடுத்து இனி
மேலொரு பக்கீரையாவது தட்டிவிட வேண்டாமென்று சொல்
லுமென்று சொல்லித் தங்களுடைய குப்பாயத்தையுங் கழற்றி
யந்தப் பக்கீறுக்குக் கொடுத்து அவருடைய மனமொடிவை நீக்கிச்



சந்தோஷப்படுத்தி அனுப்பிவித்தார்கள். அப்பாலந்தப் பக்கீறில்
நின்றுமந்தக் குப்பாயத்தை இருபது தங்கக்காசுக்கு வாங்கப்பட்
டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

——[*]——

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 6 - DEC 1911 MADRAS.

## 60-வது ஹிக்காயத்து.

——(*)——

அறுபதாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபூ அப்தில்லா
ஹிப்னு ஹஸனிப்னு பத்ருனிப்னி அலிய்யில் பகுதாதி றஹிமஹுல்
லாஹு அவர்கள், ஷெய்கு அபூ முஹம்மது அப்துல்லத்தீபிப்னு
அஹ்மதனவிற் சேர்ந்த இஸ்னாதுகொண்டு பேசிவரப்பட்டதாயி
ருக்கும். அவர்கள் சொன்னார்கள். என்னுடைய ஷெய்காகிய
ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு
அவர்கள் ஒருநாளறிவு பேசுகிறவர்களாயிருந்தார்கள் அப்போத
ந்த அறிவுகளைக் கேட்டிருக்கும் மனிதர்களுக்குக் கொஞ்சம் சடை
வுண்டாச்சுது. அவ்விதம் சடை வுண்டானது ஷெய்கு முஹ்யித்
தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத்
தெரிந்தது அந்த உடனே அவர்களுடைய திருநயனங்களால் வான
த்தளவில் நோக்கி யிந்த இரண்டு பைத்துகளையுஞ் சொன்னார்கள்.

### பைத்து.

லாத்தஸ்க்கீனீ வஹ்தீ பமாஅவ்வத்தனீ.
அன்லாவுஃபீஹ பிஹா அலாஜுல்லாஸீ.
அன்தல்கரீமு வஹமல்யலீக்கு முக்கர்றமா.
அன்யக்துமன்னுத மாவுதூனல் காஸீ.

(இதின் பொருள்) என்னுடைய மஹ்பூபாகிய நாயனே உன்
னுடைய ஹுப்பென்னுங் குடிப்பை யெனக்கு மட்டும் புகட்டா
தே, எனக்கு மென்னுடன் இருக்கிறவர்களுக்கும் புகட்டுவாயாக.
வன்னாலந்தக் குடிப்பை யென்கூட இருப்பவர்களுக்கு, நான் ஆமா
க்கிவிக்காமல் நான் மட்டுங் குடித்துக் கொள்வதை நீ யெனக்கு
வழக்கமாக்கி வைக்கவில்லையே, நீயாகிற தப்படிப்பட்ட வள்ளலா
னவன் ஆகையாலென்னுடைய குடித் தோழன்மார்கள் குடிப்பை

அனுபவியாமல் முன்னோக்கவிடுகிறது சங்கை கொடுக்கப்பட்ட சங்கையாளனுக்குரி லாயிக்காகுமா வென்று. இப்படிப்பட்ட இரண்டு வைத்துகளையுஞ் சொல்லவே மனிதர்களெல்லாம் பெருந் துரும்புதலாய்த் திரும்பி யவர்களுக் கிடையிற் பாராதூரமான கருமம் வந்து புகுந்தது. அப்படியாகையாலந்தக் களரியில் நின்றுமொருவரோ, அல்ல திரண்டுபேர்களோ மௌனத்தாய்விட்டார்கள். இந்த ருவிகளிலொருவர், மௌனத்தானது ஒருவர், அல்ல திருவரென்பதிற் சந்தேகம் வைத்தார்.

இன்னும் ஷெய்கு அபுல்காஸிமில் பஸ்ஸாஸ் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். திடனாக நாங்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடனே இருந்த நேரங்களெல்லாம் திடனாக எங்களுக்குக் கனவு கண்டதுபோலாகிவிட்டது- நித்திரை செய்துமுழித்ததுபோலவைகளெல்லாவற்றையு மிழந்துவிட்டோம். திடனாக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வியல்புகளெல்லாந் தூய்தானதாயும், அவர்களுடைய நடுவாகிறது ஆகாத வஸ்துக்களை யணையாததாயும், அவர்களுடைய கையானது சகாவத்து மிருந்ததாயு மிருந்தது. இன்னுமவர்களாகிறவர்களாகிறவர்கள் எல்லா வொவ்வொரு இரவுகளிலும் ஸுப்றாவை விரிக்க வசி விருந்தாளிகளுடனே தின்கிறவர்களா யிருந்தார்கள். இன்னுமவர்கள் பலஹீன பேர்களுடனிருப்பார்கள். இல்முகளைத் தேடிப் படிப்பவர்களைப்பற்றி ஸபுறுஞ் செய்வார்கள். தங்களுடைய கூட்டாளிமார்களிற் காணாத பேர்களை வியாரிப்பார்கள். அவரவர்களுடைய கருமங்களைக் குறித்துங் கேட்பார்கள். இன்னுமவர்களுடைய வசைப்பைப் பேணிக்கொள்வர்கள். இன்னுமவர்கள் செய்யும் பொல்லாங்குகளை மன்னித்துக்கொள்வார்கள். இன்னுமவர்களில் நின்றும் யாராவதொருவர் சத்தியஞ்செய்தாலந்தச் சத்தியஞ் செய்தவரை யுண்மையாக்கி வைத்து அவரில் நின்றுந் தாங்களறிந்த அறிவை மறைத்துக்கொள்வார்கள். இன்னும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடனிருக்கிறவன் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் தன்னைப் பார்க்கிலு மெத்தச் சங்கையானவ னொருவனுமில்லையென்றெண்ணிக்



கொள்வான், ஆனாலவனைப் பார்க்கிலும் வெட்கத்தாற் கடிதானவனை நான் காணவில்லையென்று சொன்னார்கள். மேற் கூறப்பட்ட ஷெய்கு ஷமறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களை நினைத்தால் நினைக்குந் தோறெல்லாம் இந்த இரண்டு வைத்துகளையுஞ் சொல்லுகிறவர்களாயிருந்தார்கள்.

வைத்து.

அல்ஹம்துலில் லாஹியின் னிபீஜிவாரிபத்தன்.
ஹாமில் ஹக்கீககத்திநப் பாஇன்வலர்றுரி.
லாயமுபவுத்தறய அல்லா இந்த மக்றமத்க்ன்.
மினல்ஹயாஇவலா யுதுலிஅலா ஆரி.

(இதின் பொருள்) எல்லாப் புகழும் அல்லாஹுத் தஆலாவுக்கே யின்றி வேறில்லை. திடனாக நானொரு நாயகத்தினுடைய கார மானத்திலிருக்கிறேன். அவர்களெப்போற்கொற்ற நாதாவானவல் ஹக்கீக்கத்தை அறிந்து காப்பாற்றிக்கொள்பவர்கள். பலன் செய்யப் பாத்திரமானபேர்களுக்கு மிகுந்து பலன் செய்பவர்கள். சங்கடஞ் செய்யத் தகுந்தபேர்களுக்கு மிகுந்து சங்கடஞ் செய்பவர்கள். அவர்களுடைய வெட்கத்தாற் சங்கையான விடத்திலேயே அல்லாது பார்வையை யுயர்த்தமாட்டார்கள். ஒரு பழிப்பின்பேரில் கண்ணை மூடவுமாட்டார்களென்பதால்.

—:o:—

## 61-வது ஹிக்காயத்து.

—[*]—

அறுபத்தோராம் ஹிக்காயத்தாகிறது இமாம் ஷாபிஈ மதுஹபிலுள்ளவர்களும். தமீம்கிளையிற் சேர்ந்தவர்களுமான. அபூ அஸ்றான். அவர்களுடைய குமாரர் அலீ, அவர்களுடைய குமாரர் அப்துல்லா, அவர்களுடைய குமாரர் முஹம்மது, அவர்களுடைய குமாரர் அப்துல்லாவென்னும் அபூஸஃது றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நானு மின்னமொரு வாசிபனுமாகச் சேர்

ந்து இல்மைத் தேடிப் படிப்பதற்காக வேண்டிப் பகுதாதிற் போ
யிருந்தோம். அந்நாள் இபுனுஸ் ஸக்கா வென்பவர், நல்லாயிப்
யாவென்னும் மேற்சொல்லிய படிப்பதி லென்னுடைய கூட்
டாளியாயிருந்தார். ஆனால் நாங்கள் வணக்க முடையவர்களா
யும், ஸாலிஹான பெரியோர்களை ஸியாறத்துச் செய்கிறவர்களா
யுமிருந்தோம். அந்நேரத்தில் பகுதாதிலொரு மனிதரிருந்தாரவரை
கவ்தென்று சொல்லப்படுகிறது, இன்னுமவர் நினைத்த நேரம் வெளி
யாகிறார், நினைத்த நேர மறைத்துக்கொள்கிறாரென்றும் சொல்லப்
படுகிறது ஆகையால் நானும், இபுனுஸ்ஸக்காவும், ஷெய்கு முஹ்
யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களும் அந்
த கவ்தென்பவரை ஸியாறத்துச்செய்ய நாடிப்போனோம் அந்நாள்
ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு
அவர்கள் வாலிபராயிருந்தார்கள். நாங்களவ்விதம் புறப்பட்டுப்
போகிறபோது வழியில் இபுனுஸ்ஸக்காவென்பவர் நானின்றையி
லந்த கவ்திடத்தில் அவரால் ஜவாபு சொல்ல வியலாத கேள்வியொ
ன்று கேட்கவேணுமென்று சொன்னார். அப்பால் நானுமொரு
மஸ்அலாக் கேட்டு அதற்கவரென்ன சொல்கிறாரென்று பார்க்க
வேணுமென்றேன். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்
காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் நானந்
த கவ்துடைய சமுகத்திலிருந்துக்கொண்டு யாதொன்றுங் கேளா
மலிருக்கும்படி அல்லாஹுத் தஆலா காத்துக்கொள்வானாகவும்
நானவர்களைக் கண்டுக்கொள்வதால் பறக்கத்துப் பெறுவதை வழி
பார்த்துக்கொள்வேனென்றார்கள். இவ்விதமாய் நாங்கள் மூவர்
களும் பேசிக்கொண்டு வழிகளைக் கடந்து பின்னர் அந்த கவ்தின்
வீட்டிற் போய்ப் புகுந்தோம் அப்போதவ்விடத்திலந்த கவ்தவர்
களை நாங்கள் காணவில்லை, அப்பால் நாங்கள் ஒரு சாஅத்து நே
ரம் வரையிலு மவ்விடத்திற் றரிபட்டிருந்தோம். பின்பு அந்த
கவ்தானவர்க ளவ்விடத்திலேயே யிருக்கிறார்கள். அப்போதந்த
கவ்து இபுனுஸ்ஸக்கா அளவி லெரிச்சற் பட்டவர்களாய்ப் பார்த்து
ஸக்காவுடைய மகனே உனக்குப் பிடித்த கேடென்ன என்னால்
ஜவாபு சொல்ல வியலாத மஸ்அலாவொன்று கேட்க நாடினவன்
நீயல்லவா, அந்த மஸ்அலா இன்னது அதற்கு ஜவாபு இன்னது,
நிட்டூக நானுன்னில் குபிர்க் கனலிலங்கக் காணுகிறேனென்று
சொல்லிவிட்டார்கள்.



அப்பாலென்னளவிற் பார்த்து ஓய், அப்துல்லாவே நீர் என்
னிடத்திலொரு மஸ்அலாக்கேட்டு அதற்கென்ன ஜவாபு சொல்கி
றேனென்று பார்க்க வந்தவரல்லவா, அந்த மஸ்அலா இன்னது
அதற்கு ஜவாபு இன்னது. ஆனால் நீர் அதனைக் கெடுத்துவிட்ட
காரணத்தா லிந்த துன்யாவுடைய வாழ்வான துன்னுடைய இரண்டு
காதுச் சோணை யளவிலும் முன்னைப் பதியுமென்று சொன்னார்கள்.

பின்னர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்களளவிற் றிரும்பிப் பார்த்து அவர்களைத் தங்கள்
கிட்ட அழைத்துச் சங்கையாக வைத்துக்கொண்டு ஓய், அப்துல்கா
திறே, நீர் திடனாக அதனைப் பேணிக்கொண்டதால் அல்லாவுக்கும
றசூலுக்கும் பிரியமானவராய் அவர்களுடைய பொருத்தத்தைப் பெற்
றுக்கொண்டீர். திடனாக நீர் பகுதாதில் உபதேசாசனக் கொலுவின்
மீதேறிச் சிறப்பானவர்கள்பேரி லறிவு சொன்னவராய்த் திடனாக
என்னுடைய இந்தக் கதமாகிறது அல்லாவுக்குரிய வலிமார்களடங்க
லினுடைய கழுத்தின்பேரி லாயிருக்குமென்று சொல்லிவிடுவீர், உம்
முடைய காலத்திலுள்ள அவுலியாக்க ளடங்கலும் உம்மை வலுப்ப
மாக்கி அவரவர் கழுத்துகளை யெல்லாஞ் சாய்த்துவிடுவார்கள். அப்
படியாயிட்டதைப்போற் கண்டிருக்கிறேனென்று சொல்லிவிட்டு அந்த
வக்திலேயே யெங்களைவிட்டுமந்த கவ்தானவர்கள் காணாமற் போ
னார்கள். அதின் பிறகு நாங்களவர்களைக் காணவில்லை.

அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்கள்பேரில் அல்லாவுக்கு முடுகின அடையாளங்க
வெளிப்பட்டு, சொந்தமானவர்கள், பொதுவானவர்கள் சகலத்தார்
களுமவர்களின்பேரி லொற்றுமையானார்கள் இன்னும் என்னுடைய
இந்தக் கதமாகிறது அல்லாவுக்குரிய எல்லா வலிமார்களின கழுத்
தின்பேரி லாயிருக்குமென்றுஞ் சொன்னார்கள். அந்த வக்திலு
ள்ள அவுலியாக்கள் சகலரும் அவர்களுடைய வரிசையைக்கொண்டு
விண்ணப்பஞ் செய்தார்கள். இனியிபுனுஸ் ஸக்காவாகிறது ஷரீ
இய்யத்தான இல்முகளைப் படிப்பதில் பராக்காகி அதில் மெத்தக்
கெட்டியாகி அக்காலத்திலுள்ள அனேக வித்துவான்களை மேலிட்
டுப் பற்பல கல்விகளிலும் தருக்கமிட்டு வந்தவர்களை மிகைத்துக்
கொள்வது கொண்டெங்கும் ப்ரசங்கமானார் ஆனாலவர் நாகரிகமான
பேச்சும், நல்ல அழகான கோலமுமுடையவராயிருந்தார். அப்போ

தலைமை தஸ்கரன் வசமிருந்து ஒரு காரியத்தில் அமீராஜாவினை வில் தானாதிபதியாக அமர்ந்திருந்தார் அவ்விதமாய் இபுறாஹீமைக் காவென்பவர் அமீராஜாவிடம் போய்ச் சேர்ந்தபொழுது அரசனு டைய இபுறாஹீம்க்காவை பற்பல கல்விகளிலுந் தேறினவராயும், காக ரீகமும், கல்வி லட்சணமுமுள்ளவராயும் கண்டு மெத்த ஆச்சரிய முற்றுமொப்பிய பெரிய சபை மந்திரிமார்களையும் கலைமாயானபடியனவான களையுஞ் சேர்த்து இவருடனே தருக்கமிடச் சொன்னான். அவர்க ளெல்லாரும் அடங்கலும் இவருடனே தருக்கமிட்டு இளைத்துப்போனார் கள். இவர் மிகைத்துக்கொண்டார். ஆதலால் அரசனிடத்தில் விசார மெத்த வெகுப்பமானார்.

அப்படி யிருக்கும்போது அந்த இராஜாவுடைய மகளையும், அவளுடைய அழகு சவுந்திரியத்தையுங் கண்டு மதிமயங்கி அவளை யவளுடைய தகப்பனான அவ்விராஜா விடத்திற் பெண் பேசித் தனக் கந்தப் பெண்ணைக் கலியாணம் முடித்துக் கொடுக்கும்படி கேட்டார். அதற் கவ்வரசன் அப்படி முடியாது நீ கிறிஸ்த்து வேதத்திற் புகுந் தாலே யொழிய அவளை யுனக்குக் கலியாணம் முடித்துக் கொடுக்கிற தில்லையென்று ஒரே சொல்லாகச் சொல்லிவிட்டான். அப்போதிவ ரந்தப் பெண்ணின்பேரி லுள்ள ஆசையா லதற்கொப்புக்கொண்டு நஸ் ருனி மார்க்கத்திற் புகுந்தவளைக் கலியாணம் முடித்துக்கொண்டு நஸ் ருனியாகிவிட்டார் அப்பால் இபுறாஹீம்க்காவென்பவர் நாம் கவ்து றலியல்லாஹு அன்ஹு அவர்களுக் கிடையூறு நினைத்ததால் அவர் களுடைய சொல்லின் நிமித்தந்தான் நமக்கிவ்விதம் வந்து முடிந்த தென்றறிந்து வியாகுலமடைந்து போனார்.

ருனி சொல்லுகிறார் இனி யென் பாடோ நான் தெய்வக்கிராக்கி யத்தாலன்றிப் போவேன். அவ்விடத்தில் சுல்த்தான் நூறுத்தீனுஷ் ஷஹீதென்பவர்களெனவனை யழைத்துப் பல பக்கத்திற்குந் திசை வேலை பார்க்கும்படி வம்பித்துப் பூட்டினார், நாளுமப்படியே உத்தி யோகஸ்த்தனாகி தனயாவுடைய வாழ்வினைப் பெண்பிள்ளைமை யெனக்கு வந்து கூடிவிட்டது. ஆனால் இடனாக அந்த கவ்து றலி யல்லாஹு அன்ஹு அவர்கள் எங்கள் மூவருக்குஞ் சொன்னது போலாய்விட்டதென்றார். ஆகையால் அல்லாஹுத் தஆலா அவனு



டைய அருள் பெற்றவர்களை மனம் நோவிடாமலிருக்கும்படி நம் மனைவர்களையுங் காத்துக்கொள்வானாகவும்.

## 62—வது ஹிக்காயத்து.

—:*:—

அப்துத்தீன் ஹிக்காயத்தாகிறது தெய்பு ஷாமார்களில் நின் றும் ஒரு ஜமா அத்தைத் தொட்டு மூன்று இன்னதுகளைக்கொண்டு பேசிலாகப்பட்டதாயிருக்கும் அதாக அடங்கலுஞ் சொல்லுகிறார்கள். ஷெய்கு அபூ முஹம்மது அப்துர் றஹ்மானித் * தபுஸவன்ஜீ றலி யல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருநாள் தங்களுடைய குருவியின் பேரிலிருந்துகொண்டு நாணுகிறது பறவைகளுக் கிடையில் காழக் தால் தீனாழுடைய கொக்கைப்போலவே. அவுலியாக்களுக் கிடையில் கழுத்தால் மெத்த நீண்டவனாயிருந்தேனென்று சொன்னார்கள். அந்த மஜ்லிஸில் ஜீலானிலென்னு மூரிலுள்ள ஷெய்கு அபுல்ஹஸன் அலிய் யுபுனு அஹ்மதுல் ஜீலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுமிருந் தார்கள். அவர்களோ மெத்த மேலான ஹாலை யுடையவர்களாயி ருந்தார்கள். அப்படிப்பட்டவர்களெழும்பித் தாங்களணிந்திருந்த சட்டையைச் சுற்றி யெறிந்துவிட்டு ஷெய்கு அப்துர் றஹ்மானித் தபுஸவன்ஜீயைப் பார்த்துப் பாப்போம் விடும் நானும் முட்டினை மல்லாடியுமை விழத்தட்டி விடுகிறேனென்று சொன்னார்கள். அப்போது ஷெய்கு அப்துர் றஹ்மானித் தபுஸவன்ஜீயென்பவர்கள் யாதொன்றுஞ் சொல்லாமல் வாய் சிரசை யுயர்த்திப் பார்த்துவிட்டு அவர்களுடைய அஸ்ஹாபிமார்களைப் பார்த்து மூடியிருந்து. அப்பால் அவர்களுடைய அல்லாஹுத் தஆலா இப்போ தெழும்பினவரில் ஒரு முடியாவது அல்லாஹுத் தஆலா வுடைய அருளை விட்டொழிந்ததாய்க் காணவில்லையென்று சொல்லி விட்டு ஷெய்கு அலிய்யுபுனு அஹ்மதென்பவர்களை நோக்கிக் கழற் றிப் போட்ட சட்டையை யெடுத்தணிந்துக்கொள்ளும்படியே விரு ர்கள் அதற்கவர்கள் நான் யாதொன்றை விட்டுவிட்டேனோ அதில்நான் மீளமாட்டேனென்று சொல்லிவிட்டார்கள். அப்பாலவர்களுடைய வராகிய ஜீலானென்னுந் திசையை நோக்கித் திரும்பித் தங்களு [illegible]

* தபுஸவன்ஜீயென்பது பகுதாதில் திஜ்லாவென்னும் பெரிய ஆற்றின் கரையில் ஒரு ஊரின் பேராயிருக்கும்.

டைய பெண்சாதியின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார்கள், அதா
வது,ஏ பாத்திமாவே நானுனக்குக் கொள்ளா ஒரு சட்டை கொண்டுவா
வென்று சொன்னார்கள். உடனே அந்த சப்தமான தவர்களுடைய
பெண்சாதிக்குக் கேட்டு அவளொரு சட்டையை யெடுத்துக்கொண்டு
வந்து ஷெய்கு அபியுப்புனு அஹ்மது றலியல்லாஹு. அவர்களுக்
குக் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள்.

அப்போது ஷெய்கு அப்துர் றஹ்மானித் தபுஸவன்ஜீ றலியல்
லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு அபியுப்புனு அஹ்மது றலி
யல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து உம்முடைய ஷெய்கு
யாரென்று கேட்டார்கள். அதற்கு ஷெய்கு அபியுப்புனு அஹ்மது
றலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னுடைய ஷெய்காகிறவர்ஷெ
ய்குமார்களுக்கெல்லாம் ஷெய்காகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்
காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாயிருக்குமென்று சொன்
னார்கள். அப்போது ஷெய்கு அப்துர் றஹ்மானித் தபுஸவன்ஜீ
யென்பவர்கள். ஷெய்கு அபியுப்புனு அஹ்மது றலியல்லாஹு அன்
ஹு அவர்களைப் பார்த்து ஷெய்கு அப்துல் காதிரென்று சொல்லிக்
கொள்வதைக் காணிக்கப் பூலோகத்திற் கேட்கிறோமே யல்லாது மற்ற
ஆலங்களில் நான் கேள்விப்படவேயில்லை, ஆனால் நான் நிடனைக்
குத்றத்துடைய பதனிகளிலெப்போது நாற்பது வருஷக்காலமாயிருக்
கிறேன். நானிந்த ஷெய்கு அப்துல்காதிரைக் காணவேயில்லையெ
ன்று சொல்லிவிட்டு அப்பால் தங்களைச் சேர்ந்த பேர்களில் நின்றும்
ஒரு ஜமாஅத்தை யழைத்து நீங்கள் பகுதாதிற்குப்போய் ஷெய்கு
அப்துல்காதிர் இடத்திற் சென்று உங்களுக்கு ஷெய்கு அப்துர்
றஹ்மானித் தபுஸவன்ஜீ சலாம் சொன்னார்கள், இன்னுமவர்களுக்குக்
குத்றத்துடைய பதனிகளில் நாற்பது வருஷக்காலமாகத் தரிபாயிருக்
கிறதாம், இவ்வளவிலுமுங்களை அவ்விடத்திற்குப் புகுதுகிறவர்க
ளாகவும், அல்லது வெளிப் படுகிறவர்களாகவுமவர்களுக்குக் காணா
வில்லையாமென் றுங்களுக்குச் சொல்லவுஞ் சொன்னார்களென்று சொ
ல்லுங்களென் றனுப்பினார்கள் இது இங்கனம் நிற்க.

அந்த வக்திலேயே பகுதாதிலிருந்துக்கொண்டு ஷெய்குமுஹ்
யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்
களுடைய அஸ்ஹாபிமார்களில் நின்று மொரு ஜமாஅத்தைக் கூறித்



து நோக்கி நீங்கள் ஷெய்கு அப்துர்றஹ்மானித் தபுஸவன்ஜீ ய
விற் போங்கள். அவ்விதம் போகிறவழியில் அவருடைய அஸ்ஹா
பிமார்களில் ஒரு ஜமாஅத்தை நீங்கள் சந்திப்பீர்கள். அந்
ஷெய்கு அப்துர்றஹ்மானென்பவர் இன்னஇன்ன செய்திகளை
சொல்லி யென்னளவி லனுப்பிவைத்திருக்கிறார். ஆகையால் நீ
களவர்களைச் சந்தித்தபோது அவர்களையு முங்களுடனே திருப்பி
கூட்டிக்கொண்டுபோயி அவரிடஞ் சேர்ந்தவுடனே அவருக்குச்
சொல்லுங்கள். உங்களுக்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதி
று சலாம் சொன்னார்கள். இன்னு முங்களுக்குச் சொன்னார்கள்
நீங்கள் தறக்காத்திலிருக்கிறீர்களாம், தறக்காத்திலிருக்கிறபேர்
கள்,ஹஸூறத்தென்னும் சமுகத்திலிருக்கிறவர்களைக்காணமாட்டார்
களாம், ஹஸூறத்திலிருக்கிறபேர்களமிருத்தம் எனும் குதுடை
மறைக்கிற தானத்திலிருக்கிறவர்களைக் காணமாட்டார்களாம்.
ஆனால் நான் மிருத்தம் எனுந் தானத்திலிருக்கிறேன். நீங்களென்
னைக் காணாதவிதமாகப் பாபுஸ்ஸிர்றென்னும் அகமிய வாசலாற்
புகுதுவேன், வெளிப்படுவேன். இதற்கொரு அடையாளமாகிறது
இன்ன நேரத்திலின்ன பரிவட்டமொன்று என்னுடைய கையின்
பேரில்தா னுங்களுக்கு வந்தது, அதாகிறது கில்அத்துரிலா பொ
ருத்தமென்னும் வெகுமானமாயிருக்கும். இன்னுமொரு அடை
யாளமாகிறது தறக்காத்தில் வைத்து அல்லாவுக்குரிய வலிமார்கள்
பனிரண்டாயிரம்பேர்கள் ஹாஸிறாயிருக்கையில் கில்அத்துல்விலாயா
விலாயத்து வெகுமானந் தரப்பட்டது. அதாகிறது ஒரு பச்சைச்
சட்டையாயிருக்கும், அதற்கு வைக்கப்பட்டிருக்கிற அருகாகிறது
சூறத்துல் இகுலாஸ் குல்ஹுவல்லாஹு என்கிற சூறத்தாயிருக்கும்.
அதுவும் என்னுடைய கையின்பேரில்தான் வந்ததாயிருக்கும்.
இதுவுந் தவிர இன்னுமொரு அடையாளமாகிறது இன்ன இரவி
லின்னவிதமான தஷ்ரீபென்னும் சீர் உங்களுக்குக் கிடைத்தது.
அதுவு மென்கையின்பேரில்தான் வந்ததாயிருக்கும். அதாவது
பத்ஹுடைய தஷ்ரீபாயிருக்குமென்றுஞ் சொல்லுங்களென்றனுப்
பினார்கள். இவ்வித மனுப்பிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்கா
திறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அஸ்ஹாபிமார்கள்
புறப்பட்டவாசி வழியிற் போனபோது ஷெய்கு அப்துர்றஹ்
மானென்பவர்களுடைய அஸ்ஹாபிமார்களைக்கண்டு ஷெய்குமுஹ்
யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய

வர்களும் [illegible] காரருமார்களையுங் கண்ணுற்றுத் திரும்பிக் கூட்டிக் கொண்டு வந்து [illegible] அப்துர்றஹ்மானித் தபுஸவன்ஜீ யவர்கள் சமுகத்திற் போய்ச் சேர்ந்து அவர்களுக்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு [illegible] அவர்கள் சொல்லி யனுப்பியசெய்தியை [illegible]ர்கள். அதுகேட்டவுடனே ஷெய்கு அப்துர்றஹ்மானித் தபுஸவன்ஜீ றஹிமஹுல்லாஹு அவர்கள் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுண்மை சொன்னார்கள், அவர்களாகிறது அக்காலத்தில் அவ்லியாக்களுக்கெல்லாம் சுல்தானாகவும், அதிகாரம் நடத்துகிறவர்களாகவுமிருக்குமென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

காலல்முத்தறஜ்ஜிம் இவ்வாரிசுகளை எட்டு ஒருவரிக்காயத்தி வேறேயிடத்தில் வந்திருக்கிறது. அதையுமிவ்விடத்திற் சேர்க்கிறேன். அதாகிறது ஷெய்கு அபுல்ஹஸனுல் அஜமத்தபுஸவன்ஜீ றஹிமஹுல்லாஹு அவர்களைக்கொண்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும், அவர்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய ஷெய்கு அப்துர்றஹ்மானித் தபுஸவன்ஜீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மௌத்துடைய ஹால் ஹாஸிலானபோது அவர்களுடைய மகனார் கிட்டப்போய் எனது சகப்பனாரே யெனக்கு வஸிய்யத்துச் சொல்லுங்களென்று கேட்டார். அதற்கு ஷெய்கு அப்துர்றஹ்மானித் தபுஸவன்ஜீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய மகனாரைப்பார்த்து மகனே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹுறுமத்தைப் பேணிக்கொள், அவர்களையே பிரியமாக் கொண்டு அவர்களுக்கு கிதுமத்துச் செய்து நடந்துக்கொள். [illegible] வலீயத்துச் செய்தேனென்று சொன்னார்கள். அப்பாலவர்கள் வபாத்தானதின் பிறகு அவர்களுடைய மகனார் பகுதாதிற்குப் பிரயாணமாகி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தில் வந்து சேர்ந்தார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்த அவர்களைச் சங்கைசெய்து [illegible] முடித்தாட்டித் தங்களுடைய மகளார் ஸித்து பாத்திமாவையும் நிக்காஹு முடித்துக்கொடுத்தார்கள். பின்பு ஷெய்கு அப்துர்றஹ்மானித் தபுஸவன்ஜீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மகனார் உல



மாக்களுடைய உடுப்புடுத்துகிறவர்களாயிருந்தார்கள். ஒருநாளவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மத்றசாவிலிருந்துக்கொண் டிருக்கும்போது ஒரு போசையிருந்து தட்டழிந்த பக்கீரானவர் வந்து அவர்கள் கிட்ட இருந்துக்கொண் டவர்களுடைய முன் கைசட்டைகளைப் பிரட்டிப்பிரட்டி யிதாகிறது ஷெய்கு அப்துர்றஹ்மானித் தபுஸவன்ஜீ யவர்களின் மகனுடைய சட்டைக்கைக ளல்ல, இதாகிறது மந்திரி இபுனுஸைபிறாவுடைய சட்டைக்கைகளாயிருக்குமென்று சொல்லத்தொடுத்தார். அப்போது ஷெய்கு அப்துர்றஹ்மானித் தபுஸவன்ஜீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மகனார்வீட்டுக்குள்ளே புகுந்து தாமுடுத்திருந்த உடுப்புகளையெல்லாங் களைந்து போட்டுவிட்டு ஒரு ஆட்டுக்கம்பளியை யுடுத்திக்கொண்டு பகுதாதைவிட்டுப் புறப்பட்டு போய்விட்டார்கள். அவர்க ளின்னவிடத்திலிருக்கிறார்களென்று தெரியவுமில்லை. அவர்களுடைய செய்திகள் யாதொன்றும் வரவுமில்லை.

அப்பால் சில காலத்திற்குப்பிறகு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய அஸ்ஹாபிமார்களில்நின்றும் இரண்டுபேர்களைத் தங்கள் சமுகத்திலழைத்து நீங்களிரண்டுபேர்களும் உப்பாதானென்கிற ஊருக்குப் போங்கள். அவ்விடத்திலே ஷெய்கு அப்துர்றஹ்மானித் தபுஸவன்ஜீயுடைய மகனாரைக் காண்பீர்கள். உங்களுடைய பார்வையானதவருடைய பேரில்விழுந்தவுடனே உங்களுடைய சிறையிலகப்பட்டுக்கொள்வார், அவரை யிவ்விடத்திற்குக் கொண்டுவாருங்களென்று சொன்னார்கள். அப்படியே அவ்விருவர்களும் உப்பாதானுக்குப்போய் அவ்வூரார்களில்நின்றுங் கடற்கரையிற் றரிபட்டிருக்கிற மனுடர்களிற் சிலர்களிடத்தில் ஷெய்கு அப்துர்றஹ்மானித் தபுஸவன்ஜீயுடைய மகனாரைக் குறித்துக் கேட்டார்கள். அதற்கவர்கள் அவராகிறவர் எல்லா வொவ்வொரு நாளிலுந் தவறாது, தினமொருதடவை கடலுக்குவந்து உலூச்செய்துக்கொண்டு போவார், அவருக்குப் புலி யுறுமுவதுபோ லொரு வுறுமுகமுண்டு. அவருடைய திடுக்கத்தால் கடற்றுரும்பிவிட முடிகுமென்று சொன்னார்கள். அப்படிச்சொல்லியபின் இவ்விருவர்களுஞ்சொஞ்சநேரந் தரிபடவில்லை, அவர்கள் சொன்னபடியேயுது

மிக்கொண்டு வந்தார். அப்போதிந்த இருவர்களும் அவரைப் பார்த்தபோது அவரிவர்களைப் பார்த்து உங்க ளிருவர்களையும் அனுப்பிவித்தவருடைய கைப்பிடியிலென்னைச்சிறையாக்கிக்கொண் டீர்களென்று சொன்னார். அப்போது தவனைப்பார்த் திவ்விருவர்க ளும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன் ஹு அவர்களுக்கு ஜவாபு சொல்லுமென்று சொன்னார்கள், அதற் கவர் மிச்சம் நல்லது, அடிபணிந்து கேட்டுக்கொண்டேனென்று சொல்லிக்கொண்டு இவ்விருவர்களு முன் நடக்க, அவர் பின்னடந் துவந்தார்கள். இவ்விருவர்களு மிருந்தா லவரு மிருப்பார், இவ்வி ருவர்களும் நடந்தா லவரும் நடப்பார், இவ்விதமாக பகுதாதிற்கு வந்து சேர்ந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன்ஹு அவர்களுடைய திருச்சமுகத்தி லவருடைய தலை யை கவிழ்ந்துக்கொண்டு பகா அதபுடனே வந்திருந்தார். அப் போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவருடுத்திருக்கிற ஆட்டுத்தோலியைக் கழ ந்துவிடும்படி செய்து அவர் முன் னுடுத்திருந்த உடைகளை யுடுத் தாட்டி அவருடைய பெண்சாதியுடனே சேர்த்து வைத்துவிட்டார் கள். றலியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன் வநபஅனாபி பறகத் திஹிம் ஆமீன்.

## 63—வது ஹிக்காயத்து.

அறுபத்திமூன்றாம் ஹிக்காயத்தாகிறது ஷாமிராச்சியத்தி லிறங்கியிருந்த ஷெய்கு அபுல்காசிமில் பத்தாஇஹீ றஹிமஹுல் லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவ ர்கள் சொல்லுகிறார்கள். ஹிஜுறத்து (ஐ)நூற்றியெழுபத்தொன்ப தாம் வருஷம் * அபுனுவென்னு மலையளவில் அதிலிருக்கிற ஸாலி ஹீன்களை ஸியாறத்துச்செய்ய நாடிப்போனேன். அந்நாளிலந்த மலையில் ஸாலிஹீன்களில்நின்றும் இப்பறானிதுள்ளவொரு மனு டருண்டாயிருந்தார். அவருக்குப்பெயர் ஷெய்குல் ஜபலீ அதா

* அபுனுவென்பது ஷாம் இராச்சியத்தில் ஆமிலென்னும் ஒருமலைக்கு முடுகுபெயராயிருக்கிறது.



வது மலையைச்சேர்ந்த ஷெய்கு என்று சொல்லப்படும். அவர், அபுனுவென்கிற மலையில் தரித்திருந்ததுனாலபடியாலவருக்கப் படிப்பெயர் சொல்லப்பட்டது. நானவரளவிற் சென் றுட்கார்ந் துக்கொண்டு எனது நாயகமே தாங்க ளிவ்விடத்திற்கு வந்து எத் தனை வருஷமாச்சுதென்று கேட்டேன். அதற்கவர் அறுபது வரு ஷமாச்சுதென்று சொன்னார், அப்போது நான் ஆச்சரியங்களில் நின்றும் ஏதாகிலுமிவ்விடத்தில் நடந்ததென்று கேட்டேன். அதற்கவர் ஹிஜ்றத்து ஐநூற்றி ஐம்பத்தொன்பதாம் வருஷம் நா னிவ்விடத்திலிருந்தேன், அப்போது நிலவு திவாம்பரமான ஓரி ரவில் மலையிலுள்ளவர்களெல்லாம் சிலர்கள் சிலர்களாகவில் வந்து வந்து கூடி ஆகாயத்திற் பறந்து இறாக்கிராச்சியத்துப் பக்கத்தை நோக்கி ஒரு கூட்டத்திற்குப்பின் ஒரு கூட்டமாகப் போகிறார்கள். அப்போது நானவர்களிலிருந்து ஒரு கூட்டாளியைக்கண்டு இவர்க ளெவ்விடத்திற்குப் போகிறார்களென்று கேட்டேன். அதற்கவர் நாங்களெல்லோர்களும் போய்க் குதுபுக்கு முன்னே ஹாஜிரா யிருக்கும்படி யெங்களை கிழுறு அலைஹிஸ்ஸலாமவர்க ளேவினார்க ளென்று சொன்னார். அப்போதவரிடத்தில் நான் குதுபு யா ரென்று கேட்டேன். அதற்கவர் குதுபாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்று சொன் னார். அதுகேட்டுடனே யென்னுடைய கூட்டாளியிடத்தில் நா னும் உம்முடனேவர வுத்தரவு கொடுமென் றுத்தரவு கேட்டேன். அவரும் நல்லது வாருமென்று சொன்னார். அப்போது நானு மவரு டனே ஆகாயத்திற் பறந்து நடந்து கொஞ்சநேரத்தில் பகுதா துக்குப்போய்ச் சேர்ந்துவிட்டோம், அவ்விதம் போய்ப் பார்க் கும்போது அவர்களெல்லோர்களும் ஷெய்கு முஹ்யித்தீன் அப் துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்முன் சென்று அணியணியாயிருக்கிறார்கள். அவர்களிற் பெரிய மனுடர்களா யிருப்பவர்களெல்லாம் என் நாயகமே, என் நாயகமேயென்று சொல்லிக்கொண்டு நிற்கிறார்கள். அந்தப் பெரிய மனுடர்களைப் பார்த்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு கட்டளை கருமஞ்சொல்லி யேவினவந்த ஏவற்பிரகாரமாயவர்கள் விரைகிறார்கள்.

அப்பாலவர்க ளடங்கலையும் போகும்படியாக ஷெய்கு முஹ் யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கட்

டோய்விட்டார்கள். அந்தக் கட்டளைப்படியே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பிற் காட்டாமல் அவர்களுக்கு முற் காட்டினவர்களாகவே யவரவர்களுடைய கால்களையும் பின்னுக்குப்பின்னுக்கு வைத்து ஆகாயத்திற் பறந்துவிட்டார்கள், நானு மென்னுடைய கூட்டாளியுமவர்களோடே பறந்து இந்த மலையளவில் வந்து சேர்ந்தோம். அப்போது நானென்னுடைய கூட்டாளியை நோக்கி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தில் அதபாயிருப்பதிலும், அவர்களுடைய வுக்கு வழிப்படுவதி லெசாப்படுவதிலும் இன்றிரவைப்போல நான் காணவில்லையென்று சொன்னேன், அதற்கவ னென்னைப்பார்த்து என்னுடைய பிறப்பே யென்னுடைய பிதாவே யாகவுமிருக்கிறது அல்லாவுக்குரிய எல்லா வலிமார்களுடைய தோளின் மேலாயிருக்குமென்று சொன்னவர்கள் அந்த ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாயிருக்கும். இன்னுமவர்களுக்கு வழிப்பட்டு அவர்களை ஹுறுமத்தாய்க்கண்டு சங்கை செய்துகொள்ளும்படி யெங்களை யேவப்பட்டிருக்க எப்படி யப்படிச் செய்யாமலிருக்கலாமென்று சொன்னானென்றார். றலியல்லாஹு அன்ஹு வஅன் ஹும் அஜ்மயீன்.

——(*)——

## 64-வது ஹிக்காயத்து.

——[○]——

அறுபத்திநான்காம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபூமுஹம்மதல்பத்தாயிஹி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும், அவர்கள் சொல்லுகிறார்கள். நானொருநாள் எங்களுடைய ஷெய்காகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வீட்டிலிருக்கையில் நானவர்களிடத்திற் புகுந்தேன். அப்போதவர்கள் சமுகத்தில் நானதற்கு முன் கண்டறிந்திராத நாலுபேர்களை யிருக்கக்கண்டு நானிருந்த விடத்திலேயே யிருந்துவிட்டேன். அப்பாலந்த நாலுபேர்களும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்தைவிட் டெழும்பினபோது ஷெய்கு முஹ்



யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னைப்பார்த்து நீ சீக்கிரமாயவர்களிடத்திற்போய் உனக்குத் துஆச் செய்யும்படி கேட்டுக்கொள்ளென்று சொன்னார்கள். உடனே நானெழும்பி அவர்கள் மத்றசாவைவிட்டு வெளியிற் புறப்படுமுன்னே அந்த நாலுபேர்களையும் போய்க்கண்டு எனக்குத் துஆச் செய்யும்படி கேட்டேன், அதற்கவர்களில்நின்று மொருவனென்னைநோக்கி உமக்கே சோபனம், நீராகிறது ஒரு மனிதருடைய காதிமாயிருக்கிறீர். அவர்களைப்போற்கொற்ற மனுடராறு லவர்களுடைய பறக்கத்தைக்கொண்டே அல்லாஹுத் தஆலா பூலோகத்தின் கண்ணோ காடு, மலை, கடல், கரை முதலிய எவ்விடங்களையுங் காப்பாற்றிவருகிறான். இன்னுமவர்களுடைய துஆப் பறக்கத்தால் கல்குகள் நல்லது, கெட்டது சகலதுகளுக்குங் கிருபை செய்கிறான். அப்போற்கொற்ற மனுடராயிருக்கும். ஆகையால் எங்களும், மற்றுமவ்வலியாக்களுமவர்களுடைய முபற்சைகளின் காவல்பாட்டிலும், அவர்களுடைய பாதாரவிந்த நிழலிலும், அவர்களுடைய கட்டளைக்குள்ளாகவுமிருக்கிறோமென்று சொல்லிவிட்டு அந்த நாலுபேர்களுமந்த மத்றசாவின் வாசலால் வெளிப்பட்டுப் போய்விட்டார்கள், அப்பால் நானவர்களைக் காணவில்லை.

பின்னர் நானுச்சரியமடைந்தவனாக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களண்டைக்குத் திரும்பிவந்தபோது நான் அவர்களிடத்தில் யாதொரு செய்தியுஞ் சொல்லமுன் அவர்களென்னைப்பார்த்து ஓய் அபூதல்லாவே அவர்களைமே யவர்களென்னைக் கண்டதையும், அதில்நின்றும் யாதொன்றையும் நானுயிரோடிருக்கையில் நீ யொருவருக்கு மறிவிக்கவேண்டாமென்று சொன்னார்கள். அப்போது நானவர்களைப்பார்த்து என்னாயகமே அவர்களாரென்று கேட்டேன். அதற்கு நாயகமவர்களென்னைநோக்கி அவர்களாகிறது காபுமலைக்குத் தலைமைக்காரர்களாயிருப்பவர்கள். அவர்களிப்போது காபுமலையிலவர்களிருக்கிற விடங்களிலிருக்கிறார்களென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

——[*]——

## 65-வது ஹிக்காயத்து.

——(*)——

அறுபத்தைந்தாம் ஹிக்காயத்தாகிறது பிரபல்லியமாகிய ஆரிபான பெரிய ஷெய்கு அலிய்புனுஹீத்தி றலியல்லாஹு அன்ஹு

அவர்களைத்தொட்டும் வந்ததாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள், நானொருதடவை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களை ஸியாறத்துச் செய்வதற்காகப் பகுதாது நகரத்திற்குப் போனேன், அப்போதவர்கள் அவர்களுடைய மத்றசாவின் மேல்தட்டில் ளுஹறைத் தொழுதவர்களாக இருக்கிறார்கள். அப்படியிருக்கையில் நானவர்கள் சமுகத்திற் சென்றேன். அவ்விதஞ் சென்றவிடத்தின் முற்ற வெளியைப் பார்க்கிறேன். அந்த முற்றவெளியில் கைபுடைய மனுடர்களிலொன்றாம் நாற்பது ஸப்புகள் நிற்கவும், ஒவ்வொரு ஸப்புகளிலும் எழுபது எழுபதுபேர்களிருக்கவுங் கண்டு நானவர்களை நோக்கி நீங்க ளாட்காரளில்லையாவென்று கேட்டேன். அதற்கவர்கள் நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் தொழுது முடிந்தெங்களுக் குத்தரவருளும் வரைக்கும் நாங்க ளாட்காரமாட்டோம், ஏனெனில் நிடமாக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய முபாறக்கான கையானது எங்களுடைய கைகளின்மேலும், அவர்களுடைய பாதாரவிந்தமானது எங்களுடைய கழுத்துகளின் மேலும், அவர்களுடைய கட்டளையானது எங்களெல்லோர்களின்பேரில் நடக்கிறதாயுமிருக்கிறது, ஆகையாலவர்களுத்தரவின்றி நாங்க ளாட்காரமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் தொழுது சலாம் கொடுத்ததின்பின்னர் அவர்களாடைகளும் விரைந்து சென்று சலாம் விண்டு நாயகமவர்களிருகரங்களையும் முத்தி முகந்துக்கொண்டார்கள். ஷெய்கு அபீஹாஷிமுல் ஹீத்திய றழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். நாங்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களைக் கண்டநேரத்தில் தலைவணங்கலேயுங் கண்டுகொண்டிறவர்களா யிருந்தோமென்று.

## 66-வது ஹிக்காயத்து.

அறுபத்தாறாம் ஹிக்காயத்தாவது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரர் செய்



யிது அப்துர்றஸ்ஸாக்கு றழியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். என்னுடைய தகப்பனாராகிய நமது நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் தாங்கள் தங்களை வலியென் றெப்போதறிந்தீர்களென்று கேட்கப்பட்டது, அதற்கு நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் நானென்னுடைய ஊர் ஜீலானில் பத்து வயதுக் குழந்தையாயிருக்கும்போது என்னுடைய வீட்டிலிருந்து புறப்பட்டுப் பள்ளிக்கூடத்திற்குப் போவேன், அப்போதெனக்குச் சூழாலே மலாயிக்கத்துகள் நடக்கக்காண்பேன், அவ்விதமாக நான் பள்ளிக்கூடத்திற் போய்ச்சேர்ந்தால் அல்லாவுடைய வலீயிருக்க இடங்கொடுங்களென்று பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளைப் பார்த்து மலாயிக்கத்துகள் சொல்லக்கேட்பேன், அப்படி நடந்து வருகையில் ஒருநாளெனக்கருகே காணறிந்த வொரு பெரியோர்கள் நடந்து போகையில் மலாயிக்கத்துகள் எனக்காகப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளைப்பார்த்து அல்லாவுடைய வலீயிருக்கவிடங்கொடுங்களென்று சொல்வதைக் கேட்டு அந்தமலக்குகளில்நின்று மொருவரிடத்தில் என்னைக்குறித்து இந்தப் பிள்ளையுடைய செய்தி யென்னவென்றந்தப் பெரியோர்கள் கேட்டார்கள். அதற்கந்தப் பெரியோர்களுக்கு இந்தப் பிள்ளையாகிறது எப்போதுங்கொற்றதாகு மிதற்கு மேலைக்கு மகா வலுப்பமான கருமங்களுண்டாகும். இன்னுமிந்தப்பிள்ளைக்கு வேண்டியவைகளெல்லாங் கொடுக்கப்படுமே தவிர இல்லையென்று சொல்லப்படாது, நாடியபடிக்கெல்லாங் கொடுக்கப்படுமே தவிர திரை போடப்படாது, முற்குதலாக்கிக்கொள்ளப்படுமே தவிர கபடஞ் செய்யப்படாது என்றந்த மலக்கு சொன்னார்கள். பின்னந்த மலக்கிடத்திற் கேட்ட மனுடரை நாற்பது வருஷத்திற்குப் பிறகு நான் கண்டு அவரந்த வகதில அப்தால்களில்நின்று முள்ளவரென்றறிந்தேன்.

இன்னும் நானென்னுடைய தாய் பிள்ளைகளிருக்கிற ஊரில் நான் சிறு பிராயமாயிருந்தேன். அப்போதெனக்குச் சிறுபிள்ளைகளுடன் கூடி விளையாடக் கருத்துவரும், அப்படிக் கருத்துண்டாகுந்தோறெல்லாம் ஓய் பறக்கத்தைப் பெற்றவரே, நீ எங்கே போகப்போகிறீரென்று சொல்லுகிறவன சொல்லக்கேட்பேன். அவ்வுரை கேட்ட

ஷடமென நான் பயந்து பதறியோடி. யென் தாயாருடைய மடியிற்போ
யுட்கார்ந்துக்கொண்டேன். இன்னும் நானந்தச்சொல்லை நான் வாலி
பனாயிருந்து வணக்கத்தில் திரியும்போது என்னுடைய கல்வத்தி
லிருக்கையிலுங் கேட்பேன். இன்னுமெனக்கு ஒய் அப்துல்காதிறே
நாமும்மைத் தனக்காக அல்லவா செய்துக்கொண்டேனென்று உருக்
தோற்றமின்றிச் சொல்லப்படும் சப்தத்தைக் கேட்பேன். இனி
நான் முஜாஹதாவுடைய ஹாலிலாயிருக்கும்போது எனக்குத் தூக்
கம் வந்து தொட்டால் ஒய் அப்துல்காதிறே யும்மை நித்திரைக்காகப்
படைக்கப்படவில்லை, இடனுக நாமும்மை யுவந்திருக்கிறோம், நீ
ரொருவஸ்துமில்லாதிருக்கையிலும் நாமும்மை யுவந்திருந்தோம்
ஆகலால் நீர் நம்மிலின் முமுள்ள ஒரு வஸ்தாவாயிருக்கையில் நீர்
நம்மைவிட்டு மறந்திராதேயுமென்று சொல்லக் கேட்பேனென்று
சொன்னார்கள்.

இன்னும் வனப்பமான இரண்டு ஷெய்குமார்களாகிய ஷெய்கு
அபுல்ஸஊது அஹ்மதுபுனு அபீபக்கிலஹரீமியில் அத்தாறு றலி
யல்லாஹு அன்ஹு அவர்களும். ஷெய்கு அபூஅப்துல்லா முஹ
ம்மதுபுனுல்காயிது றலியல்லாஹு அன்ஹு அவர்களுமான
இவ்விருவர்களைத்தொட்டும் ரிவாயத்து வந்திருக்கிறது, அவர்கள்
சொல்லுகிறார்கள். ஷெய்கு ஸதக்கத்துல்லாஹில் பருகாதி றலியல்
லாஹு அன்ஹு அவர்கள் ஒரு அறிவு சொன்னார்கள். அதை
ஷறாவுடைய வழியின் மூலமாக அவர்கள் பேரில் பிக்காறு செய்யப்
பட்டு அவர்களைக்கொண்டு சுல்தானிடங் கொண்டுபோய் வழக்கு நடத்தி
அவர்களை ஆக்கினைக்குரிய உத்தியோகஸ்தரின் வாசலண்டைக்கொண்டு
போய் ஆக்கினைசெய்யக் கட்டளையிடப்பட்டது. சுல்தானுடைய
கட்டளைப்பிரகாரம் அவர்களைக் கொண்டுபோய் நிறுத்தி அவர்களு
டைய தலையைத் திறக்கப்பட்டு அடிக்க முடிக்கும்போது ஷெய்கு
ஸதக்கத்துல்லாஹில் பருகாதி றலியல்லாஹு அன்ஹு அவர்களு
டைய காதிமானவர் என்னுடைய ஷெய்கேயென்று சப்தமிட்டார்.
அப்போதவர்களை யடிக்க நாடிய மனுஷனுடைய கையானது அடிக்க
விளங்காமற் சூகையாகிவிட்டது. அப்போது உத்தியோகஸ்தனுடைய
மனதிலிவர்களைப்பற்றி அல்லாஹுத்தஆலா ஹைபத்தைப் போட்டு
விட்டான். ஆகையா லந்த உத்தியோகஸ்தன் இது செய்தியைக்
கொண்டு மந்திரியிடத்தி லறிவித்தான், அல்லாஹு ஸுப்ஹான



ஹுவத்தஆலா அந்த மந்திரியுடைய மனதிலும் ஹைபத்தைப்
போட்டான், அப்பாலந்த மந்திரியானவர் இது செய்தியை சுல்த்
தானுக் கறிவித்தார். அல்லாஹுத் தஆலா சுல்தானுடைய
கல்பிலும் ஹைபத்தைப் போடவே அவர் பயந்து ஷெய்கு ஸதக்கத்
துல்லாஹில் பருகாதி றலியல்லாஹு அன்ஹு அவர்களை விட்டு
விடும்படியாகக் கட்டளைசெய்தார் அப்படியே விடப்பட்டபோது
ஷெய்கு ஸதக்கத்துல்லாஹில் பருகாதி றலியல்லாஹு அன்ஹு
அவர்கள், ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்களுடைய ரிபாத்தில், அதாவது, மடத்தில் வந்து
புகுந்தார்கள். அப்போதவ்விடத்தில் ஷெய்குமார்களும் மற்றவர்களு
மாயிருந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்
ஹு அவர்கள் அறிவுசொல்ல வருவதைவழிபார்த்துக் கொண்டிரு
க்கிறார்கள். அப்படியிருப்பதைக்கண்டு ஷெய்கு ஸதக்கத்துல்லா
ஹில் பருகாதி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாங்களுமந்த
ஷெய்குமார்களுக்கு முன்னே வந்துட்கார்ந்தார்கள். அப்படியிருக்கை
யில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு
அவர்கள்வந்து அறிவுசொல்லுகிறதற்காக குறுஸியின்பேரி லேறினார்
கள்.

அவ்விதமேறினவர்கள் அறிவுசொல்லவுமில்லை, ஓதுகிறவரை
யோதச்சொல்லவுமில்லை, அப்படியாதொன்றுமில்லாதிருக்க மனு
டர்களுக்குக் கடுந்த போராசையுண்டாகியவர்களில் வனப்பமான கரு
மம் வந்து புகுந்தது. அதுகண்டு ஷெய்கு ஸதக்கத்துல்லாஹில் பரு
காதீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களிருதயத்தில்
ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு
அவர்கள் அறிவு சொல்லவுமில்லை, காரீ ஓதவுமில்லை அப்படியிருக்க
வது காரணத்தினாலே இந்த ஜனங்களிப் பேர்ப்பட்ட போராசையு
ண்டானதென் றெண்ணினார்கள். இவ்வெண்ணமானது ஷெய்கு
ஸதக்கத்துல்லாஹில் பருகாதீ றலியல்லாஹு அன்ஹு அவர்க
ளிருதயத்திலுண்டானவே அவர்களுடைய பக்கத்தளவில் ஷெய்குமுஹ்
யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திரும்
பிப்பார்த்து ஓ ஸதக்கே யென்னுடைய முரீதானவர் பைத்துல்
முக்கத்திஸிலிருந்து, பருகாதுக்கு ஒரேஒரு எட்டில் வந்து சேர்ந்
தார், அவ்விதம் வந்து என்னுடைய கையின்பேரில் தௌபாச் செ
ய்து மீண்டார். ஆகையாலிந்த ஜனங்களடங்கலு மவருக்குங் கிடை

க்க விருக்கிறாயிருக்கிறார்களென்று சொன்னார்கள். அதைக்கேட்டு ஷெய்கு ஸதக்கத்துல்லா ஹில் பகுதாதீ றஹிமஹுல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய இருதயத்தில் வைத்தல் முக்கத்திலிருந்து, பகுதாதுக்கொரு வட்டில் வந்தவர் என்ன கருமத்தையுமவிட்டு தௌபாச் செய்வார், அவருக்கு ஷெய்களிற் றேமையாகிறதென்னவென் றெண்ணினார்கள். அப்போது அவர்கள் பக்கத்தை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஹிமஹுல்லாஹு அன்ஹு அவர்கள் திரும்பிப் பார்த்து ஓ ஸதக்கே ஆகாயத்திலொரு எட்டு வைப்பதை விட்டுத் தௌபாச் செய்து பின்பந்தக் கருமத்தளவில் மீளமாட்டாரே அப்படிக்கொற்றவரா யிருந்தபோதிலும், அவர்களுக்கு நான் அல்லாஹுத்தஆலாவுடைய முஹப்பத்தின் வழியை அறிவித்துக் கொடுப்பதற்காக என்னளவிற் றேவையாகிறார்களென்று சொன்னார்கள்.

இன்னும் ஓ ஸதக்கே, என்னுடைய வாளாகிறது உறையை விட்டு உருவப்பட்டதாயிருக்கும், என்னுடைய வில்லாகிறது விசையேற்றப்பட்டதாயிருக்கும் என்னுடைய அம்புகளாகிறது தவறாமல் நேரே படுவதாயிருக்கும், என்னுடைய வல்லயங்களாகிறது, வளையாது செவ்வையாய்த் தயாரிக்கப்பட்டதா யிருக்கும். என்னுடைய குதிரையாகிறது கல்லணை வைத்துத் தயாரிக்கப்பட்டதாயிருக்கும் இவைகளுந் தவிர, நான்தான் அல்லாஹுவுடைய எரிக்கப்பட்ட நெருப்பும், நான்தான் ஹாலுகளை பறிக்கப்பட்டவனும், நான்தான் கரையில்லாதகடலும், நான்தான் பேணிக்காக்கப்பட்டவனும், நான்தான் கிருபையாய்ப் பார்க்கப்பட்டவனும் நான்தான் பேறுபெற்றவனும், நான்தான் மிகுந்து நோன்பு வைப்பவனும், நான்தான் மிகுந்து தொழுகிறவனும் ஆகையால் ஓ, மகாமேருடையவர்களே யுங்களுடைய மகாமேருகளெல்லாந் தவிடு பொடியாயழிக்கப்பட்டது. ஓ, தைக்காக்காரர்களே யுங்களுடையதைக் காக்களெல்லாமிழுத்து விழுந்தாட்டப்பட்டது. ஆதலாலவைகளை யெல்லாம் விட்டொழிந்து விட்டு அல்லாஹுத்தஆலாவுடைய கருமத்தில் நின்று ஒரு கருமத்தளவில் தரிக்குடையருக்குத் தகவாக்கிக்கொண்டு முன்னேறுக்கிறவாருங்கள் காரந்தான் அல்லாஹுத்தஆலாவுடைய கருமத்தில் நின்று ஒரு கருமமென்றது. ஆகையால் ஓய் ஆண்பிள்ளைகளே, ஓய் சுக்கவீரர்களே, ஓய் அப்தால்களே, ஓய் சிறுகுழந்தைகளே வாருங்கள், வந்து கரையில்லாக்



கடலிலின்று மெடுத்துக்கொள்ளுங்கள். என்னுடைய சிறப்பானவனே, நீ வாழுமுலோகத்தில் தனித்தவன், நீயேயல்லாது வேறொருவரில்லை. எனக்குச் சொல்லப்படுகிறது இரவு பகலுக்கிடையிலெழுபது தடவை காலமைத் தெரிந்துக்கொண்டேன், என்னுடைய பேறுகளின் பேரிலும், காவற்பாட்டின் பேரிலும் உம்மை வளர்க்கப்படுகிறதற்காக வேண்டியென்று சொல்லப்படுகின்றது. இன்னு மெனக்கு ஓய் அப்துல்காதிறே நீரறிவுசொல்லும் உம்மிலின்றுஞ் சேட்கப்படுமென்றுஞ் சொல்லப்படுகின்றது, இன்னு மெனக்கு ஓய் அப்துல்காதிறே என்னுடைய ஹக்காவை நீர் தின்னும், என்னுனை நீர் குடியும், என்னுனை நீரறிவுசொல்லும், உம்மை றக்கைவிட்டச் சக்தித்திருக்கிறேனென்றுஞ் சொல்லப்படுகிறதென்று சொன்னார்கள்.

இன்னுங் கூடின ஜனங்களெல்லாங் கேட்டிருக்கும்படியாக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றஹிமஹுல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். சூரியனுதயமாகிறதில்லை, அதானதென் பேரில் சலாம் சொல்லித் தேசவாசங்களில் நடக்கிற செய்திகளை யெனக் கறிவித்தேயொழிய, இன்னுமிதுபோலவே ஒவ்வொரு வருஷங்களு மென்னளவில் சலாம் சொல்லி யவைபவைகளில் நடக்கும் செய்திகள் யாவையு மெனக் கறிவிக்கும், ஒவ்வொருமாதங்களு மப்படியே யென்னிடம் வந்து சலாம் சொல்லி யவைகளில் நடப்பதியாவையு மெனக் கறிவிக்கும், இம்முறையாகவே கிழமைகளும், நாள்களும் என்பேரில் வந்து சலாம் சொல்லி யவைகளில் நடப்பதியாவையு மெனக் கறிவிக்கும். இன்னு மென்னுடைய நாயகனின் சிறப்பானை யெனக் கறிவிக்கும். நல்லுகச் சீதேவிகள், மூதேவிகள் சகலமாயு மென்பேரெய்தான், நல்லுக எனது கண்ணணி தெளிவாகி நிலைத்துக் காட்டப்படும். நல்லுக லௌஹுல் மஹ்பூலுஸ் பலகையிற் றரிபட்டிருக்கிறது, நானுதிறது அல்லாவுடைய இல்முக்கடல்களில் மூழ்குளித்தவனாயிருக்கும். இன்னவனுடைய முஷாஹதாக் கடலில் முங்கி நிற்பவனாயிருக்கும். நானுகிறது உங்களெல்லோர்களின் பேரிலுந் தரிபட்ட அல்லாஹுவின் ஹுஜ்ஜத்தாயிருக்கும். இன்னும் நானுகிறது பூலோகத்துடைய ஹுஜ்ஜத்தாயிருக்கும். அலைஹிவஸல்லம் அவர்களுக்குப் பதிலாளியாயிருக்கும். அவர்களுடைய அனந்தரத்தை நான் வகையாளுபவனாயிருக்குமென்று சொன்னார்கள். அப்பால் ஷெய்கு ஸதக்கதுல்லா ஹில் பகுதாதீ றஹிமஹுல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு முஹ்

யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கையின் பேரில் தௌபாச் செய்து மீண்டார்கள்.

—[*]—

## 67-வது ஹிக்காயத்து.

—(*)—

அறுபத்தேழாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபல்காசிம் அஹ்மதுபுனு முஹம்மதில் பகுதாதின் ஹரீமீ றஹிமஹுல்லாஹு அவர்களைத் தொட்டும் பேசிவைப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நானும், ஷெய்கு அபுல்கைரிபுனு மஹ்பூபும், ஷெய்கு அபுல்ஹபுஸு உமறுல் கிமானியும், ஷெய்கு அபுல்அப்பாஸுல் இஸ்காபும், ஷெய்கு ஸைபுத்தீனி அப்துல்வஹ்ஹாபிபுனுஷ் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுமாக ஹிஜ்றத்து ஐநூற்றி அறுபதாம் வருஷம், ஜமாதுல்ஆகிறு மாதம் கடைசி வெள்ளிக்கிழமையில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய திருச்சமுகத்தி லுட்கார்ந்துக்கொண்டிருந்தோம். அப்போது வேஷமழகான ஒரு வாலிபன் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தில் வந்து அஸ்ஸலாமு அலைக்க யாவலிய்யல்லாஹ் அல்லாவுடைய வலியே யுங்களுக்கு சலாமுண்டாவதாகவும் நான் றஜபுமாத முங்களுக்கு சன்மாராயஞ் சொல்லிவந்தேன், மனிதர்கள் பேரில் வைத்த நீங்கான தென்னிலே யாதொன்றுங் கற்பித்ததில்லையென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

றாவீ சொல்லுகிறார், மனுடர்களந்த றஜபு மாதத்தில் யாதொரு தீங்குமில்லாமல் நலமே கண்டார்கள், இனி றஜபுமாத முடிவான ஞாயிற்றுக்கிழமையிற் பார்க்கப் பொருத்தக்கேடான வொருவர் வந்தார். அப்போது நாங்களெல்லோர்களு மவர்களிடத்திலிருக்கிறோம், அப்போதவர் வந்து சொல்வார் அல்லாவுடைய வலியே யுங்கள் பேரில் சலாமுண்டாவதாகவும். நான் ஷஃபான்மாத முங்களுக்குச் சோபனங்கூறி யென்னிற் கற்பித்ததை அறிவிக்க உங்களிடத்தில் வந்தேன் இடனுக் கன்னில் பகுதாதிலழிவும், ஹிஜாஸுக்கட்டில் தவஷதானியக் குறைத்தலும், குராஸானில் வாள்வெட்டுச் சண்டையுமுண்டாகு



மென்று சொன்னார். றாவீ சொல்லுகிறார், சொன்னபடியே பகுதாதிலனேக அழிவுமுண்டாச்சுது. இனி ஹிஜாஸுக் கட்டிற் கடிசான பஞ்சமென்னும், குராஸானில் வாள்வெட்டுண்டாகிவிட்டதென் அபூர்வ செய்தி வந்தது. ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சிலநாளாக றமலான் மாதம் நோயாளியா யிருந்தார்கள். இனி யந்த மாதம் இருபத்தொன்பதாந் தேதி திங்கள்கிழமையானபோது நாங்கள் மீளவும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தி லுட்கார்ந்துக்கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் ஷெய்கு அலியிபுனு ஹீத்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஷெய்கு அபுன்னஜீபிஸ்ஸுஹ்றவர்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஷெய்கு அபுல்ஹஸனுல் ஜௌஷக்கீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும், காலீ அபூயஃலா முஹம்மதுபுனு முஹம்மதிபுனுல் கர்றா றலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்திலிருந்தார்கள். அப்போது கல்லக்கனதியும், அழகும் பொருந்திய ஒரு மனுடர் வந்து நாயகமவர்களுக்கு சலாம் சொல்லி அல்லாவுடைய வலியே நான் றமலான்மாத முங்களிடத்தில் என்னிற் கற்பிக்கப்பட்டதை யறிவித்து உங்களைப் பயணமனுப்பிக்கொண்டு போகவந்தேன். இதாகிறது நானுங்களுடனே சேர்ந்ததில் முடிவாயிருக்குமென்று சொல்லிவிட்டுப்போனார்.

றாவீ சொல்லுகிறார், ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிரண்டாம் வருஷம் றபீஉல்ஆகிறு மாதம் வபாத்தானார்கள், மற்று றமலானை யெற்றுக்கொள்ளவில்லை, இன்னும் றாவீசொல்லுகிறார், ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறவியி லிருந்துக்கொண்டு அவர்களிடத் அல்லாஹுத் தஆலாவுக்குச் சில அடியார்களுண்டு, அவர்களந்தறம இல் றமலான மாதம் வந்து கண்ணழிவுதேடும், அவர்களந்த றமலானுடைய நாட்களில் நோய்பட்டுக் கொண்டிருந்தால் வந்து தொட்டால் சி செவ்வுமும் இன்னமவர்களுக்கு ஒருவனுமை வந்து தொட்டால் என்னிலுங்கள் பேரிற்கற்பிக்கப்பட்டதிலுங்களுடைய ஹாலெப்படியென்று கேட்குமென்றார்கள். இன்னும் றாவீ சொல்லுகிறார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு

அவர்களுடைய மகனார் ஷெய்கு ஸையிது அப்துல் வஹ்ஹாபு றலி மறாவல்லாஹு அவர்கள் சொன்னார்கள் ஒருமாக மாதிலும துவதுக்கா பிறக்க முன்னே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாலில வாராமலிருக்காது, இனி அதிலே நிக்கும், கடினமும் கொண்டு கற்பிக்கப்பட்டிருக்குமாகில் கெட்ட கோலத்தில் வரும், இனி அதினை நலவும், கிருபையும், சலாமத்தும், நிஃமத்தும், பறக்கத்தும் கொண்டு கற்பிக்கப்பட்டிருக்குமாகில் அழகான கோலத்தில் வருமென்று சொன்னார்கள்.

———:o:———

## 68-வது ஹிக்காயத்து.

———:(*):———

அறுபத்தெட்டாம் ஹிக்காயத்தாகிறது இமாமாகிய ஷெய்கு ஷஹாபுத்தீனி உமறுப்னு முஹம்மதுஸ் ஸுஹ்றவர்திய்யி றஹ்மதுல்லாஹு அவர்களைத்தொட்டும் வந்ததாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய குறுவியின் மேலிருந்து சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அதாவது தென்னவெனில் ஒவ்வொரு வலிமார்களும், ஒவ்வொரு நபிமார்களுடைய கதத்தின் மேலிருப்பார்கள். நானோ என்னுடைய ஜத்து றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய சிறப்பான கதத்தின் மேலிருக்கிறேன். இன்னும் என்னுடைய ஜத்தாகிய முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒரு கதத்தை யுயர்த்தினதில்லை அவர்கள் கதத்தை யுயர்த்தினவிடத்தி லென்னுடைய கதத்தை நான் வைத்தேயொழிய, ஆனாலு அவ்வளவுடைய கதத்தில் ஒன்றுபொரு கதமாயிருந்தாலே யொழிய, ஜனுனப்போத நபியல்லாத்தவர்கள் பெற்றுக்கொள்ள விடம்பாடாகதென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

———[*]———



## 69-வது ஹிக்காயத்து.

———(*)———

அறுபத்தொன்பதாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அஹ்மது அலிப்னு இதுரீஸில யஃக்கூபி றலியல்லாஹு அன்ஹுமது அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவாயாலருளிச் செய்யக்கேட்டிருக்கிறேன். அதென்னவெனில் மனிதர்களாகிறது அவர்களுக்கும் ஷெய்குமார்களுண்டு, ஜின்களாகிறது அவர்களுக்கும் ஷெய்குமார்களுண்டு, மலாயிக்கத்துகளாகிறது அவர்களுக்கும் ஷெய்குமார்களுண்டு, நான் எல்லோர்களுக்கும் ஷெய்காயிருக்குமென்று சொன்னார்கள். இன்னும் அவர்கள் வபாத்தாகிற நோவில் அவர்களுடைய பிள்ளைகளுக்குச் சொன்னதாவது, எனக்கும், உங்களுக்கும், மற்றுமுள்ள கல்லோர்களெல்லாருக்குமிடையில் வானம் பூமிக்கிடையிலுள்ள தூரமுண்டு வேறேயொருவரைக்கொள்ளையக் காண மிகுதமாயுண்டு. ஆகையால் வேறேயொருவரைக்கொண்டு என்னைச் சரியாக்கிக்கொள்ளவும் வேண்டாம், என்னைக்கொண்டு வேறேயொருவரைச் சரியாக்கிக்கொள்ளவும் வேண்டாமென்று சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

இன்னும் ருவிசொல்லுகிறார். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய குமாரர் ஷெய்கு அப்துல் ஜப்பாறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்துத் திருவாயாலருளிச் செய்ய நான் கேட்டிருக்கிறேன். அதாவது தென்னவெனில் நீ நித்திரை கொள்கிறவனோ, அல்லது முழித்துக்கொண்டிருக்கிறவனோ என்னிலேமாயங்கள் கிடனும் நீங்கள் முழித்துக்கொண்டிருக்கிறவனோ என்று சொன்னார்கள். இன்னும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரர்களாகிய ஷெய்கு அப்துல் வஹ்ஹாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஷெய்கு அப்துர் றஸ்ஸாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களும் சொன்னார்கள். மனிதர்களிற் சிலர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாலில் வருகிறவர்களுக்குக் கேமுன்னேறுகி வரும்போது ஆரக்கிதிருக்க வருகிறவர்களுக்குக் மறுஹபன் பிஹைபி பில்லாஹி, வாஜெதனிறமட்டும், சாந்தமிட்டு

அல்லாவுடைய வுபகாரியைக்கொண்டே சோபனமென்று சொல்வார்கள், இன்னும் சிலரைக்கண்டு லாமறுஹபன் பித்ரீதில்லாஹி, அல்லாவெருட்டப்பட்டவனைக்கொண்டு சோபனமில்லையென்றவனுக்குக் கொள்ளென்றிட்டும் சப்தமிட்டுச் சொல்வார்கள். அப்போதவர்களிருபேரினும் குணம், குறிகளில் நின்றும், மறுஹபன் என்று சொன்னதினும், லாமறுஹபன் என்று சொன்னதினும், இஷாறாவாக சொன்னதற்கு நேர்பாடான அடையாளங்களைக் காணப்படுமென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

——(*)——

## 70-வது ஹிக்காயத்து.

எழுபதாம் ஹிக்காயத்தாகிறது ஹாபிஹு அபூ முஹம்மது அப்துல் கனியிபுனு அப்துல் வாஹிதில் மக்தஸீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஹாபிஹு அபூ முஹம்மது அப்துல் அலீலிபுனு அபீ முஹம்மது கஸ்ரில் பகுதாதீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும் பேசி வந்ததயிருக்கும் அவர்களிருவர்களும் சொன்னார்கள். நாங்கள் அபூ முஹம்மது அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களருளிச்செய்யக் கேட்டிருக்கிறோம், அதென்னவெனில் நாஜிறுகல்க்குடைய கருமங்களுக்குப் பின்னாலேயாயிருக்கும், நாலுங்களுடைய அக்லுகளுக்குப் பின்னாலேயாயிருக்கும், அப்படியே அல்லது நானவர்களுடைய அக்லுகளுக்குப் பின்னாலேயாயிருக்குமென்றே சொன்னார்கள். இன்னுஞ் சொன்னார்கள் ஹக்குடைய ஆள்க்களடங்கலும் கற்பனையளவிற் சேர்ந்தார்களானு லத்தந்த மட்டிற் பேசாதிருப்பார்கள். நான் மட்டுமே யொழிய நான் கற்பனையளவிற் சேர்ந்து அதில் நின்றுமொரு மாடக்குழி மட்டிலொரு சிறிய வாசலெனக்குத் திறக்கப்பட்டது அதில் நான் புகுந்து ஹக்குடைய கற்பனைகளுடனே ஹக்குக்காக ஹக்கைக்கொண்டே வழக்குக்குப்பேசி நின்றேனென்று சொன்னார்கள்.

இமாம் அப்துல்லா ஹூஸியாபிஈ றஹ்மதுல்லாஹு அவர்கள் சொல்லுகிறார்கள். இதாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கலாமில் நின்றும் கற்



பனையிற் பேசி வரப்பட்டதிற் சிலதாயிருக்கும். இதினுடைய பொருள் மெத்த ஆழமானதாயிருக்கிறது அக்லென்னுங் குழிகாண் குழிபோடி அதினளவிற் சேரக்கூடாது எங்கிலு நிறைந்துக் கூட்டும்படியான பொருளை அந்த விர்றிஷ்பேரி லெட்டிப் பதக்கும்படி அல்லாஹுத் தஆலா வுதயமாக்கிவைத்த நாதாக்களுக்குக் காட்டப்படும். ஆகிலும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவ்விதஞ் சொன்ன கற்பனையம் ஹல்லாஹு மாயஷாவுவயுகுமித்து அல்லாஹுத் தஆலா கற்பனையில் நாடியதை யழிப்பான், நாடியதை யுண்டாக்குவானென்று திருவுளமாகிய கற்பனையிலுள்ளதாயிருந்தாலே யொழிய அப்போது ஷெய்கு முஹ்யித்தின் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய் சொல்லானது தாங்கள் ஹக்குத்தஆலாவுடனே அந்தக்கட்டளையை மாற்றுவதில், அல்லது பிரட்டுவதிலுள்ள மன்றாட்டத்தின் வழியாகவும், நலைமையாலு முயர்த்தியாலும் பேசிக்கொள்வதின் பேரில் சுமத்தாட்டப்பட்டதாகவுமிருக்கும். இதின் படிக்குத்தான் ஷெய்கு முஹ்யித்தின் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அதற்குப் பின்னாலே சொல்லியிருப்பதும், ஷெய்கு முஹ்யித்தின் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அடியார்களுடைய கருமங்கள் சீர்திருந்தி வருவதற்கிடமாகிய வெளியரங்கமானவைகளில் ஹக்குத்தஆலாவுடனே திருப்பித்திருப்பி பேசிக்கொள்வதின்பேரிற் சுமத்தாட்டப்படும். இனி ஷெய்கு முஹ்யித்தின் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அதற்குப் பின்னாலே சொன்ன சொல்லாகிறது ஆனபோதே ஆண்பிள்ளையாகிறது கற்பனைக்கு விதற்பமாய் நடக்கிறவன்தான், அதற்கொத்துமையாகப் போகிறவனல்லவென்றதாயிருக்கும். ஷெய்கு முஹ்யித்தின் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹுத் தஆலாவுடனே அடியார்களுடைய சீர்திருத்தங்களில் திருப்பித்திருப்பிக் கேட்டுக்கொள்கிறதாயிருக்கும்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் சில மனிதர்களைக் கருமஞ் செய்யவேண்டாமென்று சொன்னபோது, உமறு கத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் யாறசூலல்லா அதிலென்ன செய்யப்படுமே யென்று சொல்ல அப்பால் நபீ ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களும் உமறு றலியல்லாஹு அன்ஹு

அவர்களுடைய சொற்படி ஒப்புக்கொண்டு செய்யட்டுமென்று சொன்னதுபோலாயிருக்கும் இனி அல்லாஹுத் தஆலாவுடைய இல்மிலுண்டாகுமென்றே முந்திவிட்டதே அப்போற்கொற்ற கட்டளையாயிறது அதைத் தடுத்திவிட முடியாது அதுண்டாகவே செய்யும். மகா வலுப்பமும், சிறப்புமுடைய அல்லாஹுத் தஆலாவின் விபாத்திலின்றும் ஒரு விபத்தாகிய அவனுடைய இல்மு பேதகமாவது முஸ்த்தஹீலாயிருப்பதால் அவனறிந்த வண்ணமுண்டாகவே செய்யும் இன்தஹா.

## 71-வது ஹிக்காயத்து.

(*)

எழுபத்தோராம் ஹிக்காயத்தாகிறது ஷெய்குல் குத்வத்தி அபுல்ஹசன் அலிய்யுபுனுல் ஹீத்தி றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடனே போய் நானுமவர்களுமாக ஷெய்கு மஃறூபில் கறுகீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடையக் கபுறை ஸியாறத்துச் செய்தோம், அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு மஃறூபே உங்கள்பேரி லென்னுடைய சலாமுண்டாவதாகவும், எனக்கொரு தறஜாவுக்குக் கடந்துவிட்டீர்களே யென்று சொன்னார்கள். அப்பால் சிலகாலத்திற்குப் பிறகு நானும்ஷெய்குமுஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களும் போய் ஷெய்குமஃறூபில்கறுகீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடையக் கபுறைஸியாறத்துச் செய்தோம். அப்போது ஷெய்குமுஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கபுறை நோக்கி மஃறூபே உங்களுக்கென்னுடைய சலாமுண்டாவதாகவும் நாமிப்போதுங்களை யிரண்டு தறஜாவுக்குக் கடந்துவிட்டோமென்று சொன்னார்கள். அதற்கு ஷெய்கு மஃறூபில்கறுகீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கபுறுக்குள்ளிருந்துக்கொண்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கித் தங்களுடைய காலத்தார்களுக்கெல்லாம் நாயகமானவர்



களே உங்கள்பேரி லென்னுடைய சலாமுண்டாவதாகவுமென்று ஜவாபு சொன்னார்கள்.

இன்னும் றாவீ சொல்லுகிறார்கள், ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய அஸ்ஹாபிமார்களைப் பார்த்துத் திடனாக என்னை இராக்கிராச்சியத்தளவிற் சாட்டப்பட்டதென்று சொல்லியிருந்தார்கள். அப்பாற் சிலகாலத்திற்குப் பிறகு தங்களுடைய அஸ்ஹாபிமார்களைப் பார்த்து நான் முன்னமே யுங்களிடத்தில் திடனாக என்னை இராக்கிராச்சியத்தளவிற் சாட்டப்பட்டதென்று சொல்லியிருந்தேன். இப்போதென்னைப் பூலோகத்தில் காடு, நாடு, எழுவான், படுவான், கரை, கடல், மலை, வனம் சகலவைகளுக்குஞ் சாட்டப்பட்டதென்று சொன்னார்கள். இன்னும் றாவீ ஷெய்கு அலிய்யுபுனுல் ஹீத்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். அந்த வக்திலுள்ள அவுலியாக்கள் சகலர்களும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் வந்து குதுபுத்தனத்தைக்கொண்டு சலாம் சொல்லியேயொழிய ஒருவராவது மிஞ்சவில்லை. அல்லாஹுத் தஆலாவுடைய திருவருட் பொருத்தமவர்களுடைய துப்தான ஆஹிர்பேரி லுண்டாவதாகவும்.

## 72-வது ஹிக்காயத்து.

(*)

எழுபத்திரண்டாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபுமுஹம்மது அப்துல்லத்தீபுனு அபீத்தாஹிரில் பகுதாதிய்யில் [illegible] றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவைப்பட்டதாயிருக்கும், அவர்கள் சொல்லுகிறார்கள். என்னுடைய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மகா வலுப்பமான அரிய பேசினைதற்கடுத்தான்மையாக நானுங்கள்பேரில் அல்லாவைக்கொண் டாணையிட்டுச் சொல்லுவேன், ஆகையால் நீங்களெல்லோர்களு மென்னைப்பார்த்துண்மைசொன்னீர்களென்று சொல்லுங்கள், திடனாக நான் பேசுகிறதெல்லாம் சிக்கலில்லாமல் திட்டமான சரூபத்தைப்பற்றியே யெனக்கொழி

யப்படும், அப்போது நானதை மொழிவேன், எனக்குக் கொடுக்
கப்படும், அப்போது நானதைப் பங்கிட்டுக்கொடுப்பேன், என்னை
யேவப்படும், அப்போது நானவைகளைச் செய்வேன், என்னைத்
தனக்கிஷ்டமானதைக் கொண்டு கட்டப்படுவன்பேரில் வஜுதிமசாழுண்டு,
பெருங்குற்றமாகிறது என்னை இன்காறு செய்தவன்பேரில் வரும்,
நீங்களென்னை யுண்மைகொள்வது நல்லதொழிலாயிருக்கும், நீங்க
ளென்னைப் பொய்யாக்குவது உங்களை யுடன்கொல்லும் கடுநஞ்சா
யிருக்கும், அதாவது உங்களுடைய துன்யாவும், ஆகிறமும் போகி
றதற்குக் காரணமாயிருக்கும். இன்னும் நானொரு வாள்காரனா
யிருக்கும் சத்துருக்களைச் சங்காரஞ் செய்கிறவனாயிருக்கும். அல்
லாஹுத்த ஆலா வுங்களுக் கவன்றன்னைப் பயங்காட்டுகிறான்,
ஆனால் ஷறகென்னுங் கடிவாளமிட்டு மென்னுடைய நாவிலில்லா
திருக்கில் நீங்களுங்களுடைய வீடுகளில் தேடிவைத்தது தின்றது
முதலிய சகலவைகளையும் நானுங்களுக் கறிவிப்பேன், நீங்களடங்க
லுமாகிற தெனக்கு முன்னே பளிங்குப்பாத்திரங்களைப் போலா
யிருக்கும், உங்களுடைய அந்தரங்கங்கள், பஹிரங்கங்கள் சகல
திலுமுள்ளவைகளையெல்லாம் நான் காண்பேன், என்னுடைய நா
வில் அல்லாவுடைய ஹுக்மென்ற லிகாமில்லாதிருந்தால் நபீ
யூஸுபு அலைஹிஸ்ஸலா மவர்களுடைய பொன் மரக்காலானது
அதிலுள்ளதைக்கொண்டு பேசினதுபோலெனது நாவானது பே
சும் என்கிறும் இல்மாகிறது கலீல்கொண்டறியப்பட்டது, அல்
லது ஆலிமுடைய கலீல்கொண்டறியப்பட்டதாயிருக்கும், அதில்
மறைக்கப்பட்டதை வெளிப்படுத்தப்படாதென்று சொன்னார்கள்,
றலியல்லாஹு அன்ஹு.

———:*:———

## 73-வது ஹிக்காயத்து.

———[*]———

எழுபத்திமூன்றும் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு உமறுபுஹல்
கைமானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஷெய்கு பஸ்
ஸாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களும், உஜூதுக்கு ஷெய்
கும், பெருமைகளுக்குக் கிரீடமுமாகிய ஷெய்கு அப்துல்மஜீது
முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க



ளுடைய குமாரர்களான வஹ்ஹாப்தங்கிய செய்யிதென்னும் வங்கி
ஷாதிபதிகளாகிய செய்யிது அப்துர்றஸ்ஸாக்கு றலியல்லாஹு
அன்ஹு அவர்களும், செய்யிது அப்துல்வஹ்ஹாபு றலியல்லா
ஹு அன்ஹு அவர்களுமாகிய இந்த நாலுபேர்களைக்கொட்டும்
பேசிவைப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள், நாங்
கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்
ஹு அவர்கள் தங்களுடைய குறுவியின்பேரிலிருந்து சொல்லக்
கேட்டிருக்கிறோம், அவர்கள் சொன்னார்கள், நான் ஹிஜூறத்து
ஐந்நூற்றிருபத்தோராம் வருஷம் ஷவ்வால்மாதம் பதினாறுந்தேதி
செவ்வாக்கிழமைப் பகலில் ளுஹறுக்கு முன்னே றசூல் ஸல்லல்
லாஹு அலைஹிவஸல்ல மவர்களைக் கனவிற் கண்டேன், அப்போ
தவர்களென்னைப்பார்த்து என்னுடைய அருமையான மகனே, நீர்
ஏனறிவு சொல்லாதிருக்கிறீரென்று கேட்டார்கள். அதற்கு நானெ
னறிவு சொல்லாதிருக்கிறேனென்று சொன்னேன், அப்போதவர்
வர்களைப் பார்த்து எனது சுமைகையானதாகவே நானெனிறது அஜம்
கட்டிலுள்ள ஒரு மனுஷன், பக்தாதிலுள்ள நாகரீகர்களின்மே
லெப்படி அறிவு சொல்வேனென்று சொன்னேன். அப்போதவர்
களென்னை யும்முடைய வாயைத் திறவுமென்று சொன்னார்கள்.
உடனே நானென்னுடைய வாயைத்திறந்தேன், அப்போதவர்க
ளென்னுடைய வாயிலேழு தடவை தங்களுடைய வாயின் முதத்தைத்
துப்பினார்கள். அவ்விதமுமிழ்ந்தென்னை நோக்கி நீர் போய்
மனுஷர்கள்பேரி லறிவு சொல்லும், உம்முடைய றப்பனின் பாதை
யளவிலுள்ள ஹிக்மத்தையும், அழகான வஃலுகளையுங்கொண்டு
மனுஷர்களை யழையுமென்று சொன்னார்கள்.

பின்பு நான் ளுஹறுத் தொழுதுவிட்டு அறிவு சொல்ல இருந்
தேன், அப்போது அனேக ஜனங்களும் வந்து கூடியிருக்கிறார்
கள், அக்கோத்தி லெனக்கறிவுசொல்ல முடியாமல் வாயடைபட்
டுப்போனது. அப்படியிருக்கையில் அலிய்யுபுனு அபீத்தாலிபின்
கர்றமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் வந்தெனக்கு முன்னே நிற்
கக்கண்டேன், அவர்களென்னைப்பார்த் தென்னுடைய அருமை
யான மகனே நீரேனறிவு சொல்லவில்லையென்று கேட்டார்கள்.
அதற்கு நானவர்களிடத்தில் என்னுடைய வாயடைபட்டுப்போச்சு
தென்று சொன்னேன். அப்போதவர்களென்னை யும்முடைய வா
யைத் திறவுமென்றார்கள். நானுடனே யென்னுடைய வாயைத்

திறந்தேன், என்னுடைய வாயிலவர்களுடைய வாயினமுதை யாவு
தடவையுமிழ்ந்தார்கள். அப்போது நானவர்களைப்பார்த்து நாங்
களென் வாழ்ஆத்தை நிறப்பமாக்கவில்லையென்று கேட்டேன்.
அதற்கவர்கள் நீருஸ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுட
னே அதபுக்காக வேண்டியென்று சொல்லிவிட்டென்னைவிட்டு
மறைந்துவிட்டார்கள். அப்பால் நான் சொன்னேன்.

கவ்வாஸல் பிக்ரியகூஸபீ பஹ்ரில்கஷ்பி அலாதுறரில் மஆரிபி
பயஸ்தகுரிஜூமா இலா ஸாஹிலிஸ்ஸதுரிடயுஜூ அலைஹா ஸிம்ஸா
றத் தறஜுமானில்லிஸானி பத்தஷ்த்தருபினடா நிஸிஅதுமானித்தா
அத்தி பியூத்தின் அதினல்லாஹு அன் துறுபஅ.

(இதின்பொருள்) யோசனையென்னுங் குழிகாரன் கஷ்பென்
னுங் கடலில் மூழ்கி ஞானங்களென்னும் ஆணிமுத்துகளைக்கண்டு
அவைகளை நெஞ்சென்னுங் கடறகரைக்கு வெளிப்படுத்துவான்,
அதின்போல் நாவென்னுந் துப்பாசிதகுபகள் விலைகூறினவுடனே
அல்லாஹுத் தஆலா வுயர்த்தியாக்குப்படிக் குத்தாவருளிய வீடு
களில் வைத்து வழிபாடென்னும் விலைகளில் அநூருபமானவைக
ளைக்கொண்டு வாங்கப்படுமென்பதாம். ருவீகள் சொல்லுகிறார்
கள், இதுதான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா
ஹு அன்ஹு அவர்கள் குறுவியின்மேலிருந்து மனுடர்களுக்
குச் சொல்லிய வசனத்தில் மூத்தினதாயிருக்குமென்று றலியல்லா
ஹு அன்ஹு வனபஅறு பிஹி பித்தாறைன்.)

——[*]——

## 74-வது ஹிக்காயத்து.

———(*)———

எழுபத்திநாலாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு ஷரீபு அபூ அப்
தில்லாஹி முஹம்மது புனு அபில்கறைமில் அல் ஹறீமினி அபில்ம
பாகிறில் ஹாஸைனிய்யில் பகுதாதீ றஹ்மதுல்லாஹு அவர்க
ளைத்தொட்டும் பெறிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லு
கிறார்கள். நான் ஹிஜுறத்து ஐநூற்றிஅம்பதாம் வருஷம் என்
னுடைய ஷெய்காகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலி



யல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸிறாயிருந்தேன்.
அன்றையிலந்தமஜ்லிஸில் பதினாயிரம்பேர்கள்வரையிலுங்கூடியிருந்
தார்கள். அப்போது ஷெய்கு அலிய்யுபுனுல் ஹீத்தி றலியல்லா
ஹு அன்ஹு அவர்கள், ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு
றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமூகத்தி லவர்களுக்கு
முன்னாலே மூக்ரீ யோதுகிறபடியின்கீழே யுட்கார்ந்துக்கொண்டி
ருந்தார்கள். அப்படியிருக்கையில் ஷெய்கு அலிய்யுபுனுல் ஹீத்
தீறலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் தூக்கம் வந்தது. அப்
போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்கள் ஜனங்களைப் பார்த்து நீங்களொருவரும் பேச
வேண்டாமென்று சொன்னார்கள். அதுபோலவே ஜனங்களுங்
களுமவர்களுடைய மூச்சையேயல்லாது கேட்கப்படாதென்று
சொல்லுகிறவன் சொல்லுகிறமட்டிலும் பேசாதிருந்தார்கள். அப்
பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்
ஹு அவர்கள் குறுவியின்மேலிருந்து கீழிறங்கிவந்து ஷெய்கு
அலிய்யுபுனுல்ஹீத்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய
சமூகத்தில் அதபாயிருந்தார்கள், மனிதர்களடங்கலும் ஷெய்கு
முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவ
ர்களைச் சுற்றி வளைந்துக்கொண் டிருந்தார்கள். பின்பு ஷெ
ய்கு அலிய்யுபுனுல் ஹீத்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்
கள் முழித்தார்கள். அப்போ தவர்களைப்பார்த்து ஷெய்கு
முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவ
ர்கள், நீங்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைக்
கனவிற் கண்டீர்களாவென்று கேட்டார்கள். அதற்கவர்கள் நாய
கமே கண்டேனென்று சொன்னார்கள், அவர்களுக்காகத்தான்
நான் குறுவியைவிட்டுக் கீழே யிறங்கி அதபாயிருந்ததென்று
சொல்லிவிட்டு ஷெய்கு அலிய்யுபுனுல் ஹீத்தீ றலியல்லாஹு அ
ன்ஹு அவர்களைப் பார்த்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்கா
திறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நீங்கள் நபீ ஸல்லல்லா
ஹு அலைஹிவஸல்லமவர்களைக் கனவிற் கண்டீர்களே யவர்களுங்
களுக்கென்ன கருமத்தைக்கொண்டு வஸியத்துச் செய்தார்களெ
ன்று கேட்டார்கள். அதற்கவர்கள் நாயகமே உங்களைப்பற்றிப்
பிடித்து நடக்கச் சொல்லி வஸியத்துச் செய்தார்களென்று சொ
ன்னார்கள்.

ஞமீ. சொல்லுகிறார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவர்களுக்காகத்தான் அதபா யிருந்ததென்று சொன்னார்களே அதின் விபரம் மெய்படியென்று ஷெய்கு அபியிப்னுல் ஹீத்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்க ளிடத்திற் கேட்கப்பட்டபோது நான் கனவிற் கண்டதை யவர்கள் முழிப்பிற் கண்டதாகுமென்று சொன்னார்கள். அன்றையிலிது கா ரியத்தின் காரணத்தால் ஜனங்களி லேழுபேர்கள் தாறுல் பறுவை விட்டும், தாறுல் பக்காவினளவிற் சேர்ந்தார்கள். அவ்வேழுபேர் களிற் சிலர்கள் அக்கூரியிலிருந்த இடத்திலேயே மௌத்தாகிவிட் டார்கள், சிலர்கள் போதக்கேடானவர்களாகி யவர்களை ஜனங்கள் சுமந்து அவரவர்களுடைய வீட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்ததின் பிறகு மௌத்தானார்கள், றலியல்லாஹு அன்ஹு.

## 75-வது ஹிக்காயத்து.

—:O:—

எழுபத்தைந்தாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமா ரர்களாகிய செய்யிது அப்துர்றஸ்ஸாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள், செய்யிது அப்துல்வஹ்ஹாபு றலியல்லாஹு அன்ஹு அவ ர்கள், செய்யிது இப்றாஹீம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆக இந்த மூவர்களும் இவர்களுடன் ஷெய்கு அபுல்ஹஸன் உமறு இல்கைமானீ றலியல்லாஹு அன்ஹு, அவர்கள் ஷெய்கு பஸ்ஸாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆக இந்த வைவர்களைத் தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள், நாங் கள் ஹிஜ்றத்து ஐநூற்றி ஐம்பத்தேழாம் வருஷத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பகுதாதில் பாபுல்அஜ்ஜின் ஜந்தலத்திலே தங்களுடைய மத்றசா வில் தங்களுடைய மஜ்லிசிலிருந்து தப்ஸீர் திறுக்கொண்டிருக்கை யிற் போனோம். அப்போதவர்கள் இன்பதை விட்டுவிட்டு வெகு நேரம்வரையிலும் மௌனமாக ஞானமடைந்திருந்துவிட்டு அப்பாலவர் கள் திருவாய் திறந்து இப்போதென்னுடைய கல்புக்கு இல்ஹா



மன்னியிலிருந்து மெழுபது வாசலைத் திறக்கப்பட்டது. அதி லொவ்வொரு வாசலின் விஸ்தீரணமாகிறது வானம் பூமிக்கிடையி லுள்ள விஸ்தீரணத்தைப்போ லிருக்கிறதென்று சொல்லிவிட்டுப் பின்பு தமதுடையபேர்களின் கலக்கியானங்களில் தீனமான வச னமாகப் பேசினார்கள். அப்போ தவ்விடத்திற் கூடியிருந்தவர்க ளடங்கலும் திகைத்து, மலைத்துக் கேட்டிருந்தார்கள். ஆ[illegible] திடறை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப்பிறகு இவ்விதமான அறிவுகளை யொருவ ரும் பேசமாட்டார்களென்று நாங்கள் சொல்லிக்கொண்டோ மென்று சொன்னார்கள், றலியல்லாஹு அன்ஹு.

## 76-வது ஹிக்காயத்து.

எழுபத்தாறும் ஹிக்காயத்தாகிறது ஆரிபு அபூஅம்று உது மானுல் ஸைரீபீனீ றஹிமஹுல்லாஹு அவர்களையும், ஷெய்கு அபூ முஹம்மது அப்துல்ஹக்கில் ஹரீமீ றஹிமஹுல்லா ஹு அவர்களைத்தொட்டு ரிவாயத்து வந்ததாயிருக்கும். அவர் களிருவரும் சொல்லுகிறார்கள். நாங்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய குர்ஸியின்மேலிருந்து சொல்லக்கேட்டிருந்தோம். அதாவதெப்படி யானால் ஓய் எழுவான் படுவான் முதலிய சகல பூமிகளிலுமுள்ளவர் களே, இன்னும் வானுலோகத்தையுடையவர்களே. அல்லாஹுத் தஆலா வயதுலக்கு மாலாத்தஃலமூன் நீங்களறியாததை அல்லா ஹுத்தஆலா படைப்பானென்று திருவுளமாயிருக்கிறான். நானும் நீங்க ளறியாதவைகளிலின்று முள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் பூமியில் எழுவான், படுவான் முதலிய சகல இடங்களிலுமுள்ளவர்க ளே, வந்தென்னிடத்திற் படித்துக்கொள்ளுங்கள், இன் னே வாருங்கள், என்னிடத்தில் ஹால்களாகிற தெய் வம் இருக்கையுடையவர்களே யென்னிடத்தில் ஒரு வீட்டின் கொடியிற் போடப்பட்ட பிடவைகளைப் படியானால் ஒரு விட்டின் கொடியிற் போலாயிருக்கும். அவைகளிலின்றும் நானொருவனை நாடுனே போலாயிருக்கும். ஆகையால் நீங்களென்னுடைய ஹும் அனாதயவனைத் துக்கொள்வேன். ஆகையால் நீங்களென்னுடைய கருணைத் திண்டைபூ ஞினைப்பல் சலாமத்தா யிருந்துக்கொள்ளுதல

பற்றிப் பிடித்திருங்கள். இல்லாதவிஷயத்தில் இடஞ்சுக ளொன்றை யுங்களை யெதிர்த்திடக் முடியாது. உங்களிடத்தில் படைகளைக்கொண்டுவந்துவிடுவேன். ஏ குலாமே யென்னிலிருந் தும்முன்ன சொற்களில ன்றாம் ஒரேயொரு சொல்லைக் கேட்பதற்காக நீ ஆயிரம் வருஷம் சபுறு செய்தாலும் என்னிலிருந்தேயொழிய அந்தச்சொல்லுனக்குக் கிடையாது, விலாயத்துகளெல்லாம் இவ்விடத்திலேதானிருக்கிறது, பதவிகளெல்லாம் இவ்விடத்திலேதானிருக்கிறது, வெகுமானங்களை யெல்லாமுடைய இந்த மஜ்லிஸிலேயேதான் பிரித்துக்கொடுக்கப்படும். அல்லாஹுத்தஆலா படைத்த வஸ்துகளிலிருந்து பிரிந்த வஸ்தாவது அல்லாஹுவுடைய வலிமார்களிலிருந்து சேர்ந்த வலியாவது என்னுடைய இந்த மஜ்லிஸுக்கு வந்து ஹாஜிராகாதிருப்பது கிடையாது. [illegible] யெல்லோர்களும் அவரவர்களுடைய இடங்களுடனேயும், [illegible] யெல்லோர்களும் அவரவர்களுடைய [illegible] வந்து வந்து கூடுவார்கள். ஏ குலாமே [illegible] என்னுடையக் [illegible] வருகிறபோது அவர் [illegible] அவர்களுமனைக் கொள்ளைப்பற் [illegible] சொன்னார்கள்.

இன்னும் ஷெய்குமார்களி லொருவரைக்கொட்டும் சேர்மான மான இன்னுங்கொண்டு பேசிவைப்பட்டிருக்கிறது. இடஞ்சுக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களில் இன்னும் ஒரு கருமத்தைக்கண்ட வேறொன்றும் பாராமலிருந்த [illegible] இல்லை, அந்தக் கருமத்தைக்கொண்டேயொழிய. கருமத்தாலே சில நோய்கள் அவர்களுக்கு வெளியாகும். சில நோய்கள் அவர்களைக்கொண்டு வெளியாகும், சில நோய்கள் அவர்களில் வெளியாகு மிப்படியாயிருந்ததென்றார்கள். றலியல்லாஹு அன்ஹு.

—(*)—

77-வது ஹிக்காயத்து.

—(*)—

எழுபத்தேழாம் ஹிக்காயத்தாகிறதுமகாவலுப்பமுடையஆரிபு களாகிய ஷெய்குமார்களென்னும், அபுல்வபாவெனும் அற்பமதபுனூ அபீபக்கில் ஹரீமீ றலியல்லாஹு அன்ஹு அவர்களோயும், அபூஅம்ரு



உதுமானுஸ்ஸரீபீனி றலியல்லாஹு அன்ஹு அவர்களையுங்கொட்டும் பேசிவைப்பட்டதாயிருக்கும். அவர்களிருவரும் சொல்லுகிறார்கள். அல்லாஹுவினுடைய மெய்யான அல்லாஹுத்தஆலா வுலிமார்களில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்போல வேறே ஒரு வலியை இந்த ஆலத்தில், அதாவது உலகத்தில் இதற்குமுன் வெளியாக்கவுமில்லை, இதற்குப்பின் இனிமேல் வெளியாக்கவுமில்லை, அவர்களுடைய கருமத்துகளாகிறது இரத்தினக்கல்லைக் கோக்கப்பட்ட மாலையைப்போல ஒன்றையொன்று தொடர்ந்து வெளியாய்க்கொண்டேயிருந்தது, [illegible] மனுஷர் [illegible] வொவ்வொரு காலிலும் அவைகளைக் கவனித்து [illegible] கலையெண்ணிக் கணக்குப்பார்த்து வைக்கக்கூடியதாயிருந்ததென்று சொன்னார்கள்.

இவர்களைத்தொட்டும் பேசிவைப்பட்ட ஞானிகளுகருந் சொல்லுகிறார்கள், அந்த ஞானிகளிருவர்களுமாகிறது அப்பாஸென்று றரியப்பட்ட ஷெய்கு அபுல்ஹஸனுல் பகுதாதி றலியல்லாஹு அன்ஹு அவர்களும், முகத்தறமென்று விளக்கப்பட்ட அபூமுஹம்மது அல் அல்லதீயில் பகுதாதி றலியல்லாஹு அன்ஹு அவர்களுமாயிருக்கும். இருக்கிறாச்சியத்திலுள்ள ஷெய்குமார்களுடைய வும் ஷெய்கு அபுல்வபாவெனும் அற்பமதபுனூ அபீபக்கில் ஹரீமீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சொல்லியும், ஷெய்கு அபூஅம்ரு உதுமானுஸ் ஸரீபீனி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சொல்லைய மெத்தப் பாராயமானதாய்க் கண்டிருந்தவர்களாயிருந்தார்கள். அப்படிவந்த பாராயமானதாய்க் [illegible] அல்லது இல்முடையவர்களிலநின்று மவ்விருஞானிகளிருவர்களும், அல்லது இல்முடையவர்களிலநின்று மவ்வி ருஞானிகளிருவர்களும் சொன்னார்கள். இருக்கிறுள்ள ஷெய்குவர்களையல்லாதவர்களும் சொற்களைப் பாராயமாய்க் காண்பதற மாகவெல்லா மவர்களுடைய சொற்களைப் பாராயமாய்க் காண்பதற காரணமும் வெளியாகாது. ஏனென்றால் இடஞ்சுக அந்த ஷெய்கு கொரு காரணமும் வெளியாகாது. ஏனென்றால் இடஞ்சுக அந்த ஷெய்குமார்களிருவர்களும் இன்னுள்ள கருமத்தின் பேரிலாகயமாக அறிமார்களிருவர்களும் இன்னுள்ள கருமத்தின் பேரிலாகயமாக அறிவிக்க பட்டார்களென்று சொன்னார்கள். இச்சொல் இங்ஙனம் நிற்க.

இந்தக் கித்தாபைச் சேர்வை செய்த இமாம் அப்துல்லாஹிப்னு அஸ்அதுல் யாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள், அதைப்பற்றியெனில் நான் சொல்லுகிறேன். இந்தப் பிரதிச்சொன்னவர்கள் மேலேசொல்லுகிற கருமம் அவ்விருவர்களுக்குத் தெரியாதிருந்

தாலத்தைப்பற்றிச் செய்தியறிவிக்கமாட்டார்களென்று சொன்ன சொல்லாகிறது, அது எடுக்கக்கூடிய சொல்லாயிருப்பதைவிட அது திறப்பமான செயலுமல்ல, போதுமான சொல்லுமல்ல. ஏனென்றால் இதனுக்குக் காரியமாகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்போலொரு வலியைப் பிறப்பித்தல்லாஹுத் தஆலா ஆக்கியுண்டாக்கிறது மில்லையென்ற சொல்லானது இனிமேல் வருகிறகாலத்திலப்படியுண்டாக்கிறதில்லையென்றதற்குத் தலை சாய்த்தாலும், சென்ற காலத்திலவர்களைப்போலொரு வலியை அல்லாஹுத் தஆலா வெளியாக்கவுமில்லையென்ற சொல்லுக்குத் தலைசாய்க்கக்கூடாது. ஏனென்றால் அவுலியாக்களடங்கலிலும் அபூபக்றுஸ் ஸித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வரிசையானவர்களென்று சொன்னதை ஜமாஅத்துகளிலுள்ள உலமாக்மார்களெல்லாம் ஒருமித்துச் சொல்லியிருக்கிறார்கள். இதைத்தவிர காலை அவுலியாக்களடங்கலைக்காண இமாம் அலீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வரிசையானவர்களாயிருக்குமென்று ஷீஆக் கூட்டக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதனுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய அஸ்ஹாபிமார்களாகிறது அவர்களுக்குப் பின்னுள்ளவர்களைப் பார்க்கிலும் வரிசையானவர்களென்று இமாம்களடங்கலும் சொல்வதை மொத்தமாக்கிவைத்திருக்கிறார்கள். ஆகையால் சென்ற காலத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்போலொரு வலியை வெளியாக்கவில்லையென்ற சொல்லாகிறது தலைசாய்க்கப்பட்டதல்ல. ஆயினும் அவுலியாக்களென்ற சொல்லைக் கொண்டு அஸ்ஹாபிமார்களல்லாதவர்களை நாடிக்கொண்டாலே யொழிய * அப்போது காண சொன்ன இடையூறாகாது. ஏனென்றாலும் அவுலியாக்களென்று பெயர் கூறுவதில் அந்த அவுலியா வென்னுஞ் சொல்லை விட்டு அவர்களை அஸ்ஹாபிமார்களைப் புறத்திப்படுத்தி இக்குவாறு இதனுக்க அந்த அஸ்ஹாபிமார்கள் அவுலியாக்கள் தொகையிலுள்ளவர்களில்லையோ வென்கிற சந்தேகத்தை யுண்டு

* அஸ்ஹாபிமார்கள் இப்படித் தள்ளி விட்டதாகிறது அஸ்ஹாபிமார்களைத் தவிர மற்றும் அவுலியாக்களடங்கலைக் காண ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிறு [illegible] அவுலியாக்களெல்லாம் ஷெய்கு முஹ்யித்தீன் ஆண்டவர்கள் [illegible] முந்தினவர்களாயிருந்தாலும் சரி, அல்லது பிந்தினவர்களாயிருந்தாலும் சரியேயாம்.



பண்ணும் ஆகையாலது அப்படியல்ல. என்கிலும் அஸ்ஹாபிமார்களாகிறது மகா பெரிய அவுலியாக்களாயிருக்கும். ஆகிலு மவர்களைச் சொந்தமான நடபடியின் விகிதமெ கொண்டு அவுலியா வென்கிற நாமத்தைக் காண சொந்த நாமத்தைக்கொண்டு சொந்தமாக்கப்பட்டதாதான் ஸஹாபாவென்னும் இஸ்மாயிருக்கும். இப்போது சொன்ன விளப்பமாகிறது இதுவே அவுலியாக்களென்னுடைய நாமத்தை விட்டு அஸ்ஹாபிமார்களைப் புறத்திப் படுத்தி விட்டதைப்பற்றி ஒரு புகலைக்கொண்டுவாற இடம்பாடான விதமாயிருக்கிறது இன்னும் அஸ்ஹாபிமார்களை அவுலியாக்களென்னும் நாமத்தைவிட்டு நீக்கிவிட்டதற்குக் காரணமிதுவே யென்பதற்குப் பிசுத்தியென்பதத்தி மூன்றும் ஹிக்காயத்தில் சொல்லி வருகிறது முனக் கவிசிக்கும் இனி அல்லாஹு சுபுஹானஹு வதஆலா மெத்த அறிந்தவன் இன்னும்.

——[*]——

## 78-வது ஹிக்காயத்து.

——:*:——

எழுபத்தெட்டாம் ஹிக்காயத்தாகிறது முன் சொல்லப்பட்ட ஷெய்கு அபுஸ்ஸவூது றலியல்லாஹு அன்ஹு அவர்களையும், ஷெய்கு அபுல் அப்பாஸ் அஹ்மதுப்னு அலியிப்னிஸ்ஸற்றானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களையும் தொட்டுப் பேசிவைப்பட்டதாயிருக்கும். அவர்களிருவர்களுமே சொல்லுகிறார்கள். கச்சவடக்காரராகிய அபுல் முலப்பறு ஹஸனுப்னுத் தமீமுல் பருகாதீயென்பவர், ஷெய்கு ஹம்மாதுத் தப்பாஸி றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் ஹிஜ்றத்து ஐநூற்றி யிருபத்தோராம் வருஷத்திற் செனது எனது நாயகமே இதனுக நான் ஷாமுக்குப் போவதற்காக ஒரு காபிலாவைத் தயாராக்கி யிருக்கிறேன். அதி லெழுநூறு வொருக் காபிலாவைத் தயாராக்கி யிருக்கிறேனென்று சொன்னார். அதற்கு தங்கக்காசுடைய சாமானகளிருக்கிறதென்று சொன்னார். அதற்கு ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நீ இந்த வருஷத்தில் சபறு போனபாலுன்னை வதைக்கப்படும், அதுமல்லாமலுன்னுடைய முதலையுங் கொள்ளையெடுக்கப்படுமென்று சொன்னார்கள். அதைக்கேட்டு அபுல் முலப்பறென்பவர் அவ்விடத்திலிருந்தெழுந்து துக்க மிகுத்தவராய்ப் புறப்பட்டுப் போகிற வழியில் ஷை

ய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கண்டார். அக்காலில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாலிபராயிருக்கிறார்கள். அப்போது அபுல் முலைப்பிறென்பவர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து மகா பெரிய காரத்துடனே யென்ன நாயகமே நானிந்த வருஷத்தில் ஷாமுக்கு சபறு போவதற்காக நாடித் தயாறு செய்துகொண்டு நாயகம் ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் போய் உத்தரவு கேட்கப் போனேன். அதற்கவர் என்னைப் பார்த்து நீ இந்த வருஷம் சபறு செய்தாயானால் உன்னை வதைக்கப்படும், உன்னுடைய முதல்களெல்லாம் கொள்ளையடிக்கப்படுமென்று சொன்னார்கள் என்று மிகவும் மனமொடிந்தவராய்ச் சொன்னார்.

அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அபுல் முலைப்பிறைப் பார்த்து, முலைப்பிறே நீர் சபறு போம், சலாமத்தாய்ப் போய் லாபத்தோடே கொள்ளை பெரிதனமாய் வந்து சேர்வீர், உம்முடைய பரிசுத்தம் பொருந்துமோ அப்படிக்கு நடந்தேறுமென்று நானுறுதி செய்தார்கள். உடனே அபுல் முலைப்பிறென்பவர் மகா சந்தோஷமடைந்தவராய்த் தம்முடைய நல்ல வேளைதான் இப்படிப்பட்ட வாக்குக் கிடைக்கப்பெற்றதென்று இந்த வருஷம் சபறு போகிறேனென்று வெளிக்கிட்டுக் கொண்டு வியாபாரத்திற்கு சபறு போய்த் தம்முடைய செழுமையுள்ள தங்கக் காசுக்குக் கொண்டுபோன சரக்குகளை ஆயிரந் தங்கக்காசுக்கு விற்று முதல் செய்து அதிக விலை மதிப்புடைக்காசாக திருப்பித் தம்முடைய ஊருக்குப் புறப்பட்டு வந்தார். அப்படி வருகிற வழியில் ஹலபு இராச்சியத்தில் வந்து தங்கினார். அப்படி யிருக்கையில் ஒருநாள் கடைவீதிக்குப் போயிருக்கையில் அவ்விடத்திலொரு குளக்கரையில் போய் அந்தத் தங்கக்காசுகளில் குடுக்கிக்கொண்டு ஆயிரந் தங்கக்காசையும் அந்தக் குளத்தின் உள்ளே மடக்குழியில் வைத்துவிட்டு அவர்கள் தொழுகை நிறைவேற்றி அப்புறம் செய்துகொண்டு வந்த மடக்குழியில் வைத்த தங்கக் காசைக் கொண்டுவர மறந்துவிட்டுத் தான் தங்கியிருக்கிற இடத்திற்கு நடந்துவிட்டார். அப்போதவருக்கு நித்திரை மிகுத்தபடியால் படுத்துறங்கிவிட்டார். அப்படி உறங்



கையில் உறக்கத்திலொரு கனவு கண்டார், அதென்னவெனில் தானொரு காபிலாவுடனிருக்கிறதுபோலும் அதில் வழிவெட்டிப் பறிக்கிற கள்ளர்கள் வந்து விழுந்து கொள்ளையிட்டுச் சிலர்களைச் சங்காரஞ் செய்துவிட்டதுபோலும் அப்போது இவரிடத்திலு மத்தக்கள் வரிசையின்று ஒருவன் வந்து வல்லபத்தோடு குத்தி யிவரை வதைக்கிறதுபோலுங் கண்டவுடனே பதறி விழித்துப் பார்க்கும்போது தன்னுடைய கழுத்திற் கனவிற் குத்தப்பட்டவிடத்தில் இரத்தமிருக்கிற அடையாளத்தையுங் கண்டு குத்துப்பட்ட வருத்தத்தால் துன்பமடைந்திருக்கத் தெரியவந்தது. அப்பால் தான் குளக்கட்டின் மடக்குழியில் வைத்த ஆயிரந் தங்கக் காசையும் மறந்துவிட்டு வந்தது ஞாபகம் வந்து உடனே ஓடிப்போய்ப் பார்க்கும்போது யாதொரு விக்கினமில்லாமல் ஆயிரந் தங்கக்காசு அப்படியே இருக்கக் கண்டெடுத்துக் கொண்டு பகுதாதுக்கு வந்து சேர்ந்தபொழுது தனதிருதயத்தி லெண்ணினார், நானினி யாரிடத்தில் முந்திப்போகிறது ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களோ வயதால் முதியவர்களாயிருக்கிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களோ சொல்லாற் பலிதமுடையவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் எவ்விடம் நடக்கிறதென் றிருதயத்தில் நடக்கும்போது கடைவீதியில் வருகிறபோது இடைவழியிலே ருக்கு அவர்களைக் கண்டார். அந்த நேரத்தில் ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அபுல் முலைப்பிறே நீர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தானே முந்திப் போய்க் கண்டுகொள்ளும். நிச்சயமாக அவர்களாகிறது அல்லாஹுத்தஆலாவிடத்தில் உமக்காக வேண்டிக்கொண்டதனால் உமக்கு நேரிட்ட தீங்கு வந்ததாக கனவிலே நடந்தேறிற்று. அல்லாஹுத்தஆலாவிடத்தில் பதினேழு தடவை கேட்டுக்கேட்டு எழுபது மாறுமனைய பதினேழுதடவையாகக் கற்பிக்கப்பட்டிருந்ததை நீர் கேட்டு உம்மை முழிப்பிலும் உம்முடைய முதல்கள் பறிபோகும்படி கற்பிக்கப்பட்டிருந்ததை மாறினதினாலும் அல்லாஹுத்தஆலா விட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

தில் துஆக் கேட்டிருக்கிறார்களென்று சொன்னார்கள்.

அபுல்முலைப்பிறென்பவர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்

அப்படியே அபுல்முலைப்பிறென்பவர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமூகத்தில் வந்து சேர்ந்தார். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலி

யல்லாஹு அன்ஹு அவர்கள் அபுல் முளப்பறை நோக்கி ஓ அபுல் முளப்பறே திடனாக இக்காலையிலின்று உமக்கு முதிப்பிலே வரும்படி கற்பிக்கப்பட்டதைக் கனவாக்கிவிட்டோம், இன்னும் உம்முடைய முதல்கள் பறிமுதல் போவதை மாற்றிலாக்கிவிட்டோம் நான் அல்லாஹுத் தஆலாவிடத்தில் பதினேழு தடவை, இன்னும் பதினேழு தடவை; இன்னும் பதினேழு தடவையும் உமக்காகக் கூறக் கேட்டிருக்கிறதாய் உமக்கு ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்களாவென்று கேட்டார்கள். றலியல்லாஹு அன்ஹு.

——[*]——

## 79-வது ஹிக்காயத்து.

எழுபத்தொன்பதாம் ஹிக்காயத்தாகிறது பகுதாதைச் சேர்ந்த பாபுல் அஸஜ்ஜுன் என்னுந் தலத்தில் ஹிஜ்றாத்து ஐநூற்றிக் கொண்ணூற்றிமூன்றாம் வருஷம் றஜபுமாதம் மூன்றாந்தேதியில் ஆரிபான ஷெய்கு அபுல்கைரிபிஷ்றுபுனு மஹ்பூஜுபுனு கனீமா றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவைப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொன்னார்கள். நானும், ஷெய்கு அபூமுஹம்மது ஹஸனுபு ... ஷக்காயிதில் அவானீ றஹிமஹுல்லாஹு அவர்களும், ஷெய்கு அபுல்காஸிம் உமறுபுனுல் மஸ்ஊது அல்பஸ்ஸாஸ் றஹிமஹுல்லாஹு அவர்களும், ஷெய்கு அபூமுஹம்மது ஹஸனுல்பாரிஸீ றஹிமஹுல்லாஹு அவர்களும், ஷெய்கு ஜமீல் றஹிமஹுல்லாஹு அவர்களும், ஷெய்கு அபூஹப்ஸ் உமறுபுனு அபீநஸ்றுல் கஸ்ஸாலீ றஹிமஹுல்லாஹு அவர்களும், ஷெய்குல் ஜலீலுபுனு ஹைதிஸ் ஸன்ஜரீ றஹிமஹுல்லாஹு அவர்களும், ஷெய்கு அபுல்பறக்காத்தி றஹிமஹுல்லாஹு அவர்களும் ஷெய்கு ஸஅபுனு கஹ்ரிமிமீ பதவில் அக்ஸிய்யில் உமரிய்யில் பத்தாயிஹிய்யுல் ஹம்மாமீ றஹிமஹுல்லாஹு அவர்களும், ஷெய்கு அபுல்புத்தூஹி நஸ்றுபுனு அபீ அல்பதுல் முஹம்மதுபுனு அலிய்யுல்பகுதாதீ றஹிமஹுல்லாஹு அவர்களும், அபூ அப்தில்லாஹ் முஹம்மதுபுனுல் வலீதி அபில்முலப்பறுபுனு ஹாமிது அவர்களும், அபுல்பத்ஹி அப்தில் லாஹிபுனு ஹிபத்தில்லா அவர்களும், அபுல்காஸிம் அலிய்யுபுனு முஹம்மதுபுனுஸ் ஸாஹிபவர்களும், ஆகாங்கள் பதினான்குபேர்களும் நம்முடைய ஷெய்



கு முஹியித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திலவர்களுடைய மத்றசாவில் ஹாஜிறாயிருந்தோம்.

அப்போது ஷெய்கு முஹியித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எங்களைப்பார்த்து நீங்களொவ்வொருவர்களும், அவ்வவர்களுக்குத் தேவையான ஹாஜத்துகளைத்தேடிக் கேளுங்கள், நான் தருகிறேனென்று சொன்னார்கள். அப்போது ஷெய்கு அபுல்கைறுல்பிஷ்று றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு முஹியித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களின் சன்னிதானத்தைநோக்கி எங்கள்நாயகமே நானொரு செயலுஞ்செய்யாமல் இகுத்தியாறைவிட்டுவிடுவதற்கு நான் கேட்கிறேனென்றார்கள். அதற்குப்பின் ஷெய்குபுனுக் காயிதில்அவானீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகமேநான் இபாதத்திற்றெண்டிப்பதின்பேரில் பெலன்பெறுவதைக் கேட்கிறேனென்றார்கள். அப்பால் ஷெய்கு உமறுல்பஸ்ஸாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகமவர்களிடத்தில் நான் அல்லாவுடைய பயப்பாடுண்டாவதை நாடுகிறேனென்றார்கள். பிறகு ஷெய்குஹஸனுல்பாரிஸீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து எங்கள் நாயகமே யெனக்கு அல்லாவுடனே ஒரு ஹாலிருக்கிறது இடைநாளை யிழந்துவிட்டேன், ஆகையால் எனக்கது அதிகமாகக் கிடைக்கவேணுமென்று கேட்டுக்கொள்கிறேனென்றார்கள். பின்பு ஷெய்குஜமீலு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகமவர்களை நோக்கியெனக்கொரு மூச்சாவது வீணாகப்போகாமல் வக்தைப் பேணுவதை நாடுகிறேனென்றார்கள். ஷெய்கு உமறுல் கஸ்ஸாலீ றஹிமஹுல்லாஹு அவர்கள் நாயகமேயெனக் கறிவு அதிகப்படுவதை நாடுகிறேனென்றார்கள். ஷெய்கு ஜலீலுஸ்ஸன்ஜரீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகமவர்களைப்பார்த்து என் நாயகமே நான் குபுத்தனம் பெற்றேனொழிய மௌத்தாகாதிருப்பதைக் கேட்கிறேனென்றார்கள். இன்னும் ஷெய்கு அபுல் பறக்காத்தில் ஹம்மாமீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகமே நான் அல்லாஹுத் தஆலாவுடைய முஹப்பத்திலேயே மூழ்கியிருப்பதை நாடுகிறேனென்றார்கள். பின்னர் ஷெய்கு அபுல்புத்தூஹி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகமவர்களிடத்தில் குறுஆனும், ஹதீதும் எனக்கு வாய்ப்பாடமாவதை நாடுகிறேனென்றார்கள்.

26

ருவி சொல்லுகிறார், அவர்தான் அபுல்கைறு நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் நாயகமே நாயகமேயென்று வருகிற ஏழைகளுக்கும், அவைகளில்லாதவைகளுக்கு மிசைப்பிற் பிரிந்தறிவதை நாடுகிறேனென்று கேட்டேன். பின்பு அபூ அப்தில்லாஹில் புனூறையுறுமென்பவர்கள் நாயகமே நான் மந்திரியாயிருப்பதை நாடுகிறேனென்றார்கள். இனி அபுல்பத்ஹில் ஹிபத்தில்லாஹி யென்பவர்கள் நாயகமே நான் உனக்கு உஸ்தாதா யிருப்பதை நாடுகிறேனென்றார்கள். பிறகு அபுல்காசிம் புஅஸ்ஸாஹிபென்பவர்கள் நாயகமே நான் சிறப்பான வாசலுக்குக் காவற்காரனாயிருப்பதை நாடுகிறேனென்றார்கள். ஆக இவ்விதமாக அவரவர்களுமவரவர்களுக்குத் தேவையான ஹாஜத்துகளைக்கொண்டு முறைமுறையாய்க் கேட்கவே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறுஆனிலிருந்து ஒரு ஆயத்தை இஷாறத்தாக வோதினார்கள், அந்த ஆயத்துடைய மஃனாவாகிறது அடங்கலுக்கும் நாமுதவிசெய்வோம், இவர்களும், அவர்களும் எல்லோர்களும் உன்னுடைய நாயனின் கொடையிலிருந்தே உதவி பெறுவார்கள். ஆனால் உம்முடைய நாயனின் கொடையானது ஒருவருக்கும் விலக்கப்பட்டதில்லை. என்ற மஃனாவுடைய ஆயத்தாயிருக்கும். அதின் இஷாறத்தாகிறது எல்லோர்களுக்கும் அவரவர்கள் கேட்ட நாட்டங்களெல்லாம் கிடைத்துவிட்டதென்பதாயிருக்கும்.

ருவியாகிய அபுல்கைறு சொல்லுகிறார், அல்லாஹ்வினுணை அவர்களெல்லோர்களும், அவரவர்கள் நாடிய நாட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். நானவர்களடங்கலு மவரவர்கள் நாடிய ஹால்களைப் பெற்றுக்கொண்டிருப்பதை யென்னுடைய கண்களாற் கண்டேன். ஷெய்கு அலீ இல்ஹைதமி றலியல்லாஹு அன்ஹு அவர்களைமட்டுமே யொழிய. ஏனையவர்களுக்குக் குதுபுத்தனங் கிடைப்பதுகொண்டு வஃதாச்செய்த வக்து வரவில்லை. இனி ஷெய்கு அபுஸ்ஸஊது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தன்னுடைய இருத்தியாதைவிட்டிருப்பதில் தீட்சையான முடிவாய்ப் பெற்று அதில் மெத்த உயர்ந்த உச்சத்திலேறி முன்னோர்களிலிருந்து யனேகர்களை முந்திக்கொண்டார்கள். ஹிஜ்றத்து ஐந்நூற்றி யெண்பத்தோராம் வருஷத்திலவர்கள் சொல்ல நான்



கேட்டிருந்தேன். அப்பொன்னவெனில் நாற்பது வருஷம் வரையிலும் எனக்கு என்னுடைய மூலஸ்தானத்தை தவிர புறத்திப்பட்ட வஸ்துகள் யாதொன்றும் தோடவேயில்லையென்று சொன்னார்கள். இன்னுமவர்களிடத்தில ஹால்களுண்டாயிருந்தது, அதுவேயொரொருவருக்குமவைகள்போல் உண்டாவதற்கரிதாயிருக்கும். இனி ஷெய்கு புனுக் காயிதில் அவானீ றஹிமஹுல்லாஹு அவர்களாகிறது வணக்கத்திற் றெண்டிப்பதில் அவர்களுடைய காலத்தார்களிலிருந்து மொருவரைத்தொட்டு மேம்பாடுகளை யெல்லாம் பெற்றுக்கொண்டார்கள். அஸஞ்ஜென்னும் தலத்திற் பூமிக்குள்ளே பதினைந்துவருஷம் இல்லாமலிருந்து, பின்னும் பதினைந்துவருஷம் இல்லாமலிருந்தார்கள். இன்னுமவர்கள் ஹிஜ்றத்து ஐந்நூற்றியெழுபத்தொன்பதாம் வருஷம் சொல்லக் கேட்டிருக்கிறேன். திடனாக நான் பசியைப்பசிக்கவைத்து, தாகத்தைத்தாகிக்கவைத்து, நித்திரையைநித்திரையாக்கிவைத்து, முழிப்பைமுழிப்பாக்கிவைத்து, பயங்கரத்தைப் பயங்காட்டி வைத்தேன், பலாய்களெல்லாம் எனக்கு வந்து முடிகும். அல்லாஹுத் தஆலாவாகிறவன் என்னுடைய கருமத்தின்பேரிற் பற்றியிருக்கிறான், என்று சொன்னார்கள்.

இனி ஷெய்கு உம்றுல் பஸ்ஸாஸ் றஹிமஹுல்லாஹு அவர்களாகிறவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய பயப்பாட்டில் உரமான பதவியளவிற் சேர்ந்தார்கள். அதாகிற மெத்த மட்டுமாய் மானால் அவர்களுடைய பயங்கரத்தால் தண்ணீரை வாயில் வைத்து மிழுந்த தாலத்தி னீரமானது தொண்டையளவிலாகி நோன்பு முறிந்துவிட்டதென்று அந்த நோன்பைக் களாச்செய்வார்கள். இன்னும் ஷெய்கு ஹஸனுல் பாரிஸீ றஹிமஹுல்லாஹு அவர்களாகிறது. அவர்களாவில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கனியில் அவரசன்று ஆக்கொண்டிருக்கையில் ஒரு விருத்தம் பார்த்தார்கள் அந்தப் பார்வை யாற்றளும்பி யந்த வத்திலேயே யெழும்பிப் போய்விட்டார்கள். அப்பால் நானவர்களை மறுநாள் கண்டு அவர்களுடைய கருமத்தைப்பற்றிக் கேட்டேன். அதற்கு ஷெய்கு ஹஸனுல் பாரிஸீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் காவியூந்து போயிருந்த ஹாலை யெனக் கறிவித்துவிட்டார்களெ

ன்று சொன்னார்கள். இனி ஷெய்கு ஐமீது றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறது வக்தைப் பேணிக்கொள்வதிலும், மூச்சைப் பழுதாக்காதிருப்பதிலும் நாமறிந்ததில் வேறே யொருவருஞ் சேராதத் தறஜாவினளவிற் சேர்ந்துவிட்டார்கள். அதாகிறதெந்த மட்டானால் அவர்கள் கலாவுக்குப் போய்ப் புகுந்தாலவர்களுடைய தஸ்பீஹுக் கோவையைச் சுவரில் தூக்கி வைப்பார்கள் அதாகிறது அவர்கள் கையி லெடுக்கிறவரையிலும் தானாக வொவ்வொரு மணியாய்த் திரும்பிக்கொண்டேயிருக்கும். இவ்விதமாக நான் பல தடவையுங் கண்டிருக்கிறேன். இனி ஷெய்கு கலீபுல் ஸுஹைரீ றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சருமமாகிறது திடனாக ஒருநாள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய மஜ்லிஸில் வைத்துஓப், ஜுலீலே நீர் குதுபுத்தனம் பெற்றேயல்லாது மௌத்தாகமாட்டீரென்று நருளிச் செய்தார்கள். இதாகிறது நாங்கள் பதின்மூன்று பேர்களுமிருந்த களரியில் வைத்துச் சொன்னார்கள். அதற்குப் பின்னாலும் அலீ யிப்னுல் ஹைதீ யாகிறவர் மௌத்தாகிறதில்லை குதுபாகியே யொழிய வென்று ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பல தடவையும் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

இனி ஷெய்கு உமறுல் கஸ்ஸாலீ றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறது திடனாக அவர்கள் பற்பல கல்விகளிலேயும் அநேகானேக வகைகளை யெல்லாங் கற்றுணர்ந்து மிகுந்த அறிவுகளைப் பாடமிட்டுக்கொண்டார்கள். இன்னு மவர்களுடைய களரியிலிருந்து ஒரு தடவையில் ஆயிரங் கித்தாபுகளை விற்றார்கள். அப்போதவர்களைக் குறை சொல்லப்பட்டது. அதற்கவர்கள் அந்தக் கித்தாபுகளெல்லாம் நான் பாடமிட்டு ஞாபகம் பண்ணிக்கொண்டதாயிருக்குமென்று சொன்னார்கள். இன்னும் ஷெய்கு அபூல்பறக்காத்தில் ஹம்மாமீ றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறது அவர்கள் அந்தமஜ்லிஸிலுள்ளவர்களுக்குச் சொல்லுகிறபோது அவர்களை நோக்கி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூர்ந்துப் பார்த்தார்கள். அதினாலவர்கள் போதக் கேடாகி யடித்து விழுந்தார்கள். அப்போதவர்களை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு



அவர்களுடைய சமுகத்திலிருந்து அக்கில்லாதவராய்ச் சுமந்து கொண்டு போகப்பட்டது. அப்பால் அவர்களைச் சிலகாலம் வரையிலும் பகுதாதிற் காணாதிருந்தோம். பிறகு கறுகென்னு மிடத்திலிருக்கின்ற பாழான பூமியிலவர்களை யிருக்கக்கண்டேன் அதாவது அவர்களுடைய கண்களிரண்டும் ஏறச் சொருகின பார்வையாக இருக்கக்கண்டு நானவர்களுடனே பேசினேன் அவர்களென்னுடன் பேசவில்லை. அப்பா லவ்விடத்தை விட்டுத் திரும்பி நான் பகுதாதிற் போயிறங்கினேன். அங்கையு மவர்கள் முன்னிருந்தபடியாகவே ஒரு மனாறத் தளங்களுக் கிடையிலொரு மேட்டி லவர்களை யிருக்கக்கண்டேன். அப்போதும் நானவர்களுடனே பேசிப்பார்த்தேனவர்க ளென்னுடன் பேசவில்லை அப்போது நான் அவர்களுக்கு நேரே போயிருந்துகொண்டு அல்லாஹும்ம மதின்னீ அன்அவுக் கபீறுவாஜு மத்திஷ்ஷைகு அப்துல்காதிறு அன்தயுத்த அவ்லி அக்லஹு ஆண்டவனே யிவர்களென்னுடனே பேசுவதற்கும் இவர்களுக் கிவர்களுடைய அக்லை மீள்விக்கும்படி ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பொருட்டைக் கொண்டுன்னிடத்திற் கேட்கிறேனென்று சொன்னேன். அந்த உடனே அவர்களெழும்பி யென்னிடத்தில் வந்தெனக்கு ஸலாம் சொன்னார்கள். அதற்கு நான் பிறதி சொல்லிக்கொண்டு இது எந்த ஹாலென்று கேட்டேன். அப்போதவர்களென்னைப் பார்த்து எனதுடப்பிறப்பே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அன்று பார்த்தார்களே அந்தவொரு பார்வையைக்கொண்டு அல்லாஹுத்தஆலாவுடைய முஹப்பத்திலேயும் என்றன்னையுள்பட ஹுழூறைவிட்டு என்னுடைய ஞாபகத்தை மறைத்து நீக்கிப்போட்டதென்னைக் காண்டு இந்த ஹாலிலாக்கிவிட்டதென்று சொன்னார்கள். இப்படிச் சீரோ சொல்லிவிட்டு மறுபடியு முன்போலாகிவிட்டார்கள். நானதுக் கொண்டு அதைவிட்டு மீண்டேன். பின்பவர்களிந்த ஹாலின் பேரிலேயே ஹிஜ்றத்து ஐந்நூற்றியெழுபத்திமூன்றும் வருஷம் மௌத்தானதாக நான் கேள்விப்பட்டேன்.

இனி ஷெய்கு அபுல்பறஜில் கிஹாரீ றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறது அவர்களாறுமாதத்திற்குள் குர்ஆனைப் பாடமிட்டுக்கொண்டார்கள். அவர்களுக்குப் பாடம் வாராமலிருந்த

வருத்தமாயிருந்தபிறகு மெத்த இலேசாகக் குர்ஆனைப் பாடமாக்கி யோதுக் குர்ஆனத்தையுங் கெட்டியாக்கி ஹதீதுகளைப் பெரிய பெரிய கித்தாபுகளையும் பாடமாக்கிக்கொண்டார்கள். இதுவுமன்றி மனிதப் பார்க்கிலே விழுமியிருக்கிறார்கள். இனி யென்னுடைய ஊராகிறது இடுகை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாளவர்களுடைய மஜ்லிஸிலிருக்கையில் அவர்களுடைய திருக்கரத்தை யென்னுடைய நெஞ்சில் வைத்தார்கள். அந்தவுடனே நானென்னுடைய கல்பி லொரு வொளியைக் கண்டேன், அந்த வொளியைக் காஷிபுமாயிரும் ஹக்கு வருந்துறைகளுக்கும், பாதினில் வருந்துறைகளுக்குமிடையில் பிரித்தறிந்துகொள்கிறேன். நோவுடைய ஜாதகங்களுக்கும், வழிகேடுடைய ஊர்களுக்குமிடையில் வித்தியாசத்தைப் பிரித்தறிந்துகொள்கிறேன், இதற்கு முன் இவைகளெல்லாமென்பேரில் சேரும்கொள்வதால் மிருந்தகலக்கமுள்ளவனாயிருந்தேன். இனி அப்துல்லாஹிபுனு ஹுமாமுவாகிறது மந்திரியானார். இன்னும் அபுல்பதஹுல் பஹுவு ஹிபதுல்லாவாகிறது ருக்கு உஸ்தாதானார். அபுல்காசிமுல் வாசகனுக்குக் காவற்காரரானார். இவர்களெல்லோர்களும் இந்த உத்தியோகங்களில் வெகுகாலமாய்த் தரிபட்டிருந்தார்கள். இவர்களுடைய மேலே கூறிய ஷெய்கு ஜலீலுல்கத்ரு அலீ றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறது அவர் மௌத்தாக குழந்தைக்கு முந்திக் குபுத்தனம் பெற்றார்களென்று பாக்கியமெனச்சிக்கியத்திலுள்ள ஷெய்கு அப்துல்லாஹிபுனு அலீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள், ஆக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னபடியே பெண்மக்களும் பெற்றுக்கொண்டார்கள். றலியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன் பெஅல்லாஹு அஹ்ம் ஆமீன்.

—(*)—

## 80—வது. ஹிக்காயத்து.

எண்பதாம் ஹிக்காயத்தாகிறது அஷிறார் தப்பாளியார்கெ இமாம் ஷிஹாபுத்தீன் ஸுஹ்றவர்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்க



ளைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நான் மன்திக்குடைய இல்மைக்கொண்டு பாக்காயிருந்தேன். அப்போது நான் வாலிபமாயிருக்கிறேன். அப்படியிருக்கையிலந்தமன்திக்குடைய இல்மிலின் அமலைகளைக் கித்தாபுகளை யோதிப்பாடமிட்டு மெத்தக்கெட்டியாகிவிட்டேன். என்னுடைய சிறிய தகப்பனாரவர்கள் அவைகளை வோதவேண்டாமென்றென்னை விலக்கிறவர்களாயிருந்தார்கள். நானவைகளை விலகிக்கொள்ளவில்லை. அப்படியிருக்கையி லொருநாள் நானுமென்னுடைய சிறிய தகப்பனாரவர்களுமாக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை ஸியாறத்துச் செய்வதற்குப் போனோம். அவ்விதம்போகையில் என்னுடைய சிறியதகப்பனா ரென்னைப்பார்த்து ஓய் உமறே அல்லாஹுத் தஆலா ஓ யீமான்கொண்டவர்களே நீங்கள் றசூலுடனே முனாஜாத்துச் செய்ய நாடினீர்களானால் நீங்கள் முனாஜாத்துச் செய்வதற்கு முந்தி யொரு ஸதக்காவை முற்படுத்திவையுங்களென்று திருவுளமாயிருக்கிறான், ஆகையால் அவர்களுடைய கல்பு அல்லாவைப்பற்றி செய்தி யறிவிக்குமே அப்போற்கொற்ற மனுடருடைய சமுகத்திற்கு நாமிப்போது போகிறோம். ஆனலவர்களுடைய முன்னேயும் முடைய ஊரெல்பயமாயிருக்குமென்று நன்றாக யோசித்துப்பார்த்துக்கொள்ளும், அவர்களைக்கொண்டு பறக்கத்துகளைக் காண்பீ ரென்று சொன்னார்கள்.

அப்பால் நாங்களிருவர்களும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்திற் போயடைந்தபோது என்னுடைய சிறியதகப்பனாரவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து என்னுடைய நாயகமே இவராகிறதென்னுடைய உடன் பிறந்தானுடைய மகன் இவருடைய பெயர் உமறு, இவர் மன்திக்குடைய இல்மைக்கொண்டு பாக்காயிருக்கிறார், நானவை களைப் படிக்கவேண்டாமென்று விலக்கினேனவர் கேள்கிறாரில்லை யென்று சொன்னார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னை நோக்கி ஓய் உமறே நீர் மன்திக்கிலென்ன கித்தாபு வோதியிருக்கிறீ ரென்று கேட்டார்கள். அதற்கு நான் நாயகமே யின்னக் கித்

தாயும், இன்னக்கித்தாயும் வேறாயிருக்கிறதென்று சொன்னேன், அப்போதவர்களுடைய கையை யென்னுடைய நெஞ்சின் மேரில் வைத்து நடத்தினார்கள். அல்லா விறைவனாயவர்கள் அந்தக் கித்தாபுகளிலின்று மொரு சொல்லாவதெனக்குப் பாடமாருக்கையிலந்தக் கையை யெடுக்கவில்லை அவர்கள் கையை வைத்த காரணத்தாலந்த மனத்திக்குடைய மஸ்அலாக்களிடங்களையும் அல்லாஹுத் தஆலா வெனக்கு மறந்துபோகச் செய்தான். ஆகிலும் அல்லாஹுத் தஆலா என்னுடைய கல்பில் இல்முல்லதுன்னியை மகா சீக்கிரத்தில் நிறப்பமாக்கி வைத்தான் அப்போது நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தை விட்டெழும்பும்போது பூரணமான அறிவுகளைக்கொண்டு மொழிக்கொருக எழும்பினேன். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க ளென்னை நோக்கி ஓய், உமறே நீ போகிறது இராக்குத் தேசத்தின் பிரபல்லியமான பேர்களிற் பிந்தினவராயிருக்குமென்று சொன்னார்கள். இன்னுமிந்த ஷெய்கு ஷிஹாபுத்தீன் றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திடனாக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களானவர்கள் ஷரீஅத்துக்கு சுல்தானாகவும், திட்டமாக ஆலத்தில் அதிகாரம் நடத்துகிறவர்களாகவுமிருந்தார்களென்று. றலியல்லாஹு அன்ஹு.

—(*)—

## 81-வது ஹிக்காயத்து.

எண்பத்தோராம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு ஷிஹாபுத்தீன் ஸுஹ்றவர்தீ றஹிமஹுல்லாஹு அவர்களுடைய பிதாவாகிய ஷெய்கு நஜ்முத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் றிவாயத்து வந்ததாயிருக்கும். அவர்கள் சொல்கிறார்கள். என்னுடைய ஷெய்காகிய ஷெய்கு ஷிஹாபுத்தீன் ஸுஹ்றவர்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் நாற்பதுநாள் மட்டிலும் நான் கல்வத்திலிருந்தேன். அது முடிவாகும்படியான நாற்பதாம் நாளில் ஷெய்கு ஷிஹாபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்



களை யெனக் கென்னுடைய ஷுஹூதில் தரிசனமாக்கப்பட்டது. அதெப்படியானால் திடனாக ஷெய்கு ஷிஹாபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுயரமான ஓர் மலையின் கண்ணே யிருக்கிறார்கள். அவர்களிடத்தில் அனேகமான இரத்தினங்களுண்டாயிருக்கிறது, அந்த மலையின் கீழே யிருந்த கல்குகளிருக்கிறார்கள். அப்போது ஷெய்கு ஷிஹாபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கையி லிரத்தினங்களால் நிரப்பப்பட்ட ஒரு நாழி, அல்லது ஒரு மரக்கா லுண்டாயிருக்கிறது. அவர்களந்த நாழி அல்லது அந்த மரக்காலைக்கொண்டு அந்த இரத்தினங்களை யளந்தளந்து மனிதர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். மனிதர்களெல்லாம் விரைவாக வந்து வந்து வாங்கி யெடுத்துக்கொள்கிறார்கள். அந்த இரத்தினமானது இவர்களளந்து கொடுக்கிறதைக்கொண்டு குறையுந்தோறெல்லாம் ஷுஹூதிலிருந்து வருவதுபோல் வளர்ச்சியாகி நிறைந்துகொண்டேயிருக்கிறது; இவ்விதமாக என்னுடைய ஷுஹூதிற் கண்டேன்.

அப்பால் நாற்பதாம் நாள் முடிவானதின் பிறகு நான் கல்வத்திலிருந்து புறப்பட்டு நான் ஷுஹூதிற் கண்ட செய்தியை ஷெய்கு ஷிஹாபுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் சொல்லவேணுமென்றவர்களுடைய சமுகத்திற் சென்றேன். அப்போதவர்கள் நான் யாதொன்றுஞ் சொல்ல முன்னமே யென்னை நோக்கித் திடனாக நீர் கண்ட காட்சியாகிறது உண்மையாயிருக்கும் இவைகளெல்லாம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களெனக்கு மனத்திக்குப் பதிலாகத் தந்த உபகார நன்கொடையின் மூலமாய்க் கிடைக்கக்காயிருக்கும். இன்னுமிவைபோலவர்களிடத்தி லனேகங் காட்சிகளுண்டு. திடனாக அவர்களுக்குச் செல்படியான அதிகாரத்திலும், நிலைபரமான மகா அற்புதமான செய்கைகளிலும் அல்லாஹுத் தஆலாவிலின்று ஈயான யுண்டாயிருந்ததென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன்.

—(*)—

## 82-வது ஹிக்காயத்து.

எண்பத்திரண்டாம் ஹிக்காயத்தாகிறது ஆரிபான ஷெய்கு அபூ முஹம்மது முபாரிஜுல் நபுஹானிஷ்ஷைபானிய்யுல் பைலா

ஷிப்பு றழியல்லாஹுத் தஆலா அவர்களைத்தொட்டும் பேசி வைக்கப்பட்டதாயிருக்கிறது. அவர்கள் சொல்லுகிறார்கள். ஷெய்கு அத்தாயுல் அய்னீ றழியல்லாஹு அவர்களாகிறவர்கள் தங்களூரிலிருந்து தங்களுடைய ஜனங்களுடனே யெல்லாரோடும் ஆக்கவி லும் ஒரு வழியில் நடந்து பைஸானென்னு மூருக்கு வருகிறவர்களாயிருந்தார்கள், ஆனால் ஷெய்கு அத்தாலீ றழியல்லாஹு அவர்களுடைய ஜனங்கள் பரமலியமான ஷாலங்களை யுடையவர்களாயிருந்தார்கள். அவர்களில் சின்னஞ் சிற்சிலர்கள் புலியின் மேத்திணவர்களாயும் வருவார்கள் இவ்விதமாக வெல்லாரிவர்கள் பிரசங்கமாய் வருவதாலென்னுடைய மனதிற் கொஞ்சம் பிரிசக் குறைவுண்டாயிருந்தது. ஆனதால் நான் பகுதாதிலிருந்துபோய் வானு காயுகள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் சேர்ந்து ஷெய்கு அத்தாலீ றழியல்லாஹு அவர்களுடைய சங்கதியை அவர்களுக்குச் சொல்லிக் காட்டினேன். அதற்கவர்கள் சிலகாள் பட்டிணமாயிருந்து மதுமொழியுஞ் சொல்லாதிருந்துவிட்டார்கள். அப்பால் நானென்னுடைய ஊருக்கு மீண்டு வருவதற்காக அவர்களிடத்தில் உத்தரவு கேட்ட அப்பய கிறபோது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களென்னைப்பார்த்து நீரதப் பெருவழித்தூரப்போய்ச் சேர்ந்தீரானால் அந்த வழியருகி லொரு மாமரமுண்டாயிருக்கிறது. அவ்விடத்தில் தரிபட்டு நின்று, ஷெய்கு அத்தாலியையும், அவருடைய ஜனங்களையு முன்னேக் கடந்துபோக விடவேண்டாமென்றெனக்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்களென்று நீர் சொல்லிவிட்டுப் போமென் றெனக்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்,

ரூவீ சொல்லுகிறார், அப்பால் நான் பகுதாதிலிருந்து புறப்பட்டு அந்தப் பெரும் வழிக்குப் போய்ச் சேர்ந்தபோது குறித்த மாத்தடியில் நின்று ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களென்னைச் சொல்ல சொன்னபடி சொல்லிவிட்டுப் போனேன். பின்பு வெள்ளிக்கிழமையானபோது ஷெய்கு அத்தாலும், அவருடைய ஜனங்களும் அவர்களுடைய வழக்கப்படி பைஸானுக்கு ஜும்ஆவுக்குப் போக நாடினது அவ்வழியிலிருக்கிற



ஆற்றிலிறங்கிப்போக நாடினார்கள். அப்போதவர்களிருக்கிற விடத்திற்குந் தண்ணீருக்குமிடையில் மகா உயரமானவொரு திடருண்டாயிருந்தது ஆனால் அந்தத் தண்ணீராகிறது பொங்கிப்பெருகி பாதத் திடரைப்போய்ப் பிடிக்கபட்டும் வெள்ளமிகுந்து அந்தத் தண்ணீரைக் கடந்துபோக வலாயலாகிவிட்டார்கள். அப்போது ஷெய்கு அத்தாலீ தங்களுடைய அஸ்ஹாபிமார்களைப் பார்த்து இதாவது திடனாக வொரு பகிதான காரியமே வந்து சேரிட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் உங்களுங்களுடைய தலைகளைத் திறவுங்கள் நாமடங்கலும் பகுதாதுக்குப்போய் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற்போயவர்களுடைய கையின் பேரில் தௌபாச்செய்வோமென்று சொன்னார்கள். அதற்கவர்களுடைய மகனார் ஷெய்கு இபுறாஹீம் சொல்வார். அவர்களாவிலலல. ஆகிலும் ஷெய்கு முபாரிஜனவிற்போய் இஸ்திகுபாறு செய்வோமென்று சொன்னார். அப்படியே சகலத்தார்களும் சம்மதித்து நிற்கருத்து வைத்தபொழுது அந்த அதிகரித்த தண்ணீரான துவற்றி முந்தியிருந்த பட்டிலாகிவிட்டது. அதுகண்டு அவர்களனைவரும் அந்த ஆற்றைக் கடந்து பைஸானென்னு மூரனிற் சென்று ஷெய்கு முபாரிஜு றழியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் இஸ்திகுபாறு செய்து மீண்டார்கள், அதின்பிறகு ஷெய்கு அத்தாலீறழிமஹால்லாஹு அவர்களும், அவர்களுடைய ஜனங்களும் தாழ்ச்சியையாக வருகிறவர்களாயிருந்தார்கள். அவர்கள் இஸ்திகுபாறு செய்த காளனது பாரதூரமான நாளாயிருந்தது.

——:(*'):——

## 83-வது ஹிக்காயத்து.

——(*)——

எண்பத்திமூன்றும் ஹிக்காயத்தாகிறது மகா வலுமையுடைய ஆரிபான ஷெய்கு அபூஅப்துல்லாஹில் முஹம்மதுபுனு அஹமதல்பல்கீ றழியல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவைக்கப்பட்டதாயிருக்கிறது. அவர்கள் சொல்லுகிறார்கள், நான் வாலிபனாயிருக்கும போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களைக் கண்டிக்கவேண்டியதற்காக பல்கி ராச்சியத்திலிருந்து பகுதாதுக்கு ஹிஜுறத்தாகப் புறப்பட்டு நடந்து அவர்கள் தங்களு

டைய மத்ரசாவில் அஸ்று தொழுதுக்கொண்டிருக்கும்போது போய்ச் சேர்ந்தேன், அதற்கு முந்தி நானவர்களைக் கண்டிருக்கிறேன், அவர்களென்னைக் காணவில்லை, பின்பவர்கள் அஸ்று தொழுது முடித்து சலாம் கொடுத்ததின் பின்னர் பஞ்சூர்களெல்லாம் விளாத்தவர்கள் பேரில் சலாம் கொடுத்தார்கள். நானுமவர்களளவில் முந்தி முஸாபஹாச் செய்து சலாம் கொடுத்தேன். அப்போதவர்க ளென்னுடைய கையைப் பிடித்துக்கொண்டு புன்முறுவல் செய்தவர்களாக என்னைப் பார்த்து நீய் பல்கியுள்ளவரே, முறையாகத் தூர்மைக்கொண்டே சோபனம். இடனாக அல்லாஹுத் தஆலா வும்முடைய பதவியைக் கொண் டும்முடைய தேயத்தையு மலிந்திருக்கிறேனென்று சொன் னார்கள்.

நானே சொல்லுகிறேன். இடனாக அவர்களென்னை நோக்கிச்சொன்ன வசனமானது காயங்களை பட்டவனுக்கு மருந்தைப்போலும், நோயாளிகளுக்குச் சுவாத்தியத்தைப்போலுமிருந்தது. அவர்களுடைய அச்சத்தைக்கொண் டென்னுடைய கண்களாற் கண்ணீர் வடிந்து விட்டது. இன்னுமவர்களுடைய நிர்க்கனத்தைக்கொண் டென்னுடைய, அங்கமெல்லாம் பதறிவிட்டது. இன்னுமெனக் கவர்கள்மீதுண்டான ஆசையைக்கொண் டென்னுடைய இருதயந் தாங்கிதுண்டாகிவிட்டது. ஆகையால் கல்குகாடக்கிலேயும் விட்டு என்னுடைய கட்டினைப் பிரித்துக்கொண்டேன். இன்னுமெனக்கு நன்றாக வெளிக் காச்சொல்ல ஏலாதவொரு கருமத்தை என்னுடைய இருதயத்திற் கண்டேன். அப்பாலத்தக் கருமமான தென்னுடைய மனதில் வளர்ச்சியாகிப் பெலமாகிக்கொண்டே வந்தது. நானுமென்னாற் கூடிய மட்டிலும் அதை மறைத்தடக்கிக்கொண்டே வருவேன். இவ்விதமாயிருக்கையி லொருநாளிருக்க ஷரீபி லெறும்பி யென்னுடையமுறக்கான வணக்கத்தைச் செய்துக்கொண்டிருந்தேன். அப்போதென்னுடையக் கல்வியிருக்கிறவிடு மனுடர்கள் வந்து வெளிப்பட்டார்கள். அவர்களிலொருவருடைய கையிலொரு குடிப்பும், மற்றொருவர் கையிலொரு பரிவட்டமுமுண்டாயிருந்தது. அந்தப் பரிவட்டத்தைக் கையில் வைத்திருப்பவர் என்னைப் பார்த்து. காஜுனுத அலியயுடைய அஸ்காபிகளிருந்தார். இந்த குடிப்பைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவராகிறவர் முக்கர்ரபான மலக்குகளிலொருவராயிருக்கிறார். அவர் கையிலிருக்கிற கெண்டியானது முஹம்மதவர்களுடைய குடிப்பாயிருக்கிறது, இந்த வெண்கையி



லிருக்கிற பரிவட்டமானது அலாவென்னுந் திருவுளப வொருத்தருடைய அமல்களில் நின்று பெருமையுடையதாயிருக்குமென்று சொல்லி யெனக் கந்தப் பரிவட்டத்தை யுடுத்திக்காட்டினார்கள். கெண்டியைக் கையில் வைத்திருக்க வுமக்கக் குடிப்பதற்கு வென்னக்குக் குடிப்பாட்டினார்கள். அவ்விதமக்க குடிப்பைப் பருகிக்காட்டினேன் அல்லாஹுத் தஆலாவின் வெளிச்சத்தையும், எனக்குக் குடிக்காட்டிய அந்தக் குடிப்பின் வெளிச்சத்தையும் பலவான முகமிய கண்ணிடம் அருமையான ஞானிகளையும் நின்றது. அதைக் குடிப்பதை யெனக் குக் குடிப்பாட்டிய மலக்குகளையும், அவ்வேளைக் கவர்களுடைய மக்காமங்களையும், அதல்லாத சிறந்த அதிசயங்களையு மெனக்குக் கண்பாக வெளியாக்கப்பட்டது. அந்தக் கஷ்பைக் கொண்டு நான் கண்ட காட்சிகளில் நின்றுமுள்ளதாவது என்னவென்றால் ஒரு மக்காம், அதைப்போற்கொற்ற மக்காமானால் அதினுடைய ஜத்தில புத்திகளின் கால்களெல்லாருஞ் சறுகிப் போகிறது, அதின் வழுப் பத்தில ஆலோசனைகளின் கண்களெல்லாந் தப்பிப் போகிறது, இன்னு மதினுடைய வழுப்பத்திற்கு அவலியாக்களுடைய கழுத்துகளெல்லாந் தாழ்ச்சி செய்கிறது, அதினுடைய தெளிவின் ரூபங்களைக் கயங்களெல்லாம், யாதற்றுப் போகிறது, அதினுடைய ஒளிவின் அடர்களில் அகப்பார்வைகளின் கொட்டங்களெல்லாந் தட்டழிந்து போகிறது, இன்னும் காமிலின்கள், அருமைபெரியோர்கள் முக்கர்ரபீன்களாகிய மலக்குகளில் நின்றுமொரு கூட்டங்களானது அந்த மக்காமத்தின் மக்காமுக்குச் சரியாக நிற்கவில்லை யென்னுமா அந்த மக்காமத்துடைய கோலத் தியானத்தை வைப்பதற்காக முக்கடி செய்கிற பேர்களுடைய கொலத் தின்பேரி லவர்கள் வெளியாகிற பாதத்திலே யொழிய இவ்வளவுக்க மலக்குகளாகிறவர்கள் அல்லாஹு ஸுப்ஹானஹு வதஆலா வைத் தன்னைப் பற்பல விதமான துதிகளையும், தூய்மைகளையுங் கொண்டு தன் னைப் பரிசுத்தம் செய்கிறார்கள், இன்னுமவர்களடங்கலும் மக்க மக்காமைப் பிஹாற செய்கிறார்கள், இடனாக அந்த மக்காமுடையவர்கள்பேரில் சலாம் சொல்லுகிறார்கள். இடனாக அந்த மக் காமுக்கு மேலே, நற்சானிய அல்லாஹுத் தஆலாவின் அறிவுக்கு அல்லாது வேறில்லையென்மெருநர் சொல்லுகிறார்.

இன்னுமந்த மக்காமமாவிற் பார்க்கவான இடமாயிருந்தாக் சொல்வான். இடனாக வொரு வாயிலானவனுக்குள்ள மக்காமடங் களும், அல்லதொரு மஞ்ஞாபுக்குள்ள ஹாலடங்களும், அல்லதொரு மஹ்பூபுக்குள்ள இரடங்களும், அல்லதொரு ஆரிபுக்குள்ள ஆயி

டங்களும், அல்லதொரு வஸ்துக்குள்ள அதிகாரங்களும், அல்லதொரு முக்கர்றபானவருக்குள்ள தமக்கீனங்களும் அது ஸையபாளி போகிற மைதானமும், அது ஒதுங்கியிருக்கிற இடமும், அப்படி அது போய் முடிவாகி அடங்கி நிற்குந் தலமும், அதின் தொகையும், அதின் பிரிவும், அதிற் கொஞ்சமும், அதில் மிகுதமும், அதின் துவக்கமும், அதின் முடிவுமாகிய இவைகளெல்லா மந்த மக்காமிலேயே தரிபட்டிருக்கிறது. அதில் நின்றுமே யுண்டாகிறது, அதைக்கொண்டே தொடங்கி வருகிறது, அதைக்கொண்டே திரும்பப்படுகிறதென்று அந்த மக்காமைவிற் பார்த்தவன் திட்டமா யறிந்துக்கொள்வான்.

ஷைகு சொல்லுகிறார் நானந்த மக்காமைவிற் பார்க்கச் சக்தி பெறவொமற் சிலகால மிருந்து அப்பாலந்த மக்காமைவிற் பார்ப்பதற்கானேன். இன்னுஞ் சிலகால மந்த மக்காமுக்குச் சரியாக நிற்கத் திராணி பெறுதிருந்து பிறகு அதற்குச் சரியாக நின்று பார்த்தேன், இன்னுஞ் சிலகால மந்த மக்காமிலிருப்பவர்களின் றென்றறிந்துக்கொள்ள சக்தி பெறுதவனாயிருந்து சிலகாலஞ் சென்று அந்த மக்காமிலிருப்பவர்களை யறிந்துக்கொண்டேன். அவர்களாகிறதாமென்றால் மக்கல் நாயகம் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிருக்கிறார்கள். அவர்களுக்கு வலதுபாகத்தில் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களும், நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களும், ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களும், அவர்களுக் கிடதுபாகத்தில் நபி நூஹு அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களும். நபி மூஸா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களும், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களு மிருக்கிறார்கள். அல்லாஹுத் தஆலாவுடைய ஸலவாத்தும், ஸலாமும் அவர்களனைவர்கள் மீது முண்டாவதாகவும், ஆமீன், இன்னும் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு முன்னாலே அவர்களுடைய அஸ்ஹாபிமார்களில் மகா பெரிய மனிதர்களடங்கலு மிருக்கிறார்கள். இன்னு மவ்விடத்தில் அவ்லியாக்களடங்கலுங்கை கருமக்காரர்களாகிய காதிமீன்களுடைய கோலத்தில் நிலையில் நின்றவர்களாயிருக்கிறார்கள். இடதுக அவர்களடங்கலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஸஹாபத்தா லவரவர்களுடைய தலைகளிற் பக்கி சாரங்களாகிற குமோ லிருக்கிறார்கள். அதுலந்த மக்காமிலிருக்கிறவர்களில் அஸ்ஹாபிமார்களில் நின்றும் நான் அறிந்தவர்களில் அபூபக்று, உமறு, உதுமான், அலீ, ஹம்ஸா, அப்பாஸு றலியல்லாஹு அன்ஹும் இவர்களிருந்தார்கள். இன்னும்



அவுலியாக்களினின்றும் நானறிந்தவர்களில் மஃறூபுல் கறுகி, ஸரிய்யுஸ்ஸிக்தி, ஜுனைது, ஸஹ்லுத்துஸ்தரி, தாஜுல் ஆரிபீன் ஷெய்கு அபுல்வபா ஷெய்கு அப்துல்காதிரில் ஜீலானி, ஷெய்கு அதிய்யு, ஷெய்கு அஹ்மதுர்றபாஇய்யு றலியல்லாஹு அன்ஹும் மிந்த வலிமார்களெல்லோர்களு மிருந்தார்கள். நாயக முஹம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சமீபத்திற்கு அஸ்ஹாபிமார்களில் மெத்த முகிருதலானவர்கள் அபூபக்று ஸித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களாகவும், இன்னு மவர்கள் சமீபத்திற்கு அவுலியாக்களில் மெத்த முகிருதலானவர்கள் ஷெய்கு முஹியித்தீன் அப்துல்காதிரில் ஜீலானி றலியல்லாஹு அன்ஹு அவர்களாகவு மிருந்தார்கள், அப்போ தொருவர் சொல்லக் கேட்டிருந்தேன். முக்கர்றபான மலக்குகளும், முர்ஸலான நபிமார்களும், மஹ்பூபான அவுலியாக்களும், நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் காண்பதற் காசை வைத்தார்களானால் நாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்களுடைய நாயவிடத்தில் தங்களுக்குரிய மகா மேலான மக்காமிலிருந் திறங்கி இந்த மக்காமுக்கு வருவார்கள். அப்போதந்த நாயகமவர்களைக் கண்டதால் அவரவர்களுடைய வொளிவுக ளிரட்டிப்பாகிவிடும், அவர்களைத் தெரிசித்தவர்களுடைய ஹால்கள் வளர்ந்தேறிவிடும், அந்த நாயகமவர்களுடைய பறக்கத்தா லவரவர்களுடைய பதவிகளும், மக்காங்களும் உயர்த்தியாகிவிடும், பின்பு நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மெத்த மேலான தங்களுடைய கூட்டாளியனவிற் போய்விடுவார்களென் றொருவர் சொல்லவே அவர்களெல்லோர்களும், சமிஃனா வஅத்தஃனா குப்றானக்க றப்பனா வஇலைக்கல் மஸீறு நாங்கள் கேட்டு வழிப்பட்டோம், எங்களுடைய நாயனே உன்னுடைய மன்னிப்பைக் கேட்கிறோம், உன்னளவிலேயேதான் சகலமுமாகு வேண்டியதென்று சொன்னார்கள்.

ஷைகு சொல்லுகிறார், அப்பால் மகா வலுப்பமான, துய்தான விடத்திலுள்ள வொளிவில்நின்று மொருமித்தலானது பிரகாசித்து தோற்றஞ் செய்யப்பட்டதெல்லாவற்றையும் விட்டென்னை மறைவிலாக்கி, உண்டானவைகளடங்கலையும்விட்டென்னை யிருஞ்சி யொன்றுக்கொன்று விகற்பமான இரண்டு வஸ்துகளுக்கிடையிலுள்ள பிரித்தலையுமென்னைவிட்டு விழத்தாட்டிவிட்டது. ஆகவே நானிவ்விதமா

ரிந்த ஹுஜாவின் மேலில் மூன்று குருஷர் கிடந்திருந்தார்கள். அப்பால் நான் சாமிறென்னை மூரிருக்கையிலேயே யெல்லாம் தன் கடனைக் கொண்டுடனாக்கு யாயு லாவில்லே, அந்த சாமிறென்னு மூரிலிருந்தெனக்குத் தன்னிடையு வருமென்று பார்க்கிறேன். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னுடைய நெஞ்சின் மேலி லவர்களுடைய கைகளை வைத்துப் பிடித்தவர்களாயும், அவர்களுடைய திரண்டு பெருவிரல்களினால் மெய்ச் சிறுமை பிற்றென்னை பருகாதின் வைத்தவர்களாயு மிருக்கிறார்கள். அந்த வேளையிலிருந் தெனக்குத் தன்னிடையு வந்து என்னுடைய கருமங்களையுடையனுகூலமாக.

அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னைப் பார்த்து ஒப்பனைக்காரரே உம்முடைய கஜ்றுகளிலும்மை மிஞ்சித்த உமக்குரிய ஹாலங்களையும் முக்கத்த உம்மை மேன்மையாக்க யூர்வளிட்டு நிற்குமோ என்று கிடைந்த என்னை கொண்டு வந்து சொல்லிய பின்பு நாமவர்க ளைக்கண்ட கொழுகல் இதுவரையிலும் கடந்த என்னுடைய ஹால்களையும், தரிசனங்களையும், அவர்களெல்லாம் வெல்லொரு மூச்சிலு மெட்டிப் பார்த்துக்கொண்டிருக்கக் குறிவிக்கும்படியான செய்தி யாவனைகள் யாவையும் மதிவித்தார்கள்.

இன்னும் சொன்னார்கள். அல்லாஹ்வின்றனை நிடைந்த நான் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடத்தில் நீரத பக்கமான வரும் பார்ப்பதற்காக உடக்கவர்களுக்கு செய்யும்படி யேழு தடவை கேட்டேன். இன்னும் நீரத பக்கமுக்குச் சரியாக நின்று பார்க் கும்படி பின்னும் யேழுதடவை கேட்டேன். நீரத பக்கமிலிருக்கவர் களை யறிந்துக்கொள்ளும்படி மறுபடியு மேழுதடவை கேட்டேன். இன்னும் நீரத்தக் கூடியவேனை கேட்டுக்கொள்ளும்படிக் கேழு தரங் கேட்டேன். இன்று முடிக்கத்த மின்னலொளிய பிரகாசமோ மேழுகிறதைக் கேட்டேன். மின்னலின் டடவை யேழுதரம் அல்லாஹுத் தஆலாவிடத்தில் கேட்டேன். இன்னு மெக்கவலுடைய முஹம்மதில் ஒரு காகம் கட்டிய பவனுடைய திருவுளப் பொருத்தமென்னும் வெகுமானத்தை யுமக்குக் கிருத்தாட்டுமி



படிக்கிறதற்குமுன் னெழுபது தரம்வரையிலுங் கேட்டிருக்கிறேன். எனதருமையான பிள்ளையே உமக்கு ஐதாபுடைய ஹாலிற் றப்பி விட்ட பறுலான தொழுகை, நோன்பு இவைகள் யாவையும் கலா விறுத்துக்கொள்ளுமென்று திருவுளமானார்கள். றலியல்லாஹு அன்ஹு.

## 84-வது ஹிக்காயத்து.

எண்பத்திநான்காம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபூஅப் தில்லாஹி முஹம்மது புனு காமிலில்பைலானீ றலியல்லாஹு அன் ஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக் கும், அவர்கள் சொல்லுகிறார்கள். ஆரிபாகிய ஷெய்கு முஹம் மது ஷூரரில் * மஹல்லீ றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல் ல நான் கேட்டிருக்கிறேன். நானென்னுடைய ஷெய்காகிய ஷெ ய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவ ர்களை வியாறத்துச் செய்வதற்காகப் பகுதாதுக்குப் போய் அவர் களிடத்தில் சிலகால மிருந்து எனக்குச் சிலவு முதலியவைக ளுக்கும் துணைக்கும் யாதொரு மனிதர்களுடைய உதவி ஒத் தாசை யாதொன்றுமில்லாமல் தனியே வெறுங் கையாகப் புறப்பட்டு மிஸ்றுக்கு வருவதற்காக நாடி ஷெய்கு முஹ் யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களி டத்தில் உத்தரவு கேட்டேன். அதற்கவர்க ளென்னைப் பார்த்து நீ யொருவரிடத்திலும் யாதொன்றுங் கேட்க வேண்டாமென்று வலியுறுத்துச் செய்து அவர்களுடைய சிறப்பான வலதுகை விரலை யென்னுடையவாயில்தந்து நான் சூப்பிக்கொள்ளுமென்று சொல் லவேகானவ்விதஞ் செய்துகொண்டேன் அப்போதுநீ நேர்பெற்ற வனாய் சலாமத் தாய் நடாவென்று ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க ளெனக்குத்தரவு கொடு த்தார்கள். அப்படியே நான் பகுதாதிலிருந்து மிஸ்றளவில் யா தொன்றுந் தின்னாமலுங் குடியாமலும் போனேன். ஆனாலெ

* மஹல்லாவென்பது மிஸ்றில் ஒரு தலத்தின் பேராயிருக்கும். மஹ ல்லீயென்பது மஹல்லாவிலுள்ளவரென்பதா யிருக்கும்.

க்குப் பெலனும் தயிரியமும் அதிகமானதே தவிரச் சொஞ்சமாகிலுங் குறையவில்லையென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு வனபஅனுபிஹி பித்தாறைன்.

—:o:—

## 85-வது ஹிக்காயத்து.

—(*)—

எண்பத்தைந்தாம் ஹிக்காயத்தாகிறது அவுலியாக்களுக்கெல்லாம் குருவாகிய மகான்மையையுடைய வலுப்பமான ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரர் ஷெய்கு அப்துர் றஸ்ஸாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களால் தெரிவிக்கப் பிரவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும் அவர்கள் சொல்லுகிறார்கள் நாட்களாலொருநாளில் எங்கள் தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஜும்ஆவுக்குப் புறப்பட்டுப் போனார்கள். அப்போது நானும், என்னுடைய சகோதரர்களாகிய செய்யிது அப்துல் வஹ்ஹாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களும், செய்யிது ஈசா றலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஆக நாங்கள் மூன்றுபேர்களும் எங்கள் தகப்பனாரவர்களுக்குப் பின்னாலே புறப்பட்டுப் போனோம். அவ்விதமாய்ப் போகிற வழியிற் சாராயத் துருத்திகளை யேற்றப்பட்ட மூன்று ஒட்டகங்களை நடத்தி சுல்த்தானுக்குக் கொண்டுபோகப் படுகிறது. ஆனால் சாராயத்தினுடைய நாற்றமாகிறது மிகவுங் கடினமாயிருக்கிறது அதோடு சுல்த்தானுடைய சேவகர்களும், காவற்காரர்களு மிருக்கிறார்கள் அப்போதவர்களைப் பார்த்து எங்கள் தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நீங்கள் சற்றே நில்லுங்கள் நாங்கள் போனதின் பின்னால் நீங்கள் நடவுங்களென்று சொன்னார்கள். அவர்களச்சொல்லை யங்கீகரியாமலவர்க ளொட்டகங்களை விரைவாய் நடத்திக்கொண்டு சென்றார்கள். ஆகையால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களந்த வொட்டகங்களைப் பார்த்து ஒட்டகங்களே நில்லுங்களென்று சொன்னார்கள், அவ்விதமவர்கள் சொல்லவே அந்த வொட்டகங்கள் கனையாய் நிறுத்திவிட்டு நின்ற, நின்ற விடங்களி



லேயே கற்களைப்போல் நின்றுவிட்டது அப்போதந்த வொட்டகங்களை யோட்டுபவர்களவைகளைக் கடுந்த அடியாக அடித்தும் அவைகள் நின்ற விடங்களைவிட் டசையவில்லை. இன்னு மந்த வொட்டகங்களுடன் வந்த ஜனங்க ளொட்டகங்களுக்கும் வாய்வுக் கட்டியாக வியாதி தொட்டு வருத்தங்கள் பொறுக்கவொலாமல் மண்ணில் விழுந்துருண்டு பிரண்டுக்கொண்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைச் சத்தமிட்டுக் கூப்பிட்டவர்களாக அவர்களுடைய சன்னிதானத்தில் வந்துபுகுந்து எங்கள் தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் பொறுக்குதல் தேடிப் பலவிதமாக இஸ்த்திகுபாரும், தௌபாவுஞ் செய்தார்கள். அவ்விதம் தௌபாச் செய்த அக்கணமே அவர்களுடைய வருத்தங்களும் நீங்கி அந்தச் சாராய நாற்றம் வீசினதும் கஸ்தூரியின் வாசனையாக ஆகிவிட்டது. உடனே யந்தத் துருத்திகளைத் திறந்து பார்க்கும்போது சாராய மில்லாமல் ஸிர்க்காவாயிருக்கக் கண்டார்கள். அப்பாலொட்டகங்களுந் தன்படியாய் நடந்து போனது. இவ்விதம் நடந்த அதிசயங்களைக் குறித்து மனிதர்களுடைய கூக்குரல்களானது மகா முழக்கமா யெழும்பிவிட்டது. பின்னர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க ளஜும்ஆப் பள்ளி வாயலுக்குப் போய்விட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து நாங்களும் போனோம், அப்பாலிந்த செய்தியெல்லாம் சுல்த்தானவரிற் போய்ச் சேரவே உடனேயவர் பயந்து நடுங்கி யழுது தான் செய்து வந்த அனேக ஹறாமுடங்களை விட்டுத் தௌபாச் செய்து மீண்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை ஸியாறத்துச் செய்ய நாடிவந்து அந்த சுல்த்தானவர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தில் மெத்தத் தாழ்ச்சிமை யுடையவராகவும், சிநேகமுடையவராகவு மிருப்பவராயிருந்தார். றலியல்லாஹு அன்ஹு.

—[*]—

## 86-வது ஹிக்காயத்து.

—(*)—

எண்பத்தாறாம் ஹிக்காயத்தாகிறது ஆரிபாகிய ஷெய்கு அபூ முஹம்மது ஜௌஸரீபுனீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்

தொட்டும் பேசலாப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொன்னார்கள். நானென்னுடைய கருமத்தின் துவக்கத்தில் ஒரிரவில் வெட்ட வெளியான தலத்தில் ஸரீபினென்னு மென்னுடைய ஊரில் நான் மல்லார்ந்து படுத்துக்கொண்டிருந்தேன். அப்போதந்த மைதானிலிருந்து புறாக்கள் பறந்துபோய்க்கொண்டிருந்தது. அதிலொரு புறாவானது நல்ல நாகரீகமான நாவுகொண்டு சுபுஹான மன் இதஹூ கனாயினுகுல்லி ஷையின் வமாயுனஸ்ஸிலுஹூ இல்லாபிக்கதரின் மஃலூமின் யஃனி இதின் பொருள் ஒரு நாயனாகிறவன் தூய்யவன் அவனைப்போற் கொற்றவனால் எல்லா வஸ்துகளின் கஸானாக்களு மவனிடத்தி லுண்டாயிருக்கிறது. அவனதையறியப்பட்ட கட்டளையைக்கொண்டேயொழிய, அதை யிறக்கிவைக்க மாட்டானே அப்போற்கொற்ற தூய்யவனென்று மனுடர்கள் சொல்வதுபோற் சொல்லக்கேட்டேன். அப்பாலின்னொரு புறாவானது சுபுஹான மன்அஃத்தாக்குல்ல ஷையின் கல்கஹூ தும்ம ஹதா, அந்தந்தவஸ்துகளாடங்களுக்கும் அவையவைகளுக்குரிய அனிகோலங்களைக் கொடுத்து அவையவைகளுக்குத் தகுந்த கருமங்களுக்கு நேர்வழி காட்டிய நாயன் தூய்யவனென்றுசொல்லக்கேட்டேன். பின்பு மற்றொரு புறா சுபுஹான மன்பஅதல் அன்பியாஅ ஹுஜ்ஜத்தன் அலா கல்கிஹீ வபல்லல அலைஹிம் முஹம்மதன் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம. நபிமார்களை யவனுடையக் கல்குகளின் பேரில் தலீலாக அனுப்பி யவர்களடங்களிலும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை வரிசையாக்கிவைத்தானே அப்போற்கொற்ற நாயன் தூய்யவனென்று சொல்லக் கேட்டேன். பிறகு வேறொரு புறாவானது குல்லுமாபித் துன்யா பாத்திலுன் இல்லாமாக்கான லில்லாஹி வறசூலிஹீ அல்லாவுக்கு மவனுடைய றசூலுக்குமான கருமமேயல்லாது மற்றப்படிக்கு துன்யாவிலுள்ளவைக ளெல்லாம் வீணாகி நாசமாவதாயிருக்கு மென்று சொல்லக்கேட்டேன். பின்னுமொரு புறுவானது யா அஹ்லல் கபுலத்தி க்கூமு இலாறப்பிக்கும் றப்புன் கரீமுன் யுஃதில் ஜஸீலவயஃபிரு தன்பல்அஸீம மறதியாளர்களே யுங்களுடைய நாயனளவி லெழும்பிநின்று பணிவிடை செய்யுங்கள், அவனாகிறது வள்ளலான நாயன், வலிய நலாயுகளைக் கொடுப்பான், பெருங் குற்றங்களைப் பொறுப்பானென்று சொல்லக்கேட்டேன். ஆக இவ்விதமாக அவ்வைந்து புறாக்களுஞ் சொல்லவே உடனே யெ



னக்குப் போதக்கேடுண்டாகி அப்பாற் றெளிவு பெற்றேன், அந்நேரமே துன்யாவுடைய வுவப்பையும், அதிலுண்டான வஸ்துகளுடைய வுவப்பையும் என்னுடைய இருதயத்தைவிட்டு முரியப்பட்டுப்போச்சுது. அப்பால் நானுன்று விடிந்தபொழுதி என்னை யென்னுடைய நாயனளவில் வழிகாட்டும்படியொரு ஷெய்குக்கு நான் நபுஸை ஒப்பிவித்துப்போடுவேனென்று அல்லாவுக்கு உறுதியானமான வாக்குக் கொடுத்துவிட்டு யாரிடத்திற் போய் முரீது பெற்றுத் தீக்ஷைபெறப்போமென்று தெரியாமல் புறப்பட்டு நடந்தேன். அப்படி நடக்கும்போது மகா ஹைபத்து நிறம்பமாகிய முகவொளிவு பிரகாசமாய் வெளியாகிய வொரு வயதாளியானவர்கள் என் முன்னிலவந்து அஸ்ஸலாமு அலைக்க யாஉதுமானே உமக்கு ஸலாமென்று சொன்னார்கள். நானதற்கு ஜவாபு சொல்லி அவர்களைக் காணியிட்டு நீங்களார். என்பேரைச் சொன்னீர்களே நீங்களென்னை யறிந்துக்கொண்டதெப்படி, இதற்குமுன் உங்களை நானொருபோதுங் கண்டதில்லையேயென்று கேட்டேன்.

அதற்கவர்கள் சொன்னார்கள், நானாகிறது கிழுறாயிருக்கும். நானிந்த சமயத்தில் ஷெய்கு முஹியித்தீன் அப்துல்காதிறு றலி யல்லாஹு அன்ஹு அவர்களிடத்திலிருந்தேன். அவர்களென்னைப்பார்த்து ஓய் அபல்அப்பாஸே கிடறாக இன்றிரவில் ஸரீபினென்கிற வூரில்நின்றும் ஒரு மனுடனுக்கு ஜதபென்னும் வாய்ப்பைக் கொடுக்கப்பட்டது. அவருடைய பெயர் உதுமானென்று சொல்லப்படும். கிடறாக அவரை யேற்கப்பட்டது. அவர்பேரில் நவ்வுடைய அருள் முன்னேக்கியிருக்கிறது, இன்னுமவரை நோக்கி யென்னுடைய அடியானே உனக்குமறுஹபன் என்று சோபனங் கூறப்பட்டது, கிடறாக அவராகிறவர் அவருடைய சிறப்பும் வனுப்பமுடைய நாயனளவில் நேர்வழி காட்டிவைக்கும் ஷெய்குக்கு அவருடைய நபுஸை ஒப்பிவித்துப் போட்டேனென்று அல்லாஹுத் தஆலாவுக் குறுதிவாக்குக் கொடுத்துவிட்டார். ஆகையால் நீங்களவரளவிற் போங்கள், அவரை நீங்கள் வழியிற் காண்பீர்கள், அவரை நம்மிடத்திற் கூட்டிக்கொண்டு வாருங்களென்று சொன்னார்களென்று சொல்லிவிட்டுப் பிறகென்னைப்பார்த்து ஓய் உதுமானே ஷெய்கு அப்துல்காதிறாகிறவர்கள். இக்காலத்தில்

ஆரிபீன்களுக்கெல்லாம் நாயகமாகவும், இந்நேரத்தில் அல்லாஹுத் தஆலாவை நாடி வருபவர்களடங்கலுக்கும் கியுலாவாகவு மிருக்கிறார்கள். ஆனதால் நீரவர்களுக்கு கிதுமத்துச் செய்வதையும், அவர்களுடைய சங்கையை வலுப்பமாக்கி வைப்பதையும் விடாமற்பற்றிப் பிடித்துக்கொள்ளுமென்று கிழுறு அலைஹிஸ்ஸலாமவர்கள் சொன்னார்கள். உதுமான் சொல்லுகிறார். அப்பால் நான் வெகு விரைவாகச் சொற்ப நேரத்திற்குள்ளாகப் பகுதாதிலிருந்தேயொழிய என் நபுலைக் கொண்டெனக்கு யாது வரவில்லை கிழுறு அலைஹிஸ்ஸலாமவர்க ளென்னைவிட்டு மறைந்துவிட்டார்கள். பிறகு நானவர்களை யேழுவருஷம் வரையிலுங்காணவில்லை.

பின்பு நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் போனேன். அவர்களென்னைக் கண்டவுடனே மறுஹபன் பிமன்ஜதுபஹு மௌலாஹு இலேஹிபிஅல் எினத்தித்தைகி, வஜஅலஹு கதீறன் மினல்கைரி ஒருவருக்கே சோபனம்அவரெப்போற்கொற்றவாராகில் அவரையவருடைய நாயன் அவனளவிற் பறவைகளின் நாவுகளாலிழுத்து அவருக்கனேக நலவுகளைச் சேர்த்து வைத்தானே அப்போற்கொற்றவராயிருக்குமென்று சொல்லிவிட்டு ஓய் உதுமானே அல்லாஹுத் தஆலா மேலைக்குமக்கொரு மூரீதுப் பிள்ளையை நன்கொடையாகத் தருவான். அவருடைய பெயராகிறது அப்துல்கனிய்யுபுனு நுக்தாவாயிருக்கும். அவராகிறது அவுலியாக்களிலனேகம் பேர்களை மேலிடுவார், அவரைக்கொண்டு அல்லாஹுத் தஆலா மலாயிக்கத்துகளுடனே வீறு பேசுவானென்று சொல்லி யென்னுடைய தலையிலொரு தொப்பியை யெடுத்துப்போட்டார்கள். அந்தத் தொப்பியான தென்னுடைய தலையிற் பட்டவுடனே யெனதுச்சியிலொரு குளிரைக்கண்டேன். அந்தக் குளிராகிற தென்னுடைய விருதயத்துள் போய்ச் சேர்ந்து என்னுடைய கல்பையு மொளியாக்கிவிட்டது. அக்கணமே யெனக்கு ஆலம் மலக்கூத்தைத் தொட்டும் கஷ்பு செய்யப்பட்டது. இன்னும் ஆலங்களும், அதிலுள்ளவைகளும் அல்லாஹுத் தஆலாவைப் பற்பலவிதமான பாஷைகளைக்கொண்டும், வகைவகையான தஸ்பீஹுகளைக்கொண்டும் தஸ்பீஹு செய்யும்படியாகக் கேட்டேன். இந்தக் கஷ்புகளின் சுடுதந்தா மென்னுடைய அக்லானது கட்டழிந்துபோக



முடுகிவிடவே அவர்களுடைய கையிலிருந்தொரு பஞ்சை யென்பேரி லெறிந்தார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா யென் அக்லைத் தரிபாடாக்கி இது கருமத்திற் செவ்வுறுதலாயிருப்பதை யதிகப்படுத்தினான். பின்பு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னை கல்வத்திலிருத்தாட்டினார்கள். நானொருமாதம்வரையிலும் கல்வத்திலிருந்தேன். அல்லாவின்றனை நானொரு வெளியானகருமம், மறைவான கருமம் யாதொன்றையும் நான் காணவில்லை, அதை நான் சொல்ல முன்னே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களெனக் கறிவித்தேயொழிய. இன்னும் நானொரு மக்காமளவிற் சேர்கிறதுமில்லை, ஒரு ஹாலுண்டாகிறதுமில்லை, ஒரு ஷாஹிதுத் துறையைத் தெரிசிக்கிறது மில்லை, கைபிலொரு ஆலத்தை வெளியாக்கப்படுகிறதுமில்லை. அதை நான் பெற்றுக்கொள்ள முந்தியே அதின் தீர்ப்புகளைப் பிரித்து, அதின் முடிப்புகளை யவிழ்த்து, அதின் மூலமின்னது, அதின் பணறின்னதென்றுவகைவிபரமாய்ஷெய்கு அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களெனக்குச் சொல்லியேயொழிய.

இன்னும் அல்லாஹுத் தஆலாவுடைய இல்மிலிருந்து அவனுடியமட்டி லென்னை ஒருபதவிக்குப்பின்னொருபதவியளவிற் கொண்டுபோய் வைக்கிறவர்களாயிருந்தார்கள். இன்னுஞ் சில கருமங்களை யெனக்கின்னஇன்ன விதமாக நடக்குமென் றறிவித்தார்கள். அக்கருமங்களெல்லா முப்பது வருஷத்திற்குப்பிறகு அவர்கள் சொன்னபடி யெனக்குண்டாய்விட்டது. நான் அவர்களிலின்றும் தரீக்கை யெடுத்து கிறுக்காவனைந்ததற்கும், அப்துல் கனிய்யுபுனு நுக்தாவென்பவர்கள் என்னிலின்றும் தரீக்கை யெடுத்து கிறுக்கா வனைந்ததற்குமிடையி லிருபத்தைந்து வருஷமிருக்கும். இவர்களாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களருளிச்செய்ததுபோலனேக அவுலியாக்களை மேலிட்டுக்கொண்டார், றலியல்லாஹு அன்ஹு.

## 87-வது ஹிக்காயத்து.

——:0:——

எண்பத்தேழாம் ஹிக்காயத்தாகிறது ஆரிபாகிய மகா வலுப்பமுடைய ஷெய்கு மக்காரிம் றலியல்லாஹு அன்ஹு அவர்க

னைத்தொட்டும் பேசிவைப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொன்
னார்கள், நாட்களிலொரு நாளில் நான் நாயகம் ஷெய்கு முஹ்யி
த்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய
மத்றஸாவிற்போய் அவர்களுக்கு முன்னே உட்கார்ந்துகொண்டி
ருக்கையில் ஆகாயத்திலிருந்து ஒரு கெளதாரி பறந்துபோய்ச்சுது
அப்போதிந்தக் கெளதாரியைச் சுட்டுக்கொண்டு தோசிக்கோது
மைக் கஞ்சியுங் கூடக் குடித்தால் நல்லாயிருக்குமென் றென்னு
டைய மனதிலிச்சையுண்டாச்சுது. உடனே ஷெய்கு முஹ்யித்
தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் புன்மு
றுவல் செய்தவர்களாக என்னைவிற் பார்த்துவிட்டு ஆகாயத்தை
நோக்கினார்கள். அக்கணமே யந்தக் கெளதாரியானது மத்றஸா
வில் வந்துவிழுந்து மெல்ல, மெல்ல நடந்து என் துடையின்பேரில்
வந்து ஒரு சாஅத்துநேரம் தரிபட்டிருந்தது. அப்போது ஷெய்கு
முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க
ளென்னைப் பார்த்து ஓய் மக்காரிமே நீர் இச்சித்ததைப் பிடித்துக்
கொள்ளுமே, அல்லது அல்லாஹுத் தஆலா உம்மிடத்தினின்றுந்
தோசிக்கோதுமைக் கஞ்சியுடனே சுட்ட கெளதாரியைத் தின்னு
கிற இச்சையை நீக்கிவிடுவானென்று சொன்னார்கள்.

ஷெய்கு மக்காரிம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள்
சொல்லுகிறார்கள். அது தொடுத்து இது வரையிலு மெனக்குக்
கெளதாரியைப்பிரியக் குறைந்தலாக்கப்பட்டது. கிடைக்கக் கெள
தாரியைச்சுட்டு, அல்லது சமைத்து என்முன்னே கொண்டு வைக்
கப்படும், அது எனக்குப் பொருந்தக் கேடாயிருப்பதால் அதின்
வாடையை முகக்ககூட நான் திராணி பெறமாட்டேன். அதற்கு
முன் நான் கெளதாரி தின்பதில் மனிதர்களில் மெத்தப்பிரியமுள்
ளவர்களில் நின்றுமாயிருந்தேன், இன்னும் முந்நாள் நான் ஷெய்கு
முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க
ளுடைய ஹதீது மஜ்லிஸிற் போயிருந்தேன். அப்போ தவர்கள்
ஹாலிலான பேர்களுடைய மக்காம்களிலும், ஆரிபானவர்களு
டைய முஷாஹதாக்களிலும் பேசுகிறார்கள். அச்சமயங் கூடியிரு
ந்தவர்களெல்லோர்களும், மகா சிறப்பும், வல்லமையுமுடைய அல்
லாஹுத் தஆலாவினாலே லாசையானார்கள். அப்போ தென்னு
டைய நினைவிலும் நம்முடைய முறாதைப் பெற்றுக்கொள்வதற்கு



வழி யெப்படியென் றாசாட்டமுண்டாகவே ஷெய்கு முஹ்யித்
தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேச்
சை நிறுத்திவிட்டு என் பக்கத்திற் றிரும்பி ஓய், மகாரிமே உமக்
கும், உம்முடைய முறாதைப் பெற்றுக்கொள்வதற்கு மிடையில்
இரண்டே யிரண்டடிகளிருக்கிறது. ஒரு அடியைக்கொண்டு
துன்யாவையும், மற்றொரு அடியைக் கொண்டும்முடைய நப்ஸை
யுங் கொல்லத்துவிட்டுப் பிறகு நீரும், உம்முடைய நாயனுந்தானே
ன்கிறமட்டிலும் பெற்றுக்கொள்ள வேண்டியதென்று திருவுளமா
னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

——[*]——

## 88-வது ஹிக்காயத்து.

——(*)——

எண்பத்தெட்டாம் ஹிக்காயத்தாகிறது ஹிம்யறிக்கோயிலுள்ள
வாலிறான ஷெய்கு அபுல்முலப்பற் இஸ்மாஈலுப்னு அலீ றஹி
மஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்ட
தாயிருக்கும். அவர்கள் சொன்னார்கள். எனது நாயகம் ஷெய்கு
அலிய்யுபுனுல் ஹீத்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்க
ளுக்குச் சுகந் தப்பானல் சில நேரங்களில் எனக்குடைய வொரு
விடத்தில் வந்து சிலநாள் சுகமில்லாதிருப்பார்கள். அப்படியா
யிருக்கையிலொருதடவை ஷெய்கு அலிய்யுபுனுல் ஹீத்தீ றலியல்
லாஹு அன்ஹு அவர்கள் தங்களுக்குச் சுகந் தப்பாகவே அவர்
கள் நஷல் பிணிக்கொள்வதற்காக ஷெய்கு முஹ்யித்தீன் அப்
துல்காதிரில் ஜீலானீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பகுதா
திலிருந்து முன் சொல்லப்பட்ட என்னுடைய விடத்திற்கு வந்து
சேர்ந்திருந்தார்கள். அப்போ தவ்விடத்திலிரண்டு ஈத்த மரங்க
ளுண்டாயிருந்தது அது பட்டுலர்ந்து நாலு வருஷமாகியிருந்தது,
அதுகள் காய் முதலிய பழங்கள் காய்க்க வேயில்லை, ஆகையாலந்த
இரண்டு மரங்களையும் வெட்டிப்போடவேணுமென்று நாடியிருந்
தோம் அப்படியிருக்கும்போது நஷல் பிணிவந்த நாயகம் ஷெ
ய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அ
வர்கள் எழும்பி யந்த இரண்டு ஈத்த மரங்களில் நின்றுமொரு மர

த்தின் மேலே உலூச் செய்தார்கள், மற்றொரு மரத்தின் மேலே இரண்டு றக்அத்துத் தொழுதார்கள். அப்பாலொரு வாரத்திற்குள்ளாக அவ்விரண்டு மரங்களுந் தளிரிட்டுத் தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து கனிகள் சொரிந்துவிட்டது. அந்நாளானது ஈத்தம் பழங்கள் விளைகிற நாளாயிருந்தது அவ்விடத்திலெனக்குள்ள ஒரு ஈத்த மரத்தில் நின்றுங் கொஞ்சப் பழங்களைப் பறித்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் புசிக்கும்படியாக அவர்கள் முன்பிற் கொண்டுவந்து வைத்தேன். அவர்களதில் நின்றுந் தின்றுவிட்டு பாறக்கல்லாஹு லக்க பீஅறுலிக்க வதுருஹிமிக்க வஸாயிக்க அல்லாஹுத் தஆலா உம்முடைய பூமியிலும், உம்முடைய வெள்ளிக் காசுகளிலும், உம்முடைய மரக்காலிலும், உமக்குப் பறக்கத்துச் செய்வானாகவுமென்று துஆச் செய்தார்கள்.

றாவி சொல்லுகிறார். அந்த வருஷந் தொடுத்து என்னுடைய பூமிகளானது அதின் வழக்கமான விளைவைக் காண இரண்டு பங்கதிகமாக விளைந்து பலன் கிடைத்தது: ஒரு புறத்தில் ஒரு வெள்ளிக் காசை வைத்தாலது இரண்டு பங்குகளாக நயம் பெருகும், ஒரு தலத்தில் நூறு கோட்டை மணிக் கோதுமை வைத்து அதில் ஐம்பது கோட்டையை ஸதக்காக் கொடுத்துவிட்டு மீதியிருப்பதைத் திரும்ப அளந்து பார்த்தாலந்த நூறு கோட்டையுஞ் சரியாகவேயிருக்கும், என்னுடைய ஆடு, மாடு, ஒட்டக முதலியவைகளெல்லாங் குட்டிபோட்டுப் பெருகி அதிகெண்ணிக்கையான திவ்வளவென்றெனக் கறியக்கூடாதென்கிற மட்டிலுமிருந்துவிட்டது, என்னுடைய ஹாலாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடையது ஆவின் பறக்கத்தைக் கொண்டு இது பரியந்தமுமிவ்விதமாகத்தானிருக்கிறதென்று சொன்னார்கள்.

## 89-வது ஹிக்காயத்து.

——:*:——

எண்பத்தொன்பதாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபுல்ஹஸனுல் ஜவ்ஸக்கி றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசி



வரப்பட்டதாயிருக்கும், அவர்கள் சொன்னார்கள். நான் வாலிபமாயிருக்கிற காலத்தில் பெரியதொரு வாரிது வந்து, அதாகிறது ஆலம் கைபில் நின்றும் வருகிற காட்சிகள் வந்து அதின் கருமங்களில் அனேகங்களெல்லா மென்பேரிற் குழப்பமாய்விட்டது. அப்போ தந்த ஹாலைப்பற்றி யெனது நாயகம் ஷெய்கு அபிய்யு புனுல் ஹீத்தி றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் கேட்க வேணுமென்று அவர்கள் சமூகத்திற்குப் போனேன். அப்போதவர்களெனக்கென்னை நோக்கித் துவக்கமாக ஓய் அபுல்ஹஸனே, உமக்கு வந்த ஹாலாகிறது குத்றத்தின் செயல்களிலுள்ளதாயிருக்கும், சொற்களாலதினுடைய பின்னல்களை விடுத்துரைக்க முடியாது. செயல்களாற்றான் விடுக்கவேணும் ஆகையால் நீர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களளவிற் போவும், திடனாக அவர்களாகிறது ஆரிபீன்களுக்கு சிராஜாகவும், இந்நேரத்திலதிகாரஞ் செய்கிறவர்களுடைய செயல்களின் மூக்கணாங் கயிறுகளை யுடையவர்களாகவுமிருக்குமென்று சொன்னார்கள். உடனே நான் புறப்பட்டுப் பகுதாதுக்கு வந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சன்னிதானத்திற் புகுந்தேன். அப்போதவர்கள் தங்களுடைய மதறசாவின் கிபலாவிலுட்கார்ந்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முன்னே சில ஜமாஅத்துகளுமிருக்கிறார்கள். நானு மவர்களுக்கு முன்னேபோ யுட்கார்ந்தேன். உடனே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களென்னை நோக்கிப் பார்த்தார்கள். அப்போதவர்களென்னைப்பார்த்த பார்வையாலென்னுடைய அந்தரங்கத்திலிருக்கிற கருமங்களுடனே நானெதற்காக வந்திருக்கிறேனே அந்தக் கருமத்தையும் அறிந்துக்கொண்டார்களென்று நான் விளங்கிக்கொண்டேன். அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய முஸல்லாவின் மேலேயிருந்து, ஐந்து பட்டுகளாய் முறுக்கப்பட்டதொரு நூல்க் கயற்றை யெடுத்து அதிலொரு தொங்கலை யெனக்குத் தந்து, மற்றொரு தொங்கலைத் தாங்கள் பிடித்துக்கொண்டு அதில் நின்று மொரு பட்டை அவிழ்த்தார்கள் அப்போ தென்னுடைய வாரிதான ஹாலில் நின்றும் பெரிய தொங்கலொன்று வெட்டவெளிச்சமாகி அதில் துலாம்பரமாகப் பாரதூரமான கருமத்

தைத் தெரிசித்துக்கொண்டேன். பின்பு இன்னுமொரு பட்டு நூலை யவிழ்த்தார்கள். அப்போது மென்னுடைய வாரிதில் நின்று மொரு பெருந் தொங்கலொன்று வெளியாகி அதினுடைய மகாப் பாரதூரமான கருமத்தைக் கண்டு தெரிசித்துக்கொண்டேன். அப்பால் மூன்றுவதொரு பட்டு நூலைப் பிரித்தார்கள். அப்போது மென்னுடைய வாரிதில்நின்றும் ஓசையும், உவமையுஞ் சொல்ல வொண்ணாத ஒரு பங்கு அலாம்பரமாய் வெளியாகி அதினுள்ளடக்கத்திலதினுடைய உண்மையைக் கண்டுபிடிக்க முடியாத ஒரு கருமத்தைத் தெரிசித்துக்கொண்டேன். இவ்விதமாக அவ்விதமான ஐந்து பட்டு நூலையும் ஒவ்வொன்றாக முடிச்சை யவிழ்த்தார்கள். அவ்விதமவர்க ளவிழ்க்குந்தோறெல்லாம் என்னுடைய வாரிதுடைய ஹால்களொவ்வொன்றும் தெளிந்துதெளிந்து வெளியாகிக் கடைசியாக என்னுடைய வாரிதான ஹாலின் நிர்மலங்களெல்லாம் வெளியாகி அதின [illegible] மறைந்த விடங்களிலிருந்து அதின் கருமங்களின் உண்மைகளெல்லாம் வகை விபரமாய் எனக்குத் தெரியவந்தது. [illegible]த்தின் பெலத்தா லென்னுடைய அகப்பார்வையானது திரைகளைக் கிழித் தெடுத்து [illegible] முடித்துவிட்டது. அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க ளென்னைப்பார்த்து. குதுஹாபிக் குவ்வத்தின் வஃமுறக் கௌமக்க யஃகுதூ பிஅஹ்ஸனிஹா. அதைப் பலமாய் எடுத்து நீரும் பத்திரமாய் நடந்து உம்முடைய ஜனங்களையும், அதிலழகானதை யெடுத்துக்கொள்ளும்படி யேவுமென்று சொன்னார்கள்.

பின்பு நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்திலிருந் தெழும்பிவிட்டேன். அல்லாமலிருந்தும் நான் அவர்களுடனே ஒரு பேச்சாவது பேசவுமில்லை, என் கருமத்தில் யாதொன்றையும் அவ்விடத்தில் [illegible] ஒன்றுமறியவுமில்லை. அப்பால் நான் முன்னிருந்துவந்த வீட்டிற்குப் போய் நானது நாயகம் ஷெய்கு அலிய்யுபுனுல் ஹைத்தி றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் புகுந்தேன். அவ்விடம் புகுந்து நாயவர்களிடத்தில் யாதொன்றுஞ் சொல்ல முன்னேயே அவர்க ளென்னைப்பார்த்து [illegible] இடனுக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்கா



திறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறது ஆரிபீன்களாகிய உலமாக்களுக் கிராஜாவாயும், அதிகாரம் நடத்துபவர்களுடைய செயல்களின் முக்கணங் கயறுகளை யுடையவர்களாயு மிருக்குமென்று உமக்கு நான் சொல்லவில்லையா, உம்முடைய வாரிதின் ஹாலுக்கு [illegible] நின்றுமது கொண்டுவந்த தரிசனங்களுண்டானதல்ல. ஆதிலும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பார்வையான துமக்கு வந்தவாரிதின் ஹாலில் விழுந்து கலந்தபடியா லுமக்கிந்த முஷாஹதாக்களெல்லாம் கிடைத்தது. அந்த முஷாஹதாக்களில் நின்றுந் தாழ்ந்ததைப் பெறவேணுமென்னில் அதில் வானவர்களெல்லாம் பஞ்சாகிப்போகும். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் குதுஹாபிக் குவ்வத்தின் பெலமாய் அதை யெடுத்துக்கொள்ளுமென் றுமக்குச் சொல்லாதவரையில் உம்மைவிட் டும்முடைய அக்லுகள் நீங்கிப் போய்விடும், இன்னும் நீர் ஜதுபில் மயங்கிப் போனதையால் ஷஹீதான கூட்டத்திலின்று மெழுப்பப்படுவீர், இடனுக அவர்களும்மைப்பார்த்து வஃமுறக் கௌமக்க யஃகுதூ பிஅஹ்ஸனிஹா உம்முடைய ஜனங்களையும், அதிலழகானதை யெடுத்துக்கொள்ளும்படிக் கேவிக்கொள்ளுமென் றருளிச் செய்த வசனத்தால் நீருமொரு காமிலான ஷெய்காகி உம்மைக்கொண்டு தொடப்படுமென் றறிவித்தார்களென்று சொன்னார்களென்றார்கள். றலியல்லாஹு அன்ஹு.

——[*]——

## 90-வது ஹிக்காயத்து.

——(*)——

தொண்ணூறும் ஹிக்காயத்தாகிறது அபூ ஹம்பது அலிய்யுபுனு அபீபக்ரில் பக்கரீ யென்னும் ஷெய்கு குத்வாவைத்தொட்டும் ரிவாயத்து வந்ததாயிருக்கும். அவர்கள் சொன்னார்கள்: எனது நாயகம் ஷெய்கு அலிய்யுபுனுல் ஹைத்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னை யென் கையைப் பிடித்துக்கொண்டு நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்திற்குக் கூட்டிக்கொண்டு வந்து அவர்

களிடத்தில் இதாகிற தென்னுடைய பிள்ளையென்று சொன்னார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய சிறப்பான திரேகத்தி லணிந்திருந்த பரிவட்டத்தைக் கழற்றி யெடுத்தெனக் குடுத்தாட்டி ஆசீயத்தென்னுஞ் சட்டையைப் போட்டுக்கொண்டீரென் றென்னைப் பார்த்துச் சொன்னார்கள்.

ருவீ சொல்லுகிறார். அவர்களெனக்கந்தச் சட்டையைப் போட்டதுமுதலிதுவரையிலும் அறுபத்தைந்திவருஷமாகிறதுஇது மட்டிலும் நான் வருத்தப்படக் கூடிய ஒரு சொம்பலங்களுமென் பேரிலுண்டாகவேயில்லை யென்று சொன்னார். இன்னும் ருவீ சொல்லுகிறார். இன்னுமொரு தரம் ஷெய்கு அலிய்யுபுனுல் ஹீத்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்க ளென்னைக் கூட்டிக்கொண்டு நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்திற் சென்று அவர்களை நோக்கி நாயகமே இந்தப் பிள்ளைக் குங்களில் நின்றும் அந்தரங்கமான ஒரு வெகுமானத்தைத் தேடுகிறேனென்று சொன்னார்கள். அதுகேட்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய தலையை வெகுநேரம் வரையிலுங் குனிந்துக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்கையி லவர்களிடமின்று மொரு ஒளிவுத் துண்டானது ண்டாகிப் பறந்து வந்தென்னிடத்திற் சேரும்படியாகக் கண்டேன். அக்கணமே கபுறுளிகளையும், அவர்களுடைய ஹாலுகளையும் மலாயிக்கத்துமார்கள் அவரவர்களுடைய மக்காம்களில் தரிப்பதையுங் கண்டேன். இன்னு மவர்கள் பற்பலவிதமான பாஷைகளைக்கொண்டு அல்லாஹுத் தஆலாவை தஸ்பீஹு செய்வதையுங் கேட்டேன். இன்னு மந்த அந்த மனிதர்களுடைய நெற்றியின்மேரி லெழுதப்பட்ட வெழுத்துகளையும் வாசித்தேன். இன்னு மெனக்கு மகா பாரதூரமான கருமங்களைக் குறித்தாம் வெளிச்சமான கஷ்பாக வெளியாக்கப்பட்டது. அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க ளென்னைப்பார்த்து ஆகிறாவலாத்தகபு அதை யெடுத்துக்கொள் பயப்படாதே யென்று சொன்னார்கள். அப்போதவர்களைப் பார்த்து ஷெய்கு அலிய்யுபுனுல் ஹீத்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னைக்குறித்துக் காட்டி யெனது



நாயகமே யிவனுடைய அச்சு நீங்கிவிடுவதை நான் பயப்படுகிறேனென்று சொன்னார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய கையா லென்னுடைய நெஞ்சிலொரு அடியடித்தார்கள். அப்படி யடிக்கவே யென்னுடைய அந்தரங்கத்தில் நறயலைப்போ லொரு வஸ்து தரிபட்டிருக்கக் கண்டேன். அதினாலே நான் கண்டது கேட்டது யாதொன்றாகும் திடுக்கமாகிறதில்லை. நானிதுவரையிலும் அந்த ஒளிவுத் துண்டின் பிரகாசத்தால் ஆலமெலக் கூத்தினுடைய அருகை வெளியாக்கிக்கொண்டிருக்கிறேனென்று சொன்னார்கள்.

இன்னும் ருவீ சொல்லுகிறார். நான் பகுதாதுக்கு முதலாவது வந்ததில் அவ்விடத்தி லொரு விடத்தையும், ஒரு மனிதரையுமறியாமையால் வந்து அழகான வொரு மத்றசாவினளவி லொதுங்கினேன். அதாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மத்றசாவாயிருக்கும், அதி லக்நேரத்தி லென்னை யல்லாது வேறே யொருவரு மிருக்கவில்லை. அப்போது அப்துர் றஸ்ஸாக்கே நீர் போய் அவ்விடத்தில் யாரிருக்கிறதென்று பாருமென்று வீட்டுக்குள்ளிருந் தொருவர் சொல்லக் கேட்டேன். அப்படியே யவர்கள் வெளியில் வந்து பார்த்துக்கொண்டுபோய் உள் புகுந்து அவ்விடத்திலொரு நாட்டுப்புறத்துப் பையனே யல்லாது வேறொருவருமில்லை யென்று செய்தி அப்துர் றஸ்ஸாக்கு றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள். அதுகேட்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்த சிறு பையனுக்குப் பெரிய பாரதூரமான கருமமுண்டாகுமென்று சொன்னார்கள். அவ்விதம் சொல்லிவிட்டு ஜூட்டியும், வீஜிபனமு மெடுத்துக்கொண்டென்னளவில் புறப்பட்டு வெளியில் வந்தார்கள். அப்போது தான் நானவர்களைக் கண்டேன். அதற்குமுன் நானவர்களைக் காணவில்லை. அவ்விதமவர்கள் வரவே நானவர்களைக் கண்டவுடன் அவர்களை வலுப்பமாக்கி வைத்ததற்காக நானெழும்பி நின்றேன். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க ளென்னைப் பார்த்து ஓய் அலியே நீ யில்விடத்திலிருமென்று சொல்லி அவர்க ளெடுத்துக்கொண்டு

வந்த வஜீபனங்களை [illegible] முஹ்யித்தீன் அப்துல்கா திறு றலியல்லா ஹுவின் அல்லாஹு [illegible] கொண்டு பிரயோஜனஞ் செய்வாருகவுமென்று [illegible] சொல்லி மேலக் கொரு காலம் வரும், அக்காலத்தி [illegible] அப்போதுதான் நீர் அலியாவீர், [illegible] வீரென்று சொன்னார்கள் [illegible] அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன்ஹு அவர்களுடைய தஆப் பறக்கத்தினுலிருக்கிறேனென்று. றலியல்லாஹு அன்ஹு.

——(*)——

## 91-வது ஹிக்காயத்து.

——!!*!!——

தொண்ணூற்றோராம் ஹிக்காயத்தாகிறது ருஷ்பாதியாலும், சுயத்தாலும், மகா மேன்மைபொருந்திய கஸ்வினென்கிற ஷாரி இன்ன ஷெய்கு அபூஅப்துல்லா ஹுறி முஹம்மதுஸ்ஸிறபதி றலியல்லா ஹு அன்ஹு அவர்களும், ஷெய்கு அபூஇன்றுாக்கு இபுறாஹீ முபுனு அபீஅப்தில்லா ஹித்திபுறீ றலியல்லா ஹு அன்ஹு அவர் களும் பேசிவந்ததாயிருக்கும். அவர்கள் சொன்னார்கள், ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன்ஹு அவர்களு டைய கருமங்களாகிறது எல்லாத் தேசங்களிலும் பிரபல்லியமான பொழுது ஜீலான் பட்டணத்திலுள்ள ஷெய்குமார்களில் நின்று மூன்றுபேர்கள் சேர்ந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன ஹு அவர்களை ஸியாறத்துசெய்ய நாடி வந்து பகுதாதிற் புகுந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன ஹு அவர்களுடைய மத்றசாவுக்கு முஹி உத்தரவு தேடி மத்றசாவுக்குட் புகுந்தார்கள். அப்பொழுது ஷெ ய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன்ஹு அவ ர்கள் அவ்விடத்திலொரு கித்தாபைக் கையில் வைத்துக்கொண் டிருக்கவும், அவர்கள் உதூச்செய்கிற கெண்டியானது கிபுலைக் கல்லாத திசையில் முகந் திருப்பிவைக்கப்பட்டதா யிருக்கவும், காதி மாகிறவர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன்ஹு அவர்களுக்கு முன்னே சும்மா [illegible]



வுங் கண்டார்கள். அவ்விதங்கண்ட அந்த மூன்று பேர்களும் கெந்தலைக் கிபுலா மாறிவைத்திருப்பதினுலும், அதில்காதிம் நிறக் கேடு செய்திருப்பதாலும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன்ஹு அவர்களை யின்காறு செய்கிறவர்களைப் போல் சிலர்கள் சிலரளவிற் பார்த்தார்கள். அப்போதவர்கள் மூவர்களு மன்றி லெண்ணியந்த ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிறு றலியல்லா ஹு அன்ஹு அவர்களதிந்து தங்கள் கையி லிருந்தக் கித்தாபை மூடிவைத்துவிட்டு அந்த ஷெய்குமார்கள் மூவ ர்களளவிலும் பார்த்துவிட்டு காதிமளவிலு மொருதரம் பார்த்தார் கள், அவர்கள் அவ்விதம் பார்க்கவே காதிமானவரடித்துவிழுந்து மௌத்தாகிவிட்டார். அப்பாலந்தக் கெந்தலளவி லொருதரம் பார்த்தார்கள், உடனே யந்தக் கெந்தலானது தானுகச் சுற்றிக் கிபுலாவுக்குச் சரியாகத் திரும்பிவிட்டதென்று சொன்னார்கள்.

இன்னுமந்த ருவிகளிலொருவர் சொல்லுகிறார்கள். இன்னு மொருதரம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன் ஹு அவர்கள் தங்களுடைய மத்றசாவிலிருந்தார்கள். அப் போதவர்களிடத்தில் ஷெய்கு பக்கா றலியல்லா ஹு அன்ஹு அவ ர்களும், ஷெய்கு அபீய்யுபுனுல்ஹித்தீ றலியல்லா ஹு அன் ஹு அவர்களும், ஷெய்கு அபூசஃதில் கைலவீ றலியல்லா ஹு அன் ஹு அவர்களும், ஷெய்கு மாஜிதுல்குறதீ றலியல்லா ஹு அன் ஹு அவர்களுங் கூடியிருந்தார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித் தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன் ஹு அவர்களுடைய காதிமைப்பார்த்து ஸுபுறுவை விரிக்கும்படிக் கேவினார்கள், அவ் விதமே ஸுபுறுவை விரித்துக் கவுமுகளெல்லாம் வஜீபனித்துக் கொண்டிருக்கையில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலி யல்லா ஹு அன் ஹு அவர்கள் தங்களுடைய காதிமைப்பார்த்து நீயுங் கூடவிருந்து தின்னென்று சொன்னார்கள். அதற்கவர் நா யகமே நானேன்பா யிருக்கிறேனென்று சொன்னார். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா ஹு அன் ஹு அவர்கள் நீ தின்னு உனக்குன்னுடைய நோன்பின் தவாபு கிடைக் குமென்றார்கள். பின்னும் நான் நோன்பாயிருக்கிறேனென் றார். அதற்கும் நீ தின்னு உனக்கொரு கிழமை நோன்பினுடைய தவாபு கிடைக்குமென்று சொன்னார்கள், அப்போதும் நாயகமே

நான் நோன்பாயிருக்கிறேனென்றார். அதற்கும் நாயகமவர்கள் காதிமைப்பார்த்து நீ தின்னு உனக்கொரு மாதம் நோன்பு பிடித்த தவாபு கிடைக்குமென்று சொன்னார்கள். மறுபடியும் நாயகமே நான் நோன்பாயிருக்கிறேனென்றார். அப்போதும் நீ தின்னு உனக்கொரு வருஷத்து நோன்பின் பலன் கிடைக்குமென்று சொன்னார்கள் பின்னும் நான் நோன்பாயிருக்கிறேனென்றார். அதற்கும் நீ தின்னு உனக்குக் காலமெல்லாம் நோன்பு பிடித்த தவாபு கிடைக்குமென்று சொன்னார்கள். அதற்கும் நான்நோன்பாயிருக்கிறேனென்றார். அப்போது ஷெய்கு முஹ்றயித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மகாக் கோபத்துடன் காதிமை பார்க்கவே உடனே அவரடித்துவிழுந்து மையித்தாகி அவருடைய திரேகமும் ஊதி வெடித்து அதினிரத்தமும், சீழும் வடிந்தது. அப்போது அவ்விடத்திற் கூடியிருந்த ஷெய்குமார்களெல்லோர்களும் ஷெய்கு முஹ்றயித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் கெஞ்சி மன்றாடியந்த காதிம்பேரில் இரக்கமான சினத்தையாற்றினார்கள். அப்போதுஷெய்கு முஹ்றயித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கோபமாறவே யாதொரு பலாயுமில்லாமலந்த காதிமானவர் முன்னிருந்ததுபோலெழும்பி மீண்டார்.

—(*)—

## 92-வது ஹிக்காயத்து.

—:(,*'):—

தொண்ணூற்றிரண்டாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு அபுல்காசிம் உமறுபுனு மஸ்ஊதில் பஸ்ஸாஸ் றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும், அவர்கள் சொன்னார்கள் ஹிஜுறத்து ஐநூற்றிநாற்பத்தைந்தாம் வருஷம் வகுப்பமாக்கப்பட்ட றமலான் மாதம் முதல் தேதி பறக்கத்துச் செய்யப்பட்ட வெள்ளிக்கிழமை ஸுபுஹாகி விடிவேறுகுமே அப்போற்கொற்ற தலை நோன்பன் றாவில் நடுச் சாமத்தில் ஷெய்கு முஹ்றயித்தீன் அப்துல்காதிரில் ஜீலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய மத்றசா முஅதினை யழைத்து மனாறு



அளவிலேறி முதலொருதடவை பாங்கு சொல்லும்படி யேவினார்கள். அப்படியே அவர்களி னுத்தரவுப் பிரகாரம் பாங்கு சொன்னார். அப்பா லவ்விரவின் நேர மூன்றிலிருபங்கு சென்றொரு பங்கின் துவக்கமான பின்தின நேரத்திலிரண்டாவதொரு தடவை மனாறவிலேறி பாங்கு சொல்லும்படி யேவினார்கள். அவரப்போ தவ்விதமும் சொன்னார். பிறகு ஸஹறுடைய வக்த்தின் துவக்கத்தில் மனாறவிலேறி மூன்றாந்தடவையும் பாங்கு சொல்லும்படி கட்டளையிட்டார்கள், அவ்விதமுமவர் சொன்னார். பின்பொரு சாஅத்துக்குப் பிறகு ஸஹறு விஜீபாத் தின்னும்படி யழைக்கச் சொன்னார்கள். அவரவ்விதமே யழைத்தார். பின்னர் மறுநாளாகவே ஷெய்கு முஹ்றயித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தோழன்மார்களிற் சொந்தமானவர்கள் ஷெய்கு முஹ்றயித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் வந்து அப்படிச் செய்வித்த அகமியத்தைப்பற்றிக் கேட்டார்கள். அதற்கு ஷெய்கு முஹ்றயித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் திடனாக நான் முதல் பாங்கு சொல்லச் சொன்னநேரத்தில் அறுஷாகிறது குலுங்கிவிட்டது, அந்நேரம் அறுஷின் கீழிருந்து லியக்குமில் முக்கர்றபூனல்அதுயாறு தெரிதலான முக்கர்றபீன்க ளெழும்பித் தொழுவுமென்றொரு மலக்கு சப்தமிட்டார். நானிரண்டாவது தடவை பாங்கு சொல்லும்படிக்கேவினநேரத்தில் அறுஷானது முன் குலுங்கினதைக்காணக் கொஞ்சமாய்க் குலுங்கிவிட்டது. அந்நேரம் அறுஷின் கீழிருந்து லியக்குமில் அவுலியாவுல் அபுறாறு நன்றியுள்ள வலிமார்க ளெழும்பித் தொழுவுமென்றொரு மலக்கு சப்தமிட்டார் அப்பால் நான் மூன்றாந்தடவை பாங்கு சொல்லச் சொன்னபோது அல்லாஹுத்தஆலாவுடைய அறுஷானது முன் குலுங்கின இரண்டு தடவையைப் பார்க்கிலுங் கொஞ்சமாகக் குலுங்கிவிட்டது. அந்நேரத்தில் அறுஷின் கீழிருந்து லியக்குமில் முஸ்த்தஃபிறான பில்அஸ்ஹாறு ஸஹறு நேரங்களில் இஸ்த்திஃபாறு செய்கிறவர்க ளெழும்பித் தொழுவுமென்றொரு மலக்கு சப்தமிட்டார்.

ஆனதால் நானவ்விதம் செய்வித்ததுகொண்டு திடனாக இது தானுங்களுடைய வக்தென்று முந்தின பதவியுடையோர்களுக்கு இஷாறுச்செய்தேன், இரண்டாம் பதவியுடையவர்களுக்கு இஷாறா

உங்களுடைய வக்தென்று இஷாறுக் காட்டினேன், மூன்றும் பதவியை யுடையவர்களுக்கு இந்தா உங்களுடைய வக்தாயிருக்குமென்று இஷாறுக் காட்டினேனென்று திருவுளமானார்கள், றலியல்லாஹு அன்ஹு.

—(*)—

## 93-வது ஹிக்காயத்து.

தொண்ணூற்றிமூன்றும் ஹிக்காயத்தாகிறது றஹ்மானிடைத்தியாகிய காலத்துக் குதுபாகிய சிறப்பும், பெருமையுமான விருதுக்கொடிதாங்கிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குமாரர்களாகிய அஸ்லான வஹிப்பமுடைய ஷெய்குமாரர்களாகிய செய்யிது அப்துல்வஹ்ஹாபு றலியல்லாஹு அன்ஹு அவர்களையும், செய்யிது அப்துர்றஸ்ஸாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களையுந்தொட்டுப் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்களிருவர்களு மருளிசெய்தார்கள். ஹிஜ்றத்து ஐநூற்றி நாற்பத்திமூன்றும்வருஷம், றஜபு மாதம் இத்தாந்தேதி, வெள்ளிக்கிழமையன்று சஹறுடைய வக்தில் ஷெய்கு பக்கா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எங்கள் தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மத்றசாவில் வந்து நாளின்றையில் நேரத்தோடே இந்த மத்றசாவுக்கு வந்த காரணத்தைக்குறித்து என்னிடத்திற்றுங்கள் கேட்கவேண்டாமா, திடனாக நாளின்றிரவிலொரு வொளிவைக் கண்டேன். அந்த வொளிவைக்கொண்டிருந்த அகன்ற வெளியத்தின் கோணங்களெல்லாம் பிரகாசித்து ஆலத்தின் திசைகளெல்லாவற்றையு மடையவளைந்திருக்கிறது. அகமியக்காரர்களுடைய அகமியங்களெல்லா மவ்வொளியிலேயே போய்த்தரிபட்டிருக்கக்கண்டேன். அந்த ஸிர்அகளில்நின்றுஞ் சிலதுகளந்த வொளியுடனே சேர்ந்திருக்கிறது, இன்னுஞ்சிலதுகளை யவ்வொளியுடனே சேரவொட்டாம லிளைப்பிலொரு விலக்கமுண்டாயிருக்கிறது. இனி அந்த வொளியுடனே சேர்ந்திருக்கின்ற ஸிர்அகளொன்றுவது அதினொளி விரொட்டிப்போய்த் துலங்கியேயொழிய இருக்கவில்லை, அப்போதந்த வொளியானதுண்டாகி வருகிற



விடத்தைத் தேடிப் பார்த்தேன். அவ்வொளியாகிறது உங்கள் தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டுமுண்டாகிவருகிறது.

பின்பந்த வொளியுண்டாகிறவுள்ளமையைத்தொட்டும் வெளியாக்கித் திட்டவட்டமா யறியவேணுமென்று நாடிப் பார்க்கும்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஷுஹூதுடையவொளியானதவர்களுடையக் கல்பிலுளவுக் கெதிராக நின்று அவ்விரண்டொளிவு மொன்றோடொன்று கலந்து பிரகாசிக்கிறது. அந்த இரண்டொளியினுடைய பிரகாசமுமாகிறது அவர்களிருக்கிற ஹாலென்னுங்கண்ணாடியில் விழுந்து அந்த வொளியில்நின்று மொன்றுக்கொன்று கலந்துகின்ற நிலங்குஞ் சுடர்கள் அவர்களுடைய ஜம்உடைய நோட்டத்திலிருந்து. அவர்களுடைய பறுக்குடைய வருணிப்பளவிற்சேர்ந்து அதனால் ஆலமெல்லாம் பிரகாசமாகி ஒளிவாயிருக்கிறது. ஆகையா லன்றிரவில் ஒரு மலக்காவது பூலோகத்தின்கண்ணே யிறங்கியேயொழிய அவரவர்களுடைய தலங்களிருக்கவில்லை. அவ்விதமிறங்கி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் சென்றவர்களுடைய கைதொட்டு முத்தி சலாம் கொடுத்தேயொழிய மீளவில்லை. ஆனாலவர்களிடத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பெயராகிறது அஷ்ஷாஹிதுல் மஸ்ஊது என்றதாயிருக்கும். (அதின் பொருளாகிறது) ஷுஹூது செய்கிறவரும், ஷுஹூது செய்யப்பட்டவருமா யிருக்கப்பட்ட நாயகமென்பதாயிருக்குமென்று ஷெய்கு பக்கா றலியல்லாஹு அன்ஹு அவர்கள்சொன்னதாக ருவிகளிருவர்களும் சொன்னார்கள். இன்னுமந்த ருவிகளிரண்டுபேர்களும் சொல்லுகிறார்கள், ஷெய்கு பக்கா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லியபேலே கண்ட சங்கதிகளடங்கலையுங் கேட்டுக்கொண்டுடனே நாங்களிருவர்களு மெழுந் தெங்களுடைய தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தில் வந்து நாங்க ளவர்களைப்பார்த்துத் தாங்களின்றிரவில் றகாயிபுத் தொழுகை தொழுதீர்களாவென்று கேட்டோம். அதற்கவர்களிந்தப் பைத்துகளைச் சொன்னார்கள்.

பைத்து.

இதாநஸறத் ஐனீ உஜூஹூஹா றாபாஇபி
பத்தில்க ஸலாத்தீபி லயாலா றகாஇபி.

(இவைகளின் பொருள்கள்) எனக்கு ஹபீபான தோழர்களுடைய முகங்களை யென்னுடைய கண்ணானது பார்த்துக்கொண்டதானால் றகாயிபுத் தொழுகை தொழுகிற இரவுகளில் அந்தானென்னுடைய தொழுகையாயிருக்கும்.

பைத்து.

ஜுஹூன் இதாமாஅஸ் பறத்அன் ஜமாலிஹா.
அலாஅத் லஹூல் அக்வானு மின்குல்லிஜானிபி.

அந்த முகங்களாகிறது அவர்களின் வடிவுகள் தோயும்படி மறைவுகள் நீங்கி வெளிப்பட்டு வெருத்தானல் எல்லாத் திசைகளாலும் ஆலம்களெல்லாம் பிரகாசிக்குமே அப்பொழுதொற்ற முகங்களாயிருக்கும்.

பைத்து.

ஹாரிம்துர் ரிலா இன்லம் அக்துன் பாதிலாதமீ.
உலாஹிமுஷிஜ் ஜூனல்வகை பில்மஜுக்கிபி.

சமர்க்களத்திற் போர்பொருதும் படைவீரர்களைத் தோளென்னும் புயங்களைக்கொண்டு நெருக்கிக்கொண்டு போய் அவர்களுடைய உவப்பில் என்னுடைய உதிரத்தைக் குழப்பாமல் செய்து வழங்காதிருந்தேனையில் அவர்களுடைய பொருத்தமான தெனக்குப் பெறு கெட்டுப்போகும்.

பைத்து.

அஜூக்கு ஸூபல் ஆரிபீனை அஸ்மத்தி.
லஅல்லிய உஜ்தா பயுக்கத்தில்க்கல் மறாத்திபி.

ஆரிபீன்களுடைய அணிகளைத் திறமான கருத்தைக்கொண்டு அவர்களுடைய பதவிகள் சகலத்துக்கு மேலே யெனக்குப் பதவிப்படுமென்கிற ஆதரவு வைத்து மீளாது நீக்கிக்கொண்டேயானேன்.



பைத்து.

யமன்லம் யுவப்பில் ஹப்ப மாயஸ்த்த ஹிக்குஹு.
பதாகல்லதீ லம்யஃத்திக் கத்து பிவாஜிபி.

யாராவதொருவன் உவப்புக்குத் தகுமான கருமத்தை அதற்கு நிறைவேற்றி வைக்கவில்லையானால் அவன்தான் விதியான கடமைகளில்நின்று மொன்றையாவது அறவே கொண்டுவராதவனென்பதாம்.

——[*]——

## 94–வது ஹிக்காயத்து.

↔⟹*⟸↔

தொண்ணூற்றிநாலாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்குல்க் குத்வத்து அபுல்ஹஸன் அலியுல்க் குறஷீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும், பக்கீஹு அபுல்காசிம் முஹம்மதுபுனு உப்பாதத்துல் அன்ஸாரீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும் பேசி வந்ததாயிருக்கும் அவர்களிருவர்களுஞ் சொன்னார்கள். ஹிஜ்றத்து ஐநூற்றிஐம்பத்திமூன்றும் வருஷத்தில் நாங்களிருவர்களும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்தில் ஹாஜிறாயிருந்தோம். அப்படியிருக்கையில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் நாயகமே நாங்களுங்களைக் கொண்டுத் தொடர்ந்துக் கொள்வதற்காகத் தங்களிடத்திற் கேட்டுக்கொள்கிறோம். ஆகையால் தாங்களிந்தக் கருமத்தின் துவக்கத்திலுள்ள ஹால்களில்நின்றும், முடிவிலுள்ள ஹால்களில்நின்றும் தாங்கள் பெற்றுக்கொண்டதிற் கொஞ்சத்தை யெங்களுக்குச் சொல்லிக் காட்டுங்களென்று கேட்கப்பட்டது. அதற்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிந்தப் பைத்தைச் சொன்னார்கள்.

பைத்து.

அஷுக்கிபுன் பீமன்தக்ஸ்றப வஸ்புஹூ.
வமுஷுஸிபுன் லிபத்தன் தலாத்தப ஹுத்புஹூ.

காணுகிறது எவனுடைய வருணிப்புகள் மெத்தமுடுகுதலாயிருக்கிறதோ அப்பொழுதொற்றவனுடைய நன்கொடையில் மகா

அபேட்சையுள்ளவனுகவும், இன்னுமொரு கெட்டியான ஆண்மைதனமுடைய நாயகத்திற்கு அவர்களுடைய சொல், செயல் முதலிய ஹால்களடங்கலிலும் அவர்களைப் பின்றொடர்ந்து நேர்பட்டு நடக்கிறவனுகவும், அவர்களைப்போற்கொற்ற நாயகமானல் அவர்களுடைய கிருபையாகிறது கல்குகளிலெல்லாக் கிருபையைக் காணவும் மெத்த முடுகுதலானதாயிருக்கிறதே அப்போற்கொற்றவர்களென்றிந்த பைத்தைச் சொன்னார்கள். இந்தப் பைத்தில் முந்தின பாதி ஹக்குத் தஆலாவுக்கும், இரண்டாம் பாதி அவனுடைய றசூலாகிய நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்குமிஷாறாவாகயிருக்கும் இதின் வியாயாகிறது நபீ முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைப் பற்றிப் பிடித்துப் பின்றொடர்ந்து நடக்காமல் அல்லாஹுத் தஆலா அளவில் வாஸிலாவதற்கொருவராலு முடியாது, அவர்கள் வலிமார்களானாலுஞ் சரியே, நபிமார்களானாலுஞ் சரியே நாயக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வெளியாகிறதே யில்லாதிருக்கில் அல்லாஹுத் தஆலாவுடைய உலூஹிய்யத்தும், குத்றத்தும் வெளியாகாது. ஏனெனில் மறுத்தபத்துல் அமாவென்னும் இருண்ட இராவை, வஹ்தத்தாகிய ஹக்கிக்கத்து முஹம்மதிய்யாவென்னும் சூரியன்றான் வெளிச்சமாக்கி வைத்தது அந்த வொளியால்தான் எல்லா வஸ்துக்களு முண்டாச்சுது. அந்த வொளியே யில்லாவிடில் யாதொன்றுங் கிடையாது இதினுலேதான் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களாகிறது ஹக்கீகத்துக் குல்லிய்யாவென்று எல்லா வஸ்துக்களின் கருவாயிருக்குமென்று சொல்லப்பட்டது. அதுமல்லாமல் றசூல்மார்கள், நபிமார்கள், வலிமார்கள், மலக்குகள், அர்ஷு குர்ஸீ, லௌஹு, கலம், வானம், பூமி, மனு, ஜின் முதலிய சிருவ வஸ்துகளடங்கலும் நபீ ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய மேன்மையாகிய வொளியிலிருந்து மொரு கடுகுபோலவேயல்லா ததிகமில்லை. இன்னு மவர்களுடைய ஹக்கீக்கத்தைக் கண்டு பிடிக்கவும் அவர்களுடைய வரிசையை மட்டுப்படுத்தவும் ஹக்குத் தஆலா வொருவனேத்தவிர வேறொருவராலு முடியாது. அவர்களாகிறது ஹக்குக்கும், கல்குக்குமிடையில் வாஸித்தாவா யிருப்பதால் அவர்களைப் பின்பற்றியே அல்லாஹுத் தஆலாவுடைய ஹலறத்தில் வாஸிலாகவேனும். இந்த



மறுத்தபாவைக்குறித்துத்தான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களருளினது அவர்களைச் சொல்லிலும், செயலிலும், ஹாலிலுந்தொடர்ந்து நடந்த கிறப்பத்தாலெனக்குக் கிடைத்ததெல்லாங் கிடைத்ததென்று சொன்னார்கள். இன்னுஞ் சொன்னார்கள்.

பைத்து.

வமுடாவிலுல் உஷ்ஷாக்கிபி அஸ்றாரிஹிம்
மின்குல்லி மஃனன்லம் யஸஃனீக் கஷ்புஹூ.

இன்னும் அல்லாஹுத் தஆலாவுடைய ஹலறத்திற்பேராசை கொண்ட ஆஷிக்கீன்களெல்லோர்களும் அவர்களுடைய அகமியங்கள் முழுவதிலுங் கூட்டானவனுயிருப்பேன். அந்த அகமியங்களாகிறது வெளியாக்கிவிக்க விஸ்தீரணமில்லாப் பொருளடங்கலிலின்றுமாயிருக்கும். இன்னுஞ் சிலக் கித்தாபுகளில் வமுஆஷிலுல் உஷ்ஷாக்கியென்று ஐனுகக் காணப்படுகிறது, அதின்படிக்கு மஃனவாகிறது நானுகிறது அந்த ஆஷிக்கீன்களுக்கு அவர்களுடைய அகமியங்களில் எனக்கு வெளியாக்கிவைக்க விடமில்லாத அரிய பொருளடங்கலிலின்று மவர்கள் கொண்ட ஆசைக்குப் பதிலுபகாரமாக ஹக்குடைய சமுகத்திலின்று மெடுத்துக் கொடுக்கிறவனுயிருக்குமென்பதாம்.

பைத்து.

கத்க்காஸயுஸ்க் கிறுனீ மிஸாஜு ஷறாபிஹி
வல்யவ்ம யுஸ்ஹினீ லஜைஹி ஸிறபுஹூ.

திடனுக அவனுடைய கலப்பான ஆசைக் குடிப்பாகிறது எனக்கு மயக்கமுண்டாக்கிவிக்கிறதாயிருந்தது, இந்நாளில் அந்தக்குடிப்பிற் கலப்பில்லாத்தது அவனிடத்திற் றெளிவுண்டாக்கிவிக்கிறதாயிருக்கிறது.

பைத்து.

டஅகீபு அன்றஷ்தீ பிஅவ்வலிக்கத்றத்தின்
வல்யவ்ம அஸ்த்தஹ்லீஹி தம்மஉறப்புஹூ.

இன்னு மந்தக் குடிப்பிலொரு துளியைக்கொண்டே யென்னுடைய தேரான குணத்தைவிட்டு மறந்திடுவேன், இன்றைபி லந்

தக்குடிப்பு முழுவதையு மெத்த இன்பமாய்க்கண்டு எனக்கதிகச் சுகந்தரப்படுகிறதென்று சொன்னார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி அவர்கள் எங்கள் நாயகமே தாங்கள் நோன்பு பிடிப்பது போல்நாங்களும்நோன்பு பிடிக்கிறோம். தாங்கள் தொழுவதுபோல நாங்களுந் தொழுகிறோம், தாங்கள் தெண்டிப்பதுபோல் நாங்களுந் தெண்டிக்கிறோம். அப்படியிருக்க ஙுங்களுடைய ஹால்களில்நின்று மொன்றையும் நாங்கள் காணவில்லையேயென்று கேட்டார்கள். அதற்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நீங்கள் செய்யப்பட்ட அமல்களைக்கொண் டெனக்கு வந்து நெருங்குவீர்கள். ஆனாலெனக்குத் தரப்பட்ட நன்கொடைகளில் நீங்களெனக்கு வந்து நெருங்குவீர்களா, அது ஏலாது. ஏனெனில் எனக்கு அல்லாஹுத் தஆலாவில் நின்றும் உம்முடையபேரி லெனக்கிருக்கின்ற ஹக்கின்பொருட்டால் நீர் தின்னுமென்று சொல்கிறமட்டிலும் நான் தின்கிறதில்லை, இன்னுமவ்விதமாகவே ஆணையிட்டுக் குடியுமென்றுசொல்லுகிறவரையிலும் நான் குடிக்கமாட்டேன், இதுபோலென்னைச் செய்யுமென் றேவப்படமட்டிலுஞ் செய்கிறதில்லை யாதையாலென்று சொன்னார்கள்.

இன்னும் நஸீபீனென்கிற ஊரிலுள்ள ஷெய்கு அபூஹப்ஸு றஹிமஹுல்லாஹு அவர்கள் சொன்னார்கள், ஷெய்கு அஸ்கரு றலியல்லாஹு அன்ஹு அவர்களிந்தப் பைத்துகளைக்கொண்டு மிகுதயா யோதியோதி ஆசைபாவிக்கிறவர்களா யிருந்தார்களென்று. இந்தப்பைத்தில் வயகீபு ஙுஷ்துஹு அன்அவ்வலிக்கத்றத்தின் அந்தக் குடிப்பில் முந்தின துளியைப்பற்றியேயவருடைய நேர்மத்தியானது மறைந்திடுமென்றதாயிருக்கும். வல்லாஹு அஃலம் பிஸ்ஸவாப்.

—[*]—

## 95-வது ஹிக்காயத்து.

தொன்னூற்றைந்தாம் ஹிக்காயத்தாகிறது ஸாலிஹானஷெய்கு அபுல்அப்பாஸி அஹ்மதுபுனு முஹம்மதில்குறஷீ றலியல்லா



ஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும், அவர்கள் சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாகனத்திலேறி ஜாமிஉல்மன்ஸூறென்னும் பள்ளிவாசலுக்குப்போய் குதுபாத் தொழுதுவிட்டுமீண்டு, தங்களுடைய மத்றசாவுக்கு வந்து, தங்களுடைய பறகீகத்தான முகத்தைத் திறந்து, தங்களுடைய கையாலேயே தங்கள் நெற்றிக்குமேலிருந்தொரு நட்டுவக்காலியையெடுத்தெறிந்தார்கள், அது பூமிதுவிழுந்தது, அப்போததைப்பார்த்து செத்துப்போவென்றார்கள். உடனேயந்தநட்டுவக்காலி அவ்விடத்திலேயே செத்துப்போச்சுது. பின்பென்னைப்பார்த்து ஓய், அஹ்மதே திடனக இந்த நட்டுவாக்காலியானது நான் ஜாமிஉ பள்ளியிலிருந்து இவ்விடத்திற்கு வருகிறதற்கிடையிலென்னை அறுபது தரங் கொட்டினதென்று சொன்னார்கள்.

ராவீ சொல்லுகிறார் நானந்நேரத்தில் பகுதாதில் வந்திறங்கிய பஞ்சத்தால் மிடிமையையும், பிள்ளைகுட்டிகள் மிகுந்து சிலவழிவுகள் மிகுதமாயிருப்பதையும் பற்றி முறைப்பாடு செய்தேன் அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களெனக்கு மணிக் கோதுமைச் சாக்குப் பையொன்று தந்து இதைக்கொண்டுபோய் அவிழ்த்துக் குதிலிற் போட்டு வைத்து அதின் மேற் பக்கத்தை யடைத்துவிட்டு ஒரு பக்கத்தாலேயே திறந்தெடுத்தெடுத்து அரைத்து மாவாக்கி ரொட்டி சுட்டுத் தின்று வாருங்கள், அதைப் பேதகப் படுத்தவேண்டாமென்றருளிச் செய்தார்கள். ராவீ சொல்லுகிறார், நானதைக் கொண்டுபோய் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லிய பிரகாரமே செய்து நாங்களைந்து வருஷமதைக்கொண்டுதின்று வந்தோம். அப்படி வருகையில் ஒருநாளெனது பெண்சாதியானவளந்தக் குதிலை யடைத்திருந்த மேற் பக்கத்தாற் றிறந்துபார்த்தாள் அந்தக் கோதுமையானது முன் போட்டதுபோலவே சற்றுங் குறையாமலிருக்கக் கண்டாள். அப்பாலது முதலந்தக் கோதுமையானது ஏழுநாளைக்குள் செலவாகி யொழிந்துபோய்விட்டது. அப்போதிது செய்தியை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் சொல்லவே அவர்களென்னைப்பார்த்து நீங்களதைத்

திறந்து பாராமல் நான் சொன்னபடியே செய்து தின்றுவந்தீர்களானால் நீங்கள் மௌத்தாகுமளவுந் தின்று வருவீர்களென்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹு.

—[o]—

## 96-வது ஹிக்காயத்து.

தொண்ணூற்றாறும் ஹிக்காயத்தாகிறது வஹப்பமான பெரிய குருமார்களாகிய ஷெய்கு அபுல்ஹஸன் அலிய்யுபுனுல் ஹீத்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்கு மாஜிதுல் குர்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆக இந்த இரண்டுபேர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும், அவர்களிருவர்களுஞ் சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாலிபமாயிருக்கையில் அவர்கள் பகுதாதுக்கு வந்த துவக்கத்தில் ஒருநாள்தினம் ஆரிபீன்களுக்குக் கிரீடாதிபதியாகிய ஷெய்கு அபுல்வபா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் உபதேசாசனத்திலேறி மனிதர்களுக்கறிவு சொல்லிக்கொண்டிருந்தார்கள் அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களந்த மஜ்லிஸில் வந்து புகுந்தார்கள். அவ்விதமவர்கள் வந்து புகுதவே ஷெய்கு அபுல்வபா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாங்களறிவு சொல்வதை நிறுத்திவிட்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை அந்த மஜ்லிஸைவிட்டும் வெளியே போகும்படி சொன்னார்கள். அவர்கள் சொன்னபடியே அவர்களை வெளியே போகச் செய்து அக்களரியை விட்டும் புறத்திப் படுத்தப்பட்டது. பின்பு அபுல்வபா றலியல்லாஹு அன்ஹு அவர்களறிவு சொன்னார்கள். அப்போதாம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களந்த மஜ்லிஸில் வந்து புகுந்தார்கள். அப்பொழுதாம் ஷெய்கு அபுல்வபா றலியல்லாஹு அன்ஹு அவர்களறிவு சொல்லுகிறதை நிறுத்திவிட்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை அந்த மஜ்லிஸைவிட்டும் புறத்திப்



படுத்தும்படி யேவினார். அதுபோற் புறத்திப்படுத்தப்பட்டது. அப்பாலும் ஷெய்கு அபுல்வபா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவைத் துடங்கிச் சொன்னார்கள். அந்த மூன்றாந்தடவையிலும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களந்த மஜ்லிஸில் வந்து புகுந்தார்கள். அவ்விதமூன்றாந்தடவையிலும் வந்து புகுதவே உடனே ஷெய்கு அபுல்வபா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் குறுஸியை விட்டுக் கீழே யிறங்கிவந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கழுத்தைச் சேர்த்துக் கட்டியணைத்து அவர்களுடைய இரண்டு புருவத்திற்கு மிடையிற் பலதடவையாக முத்திக்கொண்டு பகுதாதிலுள்ளவர்களே நீங்களெல்லோர்களும் அல்லாஹுத் தஆலாவுடைய வலியாகிய இவர்களுக்கெழும்பி ஆசாரஞ் செய்யுங்கள் நானவர்களை யிந்த மஜ்லிஸைவிட்டுப் புறத்திப்படுத்தச் சொன்னதெல்லா மவர்களை இலேசாகக் கண்டதற்காகவல்ல, ஆகிலும் அவர்களுங்களுக்குச் சரியானவர்களல்ல, உங்களைக் காணப் பதவியாலுயர்ந்து பின்னுக்குக் குதுபுமார்களுக்கெல்லாம் குதுபாகி விடுவார்களென்று நீங்களெல்லா மறிந்துக்கொள்வதற்காக அவர்களை யுங்களுடைய களரியைவிட்டு வெளிப்படுத்தச் சொன்னேன். ஹக்காய் வணங்கப்பட்ட நாயனுடைய சிறப்பின்பேரி லாணையிட்டுக அவர்களுடைய சிரசில் சிற்சில கொண்டைகளிருக்கிறது அதின் பிரகாசங்களாகிறது எழுவான், படுவான் முதலிய எல்லாத்திசைகளையுங் கடந்திலங்கிறதென்று சொல்லிப் பின்பு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து ஓய், அப்துல்காதிறே யிக்கோங் கருமமெனக்கு இனிமேற் கருமமுமக்காகிவிடும். ஆனால் எல்லாச் சேவல்களுங் கூவும், கூவாமல் வாய் மூடியுமிருக்கும் உம்முடைய சேவலையே யொழிய அதாகிறது கியாமநாள் பரியந்தமுங் கூவிக்கொண்டேயிருக்கும், வாய் மூடாதென்று சொன்னார்கள்.

இப்படிச் சொல்லிவிட்டுத் தங்களுடைய முஸல்லாவையும், குப்பாயத்தையும், தஸ்பீஹுக் கோவையையும், குறுஸியையும், அஸாவையும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள், அப்போ

தவர்களுக்கு நஸீஹத்துச்செய்து அவர்கள் மீதறுதிமான மெடுங்
களென்று சொல்லப்பட்டது. அதற்கு ஷெய்கு அபுல்வபா றலி
யல்லாஹு அன்ஹு அவர்கள் அதாகிற தென்பேரிலில்லை அவர்
களுடைய மஹ்பூபாகிய மகுஸூம் கிளையிலுள்ள ஷெய்கு அலீயு
டைய மகனின்பேரிலாயிருக்குமென்று சொன்னர்கள்.

இமாம் அப்துல்லாஹில் யாபிஈ றஹிமஹுல்லாஹு அவர்
கள் சொல்லுகிறர்கள். நான் சொல்லுகிறேன், இதுகொண்டு
ஷெய்கு அபுல்வபா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாடின
தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்களுக்கு கிறுக்கா வுடுத்தாட்டிவைத்த ஷெய்கைத்
தான் ஆனல் அவர்களாகிறது மகுஸூம் கிளையிலுள்ள ஷெய்கு
அலீயவர்களுடைய குமாரர் ஷெய்கு அபூஸஈதில்மு பாறக் றலி
யல்லாஹு அன்ஹு அவர்களாயிருக்கும், அவர்கள் கிறுக்கா
வணிந்த சேர்மானத்தையும், அதிலுள்ள ஷெய்குமார்களையும்
(நஷ்றுர்றயாஹீன்) என்னுங் கித்தாபில் விபரமாகச் சொல்லியி
ருக்கிறேன், இன்தஹா.

ருவீ சொல்லுகிருர். ஷெய்கு அபுல்வபா றலியல்லாஹு
அன்ஹு அவர்கள் குறுஸி மீதேறி அறிவு சொல்லி முடிந்தபின்
பிறகு குறுஸியிலிருந்து கீழே யிறங்கிக் கடைசிப்படியி லிருந்துக்
கொண்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன் ஹு அவர்களுடைய கையைப் பிடித்தாயும், அப்துல்காதிரே
உமக்கொரு வக்த் துண்டாயிருக்கிறது அந்த வக்த்து வந்தாளுல்
இந்தக் கிழவனையும் நினைத்துக்கொள்ளுமென்று தங்களுடைய சங்
கையான தாடியைப் பிடித்துக்கொண்டு சொன்னர்கள்.

ஷெய்கு உமறுல் பஸ்ஸாஸ் றஹிமஹுல்லாஹு அவர்கள்
சொன்னர்கள், தாஜுல் ஆரிபீனுகிய ஷெய்கு அபுல்வபா றலியல்
லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்கா
திறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கொடுத்த தஸ்பீ
ஹுக் கோவையாகிற ஜெப்பேர்ப்பட்டதாளுல் அதை ஷெய்கு
முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்
பூமியில் வைத்தார்களே யாளுல் அது தானகவே ஒவ்வொரு மணி
யாகச் சுற்றுகிறதாயிருந்தது அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்



துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வபாத்தானதின்
பிறகு அந்தத் தஸ்பீஹுக் கோவையை நாயக மவர்களின் சிறு
வாலுடைய நாடாக் கரையிற் கோத்திருக்கக் கண்டேன். அவர்
களுக்குப் பிறகந்தத் தஸ்பீஹை ஷெய்கு அலியுபுனுல் ஹீத்தி
றலியல்லாஹு அன்ஹு அவர்க ளெடுத்திருந்தார்கள். அவர்க
ளுக்குப் பிறகு ஷெய்கு முஹம்மதுபுனுக்காயிது றலியல்லாஹு
அன் ஹு அவர்களெடுத் தோதிவந்தார்கள். ஷெய்கு முஹ்யித்
தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஷெ
ய்கு அபுல்வபா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கொடுத்த பின்
ஜாளுகிறது அதை யாராகிலு மொருவர் கைகொண்டு தொட்டா
லுடனே அவர்களுடைய தோளுக்கு மேலேறுகிறதா யிருந்தது.
றலியல்லாஹு அன்ஹு.

——(*)——

## 97-வது ஹிக்காயத்து.

——[*]——

தொண்ணூற்றேழாம் ஹிக்காயத்தாகிறது ஆரிபென்னு மகா
பெரியோர்களாகிய ஷெய்கு ஹம்மாதுத் தப்பாஸு றலியல்லா
ஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்
கும். அதாவது அவர்களிடத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்
காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய செய்தியைச்
சொல்லப்பட்டது. அந்நாள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்கா
திறு றலியல்லாஹு அன் ஹு அவர்கள் வாலிபமாயிருக்கிறர்கள்.
அப்போது ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்கள்
சொன்னர்கள். நான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு
றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சிரசின்மே லிரண்டு
கொடிகளிருக்கக் கண்டேன். திடனுக அந்த இரண்டு கொடிகளை
யும் இந்தப் பூமியைச் சுமந்துக்கொண்டிருக்கின்ற பஹ்மூத்தென்
னும் மீனிருக்கும்படியான பாதாளந் தொடுத்து மேல் மலக்கூத்
தளவும் நட்டப்பட்டிருக்கிறது இன்னும் மேலான கோணத்தில்
ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு
அவர்களுக்கு விலித்தீக்குமார்களுடைய பட்டங்களைச் சொல்லி
ஆகாயங்களிற் சப்த்தமிடும்படி கேட்டேனென்ருர்கள்.

இன்னும் பெரிய ஷெய்காகிய யூசுபுனு ஐயூபுல் ஹமதானீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டிருக்கிறது, திட்டகை அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள வாலிபமாயிருக்கையி லவர்களை நோக்கி அப்துல்காதிறே நீங்கள் மனிதர்களுக் கறிவு சொல்லுங்களென்று சொன்னார்கள். அதற்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எனது நாயகமே நான் அஜம் கட்டியுள்ள மனிதனாயிருக்கிறேன். நானெப்படிப் பகுதாதிலுள்ள நாகரீகர்களின்பேரி லறிவு சொல்வேனென்றார்கள். அப்போது ஷெய்கு யூசுபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி நீங்கள் பிக்ஹும், உஸூலுல்பிக்ஹும், கிலாபுகளும், நஹ்வும், லுகத்தும், குர்ஆனுடைய தப்ஸீருமான சருவ கல்விகளையும் பாடம்பிட்டுக் கொண்டவர்களாயிருக்க. எப்படி நீங்க ளறிவு சொல்லாதிருக்கிறது அது இணக்கமில்லை ஆகையால் உபதேசாசனத்திலேறி ஹதீது சொல்லுங்கள் திட்டகை நானும்மிலொரு வேரிருக்கக் காணுகிறேன். அதாகிறது பின்னுக்குப் பெரிய ஈத்த மரமாகுமென்று சொன்னார்கள்.

இன்னும் பெரிய ஆரிபான ஷெய்கு அபுன்னஜீபிஸ்ஸுஹ்றவர்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டிருக்கிறது அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கருமத்தில் ஷெய்கு அப்துல்காதிறாகிறது ஆலமுல் முல்கென்னும், ஆலம் ஷஹாதத்தி லதிகாரம் நடத்துவார்கள். இன்னும் ஆலமுல் மலக்கூத்தென்னும், ஆலம் கைபிலுமவர்களைக் கொண்டே வீறுபெறப்படும். இந்நேரத்திலுண்டான ஆலத்தில் தனித்திருக்கிறார்கள். இன்னுமவர்களாகிறது அவுலியாக்களுடைய கல்புகளிலும், ஹால்களிலும் அதிகாரங்கள் கொடுத்திருக்கிறார்கள். றலியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன்.

## 98-வது ஹிக்காயத்து.

தொண்ணூற்றெட்டாம் ஹிக்காயத்தாகிறது பெரிய ஆரிபான ஷெய்கு செய்யிது அஹ்மதுல்கபீறிபுனு அபில்ஹஸனிர் றபாஈ



றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டதாயிருக்கும், திட்டகை அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைக்குறித்து ஷரீஅத்தென்னுங் கடலாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வலதுபக்கத்திலிருக்கிறது. இன்னும் ஹக்கீக்கத்தென்னுங் கடலாகிறது அவர்களுடைய இடதுபக்கத்திலிருக்கிறது அவர்க ளந்த இரண்டு கடல்களில்நின்றுந் தாங்கள் நாடிய கடல்களி லள்ளி யெடுப்பார்களென்று சொன்னார்கள். இன்னுமவர்கள் மற்றவர்களுக் குத்தரவுசெய்தார்கள் நீங்கள் பகுதாதுக்குப் போனீர்களானால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை லியாறத்துச் செய்வதைக் காண வேறொருவரையும் முற்படுத்திக் கொள்ளவேண்டாம். அவர்கள் ஹயாத்தாயிருந்தாலுஞ்சரி, அல்லது அவர்கள் மௌத்தாகியிருந்தாலுஞ்சரி ஏனெனில் ஹாலுடைய பேர்களில் நின்றும் யாராகிலுமொருவர் பகுதாதுக்கு வந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை லியாறத்துச் செய்யாதிருந்தால் அவருடைய ஹால் பறிபட்டுப் போகுமென்றவர்களுக் கறுதிமானங் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள்.

இன்னும் ஷெய்கு அபூ அம்றா உதுமானுல்ஸரீபீனீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் ரிவாயத்து வந்திருக்கிறது அவர்கள் சொன்னார்கள் ஷெய்கு பக்கா றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்கு அலியுபுனுல் ஹீத்தீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்கு அபூ ஸஈதில் கைலவீ றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிய இவர்க ளடங்கலும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மத்றசாவுக்கு வந்து அதின் வாசலைத் தூர்த்துத் தெளிக்கிறவர்களாயிருந்தார்கள். இன்னும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய உத்தரவு கொண்டேயொழிய உள்ளே புகுதமாட்டார்கள். அவ்விதமுத்தரவின்பேரி லுள்ளே போய்ப் புகுந்தா லவர்களை ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க ளுட்காரச் சொல்வார்கள். அப்போ தவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்

துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து எங்கள் நாயகமே ஏதாவதொரு குற்றங்கள் வந்து நேரிட்டு எங்களுடைய ஹால்கள் பறிபட்டுப் போகாமல் இங்களா லெங்களுக் காமனங் கிடைக்கவேணுமென்று கேட்பார்கள். அதற்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களவர்களைப்பார்த்து நீங்கள் கேட்டுக்கொண்டபடி யுங்களுக் கமானமுண்டென்று சொல்வார்கள். அப்பா லவர்கள் தீட்சையானதபுடனே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய திவ்ய சமுகத்தி லுட்கார்ந்திருப்பார்கள். அந்த ஷெய்குமார்களில் நின்றும் யாரார் வந்திருந்தார்களோ அவர்கள்தான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஏறுவாகன மேறிப் புறப்படும்போது கொடியைத் தாங்கிக்கொண்டு சிலதூரம் நடக்கிறவர்களாயிருந்தார்கள். அப்போ தவர்களைப்பார்த்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நீங்கள் பெரிய மனிதர்களாயிருக்க நீங்க ளெனக்குக் கொடிப் பிடித்து வருகிறது சரியல்ல, ஆகையால் நீங்கள் பிடிக்கவேண்டாமென்று விலக்குவார்கள். அதற்கந்த ஷெய்குமார்கள் இப்போற்கொற்றைக் கொண்டுதான் வலுப்பமான சிறப்புள்ள அல்லாஹுத் தஆலா அளவில் முடுகுதல் பெறவேணுமென்று சொல்லிக்கொள்வார்கள். இன்னு மிருக்கி ராச்சியத்திலுள்ள ஷெய்குமார்களில் மிகுந்த பேர்களும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மத்றசாவின் வாசலுக்கு வந்து சேர்ந்தார்களே யானால் அந்த வாசற் படியைமுத்திக்கொள்வதை நானென்னுடைய கண்களாற் கண்டிருக்கிறேன். இன்னும் பகுதாதை யுடையவர்களில் குறிப்பான பெரியோர்கள் இந்த மஃனாவிற் பைத்துச் சொல்லவுங் கேட்டிருக்கிறேன்.

பைத்து.

தஸாஹு மத்தீஜானுல் முலூக்கி பிபாபிஹி.
வயக்துறு பீவக்த்திஸ் ஸலாமின் திஹாமுஹா,
இதாஆயனத்ஹு மின்பாதின் தறஜ்ஜலத்.
வபீன் ஹியலம் நபுஅல்த் தறஜ்ஜல ஹாமுஹா.



(இதின்பொருள்) ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வாசலில் இராஜாக்களுடைய கிரீட முடிகளெல்லாம் நெருங்கி வந்து அவர்களுக்கு ஸலாம் கொடுக்கும் நேரம் அந்த நெருக்கமானது மிகுதமாகிவிடும், இன்னும் அந்த விராஜாக்களெல்லாம் தூரத்திலிருந்து அவ்வாசலைக் கண்டார்களானவுடனே அவரவர்களுடைய ஏறுவாகனங்களை விட்டுக் கீழே யிறங்கிக் கால் நடையாக வருவார்கள். அவர்களப்படிச் செய்யாதிருப்பார்களாகில் அவர்களுடைய சிரசுகளே கால்களைப்போல் நடந்து வருமென்பதாம். றலியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன்.

## 99-வது ஹிக்காயத்து.

—:*:—

தொண்ணூற்றொன்பதாம் ஹிக்காயத்தாகிறது இறாக்கி ராச்சியத்திலுள்ள பெரிய ஆரிபான ஷெய்கு கலீபத்துப்னு மூசா றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதாயிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நானொருதடவை ஊருக்குப் பக்கத்திலுள்ள வெளி யூர்களுக்குப் புறப்பட்டு போயிருந்தேன், அப்போதொரு பெரியோர்களை ஆகாயத்திலிருந்துக்கொண்டிருக்கக்கண்டேன். நானவ்விதங் கண்டவர்களுக்கு ஸலாம் சொல்லவே உடனே அவர்களதற்கு ஜவாபு சொன்னார்கள். அப்போது நானவர்களைப்பார்த்து என்ன கருமத்தைக்கொண்டு தாங்களாகாயத்திலிருக்கப் பெற்றுக்கொண்டீர்களென்று கேட்டேன். அதற்கவர்களென்னைப்பார்த்துஓய், கலீபாவே காலபுத்துல்ஹவா பவுஸ்க்கின்து பில்ஹவாஇ யஃனீ ஹவா நபுஸுக்கு விகற்பஞ் செய்தேன் ஆனதாலென்னை ஹவாவென்னும் ஆகாயத்திற் குடியிருத்தப்பட்டதென்று சொன்னார்கள்.

றுவீ ஷெய்கு கலீபா சொல்லுகிறார். அதின் பிறகு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய மடத்திலிருக்கும்போது அவர்களை ஸியாறத்துச் செய்யவேணுமென்று நாடி வந்து பார்த்தேன், அப்போது ஷெ

ய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆகாயத் திடத்திலொரு கூடாரத்தின்மேலி லுட்கார்ந்துக் கொண்டிருக்கிறார்கள். நான் முந்தி ஆகாயத்திலிருந்துக் கொண்டிருக்கக் கண்டேனே அந்த மனிதர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு முன்னே மெத்தத் தாழ்ச்சிமையாக அதபுடனே உட்கார்ந்துக்கொண்டிருக்கிறார். அவ்விதமிருந்துக்கொண்டிருந்த மனிதர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடனே பழக்கம் பேசி ஹக்காயிக்குடைய இல்மில் நின்றுஞ் சில ஹக்கும்களைக் குறித்துக் கேட்டார். பின்பவர்க ளிரண்டுபேர்களும் ஞானங்களில் நின்றுஞ் சில பேச்சுகளைப் பேசிக்கொண்டார்கள் அதில் யாதொன்று மெனக்கு விளங்கவில்லை அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்க ளெழும்பிவிட்டார்கள். நானந்த மனிதரைக்கண்டு தனித்து நீங்க ளிவ்விடத்தில் வந்திருக்கிறீர்களே யென்ன செய்தியென்றவரிடத்திற் கேட்டேன். அதற்கவ ரென்னைப்பார்த்து ஓய் கலீபவே அல்லாஹுத் தஆலாவுக்குரிய தெரியப்பட்ட எந்த ஒரு வலியாவது, அல்லது முடுகுதலாக்கப்பட்ட எந்தவொரு ஹாபியாவது இவ்விடத்திற்கு அதாவது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்திற்கு வரத்துப்போக்காயிருந்து உதவிதேடிக் கொள்ளாத பேர்க ளொருவராவது கிடையாதென்று சொன்னார். பின்பு நானவரைப்பார்த்து நீங்க ளிருவர்களும் பேசிக்கொண்டதி லெனக்கு யாதொன்றும் விளங்கவில்லையே யென்று கேட்டேன். அதற்கவரென்னைப்பார்த்துத் திடனாகவொவ்வொரு மக்காமுக்குஞ் சிற்சில ஹக்கும்களுண்டு, ஒவ்வொரு ஹக்கும்களுக்கும் வெவ்வேறு பொருள்களுண்டு, ஒவ்வொரு பொருள்களுக்கும் வகைவகையான வாக்கியங்களுண்டு, ஒவ்வொரு வாக்கியங்களைக் கொண்டு அந்தப் பொருள்களைக் குறித்து வக்கணை சொல்லப்படும், அந்த வக்கணையை அதின் பொருளை யறிந்து விளங்கினவனல்லாதவன் விளங்கிக் கொள்ள மாட்டான். அந்தப்பொருளை அதின் தீர்ப்பைக்கொண்டு திட்டவட்டமா யறிந்தவனே யல்லாது எற்றுக் கொள்ளமாட்டான், அந்தத் தீர்ப்பைக்கொண்டு றூஹ் இஷாறுச் செய்யப்பட்ட மக்காமவிற் சேர்ந்தவனே யல்லாது திட்டவட்டமா யறிந்துக்கொள்



ளமாட்டாரென்று சொன்னார். பின்பு நானவரிடத்தில் நீரின்றையில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு முன்னே தாழ்ச்சிமையாயிருந்தது போலொருதடவையுங்காணவில்லையென்றுசொன்னேன். அதற்கவரென்னைப்பார்த்து ஓய் கலீபாவே யெனக்கு விலாயத்தும் தந்து அவுலியாக்களுடைய ஹால்களி லதிகாரஞ் செய்யத் தத்துவமும் தந்தவர்கள் முன்னே நானெப்படித் தாழ்ச்சிமையா யிராமலிருக்கிறதென்று சொன்னார்.

ருவீ ஷெய்கு கலீபா சொல்லுகிறார் திடனாக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அவர்களுடைய காலத்தார்களிலவர்களுக்குத் தாழாயிருக்கிற பேர்களில் நின்றும் அவுலியாக் களாயிருப்பவர்களிலுள்ள கரும முழுவதையு மவர்களுக்கே கொடுக்கப்பட்டது. அந்த அவுலியாக்களுடைய ஹால்களையும், அவர்களுடைய அகமியங்களையும் அடைய வளையும்படிக்குள்ள சாட்டுதலா யவர்களுக்கே சாட்டப்பட்டதென்று சொன்னார்கள்.

இன்னும் பெரிய ஆரிபான ஷெய்கு அபூ அப்தில்லாஹில்க் குறஷீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது அவர்கள்சொன்னார்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காலத்தார்களில் நாயகமாயிருப்பார்கள். இனி அவுலியாக்களோ அவர்களில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மெத்த மேலானவர்களாயும், மெத்த நிறப்பமானவர்களாயு மிருந்தார்கள். இனி உலமாக்களோ ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களில் மெத்த வறஃ உள்ளவர்களாயும், மெத்த ஸுஹ்துள்ளவர்களாயு மிருந்தார்கள். இனி ஆரிபீன்களோ அவர்களில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மெத்த அறிந்தவர்களாயும் நிறப்பமானவர்களாயு மிருந்தார்கள். இனி மஷாயிகுமார்களோ அவர்களில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மெத்த இடம்பாடுடையவர்களாயும், அல்லாஹுத் தஆலாவினளவில்

மெத்த ஞ்டுகுத் துடையவர்களாயு மிருந்தார்களென்று சொன்னார்கள்.

இன்னும் ஷெய்கு இபுறாஹீமுல் அஃறபு றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டிருக்கிறது அவர்கள் சொன்னார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறது திட்டவட்டமா யறிந்த பேர்களுக்கு ஷெய்காயும், ஸித்தீக்குமார்களுக்கு இமாமாயும் ஆரிபீன்களுக்கு தலீலாயும், ஆலமெல்லாம் படைத்தாள்கிற நாயனளவில் நடப்பவர்களுக்குத் தொடரப்பட்டவர்களாயு மிருப்பார்களென்று சொன்னார்கள்.

இன்னும் மகா பிரசங்கத்தை யுடைய ஆரிபென்னும் பெரிய ஷெய்கு அபூயஃஸல் மஃரிபீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்து வந்திருக்கிறது அவர்களாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹக்கில்ச் சொல்லியிருக்கிறார்கள். திடனாக எழுவான் பக்கமாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பொருட்டால் படுவானிலுள்ளவர்களைக் காண வரிசையாக்கிவிட்டது. திடனாக அவர்களுடைய அறிவுகளும், வங்கிஷங்களும் அவர்களின் முன்னோர்களைவிட்டுப் பெரிய தூலாம்பரமான பிரிவாகப்பிரித் தறிவிக்கிறதென்று சொன்னார்கள்.

இன்னும் பிரபல்லியமான மகா பெரிய ஷெய்கு அபூமத்யனில் மஃரிபீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டு மவர்களுடைய சிஷ்ஷ ஷெய்கு அபூஸாலிஹுத் தக்காலீ றஹ்மத்துல்லாஹி அலைஹி யவர்கள் பேசிவந்ததில் வந்திருக்கிறது ஷெய்கு அபூமத்யன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். நான் கிழுறு அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களைக் கண்டு சந்தித்து எனது காலத்தி லெழுவான், படுவான் முதலிய எவ்விடத்திலுமுள்ள ஷெய்குமார்களைப்பற்றிக் கேட்டேன். அதில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களையுங்குறித்துக் கேட்டேன். அதற்கு கிழுறு அலைஹிஸ்ஸலாத்துவஸ்ஸலா மவர்களென்னைப்பார்த்து அவர்களாகிறது ஐ



ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறது ஸித்தீக்கின்களுக்கு இமாமாகவும், ஆரிபீன்களான உலமாக்களுக்குத் தலீலாகவுமிருக்கும். இன்னுமவர்களாகிறது மஃரிபாவினுடைய றாஹாயிருக்கும், அவர்களுடைய கருமமாகிறது அவுலியாக்களிடத்தில் பரதேசித்தனம் அதாவது அவர்களைப்போலொரு வலி கிடையாதென்பதாயிருக்கும். இன்னும் நாளும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய இஷாறுவுக்குப்பின்னாலேதான் அவுலியாக்களுடைய பதவிகளுக் கதிகாரங்கொடுக்கிறேனென்று சொன்னார்கள், றலியல்லாஹுஅன்ஹும் அஜ்மஈன்.

## 100-வது ஹிக்காயத்து.

——:*:——

நூறும் ஹிக்காயத்தாகிறது பகுதாதிலுள்ள முபீதென் றறியப்பட்ட ஷெய்கு அபூர்ரிலா முஹம்மதுபுனு அஹ்மது றஹிமஹுல்லாஹு அவர்களைத்தொட்டும் பேசிவரப்பட்டதா யிருக்கும். அவர்கள் சொல்லுகிறார்கள். நான் குதுபுடைய ஸிபாத்தில் கொஞ்சங் கேட்கவேணும். அதை நாம் யாரிடத்திற் கேட்போமென்று வழி பார்த்துக்கொண்டிருந்தேன், அப்படியிருக்கும்போதி லொருநாளில் நானும், ஷெய்கு அபுல்ஜலீது அஹ்மது புனு அஸ்அதல் முக்றல் பகுதாதீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஜாமிஉர்றலாபாவென்னும் ஜும்ஆப் பள்ளிவாசலுக்குப்போனோம். அப்போதந்தப் பள்ளியில் ஷெய்கு அபூசஃதில் கைலவீ, ஷெய்கு அலிய்யுபுனுல் ஹீத்தீ றலியல்லாஹு அன்ஹுமா இவர்களிருவர்களையு மிருக்கக்கண்டோம். உடனே நான் முன்னினைத்திருந்த அந்தக் கருமத்தைப்பற்றி ஷெய்கு அபூசஃதிடத்திற் கேட்டேன். அதற்கவர்க ளென்னைப்பார்த்து இந்தக் கருமத்தின் தலைமைத்தனமாகிறது குதுபளவிலேயேதான் முடியும், குதுபாயிருக்கிற நோத்தி லவரிடத்திலேயேதான் இந்தக் கருமத்தினுடைய வல்லபத்தின் பிரயாணச்சாமான்களெல்லாங் கொண்டு வந்திறக்கப்படும், அவருடைய காலத்திலிருந்த ஆலத்தின் கருமம், இந்த ஆலத்தையுடையோர்களின் கருமம் சகலத்தையு மவர்

விலேயேதான் கொண்டுபோடப்படுமென்று சொன்னார்கள். அப்
போது நானவர்களிடத்தில் அந்தக் குதுபானவர்க ளிப்போது
யாரென்று கேட்டேன். அதற்கவர்க ளென்னைப்பார்த்து அவர்
கள்தான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
அன்ஹு அவர்களா யிருக்குமென்று சொன்னார்கள். அவர்க
ளப்படிச் சொல்லவே யென்னாற் சுணங்க ஏலாமல் நானிருந்த
விடத்தைவிட்டுங் குதித்தெழும்பினேன். அதுகண் டவர்களெல்
லோர்களுங் குதித்தெழும்பி ஷெய்குமுஹ்யித்தீன் அப்துல்காதிறு
றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸுக்குப் போக
வேணுமென் றெல்லோர்களும் ஒருவருக்கொருவர் முந்தாமலும்,
பிந்தாமலும், பிரிந்துபோகாமலும் நடந்தோம். ஆனால் எங்களி
லொவ்வொருவருக்கு மந்தப் பொருளிற் கொஞ்சங் கேட்டுக்
கொள்ள மெத்த அபேக்ஷையுண்டாகினதால் நாங்கள் போய் ஷெ
ய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவ
ர்கள் அறிவு பேசிக்கொண்டிருக்கும்போது அவர்களிடத்திலாகி
நாங்களெல்லோர்களும் உட்கார்ந்திருந்தோம்.

அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்
லாஹு அன்ஹு அவர்கள் பேசிவந்த அறிவுகளை நிறுத்திவிட்
டுச் சொன்னார்கள். வருணிப்பவன் குதுபுடைய வருணிப்பை
யெப்படி யெற்றிக்கொள்ளப்போகிறான். ஆனால் ஹக்கீக்கத்தில்
நடக்கும் ஒரு பாதையுமிராது. அதில் குதுபுக்குக் கெட்டியான
ஒரு எட்டுக்குந் தலமுண்டாயிருந்தேயொழிய, இன்னும் விலாயத்
தில்நின்று மொரு பதவியுமிராது. அதிலந்தக் குதுபுக்குத் தரிபா
டான ஒரு கால் வைக்குந் தலமுண்டாயிருந்தேயொழிய, இன்னும்
முடிவிலொரு மக்காமுங் கிடையாது, அதிலந்தக் குதுபுக்குக்
கெட்டியாக நடமாடுந் தலமிருந்தேயொழிய, இன்னு முஷாஹதா
விலொளிவுக ளிறங்கிறதுமில்லை, அதிலந்தக் குதுபுக்குச் சரான
மான குடிப்புத்துறை யொன்றிருந்தாலேயொழிய, இன்னும் ஹக்
குடைய ஹழ்றத்தில்நின் றுமொரு கருமத்தில் ஒரு மிஃறாஜுண்
டாகிறதில்லை, அதிலந்தக் குதுபுக்கு மேலாம்பரமான நடையுண்
டாகியேயொழிய, இன்னும் ஆலம்முல்கிலும், ஆலமலக்கூத்திலும்
ஒரு கருமமும் நடக்கிறதில்லை, அதிலக்தக் குதுபுக்குத் தெளிவான
கஷ்புண்டாயிருந்தேயொழிய, இன்னும் ஆலம் கைபிலும், ஆலம்



ஷஹாதாவிலும் ஒரு அகமியங்களுமுண்டாகிறதில்லை, அதிலந்தக்
குதுபுக்கு எட்டிப்பார்க்குத லுண்டாயிருந்தேயொழிய, இன்னு
மொரு வுள்ளமைக்கும் வெளியாகும்படியான ஒருதுறை கிடை
யாது, அதிலந்தக் குதுபுக்குக் கூட்டுண்டாகியேயொழிய, இன்னுந்
தத்துவங்களுக்கொரு செய்கையும் நடக்காது, அதிலந்தக் குது
புக்கு அந்தரங்கமான பெலனுண்டாயிருந்தேயொழிய, இன்னு
மொரு ஞானங்களுங் கிடையாது, அதிலந்தக் குதுபுக்கொரு மூச்
சுண்டாயிருந்தேயொழிய, இன்ன முன்னுகிறவனுக்கொரு வழியுங்
கிடையாது, அந்தக்குதுபு அந்த வழியின் முடிவைக் கையிற்
பிடித்துக்கொண்டேயொழிய, இன்னும் வாலியானவனுக்கு
ஒருமுடிவுங் கிடையாது. அந்தக் குதுபு அந்த முடிவின் முடி
வை யுடையவரா யிருந்தேயொழிய, இன்னும் ஒரு சங்கை
யான கருமமுமிராது. அந்தக் குதுபை யதினளவில் மாப்
பிள்ளையாகப் பேசப்பட்டே யொழிய, இன்னு மொரு பதவியுமி
ல்லை யந்தக் குதுபை யந்தப் பதவி யளவிலிழுக்கப்பட்டே யொ
ழிய, இன்னு மொரு மூச்சும் போகாது அதிலந்தக் குதுபு ஹக்கு
க்கு மஹ்றூபாயிருந்தே யொழிய, இன்னும் குதுபாகிறவர் சொல்
லாதற்கரிய சிறப்புக் கொடியைச் சுமந்தவர், இன்னும் குத்றத்
தென்னும் வாளை யுருவிக்கையில் வைத்திருப்பவர், இன்னு மக்
கோரத்திற்குரிய ஆலமுழுவதிலுந் தீர்ப்புச் செய்பவர், இன்னு முவ
ப்புடைய ஜனங்களடங்கலுக்கும் சுல்த்தானானவர், இன்னும் உத்
தியோகங்களைக் கொடுக்கவும், கொடுத்ததை யெடுக்கவுமுள்ள கட்
டளைச் சட்டத்தை யுடையவர் இன்னு மவருடை னென்றுமிருந்த
வன் ஹூதேவியாகமாட்டான், அவர் ஷுஹூது செய்யப்பட்டது.
அவனைவிட்டு மறையாது, அவருடைய ஹாராகிறது அவரைவிட்
டுப் போகாது, அவருடைய அகப்பார்வையென்னும் அம்பை
யெறிந்த எல்லைக்கு மேலே மற்றுமுள்ள அவுலியாக்களுக் கெறி
யும் எல்லை கிடையாது. இன்னு மவர் சூழ்ந்தறிந்த விடத்திற்கு
மேலே சூழ்ந்தறியும்படியான வொரு தலமுங் கிடையாது, அவ்
வருடைய பொருளுக்கு மேலொரு பொருளுங் கிடையாது, அ
வருடைய வுஜூதைக் காண நிறப்பமான வுஜூதுங் கிடையாது,
அவருடைய ஷுஹூதைக்காண வெளியான ஷுஹூதுங் கிடை
யாது, அவர் ஷறனைறத் தொடர்ந்து நடப்பதைக் காணவேறொரு
வர் தொடர்ந்து நடக்கமாட்டார்கள்.

இன்னும் திடனாகக் குதுபானவர், வெளியானவர், சேர்ந்தி
ருப்பவர், பிரிந்திருப்பவர், பூமி யளவிற் சேர்க்கப்பட்டவர், வா
னத்தளவிற சேர்க்கப்பட்டவர், தய்மை யளவிற் சேர்க்கப்பட்ட
வர், கையளவிற் சேர்க்கப்பட்டவர், ஹக்குக்கும், கல்குக்கும் நடு
வானவர், ஹக்குக்குச் சொந்தமானவர், அவருடைய அகமியங்
களைக்கண்டுபிடிக்க அரிதான அகமியமானவர், இன்னுமவருக்குக்
குதறத்துண்டு அதினளவிற் போய் முடிவு காண்பார், இன்னு
மவருக்கொரு வருணிப்புண்டு, அதிலே யவர் மட்டுண்டிருப்பார்,
அவர் பேரில் கடமையான விதி விலக்கு மவருக் குண்டாயிருக்
கும். இன்னுந்திடனாக குதுபாகிறது அநாதியின் பார்வைகள் விழுந்
துறைகளில் அவர் ஜம்ஆயிருக்குமிடத்தில் மருவுதலுக்கும், நிடுக்
கத்திற்கு மிடையில் பிரித்தலுடைய கண்ணுக்கு மறைந்தவர், இன்
னுமந்தக் குதுபாகிறவர் ஹாலுடைய குணங்கள் நீங்குவதுடனே
யும், மக்காமுடைய வருவணிப்புகள் விதியாயிருப்பதுடனேயும்
ஜமாலுடைய முச்சுகளுக்கும், ஜலாலுடைய இரெட்டிப்புகளுக்கு
மிடையிலுள்ள வியாத்துக ளொன்றுக்கொன்று விகறபமாயிருக்
கிறதற்காக வேண்டி முஷாஹதாக்களுடைய பணறுகளில். அவர்
பறுக்கிலிருக்கிற இடத்திற் பிரிந்திருப்பதுகொண்டு வெளியானவர்
இன்னுமவர் அகமியங்களைக்கொண்டு தனித்திருப்பதற்கு அவர்
தான் வாசற் காவலாயிருப்பவர், அவர் தன்னுடைய சிறப்பின்
பேரில் வெளியானவர், அவர் திஷ்ட்டாந்தரங்கள் கொண்டு வெளி
யாகிறது அவருடைய தீர்மானிப்பு அல்லாஹுத் தஆலாவின் வெ
ளுடன் சேர்ந்திருக்கின்ற மறைவிலாயிருக்கும். அப்படி யில்லாத
வரையி லவர் விரிவாக வெளியாவதற்குத் திராணியில்லை, கைப்
பற்றுதலின் பிடியில் நின்றும் அவர் எவ்விடத்திலே யென்ன வெ
ன்ன தேடப்படும்படியான விடத்திற் காரிய கருத்தராயிருப்பார்
திடனாக ஆலமுல்கில் நின்றும், ஆலம் ஹுக்மத்தில் நின்றும், ஆலம்
கையில் நின்றும், ஆலம் குத்றத்தில் நின்றும் ஒரு வஸ்த்தாகிறது
திரையென்னுந் தலையிலும், குறிப்பென்னு மிஷாறுவிலும், மட்
டுப் படுத்துதலென்னும் கைதிலுமே யொழிய வெளிப் படமாட்
டாதென்கிற தில்லாதிருந்தா லிந்தக்கருமத்தில் நின்றும் அதாவது
குதுபுடைய கருமத்தில் நின்றும் ஆலத்தார்களெல்லா மகா புது
மையைத் தெரிசிப்பார்கள்,



இன்னும் திடனாக அந்தக் குதுபுடைய தகைமையும். வகை
யையும், துவக்கத்தையும், ஒடுக்கத்தையும் தெளிந்து வடித்துத்
திருமணியாக்கப்பட்ட முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்
லமவர்களுடைய இடவிதானமெனும் தம்கீனுடைய ஓரங்களிற்
சுறுண்டதாயும், அவருடைய முத்திரை வைக்கப்பட்ட குடிப்பா
கிறது நபீ ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய பெஹுத
லென்னு முயர்த்தியான விடைகளின் தஸ்னீமுடன் கலக்கப்பட்ட
தாயும் அந்தக் குதுபுக்குக் கிடைத்ததெல்லாம் நபீ ஸல்லல்லாஹு
அலைஹிவஸல்லமவர்களுடைய ஏவலின் கைப் பற்றுதலுக்குள்
முன்னேக்குவதாலும், பிற்காட்டுவதாலும், ஜம்ஹென்ற ஒற்றுமை
யாலும், பறுக்கென்ற வேற்றுமையாலும், மட்டுப் படுத்தப்பட்ட
தாயு மிருப்பதில்லாதிருந்தால் கட்டளையென்னும் அம்பாகிறது,
முடிவென்னு மோடித்திரிவானைக் கிறிக்கிழித்துவிடும். அப்போது
இஷாறுச் செய்யப்பட்ட இந்தக் கருமத்திற்கு ஒரு நாவைப் படை
க்கப்பட்டிருக்குமாகில் அனேக ஆச்சரியங்களைக் கேட்பீர்கள்.
இன்னுமனேக அதிஜயங்களைப் பார்ப்பீர்களென்று சொல்லிவிட்
டுப் பின்பிந்தப் பைதுகளைச் சொன்னார்கள்.

பைத்து:

மாபிஸ்ஸபா பத்திமன் ஹைவுன் முஸ்த்தகீ தஹுபுன்.
இல்லாவலீ பிஹில் அலத்துல்அத்யபு.

ஹக்கின்பேரிற் கொண்ட ஆசையால் மதுரமாய்க் காணப்பட்ட
குடிப்புத்தலமாகிறது ஒருவருக்குமுண்டாயிருக்கிறதில்லை, அந்தக்
குடிப்பின் தலத்தில் மெத்த மணங்கொண்ட இன்பமான குடிப்புத்
தலமெனக் குண்டாயிருந்தேயொழிய.

பைத்து.

அவுபில்வி ஸாலிமக்கானத்துன் மதுலஃறுஸத்துன்
இல்லாவ மன்ஸிலத்தீ அஅஸ்ஸு வஅக்றபு.

அல்லது அல்லாஹுத் தஆலாவுடைய சேர்மானத்தி லொரு
வருக்கும் ஒரு சொந்தமாக்கப்பட்ட பதவியொன்றுண்டாகிறதில்
லை யெனக்குச் சொந்தமாய்க் கிடைத்த பதவியாகிறதந்தப் பதவிக
ளடங்கலிலும் மெத்தச் சிறப்பானதாயும், மெத்த முடுகுதலான
தாயு மிருந்தேயொழிய.

பைத்து.

வஹபத்லியல் அய்யாமு றவுனக்க ஸவுபிஹா

பஷுலாமறுஹிவு ஹாவத்தாடல் மஷ்றபு.

திடனாக நாட்களாகிறது அதின் தெளிவிலும் அழகான தெளிவை யெனக்கு நன்கொடையாகத் தந்துவிட்டது. ஆனதாலதிலெனக்கு வாய்த்த குடிபடுத்துறைகள் மெத்த மதுரமாயும், குடிப்பு மெத்த மணமாயும், மனம்போற் குடிக்கச் சாரளமாய்விட்டது. இன்னுஞ் சிலநேரங்களிலிந்த நாட்களென்ற சொல்லால் அல்லாஹுத் தஆலாவுடைய தஜல்லியாத்துகளை நாடிச்சொல்லவுங்கூடும். அல்லாஹுத் தஆலா குறுஆனில் திருவுளமாயிருக்கிறதுபோல அல்லதீன லாயறு ஜூனஅய்யாமல்லாஹி இதுகொண்டு ஹக்குத் தஆலா நாடுகிறான், அல்லாஹுத் தஆலா தங்கள்பேரில் தஜல்லியாவானென்று ஆதரவு வைக்காமாட்டார்களே அவர்களை நாடுகிறான், அவர்கள்தான் காபிறானவர்கள் ஏனெனலந்தக் காபிறுகள்தான் அல்லாஹுத் தஆலா இல்லையென்கிறதும், இன்னுமவர்கள் அல்லாவுண்டுமென ஈமான்கொள்ளமாட்டார்கள், ஒருவனொருவஸ்தை அல்லத்தட்டி அதை யில்லையென்று சொல்வானேயானால் அவ்வஸ்தவனுக்கு வெளியாகுமென்றுதாவு வைக்கவேமாட்டான். இவ்வம் திடனாக நீயறிந்துக்கொள், ஹக்கு ஸுபுஹானஹுவத்தஆலா அவன் நாடியவிதம் ஒரு அடியான்பேரில் தஜல்லியாலானேயானாலந்த தஜல்லியை ஹக்களவிற் சேர்த்துப் பார்க்கிறதுகொண்டு ஷஃனுன் இலாஹீ நாயனளவிற் சேர்ந்த கருமமென்று பெயர் சொல்லப்படும். அந்த தஜல்லியை அப்தளவிற் சேர்த்துப் பார்க்கிறதுகொண்டு ஹாலென்று பெயர் சொல்லப்படும். இனியந்த தஜல்லியானது அதின்பேரில் தீர்ப்புச் செய்து அதையுண்டாக்கியது ஒருவேளை அல்லாஹுத் தஆலாவுடைய அஸ்மாக்களில்நின்றுமொரு இஸ்மாக, அல்லது அவனுடைய ஸிபாத்துகளில்நின்றும் ஒரு ஸிபத்தாக இருப்பதைவிட்டும்ஒழியமாட்டாது, ஆகையாலந்த தஜல்லியைப் பெற்றுக்கொண்ட வலியுடைய ஹாலின்பேருகிறது அவர்பேரில் வெளியான இஸ்முதானாயிருக்கும். அப்படியிருப்பதால் ஷெய்கு முஹியித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சொல்லின் கருத்தாவது ஹக்குத் தஆலாவுடைய ஹறுறத்தில்நின்றும் தங்களுக்



குக் கிடைத்த தஜல்லியாகிறது மற்றக் குதுபுமார்களாகிய அவர்களுக்குங் கிடைத்த தஜல்லியாத்துகளெல்லாவற்றிலும் மெத்தத் தெளிவானதுமாய், மெத்த அழகானதுமாயிருக்குமென்பதற் கிடமாகிறது இந்தப்படிக்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களருளிச்செய்த வேறே சிலக்கஸீதாக்களில் வருகிறது அந்தக் கஸீதாக்களிற்சிலதை கன்ஸுல்அபுகம், பீமனுக்கிபிகவதுல் அஃலமென்னும் அரபித்தமிழ் கித்தாபிலுரை செய்யப்பட்டிருக்கிறது.

பைத்து.

வகதேளத்து மகுத்துபாலிக்குல்லிக் கரீமத்தின்

லாயஹ்த்ததீ பிஹலல்லபீபு பயகுத்துபு.

(இதின் பொருள்) இன்னும் நானந்தக் கன்னிஸ்திரியடங்கலுக்கு மணவாளராய்ப் பேசப்பட்டவனாக ஆகிவிட்டேன், அந்தக் கன்னிஸ்திரிகளைப் பெண்பேசுவதில் மதிவல்லவர்களாகிய மாப்பிள்ளைமார்கள் நேர்வழிபெற்று பெண் பேசிக்கொள்ளமாட்டார்களென்று (இதின் கருத்தாவது) குதுபுமார்கள் தேடித் தெண்டித்துக் கேட்டாலும் பெற்றுக்கொள்ள அரிதான பதவிகளெல்லாவற்றையும் நான் கேளாதிருக்க என்னைவலிய அழைத்து வேணுமாவென்று கேட்டு பெற்றுக்கொள்ளென்று தரப்பட்டது, ஆகையால் யெனக்குப் பிரியமானதை யெடுத்துக்கொண்டேன், பிரியமில்லாததை விட்டுவிட்டேனென்பதாம்.

பைத்து.

அனுமின் ரிஜாலின்லா யகாபு ஜலீஸுஹு

ரித்தமஸ்ஸமானிவலா யுஹுமா யற்ஹபு.

(இதின்பொருள்) நானாகிறது சில மனுடர்களில் நின்றுமுள்ளவன் எப்போதும் அவர்களோடு கூட இருந்தவன் எப்போற்கொற்ற ஆண்பிள்ளைகளானவர்கள்கூட இருந்தவன் காலவிரோதத்தைப் பயப்படவுமாட்டான். தான் பயப்படக்கூடிய கருமத்தைக் காணவுமாட்டானே அப்போற்கொற்ற மனுடர்களென்று. இதுகொண்டு நாட்டமாகிறது முக்கர்றபீன்களாயிருக்கும். ஏனெனில் இன்ஸானாகிறது முஹ்யித்தீனிபுனு அறபி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் புஸுஸிலில்ச் சொன்னபடி

மூன்று பங்காயிருக்கும். அதில் முதலாவது இடக்கையார், அவர்களாகிறது துன்யாவுடைய ஹயாத்தில் பஹிரங்கமான கருமங்களை யறிவார்களே தவிர வேறேயொன்றையுங் கவனிக்கமாட்டார்கள். அவர்கள் ஆகிறத்தை மறந்து கிடப்பார்கள், அவர்களுடைய நாட்டமும், தேட்டமும் துன்யாவுடைய வெளியரங்கமான நடப்பேயல்லாது வேறில்லை, அவர்களுடையக் கல்புகளாகிறது ஆகிறத்துடைய பதவிகளளவில் முகம் வைப்பதைவிட்டு மறந்ததாயிருக்கும். இனி யாராகிலுமொருவனுடைய இருதயமானது அல்லாஹுத்தஆலாவைவிட்டுப் புறக்கணித்து, மேலான பதவிகளையும், ஆகிறத்துடைய தறஜாத்துகளையு மறந்திருக்குமாகில். அவனாகிறது அஸ்ஹாபுஷ்ஷிமாலென்னு மிடக்கையாரிலுள்ளவனாயிருப்பான்.

இரண்டாவது அஸ்ஹாபுல்யமீனென்னும் வலக்கையாராயிருக்கும், அவர்களுடைய துணிகரங்களெல்லாம் ஆகிறத்துடைய ஆஸ்திகளும், சொற்கத்துடைய தறஜாத்துகளுமாயிருக்கும், அவர்கள் துன்யாவிற் பாடுபடுகிறதெல்லாம் ஆகிறத்துக்கு வேறு மென்றே அல்லாது வேறல்ல, இவர்கள்தான் சொற்கம் புகுகும் முஃமீன்களாயிருக்கும்.

இனி மூன்றாவது முக்கர்றபீன்களாயிருக்கும். அவர்கள்தான் துன்யாவின் வாழ்விலும், ஆகிறத்தின் பதவிகளிலும் அபேட்சை வைப்பதை ஹறாமாக்கிக்கொண்டவர்கள் ஏனெனி லவர்களுடைய இருதயங்களாகிறது நாயனளவிற் சேர்க்கப்பட்ட கண்ணாடிகளாகவும், நப்புடைய தஜல்லியாத்துகள் வெளியாகுந்தலங்களாகவுமிருக்கும், ஆகையாலவர்கள்தான் அகத்தெரிசனங்களுக்கும், முகத்தெரிசனங்களுக்குந் தகுமான நாதாக்கள், இன்னுமவர்கள்தான் யக்கீன்கொள்வதற்கும், கஷ்புகளுக்குமுடையவர்கள். இன்னுமவர்கள் துன்யாவையும், ஆகிறத்தையுஞ்சேர்ந்த தறாத்துகளென்னும் பலனைக் காண்பதால் உண்மையில் ஹக்குடைய வஹ்தத்தின் வடிவென்னும் ஜமாலைத் தெரிசிப்பதைவிட்டு மறக்கமாட்டார்கள். ஆதலாலிந்த மேலான கூட்டத்தார்களுக்குக் கிதுமத்தாகிறது, அதாவது அல்லாஹுத்தஆலாவுக்குச்செய்கின்ற பணிவிடையாகிறது அல்லாவுடைய ஏவலைக்கொண்டு நிலைநிற்பதும், அல்லாஹுத்தஆலாவுடைய அடியார்களை ஸாலிஹத்தனத்திலாக்குவதும், வஹதியத்தான வஹ்தத்துடைய மக்காமளவிற் சேர்வழிகாட்



டுவது, நாயனுடைய ஹலுறத்தைவிட்டு மடியான் தூரப்படுவதை வருத்திவிக்கும்படியான ஆகிறத்துடைய பேறுகளையும், துன்யாவுடைய கொளுவுதல்களையும்விட் டடியார்களுடைய இருதயங்களை யொழிய வைக்கிறதுமாயிருக்கும். இன்னுமவர்களாகிற துள்ளமையாகிய ஹக்குடைய வஹ்தத்தின் ஜமாலை ஆசைகொண்டவனை மறைக்கும்படியான ஆகிறத்துடைய பதவிகளளவிற் சேர்வதற்கு முகம் வைக்கவேமாட்டார்கள். அவர்களுடைய இபாதத்துகளடங்கலும் ஹக்குக்கே கலப்பற்றிருக்கும். பாவஞ்செய்வதளவி லவர்களுசாடவுமாட்டார்கள். இதினாலேதான் சொல்லப்பட்டிருக்கிறது. துன்யாவாகிறது ஆகிறத்துடையோர்களுக்கு ஹறாமாயிருக்கும், ஆகிறமாகிறது துன்யாவுடையோர்களுக்கு ஹறாமாயிருக்கும், அந்த விரண்டுமாகிறது அஹ்லுல்லாக்கள்பேரில் ஹறாமாருக்கும், அந்த விரண்டுமாகிறது அஹ்லுல்லாக்கள்பேரில் ஹறாமாயிருக்குமென்று. ஆகையால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சொல்லிற் சில ஆண்பிள்ளைகளென்றது முக்கர்றபீன்களாயிருக்கும், அதினுடைய விளக்கத்தை யிந்தப் பைத்திற் சொன்னார்கள்.

பைத்து.

கவ்முன் லஹும்பீக் குல்லிமஜ்தின் றுக்பத்துன்
உல்லியத்துன்வபிக் குல்லிஜைஷின் மௌக்கிபு.

(இதின்பொருள்) அவர்களாகிறது சில ஜனங்களாயிருக்கும், அவர்களுக்கெல்லா நன்மைகளிலு எப்போற்சொற்றவர்களாறு லவர்களுக்கெல்லா நன்மைகளிலு மேன்மையளவிற் சேர்க்கப்பட்ட பதவியும், எல்லா ஜனங்களிலுந் தங்களுக்குரிய ஜனங்களுமுண்டேயப்போற்சொற்ற ஜனங்களென்பதாம்.

பைத்து.

அனாபுல்புலுல் அபுருகி அம்லஉ தவ்ஹஹா.
தறபன்வபில் அல்யாஇபாஸான் அஷ்ஹபு.

(இதின்பொருள்) நானாகிறது குஞ்சுகளை வளர்க்கின்ற குயிலாயிருப்பேன், அவைகளிருக்கின்ற விருட்சத்தை மகிழ்ச்சியால் நிறப்புவேன், இன்னும் நானாகிறது வானுலோகத்திற் கெட்டியான இராஜாளியாயிருப்பேன், ஆனால் சில நஸ்காக்களில் அனாபுல்பு

ஆல் அபுநூஹியென்று நக்த்தா இல்லாதவேறயா யிருக்கிறது. இப்படித்தான் மிஸ்றிலச்சிடப்பட்ட இமாம் தமீரீ யவர்களுக்குள்ள ஹயாத்துல் ஹயவானென்னுங் கித்தாபிலு மிருக்கிறது. அதின்படி யதற்கு மஃனுவாகிறது. நானுகிறது சங்கீத இராகம் போலிராகம் பாடித் தன்னுடைய சப்தத்தாற் சந்தோஷங்களைக் கொண்டு வருமே அப்போற்கொற்ற குயிலாயிருப்பேனென்பதாம். இனி அறபிகள் சிறப்பில் முடிவான பெரியோர்களைத்தான் வெள்ளை யிராஜாளியென் றுவமையாக்கிச் சொன்னார்கள். இதற்காகத்தான் இமாம் ஷாபிஈ றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள்.

பைத்து.

இதாமஃ த்தஸ்ஸனுஇல் மின் யிஇல்மி.
பஇல்முல் பிக்ஹி அவ்லாபிஃத்தி ஸாஸின்.
வக்கமதீ பின்யபூஹு வலாக்க மிஸ்ககின்.
வக்கம்தைரின் யத்தீறு வலாக்க பாஸின்.

(இதின்பொருள்) எதாவதொரு இல்முடையவன் ஒரு இல்மைக்கொண்டு சிறப்புப் பெற்றானே யானால் பிக்ஹுடைய இல்முதான் சிறப்புப் பெறுவதற்கு மெத்தப் பாத்திரமான அறிவாயிருக்கும், எத்தனை யெத்தனை மணங்களோ கமழ்கிறது, அவைகளில் எந்த மணங்களும் கஸ்தூரியினுடைய மணத்தைப்போ லொரு மணமுங் கமழாது. எத்தனையெத்தனை பறவைகளோ பறக்கிறது, அவைகளி லெந்தப் பறவைகளு மிராஜாளியைப்போ லொரு பறவையும் பறக்கமாட்டாது. அப்படிப்போலவே எத்தனை யெத்தனை யறிவுகளிருந்தாலும் அவைகளி லெந்த அறிவுகளும் பிக்ஹுடைய இல்மைப்போ லொரு அறிவு மிராதென்பதாம்.

ஸாலிஹான ஷெய்கு அபுல் அப்பாஸில் குஸ்த்துலானீ றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்லுகிறார்கள். நான் மக்கத்தில் நபி யிபுறாஹீம் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களுடைய மக்காமுக்கு இமாமாகிய ஷெய்கு அபூஷுஜாஉ ஸாலிஹுப்னு றஸ்த்தமல் இஸ்பஹானீ றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதென்னவெனில் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு



அவர்களுடைய காதிமான ஷெய்கு அஹ்மதென்பவர்கள் சொல்லக் கேட்டேன். அவர்கள் சொன்னார்கள், ஷெய்கு ஹம்மாதுத்தையாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸியாறத்தை நாடிப் போய்ப் புகுந்தார்கள். அப்போது ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களளவிற் கூர்க்கப் பார்த்தார்கள். அப்படிப் பார்த்த காரணமாகிறது. அதற்குமுன் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு இராஜாளியை வேட்டையாடும்படியாகக் கண்டிருந்தார்கள். ஆகையா லவர்களை யப்படிப் பார்த்தார்கள். அவ்விதம் பார்த்த ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பார்வையானது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிற் குணங் கொடுத்து அவர்களிலிருந்து புறப்பட்டு துன்யாவுடைய பாக்குகளாடங்கலையும் விட்டுத் தவித்து ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தோழன்மார்களில் மெத்தப் பெரியோர்களில் நின்றுமாகிவிட்டார்கள். இந்த ஹிக்காயத்தை இமாம் கமாலுத் தமீரீ றஹிமஹுல்லாஹு அவர்கள் தங்களுடைய ஹயாத்துல் ஹயவானென்னுங் கித்தாபிற்பேசிவந்தார்கள்.

இமாம் அப்துல்லாஹில் யாபிஈ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். இந்தக் கஸீதாவில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சொற்களைப்பற்றி யென்னுடைய கஷ்புல் மஹாஸினென்னுங் கித்தாபில் பேசியிருக்கிறேன். அவர்களந்தக் கஸீதாவில் வபில்அய்யாமி பாஸுன் அஷ்ஹபுன் என்று சொல்லியிருக்கிறதாவது இடைக அறிவாளிகளிற் சிலர்கள் கடப்பான ஆலிமாகிய ஆரிபான ஷெய்கு அபூஅலீ மானிபுனு தாவூதபுனி யூஸுபுத்தமீ றலியல்லாஹு அன்ஹு அவர்களளவிற் சேர்ந்த இஸ்னாதுகொண்டு பேசிவந்திருக்கிறார்கள். ஷெய்கு அபூஸுலைமான் சொல்லுகிறார்கள். நானொருநாள் ஷெய்கு அகீல் றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திலிருந்தேன். அப்போதவர்களிடத்தில் அப்துல்காதிறென்றொரு வாலிபர், சிறப்பானவர், அஜம் கட்டினுள்ளவர்,

அவருடைய கருமம் பகுதாதில் மெத்தப் பிரபல்லியமாயிருக்கிற தென்று சொல்லப்பட்டது. அப்போது ஷெய்கு அக்கீல் றஹ்மஹுல்லாஹு அவர்கள் சொன்னார்கள் திட்டமாக அவர்களுடைய கருமமாகிறது பூலோகத்திற் பிரசங்கமாயிருப்பதைக்காணவானு லோகத்திலதிகப் பிரசங்கமாயிருக்கிறது. அந்த வாலிபர்தான் மேலான பதவிகளி லுயர்த்தியானவர்கள் இன்னுமவர்கள்தான் மேலான ஆலமலக்கூத்தில் வெண்மையான இராஜாளியென்று பெயர் கூப்பிடப்பட்டவர்கள் அவர்களுடைய வக்த்தி லவர்களைத் தனிப்பிக்கப்படும், காரியமட்டங்களு மவர்களளவில்த்தான் மீளும் அவர்கள் காலத்தி லவர்களில் நின்றுமே யுண்டாகுமென்றார்கள் இன்தஹா.

பைத்து.

அவுறத் ஜாயூஷால் ஹாப்பித்தஹ்த்த மஷிய்யத்தீ.
தெளஅன் துமஹ்மா றம்துஹூ லாயஃபாடு.

(இதின்பொருள்) உவப்புடைய படை ஜனங்களெல்லோர்களும் என்னுடைய நாட்டத்தின் கீழே யெனக்கு வழிப்பட்டவர்களாகி விட்டார்கள், எதாவதொரு கருமத்தை நானாடினேனாகில் மறந்திடாதுடனே வந்து முன்னிற்குமென்பதாம்.

பைத்து.

அஸ்பஹ்த்து லாஅம்லன் வலாஉம்நிய்யத்தன்.
அறுஜூவலாபௌஹூதத்தன் அத்தறக்கபு

(இதின்பொருள்) நானினிமே லெனக்கொரு மேலெண்ணமும் அல்லதொரு ஆதரவு வேணுமென்றுதாவில்லாமலும், ஒரு வாக்குச் சொல்லப்பட்ட ஒரு கருமத்தை வழிபார்த்திருக்கச் செலவில்லாதவனுமாகி விட்டேன், சகலவைகளை யுமிப்போதே தந்திருப்பதால் இனிமேலொரு கருமமெனக்கு வேணுமென்று தேடச் செலவில்லையென்ற கருத்தாயிருக்கும்.

பைத்து.

மாஸில்த்த அநத்தவு பீமயாதீனிர்ரிஸா.
ஹத்தாவுஹிபத்து மக்கானத்தன் லாத்துராமு.



(இதின்பொருள்) நான் நீங்காமல் வேண்டுவருக்கும் நன்கொடை செய்யப்படாத பதவிகளை யெல்லாவற்றையு மெனக்கு நன்கொடையாக்கித் தருகிறமட்டும் நானவனுடைய பொருத்தமென்கிற வீட்டின் வெளியி லென்னுடைய மனம்போ லெல்லாஞ் சுற்றித் திரிந்து தீருக மேய்ந்துகொண்டேனென்பதாம். இதின் கருத்தாவது வல்லாஹு அஃலம். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மக்காமுல் குர்பென்னு மக்காமென்கிற அவ்விடத்தில் ஹக்குக்கும், தங்களுக்கும் நடந்த கருமத்தைச் சொல்லியிருக்கவுங் கூடும் எனனெனில் அவர்கள் இந்த மக்காமில் வாஸிலானபோது அவர்களைக்கொண்டு சபதஞ் செய்வதில்லை யென்று ஹக்கு ஸுபுஹானஹு வத்தஆலா வாக்குச் சொன்னதாக அவர்களே திருவுளமாயிருக்கிறார்கள். இந்த மக்காமைத்தான் ஆரிபீன்கள் மக்காம் இபுறுஹீமென்று சொல்வார்கள். இந்த மக்காமைக் குறித்து அல்லாஹுத் தஆலா யாராகிலுமொருவன் மக்காம் இபுறுஹீமில் புகுந்தானேயானால் ரொம்பவுமான அதாபைவிட்டு மச்சந் தீர்ந்தவனாகிவிடுவானென்று திருவுளமாயிருக்கிறான். ஆகையாலிந்த வெளி ஸஹ்றத்திலுள்ள மக்காமிற் புகுதுகிறதுகொண்டு நரகத்திற் சுடுவதைவிட்டு மச்சந் தீருகிற துண்டாகிறதாயிருந்தால் முன் சொல்லப்பட்ட மகானவியானது மக்காமில் உஸூலாகிறதுகொண்டு றஹ்மானுடைய கபடத்தை யச்சந் தீருதலுண்டாகிறது மெத்தத் தகுமான கருமமாயிருக்கும். ஆனலிந்த மக்காமில் ஆரிபீன்கள் வாஸிலாகிறதுதான். ஆகிலுங் கொடுக்கப்படாதென்ற பதவிகொண்டு முழுதாவது அந்த மக்காமில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹக்குத் தஆலாவிடத்தில் எழுபது தடவை ஆணையிட்டுக் கேட்டுக்கொண்ட வாக்கைக்குறித் தருளிச் செய்ததாயிருக்கும் இப்படித்தான் மிகுந்த கித்தாபுகளில் ஹத்தா வுஹிபத்து என்றும் [illegible] திருக்கிறது.

இனி யின்னான் காமிலில் அப்துல்கரீம் ஜீலிய்யி றலியல்லா ஹு அன்ஹு அவர்கள் இந்தப் பைத்தில் ஹத்தா பலக்த்து மகானத்தன் லாத்துறாமு என்கிற [illegible] திருக்கிறார்கள். இதின்படிக்கு [illegible] நன்கொடையாய்க் கொடுக்கப்படாத பதவியை நானெற்றுக்கொள்ளுமட்டும் மவனுடைய திருவுளப் பொருத்தமென்

னும் மைதான்களிற் றிரிந்து அதிலுள்ள கனிவருக்கங்களை யரு
ந்துகிறவனுயிருந்தேனென்பதா யிருக்கும். துன்மையான சாத்
தின் தஜல்லியாத்துகளில் கின்றும் நான் பாத்திரமான மட்டுக்
கெனக் குத்தரப்பட்டதென்றதாம். இந்த தஜல்லியாத்து தாத்தி
ய்யாவாகிறது ஹிபத்தாய்க் கொடுக்கப்பட்டதென்று சொல்லப்
படாது. ஆகிலும் தாயன் அவரவர்களி லாத்திய பாத்திரத்தின்
படிக்காயிருக்கும். இப்படித்தான் இமாம் அப்துல்கரீ முல்ஜியலீ
றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சென்னார்கள்.

### பைத்து.

அலஹஸ்ஸமானுக் கஹ்ஹல்லத்தின் மயபூமத்தின்.
தஸ்ஹூவன ஹனுலஹத் திருஸல் முதஹ்ஹபு

(இதின்பெருள்) இந்தக் காலமாகிறது வருணிக்கப்பட்ட தெ
ளிவான ஒரு துகிலைப்போலும், அதற்கு நாமாகிறது பொன்னெ
ழுத்தாற் செய்யப்பட்ட அருகைப் போலுமா யிருக்குமென்பதாம்.

### பைத்து.

அபலத்ஷுமூஸுல் அவ்வலீன வஷம்ஸுனு.
அபதன் அலாபலக்கில் உலாலாத்தம்றுபு.

(இதின்பொருள்) முன்னோர்களுடைய சூரியன்களெல்லாம்
ஓடியாடி மறைந்துபோய்விட்டது. நம்முடைய சூரியனோ அது
மேன்மையுடைய மண்டலத்தில் ஓடியாடிச் சுடர் விட்டிலங்கிலங்
லங்கிக்கொண்டே யிருக்குமே யல்லாதொருபோது மடையாதென்
பதாம். இதாகிறதுமற்றுமுள்ள நபிமார்களுடைய காரணங்களும்
விளாயத்துகளும் அவரவர்களுடைய காலங்களில் நடந்து நடந்து
கின்றுவிட்டது. நமது நாயகம் முஹம்மதுர் றஸூலுல்லாஹு அலை
ஹிவஸல்லமவர்களுடைய காரணங்களும், முஃஜிஸாத்துகளுமாகி
றது அவர்களுடைய மக்காம் முஹம்மதிய்யாவைப்பற்றி யிந்த
உம்மத்திலுள்ள பெரிய மஷாயிகுமார்களாகிய நாதாக்கள் பெறு
கிற ஞானங்களும், தஜல்லியாத்துகளு முடிவற்றிருக்கிறதென்ப
தற் கடையாளமாயிருக்கும். இந்த மக்காமு முஹம்மதியாவிற் ருன்
முஹம்மதியர்களாகிய அவ்லியாக்கள் சிற்சில கட்டபான சொற்
களைச் சொல்லியிருக்கிறார்கள். அதில் ஏனது ஷெய்காகிய ஷெ



ய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவ
ர்கள் சொன்னதாவது நபிமார்களாகிய ஜனங்களே உங்களுக்குப்
பட்டந் தரப்பட்டது. ஆனால் நமக்குத் தரப்படாததெல்
லாமெனக்குத் தரப்பட்டதென்று சொல்லியிருக்கிறார்கள். இப்
படியேதான் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிரில் ஜீலானீ றலி
யல்லாஹு அன்ஹு அவர்களைத்தொட்டும் இமாம் முஹ்யித்தி
னிபுனு அறபீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடை
இஸ்னதுகொண்டு புத்தூ ஹாத்துல்மக்கியாவிற் பேசி வந்திருக்
கிறார்கள்.

இன்னும் ஷெய்கு அபுல் கைதிபுனு ஜமீல் றலியல்லாஹு
அன்ஹு அவர்கள் நாமொரு கடலில் முங்கினோ மந்தக் கடலின்
கரையில் நபிமார்கள் தரிபட்டார்களே அப்போற்கொற்ற கட
லென்று சொல்லியிருக்கிறார்கள். இதுபோல் ஆரிபீன்களிற் சிற்
சில வசனங்கள் சொல்லியிருப்பதில் தஃவீல் வைப்பதற் கிடமில்
லாதிருந்தாலும், மொத்தத்தில் வலீயென்கிறதைக் காண நபியென்
கிறது மெத்த வரிசையானதாயிருக்குமென்றுதான் நாம் இஃத்
திக்காது கொண்டு மதுஹபுவைத் திருக்கிறோமென்று இமாம்
அப்துல்க்கரீமுல் ஜியலீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இன்
ஸான் காமிலில் திருவுளமாயிருக்கிறார்கள்.

ருவீ சொல்லுகிறார். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு
றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்தப் பைத்துகளைச்சொல்லி
முடித்ததின் பிறகு சொன்னார்கள். எல்லாப் பறவைகளும் சொல்
லும், செய்யாது, இராஜாளிமட்டும் செய்யுஞ் சொல்லாது. ஆகை
யால்த்தான் அந்த இராஜாளி யிருக்குமிடமாகிறது, இராஜாக்களு
டைய கைகளாயிருக்கிறதென்று திருவுளமானார்கள். அவ்விதஞ்
சொன்னவுடனே ஜறுதாவென்றறியப்பட்ட வாஹிலாகிய ஷெய்கு
அபுல் முலப்பற் மன்ஸூறுபுனுல் முபாறக் றஹிமஹுல்லாஹு
அவர்க ளெழும்பி ஷெய்கு முஹ்யித்தின் அப்துல்காதிறு றலியல்
லாஹு அன்ஹு அவர்களுடைய திருச் சமுகத்திலிருந்து இந்தப்
பைத்துகளைச் சொன்னார்கள்.

பைத்து.

பிக்கஷ்ஷா ஹாமிறுத்த தான்னுவாம வாக்கீத்து.
யாமன் பிஅல்பாலிஹி யஃஹுல் யவாக்கீத்து.

(இதின்பொருள்) தங்கள் மொழிகளைக்கொண்டு விலை மதிக்க முடியாத, மாணிக்கங்களென்று மதிக்கான ஞானங்களெல்லாம் வெளியாகி யுயர்த்தியாகிறதே அப்போற்கோற்ற நாயகமே தங்களால் மாதங்களும், மற்றுமுள்ள நேரங்களும் சோபமடைந்திருக்கிறதென்பதாம்.

பைத்து.

அல்பாஸு அன்தவயீன் தபுகது பலா அஜபுன்.
வஸாயிறுன்னாஸி பிஜனீ பவாகீத்து.

(இதின்பொருள்) தாங்களே யிராஜாளி, மற்றுமுள்ள மனிதர்களெல்லா மென்னுடைய கண்ணுக்கு ஏழைத்தனமான பூருக்களா யிருக்கிறது. ஆகையாற் றங்களெவ்வளவு விறு பாராட்டினாலுந் தகைமைதான் அதனாலொரு வருமாச் சாரியப்படவேண்டியதில்லை யென்பதாம்.

இமாம் அப்துல்லாஹில் யாபிஈயாகிய நான் சொல்லுகிறேன். ஷெய்கு அபுல் முஸப்பறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்த இரண்டு பைத்துகளையுங் கொண்டு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்னுடைய இந்தக் கதமாகிறது அல்லாஹ்வுக்குடைய எல்லா வலிமார்களின் கழுத்துகளின்பேரிலா யிருக்குமென்று சொன்ன சொல்லனவி விஷாறுக் காட்டியிருக்கிறார்கள். அதின் பொருளாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்தச் சொற் சொன்னதினுண்மையாவுடைய சமுகத்திலிருந்து வந்த வொரு உத்தரவுகொண்டு சொன்னவர்களையும், அதில் ஹக்கானவர்களையும், ஹக்குந் தனுன்னவர்களையுமிருக்கும். இதற்காகத்தான் ஏழ்வான், படுவான் முதலிய தலங்களிலிருந்த மகா பெரிய ஷெய்குமார்களெல்லோர்களும் தங்கள் தங்களுடைய கழுத்துகளைத் தாழ்க்கிறார்கள். இஸ்டஹான் இராச்சியத்திலுள்ள ஒரேவொரு வலியைத் தவிர



அவர்மாத்திரம் அல்லாஹுத் தஆலா தீருதியைச் சிறப்பாக்கியினரைக்காண மேலாக்கி யிவரினுமிவருடைய காலத்திலுள்ள மற்றும் வலிமார்கள் சகலரினும் ஹக்கும் செய்யக்கூடிய தத்துவத்தையுங் கொடுத் துயர்த்தியாக்கிவைத்த நாயகத்திற்கு அநாவது அங்கச்சொல்லுக்குத் தலைசாய்த்து வழிப்படாதபடியால் அவருடைய விலாயத்தைத் பறியப்பட்டுப்போச்சுது.

இன்னும் மகா பாரதூரமான ஷெய்குமார்களெல்லோர்களும் அப்படிச் சொல்லும்படியாக அவர்களை யேவப்பட்டே சொன்னார்களென்று சொன்னார்கள். இன்னு முன்னுள்ள சில பெரியோர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பூலோகத்திற் பிறக்க நூறு வருஷத்திற்கு முந்தியே அவர்களப்படிச் சொல்வார்களென அறிவித்திருந்தார்கள். இன்னு மகா வலுப்பமுடைய ஷெய்குமார்களிலொருவர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களந்தச் சொல்லைச் சொல்ல நான் கேட்டிருந்தேன். இன்னுமவர்க ளனேகக் கருமங்களை வழக்காடுகிறவர்களா யிருந்தார்களென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் துதித்துப் போற்றிப் புகழ்ந்து அவர்கள் காலத்திலுள்ள பேர்களிலின்னும், அவர்களல்லாதபேர்களிலின்னும் ஒளிவுக ளுதித்துப் பிரகாசிக்குந் தலங்களாகவும், அகமிய அறைகளாகவு மிருக்கப்பட்ட மஷாயிகுமார்களி லனேகம்பேர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்களில்நின்று முன்னுள்ளவர்கள்தான் இதற்குமுந்தி நான் சொல்லியிருக்கின்ற ஷெய்குமார்களும், அந்த ஷெய்குமார்களுடைய மேலான தருதிகளையும், அவர்களுடைய தறைகளையும், அவர்களுடைய கீர்த்திகளையும், அவர்களுடைய புகழ்ச்சிகளையும் வேறே கித்தாபுகளிலும், இந்தக் கித்தாபிற் சிலவிடங்களிலுஞ் சொல்லியிருக்கிறேன். அவர்கள் நாற்பது ஷெய்குமார்கள் மட்டிலு மிருப்பார்கள்.

அவர்களில்நின்று முன்னுள்ளவர்கள்தான் ஷெய்கு அபூபக்கிரிபுனு ஹவாரில் பத்தாஇஹீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு அபூமுஹம்மதிஷ் ஷன்பக்கி றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு அபா ஹுல்பத்தாஇஹீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு மன்ஸூறுல்

பத்தாஇஹீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்குத்தாஜுத்தீன் ஆரிபீன்
அபுல்வபா றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு ஹம்மாதுபுனு
முஸ்லிமுத்தையாஸு றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு அபூயஃ
கூபு யூஸுபுபுனு ஐயூபுல்ஹமதானீ றலியல்லாஹு அன்ஹு,
ஷெய்கு அக்கீலுல்முன்ஜீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு அபூ
யஃஸல்யஃஸிரீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு அதிய்யுபுனு
முஸாபிறுல்அமவீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு அலிய்யு
புனு வஹபிஸ்ஸன்ஜாரீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு மூஸாபு
னுமாஹீனுஸ்ஸவ்லீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு அபுன்
னஜீபி அப்துல்காதிரிஸ்ஸுஹ்றவர்தீ றலியல்லாஹு அன்ஹு,
ஷெய்கு அஹ்மதுபுனு அபில்ஹஸனிர்றபாஈ றலியல்லாஹு அன்
ஹு, ஷெய்கு அலிய்யுபுனுல்ஹீத்தீ றலியல்லாஹு அன்ஹு,
ஷெய்கு அப்துர்றஹ்மானித் தபுஸவன்ஜீ றலியல்லாஹு அன்
ஹு, ஷெய்குபூக்காஉபுனு அபீபத்தூ றலியல்லாஹு அன்ஹு,
ஷெய்கு அபூஸஃதுல்கைலவீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு
மத்தருல்பாதிரீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்குமாஜிதுல்குர்தீ
றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு ஸாக்கிறு றலியல்லாஹு அன்
ஹு, ஷெய்கு அப்துல்காதிறுபுனு அப்தல்பஸரீ றலியல்லாஹு
அன்ஹு, ஷெய்கு அபூஅம்ரின் உதுமானுபுனுமர்ஸூக் றலியல்
லாஹு அன்ஹு, ஷெய்கு ஸுவைதுஸ்ஸன்ஜாரீ றலியல்லாஹு
அன்ஹு, ஷெய்கு ஹயாத்துபுனுக் கைஸில்ஹர்ரானீ றலியல்லா
ஹு அன்ஹு, ஷெய்கு றஸ்லானுத்திமஷ்கீ றலியல்லாஹு அன்
ஹு, ஷெய்கு அபூமதயனுல்மஃறபீ றலியல்லாஹு அன்ஹு,
ஷெய்கு அபூஅம்றுவுதுமானுபுனு மூஆறத் றலியல்லாஹு அன்
ஹு, ஷெய்குக்கலீபுல்யாஹுல்மெனவீ றலியல்லாஹு அன்ஹு,
ஷெய்குமக்காரிமுன்னஹ்ஹாறீ றலியல்லாஹு அன்ஹு, ஷெய்கு
கலீபத்துபுனு மூஸன்னஹுறு மலிக்கீ றலியல்லாஹு அன்ஹு,
ஷெய்கு அபுல்ஹஸனுல் ஜௌஸக்கீ றலியல்லாஹு அன்ஹு,
ஷெய்கு அபூஅப்தில்லாஹில்குறஷீ றலியல்லாஹு அன்ஹு,
ஷெய்கு அபுல்பறக்காத்திபுனு ஸஹ்ரில்அமவீ றலியல்லாஹு அன்
ஹு, ஷெய்கு அபூஇஸ்ஹாக்கு இபுறாஹீமுபுனு அலிய்யில் அஃஸபி
றலியல்லாஹு அன்ஹு, ஷெய்குல்கௌது றலியல்லாஹு
அன்ஹு ஆக இப்போது சொல்லப்பட்ட பாலவான்களான ஷெய்



குமார்கள் முப்பத்தேழுபேர்களாயிருக்கும். இன்னும் ஷெய்கு
முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்
கதமீ ஹாதிஹி அலாறக்கபத்தில் குல்லிவலியின் லில்லாஹி. என்னு
டைய இந்தப் பாதமாகிறது அல்லாவுக்குரிய எல்லா வலிமார்க
ளின் கழுத்துகளின்பேரிலாயிருக்குமென்று சொன்னநேரத்தில்
ஐம்பத்திரண்டு ஷெய்குமார்கள் ஹாஸிருயிருந்தார்களென்று இந்
தக் கித்தாபல்லாததில் நான் சொல்லியிருக்கிறேன். றலியல்லா
ஹு அன்ஹு மஆன் ஹும் அஜ்மஈன் ஆமீன்.

நாயகம் இமாம் அப்துல்லாஹில்யாபிஈ றஹிமஹுல்லாஹு அவர்களால் கோர்வை செய்யப்பட்ட அறபு கித்தாபுகளில்லின் றும் தர்ஜுமா செய்யப்பட்டுள்ள கன்ஸுல் அபுகம், பீ மனாக்கிபி கவுதுல்அஃலமென்ற அறபுத்தமிழ் கித்தாபிலுள்ள நூறு ஹிக்காயத்துகளும் முடிவாய்விட்டது. இனி வருகிற ஹிக்காயத்துகள் வேறே கித்தாபுகளிலுள்ளதாயிருக்கும்.

——(*)——

## 101-வது ஹிக்காயத்து.

——(:)——

நாற்றியோராம் ஹிக்காயத்தாகிறது ஒரு மனுடன் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய இருவிரல்களைச் சூப்பி அதனாலவரைவிட்டும் ஹவ்ன், நீங்குடிப்பு இவைகளற்ற செய்தியாயிருக்கும். அதென்னவெனில் றலி ஆரிபாகிய ஷெய்கு அபூமுஹம்மது ஷாவருஸைபத்தீ முஹல்லீ பகுதாதில் சொல்லுகிறார்கள். றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் நம்மள் நாயகம் கவுதுல்அஃலம் அவர்களைத் தெரிசிக்கப் புகுந்து காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைவிட்டு முரிந்து அவ்விடத்தில் சிலநாளிருந்தேன். அப்பால் கல்லைவிட்டு நாட்ட பாதையிலாகி மிஸ்றுக்குப் போகவேணுமென்றெனக்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல் லாஹு அன்ஹு அவர்களிடத்தில் நானுத்தரவுதேடினேன். அப் போதவர்களென்னைப்பார்த்து நீ பெருவழியினிடத்தில் போகுங்காலம் தங்களுடைய இரு விரல் களைச் சூப்பிக்கொள்ளென்று வலியுறுத்திச் சொன்னார்கள்.

களை யென்னுடைய வாயிற் றந்து இவைகளைச் சூப்பிக்கொள், நான் விளங்கி யறிந்துக்கொண்டேன், நீ நேர்பெற்றவனாக போவென் றுத்தரவு தந்தார்கள். அதுமுதலெனக்குத் தத்துவமுமதிகமாகி யாதொன்றுந் தின்னுமலுங் குடியாமலும் பகுதாதிலிருந்து மிஸ்றுக்கு வந்து சேர்ந்தேனென்று சொல்லுகிறார்கள்.

## 102-வது ஹிக்காயத்து.

(*)

நூற்றியிரண்டாம் ஹிக்காயத்தாகிறது கவுது நாயகமவர்களுடைய சிறப்பான நாமங்களைப் பேசுகிறதாயிருக்கும். பெரியோர்களிலொருவர் சொல்லுகிறார். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் தொண்ணூற்றொன்பது பெயர்களிருக்கிறது. அவைகளாகிறது (பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.) அப்துல்காதிற் ஸையிது நாயகமானவர்கள் முஅய்யது, உதவி கொடுக்கப்பட்டவர்கள் கரீம், சங்கையானவர்கள் அலீம், வணப்பமானவர்கள் ஷரீபுன், சிறப்பானவர்கள் லரீபுன், வள்ளலானவர்கள் இமாமுன், முன்னிலையானவர்கள் ஹுமாமுன், செய்திதானவர்கள் ஸாலிக்குன், றப்புடைய பாதையில் நடப்பவர்கள் நாஸிக்குன், வணக்கமுள்ளவர்கள் மூமுனி, ஈமான் பூண்டவர்கள் மூக்கினு, உறுதியுள்ளவர்கள் முன்அமுன், வாசமடைந்தவர்கள் முக்றமுன், சங்கையுற்றவர்கள் தபீபுன், அகநோய்க்கு வைத்தியமானவர்கள் தையிபுன், மணமானவர்கள் முத்தையிபுன், மணமாக்கிவைக்கிறவர்கள் ஜவாதுன், கொடையுள்ளவர்கள் முன்காதுன், வழிபாடுடையவர்கள் காயிமுன், நின்று வணங்கிறவர்கள் ஸாயிமுன், நோன்பு பிடிப்பவர்கள் ஆபிதுன், வந்தனஞ் செய்பவர்கள் ஸாஹிது, இருதயத்தில் துன்யாவை வெறுப்பவர்கள், ஸாஜிதுன் ஸுஜூது செய்பவர்கள் வாஜிதுன், ஹக்காசை யுறைந்தவர்கள் ஜியலீ, ஜீலானிற் சேர்ந்தவர்கள் ஹன்பலீ, அஹ்மதுபுனு ஹன்பல் இமாமவர்களுடைய மதுஹபைச்சார்ந்தவர்கள், தக்கிய்யுன், தக்வாவென்னும் ஹக்குடைய கட்டளைகளைப் பேணி நடப்பவர்கள் நக்கிய்யுன், தூய்மை பூண்டவர்கள் காமிலுன், சிறப்பமான



வர்கள் பாதில், நற்பாதையிற் செலவு செய்பவர்கள் ஸக்கிய்யுன், துப்புரவானவர்கள் ஸபிய்யுன், தெளிவானவர்கள் ஐமீலுன், அழகானவர்கள் ஜலீலுன், வணப்பமானவர்கள் மாஸூன், மூரிதுகளைப் பாவைத கடத்துஞ்சக்கலான் மஹுஸூன், துன்பத்தைவிட்டோடிச் செல்லத்தம்பமானவர்கள் ஸரீதுன், பிதேதியானவர்கள் றஷீதுன், நேர்நெறி செய்பவர்கள் ஸகிய்யுன், தருமவாளரானவர்கள் வலிய்யுன், வாக்கை நிறைவேற்றுகிறவர்கள் (யாரிஸா) சிறப்புடையவர்கள் நக்கீபுன், அவுலியாக்களிற் றலைமைத்தனம்பெற்ற கோட்டக்காரரானவர்கள் நஜீபுன், வெடிப்பானவர்கள் காலிஉன், வெளியச்சமுடையவர்கள் காஷிஉன், உள்ளச்சமுடையவர்கள் ஸாஹிபுன், தலைமையாளரானவர்கள் தாக்கிபுன், ஒளிவிலங்குபவர்கள் வாரிதுன், நபிநாயகத்தின் அனந்திரத்தையுடையவர்கள் ஹாரிதுன், பதவியான அமல்களைப் பயிர்ச்செய்பவர்கள் வாரிஉ, மார்க்கத்திற் பேணுதலுள்ளவர்கள் பாரிஉ, கல்வியிற் கடப்புள்ளவர்கள் பாயிக்குன், யாவரையு மேலிட்டுக்கொள்பவர்கள் லாயிக்குன், தகுத்துக்கிணங்கியவர்கள் றுஸிகுன், அறிவிலுறைந்தவர்கள் ஷாயிதுன், பிரிவிலுயர்ந்தவர்கள் வலிய்யுன், அல்லாவுடைய காரியஸ்தரானவர்கள் லாஹிற், கீர்த்தி வெளியானவர்கள் தாஹிற், தூய்தானவர்கள் மூத்தீஉன், வழிபாடிசைந்தவர்கள் மனீஉன், நெருங்கக்கூடாத அரணிப்புள்ளவர்கள் ஹபீபு, அல்லா றசூலுக் குவந்தவர்கள் ஷாஹிது, நாடியவர்களிடம் வருகின்றவர்கள் றுஷிதுன், நேருள்ளவர்கள் ஸாயிதுன், நெறி மிகுந்தவர்கள் காயிதுன், இராஜன் வழிகளைக் காட்டுகிறவர்கள் பஸீறு, அகவிழியுள்ளவர்கள் மூனீறு, கல்வை யொளிவாக்கிறவர்கள் சிறுஜூன், விஞ்சையில் விளக்கானவர்கள் தாஜூன், மகிரியாவிற் கிரீடமானவர்கள் பாயிஹுன், திசையெங்கும் வாசனை வீசுகிறவர்கள் பாத்திஹுன், மனப்பூட்டைத் திறப்பவர்கள் முக்கர்றபு, முன்னவனுக்கு முகிழ் வாய்க்கப்பட்டவர்கள் முஹர்றபு, குணத்தைத் துப்புரவாக்கப்பட்டவர்கள் கலீலுன், முன்னவனுக்குத் தோழமையானவர்கள் தலீலுன், நேர்முறை காட்டுகிறவர்கள் ஸாதிக்குன், உண்மையாளரானவர்கள் காதிக்குன், புத்திகூர்மையுள்ளவர்கள் ஸுல்தான், அவுலியாக்களுக்கெல்லாம் அரசரானவர்கள் புறுஹானு, தெளிவாளர்களி னத்தாட்சியானவர்கள் ஹஸனிய்யி, தந்தை வழியான ஹஸனைக் கூப்பிடப்பட்டவர்கள்

ஹுஸைனிய்யி, தாய்வழியான ஹுஸைனைச் சேரப்பட்டவர்கள் ஆலிமு, அறிவு சிறந்தவர்கள் ஹக்கீமு, நீதத்தீர்ப்பு நிறைந்தவர்கள் முஹ்ஸினு, உதவி செய்கிறவர்கள் முபீனு, மறைவாய் வெளியாகிறவர்கள் மிஸ்பாஹு, வேதவிளக்கானவர்கள் மிபுத்தாஹு, மறைபொருட் களஞ்சியத்தின் திறவுகோலானவர்கள் ஷாக்கிறு, பாக்கியத்திற்குப் பகரஞ்செய்தலையும் ஷுக்றுடையவர்கள் தாக்கிறு, ஓய்தலொழிதலில்லாதவர்கள் மலாதுன், சஞ்சலம்விட்டொதுங்குத் தஞ்சமானவர்கள் மஹ்துன், நோவினைகளகன்றொழிக்கும் காவலாளரானவர்கள் ஸாலிஹுன், நீணுக் கிணக்கமானவர்கள் நாஸிஹுன், ஹக்கினுபதேசியானவர்கள் பாலிஹுன், வெற்றி ஜெயமுற்றவர்கள் வாலிஹுன், துய்தான பாதையிற் றுலாம்பரமானவர்கள் ஸல்லல்லாஹு அலாகைரி கல்க்கிஹி செய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மயீன்.

——(*)——

## 103-வது ஹிக்காயத்து.

——(*)——

நூற்றிமூன்றும் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் துஆச்செய்து லௌஹுல் மஹ்பூலிலில்லாத சில பிள்ளைகளை யொரு பெண்பிள்ளைக்குக்கொடுத்த செய்தியைப் பேசுகிறதாயிருக்கும். முன்தகபி ஜவாஹிரில் கலாயிதென்கிற கித்தாபிற் சொல்லுகிறார்கள். ஒருநாள் ஹலறத்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தில் ஒரு பெண்பிள்ளை வந்து நாயகமே அல்லாஹுத் தஆலா எனக்குப் பிள்ளை தரும்படியாக அல்லாஹுத் தஆலாவிடத்தில் நீங்கள் துஆச் செய்யவேணுமென்று கேட்டு மன்றாடினாள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் முறாக்கபாச் செய்து அவளுக்குப் பிள்ளை யிருக்கிறதாவென்று லௌஹுல் மஹ்பூலில் பார்த்தார்கள். அவளுக்குப் பிள்ளை யில்லையென் றெழுதப்பட்டிருந்தது. அப்போது அல்லாஹுத் தஆலாவிடத்தி லவளுக் கிரண்டுபிள்ளை கொடுக்கவேணுமென்று மன்றாடினார்கள்,



அப்போதியாதொரு வுருத்தோற்றமின்றி ஓய் அப்துல்காதிறே லௌஹிலவளுக் கொருபிள்ளையு மில்லையென்றிருக்க நீரிரண்டு பிள்ளை கொடுக்கவேணுமென்று கேட்கிறீரோவென் றொரு சத்தமுண்டாச்சுது. அதின்பின் மூன்று பிள்ளைகளைக் கொடுக்கவேணுமென்று சொன்னார்கள். அதற்கு முன்போலவே சத்தமுண்டாச்சுது. பின்னால் நாலு பிள்ளைகளைக் கொடுக்கவேணுமென்று கேட்டார்கள். அதற்குமப்படியேதான் சத்தமுண்டாச்சுது. பின்பு ஐந்து பிள்ளைகளைக் கொடுக்கவேணுமென்று கேட்டார்கள். அப்போது முன்போலவே சத்தமுண்டாச்சுது. பிறகு ஆறு பிள்ளைகளைக் கொடுக்கவேணுமென்று கேட்டார்கள், அதற்குமப்படியே ஜவாபு வந்தது. அப்பாலேழு பிள்ளைகளைக் கொடுக்கவேணுமென்று மன்றாடினார்கள். அப்போது யாகவ்தே இவ்வளவு போதும் நீரதிகம் தேடவேண்டாமென்று ஹக்குத் தஆலாவுடைய புறத்திலிருந்து உத்தரவு வந்தது. அந்த சமிக்கினையா லவளுக்கு ஏழு ஆண்பிள்ளைகளை அல்லாஹுத் தஆலா கொடுப்பானென்று நன்மாராயமுண்டாச்சுது. அப்போது அந்தப் பெண்பிள்ளையானவள் கவ்து முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள்பேரில் உண்மை நிருணயங்கொண்டவளா யிருந்தாள், அந்நேரத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கொஞ்சம் மண்ணையள்ளி அந்தப் பெண்பிள்ளையின் கையிற் கொடுத்தார்கள். அவளந்த மண்ணை வாங்கி வெள்ளியாற் செய்யப்பட்ட குழலிலடைத்து தாவிஸைப் போற் றன்னுடைய கழுத்திற் கட்டிக்கொண்டாள்.

அப்பாலவளுக்கு அல்லாஹுத் தஆலா ஏழு ஆண் குழந்தைகளை வகுப்பதுகொண்டவளைச் சங்கையாக்கிவைத்தான். அதின்பிறகு சிலகாலத்திற்குப் பின்னர் கவ்து முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹக்கில் அவளுடைய நிருணயம் பஸாதாகிவிட்டது. அப்போதவள் கவ்து நாயகமவர்கள் தந்தார்களே அந்த மண்ணானது அதிலென்ன பாயிதாவுண்டென்று சொன்னாள், அவ்விதம் சொல்லவே உடனே அவளுடைய பிள்ளைகளடங்கலும் மௌத்தாகிவிட்டது. அதனாலவளழுது சலித்தவளாய் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சன்னிதானத்தில் வந்து

அவர்களைப்பார்த்து யாகவ்துல்அஃலமே யென்னை யிரட்சியுங்களென்று சொன்னாள், அதற்கு கவ்து நாயகமவர்கள் அவளைப்பார்த்து அந்தக் காலமானது அதினுடைய காலமாயிருந்தது இப்போது பாயிதா இல்லாத காலமென்று சொன்னார்கள்.

இன்னுமொரு ரிவாயத்தில் வருகிறது. கவ்துல்முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்தப்பெண்பிள்ளையைப்பார்த்து பெண்பிள்ளை நீ யுன்னுடைய வீட்டுக்குப் போய்விடு, நீ யேது நிய்யத்தைக்கொண்டு வந்தாயோ அதுபோலுன்னுடைய பிள்ளைகளைக் கண்டுக்கொள்வாயென்று சொன்னார்கள். அதுபோலந்தப் பெண்பிள்ளை தன்னுடைய வீட்டுக்குப் போகவே அவள் போகமுன்னமே அவளுடைய பிள்ளைகளெல்லாம் ஹயாத்தாயிருக்கக்கண்டு அல்லாஹுத் தஆலாவை ஷுக்று செய்துக்கொண்டாளென்று.

—[]—

## 104-வது ஹிக்காயத்து.

—*—

நாற்றிகாலம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய முரீதில்நின்று ஒரு முரீதை முன்கற்நக்கீறென்னு மிரண்டு மலக்குகளுடைய அதாபைவிட்டும் விலக்கியசெய்தியாயிருக்கும். அந்த முரீதானவர் கவ்து நாயகமவர்களைத்தவிர வேறியாதொன்றையுமறியாதவராயிருந்தார்.

கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய முரீதுகளில்நின்று மொருமனுடன் ஹலறத்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களளவில் பிசகற்ற நிருணயமுள்ளவராயும், முஹப்பத்தில் பனுவாகிப் பக்காவைப்பெற்றவராயுமிருந்தார். அப்படியிருக்கையில் அவர் மரணமடைந்துவிட்டார். அப்பாலவரை நல்லடக்கம் செய்ததின்பின்னர் கபறிற் கேள்வி கேட்பதற்காக முன்கற்நக்கீறென்னு மிரு மலக்குகளும் வந்து அவ



ரைப்பார்த்து ஓய் ஆதமுடைய மகனே உன்னுடைய நாயனார், உன்னுடையநபியார், உன்னுடைய மார்க்கமென்னவென்று கேட்டார்கள். அதற்கவர் என்னுடைய குருவாகிய செய்யிது அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைத்தவிர வேறியாதொன்றையும் நானறியேனென்று சொன்னார். உடனே அவ்விரு மலக்குகளும் தஹய்யறலாகி அல்லாஹுத் தஆலாவுடைய சமுகத்தை நோக்கி யெங்கள் நாயனே நீயாகிறது மிகவுமறிவாளன், ஆகையாலுன்னுடைய அடிமையாகிய இன்னானிடத்தில் நாங்களுனதுத்தரவுப்படி கேள்வி கேட்டதற்கு இவ்விதமான ஜவாபு சொல்கிறானேயென்று சொன்னார்கள். அதற்கு அல்லாஹுத் தஆலா அவ்வடிமையை அதாபு செய்யுங்களென்றேவினான். அதுபோலவ்விரு மலக்குகளும் அதாபுசெய்ய நாடவே ஹலறத்து கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வெளிப்பட்டு அந்த இருமலக்குகளையும் பார்த்து இவனாகிறவன் அல்லா றசூலை அறியாதவனாயிருக்கினும் யஃனீ தீனுடைய காரியங்களை அறியாதவனாயிருந்தபோதினும் அவனென்னையறிந்து என்னைத் தொடர்ந்தவனாயிருந்தான். ஆகையால் நீங்களேதைத்தொட்டு மவனிடத்திற் கேட்டீர்களோ அவைகளனைத்தையும் நானறிவேன். ஆனதால் எனக்காக வேண்டி அவனை அதாபு செய்யாதீர்களென்று சொன்னார்கள்.

அதுகேட் டிருமலக்குகளும் அல்லாஹுத் தஆலாவுடைய சன்னிதானத்தை நோக்கி யெங்கள் நாயகா உனது மஹ்பூபு, மஜ்தூபாகிய கவ்துல்அஃலம், ஸுல்த்தான் முஹ்யித்தீன் செய்யிது அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்விதமாகச் சொல்லுகிறார்களேயென்று முறையிட்டார்கள். அப்போதும் அல்லாஹுத் தஆலா அதாபு செய்யும்படியாகவே யேவினான். அந்தப்படி அதாபு செய்ய ஆரம்பிக்கும்போது கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவ்விரு மலக்குகளின் கைகளிலிருக்குந் தடிகளையும் பறித்துக்கொண்டு நீங்களிருவர்களும் இனிமேலிவனளவில் முடுகாதீர்கள் இஃதென்னும் நெருப்பு எனதகத்தாக்குள்ளிருப்பதின் மிகுதமாகிறது அதற்கொரு வஸ்துகொண்டும் நிகரிடப்படாது அப்படியில்லாதிருக்கில் அதனால் நரகம் சுவர்

க்கமிரண்டையும் கரித்துப்போடுவேன், அதாவது சொர்க்கத்திலிருந்து முண்டாகாது, நரகத்தில் அதாபுமில்லை யென்பதாம், இவ்விதமாக கவ்து நாயகமவர்கள் சொல்லவே அல்லாஹுத்தஆலாவுடைய புறத்தில் இன்னும் மலக்குகளுக்கு ஓய் மலக்குகளே அந்த அடியானைத்தொட்டும் பொறுத்துக்கொண்டேன் ஆகையா லவனை அதாபுசெய்ய வேண்டாமென்று சத்தம்வந்தது ஆனதால் அதாபுசெய்யப்படவில்லை ஆகையாலிவைகளெல்லாம் ஹக்குத்தஆலா கவ்து நாயகமவர்களுக்குச் சங்கைசெய்வதாயிருக்கும்.

## 105-வது ஹிக்காயத்து.

நூற்றிஐந்தாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய முரீதுகளின் மர்தபாக்களை பேசுகிறதாயிருக்கும்.

ஒருபோது கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தில் அவர்களுடைய முரீதுகளின் தரஜாவைக்குறித்து மனுஷர்கள் கேட்டார்கள் அதற்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மனிதர்களைப்பார்த்து நம்முடைய வொரு முட்டையாகிறது ஆயிரத்துக்குச் சமானமாயிருக்கும், ஒரு குஞ்சாகிறது அதை விலைமதிக்கக் கூடாதென்று சொன்னார்கள். அதில் முட்டையென்றதின் கருத்தாவது தங்களுடைய மேன்மையான தரீக்கில் புகுந்த துவக்கமானவன், குஞ்சென்பதின் கருத்தாவது ஸஹியாய் பாதையில் நடந்து அல்லாஹுத்தஆலாவை திக்றுசெய்வதுகொண்டு கஸ்பு ஹயாத்தைப் பெற்றவனே அவனாயிருக்கும் ஆகையால் கவ்துல் அஃலம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் துவக்கமாயுள்ளவர்களை முட்டையைக்கொண்டும், நடு விட்டவர்களைக் குஞ்சைக்கொண்டும் ஒப்பிட்டார்கள், அதின் பயானாகிறது என் முரீதுகளிற் றுவக்கமாயுள்ள வொருவன் மற்று மஷாயிகுக்குள்ள ஆயிரம் முரீதுகளுக்கு நிகரானவன், நடு விட்டவனோ



அவனுக்கிவ்வளவென விலைமதிக்கக்கூடாது. ஆனால் துவக்கமான வரும் நடுவுள்ளவருமான இவர்களுடைய பதவிகளிப்படியாயிருக்கில் சிறப்புமுள்ளவரின் மர்தபா அக்லுக் கெட்டாது.

இன்னும் ஷெய்கு அபுல்பறஜிஷ்ஷிறி ஷெய்கு அலியைத்தொட்டும் பேசி வருகிறார்கள். ஒரு ஷெய்குக்குள்ள வொரு முரீதும், ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய முரீதைக் காணச் சிதேவியானவர்களில்லையென்று இன்னும் ஷெய்கு பக்காஇபுனு பத்வின் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். நம்மள் நாயகம் கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அஸ்ஹாபிகளானவர்களையும் சிதேவியானவர்களின் சங்கத்தில் முக மொலிவுடையவர்களாய்க் கண்டேனென்று.

ஒரு மனிதர் கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தி லவர்களுடைய முரீதில் நல்லவர்கள், கெட்டவர்களைக் குறித்துக் கேட்டார். அதற்கு நன்றி செய்தவன் எனக்குத் தீங்கு செய்தவன் நானவனுக் கென்றார்கள்.

ஷெய்கு அதிய்யுப்னு முஸாபறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். எல்லா மஷாயிகுமார்களுடைய முரீதுகளுக்கும் கிறக்காவென்னு முடிப்பையுடுத்தாட்ட நான் திராணி பெறுகிறேன், அதுபோல் கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய முரீதுக்கு கிறக்காவென்னுமுடையை யுடுத்த நான் திராணி பெறுகிறேனில்லை அஃதேனென்றால் அவர்களாகிறது கரையில்லாத சமுத்திரமும், நானாகிறது ஒரு சிறிய வாய்க்காலுமாயிருக்கிறேனென்று.

செய்யிது ஜலால் புகாரி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய [illegible] யாராகிலு மொருவரை ஜின் தொட்டதானால் (யாஹுவாறக் தஷைகிச்குத் பில் ஆலமி முஹ்யில் ஹக்கிவத்தீன் அஸைய்யிது அப்துல்காதிறல் கீலானீ) என்றோதிக்காதி லூதினா லக்கணமே நீங்கிவிடும் இனிப்பைகயர், பட்டசைமி

னைகள் இசுலாமுடையோர்களின்பேரில் மிகைத் தடர்ந்தேறின அம், அல்லது பாதைவெட்டி முறிப்பவர்களாலொருவர் பயந்தா அம் பூமியில்நின்றுங் கருமணல்களை யெடுத்து கவ்து முஹ்யித் தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய திருநாமத்தையோதி அம்மணல்களிலூதி யதை யெதிரிகளின்புறத் தாலெறிந்தால் கவ்து நாயகமவர்கள் சொன்னதுபோலந்த மணல் களைச் சத்துராதிகளின் கண்களிற் போடப்பட்டு அதனாலவர்களு டைய பார்வையை அல்லாஹுத் தஆலா குருடாக்கி அவர்களை யடைக்கிப்போடுவான். இனியொரு கருமத்திற் றட்டழிந்து இளைக்கும் நேரத்தில் கவ்து நாயகமவர்களினிடத் திப்பாரிசு தேடி னல் அவனுடைய வருத்தத்திற்குப் பகரமாக அவனுக்கு அல்லா ஹுத் தஆலா இலேசு கொடுப்பான். அவனுடைய மாட்டாங் கித்தனத்தை விட்டகன்று சந்தோஷமான மகிழ்ச்சியுண்டாகும். இனியொருவன் கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கிறுக்காவை யணிகாரனாயானால் ஏட்டேற்றமான பதவிகளைப்பெறுவான். இன் னும் கிடனுக கவ்து நாயகமாகிறவர்கள் முரீதுகளுக்கும், முஹிப் புகளுக்கும் துஆக் கேட்டிருக்கிறார்கள். அவர்களாகிறவர்கள் ஆகித்துக்கெல்லாம் குத்பாயிருக்கும். அவர்களுடைய துஆவும் றஹ்மானிடத்தில் யாதொரு ஷக்கின்றியே பேற்கப்பட்டிருக் கின்றது.

இன்னுமொருநா ளொருமனுடர் கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறாண்டவர்களைப்பார்த்து நாயகமே தங்களுடைய சமுகத்திலிருந்தின்றையி லொரு தருமத்தையும் நான் காணவில்லையேயென்று சொன்னார். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய ஏவலாள்களைப்பார்த்து பாவிக்கின்களில்நின்றும் நூற்றிகார்ப்பதுபேர்களை மகாச் சீக்கிரத்தி லழைத்துக்கொண்டு வந்து தங்களுடைய சன்னிதானத்திலாஜர் செய்யும்படி கட்டளை செய்தார்கள். அந்தப்படி கூட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள். அப்போதந்தப் பாவிக்கின்களை யிருபங்காகப் பிரித்துத் தங்க ளுக்கு வலதுபாகத்தி லெழுபதுபேர்களையும், தங்களுக்கிடது பா கத்தி லெழுபதுபேர்களையும்விட்டு நிறுத்திக்கொண்டு இருந்தங்க



ளையும் நோக்கியொரு பார்வை பார்த்தார்கள். அந்தப் பார்வை யான தெய்ததாலும், அதனால் பறக்கத்தென மாரி பெய்ததாலும் ஓரிமை கொட்டி முழிக்கும் நேரத்திற்குள் அந்தப் பாவிக்கின்க ளெல்லாம் அல்லாஹுத் தஆலாவினருளின் நேர்வழிபெற்று நன் மையிற் சேர்ந்திட்டார்கள். அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப் துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களிடத்தில் தருமத்தைப்பற்றிக் கேட்ட மனுடரை நோக்கி ஓய் மனுடனே! யின் றையி லென்னுடைய தருமத்தைக் கண்டுகொண்டாயாவென்று கேட்டார்கள்.

———:0:———

## 106-வது ஹிக்காயத்து.

———:*:———

நூற்றியாறும் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அல்லா ஹுத் தஆலா கபடஞ்செய்யாதிருக்கும்படிக் கலகளித்தி லேழு பதுதடவை வாக்கெடுத்த செய்தியைப் பேசுகிறதாயிருக்கும்.

பஹ்ஜத்துல் அஸ்றாறென்னும் கித்தாபில் பேசிவரப்படுகிறது. ஷெய்கு நஜீபுத்தீன் அப்துல்காதிறுஸ் ஸுஹ்றவர்தி றலியல்லா ஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். நாளொருநாள் ஷெ ய்குஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்திலிருந் தேன். அச்சமயத்தி லவ்விடத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப் துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுமிருந்தார்கள். ஆனலவ்விடத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல் லாஹு அன்ஹு அவர்கள் வனுப்பமும், சிறப்பும், ஆச்சரியமு முள்ள வார்த்தைகளைப் பேசினார்கள். அப்போது ஷெய்கு ஹம் மாது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து ஓய் அப்துல்காதிரே மிராச்சரியமான வார்த்தைகளை மொழி கிறீர். ஆனால் அல்லாஹுத் தஆலா வும்மைக்கொண்டு மக்று செய்திடுவானென்பதைப் பயப்படுகிறீரில்லையேயென்று சொன் னார்கள். அப்போது கவ்து நாயகமாகிய ஷெய்கு முஹ்யித்தீன்

அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சிறப்புத்தாங்கிய தங்களுடைய கையை ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய நெஞ்சில் வைத்து உம்முடைய இருதயக்கண்ணை லென்னுடைய கையிலெழுதியிருக்கிறதைப் பாருமென்று காட்டினார்கள் உடனே ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு மறதி மறந்தார்கள். அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய கையை ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய நெஞ்சைவிட்டு எடுத்தார்கள். அப்போது ஷெய்கு ஹம்மாது றலியல்லாஹு அன்ஹு சொன்னார்கள். கல்தாகிறவர்கள் அவர்களைக் கபடஞ்செய்யா திருக்கும்படிக்கு அல்லாஹுத் தஆலாவில் நின்று எழுபதுதரம் வார்த்தைப்பாடெடுத்ததாய்க் கண்டேனென்று சொல்லிப் பின்னுஞ் சொன்னார்கள். அதின்பின் குற்றமில்லை, அதின்பின் குற்றமில்லையென் றிருவிடுத்தஞ்சொல்லி இதோ அல்லாவுடைய பதுவு அதையவனுடையவர்களுக்குக்கொடுப்பான். அவனே பதுவுடையவன் என்று சொன்னார்கள்.

——:(*):——

## 107-வது ஹிக்காயத்து.

——:[*]:——

நூற்றியேழாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் விலையுயர்ந்த நாற்பது குதிரைகளை வாங்கி வைத்து நோயணிந்தவோர் முஸாபிறுக் கவிழ்தத்துக்காக ஒவ்வொருநாளும் ஒவ்வொரு குதிரையாகக் கேட்டவர்களிடத்திற் கொடுத்துக் கிருபை செய்த செய்தியைப் பேசுகிறதாயிருக்கும்.

தூரமான தேசத்திலிருந்து ஒரு மனிதர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வருணிப்புகளையும், கீர்த்திகளையும், பிரபல்யங்களையும் கேள்விப்பட்டு சுல்தானு முஹ்யித்தீன் ஆண்டவர்களைக்கண்டு தெரிசித்துக் கொள்ளவேணுமென்றெசித்து அம்மனிதர் எழுந்து பிரயாணமா



கிய பகுதாதை நாடி வந்தார். அவ்விதம் வரும்போது வழியில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குதிரை லாயத்தைச் சந்தித்தார். அப்போதவரதிற் புகுந்து பார்க்கவே அதில் நாற்பது குதிரைகளைத் தங்கத்திலும், வெள்ளியிலும் வடங்களாற் கட்டப்பட்டிருக்கிறது. மேற்படி குதிரைகளுக்குப் பட்டுப்போர்வைகளைக்கொண்டு போர்த்தப்பட்டிருக்கிறது. அப்படிக்கண்ட அந்த மனிதருடைய இருதயத்தில் வலிசியன்பவ ரெப்படி துன்யாவைத் தேடுகிறவரா யிருப்பார், சாகிப்போது கண்ட காட்சியானது ஒரு பெரிய சுல்தான்களிடத்திலுங் காணக்கூடாதே அப்படிப்பட்ட காட்சியிருக்கிறதே. இதாகிறது துன்யாவைப் பிரியம் வைத்ததற்கடையாளமல்லவா வென்ற ஆசாட்டம் வந்து அவருடைய மனதிற் கெட்ட நினைவுமுண்டாகி ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கைக்காவிநாம் வைத்திறங்காமல் வேறொரு மனுஷனுடைய தலத்திற் போயிறங்கினார். அப்பால் வவைத்திருக்கொரு வியாதி பிடித்தது, அந்தக்கடுமை வியாதியானது வைத்தியர்களையெல்லாம் மாட்டாங்கியாக்கிவிட்டது. அப்படியிருக்கையில் மகாக் கெட்டியானவொரு வைத்தியர் வந்து அந்த வியாதியஸ்தரைப் பார்த்துவிட்டு இந்த நோய்க்கு மருந்தாகிறதென்னவென்றால் இன்னஇன்னவிதமான வருணிப்புகளையுடைய நாற்பது குதிரைகளை ஒவ்வொருநாளுக் கொவ்வொன்றாக அறுத்து தினமொன்றுக்கு ஒவ்வொரு குதிரையுடைய ஈரலை யவித்துமாகநாற்பது நாளைக்கும் அந்த நாற்பது குதிரைகளின் ஈரல்களைத்தின்றால் இந்த நோயானது சுகமாகிவிடும். இதுவேயல்லாது வேறே மருந்தொன்றுமில்லையென்று சொன்னார். அது கேட்டப்போதவ்விடத்திற் கூடியிருந்த ஜனங்களெல்லோர்களு மாலோசித்து இவ்விதமான வருணிப்புப்பெற்ற குதிரைகளானது நம்மள் நாயகம் கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திலேயல்லாது வேறொருவரிடத்திலுங் கிடையாது. ஆகையாலவர்களுடைய ஹுஜூறத்துக்கு நாமடுத்தவர்களிடத்திற் குதிரைகளைக் கேட்போம், அவர்களோ மகாக் கொடையாளரானவர்கள். ஆகையால் அவர்கள் நம்மைப் பேறுகேட்டி லாக்கமாட்டார்களென்று சொல்லிக்கொண்டு அவர்களனைவர்களு மெழுந்துபோய் கவ்துல் அஃலம்

ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தரும சன்னிதானத்தை நோக்கி எங்கள் நாயகமே யின்னவின்ன வருணிப்புள்ள குதிரை யொன்றெங்களுக்குத் தரவேணுமென்று கேட்டார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய நாற்பது குதிரைகளில் தினமொரு குதிரையைக் கொடுக்கும்படியாகத் தங்களேவலாட்களுக் கேவினார்கள், அவ்விதமொரு குதிரையைக் கொடுத்தபின்னர் இரண்டாம் நாளிலுமது போலவே வந்து எங்கள் நாயகமே யின்னுமொரு குதிரை தரவேணுமென்று கேட்டார்கள். அப்போது மவ்விதமாகவே கொடுக்கப்பட்டது. ஆக இந்த விதமாக நாற்பது நாளும் வந்து வந்து குதிரை கேட்டார்கள். அந்தப்படி நாற்பதுநாளும் நாற்பது குதிரைகளையுங் கொடுக்கும்படிக் குத்தரவு செய்து கொடுக்கப்பட்டு அந்த நாற்பது குதிரைகளையு மறுத்து அதினிறச்சிகளை யந்த நோயாளிக் கவிழ்தமாய்க் கொடுத்தார்கள். அப்பால் அல்லாஹுத் தஆலா அந்த நோயாளியுடைய நோயைச் சுகமாக்கி வைத்தான் அப்பாலந்த நோய்கொண்டு சுகம் பெற்ற மனிதர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய திருச் சமுகத்தில் வந்து வந்தனம் புரிந்து கைகட்டி வாய்பொத்தி மகா அதப்பு மரியாதையுடன் துதி செய்தவராய் நின்றார். அப்போதவரைப்பார்த்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஓய், மனிதரே நீர் கண்டீரே யந்தக் குதிரைகள் நாற்பதையும் உமக்காகத்தான் விலைக்கு வாங்கினேன். ஏனென்றால் நீர் நம்மளவில் மனப் பிரியம் வைத்து நாடி உம்முடைய இல்லை விட்டும் வெளி யேறினபோதே நமக் கறிவிக்கப்பட்டது. அந்தாவ தென்னவெனில் உம்மைக் கொன்றுவிடக்கூடிய கொடூரமான ஒரு நோயானது உம்மைத் தொடுகிறதென்றும் அதற்கிந்த வருணிப்புப்பெற்ற நாற்பது குதிரைகளினிறச்சியைத் தவிர வேறி யாதொரு அவிழ்தமு மில்லையென்று மெனக் கறிவிக்கப்பட்டது. ஆகையாலந்தக் குதிரைகள் நாற்பதையும் உமக்காகவே விலைக் கெடுத்தேன் அப்பால் நீர் நம்முடைய குதிரைப் பந்தியின் வாட்டையில் நடந்து வரும்போது நிரலைகளையும், அவைகளின் கட்டுக் கயறுகளான வடங்களையும், தூசி, குளிர், சூடு இவைகளைக் காக்கும்படியான போர்வைகளையும் கண்ட மாத்திரத்தி லும்மு



டைய அக்கிதாவெல்லாம் பிசகிப் பேதலித்து நாமுடைய தைக்காவல்லாது வேறே ரிடஞ் சென்றிறங்கித் தரிபட்டீர் ஆகையா லவ்விடத்தி லும்மைக்கொண் டிறங்கினதெல்லா மிறங்கினதென்று சொன்னார்கள். இம்மொழியான தம் மனிதன் காதிற் புகுதவே அம்மனிதரக்கணமே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் பிழை பொறுக்கத்தேடித் தன்னுடைய திருணயத்தைச்சரிப்படுத்திக்கொண்டார். பின்பு சவ்தால் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களந்தக் கண்ணுக் கினிய குதிரைகளைக் கட்டிய தங்கம், வெள்ளியாலுள்ள வடங்களையும், அக்குதிரைகளுக்குப் போர்த்தப்பட்டிருந்த பட்டுப் போர்வைகளையும் அம்மனிதருக்கு அவிழ்தஞ் சொன்ன வைத்தியருக்குக் கொடுக்கும்படிக் கேவி யவ்விதங் கொடுத்துவிட்டார்கள். இன்னுமந்த ஹக்கீம் லாஹிபாகிய வைத்தியர் நஸ்றானிக் கோலத்திலிருந்ததாகவும், இக்காரணத்தா லுடனே யவர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களின் கையின்பேரில் தௌபாச்செய்து இஸ்லாமாகி விட்டதாகவும் சொல்லப்படுகிறது. றலியல்லாஹு அன்ஹு வஅன் ஹும்.

——(*)——

## 108-வது ஹிக்காயத்து.

——:(*):——

நூற்றியெட்டாம் ஹிக்காயத்தாகிறது சவ்தால் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மிருகத்தைக் கட்டியிருந்த பந்தியின் வாசலிலுள்ள நாயானது ஒரு புலியை நொறுங்கக்கொண்ட செய்தியைப் பேசுகிறதாயிருக்கும்.

ஷெய்கு அஹ்மது ஸன்தா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு புலியின்பேரிலேறி சவாராகி மற்ற அவ்லியாக்களிடத்திற் போயிறங்கி யிருப்பதும் அந்த அவ்லியாக்களெல்லோரும் ஷெய்கு அஹ்மது ஸன்தா றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு விருந்து கொடுக்கிறதாயிருந்தா லந்தப் புலிக்கும் ஒரு மாட்

டைத் தின்னும்படி விருந்து கொடுப்பது வழக்கமாக நடந்து கொண்டிருந்தது. அப்படி நடந்து வருகையில் ஒரு தினத்தில் ஷெய்கு அஹ்மது ஸனதா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவர்களுடைய வழக்கப்படி புலியின்பேரிற் சவாராகிப் பகுதாது நகரத்தில் வந்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தி லிறங்கினார்கள். அப்போது மனிதர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு இந்தப் புலிக்கு மாடு கொடுக்கும் வழக்கத்தைச் சொல்லிக் காட்டினதாலா புஸ்லாக்கிவாவென்னு மிடைக்குத் தண்ணீர் புகட்டும் சாலில் நின்றுமுள்ள ஒரு பசுவைக் கொடுக்கவென்று சொன்னார்கள். அதுபோலந்தப் புலியை மாட்டுப் பந்தியினுள்ளே கூட்டிவந்தார்கள். அப்பந்தியின் வாசலிலொரு நாய்க்குட்டியு முண்டாயிருந்தது. ஆகையால் அவர்கள் பந்தியினுள்ளே செல்லும்போது அந்த நாயுந் தொடர்ந்து சென்றது பின்பு மேற்கூறிய பசுவை யந்தப் புலியிடத்தே முடுகவிட்டு அந்தப் பசுவைப் புலியானது பாய்ந்தருந்த நாடியபோது தொடர்ந்து சென்ற நாயான தந்தப் புலியைப் பாய்ந் திருஞ்சிவிட்டது. அது கண்டு ஷெய்கு அஹ்மது ஸன்தா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹலறத்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்தில் வந்து அவர்களுடைய பறக்கத்துப் பெற்ற கையைப்பிடித்து முத்தமிட்டுத் தௌபாச் செய்து மீண்டார்கள்.

——(*)——

## 109-வது ஹிக்காயத்து.

——[*]——

நூற்றியொன்பதாம் ஹிக்காயத்தாகிறது கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய குணங்களைக் குறித்துப் பேசுவதாயிருக்கும்.

கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறவர்கள் கண்ணீர் தீபரமானவர்கள், அல்லாஹுத் தஆலாவைப் பயப்படுவதிற் கொரேமான



வர்கள், அவர்களை யெவர்கள் காண்கிலும் பயமிருப்பார்கள், இன்னு மவர்கள் ஞானக் கபூல் செய்யப்பட்டவர்கள், நற்குணமும், சற்குணமுமுடையவர்கள், இன்னுமவர்கள் சங்கையாளரானவர்கள், அவர்க ளெங்கும் வியர்வையால் மணந்தவர்கள், பங்கம், கெடுதி யிவைகளைவிட்ட கன்றிவர்கள், ஈனுதீக ளடக்கலில் நின்றுமவர்கள் ஹக்கனில் முடுகினவர்கள் இன்னு மவர்களாகிறவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய ஹுறுமத்துக்குக் குறைவு வந்திடில் அதாவது யாராவதொருவர் கெடுவேலை செய்திடில் அவர்களை யுபக்கிளை செய்வதிற் கடிதானவர்கள், தனக்காகக் கோபிக்கமாட்டார்கள், நாயனல்லாதவர்களுக் குதவியாகமாட்டார்கள், பிச்சை கேட்பவர்களைத் தட்டி வெருட்டமாட்டார்கள், தங்களிரு படவையி லொன்றைக் கொண்டாகிலுந் தருமஞ் செய்வார்கள், அல்லாஹுத் தஆலாவுடைய நற் கருமத்தில் நல்லுதவிக் கட்டளையிடுத லவர்களுக்குப் பரிவட்டமானது சொல், செயலிவைகளிற் பல வந்தஞ் செய்வதுகொண் டுதவியாயிருந்தது, இன்னு மவர்களுடைய அறிவின் வெடிப்பானது தூய்மையாக்கிறதாயிருந்தது, ஹக்குக் கவர்களுடைய முடுகுதலானது அதபு வருத்துவதாயிருந்தது, இன்னுமவர்களுடைய கல்பின் ஹுறுமிறது புகையளாயிருந்தது, இன்னு மஃரிபாத்துறையி லவர்களுடைய பணிவிடையானது ஹக்குடனெதிர் மொழி பேசும் உசாவுதலென்னுந் துணையாயிருந்தது, இன்னு மவர்களுக்கு றப்புடைய கோட்டமானது தாதனாக இருந்தது, இன்னுமவர்கள் றஹ்மானுடனுள்ள மருவுத லவர்களுக்குத் தோழனாக இருந்தது, இன்னுமவர்களுக்குச் சமானமாதாகிறது நடபடிக்கையாயிருந்தது, உண்மையாகிற தவர்களுக்கு வருத்தகச் சரக்காயிருந்தது, அமர்த்தியும் பொறுமையுமாகிற தவர்களுக்குத் தொழிலாயிருந்தது, திக்றுக ளவர்களுக்கு மந்திரியாயிருந்தது, பிக்றுக ளவர்களுக் கிராக்கதை பேசுகிறதாயிருந்தது, கஷ்புகளாகிறதவர்களுக்கு வஜீபனமாயிருந்தது, முஷாஹதா அவர்களுக்கு சுவாத்தியமாயிருந்தது, ஷரீஅத்தி னொழுங்குக ளவர்களுக்கு வெளிக்கோலமாயிருந்தது, ஹக்கீக்கத்தினுள்ளான தவர்களுக் கடக்கமாயிருந்தது.

——(·)——

## 110-வது ஹிக்காயத்து.

—(*)—

நூற்றிப்பத்தாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கோலம் குறிவினைகளிற் பேசுகிறதாயிருக்கும்.

கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களாகிறவர்கள் உடல் மெலிவானவர்கள், நற்ற வுயரமானவர்கள், நெஞ்சகலமானவர்கள், தாடி விரிவானவர்கள், தாடி நீளமானவர்கள், சிவப்புக்கலந்த வெள்ளைப்பொது நிறமானவர்கள், கூடிய புருவமுடையவர்கள், கனத்த சத்தமுள்ளவர்கள், தெளிவான அடையாளமும், உயர்ந்த தகுதியும் நிறைந்த கல்வியுமாகிய இவ்வருணிப்புகளுடையவர்களாயிருந்தார்கள். றழியல்லாஹு அன்ஹு.

—(*)—

## 111-வது ஹிக்காயத்து.

—*—

நூற்றிப்பதினோராம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அஸ்ஹாபிமார்களையும், கியாமநாள் பரியந்தமுமுள்ள அவர்களுடைய முரீதுகளின் நாமங்களை யெழுதப்பட்டவொரு கடிதத்தை அல்லாஹுத் தஆலா கொடுத்திருக்கிற காரணத்தைப் பேசுகிறதாயிருக்கும்.

பஹ்ஜத்துல் அஸ்றாறென்னுங் கித்தாபிற் சொல்லப்பட்டிருக்கிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் திருவாய்மலருளிச்செய்திருக்கிறார்கள். அஃதென்னவெனில், கண்ணெட்டின தூரத்துக்கொரு கடிதமெனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலென்னுடைய அஸ்ஹாபிமார்களுடைய நாமங்களையும், கியாமத்துநாள்வரையிலுமுள்ள எனது முரீதுகளுடைய நாமங்களையு மெழுதப்பட்டிருக்கிறது. இன்னும் அவர்களை உமக்கு நன்கொடையாய்க் கொடுக்கப்பட்டதென்



றெனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் நரகத்துக் காவற்காரனாகிய மாலிக்கைப்பார்த்து உம்மிடத்திலெனது அஸ்ஹாபிமார்களிலின்றும் யாருமுண்டோவென்று கேட்டேன். அதற்கவரில்லையென்று சொல்லிவிட்டார். என்னுடைய நாயகனின் வலுப்பத்தின்பேரிலும், மேன்மையின்பேரிலு மாணையாக எனது முரீதுகளின்மேலெனது கையாகிறதெப்படியிருக்குமானால் பூமியின்மேல் வானமூடியிருக்கிறதெப்படியோ அப்படியாயிருக்கும். என்னுடைய முரீதுகள் திருத்தமில்லாதிருந்தாலும் நான் திருத்தமுள்ளவனாயிருக்கிறேன். இன்னமெனது றப்புடைய இஸ்ஸத்தென்னும் ஜலாலின்பேரி லாணையாக அவனென்னையும், என்னுடைய முரீதுகளையும் சுவனபதியினில் புகுதி வைக்கிறமட்டும் என்று நாயகாதிபன் சமுகத்தைவிட்டு மென் திருகாலும் நீங்காதிருக்குமென் றருளியிருக்கிறார்கள்.

றூஸக்கினனுபூவென்னுங் கித்தாபிற் ஷெய்கு குற்பு இபுனி அஷ்றபிர்றாயீ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறவர்களாயிருந்தார்கள். என்னுடைய முரீதுகள் திருத்தமில்லாதவர்களாயிருந்திடினும் நான் திருத்தமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையாலெனது றப்புடைய இஸ்ஸத்தின்மேலாணையாக நான் மஷ்ரிக்கிலும், என்னுடைய முரீதுகள் மஃரிபிலுமாயிருந்தாலுஞ் சரியே. யெனது கையானதென்னுடைய முரீதுகளின் சிகில்பேரிலாயிருக்கும்; அவர்களுடைய அவ்றத்துகளைத் திறக்கப்பட்டால் நான் மஷ்ரிக்கிலிருந்தென்னுடைய கையை நீட்டி மறைத்துக்கொள்வேன். இன்னமென்னுடைய நாயனின் சிறப்பின்பேரி லாணையாகக் கியாமநாளி லென்னுடைய முரீதுகளெல்லாம் ஜஹன்னத்தைவிட்டுக் கடக்குமளவும் நானந்த ஜஹன்னத்துடைய வாசலிற் றரிபட்டு நிற்பேன். என் முரீதுகளை நரகத்திற் புகுதவிக்கமாட்டேனென்று அல்லாஹுத் தஆலா எனக்கு உறுதிமானந்தந்திட்டான். ஆகையாலென்னளவிற் சேர்ந்தவனை நானேற்புக்கொண்டு அவனை அல்லாஹுத் தஆலாவினளவில் முன்னெருக்கும்படியாகச் செய்திடுவேன். இன்னமென்னுடைய முரீதுகளைக் கப்றிடத்திற் றிடுக்கத்

திலாங்காதிருக்கும்படி முன்கற்றாக்கிடத்தில் வாக்கெடுத்திருக்கிறேனென்று சொல்லுகிறவர்களாயிருந்தார்கள்.

—[]—

## 112-வது ஹிக்காயத்து.

நூற்றிப் பனிரண்டாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மத்றசாக் கட்டிடத்தில் முளைத்திருக்கும் புற்பூண்டுகளையுந் தின்று அவ்விடத்திலுள்ள தண்ணீரையுங் குடிப்பதால் மாண்டோர்கள் வாந்தி, பேதியைவிட்டும் சுவாத்தியம்பெற்ற சங்கதியைப் பேசுகிறதாயிருக்கும்.

உலமாக்கள் பேசிவந்திருக்கிறார்கள். கவுதுல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காலத்தில் பக்தாது நகரில் உபாக்குளப்பமுண்டாகி அதனால் ஆண்பெண்ணென ஜனங்களில் நாளொன்றுக்குப் பத்தி லட்சம் பேர்களுக்கு மதிகமாக மவுத்தாகிறதாயிருந்தது. ஆகையால் ஜனங்களெல்லாம் பயந்து மனமயங்கி ஹலறத்து கவுதுல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்திற் போய் முறையிட்டார்கள். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் முறையிட்ட ஜனங்களை நோக்கி ஓய் ஜனங்களே நீங்களென்னுடைய மத்றசாவின் சூழால் முளைத்திருக்கும் புற்பூண்டுகளை யெடுத்தரைத்துப் புசித்தீர்களேயானால் அல்லாஹுத் தஆலா அதின்பொருட்டைக்கொண்டு உபா நோயையும், அதுபோலொத்த நோய்களையும், மற்றுமெவ்வித வியாதிகளையும் சுகமாக்கி வைப்பானென்று திருவாய்மலர்ந்தருளிச்செய்தார்கள். அவ்விதத் திருவுளமானதை மனுடர்களெல்லாரும்பற்றிப் பிடித்து அம்முறை போத்தின்று வந்ததிற் சுகமும், சௌக்கியமும்பெற்றார்கள். அப்பால் மருந்துக்கு வரும் ஜனங்களதிக நெருக்கமானபடியால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மருந்துக்குவந்த ஜனங்களைப்பார்த்து ஓய் ஜனங்களே என்னு



மத்றசாவிலுள்ள தண்ணீரிலின்று மொரு துளியைக்குடித்தாலும் அல்லாஹுத் தஆலா சுகங் கொடுப்பானென்று திருவுளமானார்கள். அதுபோலத்த பறக்கத்தைப்பெற்ற மத்றசாவிலுள்ள தண்ணீரையுங் குடித்தார்கள். நாயகமவர்களுடைய சொற்படி ஜனங்களெல்லாம் நிறப்பமான சுகத்தையடைந்தார்கள். அதுமுதல் அத்தேசத்தில் தாவூன் வரவேயில்லை.

—(*)—

## 113-வது ஹிக்காயத்து.

நூற்றிப்பதிமூன்றாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்த வுஜூதாகிறது அப்துல்காதிறுடைய வுஜூதில்லை. அதாவதென்னுடைய வுஜூதில்லையென்னுடைய பாட்டனார் முஹம்மது றசூலல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய வுஜூதாயிருக்குமென்று சொன்னசெய்தியைப் பேசுகிறதாயிருக்கும்.

சொல்லப்படுகிறது ஹலறத்து கவுதுல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருநாள் தங்கள் வீட்டுக்குப்போனார்கள். அவர்களுடைய குமாரராகிய செய்யிது அப்துல்ஜப்பாறு றலியல்லாஹு அன்ஹு அவர்களும் அவர்களைப் பின்றொடர்ந்துபோனார்கள். அப்பாலவர்கள் வீட்டையடுத்து வீட்டிற் புகுதுஞ்சமயத்தில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைக் காணவில்லை. அப்போது மகனாகிய செய்யிது அப்துல்ஜப்பாறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வீட்டிற் புகுந்து தங்களுடைய தாயாரவர்களை நோக்கி அம்மா என்னுடைய தகப்பனாராகிய கவுதுல்அஃலம் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடனே அவர்களைப் பின்றொடர்ந்து நம்முடைய வாசல்வரையிலும் வந்தேன். வீட்டிற் புகுதமுன் அவர்களை நான் காணவில்லையென்று சொன்னார்கள். அதற்கவர்கள் மகனைப்பார்த்து மகனே அவ்விதமின்று மட்டுமென்றென்னாதீர். பதினொன்றாக வீட்டிற் புகுதவேயில்லையென்று சொன்னார்கள். அதுகேட்டு செய்யிது அப்துல்

ஐப்பாறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் தகப்பனார் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இரவுகளில் வணக்கஞ்செய்யும் தலமாகிய கல்வத்தறையளவிற் போய்ப்பார்த்தார்கள். அந்த அறையானது உள்புறத்தாற் பூட்டப்பட்டிருந்தது. அதாவது நமது தகப்பனார் கவ்துல் அஃலம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இதற்குள்ளேதானிருக்கிறார்களென் றறிந்து அவ்வாசலின் கண்ணேயே பாதியிரவாகுமளவும் கைகட்டி வாய்பொத்தி மகா அதபுடனிலையில் நின்றவர்களாய்த் தரிபட்டிருந்தார்கள். அப்பால் நடுவிரவான நேரத்தில் கவ்துநாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களந்த வாயிலைத்திறந்து தங்கள் மகனார் செய்யிது அப்துல்ஜப்பாறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி மகனே நான் வீட்டளவிற் போகாதிருப்பது எல்லா வக்திலுமழகெனவே நீர் நும்முடைய நபுஸில் கொட்டமிடுகிறீர். அப்படி நீ எண்ணுவதுபோற் கருமமாயிருக்கில் பிள்ளைப் பெறுவதும், பிறந்தோர் பெருகுவதும் பாழாகிவிடும். ஆனால் ஹக்கீக்கத்திலிந்த கல்வத்தறையளவில் வருவேன். அது நீர் கண்டதுபோல் கல்குகள் பார்வையில் நான் வீட்டிற்குப் போகிறதுபோற் றோறுமென் றருளிச்செய்தார்கள்.

அதுகேட்டு செய்யிது அப்துல்ஜப்பாறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அகமகிழ்ச்சியும், முகமலர்ச்சியு மானந்தமு முண்டாகி யவர்கள் தகப்பனாராகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து மகா அதப் மரியாதையுடன் எங்கள் பிதாவாகிய நாயகமே முகுத்தாறாகிய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கலா ஹாஜத்துக் கிருந்தார்களாகில் வெளிப்படுவதைப் பூமி விழுங்கிவிடுகிறதும், அவர்களின் வியர்வையானது அத்தர்வாசம் வீசுகிறதும், அவர்கள் மேனியில் ஈ யெறும்பணுகாமலிருப்பதுமாயிருந்ததே அவைகளாகிறது அவர்களுக்குச் சொந்தமான கருமத்திலுள்ளதாச்சுதே அதுபோற் றங்களுடைய சமுகத்திலுங் காணலாமோ வென்று கேட்டார்கள். அதற்கு மகனே அப்துல்காதிறு திட்டமாகப் பணிவாகித் தன்னுடைய ஜத்தாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய தாத்தில் பக்



காவாகி விட்டதாலென்று சொல்லி அல்லாவின் ஆணையிந்த உஜூதாகிறது எனது ஜத்தாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய வுஜூதே யல்லாது, அப்துல்காதிறுடைய வுஜூதில்லையென்று சொன்னார்கள். பின்னும் செய்யிது அப்துல் ஜப்பாறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் தகப்பனாராகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு மேகங் குடையிடுவதாயிருந்ததே அதுபோற் றங்களுக்குங் குடையிட வேண்டுமே அப்படியில்லாத காரணமென்னவென்று கேட்டார்கள். அதற்கு எனதருமை மகனே அவ்விதமெனக்குங் குடையிடக் கூடியதுதான் ஆனாலவ்விதங் குடையிடுமாகில் கல்குகளெல்லாமென்னையும் நபியென் றெண்ணிவிடுவார்கள். ஆகையாலதை நான் வேண்டாமென்று விட்டுவிட்டேனென்று சொல்லிவிட்டார்கள்.

## 114-வது ஹிக்காயத்து.

நாற்றிப்பதினாலாம் ஹிக்காயத்தாகிறது கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கல்விகளிலும், வத்தனங்களிலும், விருதுகளிலும் பேசுவதாயிருக்கும்.

பேசிலப்படுகிறது திட்டமாக மஷ்ஹூர்களுக் காகாகிய கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பிராயத்துடையவர்களான அறுநூற்றிஐம்பது சிஷர்களிருந்தார்கள், அவர்களுக்கு நாயகம் கவ்து றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தினந்தோறு மோதிக்கொடுப்பார்கள். அவர்களில் யாருக்காவது கலமில்லாதிருந்தால் தங்களுடைய கலங்களில் நின்றுங் கொடுத்துக் கொள்வார்கள். யாராவது முரீது பெற்றார்களானால் தங்களுடைய கையால் சில்சிலா வெழுதிக் கொடுப்பார்கள் தங்களுக்கு வுழூ முறிந்திடுமாகில் உடனே அந்த வுழூவுக்குப் பகரமாகக் குளித்து வுழூச் செய்துக்கொள்

வார்கள். அப்படி நடந்து வருகையில் நாயகம் கவ்துல் அஃலம்
ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு ஜீலியல்லாஹு அன்ஹு
அவர்களுக்கு ஒரு தினத்தில் வயற்றோட்ட முண்டாகி யன்றிரவில்
ஐம்பத்திரண்டு தடவை கலாவுக்குப் போனார்கள். அப்போ தொவ்
வொரு தடவை கலாவுக்குப் போகுந் தோறெல்லாம் ஒவ்வொரு
தடவைகளி லங்குளித்துக்கொண்டார்கள். இன்னுமவர்களுடைய
காதிம்கள் தருவேஷ்களுக்காக ஏதேனும் வாங்கி வருவதற்குக்
கடைக்குப் போக வருத்தப்படுவாராகில் தங்கள் பாட்டனார் ஸல்
லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களைத் தொடர்ந்து நடப்பதற்
காக தாங்களே கடைவீதிக்குப்போய் வேண்டுமான சாமான்களை
வாங்கிக்கொண்டு வருவார்கள். இன்னும் ஜமாஅத்துடனே ஸபறு
போய் ஒரு தலத்தி லிறங்கினார்களானால் தங்கள் கையாற் கோது
மையைத் திரித்து மாவைக் குழைத்து ரொட்டிசுட்டு ஜமாஅத்து
களுக்குப் பங்கிடுவார்கள். இன்னும் தங்களைத் தெரிசிக்க வந்த
வர்களைக் கனதியாக்கி யவர்களுக்குத் தாழ்ச்சிமை செய்து அவர்
களைச் சங்கையாக்கி வைப்பார்கள். இன்னு மிறைச்சிகளிற் கொ
ழுத்தவைகளை மிகுந்த நாட்களுக்கு விட்டுவிடுவார்கள்.

ஒருநாள் ஏழு சிறு குழந்தைகளும் அது அதுகளுடைய கை
யில் அரை யரை திரகங்களைக் கொண்டுவந்து நாயகம் கவ்துல்
அஃலமவர்களுடைய கையிற் கொடுத்து அக்குழந்தைக ளேழு
மது அதுகளுக் கிச்சித்த வஸ்துகளை வாங்கிக் கேட்டதுகள் அப்
போது கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு
ஜீலியல்லாஹு அன்ஹு அவர்கள் கடைவீதிக்கேகி யந்தக் குழ
ந்தைகளின் மனதுக்கேற்ற வஸ்துகளை வாங்கிக்கொண்டு வந்து
அந்தந்தக்குழந்தைகளின் கையிற்கொடுத்தார்கள். இன்னும்ஷெய்கு
முஹ்யித்தீன் அப்துல்காதிறு ஜீலியல்லாஹு அன்ஹு அவர்க
ளுக்கு தங்களுடைய சிறப்பான வுதயத்தினால் நாளொன்றுக்கு
காணங்களாலிருபது கருமத்துகள் வெளிப்படுகிறதும், அவை
களை யவர்கள் மறைக்கிறவர்களுமா யிருந்தார்கள். இன்னுமவர்
கள் திருவாயால் அல்லாஹுத் தஆலாவில் நின்று மொரு ஏவல்,
அல்லதொரு ஹிக்மத் திவைகளுக்காகவே யல்லாது யாராவதொ
ருவன் கருமத்துகளை மறைக்காமல் வெளிப்படுத்துவானாகில் அ
வன் துன்யாவைத் தேடுகிறவனாயிருக்கிறானென்றும், இன்னமு மெ



னுடைய முரீதாகவே யொருவன் வெளிப்பட்டு என்னுடைய
பிற்கிளைகள், அல்ல தென்னுடைய சலீபாக்க ளிவர்களால் கிலா
பத்தும் பெற்று, கருமத்துடைய மந்தபானையுஞ் சேர்ந்து தன்
னுடைய நாட்டங்களையுந் தேட்டங்களையும் வெளிப்படுத்துவானா
கில் அவனிருபதிலும் முகம் கருப்படைந்தவனாக ஆய்விடுவா
னென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னுமவர்கள் தங்கள் குமாரராகிய செய்யிது யஹ்யா அ
வர்களை யீன்றெடுத்த மாதா அவர்களுக்குச் சுகமில்லா திருக்கும்
போது தங்கள் திருக்கரத்தாற் கோதுமையைத் திருகையிலிட்டுத்
திரித்து மாவாக்கி ரொட்டி சுட்டு, கூஜாவிற் றண்ணீருமெடுத்துத்
தோளில் வைத்துச் சுமந்து மேற்படி ரொட்டியையும், தண்ணீரை
யுங் கொண்டுவந்து செய்யிது யஹ்யா அவர்களுடைய தாயாருக்
குக் கொடுத்தார்களாம். எல்லா நாட்களிலும் ஆயிரமாயிரம்
றக்அத்துகளைத் தொழுது வந்தார்கள். சூறத்துல் முஸம்மிலு, அல்
லது சூறத்துர் றஹ்மானு இவைகளை யோதி வருவார்கள். இன்
னும் சூறத்துல இகுலாஸை ஓதினால் நூறுதடவைக்குக் குறையா
தோதுவார்கள். எல்லாம் ஒவ்வொரு பறுலான தொழுகையின்
பின்னிலும், ஒவ்வொரு கத்மும் ஓதுவார்கள். எல்லா வொவ்
வொரு இரவுகளிலும் அறுபனிய்யாவென்னும் அசுமாவை அய்
னூற்றி அறுபது தர மோதுவார்கள். ஒவ்வொரு பகல்களிலு மப்
படியே ஓதுவார்கள். ஹுறாத் தொழுகைக்குப்பின் துஆனைதியை
யோதுவார்கள். அதுபோல் அஸறுத் தொழுகைக்குப் பின்னும்,
தஹஜ்ஜுத்துத் தொழுகைக்குப் பின்னும் அந்த துஆனைதியை
யோதுவார்கள். இன்னும் ஸலாத்துல் குபுறுவையும், அஸ்மாவுல்
ஹுஸ்னாவையும், அஸ்மாவுந் நபியையும் நாளொன்றுக் காயிரந்
தடவை யோதுவார்கள்.

அப்படி நடந்து வருகையில் ஒருநாள் தினத்தில் சில மனிதர்
கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு ஜீலியல்லாஹு அன்
ஹு அவர்களைப்பார்த்து எங்கள் நாயகமே தௌஹீதென்
றொருமைப்படுத்துத லென்னவென்று கேட்டார்கள். அதற்கு
நாயக மவர்கள் கேட்ட மனிதர்களைப்பார்த்து ஓய், ஜனங்களே
தௌஹீதில் தௌஹீதை விடுவதுதான் தௌஹீது. ஆனதினால்
நாவுகொண்டு பேசவுங்கூடாது, இந்தக் கல்பி லாசரடவுங்கூடாது,

இந்தக் கண்கொண்டு காணவுங்கூடாது, இந்தக் காதுகொண்டு கேட்கவுங்கூடாது, இதுதான் தௌஹீதெனு மெடுப்பு, மற்றவைகளெல்லா ஹௌஸென்பதாயிருக்குமென்று சொன்னார்கள்.

——:o:——

## 115-வது ஹிக்காயத்து.

——:(*):——

நூற்றிப்பதினைந்தாம் ஹிக்காயத்தாகிறது கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய முரீதுகளில் நின்று மொரு பெண்பிள்ளையை ஒரு பாவிக்கான கெட்டவன் ஸினாச் செயல் செய்ய நாடி வரும்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களறிந்து அச்செயலை விட்டும் விலக்கி வைத்த விபரத்தைப் பேசுகிறதாயிருக்கும்.

அஃதென்னவெனில் நாயகம் கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய முரீதுகளில் நின்று மொரு அழகான பெண்பிள்ளை யுண்டாயிருந்தாள் அவள் நாயகமவர்களுடைய ஹுஜூறத்திற் சேர முன்னேயே அவள்பேரி லொரு கெட்ட பாவிக்கான வனிச்சித்திருந்தான் அப்படியிருக்கையில் ஒருநாளந்தப் பெண்பிள்ளையானவள் தன்னுடைய ஹாஜத்துக்காக வேண்டி மலைப்பொதும்பளவிற் போனாள். அவ்விதம் போகிறதை யந்தப் பாவிக்கானவ னறிந்து தானுமவளைப் பின்றொடர்ந்து போனான். அப்படிப்போ யவளை யடுத்து அவளுடைய காவல் சிறந்த பத்தினித்தனமென்னு முந்தானியை வௌது செய்ய நாடினான், நஜீஸாக்க, அஃதாவது ஸினாச்செய்ய நாடினான். அப்போதந்த ஆபத்தை விட்டும் விலகிக்கொள்ள அப்பெண்பிள்ளைக்கி யாதொரு விடம்பாடுங் காணவில்லை. அந்நேரத்தில் கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய திருநாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டு அறபு வார்த்தையைக் கொண்டிரட்சிக்கத் தேடினாள், அதின் பொருளாகிறது கவ்துல் அஃலமே யென்னை யிரட்சித்துக் காப்பாற்றவேண்டும், மனுஜின் இருவகைக் கூட்டத்திற்



ளும் கவ்தானவர்களே யென்னை யிரட்சியுங்கள், ஷெய்கு முஹ்யித்தீனே யென்னை யிரட்சியுங்கள், என் செய்யிது அப்துல்காதிறே யென்னை யிரட்சியுங்களென்று சொன்னாள். அப்படி ஹலறத்தவர்களை முன்னிறுத்திக்கொண் டிரட்சிக்கத் தேடும்போது ஹலறத்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய மத்றசாவில் உலுச் செய்துக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்கையி லிந்தப் பெண்பிள்ளையுடைய கூப்பிடுதலை யறிந்து தங்களுடைய பாதார விந்தத்தி லணிந்திருந்த பாதகுறடுக ளிரண்டையுமெடுத் தெறிந்தார்கள். அந்த மிதியடிக ளிரண்டும் அந்தப் பாவிக்காரனவன் தன்னுடைய நாட்டத்தளவிற் சேர முன்னமே யவன் தலையில் விழுந்தடித் துடைத்து யிதைக் கொன்றுவிட்டது. அப்பாலந்தப் பெண்பிள்ளையானவளந்த மிதியடி யிரண்டையு மெடுத்துக்கொண்டுவந்து ஹலறத்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்திற் கூடியிருந்த ஜனங்களுக்கெல்லாம் தன் விஷயத்தில் நடந்த சங்கதிகள் முழுவதையு மறிவித்தாள்.

——:[*]:——

## 116-வது ஹிக்காயத்து.

——:(*):——

நூற்றிப்பதினாறாவது ஹிக்காயத்தாகிறது ஒரு வர்த்தகர் ஒட்டகத்திற் சரக்கேற்றிக்கொண்டு வியாபாரஞ்செய்ய ஸபறு செய்ததில் மேற்படி சரக்குடன் ஒட்டகந் தவறிவிட்டபடியால் அந்நேரத்திலந்த வர்த்தகர் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹுஜூறத்தி லிரட்சிக்கத் தேடியதா லந்த ஒட்டகமீதேற்றிய சரக்குகளைப் பெற்றுக்கொண்ட செய்தியிற் பேசுகிறதாயிருக்கும்.

ஒரு வர்த்தகரானவர் வியாபாரஞ்செய்வதற் கயல்தேசத்திற்குப் போவதற்காகக் காபிலாக்களை வழிபார்த்திருந்துக் காபிலா பிரயாணமாகும்போது தன்னுடைய ஒட்டகங்களின்மீது சீனிப் பாரங்களேற்றிக்கொண்டு தானுமந்தக் காபிலாவுடனே புறப்பட்டு நடுவழியிற் போகும்போது அந்த வொட்டகங்களானது

அதிலேற்றப்பட்ட சரக்குகளுடனே அவரைவிட்டுத் தவறி மறைந்துவிட்டதுகள். அப்பாலவ ரவைகளைப் பற்பல விடங்களிற்றேடியுங் கண்டுபிடியாததனால் தஹய்யறிலாகி ஆலோசித்துக்கொண்டு நின்றார். அவருமோ ஷெய்கு முஹ்றபித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய முரீதிலுள்ளவரா யிருந்தார். ஆகையா லந்நேரத்தி லவருடைய விருதயத்திலுண்மையாக ஷெய்கு முஹ்றபித்தீனாண்டவர்கள்பேரில் நிருணயங்கொண்டவராயவருடைய சத்தத்தை யுயர்த்தி ஸையிதி அப்துல்காதிறே யென்னு ஒட்டகங்களெல்லா மவைகளிலேற்றிய சரக்குகளான சுமைகளுடனே யென்னைவிட்டு மறைந்துவிட்டதேயென்று கூப்பிட்டார் அப்போது பக்கத்திலிருக்கிற மலையின்மீதிருந்து வெள்ளைப் புடவையணிந்த வொரு மனுடர் தம்முடைய சட்டைக்கையாற் சைக்கினை செய் திவரைக் கூப்பிடுகிறதுபோற் கண்டார். உடனே அவ்விடத்தி லிவர்போய்ப் பார்க்கும்போது அழைத்த அம்மனுடரைக் காணவில்லை, தன்னுடைய பாரங்களேற்றிய ஒட்டகங்களைக்கண்டு பிடித்துக்கொண்டார்.

——(*)——

## 117-வது ஹிக்காயத்து.

——:(*):——

நூற்றிப்பதினேழாம் ஹிக்காயத்தாகிறது ஒரு வலியானவர்கள் தங்களின் விலாயத்தைப் பறிக்கப்பட்டுஷெய்குமுஹ்றபித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடையமன்றுட்டத்தைக்கொண்டு மேற்படி விலாயத்தை யந்த வலியானவர்கள் மீளப்பெற்றுக்கொண்ட செய்தியிற் பேசுகிறதாயிருக்கும். கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்றபித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காலத்தில் அவ்லியாக்களில்நின்று மொருவர்க்குத் தங்களுடைய விலாயத்தை யுரியப்பட்டுப்போனதால் அந்த வலியானவர்கள் மிகுந்த அவ்லியாக்களினிடங்களிலெல்லாம் போய் மன்றுடியு மந்த அவ்லியாக்களி லொருவருடைய சிபாரிசும் பிரயோஜனப்பட்டதில்லை. ஆகையாலந்த அவ்லியாக்களவர்களுஞ் சொன்னார்கள். ஓய் மனுடரே யெங்களுடைய மன்றுட்டங்க ளொன்றையு மும்முடையவிஷயத்தி லொப்புக்கொள்ளப்



படாததால் நாயகம் ஷெய்கு முஹ்றபித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற்போய் நீரொதுங்கிக் கொள்ளும். அவ்விதஞ் செய்தீராகிலும்முடைய விலாயத்தெனும் பதவியைப் பெற்றுக்கொள்வீரென்பதாய்ச் சொன்னார்கள். அதுகேட்டவர்க ளந்தவுடனே ஷெய்கு முஹ்றபித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்திற்சென்று மகா அதபு மரியாதையுடன் கைகட்டி வாய்பொத்தி நின்று மன்றுடினார்கள். அப்போதவர்களுடைய ஹக்கில் கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்றபித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹுத் தஆலாவிடத்தில் துஆக் கேட்டார்கள். அப்போது மறைவான ஆலத்திலிருந்தும் யாதொரு வுருத்தோற்றமின்றி ஓய் அப்துல்காதிறே அவ்லியாக்களில்நின்று மிகுந்த பேர்களெல்லா மிவனுக்காக வென்னிடத்தில் துஆவிரந்தார்கள். அவர்களுடைய துஆக்களையெல்லாம் நானொப்புக்கொள்ளவில்லை. ஆகையா லிவனுக்காக நீரும் துஆக் கேட்கவேண்டாமென்றொரு சத்தமுண்டாச்சுது.

அந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே ஷெய்கு முஹ்றபித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய லஜ்ஜாவை யெடுத்துக்கொண்டு காடுவழிகளிற் போகவேணுமென்று புறப்பட்டு முதலாவதொரு அடியெடுத்துவைத்தார்கள். ஹக்குத் தஆலாவின் புறத்தால் ஓய் கவ்துல்அஃலமே அவனையும், அவன்போற்கொற்ற ஆயிரமனுடனையுந்தொட் டுமக்காக நான் பொறுத்துக்கொண்டே னென்றொரு சத்தமுண்டாச்சுது. அப்பாலிரண்டாமடி யெடுத்து வைத்தார்கள். அப்போதும் ஓய் கவ்துல்அஃலமே அவனையு மவன்போற்கொற்ற இரண்டாயிர மனுடர்களையுந்தொட்டு உமக்காகப் பொறுத்து அவர்கள் பதவியளவிற் சேர்த்துக்கொண்டேனென்று ஒரு சத்தமுண்டாச்சுது. அப்பின்பு நாயகமவர்கள் மூன்றுவதடி யெடுத்துவைக்கவே ஓய் அப்துல்காதிறே அவனையு மவன்போற்கொற்ற மூவாயிரம்பேர்களையுந்தொட்டு உமக்காக அவர்களுடைய குற்றங்களைப் பொறுத்து அவர்களை றுத்பா அளவிற் சேர்த்துக்கொண்டேனென்று சத்த முண்டாச்சுது. ஆகையா லிவ்விதமான சத்தங்களைக் கேட்டு ஷெய்கு முஹ்றபித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு

அவர்கள் மிகவு மனமகிழ்ச்சியுற்று அல்லாஹுத் தஆலாவை ஷுக்றுச் செய்துக்கொண்டார்கள். மேற்கூறப்பட்ட விலாயத்தைத் தவறவிட்ட வலியானவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பறக்கத்தால் அவர்களுடைய திருதியையும், பதவியையும், விலாயத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

——(*)——

## 118-வது ஹிக்காயத்து.

——[*]——

நூற்றிபதினெட்டாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் றமலான் மாதத்தில் ஒருநேரத்தி லெழுபது வீட்டில் நோன்பு திறந்த செய்தியைப் பேசுகிறதாயிருக்கும்.

றமலான் மாதத்தில் கின்று மொருநாளில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தங்கள் தங்களுடைய வீடுகளில் வந்து நோன்பு திறக்கவேணுமென்று ஒவ்வொருவராக வொருவருக்குப்பின் னொருவராக எழுபது பேர்கள் வந்து சொல்லி யழைத்திருந்தார்கள். ஏனெனில் அவரவர்கள் வீட்டிலும் நாயகமவர்கள் ஹாஜிறுவதால் பறக்கத்துண்டாகுமென்ற எண்ணத்துடனே ஒருவரழைத்தது மற்றொருவருக்குத் தெரியாமலங்கித மழைத்திருந்தார்கள். ஆகையா லவர்களனைவர்களுக்கும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்து நோன்பு திறக்கிறேனென்பதாக வொப்புக்கொண்டு சொல்லிவிட்டார்கள். அப்பாலன்று மாலை நோன்பு திறக்கும் வக்தானபோது அவ்விதமாகவே யவர்க ளெழுபதுபேர்களுடைய வீட்டிலும் ஒரே நேரத்தில் நாயகமவர்கள் ஹாஜிறாகி நோன்பு திறந்துவிட்டு. அதுபோல் தங்களுடைய மேன்மையுற்ற தைக்காவிலும் பசியாறிக் கொண்டார்கள். அப்பாலிந்தச் சமாச்சாரமானது பகுதாதூர் முழுதிலும் பரந்து பிரபல்லியமாச்சுது, அப்போதொரு காதிமுடைய மனதிலொரு வசாட்டமானது ஹுளறத்து கவ்து நாயகமவர்கள் தைக்காவை விட்டு வெளி



யிற் புறப்படவுமில்லையே யவர்க ளெவ்விதமாக எழுபது பேர்களுடைய வீடுகளிற்போய் ஒரே நேரத்தில் நோன்பு திறந்து வஜீபனந் தின்றார்களென்பதற்கு ஹைறத்தாகுமென்றுண்டாச்சுது அவ்விதமெண்ணவே யந்த வுடனே ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த காதிமை நோக்கி ஓய், காதிமே யவர்க ளெல்லோர்களும் சொல்வதி லுண்மையாளர்கள்தான் அவர்க ளெல்லோர்களுடைய அழைப்புக்கும் நான் ஜவாபு சொல்லி அவரவர்களுடைய வீடுகளிலும் போய் ஹாஜிறாகி அவரவர்களுடனே யிருந்து வஜீபனமுந் தின்றுவிட்டுத் தான் வந்தேனென்று சொன்னார்கள்.

——:(*):——

## 119-வது ஹிக்காயத்து.

——*——

நூற்றிப்பத்தொன்பதாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் விலாயத்து றுத்பாவை ஆமாக்குவதால் எல்லா வொலிமார்களும் பெற்றுக்கொள்வதைப் பேசுகிறதாயிருக்கும்.

ஷாஹுஹாஷிம் றஹிமஹுல்லாஹு அவர்கள் தங்களுடைய றிஸாலாவி லெழுதுகிறார்கள் அதென்னவெனில் அல்லாஹுத் தஆலா அவனுடைய அடியார்களில் நின்று மொருவரை வலியாக்குவதற்கு நாடுவானே யானால் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் சமுகத்திற் கம்மனிதரைப் பிடித்துக்கொண்டு வரும்படி யேவுவான் அவ்விதம் பிடித்துக்கொண்டு வந்து சேர்த்தவுடனே நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பறக்கத்துற்ற வாயாலிவரை விலாயத்துக்குத் தகும் பாத்திரந் தானென்பதைப் பார்ப்பதற்காக என்னுடைய பிள்ளை செய்யிது அப்துல்காதிறுடைய சமுகத்திற் கூட்டிக்கொண்டு போங்களென்றுத்தரவுசெய்வார்கள். அந்தப்படி கவ்துல் அஃலம் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்திற்குக் கூட்டிக்கொண்டு வந்துவிடப்படும். அப்போது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களந்த மனிதரைப்பார்த்து விலா

யத்துக்கு ஊழிக்காகக் கண்டார்களேயானால் அவருடைய பேரை முஹம்மதிய்யாவென்னுங் கடிதத்தி லெழுதித் தங்களுடைய பறக்கத்தான முத்திரையால் முகர் வைத்து அக் கடிதத்தை நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய தரும சன்னிதானத்திற் காட்டப்படும். அப்பால் கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ரிஸாலாவிற் கண்டபடிக்கு நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களு மொப்புக்கொண்டுத்தரவெழுதிய பின்னுல் அவருக்கு ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பறக்கத்துள்ள கையால் விலாயத்தென்னும் பரிவட்டத்தைப் போடப்படும் அப்பால் மறைவான ஆலத்தையும், வெளியான ஆலத்தையு மந்த வலீயானவர் ஒப்புக்கொள்ளப்பட்டவராகிவிடுவார். இந்த அறுதிமானத்தை கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹலறத்தைக்கொண்டு கியாமநாள் பரியந்தமுள் கொளுகிறிற்கும் அவ்லியாக்களிலொருவருக்கும் இந்த மக்காமில் கவ்து நாயகமவர்களுடன் கூட்டாவதற்கு நிகருமில்லை. இவர்களாகிறது யஃனீ கவ்து முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சமுகத்தால் குதுபுகள், கவ்துகள் முதலிய மற்றும் அவ்லியாக்களடங்கலும் பைலு தேடுவார்கள்.

——:(*):——

## 120-வது ஹிக்காயத்து.

——:(*):——

நூற்றிருபதாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இமாம் அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மதுஹபைத்தெரிந்துகொண்ட செய்தியிற் போகிறதாயிருக்கும்.

ஒருநாளையத்தினம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாங்களிருக்கிற மதுஹபை விட்டுத் திரும்பி வேறு மதுஹபிற் சேர்ந்திருக்கவேணுமென் றவர்களுடைய கல்பி லாசாட்டமுண்டாச்சுது. அந்நாளன்றிரவி



லவர்களுடைய கனவில் நபிநாயகமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களையும், அவர்களுடைய அஸ்ஹாபிமார்களையுங் கண்டார்கள். அப்போது இமாம் அஹ்மதுபுனு ஹன்பலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்து தங்களுடைய கையாற் றங்களுடைய தாடியைப் பிடித்துக்கொண்டு நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் சமுகத்தை நோக்கி யெங்கள் நாயகமே தங்களுடைய பிள்ளையாகிய முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை யிந்த லைபான ஷெய்கைக் காத்துக்கொள்ளும்படி யேவுங்களென்று மன்றாடினார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் புன்சிரிப்புச் சிரித்தவர்களாக செய்யிது கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை யழைத்து இந்த ஷெய்குடைய நாட்டத்தையும், தேட்டத்தையும் கபூல்செய்யுமென்று திருவுளமானார்கள். அவ்விதந் திருவுளமான நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய ஏவலை யொப்புக்கொண்டு ஹன்பலிக்காரர் அவர்களுடைய முஸல்லாவில் வந்து ஸுபுஹு தொழுதார்கள். ஆனாலந்த முஸல்லாவில் இமாமேயல்லாது மற்றும்பேர்கள் ஜமாஅத்தாகத் தொழுவதற்கில்லாதிருந்து அன்றையில் கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தொழுவரவும் ஜமாஅத்துகள் வந்து நெருங்கி அதனுலொழிந்ததலமொன்று மில்லையென்றாச்சுது.

இதிற் பேசிவந்தவர்கள் சொல்லுகிறார்கள். அன்றைத்தினம் நாயகம் கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களந்த முஸல்லாவில் ஹாலிருக வில்லையேயானால் ஹன்பலி மதுஹபு அன்றே அற்றுப்போய்விடுமென்று.

பஹ்ஜத்துல் அஸ்றாரென்னுங் கித்தாபிற் சொல்லுகிறார்கள். ஒருநாள் கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மற்றுஞ்சில அவ்லியாக்களுடனெழுந்தருளியாகி இமாம் அஹ்மதுபுனு ஹன்பலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கப்றை ஸியாறத்துச்செய்தார்கள். அப்போது கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலி

யல்லாஹு அன்ஹு அவர்களும், மற்றும் அவ்லியாக்களும் பிரசித்தமாய்க் காணும்படியாக இமாம் அஹ்மதுப்னு ஹன்பலி றழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய கப்றைவிட்டு வெளியிலுதயமாகி தங்களுடைய கையிலொரு சட்டையைக்கொண்டு வந்து அதை கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களிடத்திற் கொடுத்து அவர்களிருவர்களுமொருவர்க்கொருவர் கழுத்தைச்சேர்த்துக் கட்டியணைந்து முஆனக்காத்துச் செய்துக்கொண்டு இமாமவர்கள் செய்யிது அப்துல்காதிறே ஷரீஅத்து, தரீக்கத்திவைகளுடைய இல்மும், ஹகீகத்துடைய இல்மும், ஹாலின் செய்கையும் உம்மளவில் ஹாஜத்தாகி நிற்கிறதென்று சொன்னார்களென்று சொல்லுகிறார்கள்.

—(*)—

## 121-வது ஹிக்காயத்து.

நூற்றியிருபத்தோராம் ஹிக்காயத்தாகிறது கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடனே இமாம் அபூஹனிபா றஹிமஹுல்லாஹு அவர்கள் பேசிக்கொண்ட செய்தியைப் பேசுகிறதாயிருக்கும்.

இமாம் அபூஹனிபா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடனே றூஹானிய்யாவாகிய சந்திப்புச் சந்தித்தார்கள். அப்போது இமாம் அபூஹனிபா றழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து சுல்த்தானே, செய்யிது அப்துல்காதிறே நீர் ஷரீஅத்தில் அஹ்மதுப்னு ஹன்பலி றஹிமஹுல்லாஹு அவர்களுடைய மதுஹபைத்தெரிந்துக்கொண்டீர் என்னுடைய மதுஹபைத்தெரிந்தீரில்லையே அதின் வைபவமென்ன, நானும்முடைய பாட்டனாரான இமாம் ஜஃபறுஸ்ஸாதிக்கு றழியல்லாஹு அன்ஹு அவர்களின்கின்னும் பைஅது பெற்றவர்களிலுள்ளவன்தானே அவர்களுடைய சமூகத்திலிருந் திரண்டுவருஷம் பிரயோஜனம் பெற்றேன். அது இரண்டு வருஷமுமில்லாதிருக்கில் நுஃமான் ஹலாக்கென்றென்னுடைய மனதில் நினைத்தேனென்று சொன்



னார்கள். அதற்கவர்களைப்பார்த்து ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்கள், நான் ஹன்பலி மதுஹபைத் தெரிந்துக்கொண்ட திரண்டு சபபுக்காயிருக்கும். அதிலொன்றாவது அவர்கள் மதுஹபாகிறது ஜனக்குறைத்தலாற் பலஹீனமாகிவிட்டது. அதற்காகவும் இரண்டாவது அவர்களு மிஸ்கீனானவர்கள், நானுமிஸ்கீன் இதுவுமின்றியெனது ஜத்தாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹுத்தஆலாவிடத்தில் மிஸ்கீன்தனத்தைத் தேடியெனதாண்டவனே யென்னை மிஸ்கீனாய் ஹயாத்தாக்கி மிஸ்கீனாக மௌத்தாக்கியென்னை மிஸ்கீன்களுடனே யெழுப்புவாயாகவென்று துஆக் கேட்டிருக்கிறார்கள். ஆகையாலிந்த இரண்டு சபபுக்காகத்தானென்று சொன்னார்கள்.

—(*)—

## 122-வது ஹிக்காயத்து.

—(:)—

நூற்றியிருபத்திரண்டாம் ஹிக்காயத்தாகிறது கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றழியல்லாஹு அன்ஹு அவர்களுடையதில் மீதில், ஷெய்கு அஹ்மதுக்கன்ஜு பருஷென்பவர்கள் நிருணயமாகி அதின்பேரிற்றம்முடைய ஷெய்கார் றிரப்பநித்துஞ் செய்தியைப் பேசுகிறதாயிருக்கும்.

கன்ஜு பருஷென்று பிரபல்லியமான பட்டப்பெயருற்ற ஷெய்கு அஹ்மது றழியல்லாஹு அன்ஹு என்பவர்கள் தங்கள் ஷெய்காகிய ஷெய்கு அபீபில்ஹாக்கல் மஃரிபீ றழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய பணிவிடையிலிருந்தார்கள். அப்படியிருக்கையி லொருநாளவர்கள் உளூச்செய்துக் கொண்டிருக்கிற ஹாலிலவர்களுடைய விருப்பத்தில் காதிரியாத்தரீக்காகிறது மற்றுந் தரீக்குகளைவிட அபேட்சையால் மிகுந்ததாயிருக்கும். அதல்லாதத் தரீக்குகளுக்கு அதுபோற் பிரசித்தமும், பதவிரசமுங் கிடையாது ஆகையாற்று னஃகாவில் காஸ்ஸா, ஆம் இவர்களெல்லாம் சாய்கிறார்களென்பதாய் ஒருசாட்டமுண்டாகிக் கல்பிலெண்ணினார்கள். அப்போதவர்களுடைய ஷெய்காகிய ஷெய்கு அபீ இஸ்ஹாக்கு றழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு வொளியாகி

ஷெய் அஹ்மதே! நீங்களுடைய மந்தாரனை நீரறிவீராவென்று கேட்டார்கள். அதற்கவர்கள் அறியேன் ஆகிலும் நாயகங்களுடைய சமுகத்தாலேயே பிரயோஜனம் பெறுகிறேனென்று சொன்னார்கள். பின்பு ஷெய்கு அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி அவர்களுடைய ஷெய்காகிய ஷெய்கு அபீயிஸ்ஹாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஓய் அஹ்மதே கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பனிரண்டு வியத்துகளுண்டு. அந்த வருஷிப்புளாகிறது சமுத்திரங்களெல்லா மைகளாகவும், மரமட்டைகளெல்லாம் கலங்களாகவும், மனு, ஜின், மலக்கிலவர்களெல்லா மெழுதுகிறவர்களாகவுமிருந்து அவ்வருஷிப்புகளை யெழுதினாலும் அந்தப் பனிரண்டு வியத்துகளில் நின்றுமொரு தாழ்ந்த வியத்தையாவது பயான் செய்து முடிக்கச் சக்தி பெறமாட்டார்களென்று சொன்னார்கள். அதுகேட்ட மாத்திரமே ஷெய்கு அஹ்மதென்பவர்களுக்கு கவ்து நாயகமவர்கள்பேரி லாசையிற் பொராமை யுண்டாகித் தரிபாடில்லாதே ஆளுரம்பிக்கொண்டு இடறுக கவ்து நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறவர்கள் அஹ்லுல்லாக்களை நேர்வழியிற் கோல் காட்டிடும்படியானவர்கள் ஆகையால் நானவர்களுடைய தரீக்கின் பீதே யல்லாது மௌனத்தாகிறதில்லை யென்று ஒரே நினைவாக நிருணயங் கொண்டவர்களாகச் சொல்லிக்கொண்டு பகுதாதின் திசையில் முகம் வைத்தவர்களாகப் புறப்பட்டு நடந்து அநீமிற் கோணத்திலின்றுமொரு ஸ்லையாளிற் சேர்ந்தார்கள். அவ்விதஞ் சேர்ந்து அந்த மஸ்ஜிதின் பிற்புறத்திலோடுகிற நீரருவியில் உளுச்செய்து அந்தத் தலத்திற் றொழுதார்கள், அப்போதவர்களுக்கொரு தூக்கம் வந்து நித்திரைக்கும், முழிப்புக்குமிடையில் கவ்து நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கண்டார்கள். அஃதெவ்விதங் கண்டார்களானால் கவ்து நாயகமவர்களுடைய இருகரத்திற் சிவந்த கிரீடமொன்றும், பச்சைத் தலைப்பாகையொன்றுமிருக்கிறது, அவைகளுடனேவந்து இந்த ஷெய்கு அஹ்மதென்பவர்களை நோக்கிப்பார்த்தார்கள். அப்போது ஷெய்கு அஹ்மதென்பவர்கள் தெரிசனங்கொண்டு சிறப்புப்பெற்று மகா அகப்படனெழும்பினின்றார்கள். அதுகண்டு கவ்து நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு



அன்ஹு அவர்கள், ஷெய்கு அஹ்மதென்பவர்களைத் தங்களருகிலழைத்துத் தங்களுடைய பறக்கத்துப்பெற்றகையிலிருந்த கிரீடத்தையும், தலைப்பாகையையும் ஷெய்கு அஹ்மதென்பவர்களுடைய சிரமீது சூட்டினார்கள். அவ்விதம் சூட்டிப்பின்பு கவ்து நாயகமவர்கள், ஷெய்கு அஹ்மதென்பவர்களை நோக்கி யென்பிள்ளையாகிய ஷெய்கு அஹ்மதே நீராகிறவர் அல்லாவுடைய அவ்லியாக்களில் நின்று முள்ளவரென்று சொல்லிவிட்டு அவர்களுடைய கண்ணைவிட்டு மறைந்துவிட்டார்கள்.

அப்பால் ஷெய்கு அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் முழித்துப்பார்க்கையில் கவ்து நாயகமவர்களா லணியக்கண்ட கிரீடமும், தலைபாகும் தங்களுடைய சிரமீதிருக்கக்கண்டு அல்லாஹுத் தஆலாவை மிகவும் ஷுக்றுச் செய்துக்கொண்டு அவ்விரண்டையு மணிந்தவர்களாகத் தங்களுடைய ஷெய்களவில் மீண்டார்கள். அதுமுதல் முன்னிருந்ததைவிடத் தங்களுடைய ஹாலின் அதிகத்தையுங் கண்டுக்கொண்டார்கள். அவர்கள் தங்களுடைய ஷெய்களவில் வருந்தோரெல்லாம் அவர்களை ஷெய்கவர்கள் பார்த்துப்பார்த்துச் சந்தோஷப்பட்டுக்கொள்வார்கள்.

இன்னும் ஷெய்கு அபீயிஸ்ஹாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் கிலிமீதாகிய ஷெய்கு அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி ஓய் அஹ்மதே யிந்தத் தாஜூம், இமாமத்துமாகிறதுமக்குப் பறக்கத்துச் செய்யப்பட்டதாயிருக்கும். முன்னால் ஒரு வாஸித்தாவைக்கொண்டு பைஜு பெற்றுவந்தீர். இப்போதுதவியல்லாதே நேர்நேராகவே பைஜு பெறுகிறவராக ஆகிவிட்டீர். ஆனால் காதிரியா வழியினுடைய நிஃமத்தாலும், கவ்து நாயகமவர்களுடைய பைலாலும் நீருபர்த்தியாகிவிட்டீர். அவ்லியாக்களுக்கிடையி லும்முடைய தலையான தாபர்ந்துவிட்டதென் றிவைகளெல்லாம் சொல்லி யந்த வெடுப்பிரண்டையும் பறக்கத்தைக் காடியந்த ஷெய்கவர்களுஞ் சிரந்தணிந்து அல்லாஹுத் தஆலாவை ஷுக்றுச்செய்தார்கள். இன்னும் ஷெய்கு அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி ஓய் அஹ்மதே ஹாலத்து கவ்து நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துகாதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய சமுகத்தில்நின்று மும்மைச்சந்தோஷமாயுரிமைக்கி உம்முடைய கருமத்

தையும் திறப்பமாக்கிவிட்டார்களென்றுஞ் சொன்னார்கள். அப்படியிருக்கையி லொருநாள் ஷெய்கு அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய ஷெய்காகிய, ஷெய்கு அபீபிஸ்ஹாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி யெனது நாயகமே நான் வழக்கம்போல் புக்கராக்களுக்கு வஜீபனுஞ் செய்வதற்காக வேண்டி மலையடியோரங்களிற் போய் விறகுகள் சேர்த்துக்கொண்டுவரும்படிக் குத்தரவு கொடுங்களென்று மன்றாடிக்கேட்டார்கள். அதற்கு ஓய் அஹ்மதே அந்த வேலைக்கு முமக்குமிடையிற் றுக்கற்பாடு பக்கிமில்லையாகையா லந்தவேலை யுமக்கு வேண்டாமென்று சொன்னார்கள். பின்னு மெனக்குத் தாங்களுத்தரவு கொடுக்கத்தான் வேணுமென்று விரும்பிக் கேட்டார்கள். அதற்குமும்முடைய பிரியமென்று ஷெய்கவர்கள் சொல்லிவிட்டார்கள்.

அப்பால் ஷெய்கு அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மலைமீது சென்று விறகுகளைச் சேகரித்துக் கட்டாகக் கட்டியெடுத்துயர்த்தித் தங்களுடைய தலைமேல் வைக்க நாடவே அந்த விறகுக்கட்டானது பூமியிருந்து தானாகவே பறந்துயர்ந்து வந்து அவர்களுடைய தலைக்குமே லொருமுழத்திற்கு மேலே நின்றது. அப்பாலவர்கள் நடக்குந்தோறெல்லாம் அந்த விறகுக்கட்டு மவர்களுடைய தலைக்குமேல் நேராகத் தானும் நடந்துகொண்டுவந்தது. ஆக இவ்விதமாக ஷெய்கு அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்களும், அந்த விறகுக்கட்டுமாக ஷெய்கவர்களுடைய சமூகத்தில் வந்து சேர்ந்தார்கள். அப்போது ஷெய்கு அபீபிஸ்ஹாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஷெய்கு அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி ஓய் அஹ்மதே, ஒரு தலையாகப்பட்டது அதற்கு கல்துல் அஃலம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தானும் அமாமத்து முடித்திச் சருமாக்கிய பின் உலர்ந்த விறகுக்கட்டை யந்தத் தலைமீது வைத்துச் சுமக்கத் தகுதியுண்டோ இல்லை. ஏனெனில் கல்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறவர்கள் கல்பாருதலியா வஸ்துக ளனைத்துக்கும் ஷெய்கென்று அல்லாஹுத் தஆலாவுடைய புறத்தால் கூப்பிடப்பட்டவர்களாயிருக்கிறார்கள். ஆகையா லென்றருளிச்செய்து இனி நீரிந்தப் பணிவிடைகள் செய்யாதேயுமென்று மொழிந்தார்கள். அப்பால் ஷெ



ய்கு அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் ஷெய்குடைய சொல்லைக் கபூல் செய்துகொண்டார்கள். பின்னும் ஷெய்கு அபீபிஸ்ஹாக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி ஓய், அஹ்மதே திட்டமாக கல்து நாயகமானவர்கள் உம்முடைய கருமத்தை திறப்பமாக்கி அல்லாவுடைய வலிமார்களி லும்மை வலுப்பமுற்றவராக்கினார்களென்றுஞ் சொன்னார்கள். அவர்களுந் தாங்கள் சேர்ந்த மர்தபாக்களி லெல்லாஞ் சேர்ந்தார்கள். றலியல்லாஹு அன்ஹும் வறலூ அன்ஹு.

—(*)—

## 123-வது ஹிக்காயத்து.

—*—

நூற்றிருபத்திமூன்றும் ஹிக்காயத்தாகிறது கல்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய கிருபையான வொரு பார்வையைக் கொண்டு மிகுதியான ஜனங்களை அல்லாஹுத் தஆலாவினளவிற் சேர்த்து வைத்த செய்தியிற் பேசுகிறதாயிருக்கும்.

ஒருநாள் அல்லாஹுத் தஆலாவில் நின்றும் கல்து றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி ஓய் அப்துல்காதிறே உம்முடைய வொரு பார்வையைக்கொண்டு எழுநூறு ஆண்பிள்ளைகளையும், ஐநூறு பெண்பிள்ளைகளையும் அல்லாஹுத் தஆலாவினளவிற் சேர்த்து வையுமென் றேவப்பட்டது அப்போது ஆண்பிள்ளைகளை யொரு பக்கமும், பெண்பிள்ளைகளை யொரு பக்கமுமாகச் சேர்த்து நிறுத்திக்கொண்டு தங்களுடைய செந்நாயமான பார்வையைக்கொண்டு பார்த்தார்கள். உடனே அந்த ஜனங்களின் இருதயங்க ளென்னுந் தாம்பிரமானது சுத்தமான தங்கமாகி அல்லாஹுத் தஆலாவினளவிற் சேர்ந்துவிட்டார்கள்.

—[]—

## 124-வது ஹிக்காயத்து.

நூற்றியிருபத்திநாலாம் ஹிக்காயத்தாகிறது கஸ்தால் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைக் கொண்டு ஷெய்கு காஜா முஹ்யீனுத்தீன் ஜிஸ்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பைஅத்து பெற்ற சங்கதியிற் பேசுகிறதாயிருக்கும்.

லத்தாயிபுல் கறாயிபி யென்னுங் கித்தாபில் ஆகத்துக்கெல்லாம் குத்பாகிய ஷெய்கு நஜீபுத்தீன் மஹ்மூது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னதாய், குத்பு அமீறு முஹம்மதால் ஹுஸைனீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். கஸ்தால் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய ஏவலைக் கொண்டு (கதமீ ஹாதிஹி அலா றக்கபதி குல்லி வலிய்யின் லில்லாஹி) என்று சொல்லியபோது அவ்லியாக்க ளடங்கலும் அவரவர்களுடைய றக்கபத்துகளைத் தாழ்த்தினார்கள். அவ்வேளையில் காஜா முஹ்யீனுத்தீனுல் ஜிஸ்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வாலிபப் பிராயமாய், குறாஸான் தேசத்தில் மலைப் பொதும்பில், ஜிஹாது, ரியாலு செய்பவர்களாயிருந்தார்கள். அச்சமயத்தில் நாயகம் கஸ்தால் அஃலம் றலியல்லாஹு அன்ஹு அவர்களை அல்லாஹுத் தஆலா மேற்கூறியபடி சொல்லும்படியே வினாதின்பேரில் காஜா முஹ்யீனுத்தீனுல் ஜிஷ்தி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நயமாகிக் கஷ்பான வுடனே மற்றும் அவ்லியாக்களுக்கு முன்னமே தங்கள் சிரசை மண்மீது வைத்தவர்களாக என்கிளும் கஸ்து நாயகம் அவர்களுடைய கதமாகிற தென்னுடைய தலையிலாயிருக்குமென்று சொன்னார்கள். அவ்விதஞ் செய்தனடவடிக்கையானதை கஸ்தால் அஃலம் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அல்லாஹுத் தஆலாக் கஷ்பைக்கொண்டறிவித்தபோது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவ்லியாக்களுடைய கூட்டத்திலிருந்து அல்லாஹுத் தஆலாவுடைய அவ்லியாக்கள், அறுபாபுக ளடங்கலு மவரவர்களுடைய றக்கபத்துகளைச் சாய்க்க முன்னமே இயாகுத்தினுடைய பிள்ளையானவர் முந்திக்கொண்டார். அவலருடைய தாட்சிணியத்தாலும்,



அவருடைய அதபினழகாலும், அவர் அல்லாஹுத்தஆலாவுக்கு மஹ்பூபாகிவிட்டார். மேலைக்கு ஹிந்து ராச்சியத்தின் தலைமையை யவருக்குக் கொடுக்கப்படுமென்று சொன்னார்கள். அவர்கள் சொற்போலாச்சுது.

இன்னும் ஸியறுல் ஆரிபீன் என்னுங் கித்தாபில் ஷெய்கு முஹம்மது ஜமாலுத்தீன் ஹஸன்ஹற்றவற்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள். ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷெய்கு காஜா முஹ்யீனுத்தீன் ஜிஷ்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு மலையஸ்ஸிவும் பகலுமாக ஐம்பத்தேழுநாள்மட்டு மொன்றாகவே சேர்ந்திருந்தார்களென்றும், இன்னுமவர்களாலேயவர்கள் பைஅத்து முதலான பதவிகள் பலதையும் பெற்றுக்கொண்டார்களென்றும் சொல்லுகிறார்கள்.

இன்னும் செய்யிது ஆதமுன்னக்ஷபந்தி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் நுக்காத்துல் அஸ்றாறென்னுங் கித்தாபிலெழுதுகிறார்கள். ஷெய்கு பரீதுத்தீன் முஹம்மதுக்கன் ஜல் ஷக்கறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸில் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் றக்காபி அவ்லியாமீதுக் கதம்வைத்த சமாச்சாரத்தைப்பற்றிப் பேச்சுகள் நடந்தது. அப்போதந்த மஜ்லிசுக்குடையவர்கள் சொல்லுகிறார்கள், அக்காலத்தில் நானிருப்பேனாகில் அவர்களுடைய பாதத்தை யென்னுடைய றக்கபத்தில் வைப்பேன். இன்னும் பெருமையடைவதாலெனது கண்ணிலென்றுஞ் சொல்வேன், ஏனெனில் என்னுடைய ஷெய்காகிய ஷெய்கு முஈனுல் ஹக்கிவத்தீனானவர்கள் றக்கபத்தில் வைத்த கூட்டத்திலுள்ளவர்கள் ஆனதாலெனக்குப் பெயராகிறது அவர்களுடைய பாதமெனது கண்மீதென்றியான் சொல்வதாயிருக்கும். ஷெய்கு ஹலவுல்குத்பி யவர்களின் பிற்கிளையாகிய ஷெய்கு நூறுல்லாவென்பவர்கள் லத்தாயிபுல் காதிரிய்யாவென்னுங் கித்தாபில் சொல்லுகிறார்கள். ஹக்குபாற் சேர்ந்திட்டவர்களுக்குக்குருவாகிய ஜிஷ்தியானவர்கள். கஸ்தால்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களின்னின்னும் இருக்கிராச்சியத்தைத் தரவேணுமென்று கேட்டார்கள். அதற்கு இறக்கிராச்சியத்தை ஹிறாபுத்தின் உமறன்

40

ஷஹ்றவற்தி யென்பவருக்குங் கொடுத்துவிட்டேன். ஆகையாலுமக்கு ஹிந்துஸ்தேசத்தைத் தந்துவிட்டேனென்று ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்.

—(*)—

## 125-வது ஹிக்காயத்து.

—:(*):—

நூற்றிருபத்தைந்தாம் ஹிக்காயத்தாகிறது தட்டப்பட்டவொரு வலியை அல்லாஹுத் தஆலா வொப்புக்கொள்ளப்பட்டவர்களாக ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு செய்துவைத்த செய்தியிற் பேசுகிறதாயிருக்கும்.

மல்பூஜுல்கியாதிய்யாவென்கிற கிதாபிற் பேசப்பட்டிருக்கிறது கவ்துல்அஃலம் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காலத்தில் முக்கர்றபானவர்களில்நின்றுமொரு வலியுடைய ஹாலை யுரியப்பட்டது. அப்போதவர் ஆலத்தாருடைய நாயன் தட்டிவிட்டவரென்று பெரியோர்கள், சிறியோர்கள் முதலிய நாவுகளிலும் சொல்லப்பட்டவராகினார். அப்பாலவர் கிறப்பம்பெற்ற அவ்லியாக்களில்நின்று மூந்நூற்றியறுபது வலிமார்களிடங்களிற் போய் ஒதுங்கியவர்களடங்கலு மவருக்காக அல்லாஹுத் தஆலாவிடத்தில் மன்றாடியும் அவருடைய ஹக்கிலவர்களுடைய மன்றாட்டங்களெல்லாம் பிரயோஜனம் செய்யவில்லை. அதாவது நிறைவேற்றமாகவில்லை. அப்பாலவரைக்குறித்து லௌஹுல்மஹ்பூலிற் பார்க்கும்போது அவருடைய நாமத்தை மூதேவிகளுடைய கூட்டத்துடன் கணித்திருக்கக்கண்டார்கள். பின்பவரைப்பார்த்து நீராகிறவர் சீதேவிகளான கூட்டத்தில்நின்றுமுள்ளவரல்லவென்ற சங்கதியையு மறிவித்தார்கள். அதுகேட்டவருடைய முகமானது கறுப்பாகிவிட்டது.

அப்பாலவர் சுல்தானுல் அவ்லியாவாகிய ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சந்நிதானத்தினிற் சென்றார். அவ்விதஞ்சென்ற அம்மனிதரை கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லா



ஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய திருஷ்டிபக்கண்ணிற் கண்டமாத்திரமே அவரை நோக்கி வாரும் வரும் நீர் அல்லாவுடைய சமுகத்தைவிட்டும் வெருட்டப்பட்ட மர்தூதாயிருந்தபோதிலும் நாமும்மை அல்லாவுடைய உத்தரவுகொண்டவனிடத்திலொப்புக்கொள்ளப்பட்ட மக்பூலானவராயாக்கிக்கொள்ளக்கூடியவனாயிருக்குமென்று சொல்லிவிட்டு அவரைக் கபூல்செய்யும்படியாக அல்லாஹுத் தஆலாவிடத்தில் துஆக்கேட்டார்கள். அப்போததற்கெதிர்மொழிவந்தது.

அஃதென்னவெனில் ஓய் அப்துல்காதிறே அவனுடைய பெயரை லௌஹுல் மஹ்பூலில் மூதேவியென்று தரிபடுத்தப்பட்டிருப்பதால் என்னுடைய அவ்லியாக்களில்நின்று மூந்நூற்றியறுபதுபேர்கள் சிப்பாரிசுசெய்து மன்றாடியும் நான் கையேற்கவில்லையென்பதை நீ அறியவில்லையாவென்று ஹக்குத்தஆலாபுறத்தில்நின்று மறுமொழிகிடைக்கவே கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் எனது நாயகா நீயோ மர்தூதை மக்பூலாக்கவும் மக்பூலை மர்தூதாக்கவும் வல்லபமுடையவன். இவ்வித மறுமொழி சொல்லுகிறதாயிருந்தால் என்னுடைய நாவில் வினைக்கூலென்றேதுக்காக நட்டிவைத்தாயென்றுகேட்டார்கள். அப்போததற்கு அல்லாஹுத்தஆலாபுறத்தில்நின்றும் யா அப்துல்காதிற் அவனுடைய கருமத்தை யும்மளவில் வொப்பிவித்துவிட்டேன், நீர் நாடியதைச்செய்துகொள்ளலாம் ஏனெனில் உம்முடைய மக்பூலாகிறது நம்முடைய மக்பூல்தான், உம்முடைய மர்தூதாகிறது நம்முடைய மர்தூதுதானென்று மறுமொழி வந்தது. அப்பால் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்தமனிதரைநோக்கி யவருடையமுகத்தைக் கழுவும்படி யேவினார்கள். அந்தப்படி முகத்தைக் கழுவினமாத்திரமே அல்லாஹுத் தஆலா அவருடைய நாமத்தை மூதேவிகளான கூட்டங்களைவிட்டுமழித்துச் சீதேவிகளான நற்சங்கத் தெளிவாளர்களுடைய பட்டயத்திலாக்கிக் கொண்டான். பின்பு நன்கொடைகொடுக்கும் நாயகனாகிய அல்லாஹுத் தஆலாவில் நின்றும் யா, கவ்துல் அஃலம் என்னிடத்தாலுமக்கருள்கின்ற வெகுப்பமான நன்கொடையாகிறது விலாயத்தில் நிறுத்துவதை யுமக்குத் தந்திருப்பதால் நீரொப்புக் கொள்ளப்பட்டவர்கள், நாமொப்புக்கொ

ன்னப்பட்டவர்களாயும், நீர் தட்டி விலக்கப்பட்டவர் நான் தட்டி விலக்கப்பட்டவ்ளை யிருக்குமென்று இருவாம் வந்தது. எங்களாண்டவனே நீ இவைகளை மக்பூலீன்களிலாக்கியருள் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

——:(*):——

## 126-வது ஹிக்காயத்து.

——:[*]:——

நூற்றிருபத்தாறாவது ஹிக்காயத்தாகிறது இமாம் ஹஸனுல் அஸ்கரீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய ஸஜ்ஜாதாவென்னும் விரிப்பை கவ்து நாயகம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தி லொப்பிவிக்கும்படிக் கொரு மனிதரிடத்தில் அமானிதம் வைத்த பிரிவிற் பேசுகிறதாயிருக்கும்.

மருஜனில் காதிரிய்யாவென்னுங் கித்தாபிற் பேசப்பட்டிருக்கிறது செய்யிது ஹாமாம், கவ்து இமாம் ஹஸனுல் அஸ்கரீ றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய ஸஜ்ஜாதாவென்னும் விரிப்பைத் தங்கள் அஸ்ஹாபிமார்களில் நின்று மொருவரிடங் கொடுத்து கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ஒப்பிவிக்கவேணுமென் றமானிதம் வைத்தார்கள். அப்போதம் மனிதரைப்பார்த்து நீய் மனிதரே யும்முடைய வயது முடிவிலிந்த ஸஜ்ஜாதாவை சிஷ்யர்களில் நின்று மொருவரிடம் ஒப்புக் கொடுத்து அதற்குப்பின் அவரவரு மப்படியே கொடுத்து வரும்படியாகத் திட்டமான வஸியத்துச் செய்தார்கள். அதாகிறது காது பரியந்தமாளுல் ஐந்தாம் கறுன் நடுவில் கிலானாரில் ஹஸனீ வங்கிஷத்தில் செய்யிது அப்துல்காதிறென்று நாமமிடப்பட்ட கவ்துல் அஃலம் வெளிப்பட்டு வருகிறமட்டிலும் ஒருவரிடத்திலிருந்து மற்றொருவரிடத்திற் கொடுத்து ஒவ்வொரு கையாகக் கடந்து பத்திரமாக வைத்திருந்து அந்த கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் செய்யிது அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களிடத்தி லொப்புக்கொடுத்து அவர்களுக் கென்னுடைய ஸலாமையு மெத்தி



வையுங்களென்று வஸியத்துச் செய்தார்கள். அந்தப்படி செய்யப்பட்டது.

——(*)——

## 127-வது ஹிக்காயத்து.

நூற்றிருபத்தேழாம் ஹிக்காயத்தாகிறது கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருகள்வனைக் குதுபாக்கி வைத்த காரணத்திற் பேசுகிறதாயிருக்கும்.

உலமாக்கள் பேசி வருகிறார்கள். கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனமா நகரிலிருந்து பகுதாதளவில் முன்னோக்கி வரும்போது கள்ளர்களில்நின்று மொருவ ரந்தப் பாதையிற் றனித்து நடப்பவர்களி லொருவராயும் வழிபார்த்துக்கொள்ளை செய்வதற்காக நிற்கிறார். அப்படியிருக்கையில் கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களந்த ஸாரிக்கை படுத்துவந்து சேர்ந்தார்கள். அப்போதவரைப்பார்த்து நீரரென்று கவ்துல்அஃலம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கேட்டார்கள். அதற்கவர் நானொருகிறவன் நாட்டுப்புறத்திலுள்ளவனென்று சொன்னார். பின்னும் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல் காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களவரைப்பார்த்து உன்னுடைய பெயராகிறது பாவமென்னுங் கறுப்பைக்கொண் டெழுதப்பட்டிருக்கிறதேயென்று சொன்னார்கள். அதுகேட்டவரிருதயத்தில் இந்த மனுடரானவரிப்படிப்பட்ட ஹைபத்து அமைந்தவரிருப்பதால் கவ்துல்அஃலமாக இருப்பார்கள். அதற்கியாதொரு ஆட்சேபனையில்லையென் றாசாட்டமுண்டாச்சுது. அவ்வுசாட்டமானது கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கஷ்பால் வெளியாகி அவரைப்பார்த்து ஓய் மனுடரே நான்தான் அப்துல்காதிறென்று சொன்னார்கள். அதுகேட்டம்மனுடர் உடனே கவ்து நாயகமவர்களுடைய பாதாரவிந்தத்தில் விழுந்து வந்தனம்புரிந்து கைகட்டி வாய்பொற்றி மகா அதபுடனின்று யாஸையிதீ அப்துல்காதிற் ஜைலானி ஷெய்அன் லில்லாஹி என்னுடைய நாயகமே அப்துல்காதிறே அல்லா

வுக்காக ஏதாவதொன்றுக்குக் கொடுங்களென்று கேட்டார். உடனே அவருடைய ஹாஜத்துக்கு கவ்துல்அஃலம் றலியல்லாஹு அன்ஹு அவர்களிரங்கி அல்லாஹுத் தஆலா அளவில் முன்னோக்கி யிவருடைய கருமத்தைத் திருத்தவேணுமென்று கருத்துற்று நாடி அல்லாஹ்விடத்தில் துஆக்கேட்டார்கள். அதற்கு யா கவ்துல்அஃலம் அந்தக் கள்ளனை ஜெய்லானிதமீது கோஷ் காட்டிவிடும். எனதுவப்பாளனுடைய நேர்வாட்டையிலவனையும் பூட்டிவிடும், அவனையென்னுடைய குத்புகளில்நின்று மொருக் குத்பென்று ஆக்கிவிடுமென்றுத்தரவு வந்தது. அவ்விதமுத்தரவு வந்தவுடனே கவ்து றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய கிருபையான பார்வையைக்கொண்டக்கள்ளனைக் குத்பாக்கிவிட்டார்கள்.

—:0:—

## 128-வது ஹிக்காயத்து.

—:*:—

நூற்றியிருபத்தெட்டாம் ஹிக்காயத்தாகிறது கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களை, நபி கிழுறு அலைஹிஸ்ஸலாமவர்கள் புகழ்ச்சி செய்வதிற் பேசுகிறதாயிருக்கும்.

பேசிவரப்படுகிறது மக்கா ஷரீபா மக்காமில் வானத்தின் கீழ் கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களைப்போல் ஒருவரிய முண்டாகவில்லை. உண்டாகவுமாட்டார்களென்று ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹக்கில் நபிகிழுறு அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்கள் புகழ்ச்சியா யருளிச்செய்தார்கள்.

இன்னும் ஷெய்கு அபூமத்யனுல்மஃரிபி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருநாள் நபிகிழுறு அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்களைக்கண்டு சந்தித்தார்கள். அப்போது ஷெய்கு அபூமத்யனுல்மஃரிபி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கிழுறு அலைஹிஸ்ஸலாமவர்களை நோக்கித் தங்களுடைய காலத்தி லெழுவாகள்,



படுவான் முதலிய திசைகளிலுண்டாயிருக்கிற அவ்லியாக்களுடங்களைக் குறித்தும், கவ்துல்அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய செய்தியைக் குறித்துங் கேட்டார்கள், அதற்கு நபி கிழுறு அலைஹிஸ்ஸலாமவர்கள் ஷெய்கு அபூமத்யன் றலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி கவ்துல்அஃலம் றலியல்லாஹு அன்ஹு அவர்களாகிறவர்கள் ஸித்தீக்கீன்களுக் கிமாமாகவும், ஆரிபீன்களுக்கு ஹுஜ்ஜத்தாகவும், மஃரிபாக்களுக்கு ரூஹாகவுமிருக்கிறார்கள். இன்னமவர்களுடைய கருமமாகிறது அவ்லியாக்களுக்கிடையில் வனுப்பமானதாயிருக்குமென் றருளினார்கள்.

—[*]—

## 129-வது ஹிக்காயத்து.

—:(*):—

நூற்றி யிருபத்தொன்பதாம் ஹிக்காயத்தாகிறது ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய வபாத்திற்குப் பின்னால் தங்களுடைய தாலிபீன்களை அல்லாஹுத் தஆலாவினளவிற பாரபத்தியமாய்ச்சேர்த்து வைத்த செய்தியிற் பேசுகிறதாயிருக்கும்.

மிஸ்று தேசத்திலுள்ளவர்களில் நின்று மொரு வியாபாரியானவர் கவ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தின் அப்துல்காதிறு றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய ஹக்கிற் பரிசுத்தமென்னும் கலப்பறுதலும், கிருணயந் தரிபாடுமுள்ளவரா யிருந்தார். இன்னும் கவ்து றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சிறப்பான ஸில்ஸிலாவில் ஸுலூக்காவதை யிருதயத்துள்ப் பிசகற நினைந்தணிந்தவராயு மிருந்தார். அவ்வருடைய அலுவல்களைன்னு மாத்திரத்துடைய விலக்கல்களால் நாற்பது வருடமட்டிலுமவருடைய நாட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள சௌகரியப்படாமலும், முடியாமலும் நாட் கடந்துபோய்விட்டது, அப்பா லவருடைய பேராசை மிகுந்ததாற் பிரயாணமாகிப் பகுதாது நகரில் வந்து சேரவும் கவ்து றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆகிறத்தளவில் யாத்திரையாகி விட்டார்களென்று கேள்விப்பட்டார்.

அவ்விதம் கேள்விப்படவே தன்னுடைய காட்டம் நிறைவே
தால் தன் ஜாபிரை மாய்த்துக்கொள்ளவேணுமென்று கரு
கொண்டார். பின்னுமவருடைய பேராசையானது கந்துக்
கம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு றலியல்லாஹு
ஹு அவர்களுடைய கப்றையாவது ஸியாறத்துச் செய்துக்
கொள்வோமென்றெண்ணி நாயகமவர்களின் கப்றுஷரீபில் வந்து வரி
டைய ஆதாபுகளை நடத்தினர். அவ்விதம் நடத்திக்கொண்
கையில் கஸ்துல் அஃலம் ஷெய்கு முஹ்யித்தீன் அப்துல்காதிறு ஜீ
லானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களுடைய கப்றைவிட்டும் வெளிப்
பட்டு அவருடைய கையைப் பிடித்து இவருக்கு இரண்டுலகங்க
ளிலும் மேன்மையான மோட்சங்களையுங் கொடுத்து இவ
ரைத் தங்களுடைய விலாயத்துடன் சேர்த்துக்கொண்டார்கள்.
பாவிவர் முந்நூறு ஆண்பிள்ளைகளோடு இறவுஸாது செய்யு
யான சிறப்புகளையும் பெற்றுக்கொண்டார். அவர்களிடங்
ஙளிற் சேர்ந்தார்கள். இன்னுமவர்களனைவர்களுமவ
பார்த்துச் சீதேவித்தனத்தை நாங்களெடுத்தனைவதற்குச்சரி
இந்த உண்மை காட்டம் போற்கொற்றவைகளை பெங்களுக்
கு என்று சொன்னார்கள். றலியல்லாஹு அன்ஹும்.
அனைவரும் ஆமீன்.

117610

—(*)—

முஹ்யித்தீன் ஆண்டவர்கள்
காரணசரித்திரம்
முற்றிற்று.

—(*)—

இன்ஷா அல்லா கூடியசீக்கிரத்தில்,
2-வது பாகமும் வெளிவரும்.